சிவமயம்



# சைவ சமய நெறி

வெளியீட்டாளர்:
சைவ பரிபாலன சபை
யாழ்ப்பாணம்

1978

1978-ம் ஆண்டு க. பொ. த. வகுப்புப் புதிய பாடத் திட்டப்படி தெளிவான விளக்கங்களுடன் எழுதப்பெற்றது.

10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

A 208

# சைவ சமய நெறி

க. பொ. த. (சாதாரண) தேர்வுக்குரிய பாடநூல்

1978 ஆம் ஆண்டுக்குரிய புதிய பாடத்
திட்டத்திற்கமையத் தொகுக்கப்பெற்றது.

தொகுப்பாசிரியர் :
பண்டிதர் ச. பஞ்சாட்சர சர்மா அவர்கள்
திரு. மு. வைத்தியலிங்கம் அவர்கள்
திரு. க. சிவராமலிங்கம் *B. A.*
திரு. சி. சிவரத்தினம் ஆசிரியர்
திரு. வ. கந்தசாமி சைவப்புலவர்

யாழ்ப்பாணம்
சைவ பரிபாலன சபை வெளியீடு
1978

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ பரிபாலன சபைப் பிரசுரம் 65

இரண்டாம் பதிப்பு: 1978

அச்சுப் பதிப்பு:
சைவப்பிரகாச அச்சியந்திரசாலை
வண்ணார்பண்ணை
யாழ்ப்பாணம்.

பதிப்புரிமை — சபையாருக்கே

விலை 8/00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# முன்னுரை

சைவபரிபாலன சபையின் வெளியீடுகளாக சமயம், இலக்கியம், இலக்கணம் நீதி ஆகிய பல துறைகளில் பல பொது நூல்களும்; மாணவர்களுக்குப் பயன்படும் பாடநூல்களும் வெளிவந்து கொண்டிருப்பதைக் கல்வியுலகம் நன்கறியும்.

புதிய பாடத்திட்டத்திற்கமைவாக சைவசமய நெறி என்னும் பெயரில் 2 ஆம் 3 ஆம், வகுப்புகளுக்குரிய சமயபாட நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. ஏனைய வகுப்புக்களுக்குரியன அடுத்து வெளிவரவிருக்கின்றன. 1978 ஆம் ஆண்டுக்குரிய புதிய பாடத்திட்டத்திற்கமைய க. பொ. த. வகுப்பு சமய நூலை வெளியிட்டுள்ளோம். இந்நூல் மாணவர்களுக்குப் பெரிதும் பயன் கொடுக்கும் என்பது எமது எண்ணமாகும்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களின் பெரியபுராணம், இரண்டாம் சைவ வினாவிடை, சைவப் பெரியார் திரு. சு. சிவபாதசுந்தரம்பிள்ளை B. A. அவர்களின் இரண்டாம் சைவபோதம் பண்டிதர் ம. வே. திருஞான சம்பந்தர் அவர்களின் சமயகுரவர் சந்தானகுரவர் சரித்திரம் ஆகிய நூல்களைப் பெரும்பாலும் ஆதாரமாக் கொண்டு இந்நூல் தொகுக்கப் பெற்றது.

சைவப் பேரறிஞர் திரு. சு. சிவபாதசுந்தரம்பிள்ளை அவர்களால் ஆக்கப் பெற்று, சைவபரிபாலன சபைப் பதிப்பாக வெளிவந்த 'திருவருட்பயன்' உரை நூலிலிருந்து பெரும்பகுதிகள் அதிலுள்ளவாறே இந்நூலிற் சேர்க்கப்பட்டுள்ளது. மூலத்திலும், உரையிலுமுள்ள கடினமான சில பகுதிகள் மாணவர்களுக்கு இலகுவாக விளக்க மளிக்கப்பட்டிருக்கின்றன. இவ்வாறு புதியனவாகச் சேர்க்கப்பட்ட பகுதிகள் [ ] இவ்வித அடைப்புக் குறியினுள் காட்டப்பட்டிருக்கின்றன. இவ்வாறு இலகுபடுத்தி உதவியவர் பண்டிதர் ச. பஞ்சாட்சரசர்மா அவர்களாவர்.

இந்நூலில் சேர்க்கப்பட்டுள்ள திருவருட்பயன் திருமுறைப் பகுதிகளும் முன்னர் இரண்டாம் பாகமாக 1973 ல் வெளியிடப் பெற்றமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவருட்பயன் நூலின் முதல் ஐந்து அதிகாரங்களே க.பொ.த. பரீட்சைக்குரியன. ஆயினும் சமய அறிவுக்குப் பயன்படும் நோக்குடன் பத்து அதிகாரங்களும் இந் நூலில் சேர்க்கப்பட்டுள்ளன. திருமுறைப் பகுதியில் ஒவ்வொரு பதிகத்திலும் முதல் ஐந்து பாடல்களும், திருவெம்பாவையில் ஐந்து பாடல்களுமே பரீட்சைக்குரிய பகுதிகளாகும். ஆயினும், பதிகங்கள் முழுமையும் தெரிந்து கொள்வதற்காக ஒவ்வொரு பதிகப் பாடல்களையும், திருவெம்பாவை இருபது பாடல்களையும் சேர்த்து வெளியிட்டுள்ளோம்.

இந்நூல் தொகுப்பாசிரியர்கள் சமயநூற் பயிற்சியும், சமய பாடபோதனையிலும் நீண்டகால அநுபவமுள்ளவர்கள். அவர்கள் இதனைத் தொகுத்து எழுதி, உதவியமைக்கு நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சபை வெளியிடும் நூல்களுக்கு நல்லாதரவு தந்து வருகின்ற அறிஞர்களும் ஆசிரியர்களும் மாணவர்களும் இந்நூலை வரவேற்று உதவுவார்களென நம்புகின்றோம்.

வண்ணார்பண்ணை
யாழ்ப்பாணம்.
*26—3—1978*

சைவபரிபாலன சபை
பரீட்சைப்பகுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. சிவாலய தரிசனம் 82
9. திருக்கோயிற் கிரியைகள் 84
10. சிவாலயத் தொண்டுகள் 85
11. திருக்கோயிலில் செய்யத்தகாத குற்றங்கள் 88
12. விரதங்கள் — சிவவிரதம் 89
திருவாதிரை விரதம் 89
சிவராத்திரி விரதம் 89
பிரதோஷ விரதம் 90
தேவி விரதம் — நவராத்திரி 91
விநாயக விரதம் 91
சுப்பிரமணிய விரதம் 92
13. குரு லிங்க சங்கமம் 92
14. சமய திட்சை 94
15. சைவ நாற்பாதம் 95

## இரண்டாம் பாகம்

1. திருவருட்பயன் 10 அதிகாரங்கள் 1—96
2. திருமுறைப் பாடல்கள்
திருநீற்றுப் பதிகம் 97
திருக்கோணேஸ்வரப் பதிகம் 102
நமசிவாயத் திருப்பதிகம் 111
திருக்கேதீச்சரப் பதிகம் 117
திருவெம்பாவை 123
திருவிசைப்பா 145
திருப்பல்லாண்டு 146
திருப்புராணம் 147
திருப்புகழ் 147
திருமந்திரம் 149

## மூன்றும் பாகம்

1. சமயகுரவர் சரிதம்
திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர் 1
திருநாவுக்கரசு நாயனர் 15
சுந்தரமூர்த்தி நாயனர் 28
மாணிக்கவாசக சுவாமிகள் 38
2. சந்தான குரவர் சரிதம்
மெய்கண்டார் 44
அருணந்தி சிவாசாரியர் 46
மறைஞான சம்பந்தர் 47
உமாபதி சிவாசாரியர் 48
3. நால்வர் செய்த அற்புதங்கள் 50
4. நால்வர் வயசு 51

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# சைவ சமயம்

## சைவ சமய வரலாறு

### சைவ சமயத்தின் தொன்மை

சைவ சமயத்தின் அடிப்படைத் தத்துவம் முப்பொருள்களும் அநாதி என்பது; கடவுள், உயிர், உலகம் மூன்றும் அநாதியாய் உள்ளவை. ஆகையால் அவை அழிவற்றவை. ஆதியும் அந்தமும் இல்லாத சிவபரம்பொருளை ஆதியும் அந்தமும் இல்லாத உயிர்கள் என்றும் வழிபட்டு வந்திருக்கின்றன. இந்த வழிபாட்டு முறையே சைவ சமயம். ஆதலால் சைவ சமயம் என்றும் உள்ளது; அநாதியானது; தொடக்கம் அற்றது.

சிவபெருமான் காலங்கடந்த பொருள்; அவர் காலவரையறையைக் கடந்து, காலத்தினைத் தோற்றித் தொழிற்படுத்தும் முதல்வர்; உயிர்களும் உலகமும் நித்தப் பொருட்களாயினும் காலத்தாற் கட்டுப்பட்டவைகள். "கலை முதலிய மூன்றும் வினை முதலாகிய ஆன்மாக்களுக்குத் தொழில், அறிவு, இச்சைகளை விளக்கி நேரே உபகரிப்பன; காலமும் நியதியும் அவ்வான்மாக்களுக்கு வினையை வரையறுப்பதும் நியமிப்பதுமாகிய முகத்தான் உபகரிப்பன." இப்படிச் சிவஞானமாபாடியம் கூறும். இனி, இக்காலம் இயல்பாக இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என முத்திறப் பட்டிருக்கிறது. அன்றியும்; நாழிகை, நாள், பக்கம், திங்கள், பருவம், ஆண்டு, யுகம் என்றும் பாகுபடுத்தப்பட்டிருக்கிறது. சிவாகமங்கள் இக்காலப் பாகுபாடுகளை விபரமாக விளக்குகின்றன;

சைவம் சிவசம்பந்தமானது. ஆதலால் காலங் கடந்தது. அதனைச் சரித்திர ஆராய்ச்சிக்குள் அடக்கிக் கூறமுடியாது. கூற எத்தனிப்பது அறியாமையின் பாற்படும். சைவ சமயத்தின் தொன்மையை ஓர் அளவிற்குக் காலப் பாகுபாட்டின் மூலம் சுட்டிக்காட்டலாம்; அதற்குக் கொஞ்சம் தூய கணித அறிவு தேவை. விரும்பினால் இக் கணக்கைச் செய்துபாருங்கள்.

காலப் பாகுபாட்டில் ஒரு பெரிய பகுதி ஆண்டு (வருடம்); ஆண்டுகள் பல கொண்டது ஒரு யுகம். யுகம் ஒரு கால அளவை; இப்பொழுது நடக்கும் யுகம் கலியுகம். இக் கலியுகம் தொடங்கி 5074 வருடங்கள் கழிந்தன; இக் கலியுகம் நான்கு இலட்சத்து முப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திராயிரம் (4, 32,000) ஆண்டுகளைக் கொண்டது. இக் கலி யுகத்துக்கு முன் நடந்தது துவாபரயுகம். அது எட்டு இலட்சத்து முப்பத்து நாலாயிரம் (8, 34,000) வருடங்கள் கொண்டது. துவா பரயுகத்துக்கு முன் உள்ளது திரேதா யுகம். இது பன்னிரண்டு இலட்சத்துப் பத்தொன்பதினுயிரம் (12, 19,000) ஆண்டுகள் கொண்டது. திரேதாயுகத்துக்கு முன் உள்ளது கிருதயுகம். இது பதினேழு இலட்சத்து இருபத்தெண்ணுயிரம் (17, 28,000) வருடங்களைக் கொண்டது. நான்கு யுகங்களும் ஒருங்கு சேர்ந்து ஒரு சதுர்யுகம் எனப்படும். ஒரு சதுர்யுகத்தில் எத்தனை வருடங்கள்? கணக்குப் பாருங்கள்! ஒரு சிறு கூட்டல் கணக்கு! அவ்வளவு தான்! கஷ்டமானல் கூறுதும். ஒரு சதுர்யுகத்தில் நாற்பத்திரண்டு இலட்சத்து இருபத்து நாலாயிரம் வருடங்கள் (42,24,000) உண்டு. இப்படி எழுபத்தொரு சதுர்யுகம் ஒருமன்வந்தரம். அதாவது ஒரு மனுவின் காலவெல்லை. ஒரு மனு அரசாளுகின்ற கால எல்லை. இது. முப்பது கோடியே அறுபத்தேழு இலட்சத்து இருபதினுயி ரம் வருடங்கள் (30, 67, 20000) கொண்டது. இப்படிப் பதினன்கு மனுவந்திரங்களானல் பிரமாவுக்கு ஒரு பகலாகும். இன்னுமொரு விதமாகச் சொன்னல், ஆயிரம் சதுர்யுகம் பிரமாவுக்கு ஒருபகல். பின்னும் ஆயிரம் சதுர்யுகம் பிரமாவுக்கு ஓர் இரவு. ஆகவே, இரண்டாயிரஞ் சதுர்யுகங்கள் கொண்டது பிரமாவுக்கு ஒரு நாளெ னப்படும். இந்த நாள் முப்பதுகொண்டது ஒருமாசம் பிரமாவுக்கு! இம்மாசம் பன்னிரண்டு கொண்டது ஒரு வருடம். இந்த வருடம் நூறுனல் பிரமா இறப்பர். ஒரு பிரமா இறக்க அது விட்டுணுவுக்கு ஒரு நாளாகும். இத் தன்மையான பிரமா விட்டுணுக்கள் எண் ணில்லாதவர்கள் பிறந்திறந்திருக்கிறுர்கள். இவர்களுடைய மண் டையோடுகளைப் பரமசிவன் கோத்து மாலையாக அணிந்திருக்கிறுர் என்று புராணங்கள் கூறும். ஆதலால் சிவபெருமானுக்குக் கங்கா ளன் என்னும் நாமம் உண்டு. கங்காளம் எலும்புக் கோவை. சுருங்கச் சொன்னல் சிவபெருமான் காலாதீதன் - காலங் கடந்த பொருள். உயிர்களும் அப்படியே. உயிர்கள் இறைவனை அடை தற்கு உரிய மார்க்கமாகிய சைவ சமயமும் அத்தன்மையது என பது தானுகவே புலப்படும்.

தமிழ் மக்களுடைய மிகப் பழைய நூல் தொல்காப்பியம் என்னும் இலக்கணம். இதில் ஒரு செய்யுள் உண்டு. அது வரு மாறு:

''பொய்யும் வழுவுந் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப''

இதன் கருத்து:

''பொய்கூறலும் வழுப்பட ஒழுகலும் தோன்றிய பின்னர் முனிவர் (இருடிகள்) கரணத்தைக் கட்டினர் என்று சொல்வர்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே, தொல்காப்பிய நூல் செய்த ஆசிரியர் காலத்துக்கு முன் இருந்த மக்களிடம் பொய் கூடா வொழுக்கம் முதலியன இல்லாதிருந்ததென்பதும், பின் காலகதியில் இக்குற்றங்கள் மக்களிடத்தில் காணப்பட்டன என்பதும் பெறப்படும். உண்மை இவ்வாறாகும்.

சதுர்யுகத்தில் முதலாவதாக இருப்பது கிருதயுகம். இது பதினேழுலட்சத்து இருபத்தெண்ணாயிரம் ஆண்டுகள் கொண்ட கால வட்டம் என்று முன்பு படித்தோம். அதருமம் சிறிதும் இன்றித் தருமமே ஓங்கி நடந்த காலம். அது பற்றி இந்த யுகம் புண்ணிய யுகம் என்றும் சத்தியயுகம் என்றும் கூறப்படும். இந்த யுகத்தில் கொள்ளல் விற்றல்கள் எவையுமில்லை. மனிதருக்கு ஒருவகையான நோய் துன்பமும் இல்லை. பிணியும், மெலிவும், பகையும், வஞ்சமும், அச்சமும், கொடுமையும், பொறாமையும் இந்த யுகத்துக்கு உரியனவல்ல. சத்தியமே அரசு புரிந்தது, துறவே விரும்பப்பட்ட பொருளாயிருந்தது. கடவுள் யாவர்க்கும் சாந்நித்தியமாய் இருந்தார். எல்லா மாந்தருக்கும் சமயமொன்றே, செயலும் ஒன்றே, மனமும் ஒன்றே, கடவுளும் ஒன்றே, மந்திரமும் ஒன்றே!

பின்வந்த யுகங்களில் சத்தியம், தருமம் படிப்படியாகக் குறைந்து கொண்டே வந்தது. இப்பொழுது நடக்கும் கலியுகத்தில் சத்தியம், தருமம் குறைந்து; பொய், அதருமம் முதலியன ஓங்கி வளர்ந்துள்ளன. இந்த உண்மையை மாணவர்களாகிய நீங்களே கண்டறியலாம். நாங்கள் பொருளாதார முறையில், விஞ்ஞான வளர்ச்சியில், சுக வாழ்க்கையில் முன்னேறி வந்துள்ளோம். ஆனால் சத்தியம், தவம், ஒழுக்கம் முதலிய பண்புகளில் குறைந்துகொண்டே வந்திருக்கின்றோம்.

## வேதங்கள் கூறும் சிவ வழிபாடு

(அ) சைவம் வேதசாரம்

சைவம் வைதீக சைவம், வேதம் வழிவந்த சைவம்; 'விண்ணின் பயனும் பொழிமழையும் வேதப் பயனும் சைவமும் போல்' என்று சேக்கிழார் சுவாமிகள் அருளிச் செய்துள்ளார். வேதங்கள் இறைவனால் அருளிச் செய்யப்பட்ட நூல்கள். இதில் சந்தேகம் வேண்டாம்.

(1) "வேதமோடு ஆகமம் மெய்யாம் இறைவன் நூல்
ஓதும் பொதுவும் சிறப்பும் என்று உள்ளன நாதன்
உரை அவை"
—திருமூலநாயனார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) "அங்கமொடு அருமறை அருள் புரிந்தான்"
"நேரிய நான்மறைப் பொருள் உரைத்து ஒளிசேர் நெறி அளித்தோன்"
— திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

(3) "மறை நான்கினோடு ஆறங்கம் விரித்தவன்"
—திருநாவுக்கரசு சுவாமிகள்

(4) "மறை நான்கும் விரித்துகந்தீர்"
— சுந்தரமூர்த்தி சுவாமிகள்

(5) "வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு"
— மாணிக்கவாசக சுவாமிகள்

(6) "ஆரணம் ஆகமங்கள் அருளினால் உருவுகொண்டு
காரணன் அருளானாகில் கதிப்பவர் இல்லையாகும்"
— அருணந்தி சிவாசாரியார்

இப்படியாகச் சமய குரவர்களும், சந்தானாசாரியர்களும் அருளிச் செய்துள்ளார்கள்.

(ஆ) வேதங்களின் தோற்றமும் இயல்பும்

சைவ சமயத்தின் முதல் நூல்கள் நான்கு வேதங்கள் அடங்கிய சுருதிகளேயாம். நான்கு வேதங்களும் தொகுப்பாய் 'வேதம்' என்று வழங்கப்படும். அறிதல் என்னும் கருத்தை உணர்த்தும் 'வித்' என்னும் வினையடியில் இருந் பிறந்ததே 'வேத' என்னும் சொல்; வேதம் என்றால் முற்றறிவு அல்லது பரிபூரண ஞானம் என்று பொருள்படும். வேதம் உயர்வற உணர்ந்த சாத்திரம். மெய்ப்பொருளைப் பற்றிய அறிவுக்குக் களஞ்சியம். சமய சம்பந்தமான எந்தக் கொள்கைக்கும் ஒன்றாக நல்லதாம் பிரமாணம். வேதம் ஒரு புத்தகமன்று. யாரோ ஒருவரால் நிலைநாட்டப்பட்டுள்ள கொள்கைகளின் தொகுதியன்று, கருத்துக்கெட்டாத பழங்கால முதலே கர்ண பரம்பரையாகப் பாராயணம் செய்யப்பட்டு வந்த மந்திரங்களின்—சப்தங்களின் தொகுதியேயாம். பல்லாயிரக் கணக்கான வருடங்களுக்குமுன் எவ்வாறு எழுந்தனவோ, அதே உருவில் இன்றுவரை, மாற்றம் எதுவும் பெறாது காணப்படும் அற்புதமுடையவை வேத மந்திரங்கள்! எம் முன்னோர் இவற்றை எழுத்திற் பொறிக்காது, பரம்பரை பரம்பரையாக வாயால் ஓதிச் செவியால் கேட்டு வந்தமையால் 'சுருதி' எனவும் 'எழுதாமறை' எனவும் 'கேள்வி' எனவும் பெயர் பெறும்.

சைவசமயம் போல் வேதமும் அநாதியானது. பிரளய காலத்தும் அழிவுபெறாது, ஈசனால் பாதுகாக்கப்பட்டு, பின்னர் சிருஷ்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கியதும் தகுதி வாய்ந்த இருடியர்க்கு வெளியிடப்படுவது. வேதங்கள் மக்களால் ஆக்கப்படாதவை என்பதை உணர்த்துவதற்கு வேதத்துக்கு 'அபௌருஷேயம்' என்னும் பெயர் உண்டு. வேதங்கள் தோற்றம், அழிவு இரண்டும் அற்றவை. முக்காலத்துக்கும் உண்மை யானவை. எனவே ஏனைய நூல்களுக்குப்போல் இவற்றிற்கும் கால எல்லை கூறி வரைவு காட்டல் பொருந்தாது என்பது சைவ சமயக் குரவர்களின் முடிந்த கருத்தாகும்.

வேதங்கள் இருக்கு, யசுர், சாமம், அதர்வம் என நான்கு பிரிவுகளையுடையன. இந் நால்வகை வேதங்களும் தனித்தனி நான்கு பிரிவுகளாக வகுக்கப்பட்டிருக்கின்றன. இவற்றுள் முதற் பிரிவு சங்கிதை. சங்கிதை மந்திரங்களின் தொகுதி. இரண் டாவது பிரிவு பிராமணங்கள். ஒவ்வொரு வேதத்திலும் சங் கிதையை அடுத்துக் காணப்படும் பகுதிகள் பிராமணங்கள் எனப் படும். இவை மிகவும் விரிந்த நூல்கள். இவற்றுள் வேள்வித் துறை யில் வல்லவர்களால் கூறப்பட்ட கிரியைகள் பற்றிய விளக்கங்கள் காணப்படும். தத்துவங்களை விளக்குவதற்கும் சமய உண்மைகளை விளக்குவதற்கும் வேண்டப்படும் அறிவும் இவற்றில் உண்டு. மூன் றுவது பிரிவு ஆரண்யகங்கள் எனப் பெயர்பெறும். இவை காட்டு நூல்கள் எனினும் பொருந்தும். இவற்றுள் இரகசிய கருத்துக்கள் அடங்கியுள்ளன. இவைகளுள் வேள்விகள் வேட்கும் முறைகள் விரிக்கப்படவில்லை. கிரியைகள் பற்றிய விளக்கங்கள் இங்கு கிடையா. யாகம் மறை பொருளாய் உணர்த்தும் உண்மைகளையும் யாகம் செய் வதால் பெறும் பயன் முதலியவற்றையும் ஆரணியகங்கள் விளக்கிக் கூறும். வேதங்களின் நான்காம் பிரிவுகள் உபநிடதங்கள் என்று பெயர் பெறும். உபநிடதங்கள் அறிவின் களஞ்சியம். இவைகள் கூறும் அறிவு பேரறிவு—தத்துவ ஞானம். இவை படிப்பவர்களுக்கு அறிவை மட்டுமல்லாமல், உள்ளத்தில் அமைதியையும் மனச்சாந்தி யையும் அளிப்பவை. 'உபநிஷத்' என்னும் சொல் தமிழில் 'உப நிடதம்' என வழங்கும். இச்சொல் "நெருங்கிக் கீழே அமர்தல்" என்னும் கருத்தையே முதலில் உணர்த்திற்று. பின்னர் அருகில் நெருங்கி அமர்ந்திருக்கும் நிலையில் தோன்றிய அறிவுரைகளைக் குறிக்கலாயிற்று. உபநிடதங்களுக்குப் 'பிரம வித்தை' என்றும் பெயர்.

கலியுகத் தொடக்கத்துக்குச் சற்றுமுன், துவாபரயுகக் கடைசி யில், அதாவது 5074 வருடங்களுக்குமுன், திருமாலின் ஓர் அம்சம் பராசர முனிவர்க்கும் சத்தியவதிக்கும் பிள்ளையாய் அவதரித்தது; அப்பிள்ளைக்குக் கிருஷ்ண துவைபாயனர் என்று பெயர். இவரே கலியுக காலப்போக்கிற்கு ஏற்ப வேதத்தை நான்காக வகுத்துத் தொகுத்தவர். இத்தொகுதிகளே இருக்கு, யசுர், சாமம், அதர்வம் என்பன. வேதத்தை வகுத்துத் தொகுத்தபடியால் கிருஷ்ண துவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாயனருக்கு வேதவியாசர் என்ற காரணப் பெயர் வந்தது. வேத வியாசர் தாம் வகுத்த வேதங்களை முறையே பயிலர், வைசம்பாயனர், சைமினி, சுமன்து என்னும் நான்கு மாணவர்களுக்கும் கற்பித்தார். இந்தியாவில் இன்றைக்கும் இந்த மாணவர்கள் பரம்பரையில் வந்த விப்பிரர்கள், தத்தமக்குரிய வேதத்தைப் பாராயணஞ் செய்து வருவதை நேரே கண்கூடாகக் காணலாம்

(இ) வேதங்களில் காணப்படும் கடவுட் கொள்கை.

பொதுவாகக் கடவுட் கொள்கை சமயங்களில் இரண்டு முறையாக அமைந்திருக்கிறது. ஒன்று ஒரு தெய்வ வழிபாடு. அதாவது கடவுள் ஒருவரே; பலர் அல்ல என்பது. மற்றது பல தெய்வ வழிபாடு—கடவுளர் பலர் என்பது வேதங்களில் காணப்படும் தெய்வ வழிபாடு இவை இரண்டுமல்ல. வேதங்கள் துதிக்கும் கடவுள் ஒருவரே; அது பரப்பிரமம். ஆனால் அந்தப் பரப்பிரமம் பல உருவங்களிலும் பல பெயர்களாலும் துதிக்கப்பட்டிருக்கிறது. கடவுளைச் சுட்டும்பொழுது அஃறிணை ஒன்றன்பாற் சொல் "அது" என்ற பதமே உபயோகிக்கப்பட்டிருக்கிறது.

"இந்திரன், மித்திரன், வருணன், அக்கினி என்றெல்லாம் மக்கள் கூறுவர். அக்கினி, யமன், மாதிரிஸ்வன் எனவும் பெயர்களை வழங்குவர். இவ்வாறு ஒன்றையே பெரியோர் பல பெயர்களைக் கூறி அழைப்பர்" இவ்வாறு இருக்கு வேத மந்திரம் கூறுகின்றது. இதே கருத்தை உணர்த்தும் வேறு பல மந்திரங்களும் உண்டு. (இ 1-164-46)

(ஈ) வேதங்களில் சிவ வழிபாடு

பரப்பிரமத்தைப் பல மூர்த்தங்களில் வேத கால இருஷிகள் துதித்துள்ளார்கள். இவர்களுள், படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழில்களையும் இயற்றும் மும்மூர்த்திகளாகிய பிரம, விஷ்ணு, உருத்திரர்கள் மூவராகும். உருத்திரமூர்த்தி சிவபெருமானே! "உருத்திரனை உமாபதியை உலகானானை" என்பது திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம். உருத்திர மூர்த்திக்கு இருக்கு வேதத்தில் மூன்று முழுமையான சூக்தங்களும் வேறு பல சூக்தங்களில் குறிப்புகளும் உண்டு. யசுர் வேதத்தில் நடுநாயகமாக விளங்கும் ஸ்ரீ ருத்திரம் என்னும் மந்திர சமுகம் உருத்திர மூர்த்திக்கு உரியவையாகும். இருக்கு வேதத்தில் உருத்திரமூர்த்தியின் உருவம் மிக அழகாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது. "உருத்திரமூர்த்தியின் உதடுகள் மிக அழகானவை. இவர் தமது தலைமயிரைச் சடாமுடியாகக் கட்டியுள்ளார். (சடையானே சடையிடையே — தேவாரம்) இவர் சிவந்த மேனியை உடையவர். (சிவன் எனும் நாமம் தனக்கே உரிய செம்மேனி அம்மான் — தே) கிரணங்களை வீசிப் பிரகாசிக்கின்ற சூரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லைப் போல் இவர் மேனி ஒளி வீசுகின்றது. வில்லும் அம்பும் இவரின் சிறந்த படைக்கலங்கள். இவர் வலிமைக்கு ஈடுஇணை கிடையாது. இவர் மூப்பற்றவர்; இளமை குன்றாதவர். (முன்னவன்காண் பின்னவன்காண் மூவாமேனி முதல்வன்காண் — தே.) உலகிற்குத் தந்தையெனப் பெரியோர் ஏத்துவர். (தந்தையாய்த் தாயுமாகி - தே.) தேவர் உலகினரும் நிலவுலகினரும் ஆற்றும் செயல்களனைத்தையும் தலைமை பூண்டு கவனித்து நிற்பர். (விண்ணுளார் தொழுதேத்தும் விளக்கினை மண்ணுளார் தோஷம் தீர்க்கும் மருந்தினை — தே.) மக்கள் அனைவரும் தாமே எளிதிற் போற்றி வணங்கும் இயல்பினையுடையவர் (நீதியாய்த் தொழுவார்கள் தலைவன் — தே) மங்களகரமானவர். (இக்கருத்தை உணர்த்தும் சிவன் எனும் சொல் அடைமொழியாக உருத்திரமூர்த்திக்கு அமைந்துள்ளது) இவர் வழிபடுவோர்க்கு வரையின்றி வணங்கும் வள்ளல். (அடியார் தங்கட்குலகமெல்லாம் முழுதளிக்கும் உவப்பிலானை — தே) இவர் மாட்டுக் காணப்படுவது நோய் நீக்கும் ஆற்றல். இவர் வைத்தியர்களுக்குள் தலைசிறந்த வைத்தியர் எனப்படும் வைத்தியநாதர். (மருந்தாய்ப் பிணி தீர்க்குமாறு கண்டேன் — தே.) அழித்தல் தொழிலையும் செய்பவர்.

''ஞாயிறாய் நமனுமாகி வருணனாய் சோமனாகித்
தீயறா நிருதிவாயுத் திப்பிய சாந்தனாகிப்
பேயறாக் காட்டி லாடும் பிஞ்ஞகன்''

என்று திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரமும் கூறும். என்று இதுவரை கூறப்பட்ட குணங்களால் உருத்திரமூர்த்தி அருளல், அழித்தல் என்னும் இரு தொழில்களையும் செய்பவர் என்பது புலனாகும். இவ்வாறு இருக்குவேதம் கூறுகின்றது. உருத்திரன் சிவபெருமானுக்குரிய நாமங்களில் ஒன்றென்பதும், உருத்திர மூர்த்தம் சிவபெருமானின் மூர்த்தங்களுள் ஒன்றென்பதும் சிவாகமங்களாலும், திருமுறைகளாலும், மெய்கண்ட சாத்திரங்களாலும் துணியப்படும்.

வேதங்களைக் குறிக்கும் பெயர்களுள் ''த்ரயீவித்தியா'' என்பது ஒன்று. இது வேதங்களின் அமைப்பைச் சுட்டுகின்றது; வேதவித்தை என்பது இதன் பொருள். இருக்கு, யசுர், சாமம் என்பவையே இவ்வித்தையின் முப்பெரும் பிரிவுகள். இம் மூன்றனுள் நடுவே உள்ளது யசுர்வேதம். இந்த யசுர்வேதம் நூற்றொரு சாகைகளை உடையது. இவற்றுள் நடுச்சாகை ஐம்பத்தோராவது சாகையாகிய ஸ்ரீ வோதாயனசாகை. இந்தச் சாகை ஏழு காண்டங்களாக அமைந்துள்ளது. இதன் மத்தியிலுள்ள காண்டம் நாலாவது காண்டமாகிய சதருத்ரீயம்; இதன் நடுவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளுள்ளது ஐந்தாவது பிரச்னம்; அதில், "நம: ஸோமாயச ருத்திராயச" என்னும் அனுவாகம் இருக்கின்றது. இந்த அனுவாகத்தின் இருதயத் தானத்தில் "நம: சிவாயச" என்னும் பஞ்சாட்சர மந்திரம் பிரகாசிக்கின்றது. இதனாலே இச் சிவமந்திரம் சகல வேதசிவரத்தினமாயும் அதிரகசியமாயும், சர்வவேத சாரமாயுமுள்ள ஒரு மந்திரமாகும். இதுவே நான்கு வேதங்களின் மெய்ப்பொருள் எனவும், சந்திய காலங்களில் ஓதும் மந்திரமெனவும், வேதசாரமாகிய சிவஞானப் பாலையுண்டருளிய திருஞானசம்பந்தப் பெருமானார் தாம் அருளிச்செய்த தமிழ் வேதத்தில் விளக்கியுள்ளார். அவை வருமாறு:-

"வேத நான்கினு மெய்ப்பொரு ளாவது
நாதனும நமச்சி வாயவே" என்றும்

"செந்தழ லோம்பிய செம்மை வேதியர்க்
கந்தியுள் மந்திரம் மஞ்செழுத்துமே" என்றும்

இருக்குவேத சூக்தங்களுள் 200க்கு மேற்பட்டவை அக்கினிக்குரியவையாகும். முதற் சூக்தமே அக்கினிக்குரியது. சிவபெருமான் அக்கினியே உருவானவன். "ஆறு ஆர்தருசடையன் அனல் உருவன்" என்று திருஞானசம்பந்தப் பெருமானும், "எரியலால் உருவமில்லை அரியலால் தேவியில்லை" என்று திருநாவுக்கரசு சுவாமிகளும் அருளிச் செய்துள்ளார்கள். இன்னும் "எம் இறைவேதங்கள் முதல்வர்" என்றும், "அந்தணன் அருமறைப் பொருளாயினன்" என்றும். "நல்வினைப் பயன் நான்மறையின் பொருள்" என்றும், "வேதர், வேதமெல்லாம் விரித்தோத நின்ற ஒருவனார்" என்றும், "அவைகியவேதவோசை அகவங்கம் ஆறின் பொருளான ஆதி" என்றும் வரும் தேவாரப் பகுதிகள் சிவபெருமானே வேதப் பொருள் என்பதை நிலைநாட்டுவதாக இருக்கின்றன.

இங்கு காட்டியவற்றால் வேதங்கள் சிவவாக்கென்பதும், வேதப்பொருள் சிவபரம்பொருளே என்பதும், சைவம் வேதம் வழிவந்தது என்பது பெறப்பட்டவாறு அறிக.

## சிவாகமங்களும் அவைகூறும் சிவ வழிபாடும்

### (அ) சிவாகமங்களின் தோற்றம்

"தொகுத்தவன் அருமறை அங்கம் ஆகமம் வகுத்தவன்" என்பது திருஞானசம்பந்த சுவாமிகளது திருவாக்கு. எனவே, வேதங்களையும் காமிகம் முதலிய ஆகமங்கள் யாவையும் சாட்சாத் பரமேசுவரனே அருளிச் செய்தார். வேதம் பசுவும் சிவா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமும் அதன் பாலும், வேதம் கனியும் சிவாகமம் அதன் சாறும், வேதம் உடலும் சிவாகமம் அதன் உயிரும், வேதம் ஒரு நதிக்குச் செல்லும் வழியும் சிவாகமம் அந்த நதியிற் சென்று படியுந் துறையுமாய் இருக்கின்றன. வேதவழியில் நின்று ஆகம ஞானத்தைக் கைக்கொண்டவர்களுக்கே பரமேசுவரன் விரைவில் பேரருள் புரிவார். வேதத்தின் ஞானபாகத்தில் சித்தாந்த முடிபு அற்பமும் சிவாகமத்தின் ஞானபாதத்தில் சித்தாந்த முடிபு அதிகமுமாய் விளங்குவதால் சிவாகம ஞானமே சிவபரம்பொருளை அடைவதற்கு இன்றியமையாது வேண்டப்படும்.

இன்னும், மாணிக்கவாசக சுவாமிகள் சிவபெருமானது திருவருட் சிறப்பைக் கூறுமிடத்து

"மன்னு மாமலை மகேந்திர மதனிற்
சொன்ன ஆகமம் தோற்றுவித் " தும் என்றும்,

(நிலைபெற்ற பெரிய மலையாகிய மகேந்திரத்திலிருந்து முன்னொருகால் உமாபிராட்டியார்க்குச் சொல்லிய ஆகம நூல்களை மீண்டும் வெளிப்படுத்தியருளியும்)

"கேவேடர் ஆகிக் கெளிறது படுத்தும்
மாவேட்டாகிய ஆகமம் வாங்கியும்
மற்றவை தம்மை மகேந்திரத் திருந்
துற்றஐம் முகங்க ளாற்பணித் தருளியும்" என்றும்

(வலைஞராகி கெளிற்று மீனை வீழ்த்தியும், பெரிய விருப்பத்தினைத் தருவதாகிய ஆகம நூலை அதன் பால் நின்று மீட்டு வாங்கியும், அங்ஙனம் வாங்கிய ஆகமநூல்களை மகேந்திரமலையிலிருந்து, பொருந்திய தன் ஐந்து முகங்களால், ஆதி சைவ மரபில் வந்த அகத்தியர், காசிபர், கௌதமர், பாரத்துவாசர், கௌசிகர் ஆகிய ஐவருக்கும் உபதேசித்தருளியும்) அருளியுள்ளார்.

திருமூலநாயனர் அருளிய பத்தாந் திருமுறையாகிய திருமந்திரத்தில் பாடல் 57 முதல் 66 வரையுள்ள பாடல்கள் சிவாகமங்களின் சிறப்பை உணர்த்துகின்றன.

ஆகமங்கள் காமிகம் முதல் வாதுளம் ஈறாக இருபத்தெட்டாகும். இவ்வாகமங்கள் அகத்தியர் முதல் கௌசிகர் ஈறாகிய முனிவர்க்கு அருளிச் செய்து உபதேசிக்கப்பட்டன. பின்பு பிரணவர் முதல் மகாகாளர் இறுதியாயுள்ள 66 பேர் சிவபெருமானை வணங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகமங்களை உபதேசிக்கப் பெற்று மயக்கம் ஒழிந்தார்கள் என்றும் கூறப்பட்டுள்ளது. இவ்வாகமங்களுள், காமிகம் முதல் சுப்பிர பேதம் ஈறுகிய பத்தும் விஞ்ஞானகலருள் பரமசிவனனுக்கிரகத்தைப் பெற்ற பிரணவர் முதலிய அணுசதாசிவர் பதின்மருக்கும் அருளிச் செய்யப்பட்டமையால் சிவபேதம் எனப்படும். விஜயம் முதல் வாதுளம் ஈறுகிய பதினெட்டும் அநாதி உருத்திரர் முதலிய பதினெட்டு உருத்திரர்களுக்கும் அருளிச் செய்யப்பட்டமையால் உருத்திரபேதம் எனச் சொல்லப்படும்.

மேலும் இவ் ஆகமங்கள் சதாசிவமூர்த்தியால் அநந்ததேவருக்கும், அநந்ததேவரால் ஸ்ரீ கண்டருக்கும், ஸ்ரீ கண்டரால் தேவர்கட்கும், தேவர்களால் முனிவர்களுக்கும், முனிவர்களால் மனுடருக்கும், மனுடரால் மனுடருக்கும் குருபரம்பரையாய் உபதேசிக்கப்பட்டு உலகத்திற் பரவுவனவாம்.

இத்தகைய ஆகமங்கள் எல்லாம், வேதங்கள் போல் தொகுத்துக் கூறப்படாமல், விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றன. ஆதலால், விரிவான ஆதாரநூல் ஆகமமாயிற்று ஆகமங்களின் விரிவான நூற்பாக்களை, 58 ஆம் திருமந்திரம் இருபத்தெட்டுக் கோடி நூறுயிரம் என்கிறது. "இவற்றை எல்லாம் அறியப்பெற்றபின்னர் தேவர்கள் மயக்கமற்றுச் சிவபெருமானை முழுமுதல்வர் என உணர்ந்து அவனது விழுப்பங்களைக் கூறிப் போற்றிக் காட்டினர். ஆதலால், அவ்வளவு ஆகமங்களாலும் அளவற்ற கிரந்தங்களாலும் அத்தேவர்களாலும் ஒருமுகமாகத் துணிந்து உரைக்கப்பட்ட பொருள் சிவமே ஆகும்; இதனை யானும் அறிந்து அவர் கருத்தின் வழியே ஏத்துகின்றேன். நீங்களும் ஐயமற்றுப் போற்றுங்கள்" என்று அருளுகின்றார் திருமூலநாயனார் 58 ஆம் திருமந்திரத்தில்.

ஆகமம் ஆப்தவாக்கியம்: ஆகமம் என்ற சொல்லின் பொருள், ஆன்மாக்களுக்கு மலத்தை நாசஞ் செய்து ஞானத்தை உதிப்பித்து மோட்சத்தைத் தருதல் என்பதாகும். ஆ = ஞானம், க = மோட்சம், ம = மலநாசம். அன்றியும் ஆ = பாசம், க = பசு, ம = பதி எனப் பொருள் பட்டுத் தன்னைப் பழகினோர்க்கு முப்பொருளின் இயல்பை உணர்த்துவது எனவும் பொருள் கொள்ளப்படும்.

யசுர் வேதத்தைச் சார்ந்த அமிர்தநாபோத உபநிடதம் "ஆகமங்களுக்கு விரோதமில்லாமல் யூகிப்பதே தர்க்கமாம்" என்று சிவாகமங்களைப் போற்றுகிறது. வேதவழியில் நின்று முயன்ற சிவஞானிகள் தமது ஆசை அடங்காமல் சிவாகமத்துறையிற் படிந்து இன்புற்றுர்கள் என உண்மை நூல்கள் பல கூறுகின்றன; நான்மறைகளையும், ஆறங்கங்களோடும் மற்றுமுள்ள கலைஞானங்களோடுங் கற்றுணர்ந்த, சனகாதிமுனிவர்கள் சிவாகம ஞானத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னுலே தான் மோகத்தைத் தவிர்ந்து மனோலயமடைந்து ஞானமய மானுர்கள் என்று புராணங்கள் கூறுகின்றன. வேதசிரசுகளாகிய உபநிடதங்கள் கூறிய ஞானமார்க்கத்தையே சிவாகமங்கள் சந்தேக விபரீதங்களை நீக்குமுகமாக, விரித்துக் கூறுகின்றன. அல்லாமல் இருவகை ஞானங்களுக்கும் பேதமில்லை.

ஸ்ரீ நீலகண்ட சிவாசாரியார், "யாம் வேதசிவாகமங்கட்குப் பேதங்காண்கின்றிலம், வேதமே சிவாகமம்" என்று கூறியருளினுர். "வேதாகமத் துணிபிரண்டில்லை யொன்றென்னவே வந்த குருவே" என்று தாயுமான சுவாமிகளும் கூறியருளினுர். இக்கருத்தையே திருமூலநாயனுர் அருணந்தி சிவாசாரியசுவாமிகள் முதலியோரும் கூறியுள்ளார்கள். சிவாகமங்களைத் தூஷித்து வேதங்களையே பிரமாணமாகக் கொள்வோர்களும், வேதங்களைத் தூஷித்துச் சிவாகமங்களைக் கொள்வோர்களும், வேதசிவாகமங்களைத் தூஷித்துத் திருமுறைகளையும் மெய்கண்ட சாத்திரங்களையும் கொள்வோர்களும், மரபாகச் சாத்திர ஞானம் பெருத சலதிகளாகும்.

ஆகமங்கள் மூலாகமம் உபாகமம் என இரு பகுதிகளாக உள்ளன. மூலாகமங்கள் காமிகம் முதலாக வாதுளம் ஈருக இருபத்தெட்டாகும். ஒவ்வொரு ஆகமத்துக்கும் உப ஆகமங்கள் உண்டு. உப ஆகமங்களின் தொகை 207 ஆகும் சர்வோத்தம் என்னும் ஆகமத்துக்கு சிவதர்மோத்தரம் என்னும் ஓர் உபாகமம் உண்டு. இது தமிழ் மொழியில் செய்யுள் வடிவாக மொழி பெயர்க்கப்பட்டு உரையுடன் அச்சிடப்பட்டிருக்கிறது காமிக ஆகமத்தின் ஓர் உபாகமமாகிய மிருகேந்திரமும் தமிழ் மொழிபெயர்ப்போடு அச்சிடப்பட்டுள்ளது. சிவபெருமானுக்கு ஆகமங்கள் அங்கங்களாய் அமைந்துள்ளன என்று கூறப்பட்டுள்ளது. "ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க" என்று மாணிக்கவாசகசுவாமிகளும் அருளியுள்ளார்கள்.

எனவே, ஆகமங்கள் சிவபெருமானை முறைப்படி வழிபடுதற்குரிய முறைகளை விரிவாகக் கூறுகின்றன, அம்முறைகள் நாற்பாதங்கள் எனப்படும். நாற்பாதங்களாவன சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பனவாம். இவைகளைப்பற்றிய விரிவைப் பின்பு படிப்போம்.

கோயில்கள் அமைத்தற்குரிய சகல விஷயங்களும் ஆகமங்களில் உள்ளன. கோயிலின் அமைப்பை நாம் கூர்ந்து கவனித்தால் அங்கு பல உறுப்புக்கள் இருப்பதைக் காணலாம். இவற்றுள் மூலவிக்கிரகம் எழுந்தருளியிருக்கும் கட்டிடம் முழுமையும் விமானம் எனப்படும். மூலவிக்கிரகத்தை எழுந்தருள வைத்த அறை கருப்பக்கிரகம் எனப்படும். கருப்பக்கிரகத்தை அடுத்து மண்டபங்கள் உள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என. கருப்பக்கிரகம் மண்டபங்களைச் சூழ்ந்து வீதிகள் அல்லது பிரகாரங்கள் இருக்கின்றன; இவைகளின் அளவுகள் தன்மைகள் ஆகமங்களில் கூறப்பட்டுள்ளன.

கோயில் அமைத்தற்குரிய இடத்தை நிர்ணயித்தல், கட்டுவதற்குத் தேவையான கற்களையும் மற்றப் பொருள்களையும் தெரிந்தெடுத்தல், அவைகளின் அளவுகளைத் தீர்மானித்தல் முதலியவை கள் ஆகமங்களில் உள்ள விதிப்படியே செய்யப்படும்.

கோயில்களைக்கட்டும் சிற்பிகளின் இயல்பும் தகுதியும் ஆகமங்களுள் காணப்படும் கோயிற் கட்டிடக்கலையில் கைதேர்ந்தவன் ஸ்தபதி என்பவன்; ஸ்தபதி சாத்திரங்களில் வல்லவன்; ஆகம அறிவு மிக்கவன். வர்த்தகி என்னும் சிற்பி வேதாகம அறிவு மிக்கவனும் சித்திரக் கலையில் கைதேர்ந்தவனும் விளங்குவன். சிற்பிகளுள் தட்சகன் என்றும் ஒரு பகுதி யுண்டு; இவனுக்குத் தச்சுத் தொழிலில் பெருந்திறமையுண்டு.

கோயில் அமைப்பு, சிற்பம் பற்றிய விஷயங்களை ஆகமங்கள் விரிவாகக் கூறுவதுமல்லாமல், கோவில் உபகரணங்கள் நிருவாகம் முதலிய விஷயங்களைப்பற்றியும் விரிவான குறிப்புகள் ஆகமங்களில் உண்டு. மேலும் கொடிமரம், வாகனங்கள், தேர் ஆகியவற்றைப் பற்றி வேண்டிய அறிவை ஆகமங்கள் மூலமாகவே பெற வேண்டும்.

சைவாலயங்களிலே நித்திய பூசை, உற்சவம், பிரதிஷ்டை, பிராயசித்தங்கள் எல்லாம் சிவபெருமான் ஆன்மாக்கள் பொருட்டு அருளிச் செய்த சிவாகம விதிப்படியே நடைபெறும்; இவைகள் வேறெந்த நூல்களிலும் விதிக்கப்படவில்லை; அது,

பொங்கு மாமறைப் புற்றிடங் கொண்டவர்
எங்கு மாகி யிருந்தவர் பூசனைக்
கங்கண் வேண்டு நிபந்தமா ராய்ந்துளான்
துங்க வாகமம் சொன்ன முறைமையால் — எனவும்

எய்தியசீ ராகமத்தி லியம்பியபூ சனைக்கேற்பக்
கொய்தமல ரும்புனலு முதலான கொண்டணைந்தார்—எனவும்

வரும் சேக்கிழார் பெருமான் திருவாக்காலும்

ஐவகை யுருவிலொன்றை யாகம விதியாலுய்த்து
மெய்வழிபாடு செய்து வேண்டியாங் கருளும் பெற்றான்

என வரும் கச்சியப்ப சிவாசாரியார் திருவாக்காலும் அறியலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயிற் பூசைகள் ஆகமங்கள் விதித்தபடியே நடக்க வேண்டும் என்று கண்டுகொண்டோம். கோவிற் பூசைக்குரிய தளபாடங் களு அவைகளின் இயல்பும் ஆகமங்களில் முறையாக விளக்கப் பட்டிருக்கின்றன பூசைக்கு இன்றியமையாத தளபாடங்கள் பல; அவற்றுள் முக்கிய ானது மணி. பெரியமணி கண்டாமணி எனப் படும். கையில் இலகுவாக எடுத்து அடிக்கக்கூடியது கைமணி; பலவகைப்பாத்திரங்கள் கோயிற்பூசைக்குத் தேவையாய் இருப்பன இவைகளேயன்றிப் பலவகைத் தீபங்களும் பூசைக்கு இன்றியமை யாதன. இவற்றின் வகைகள் தன்மைகள் எல்லாம் ஆகமங்களில் விளக்கப்பட்டுள்ளன,

கோயிற் பூசைகளைச் செய்யும் ஆசாரிகளின் இயல்பும் யோக் கியதையும் ஆகமங்களில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. அல்லா மலும் கோவில்களில் எழுந்தருளச் செய்யும் உருவங்களின் இயல்பு கள் அளவுகள், அவைகள் செய்யும் கற்களின் வகைகள், தன்மை கள், உலோகங்களின் வகைகள் எல்லாம் விரிவாக ஆகமங்களிற் காணப்படும்.

இவைகளேயன்றி, மனிதனுடைய சுகவாழ்க்கைக்கு வேண்டப் படும் ஆசாரங்கள், ஒழுக்கங்கள், வாழ்க்கைமுறைகள் எல்லாம் ஆகமங்களில் காணப்படும். ஸ்ரீ ல ஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் எங்களுக்கு எழுதிக்கொடுத்தருளிய சைவ வினாவிடை முதற்புத்தகம் இரண்டாம் புத்தகம் ஆகமங்களின் சாரமேயாம். இன்னும் மறை ஞானசம்பந்தநாயனார் தமிழில் அருளிய சைவசமய நெறியும் அதற்கு நாவலர் பெருமான் இயற்றியருளிய சிறந்த உரையும் ஆகமங்களைப் பிழிந்தெடுத்த சாரமாகும்.

ஆகமங்கள் விரித்துக் கூறும் விதிகள் அனைத்தையும் பிரமாண மாகக்கொண்டு கிரியைகள் செய்யும் முறையினை ஒழுங்குபடுத்தி முறையாகக் கூறும் வழி நூல்கள் பலதோன்றித் தனி நூல்களாக விளங்குகின்றன. இவற்றிற்குப் பத்ததிகள் என்று பெயர். இவை கள் சிவாசாரியார்களால் வகுக்கப்பட்டு அவரவர்கள் பெயர்களைத் தாங்கித் தனிநூல்களாக விளக்கின்றன. இவைகளுள் சோமசம்பு பத்ததி, அகோரசிவாசாரிய பத்ததி பிரசித்தமானவை. இந்த அகோரசிவாசாரிய பத்ததிப்படிதான் இந்தியா இலங்கையிலுள்ள சிவாலய விக்கினேசுராலய சுப்பிரமணியாலயங்களில் பூசை, திரு விழா, சம்புரோட்சண முதலிய கிரியைகள் ஆதி சைவக்குருமார்க ளாலும், சைவவேளாள குருமார்களாலும் செய்யப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்துவெளிநாகரிகத்தில் சிவவணக்கம்

பாரதநாடு இரு பெருநாடுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது: ஒன்று இந்தியா மற்றது பாக்கிஸ்தான். சிந்து வெளி நாகரிகம் தோன்றி வளர்ந்திருந்த இடங்கள் எல்லாம் இப்பொழுது பாக்கிஸ்தானுக்குள் உள்ளன. "சிந்து வெளி நாகரிகம்" என்ற சொற்றொடரால், பண்டைக்காலத்தில், இரண்டு பெரிய நகரங்களில் வாழ்ந்திருந்த, பாரதமக்களது, நாகரிக வாழ்க்கை முறையைக் குறிக்கின்றோம். இந்த இரண்டு நகரங்களுள் ஒன்று ஹரப்பா ( Harappa ) மற்றது மொகஞ்சதரோ என்று வழங்குகிறது. மொகஞ்சதரோ என்றால் "இறந்தவர் திடல்" என்பது கருத்து.

ஹரப்பா நகரம் பாக்கிஸ்தானுக்குரிய பன்சாப்மாகாணத்தில், லாகூர் பட்டணத்திலிருந்து 100 மைல் தென்மேற்கில், ருவி ஆற்றின் இடது கரையில் உள்ளது ருவி ஆறு சிந்து நதியின் ஒரு கிளை ஆறு. ஹரப்பா நகரிலிருந்து, சுமார் 400 மைல்களுக்கப்பால், பாக்கிஸ்தானுக்குரிய சிந்து மாகாணத்தில், 'வார்கானு' சமவெளியில் சிந்து நதியின் வலது கரையில், மொகஞ்சதரோ இருக்கின்றது., இது கராச்சியிலிருந்து சுமார் 200 மைல் வடக்கே உள்ளது.

ஹரப்பாவும் மொகஞ்சதரோவும் சுமார் 5000 வருடங்களுக்கு முன் தோன்றி நின்று அழிந்த இரு பட்டணங்கள். மொகஞ்சதரோ என்ற நகரம் குறைந்த பட்சம் ஏழு முறை அழிந்து ஏழு முறையும் திருப்பிக்கட்டப்பட்டுள்ளது. மூன்று படைகள்தான் அகழ்ந்தெடுத்துள்ளார்கள், பெரும்பாலும் இந்நகரங்கள் சிந்து நதியின் வெள்ளப் பெருக்கால் அழிந்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது. படிப்படியாக இப்பகுதிகளில் ஏற்பட்ட வெட்பதட்ப நிலையில் மாற்றமும் இந்நகரங்கள் அழிந்து சிதைவதற்குக் காரணமாக விருக்கலாம். ஒரு காலத்தில் இந்நகரங்கள் தோன்றி வளர்ந்த இடங்களும் அயல் இடங்களும் மிகச் செழிப்புள்ள இடங்களாய் இருந்திருக்க வேண்டும். இதற்குப் பல அறிகுறிகள் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். இரு நகரங்களுக்கும் உள்ள இடைவெளி 400 மைல்களாய் இருந்தாலும் இரு நகரங்களும் ஒரு மத்திய ஆட்சிக்கீழ் இருந்தது. இரு நகரங்களும் ஒரேவிதமான அமைப்பை உடையதாய் இருந்திருக்கின்றன. வட இராச்சியத்துக்கும் தென் இராச்சியத்துக்கும் தொடர்பு ஆற்றுப்பாதையாய் அமைந்திருந்தது. இராச்சியங்கள் அரச குருமார்களால் ஆளப்பட்டு வந்தன. ( priest-kings ).

சிந்து வெளி மக்கள் மிக உன்னதமான ஒரு நாகரிகத்தைக் கட்டி எழுப்பினார்கள் என்பதை அங்கு அகழ்ந்து கண்ட சில பாழடைந்த கட்டிடங்கள் காட்டி நிற்கின்றன. அவைகள் ஒவ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வொன்றையும் பற்றி விபரிக்கில் இக் கட்டுரை மிக விரியும், அல்லாமலும் இது தகுதியான இடமன்று. எடுத்துக்கொண்ட விஷயத்துக்குப் பொருத்தமான ஒரு சிலவற்றை மாத்திரம் இங்கு காட்டுதும்.

1. மொஹஞ்சதரோவில் பார்ப்பவர்கள் கண்ணையும் கருத்தையும் ஒருங்கு கவரும் பகுதியாக அமைந்தது ஒரு குளம், அது 40 அடி நீளம் 24 அடி அகலம் 8 அடி ஆழம் உள்ளது. நாலு கரையும் சுட்ட செங்கட்டிகளால் கட்டப்பட்டு, நீர் பொசியாமல் 'பிற்றுமன்' (bituman) என்னும் கனிப்பொருளால் பூசப்பட்டிருக்கிறது. இறங்குவதற்குப் படிக்கட்டுகள் உண்டு. குளத்தின் நீர் அசுத்தப் பட்டால், முழு நீரையும் அகற்றிச் சுத்தமான நீரால் நிரப்புவதற் குரிய அமைப்பு முறைகள் உண்டு.

2. இதையடுத்து ஒரு பெரிய கட்டிடம் 230 அடி நீளம் 78 அடி அகலம்; இது ஒரு கலைமன்றமாக இருந்திருக்கலாம் என நம்ப இடமுண்டு. இதற்குத் தென்கரையில், ஒரு சதுரமான மண்டபம் 80 அடி நீள அகலமுள்ளது. இதன் கூரை தட்டையானது, செங்கட்டியால் வேய்ந்தது; இக் கூரையை 20 நேர் சதுரத்தூண்கள் தாங்கி நிற்கின்றன.

குளம், கலைமன்றம், மண்டபம் இவை எல்லாம் சமயசம்பந்தமான அதிகாரிகளின் உபயோகத்துக்குரியன என்பதை விளக்குகின்றன என்று அகழ்ந்து கண்ட நிபுணர்கள் கருதுகின்றார்கள்.

3. ஹரப்பா நகரிலும் சமயசம்பந்தமான மேல் தளங்களும் அவைகளுக்கு ஏறும் படிக்கட்டுகளும் தோற்றம் அளிக்கின்றன.

4. நகர அமைப்பில் மிக முக்கியமானவை தெருக்கள், பெருந்தெருக்கள் 30 அடி அகலம் உள்ளன. இத் தெருக்களுக்குக் கீழ் அமைக்கப்பட்ட வடிகால்களின் அமைப்பே மிக விசித்திரமானது; மழை நீர், தெருக்களின் மேற்பகுதியால் ஓடாமல், துவாரங்கள் ஊடாகக் கீழே வடிந்து, கட்டப்பட்ட வடிகால்களால் ஆற்றைச் சென்று அடையும் முறையில் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு வீடுகளிலிருந்தும் வடிகால்கள் தெரிவின் கீழ் உள்ள பிரதான வடிகால்களுடன் தொடுக்கப்பட்டுள்ளன; பிரதான வடிகால்கள் சுத்தம் செய்வதற்கென்று, மனிதர் இறங்கி வேலைசெய்யக்கூடிய விதமாகப் பெரிய துவாரங்களும், அவைகளை மூடவும், தேவையான நேரம் திறக்கவும் கூடிய மூடிகளும் செங்கட்டிகளால் அமைந்திருந்தன.

இத்தகைய சிறந்த நாகரிகத்தைக் கட்டிய மக்களின் சமயம் என்ன என்பது ஆராயப்பட்டது. இவர்களிடத்தில் ஒரு சமய முறை இருந்தது என்பதற்குப் பல ஆதாரங்கள் இருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலச் சமய • பாஷையில் சொன்னால் ஹரப்பா மக்கள் சத்தி வழிபாடு உடையவர்களாய் இருந்தார்கள் என்பதற்குப் பல சான்றுகளும் சின்னங்களும் உண்டு. மேலும் மொஹஞ்சதரோவிலும் ஹரப்பாவிலும் கண்டு எடுக்கப்பட்ட பல சிலைச்சின்னங்களில் மூன்று முகங்கள் உடையவரும், பத்மாசனத்தில் யோக நிலையில் இருப்பவரும், மிருகங்களால் சூழப்பட்டிருப்பவருமாகிய ஒரு தெய்வத்தின் உருவம் காணப்படுகிறது. இது பசுபதியாகிய சிவனுடைய உருவம் என்று தீர்க்கப்பட்டுள்ளது. அல்லாமலும் சிவலிங்க வழிபாடும் இருந்ததாகப் பல அறிகுறிகள் இருப்பதாக நிர்ணயிக்கப் பட்டிருக்கிறது.

இப்பொழுது "கொம்பியூற்றர்" (computer) என்னும் இயந்திர சாதனத்தைக் கொண்டு நடத்திய ஆராய்ச்சிகளின் மூலம் ஸ்காந்திநேவிய ஆசிய படிப்பு நிலையத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர் இப்பொழுது இருக்கும் இந்துசமய முறையே சிந்துவெளி மக்களின் சமய முறையாயிருந்ததென்று தீர்த்திருக்கின்றார்கள். இவர்கள் வணங்கிய பிரதான தெய்வங்கள் சிவன், விஷ்ணு, முருகன், கணேசர் முதலியோர் என்று அவர்கள் அறிக்கையிற் கூறப்பெற்றிருக்கின்றது. இவர்களுடைய கருத்தையே உருசிய தேசத்திலிருந்து வந்த விஞ்ஞானிகளும் தங்கள் ஆராய்ச்சிகளிற் கூறியுள்ளனர். எனவே சிந்துவெளி நாகரிக மக்களின் சமயம் சைவ சமயமே என்பதில் சந்தேகமில்லை. இவர்கள் ஆராய்ச்சியின் முடிவை அவர்கள் விடுத்த அறிக்கையால் தெரிந்து கொள்ளலாம். வேத சிவாகமங்களிற் துதிக்கப்பெற்ற தெய்வங்களே சிந்துவெளி மக்களாலும் துதிக்கப்பெற்று வந்தன என்பதை நாம் தெரிந்து கொள்ளலாம். இதனால் சைவசமயம் சிந்துவெளி நாகரிகத்துக்கு முந்தியதும் வேத சிவாகமங்களிலுள்ளதும், உலகத்திலே மிக மிகப் பழைமை வாய்ந்ததென்பதையும் நாம் அறியலாம்.

பண்டைக்காலத்திற் றோன்றிய பலவேறு சமயங்கள் அழிந்தொழியவும், சைவசமயம் அழிவற்று இன்றளவும் நிலவி இருக்கின்றது என்பதை அறிந்து நாம் பெருமை கொள்ளலாம்.

வேதாகமங்களில் உள்ள மந்திரங்கள் முறைப்படி செபிப்பவர்களைக் காத்து, அவர்கள் விருப்பங்களைக் கூட்டி வைப்பது போலத், தமிழ் வேதாகமங்களாகிய திருமுறைகளும் மெய்கண்ட சாத்திரங்களும், முறைப்படி ஓதியவர்களைக் காத்து, அவர்கள் விருப்பங்களைக் கூட்டிவைக்கும் வல்லமை உள்ளன. திருமறைக்காட்டில், வேதங்களால் பூட்டப்பட்ட கதவு திருமுறைகளால் திறக்கப்பட்டமையே இதற்குச் சான்று பகரும். "கண்ட பெருமந்திரமே மூவர் பாட்டைக்காணு மந்திரங் கண்ணுதலோன் கூறும்" என்பர் உமாபதிசிவம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதங்களில் கடவுள், உயிர், தளை என்னும் முப்பொருள்கள் (பதி, பசு, பாசம்) உலக மக்களின் பக்குவ நிலைக்கேற்பப் பலபடிகளில் வைத்துக் குறிப்பாகவும், வெளிப்படையாகவும் உணர்த்தப்பெற்றிருக்கின்றன. சிவாகமங்களில், பக்வான்மக்கள் பொருட்டு, முப்பொருள்களும் அவர்கள் தரங்களுக்கேற்ப விரிவாகவும், வெளிப்படையாகவும் உணர்த்தப்பெற்றுள்ளன. திருமுறைகளும், மெய்கண்ட நூல்களும் இறைவன் கருணைமேலீட்டால் காலப்போக்குக்கு ஏற்ப அருளிச் செய்யப்பெற்றனவாதலால் அவற்றில் அவை மிகத்தெளிவாகவும் முடிந்தமுடிபாயும் உணர்த்தப் பெற்றுள்ளன.

சில காலங்களில் ஒரு கனிமரத்தைப் புதர்கள் மூடிமறைப்பதுண்டு. இதுபோல, ஒரு சமயம் பிற சமயங்களால் மூடப்பட்டு அடக்கப்படுதல் நிகழும். இக்கதி ஒரு காலத்தில் சைவ சமயத்துக்கு நிகழ்ந்தது. இம்முறைகேடு நிகழும்போது மக்களுக்கு உண்மை புலப்படுவதில்லை; சிற்றறிவால் பற்பலவாறு நடந்து கொள்வர். இந்நிலை நேருங்கால் இறைவன் வாளாதிருப்பதில்லை. அவ்வப்போதைய நிலைமைக்கு ஏற்ப, உறுதியும் ஞானமுங்கொண்ட மெய் அடியார்களை உலகில் பிறப்பித்து, அடியவர்கள் உழைப்பால் மக்களை நன்னெறிப்படுத்தி சைவ சமயத்துக்கு ஆக்கம் புரிந்துள்ளனர். இத்தகைய பெருமக்களை நாம் சமயகுரவர்கள் எனப்போற்றி வழிபடுகின்றோம். இன்னார் சமயத்துக்குப் புரிந்துள்ள பாதுகாப்புச் சொல்லில் அடங்காது. திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் போன்ற பெரியோர் சொல்லாலும் செயலாலும் சைவசமயத்துக்குச் செய்த ஆக்கப்பாடு அளப்பரியது. இவர்களால் சைவ சமயம் மாசற்று விளங்குகிறது.

ஆகாசத்தில் சூரியன் பிரகாசிக்கின்றான். தண்மதியும் நிலவு காலுகின்றது; எண்ணற்ற நட்சத்திரங்களும் இயங்குகின்றன. அவைகளிடையே அசுவினியாதி இருபத்தேழு நட்சத்திரங்களும் பிரகாசிக்கின்றன. இவற்றால் ஆகாயத்தின் மகிமை எப்போதும் நினைக்கப்படுகின்றது. இங்ஙனமே சைவ வானமும் போற்றப்படுகின்றது. சைவ வானில் நீக்கமின்றி ஒளிதரும் சூரியன் சிவபே யாவன். அதில் நிலவைக்காலும் சந்திரன் திருநந்தி தேவரே யாவர். வானவெளியில் பன்னிரு ராசிகள்போலச் சைவ வானில் பன்னிரு திருமுறைகள் விளங்குகின்றன. இவற்றை அருளிச்செய்த பெரியோர்கள் இருபத்தெழுவராவர். இந்த இருபத்தெழுவரும் இருபத்தேழு நட்சத்திரங்களாவர். திருஞானசம்பந்த மூர்த்திசுவாமிகள் முதல் சேக்கிழார் பெருமான் ஈறுன இந்த இருபத்தெழுவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரும் சைவசமய பரிபாலகர்களேயாகும். இவர்களால் சைவசமயம் அவ்வப்போது ஆக்கம்பெற்று வந்துள்ளது.

2. பெருமை

திருமுறைகள் உயிர்கள் வாழ முறைவகுப்பன. "மண்ணில் நல்லவண்ணமே வாழலாம்" என்கின்றார் திருஞானசம்பந்தப் பெருமான். அதற்குச் சிறந்த வழி திருமுறைகளோதி இறைவனை வழிபடுதலே! உயிர்கள் நெக்குருகி வழிபடுதற்குத் துணைபுரிவன திருமுறைகள். திருமுறைகள் வேறு அவற்றை அருளிய ஞானாசாரியர்கள் வேறு என்று எண்ணலாகாது. திருமுறைகளும் ஞானாசாரியர்களும் நம் இறைவனும் வேறன்று. இறைவன் அவர்களுடன் வேறன்றி நின்று உயிர்களுக்கு ஞான உபதேசம் புரிந்தனர். ஞானாசாரியர்கள் 'அறிவாற் சிவனே என்பது தேற்றம்' 'எனது உரை தனதுரையாக' என்று ஆளுடைய பிள்ளையார் அருளிச் செய்துள்ளார்; 'நற்றமிழ் வல்ல' ஞானசம்பந்தப் பெருமான் நாம் எல்லோரும் உய்வதற்காகத் தான் நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பினார்கள். அவர் ஞானப்பால் உண்டு தம்மோடு அமையவில்லையாம். ஞானப்பால் உண்டதனை நாவால் மறித்து நம்மனோர் செவியமுதாய் உண்ணுதற்குத் தேவாரமாக வடித்தனராம். இப்படிச் சிவப்பிரகாச சுவாமிகள் கூறுகிறார், 'நாவால் மறித்து எம் செவி அமுதாய் வார்த்தபிரான்' என்று. திருமுறைகள் செல்வம் தரும், நிலையுடைய செல்வம் தரும். இதனை ஆளுடைய பிள்ளையார் அழகாக அருளிச் செய்துள்ளார். அச்சிரிய செம்மொழி வருமாறு:- "அலைபுனல்சூழ் பிரமபுரத்து அருமணியை அடிபணிந்தார் நிலையுடைய பெருஞ்செல்வம் நீடுலகில் பெறுவாரே" என்று பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை என்று எண்ணி இருப்போர்க்கு இப்பொன்னுரை பொருள் காண வழிகாட்டுகிறதல்லவா? அம்மட்டோ!

"சம்பந்தன் மொழிபத்து மிவை வல்லார் பொன் அடைந்தார், போகங்கள் பல அடைந்தார் புண்ணியரே" என்றும் ஞானசம்பந்தப் பெருமான் ஆணையிட்டுக் கூறியுள்ளார். அல்லாமலும் ஆளுடைய நம்பிகளும் "பொன்னும் மெய்ப்பொருளும் தருவானைப் போகமும் திருவும் புணர்ப்பானை" என்றும் அருளியுள்ளார்கள். ஊண், உடை, வீடு ஆகிய இன்றியமையாப் பொருள்களை இம்மையிலும், சிவலோகத்தை மறுமையிலும் திருமுறைகளால் எய்தலாம்.

வேதாகமங்களின் ஒருமைமுடிபினைச் சாமானிய மக்களும் எளிதில் உணரும் பொருட்டுத் திருமுறைகளை அருளிச் செய்யப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டன. முழுமுதற் கடவுள் யாரென்பதும், அவரது இயல்பும், அவரது செயல்களும், அடியார்கள் இலக்கணமும், அவர்களது செல்வங்களும், சரியையாதி வழிபாட்டு முறைகளும், இன்னோ ரன்ன சிவசமயச் செய்திகள் எல்லாம் திருமுறைகளில் பரக்கக் காணலாம். வேதாகமங்கட்கு விரோதமின்றி உண்மையை உணர்ந்து ஒழுகுமாறு இசைத் தமிழாலும் இயற்றமிழாலும் இத் திருமுறைகள், சைவ நலங்களை பொது மக்கள் மனங்கொள இசைக்கின்றன. இச் சிறப்புக் கருதியே நம் சேக்கிழார் பெரு மான், பன்னிரு திருமுறைகளின் முதல் ஆசிரியரான ஆளுடைய பிள்ளையாரின் திருவவதாரத்தினை உணர்த்துமிடத்தில் "வேத நெறி தழைத்தோங்க மிகு சைவத்துறை விளங்க" என எடுத் துக் கூறியுள்ளார்; இங்ஙனமே திருநாவுக்கரசர் திருவவதாரங் கூறுமிடத்தும், "அலகில் கலைத்துறை தழைப்ப அருந்தவத்தோர் நெறி வாழ்க" என்று காட்டியுள்ளார். இவ்வாறே சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவவதாரத்தைக் கூறுமிடத்து "அருமறைச் சைவம் ஓங்க ..... தீதகன்று உலகம் உய்ய" என்று கூறியுள்ளார். இவ் வாறெல்லாம் பன்னிரண்டாந் திருமுறை ஆசிரியர் பகருமாற்றால், தேவாரமாதிய திருமுறைகள், வேத சிவாகமங்களின் வழிநின்றே, சைவ நன்னெறியினை, உலக முழுதுக்கும் உய்யும் நெறியாக அருளு கின்றன என்பதை நாம் உணரலாம்.

வேதாகமங்கள் பிரணவத்தின் விரிவாகும் என்று கூறுவர். அங்ஙனமே, பன்னிரு திருமுறைகளும் ஓங்காரத்தின் விரிவாய் அமைந்துள்ளன. முதல் திருமுறையின் முதல் எழுத்து "ஓ" காரமாகும்; பன்னிரண்டாம் திருமுறையின் இறுதி எழுத்து மகர மெய்யாகும். இவ்விரண்டையும் இணைக்க "ஓம்" என்னும் பிர ணவம் ஒலிக்கின்றமை காணலாம். இதனால் பன்னிரு திருமுறை களின் உட்கிடக்கை பிரணவத்தின் விரிபொருளே என்பது புலப் படும்.

திருமுறைகள் கேட்பார்க்கும், கற்பார்க்கும், ஓதுவார்க்கும் உள்ளத்தே பத்தியையும் உண்டாக்குவன. சைவ சமயத்தின் இரு கண்கள் என விளங்குவன பன்னிரு திருமுறைகளும், மெய்கண்ட நூல்களும். மெய்கண்ட நூல்கள் - சாத்திரங்கள்; திருமுறைகள் - தோத்திரங்கள். சாத்திரங்கள் தலைவனையும், தன்னையும் உலகை யும்பற்றி அறியவேண்டிய விஷயங்களை வரையறுத்துக் கூறும்; தோத்திரங்கள் சாத்திரங்களால் துணையப்பட்ட தலைவனை நன் கறிந்து அவன்பால் பத்தி உண்டாகச்செய்யும் இரு கண்களும் அவன்பால் உண்டாகச்செய்யும் ஒன்றையே நோக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமுறைகள் தோன்றிய காலம்

தமிழ் இலக்கிய வரலாற்றில் சங்ககாலம் ஒரு பொற்காலம். ஆனால் சங்கங்கள் எப்பொழுது தோன்றி எப்போது மறைந்தன என்பதையொட்டி ஆராய்ச்சியாளர் பலபடக் கூறுகின்றனர்; பொதுவாகப் பாரத நாட்டில் காலவரையறை நியதியற்றதாகவே தோற்றமளிக்கிறது. அரசியல் வரலாற்றிலும் சரி, இலக்கிய வரலாற்றிலும் சரி, காலவரையறை சந்தேகத்துக்கிடமாகவே இருக்கிறது. முடிந்த முடிபாய் ஒன்றையும் சொல்லமுடியாது.

சர்மனிய தேசத்துப் (Germany) பேராசிரியர் ஒருவர் வின்றனிச் என்பவர் (Winternits) பாரத நாட்டின் இலக்கிய வரலாற்றைப் பற்றி ஒரு சிறந்த நூல் எழுதியுள்ளார். அதில் காலத்தையொட்டி ஒருசிறு குறிப்பும் எழுதியுள்ளார். அது மிகப் பொருத்தமானது; சுவையானது. "இந்திய இலக்கியங்களின் காலவரையறை ஒரு மெத்தையில் குத்திய குண்டூசிகள் போன்றன; குத்தி முடியுமுன் தட்டிவீழ்த்தப்படும் இயல்புடையன. ஒரு இலக்கியத்தைப் பற்றிய காலம் ஆண்டுகளால் அல்ல, நூற்றாண்டுகளால் அல்ல, ஆயிரமாயிரம் ஆண்டுகளால் வேறுபடுகின்றது" என்று.

இந்த உண்மையை நாம் மனத்தில் வைத்துக்கொண்டு திருமுறைகள் தோன்றிய காலத்தை நோக்குவாம். திருமுறைகள் தோன்றிய காலத்தின் கீழ் எல்லை கி. பி. 8 ஆம் நூற்றாண்டு ஆகும் என்பதும், அதற்குப் பிந்தி இருக்க முடியாதென்பதும் ஆராய்ச்சியாளரின் ஒத்த முடிபாகும். அதாவது கலியப்தம் 3800க்குப் பிந்தாது என்பதே.

முதல் மூன்று திருமுறையை அருளிச்செய்தவர் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் ஆவர். இவர் காலத்தையொட்டிப் பல ஆராய்ச்சிகள் உண்டு; மேலைத்தேச ஆராய்ச்சியாளருள் கலாநிதி ரெயிலர் (Dr. Toylor) என்பவர் சம்பந்தர் காலத்தை கி. மு. 1320 ஆய் தீர்த்திருக்கிறார். திரு. சபாரத்தின முதலியார் (கொக்குவில், யாழ்ப்பாணம்) கலாநிதி ரெயிலரின் ஆராய்ச்சியை ஏற்றுக்கொண்டு வேறும் சிலகுறிப்புகள் அக்காலத்தை நிரூபிக்கக் காட்டியுள்ளார்; ஆனால், கலாநிதி கோல்ட்வெல் பாதிரியார் சம்பந்தமூர்த்தி சுவாமிகள் பிறந்த காலத்தை கி. பி. 1292 என்று கூறியுள்ளார். இந்த இரு ஆராய்ச்சியாளரும் குறித்த காலத்தை நோக்கினால், 2612 வருட வித்தியாசத்தைக் காணலாம். மேலும் திரு சைமன் காசி செட்டி அவர்கள், திருஞானசம்பந்தர் நாவுக்கரசர் காலம் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டாகும் என்பர். திரு. சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்கள் கூன் பாண்டியன் காலம் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் என்பர். எனவே, ஞானசம்பந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமிகள் காலம் இரண்டாயிரம் ஆண்டுக்கு முற்பட்டதாம்: கொழும்பு, திரு. ஆனரபின் பொன் குமாரசாமியவர்கள், விடந் தீண்டியிறந்த வணிகனை ஞானசம்பந்தர் எழுப்பிய வரலாறு சிலப்பதிகாரத்தில் கூறப்படுவது கொண்டும், சிலப்பதிகாரம் கி. பி, 113 — 135 வரையிருந்த கயவாகுவின் காலமாதல் கொண்டும், திருஞானசம்பந்த சுவாமிகள், அதற்குச் சில ஆண்டுகள் முன்பு இருந்திருக்கலாம் என்றும் கூறுவர்; மனோன்மணிய ஆசிரியரான பேராசிரியர் P. சுந்தரம்பிள்ளை அவர்கள், "திருஞானசம்பந்தர் ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கூன்பாண்டியனைச் சைவனாக்கித் தென் பாண்டியில் சிவநெறி நிறுவிய பெருந்தகையாவர் என்பது துணிபு" என்பர். தஞ்சை ராவ்சாகிபு திரு. K. S. சீனிவாசபிள்ளையவர்கள் "திருஞானசம்பந்த சுவாமிகள் சோதியிற் கலந்த காலம் கி. பி. 655 க்குச் சிறிது காலம் முன்னே இருக்கலாம்" என்பர். திரு கா. சுப்பிரமணியப்பிள்ளையவர்கள் "திருஞானசம்பந்தர் கி. பி. 609 — 642 வரையுள்ள காலத்தில் 16 ஆண்டு நிலவுலகில் வாழ்ந்து சைவத்தை நிலைநாட்டினர் என்க" என்று கூறுகின்றார்.

இப்படியாகத் திருஞானசம்பந்தர் காலத்தை யொட்டிப் பல விதமான ஆராய்ச்சிகள் உண்டு. மற்றைய திருமுறைகளின் ஆசிரியர்கள் காலமும் இப்படியாகவே பலபட ஆராயப்பட்டிருக்கின்றன. ஒன்றையும் முடிந்த முடிபாகக் கொள்ளமுடியாது. இருந்தும் திருமுறைகளை அருளிச் செய்து தந்த ஆசிரியர்களை கீழ்க்காணும் கால முறையின் கீழ்ப்படாமல் கொள்ளலாம்; மேல் எல்லை சந்தேகத்துக்குரியதே?

| | |
|---|---|
| 1. திருஞானசம்பந்தசுவாமிகள்<br>2. திருநாவுக்கரசுசுவாமிகள்<br>3. ஐயடிகள் காடவர்கோன் | கி. பி. 7ம் நூற்றாண்டு |
| 4. சுந்தரமூர்த்திசுவாமிகள்<br>5. சேரமான் பெருமாள் நாயனார் | கி. பி. 8ம் நூற்றாண்டு |
| 6. சேந்தனார்<br>7. பட்டினத்தடிகள் | கி. பி. 9ம் நூற்றாண்டு |
| 8. நம்பியாண்டார் நம்பி<br>9. கண்டராதித்தர் | கி. பி. 10ம் நூற்றாண்டு |
| 10. கருவூர்த் தேவர் | கி. பி. 11ம் நூற்றாண்டு |
| 11. சேக்கிழார் | கி. பி. 12ம் நூற்றாண்டு |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமுறைகளைத் தொகுத்தவர் தொகுப்பித்தவர் வரலாறு.

சைவசமய குரவர்களான திருஞானசம்பந்தர் முதலிய மெய்யடியார்கள் அருளிச் செய்த திருப்பதிகங்களைத் தொகுத்து, இசை வகைக்கேற்பத் திருமுறைகளாக வகுத்த பெரியார் நம்பியாண்டார் நம்பி எனப்படுவர்;

நம்பியாண்டார் நம்பி வரலாறு, கொற்றவன் குடி உமாபதி சிவாசாரியர் அருளிச் செய்த நம்பியாண்டார் நம்பி புராணம் என்னும் திருமுறை கண்ட புராணத்திலும் திருநாரையூர் தல புராணத்திலும் காணப்படுகிறது. நம்பியாண்டார் நம்பி திருநாரையூர் என்னும் ஊரில் ஆதி சைவப் பிராமண குலத்தில் தோன்றியவர். நம்பிகளின் பெற்றோர் பெயர் திருமுறைகண்ட புராணத்தில் காணப்படவில்லை ஆனால் திருநாரையூர் தல புராணத்தில் நம்பியாண்டார் நம்பியின் தந்தை அனந்தேசன் என்றும் தாயார் கலியாணி என்றும் கூறப்பட்டுள்ளது.

நம்பியாண்டாரின் தந்தை அவ்வூரிலுள்ள பொல்லாப்பிள்ளையார் திருக்கோயிலில் பூசை செய்து கொண்டிருந்தார். நம்பிகள், இளையவராய்ப் பள்ளியில் கல்வி கற்றுக்கொண்டிருந்தார். இருக்கையில், ஒரு நாள் நம்பிகளுடைய தந்தை வெளியூருக்குச் செல்ல நேர்ந்தது. பொல்லாப்பிள்ளையாருக்குப் பூசை செய்ய வேண்டிய கடமை நம்பிக்கு ஏற்பட்டது. அவர் உரிய காலத்தில் திருக்கோயிலுக்குச் சென்று பிள்ளையாருக்கு திருமஞ்சனம் முதலியன எல்லாம் செய்து, நைவேத்தியத்தை அவர் முன்வைத்து, ''எம்பெருமானே திருவமுது செய்தருளும்'' என்று பிரார்த்தித்தார். பிள்ளையார் அதனைத் திருவமுது செய்யவில்லை. அதுகண்டு அவர் மனம் வெம்பி '' எம்பெருமானே! என்பால் ஏதேனும் தவறுண்டோ? அடியேன் நிவேதித்த அமுதைத் திருவமுது செய்யாதது என்னையோ'' என்று சொல்லி வருந்தினர். முடிவில், இது தன் தந்தைக்குத் தெரியின், அவர் தன்னை ஒறுப்பார் என அஞ்சி, தன் தலையைக் கல்லிலே மோதப் புகுந்தார். அப்போது பிள்ளையார் ''நம்பி பொறு'' என்று உரைத்தருளி, அந் நைவேத்தியம் முழுவதையும் திருவமுது செய்தருளினர்.

நம்பிகள் மனக்கவலை நீங்கி, பிள்ளையாரை வணங்கி ''சுவாமி, இனி அடியேன் பள்ளிக்கூடத்துக்குப் போனல் ஆசிரியர் அடிப்பார், ஆகலால் வேத முதலிய கலைகள் எல்லாவற்றையும் தேவரீரே கற்பித்து அருளவேண்டும்'' என்று வேண்டிக் கொண்டார். பொல்லாப் பிள்ளையாரும் அவ்வாறே கற்பித்தருளினர். ஊர் திரும்பிவந்த தந்தைக்கு நம்பிகளின் செயலும் பின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளையாரின் அருணலமும் தெரிந்தன; இச் செய்தி நாளடைவில் நாடெங்கும் பரவியது.

இஃது இவ்வாருக, தமிழ் நாட்டின் கண்ணே சிறந்து விளங்கா நின்ற சோழ மண்டலத்திலே, திருவாரூரிலே. கல்வி, ஒழுக்கங் களாலும், குருலிங்க சங்கம பத்தியாலும் சிறப்புற்ருேங்கிய அபய குலசேகர சோழ மகாராசாவானவர், வைதிக சைவ மார்க்கம் தழைத்தோங்கச் செங்கோல் நடாத்தி, அரசியற்றிக் கொண்டிருந் தார். ஒருகால், அச்சோழ வேந்தன் தமது அவைக் களத்துக்கு எழுந்தருளிவந்த ஒரு சிவனடியார், சமயகுரவர் மூவரும் அரு ளிச்செய்த தேவாரத் திருப்பதிகங்களுள் ஒவ்வொன்று ஓதக்கேட் டுப் பெருமகிழ்ச்சியடைந்தான். மேலும் பல ஓதுமாறு கேட்க, சிவனடியார் ''அவை கிடைக்கவில்லை என்ருர். இதனுல் வருத்த முற்ற அரசன், மூவர் தேவாரத் திருப்பதிகங்களையும் தேடித் தொகுக்க முயன்ருன்.

அரசனுக்குத் திருநாரையூரில் நம்பியாண்டார் நம்பி தோன் றிப் பொல்லாப் பிள்ளையாரால் அருள்பெற்றது தெரிய வந்தது. அரசன் நம்பியாண்டார் நம்பியை அடைந்து வணங்கி, மூவர் தமிழும் திருத்தொண்டர் வரலாறும் உலகில் விளங்கச் செய்ய வேண்டுமென்று வேண்டினுன். அவ்வண்ணமே, நம்பிகள் பிள்ளை யாரை வேண்டிக்கொள்ளப் பிள்ளையார் நம்பிக்கு '' சிதம்பரத் திலே இறைவன் திருநடனஞ் செய்யும் கனகசபைக்குப் புறக்கடை யின் பக்கத்திலே சமய குரவர்களின் கை அடையாளமுடைய அறையினுள்ளே தேவாரத் திருமுறைகள் இருக்கின்றன'' என்று அருளிச் செய்தார். பின்பு திருத்தொண்டர்களுடைய சரித்திரத் தையும் திருவாய் மலர்ந்தருளினுர். நம்பிகள் சோழ ராசாவிடம் அவைகளைத் தெரிவித்தார்.

இதைக் கேட்ட சோழமன்னன் நம்பிகளுடன் சிதம்பரத்தை அடைந்து தில்லைவாழ் அந்தணர்க்கு இவற்றைத் தெரிவித்தான். அவர்கள் ''தமிழ்வைத்த மூவர்வந்தால்'' அறை திறக்கும என் றனர். மதிநுட்பமுடைய அரசன் அம்பலவாணருக்குத் திருவிழாச் செய்து, தேவார முதலிகள் மூவரையும் திருவீதி உலா வருவித் துத் திருமுறைகள் இருக்கும் அறையின் எதிரே கொணர்வித்து ''மூவரும் வந்தார்'' என்ருன், அறை திறக்கப்பட்டது. அங்கி ருந்த ஏடுகளின்மேல் புற்று மூடிக்கொண்டிருந்தது. அதைக் கண்ட அரசன் மனங்கலங்கி வருந்தினுன்; '' தேவாரப் பதிகங் களிலே இக்காலத்துக்கு வேண்டுவனவற்றை மாத்திரம் வைத்து விட்டு மற்றவைகளைச் செல்லுமண்மூடச் செய்தோம் '' என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் அசரீரி வாக்கு ஆகாயத்திலே தோன்றிற்று. அது கேட்டலும் சோழ மன்னன் கவலை தீர்ந்து, திருவருளை வியந்து, நம்பிகளை வணங்கி "சுவாமி தேவார முதலிய அருட்பாக்கள் எல்லாவற் யும் திருமுறைகளாக வகுத்தருளும்" என்று பிரார்த்தித்தான்.

நம்பிகள் அதற்கு உடன்பட்டு, திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த திருப்பதிகங்களுள் கிடைத்த 384 பதிகங் களையும் மூன்று திருமுறைகளாக வகுத்தார். திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த தேவாரத் திருப்பதிகங்களுள் கிடைத்த 373 பதிகங்களையும் அடுத்த மூன்று திருமுறைகளாக வகுத்தார். சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச் செய்தவற்றுள் கிடைத்த 100 பதிகங்களையும் ஏழாந்திருமுறையாக வகுத்தார். மகாமந்திரம் ஏழு கோடியாதற்கு ஏற்பத் தேவாரப் பதிகங்களை ஏழு திருமுறை களாக வகுத்தார். பின்னர்த் திருவாதவூரர் அடிகளார் அருளிச் செய்த திருக்கோவையாரையும் திருவாசகத்தையும் எட்டாந் திரு முறையாகவும், திருமாளிகைத் தேவர் முதலிய ஒன்பதின்மர் அருளிச் செய்த திருவிசைப்பாப் பதிகங்கள் இருபத்தெட்டும் அவர்களுள்ளே சேந்தனார் அருளிச் செய்த திருப்பல்லாண்டுப் பதி கம் ஒன்றுமாகிய இருபத்தொன்பது திருப்பதிகங்களையும் ஒன்பதாம் திருமுறையாகவும் வகுத்தருளினார். பத்தாந் திருமுறையாகத் திரு மூலநாயனார் அருளிச் செய்த திருமந்திரத்தையும், பதினொராந் திருமுறையாகத் திருவால வாயுடையார் திருமுகப்பாசுரம் முதலிய பிரபந்தங்களையும் வகுத்தருளினார்.

இங்ஙனம், திருமுறைகளை வகுத்த பின்பு நம்பியாண்டார் நம்பி தமக்குப் பொல்லாப்பிள்ளையார் உபதேசித்தபடி, திருத்தொண்டத் தொகையை முதனூலாகக் கொண்டு, அறுபத்துமூன்று தனியடி யார்களும், ஒன்பது திருக்கூட்டத்தவர்களுமாகிய திருத்தொண்டர் களுடைய வரலாற்றை திருவந்தாதியாக அருளிச் செய்தார். அதன்பின், சோழ மன்னனும், நம்பிகளும், தில்லைவாழ் அந்தணர் களும் திருவெருக்கத்தம் புலியூரை அடைந்து, சிவபெருமானை வணங்கித் தேவாரத் திருப்பதிகங்களுக்குப் பண்ணடைவை அருளிச் செய்யுமாறு வேண்டினார்கள். திருவருளால், திருநீலகண்ட யாழ்ப் பாணர் மரபில் வந்த பெண் ஒருத்தியால் பண்ணடைவும் பெற்றனர்.

பண்ணடைவு வகுத்தபின், சோழமகாராசாவானவர் பதினொரு திருமுறைகளையும் செப்பேடு செய்து வைத்தார். மன்னராலும் நம்பிகளாலும் சைவத் திருநெறித் தமிழ்த் திருமுறை பதினொன்றும் தமிழ் நாடெங்கும் பரந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பியாண்டார் நம்பிகள் திருமுறைகளைத் தொகுத்தருளிய பெருமையோடு பதினொராம் திருமுறையில் உள்ள பிரபந்தங்களுள் பத்துப் பிரபந்தங்களையும் அருளிச் செய்திருக்கிறார்; அவையாவன:

1. திருநாரையூர்ப் பொல்லாப்பிள்ளையார் திருவிரட்டை மணிமாலை
2. கோயிற் பண்ணியர் விருத்தம்
3. திருத்தொண்டர் திருவந்தாதி
4. ஆளுடையபிள்ளையார் திருவந்தாதி
5. ,, திருச்சண்பை விருத்தம்
6. ,, திருமும்மணிக்கோவை
7. ,, திருவுலாமாலை
8. ,, திருக்கலம்பகம்
9. ,, திருத்தொகை
10. திருநாவுக்கரசு தேவர் திருவேகாதசமாலை

திருவிரட்டை மணிமாலை, திருநாரையூர் விநாயகப் பெருமான் மேற் பாடப்பெற்ற ஒரு நூல்; இதன்கண் இருபது பாட்டுக்கள் உள்ளன; விநாயகப்பெருமானுடைய திருவுருவம், செயல் நலம், அருள் வளம் முதலிய நலங்கள் இனிய சொற்களால் பாடப்பெற்றுள்ளன. அதற்கு ஓர் எடுத்துக்காட்டு வருமாறு:-

முகத்தாற் கரியன் என்றாலும், தனையே முயன்றவர்க்கு
மிகத்தான் வெளியன் என்றே, மெய்ம்மை யுன்னும்விரும்பு அடியார்
சுகத்தான், திகழ் நாரையூர் அம்மான் ...... " ............... "
.........................................................................

இங்கே கரியன் என்ற சொல் கரிய நிறம் உடையவன் என்றும், கரி (யானை) போலும் முகம் உடையவன் என்றும் பொருள்பட நிற்கும் நயம் கண்டு இன்புறத்தக்கது.

கோயில் திருப்பண்ணியர் விருத்தம் என்பது தில்லை அம்பலப் பெருமான் பேரில், நம்பிகள், எழுபது பாட்டுக்களால் பாடிய ஒரு பிரபந்தமாகும். திருப்பண்ணியர் விருத்தம் என்ற தொடருக்குச் சிவபெருமான் திருவருளாகிய செல்வத்தை விளைவிக்கும் பொருள் அமைந்த நூல் என்று பொருள் கூறுவர். இதன்கண், சுந்தரமூர்த்தி சுவாமிகள், சேரமான் பெருமான் நாயனார், கண்ணப்ப அதிபத்தர், சாக்கியர் முதலியோர் வரலாற்றுக் குறிப்புகள் காணப்படுகின்றன. மாணிக்கவாசக சுவாமிகள் திருக்கோவையார் பாடியதும், அவர் காலத்தவரான வரகுண பாண்டியன் சிறப்பும் சிறப்பிக்கப் பெற்றுள்ளன. இன்னும், தில்லையம்பலப் பெருமான் மன்றில் நடனம் புரிவது உயிர்கள் பிறவிதோறும் செய்யும் பாவம் அறுத்து ஆள்வதற்கே என்றும் நம்பிகள் கூறியுள்ளார்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி, திருஞானசம்பந்தப் பெருமான் பேரில் பாடிய நூல்கள் எல்லாவற்றிலும் அவருடைய வரலாற்றுக் குறிப்புகளைத் தொகுத்துக் கூறியுள்ளார். திருத்தொண்டர் திருவந்தாதி சைவசமய வரலாற்றில் மிக்க சிறப்புற்று நிலவுகிறது. இது சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடிய திருத்தொண்டத் தொகையை முதலாகக் கொண்டுள்ளது. திருத்தொண்டர் வரலாற்று வைப்புமுறை திருத்தொண்டத் தொகையுள் இருந்தபடியே இத்திருவந்தாதியிலும் மேற்கொள்ளப்பெற்றிருக்கிறது.

## திருமுறைகள்

### முதலாந் திருமுறை:

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் பாடியருளிய திருப்பதிகங்கள் பதினாறாயிரம் என்று நம்பியாண்டார் நம்பி உரைத்துள்ளார். இவருக்குப் பின்வந்த திருமுறைகண்ட புராணம் செய்தருளியவரும் அப்படியே கூறுகிறார். இவற்றுள் திருமுறை கண்ட காலத்தில் 38 திருப்பதிகங்களே கண்டு தொகுக்கப்பட்டன. இதனை திருமுறைகண்ட புராணம் "பண்புற்ற திருஞானசம்பந்தர் பதிகம் முந்நூற்றெண்பத்து நான்கில் இலங்கு திருமுறை மூன்று" என்று கூறுவது சான்று. இவைகள் திருமுறைகளாக வகுக்கப்பட்டதும் பண்முறை பற்றிய என்பது திருமுறைகண்ட புராணத்தால் அறியக்கிடக்கின்றது. முதல் திருமுறையில், நட்டபாடை முதல் மேகராகக் குறிஞ்சி ஈறாகப் பண் ஏழும், பண்ணமைதி பெறாத யாழ்மூரியுமாகப் பண் எட்டிற்கும் திருப்பதிகம் நூற்று முப்பத்தாறுகும். இவற்றில் 1469 திருப்பாடல்கள் உள. முதல் திருமுறையில் சீகாழி தொடக்கமாக 87 தலங்களின் திருப்பதிகங்கள் உள்ளன

### இரண்டாந் திருமுறை

திருஞானசம்பந்தமூர்த்திகள் பாடியருளிய திருப்பதிகங்களுள் 122 திருப்பதிகங்கள் இரண்டாந் திருமுறையாக வகுக்கப்பட்டன. இதிலே 1339 திருப்பாடல்கள் உள்ளன. இரண்டாந் திருமுறையில் இந்தளம் முதல் செவ்வழி ஈறாக ஆறுபண்கள் உண்டு. 219 தலங்களுக்குத் திருப்பதிகங்கள் உண்டு

### மூன்றாந் திருமுறை:

இது திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் அருளிச் செய்த தேவாரப் பதிகங்களின் மூன்றாம் பகுதியாகும். இதில் 125 திருப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிகங்களும், 1347 திருப்பாடல்களும் உள. இத் திருமுறையில் காந்தார பஞ்சமம் முதல் அந்தாளிக் குறிஞ்சி ஈறுக ஒன்பது பண்கள் உண்டு. இதில் சுவாமிகளால் வழிபட்ட தலங்கள் கல்வெட்டாராய்ச்சியாளரால் திருவிடைவாய் என்னும் ஊர்க்கல்வெட்டொன்றில் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் பாடிய திருப்பதிகம் ஒன்று காணப்பட்டது. அது ஏனைய பதிகங்களோடு சேர்ந்து இப்போது அச்சிடப்பட்டிருக்கிறது.

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் பாடியருளிய திருப்பதிகம் ஒவ்வொன்றிற்கும் பதினொரு பாட்டுக்கள் உள்ளன. அவற்றுள் திருவெழுகூற்றிருக்கை ஒன்றுமே தனிப்பாட்டாய் அமைந்தது. ஏனைய யாவும் பதினொரு பாட்டுக்கள் கொண்ட திருப்பதிகங்களே யாகும். ஆகவே, மூன்று திருமுறைக் கண்ணும் அடங்கிய திருப்பாடல்களின் தொகை 4213 ஆதல் வேண்டும். அவற்றோடு திருவெழுகூற்றிருக்கை சேர திருப்பாட்டுக்களின் தொகை 4214 ஆதல் வேண்டும், ஆனால் இப்போது கிடைப்பன 4181 திருப்பாட்டுக்களே! சுவாமிகளின் திருப்பதிகங்களால் வழிபட்ட திருப்பதிகள் 220. பொதுப் பதிகங்கள் ஏழு. சீர்காழிக்கு மட்டில் அறுபத்தேழு திருப்பதிகங்கள் உள்ளன. ஒவ்வொரு திருப்பதிகத்தின் இறுதித் திருப்பாட்டில் அப்பதிகத்தைப் பாடிய தமது ஊரும் பெயரும் கூறியுள்ளார். அன்றியும் அதன்கண் அப்பதிகத்தை ஓதுவதினால் எய்தும் பயனையும் குறித்துள்ளார்.

நாலாந் திருமுறை

திருநாவுக்கரசு சுவாமிகள் 4900 திருப்பதிகங்கள் அருளிச் செய்தனர் என்பர். சுந்தரமூர்த்தி சுவாமிகள் தாம் பாடியருளிய திருப்பதிகம் ஒன்றில் "இணைகொள் ஏழெழுநூறு இரும்பனுவல் ஈந்தவன் திருநாவினுக் கரையன்" என்று கூறியுள்ளார். இவற்றுள் திருமுறை கண்ட காலத்தில் 373 திருப்பதிகங்களே கிடைக்கப் பெற்றன என்று திருமுறை கண்ட புராணம் கூறும். ஆனால் இந்நாளில் 313 திருப்பதிகங்களே கிடைக்கப்பெற்றன; இவற்றுள் 114 திருப்பதிகங்கள் நாலாந் திருமுறையாக வகுக்கப்பட்டது. கொல்லிப்பண் முதல் குறிஞ்சிப்பண் ஈறுகப் பத்துப் பண்களில் இத் திருமுறையில் தேவாரங்கள் உள. சுவாமிகள் பாடியருளிய பதிகங்கள் திருநேரிசை, திருவிருத்தம், திருக்குறுந்தொகை திருத்தாண்டகம் என நான்கு வகையான யாப்பு முறைகளில் அமைந்துள்ளன; இத் திருமுறையில் திருவிருத்தங்களும் திருநேரிசைகளுமே உள்ளன. எனவே, திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரப் பதிகங்களுள் பலவற்றிற்குப் பண் வகுப்பு இல்லாது இருக்கின்றன;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தாந் திருமுறை

இதில், சுவாமிகள் பாடிய நூறு (100) திருப்பதிகங்கள் உள: இவை நூறும் திருக்குறுந்தொகை எனும் யாப்பினத்தைச் சேர்ந்தவை. இந்த 100 திருப்பதிகங்களுக்கும் 1015 திருப்பாடல்கள் உள்ளன.

ஆறுந் திருமுறை

இதில், திருநாவுக்கரசு சுவாமிகள் பாடியருளிய 99 திருப்பதிகங்கள் உள்ளன. இவற்றில் 981 திருப்பாடல்கள் உள்ளன. இவைகள் திருத்தாண்டக இனத்தைச் சேர்ந்தவை. ஆதலால், ஆறுந் திருமுறையைத் தாண்டகத் திருமுறை யென்றும், இத்திருத்தாண்டகங்களைப் பாடிய சிறப்பால் திருநாவுக்கரசு சுவாமிகளைத் தாண்டக வேந்தர் என்றும் பாராட்டுவது வழக்கம்.

ஏழாந் திருமுறை

சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச்செய்த தேவாரத் திருப்பதிகங்கள் "முப்பத்தெண்ணாயிரம்" என்று கூறுவர். சிலர் முப்பத்தெண்ணாயிரம் திருப்பாடல்கள் என்று கூறுவர். இவற்றுள் நூறு திருப்பதிகங்களே இப்பொழுது கிடைத்துள்ளன இத்திருப்பதிகங்களுள் 1026 திருப்பாடல்கள் உள. இந்தளம் முதல் புறநீர்மை ஈறாகப் 17 பண்களில் இத்திருப்பதிகங்கள் அமைந்துள்ளன.

எட்டாந் திருமுறை

மாணிக்கவாசக சுவாமிகள் இரண்டு அரிய நூல்களைச் செய்தருளியுள்ளார். அவை திருவாசகமும் திருக்கோவையாருமாகும். இவை இரண்டும் எட்டாந் திருமுறையாக வகுக்கப்பட்டன. திருவாசகம் என்பது அடிகள் ஆங்காங்கு பாடியருளிய திருப்பதிகங்களின் தொகுதியாகும். திருக்கோவையார் நானூறு கட்டளைக்கலித்துறைகளால் நானூறு அகப்பொருள் துறைகளைப் பொருளாகக் கொண்டு பாடியருளப்பட்டவை. இனி, திருவாசகத்தில் சிவபுராணம் முதல் அச்சோப்பதிகம் ஈறாக ஐம்பத்தொரு பகுதிகள் உள்ளன. திருவாதவூரடிகள் பாடியருளிய திருக்கோவையாரே கோவை நூல்களுள் தலை சிறந்ததாக அறிஞர்களால் பாராட்டப் பெறுவது. இத்திருக்கோவையாரில் தில்லைச் சிற்றம்பலத்துக் கூத்தப் பெருமான், பாட்டுடைத் தலைவனாகத் திருவாதவூரடிகளாற் பரவப்படுகின்றார். அதனால், அப்பெருமானுடைய திருவருட் சிறப்பும் தில்லையம்பலத்துப் பெருமாண்பும் ஒவ்வொரு பாட்டிலும் சிறப்பிக்கப்படுவதைக் காணலாம். இது பற்றியே இத் திருக்கோவையார் திருச்சிற்றம்பலக் கோவையார் என்றும் வழங்குகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்பதாந் திருமுறை

சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள் ஒன்பதாம் திருமுறையாகத் திகழ்வது திருவிசைப்பாவும் திருப்பல்லாண்டுமாகும். இத் திருமுறையை, "மோகமெறி திருவிசைப்பாமாலை என்று திருமுறை கண்ட புராண ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். இத்திருமுறையைப் பாடியருளிய அடியார்கள் ஒன்பதின்மர் ஆவர். அவர்கள் திருமாளிகைத்தேவர், சேந்தனார், கருவூர்த்தேவர், பூந்துருத்தி நம்பி காட நம்பி, கண்டராதித்தர், வேணாட்டடிகள். திருவாலியமுதனார், புருடோத்தமநம்பி, சேதிராயர் என்போராவர். திருவிசைப்பாத் திருப் பதிகங்கள் 28 ஆகும். சேந்தனார் 'கோயில்' என்று சிறப்பித்துச் சொல்லப்படும் சிதம்பரத்தைப் பற்றிப் பாடிய திருப்பல்லாண்டு என்ற திருப்பதிகம் ஒன்றும் சேர்ந்து 29 திருப்பதிகங்களாகும். தற்போது 29 திருப்பதிகங்களுக்கும் உள்ளபாடல்கள் 301. ஆனால் ஒரு பழம்பாடலில் செய்யுள் 365 என்று குறிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய 64 படல்களும் தற்போது சிதைந்து விட்டன.

திருவிசைப்பாப் பதிகம் ஒவ்வொன்றுக்கும் பண் வரையறுக்கப் பெற்றிருக்கிறது. பஞ்சமம், காந்தாரம், புறநீர்மை, சாளரபாணி, நட்டராகம். இந்தளம் என்னும் ஆறு பண்கள் திருவிசைப்பாவில் அமைந்துள்ளன. சாளரபாணி என்ற பண் ஒன்று மட்டும் தேவாரங்களில் இல்லாத பண் ஆகும். தேவாரப் பதிகங்களில் சிற்சில இடத்துச் சிலபண்ணின் பெயர்களைக் குறிப்பிட்டிருக்கின்றனர். ஆனால், பதிகத்துக்குரிய பண்ணின் பெயரைப் பதிக இறுதிப்பாடலில் குறிப்பிடவில்லை. கருவூர்த்தேவர் மட்டும் தாம்பாடிய திரிலோக்கிய சுந்தரம் என்ற தலத்துத் திருப்பதிகத்தில் மட்டும், அப்பதிகத்துக்குரிய பண், காந்தாரம் என்பதைப் பதிக இறுதிப்பாடலில் அருளி இருக்கின்றார். அவ்வப்பதிகத்திற்கு அந்த அந்த ஆசிரியர்களே பண் வரையறுத்தனர் போலும்.

இனி, ஒன்பதாம் திருமுறையின் ஈற்றில் அமைந்துள்ள ஒரே ஒரு திருப்பதிகம் திருப்பல்லாண்டு எனப்படும். இதில் 13 திருப்பாடல்கள் உண்டு. தில்லை நடராசப்பெருமான், தம் அடியாராகிய சேந்தனாரின் அன்பின் திறத்தை உலகிற்குக் காட்டவேண்டுமென்ற அருள் நோக்கங்கொண்டு. மார்கழித் திருவாதிரைத் திருவிழாவில், தாம் திருத்தேர் கொண்டருளும்போது, தேரைப் பூமியில் அழுந்து மாறு செய்தார்; அப்போது, அன்பர்கள் யாவரும் அறியச் சேந்தனார் திருப்பல்லாண்டு என்ற இந்தத் திருப்பதிகம்பாடத் திருத்தேர் தானே ஓடி நிலையினை அடைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வரலாற்று அற்புதத்தை நினைவுகூர்தற் பொருட்டுத் திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்து அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் சிதம்பரத்தில் ''பல்லாண்டு விளக்குநிதி'' என்று ஓர் அறக்கட்டளையை நிறுவியுள்ளார். இதன்படி, ஆண்டுதோறும், மார்கழித் திருவாதிரை முன்னாள் தேர்த்திருவிழா அன்று, பல திருமுறை வாணர்கள், திருத்தேருக்குமுன்னே திருப்பல்லாண்டை ஓதிக்கொண்டு செல்வார்கள்.

## பத்தாந் திருமுறை

திருமூல நாயனார் அருளிய திருமந்திரம் பத்தாந் திருமுறையாக வகுக்கப்பட்டது. திருமுறைகளுக்கு எல்லாம் காலத்தால் முற்பட்டது பத்தாந் திருமுறையாகிய ''தமிழ் மூவாயிரம்'' ஆகும். அப்படி இருக்க, இதனைப்பத்தாம் திருமுறையாக வகுக்கத் திருவருள் நம்பியாண்டார் நம்பிகளைத் தூண்டுவானேன்? இதற்குப் போதிய நியாயங்கள் சொல்லுவாரில்லை. ஒருவேளை தமிழ் மூவாயிரத்தின் பொருள் அமைதியை நோக்கி நம்பிகள் பத்தாம் திருமுறையாக வகுத்துள்ளார் போலும். மேலும் இதற்குத் திருமந்திரம் எனப் பெயர் வருவானேன்? இதற்குக் காரணம் உண்டு.

> ''நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
> மறைமொழி தானே மந்திரம் என்ப''

என்று பழைய தமிழ் இலக்கணமாகிய தொல்காப்பியம் மந்திரத்துக்கு வரைவு இலக்கணம் கூறுகின்றது. நிறைமொழி மாந்தராகிய திருமூல நாயனாரால் சிவபெருமானது திருவருள் ஆணையால், மறைபொருள் கூற்றுக்களையுடைய செய்யுட்களால் தமிழ் மூவாயிரம் அருளப்பட்டிருப்பதால் மந்திரம் எனப்பட்டது என்க.

> ''மந்திரங் கொண்டு வழிபடு வோர்க்குச்
> சுந்தர நாதன் சொல்லிய மந்திரம்''

என்று திருமூல நாயனாரே அருளிச் செய்துள்ளார். இத் திருமந்திர நூல் ஒன்பது தந்திரங்களால் அமைந்தது, ஒன்பது தந்திரங்களும் ஒன்பது ஆகமங்களாகிய, காரணம், காமிகம், வீரம், சிந்தம், வாதுளம், காலோத்தரம், சுப்பிரபேதம், மகுடம், வியாமளம் என்பவற்றின் சாரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் ஒன்பது திருமுறைகளும் பெரும்பாலும் தோத்திர ரூபத்தில் அமைந்துள்ளன. திருமந்திரம் ஒரு சாத்திர நூல். தமிழில் பதினான்கு சாத்திரங்கள் தோன்றமுன் இருந்த அறிவு நூல் திருமந்திரமே ஆகும். பதினான்கு சாத்திரங்களுள், காலத்தால் முந்திய திருவுந்தியாரும் திருக்களிற்றுப்படியாரும் திருமந்திரத்தின் வழிவந்தவை என்று கூறலாம். திருவுந்தியார் திருக்களிற்றுப்படியார் ஆசிரியர்கள் திருமூலநாயனார் ஞானபரம்பரையில் வந்த ஆசிரியர் ஒருவரிடம் உபதேசம் பெற்றிருக்கலாம் என நம்ப இடமுண்டு

திருமந்திரம் வேதப்பொருளையும் சிவாகமப் பொருளையும் வடித்தெடுத்த சாரமாகும். "வேதத்தை விட்ட அறம் இல்லை, வேதத்தின் ஓதத்தகும் அறம் எல்லாம் உள" (51) என்று வேதத்தைப் போற்றியும், "அண்ணல் அருளால் அருளும் சிவாகமம் எண்ணி நின்று அப்பொருள் ஏத்துவன் நானே" (58) என்று ஆகமங்களைப் போற்றியும், திருமூலர் தமது கருத்துக்களை வெளியிட்டுள்ளார். பாயிர கடவுள் வாழ்த்து, வேதாகமச் சிறப்பு முதலியனவும் முதல் தந்திரத்தில் உபதேசம், யாக்கைநிலையாமை, செல்வம் நிலையாமை, கொல்லாமை, கள்ளுண்ணாமை முதலியனவும் இரண்டாம் தந்திரத்தில், ஐந்தொழில், சிவநிந்தை, குருநிந்தை முதலியனவும் மூன்றாம் தந்திரத்தில் அட்டாங்கயோகம், அட்டமாசித்தி முதலியனவும், நாலாம் தந்திரத்தில் மந்திரம், சக்கரம் முதலியனவும், ஐந்தாந் தந்திரத்தில் சரியை, கிரியை, யோகம், ஞானம் சத்தி நிபாதம் முதலியனவும், ஆறாம் தந்திரத்தில், திருநீறு துறவு, தவவேடம் முதலியனவும், ஏழாந்தந்திரத்தில் சிவபூசை, முதலியனவும், எட்டாந் தந்திரத்தில் அவத்தைகள், வாய்மை, பத்தி, முத்தி, முதலியனவும், ஒன்பதாந் தந்திரத்தில், ஐந்தெழுத்து சிவதரிசனம், சூனிய சம்பாஷணை முதலியனவும் கூறப்பட்டுள்ளன. சூனிய சம்பாஷணை என்பது எளிதில் பொருள் விளங்காதனவாய்க் குருமூலமாகப் பொருள் காணவேண்டியனவாயுள்ள பாடங்கள். மறைந்த பொருள் உடையன. வேதமந்திரங்கள் இத்தன்மையானவை ஆனபடியால்தான் வேதமந்திரங்களுக்கு மறை என்ற பெயர் வழங்கிவருகிறது. மறைபொருட் கூற்றாகிய சூனிய சம்பாஷணைக்கு ஓர் உதாரணம்:

"வழுதலை வித்திடப் பாகல் முளைத்தது
புழுதியைத் தோண்டினேன் பூசனி பூத்தது
தொழுதுகொண் டோடினார் தோட்டக் குடிகள்
முழுதும் பழுத்தது வாழைக்கனியே"

வழுதலைவித்து — யோகப்பயிற்சி, பாகல் — வைராக்கியம்; புழுதியைத் தோண்டினேன் — தத்துவ ஆராய்ச்சி செய்தேன்; பூசனி பூத்தது —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவம் வெளிப்பட்டது; தோட்டக்குடிகள் — இந்திரிய விஷயங்கள்; பழுத்தது — கிடைத்தது; வாழைக்கனி — ஆன்ம லாபம்.

இனி, இக்காலத்தில் மேடைப் பேச்சாளர் எடுத்துக் கையாளும் சொல் தொடர்கள், வாக்கியங்களுள் பல திருமந்திரத்தில் இருந்து எடுக்கப்பட்டவையே. அவற்றுள் ஒருசில காட்டுதும்.

1. ''நான்பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம். (85)
2. ஆர்க்கும் இடுமின் அவரிவர் என்னன் மின் (250)
3. வேடநெறி நில்லார் வேடம் பூண் டென்பயன் (240)
4. ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்.

பதினோராந் திருமுறை

இத்திருமுறையில் 40 பிரபந்தங்கள் உள. இவைகளை அருளிச் செய்தவர்களுள் ஒருவர் திருவாலவாயில் எழுந்தருளியிருக்கும் சொக்க லிங்கப் பெருமான். இவர் அருளிச் செய்தது திருமுகப் பாசுரம். இது மதுரையில் இருந்த பாணபத்திரன் என்னும் இசைப்புலவன் இறைவனைப் பொருள் வேண்டி இரக்க, இறைவன் அருளிச்செய்து கொடுத்தது. பெருமாக்கோதையராகிய சேரமான் பெருமானிடஞ் சேர்ந்து அளவிறந்த பொருள் பெற்றுச் செல்வனாய் இருந்தான். பாணபத்திரன் கொணர்ந்த திருமுகம் கண்டு சேரமான் பொன் மிகக் கொடுத்த செய்தியைப் பலநூல்கள் எடுத்தோதிப் பாராட்டு கின்றன. அவற்றுள் ஒன்று கல்லாடம் என்னும் நூல். மிகுதியா யுள்ள 39 பிரபந்தங்களையும் 11 அடியவர்கள் அருளிச் செய்துள் ளார்கள்.

திருமுகப்பாசுரத்தை அடுத்து, ''செடிதலைக் காரைக்காற் பேய்'' எனத் தம்மைச் சிறப்பிக்கும் காரைக்காலம்மையாரால் அருளிச் செய்யப்பட்ட மூன்று பிரபந்தங்கள் உள. இவை தேவாரத்திருமுறைக ளுக்குக் காலத்தால் முற்பட்டவை. காரைக்கால் அம்மையார் தலையால் நடந்த பதியாதலின் திருவாலங் காட்டைக் காலால் மிதித் தற்கு அஞ்சித் திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் ஊரின்வெளிப் புறத்தில் தங்கினர் எனப் பெரிய புராணம் கூறும் என்பர். அம்மை யாரின் அற்புதத்திருவந்தாதி இனிய எளிய சொற்களால் வெண் பாயாப்பில் ஆக்கப்பட்டுள்ளது. சிறந்த சைவசித்தாந்தக் கருத்துக் கள் நிறைந்துள்ளது. ஓர் எடுத்துக்காட்டு: (இறைவனின் அட்ட மூர்த்தம் கூறப்பட்டுள்ளது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனே இருசுடர் தீ ஆகாசம் ஆவான்
அவனே புவி, புனல் காற்று ஆவான்—அவனே
இயமானனாய் அட்டமூர்த்தியுமாய் ஞான
மயனாகி நின்றானும் வந்து.

(சீர் பிரித்து எழுதப்பட்டுள்ளது). இவர்காலம் பல பட ஆராயப்பட்டுள்ளது. சங்கம் மருவியகாலமெனச் சிலர் கொள்வர்

பதினொராந் திருமுறையில் மூன்றாவதாக இடம்பெற்றுள்ளது ஐயடிகள் காடவர்கோன் க்ஷேத்திரத்திருவெண்பா. ஐயடிகள் பல்லவர்குலத்து வேந்தருள் ஒருவர். சிவபெருமானிடத்துப் பேரன்பு பூண்டவர். பல இடங்களில் திருக்கோயிற் திருப்பணி செய்துள்ளார். இவர் வயது முதிர, அரசியலை வெறுத்துச் சிவப்பணியே தமது வாழ்க்கையாக மேற்கொண்டார். சிவபெருமான் கோயில் கொண்டிருக்கும் இடங்கள் பலவற்றிற்குஞ் சென்று இறைவனை வழிபட்டு ஒவ்வோர் வெண்பாவை அருளியுள்ளார். இப்பிரபந்தத்தில் 24 வெண்பாக்கள் உள. காலம் கி. பி ஏழாம் நூற்றாண்டின் பிற்பகுதியாகும் என்று கருதுகின்றனர். பதினொராந் திருமுறையில் நாலாவதாகச் சேர்க்கப்பட்ட நூல்கள் சேரமான் பெருமான் நாயனார் பாடியவை ஆகும். அவைகள் பொன்வண்ணத்தந்தாதி, திருவாரூர் மும்மணிக்கோவை, திருக்கயிலாய ஞான உலா என்பவைகளாம். பொன்வண்ணத்தந்தாதியில், அதனைப்பாடிய காரணம், தன்னுடைய கருவிகரணங்களைத் திருத்தொண்டில் ஈடுபடுத்தல், உலக வாழ்வின் உயர்வின்மை, தொண்டுசெய்யும் முறை இறைவன் அம்மை அப்பனாய் எழுந்தருளும் திறம், இறைவனின் அட்ட மூர்த்தம் முதலியன இனிய சொற்களால் அருளிச் செய்யப்பட்டுள்ளன. வழிபாடு என்பது, தொழுதல் பணிதல், நினைதல், அருச்சித்தல் முதலிய கூறுகளை உடையது. இக்கூறுகளை மக்களுக்கு அறிவுறுத்தும் பொருட்டுத் தாம் அருளிச் செய்த அந்தாதியில் "உலகு ஆளுறுவீர் தொழுமின், விண்ணாள்வீர் பணிமின், நித்தம் பலகாமுறுவீர் நினைமின், பரமனொடு ஒன்றலுற்றீர் நாண்மலரால் அருச்சிமின" என்று விளம்புகின்றார். (செ.14) இனி, திருவாரூர் மும்மணிக்கோவை முப்பது பாட்டுக்களையுடையது. இவையாவும் அகப்பொருள் நெறியிலேயே அமைந்துள்ளன. திருக்கயிலாய ஞானவுலா, தமிழ் இலக்கிய வகைகளுள் காணப்படும் உலா நூல்களுள் மிகத் தொன்மையும் முதன்மையும் வாய்ந்தது. ஆதலால் ஆதியுலா என்றும் கூறப்படும். இப்போது காணப்படும் உலா நூல்களும் அவற்றின் நடைமுறைகளும் இதனைப் பின்பற்றி நிற்பதோடு காலத்தால் பிற்பட்டுமே இருக்கின்றன. இறைவன் அழகிய திருக்கோலம் பூண்டு, தேவர்பலரும் சூழ்ந்துவர, உலாவருங்கால், அவரைப் பேதை முதலாகப் பேரிளப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண் ஈருக பெண்கள் பலரும் கண்டு அன்பு கொள்கின்றனர். அவர்கள் அனைவருக்கும் அருள் பாலித்து திருவுலா வருதலே இதன் பிண்டித்த பொருளாகும்.

பதினோராந் திருமறையில் ஐந்தாவதாக இடம்பெறுவன நக்கீர தேவ நாயனார் அருளிய பத்துப் பிரபந்தங்கள். அவையாவன : (1) கயிலைபாதி காளத்திபாதித் திருவந்தாதி (2) திரு ஈங்கோய்மலை எழுபது ( ) திருவலஞ்சுழி மும்மணிக்கோவை (4) திருவெழு கூற்றிருக்கை (5) பெருந் தேவபாணி (6) கோபப்பிரசாதம் (7) காரெட்டு (8) போற்றித் திருக்கலி வெண்பா (9) திருக்கண்ணப்பதேவர் திருமறம் (10) திருமுருகாற்றுப்படை. இவற்றுள் திருமுருகாற்றுப் படை சங்கநூல்களுள் ஒன்ருகிய பத்துப்பாட்டில் முதற்பாட்டாகச் சேர்க்கப்பட்டுள்ளது இது ஒரு பாராயண நூலாகச் சைவமக்களால் கொள்ளப்படும் இதற்குச் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் ஒரு புத்துரை எழுதியுள்ளார்கள். இந்நூலை அருளிய நக்கீரர் கடைச் சங்க காலத்து வாழ்ந்த நக்கீரர் என்றும், ஏனைய நூல்கள் யாவும் சங்க காலத்து நக்கீரரின், வேருன ஒருவரால் அருளப்பட்டன என்றும் ஆராய்ச்சியாளர் சிலர் கூறுகின்றனர். கயிலைபாதி காளத்திபாதித் திருவந்தாதி சைவசித்தாந்தக் கருத்துக்களை இனிய, எளிய சொற்களால் எடுத்துக் கூறுகிறது. உதாரணமாக,

உரையும் பொருளு முடலு முயிரும்
விரையு மலரும் போல் விம்மிய — புரையின்றிச்
சென்றவா றேங்குந் திருக்கயிலை யெம்பெருமான்
நின்றவா றெங்கு நிறைந்து.

சொல்லும் பொருளும் போலவும், உடலும் உயிரும் போலவும், மலரும் மணமும் போலவும் இறைவன் எங்கும் வியாபித்திருக்கின்ருன். என்பது கருத்து.

கல்லாட தேவ நாயனர் அருளிச் செய்த திருக்கண்ணப்பதேவர் திருமறம் பதினோராந்திருமுறையில் ஆருவதாக உள்ளது. இவர் இந்நூலையன்றிக் கல்லாடம் என்னும் ஒரு நூலும் அருளியுள்ளார். ஆனல் அது இத்திருமுறையில் இடம் பெறவில்லை.

கபிலதேவநாயனர் பாடியருளிய (1) சிவபெருமான் திருவந்தாதி (2) சிவபெருமான் இரட்டைமணிமாலை (3) மூர்த்தி நாயனர் திருவிரட்டை மணிமாலை என்னும் மூன்று சிறு நூல்களும் பதினோராந் திருமுறையில் ஏழாவதாகச் சேர்க்கப்பட்டுள்ளன. கபிலதேவர் பாடிய நூல்களுள் ஓர் அடியாரும் குறிக்கப்பெற்றிலர். புறநானூறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலிய சங்கநூல்களில் கபிலர் பாடியனவாகப் பல செய்யுள்கள் உண்டு. செய்யுள்களின் நடைவேறுபாட்டைக் கொண்டும் வேறும் சில காரணங்களைக் கொண்டும் சங்க காலக் கபிலரும், கபிலதேவ நாயனரும் வேறு வேறு என்று ஆராய்ச்சியாளர் கருதுகிறுர்கள். ஆராய்ச்சியாளர் கருத்துக்கள் எவ்வளவில் பொருத்தமானவை என்பது ஆராயப்பட வேண்டியது. இக்கால ஆராய்ச்சியாளர் தம்தம் மனம் போன போக்கில் தம்தம் கருத்துக்களைக் கூறியுள்ளார்கள். காய்தல் உவத்தல் இன்றி நடுநின்று ஆராயும் இயல்பு இக்காலத்தில் சுரிங்கிப் போய்விட்டது என்னலாம்.

பரண தேவநாயனர் சிவபெருமான் திருவந்தாதி ஒன்றே அருளியுள்ளார். இது பதினெராந் திருமுறையில் எட்டாவதாகச் சேர்க்கப்பட்டுள்ளது. புறநானூறு முதலிய சங்கநூல்களில் பரணர் பாடியதாகப் பல செய்யுள்கள் உள்ளன. சங்ககாலப் பரணர்வேறு பரணதேவநாயனர்வேறு என்று இக்காலத்தில் சிலர் ஆராய்கிறுர்கள்.

பதினெராந் திருமுறையில் ஒன்பதாகச் சேர்க்கப்பட்ட நூல் இளம்பெருமானடிகள் அருளிய சிவபெருமான் திருமும்மணிக் கோவை. இவர் இந் நூலொன்றே அருளியுள்ளார். பதினெராந் திருமுறையில் பத்தாவதாக உள்ள நூல் மூத்தபிள்ளையார் திருமும்மணிக் கோவை என்பது. இதை அருளியவர் அதிராவடிகள். பட்டணத்தடிகள் பாடியருளிய ஐந்துபிரபந்தங்கள் பதினெராந்திருமுறையில் பதினெராவதாகச் சேர்க்கப்பட்டுள்ளன. அவையாவன:-(1) கோயில் நான் மணிமாலை (2) திருக்கழுமல மும்மணிக்கோவை (3) திருவிடை மருதூர் மும்மணிக்கோவை (4) திருவேகம்பமுடையார் திருவந்தாதி (5) திருவொற்றியூர் ஒரு பா ஒரு பஃது.

பட்டணத்தடிகள் துறவு பூண்டதும் திருவிடைமருதூரில் தங்கிச் செந்தமிழ்ப் பாட்டுக்களால் சிவபெருமானைப் பாடிப் பரவத் தொடங்கினர். அப்போது அவர்பாடியது திருவிடைமருதூர் மும்மணிக்கோவை. சீகாழியில் தங்கியிருக்கும்பொழுது திருக்கழுமல மும்மணிக்கோவையைப் பாடியளினர். சீகாழிப்பதியில் கோபுரங்களும், மணிமேடைகளும் எந்திரவாவிகளும் நிறைந்துள்ளன என்று காட்டுகின்றுர். இவற்றைக் கண்ட அடிகளார், காழிநகர்க்கண் உள்ள கோபுரங்களையும் மணிமேடைகளையும் எடுத்தோதுமிடத்து ''வேதமே யொப்பெனவோது கோபுரமும்'' சிவாகமம் என வொளிர் தவா மணிமேடையும்'' என்று உவமையில் வைத்து உரைக்கின்றுர். சிவாகமங்களைச் சித்தாந்தம் என்று கூறும் மரபு உண்டு. இதனை அடிகள் 'கைவல நெல்லியங்கனியது போலச் சைவசித்தாந்த தெய்வ ஆகமத்த, வரன்முறைஎன்கின்பகர்ந்த திருமலர்வாய்'' (திருக்கழு.மும். 13)

பதினோராந் திருமுறையில் கடைசியாக இடம் பெற்றுள்ள பிரபந்தங்கள் நம்பியாண்டார் நம்பியால் அருளிச்செய்யப்பட்டன. அவையாவன:—(1) திருநாரையூர் விநாயகர் திருவிரட்டை மணிமாலை (2) கோயிற்திருப்பண்ணியர் விருத்தம் (3) திருத்தொண்டர் திருவந்தாதி (4) ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி (5) ஆளுடைய பிள்ளையார் திருச்சண்பை விருத்தம் (6) ஆளுடைய பிள்ளையார் திருமும்மணிக்கோவை (7) ஆளுடைய பிள்ளையார் திருவுலாமாலை (8) ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம் (9) ஆளுடைய பிள்ளையார் திருத்தொகை (10) திருநாவுக்கரசு தேவர் திருவேகாதசமாலை. இவற்றைப் பற்றிய குறிப்புக்களை நம்பியாண்டார் நம்பி அடிகள் சரித்திரக் குறிப்புக்குக் கீழ்க்காணலாம்.

## திருமுறைகளை ஓதும் முறை

சைவசமயத்துக்கும் தமிழ்மொழிக்கும் பெருமையைக் கொடுக்கும் நூல்களுள் திருமுறைகள் மிக முக்கியமானவை. சமயம் ஒரு வாழ்க்கைமுறை — " A Way of Life " மனிதன் பல நெறிகளில் வாழுகிறான் அவற்றுள் சமயநெறிகள் சிலபல. அச்சமய நெறிகளுள் வைதிக சைவநெறியும் ஒன்று. இவ்வைதிக சைவ நெறியை விரித்து உரைப்பன வேதசிவாகமங்கள். ஒருவருடைய வாழ்க்கையில் இக்காலத்தில், இவற்றைக் கற்றுணருவது அரிதான காரியமாகும் ஆதலால் கருணைக் கடலாகிய இறைவன் இக்காலத்துக்கேற்பத் திருமுறைகளையும் மெய்கண்ட சாத்திரங்களையும் அருளிச் செய்துள்ளான். இவற்றுள் திருமுறைகளைப் பற்றிய குறிப்புகள் மிகச் சுருக்கமாக மேலே காட்டப்பட்டுள்ளன.

இறைவனுடைய சுத்த நிலை ஞானரூபமே. 'சத்தி தன் உருவே தெள்ளில் தடையிலா ஞானமாகும்,' என்று அருணந்திசிவாசாரிய சுவாமிகள் அருளிச்செய்துள்ளார். திருமுறைகள் ஞானவாக்கு; ஞானத்தின் உருவம். எப்படி இறைவனை நாம் திருக்கோயில்களில் கண்டு வணங்குகின்றோமோ அப்படியே திருமுறைகளையும் சிவமாக வணங்க வேண்டும். ஏனெனில், அவைகள் இறைவனின் உருவம். இறைவன் திருமுறைகளில் நித்திய சாந்நித்தியமாய் இருக்கின்றான். திருமுறைகளை வீட்டில் ஒரு பகுதியில், தூய இடத்தில் உயரத்தில் வைத்து நித்தியம் ஆராதனை செய்யவேண்டும். அவைகளைப் படிக்கும் பொழுதும், ஓதும் பொழுதும் சுத்தமான இடத்திலிருந்து உடல் தூய்மையோடும், கூடியளவு மனத் தூய்மையோடும் படிக்க வேண்டும், ஓத வேண்டும். படித்தல் வேறு. ஓதுகல் வேறு ஓதுதற்குப் பண்முறை தெரியவேண்டும். பண்முறைகளைப் பழகித் திருமுறைகளை முறையாக ஓதுபவர்களை ஓதுவார்'' என்று வழங்குவார்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்நாட்டில் தேவார பாடசாலைகள், சைவ ஆதீனங்களை அடுத்துப் பல உண்டு. இவைகளில் திருமுறைகள் முறையாகக் கற்பிக்கப் படுகின்றன. திருமுறைகளை ஓதும் போதும் படிக்கும்போதும் அவைகளை ஓதியபின்பும் படித்தபின்பும் 'திருச்சிற்றபலம்' என்று சொல்வதுமரபு. திருமுறைகளை ஓதும்போது சொற்பிழை, பொருட்பிழை இன்றி, உரிய இசையில் பத்தி சிரத்தையோடு ஓதல் வேண்டும். படிக்கும் பொழுதும் ஆசாரத்தோடும் பத்திசிரத்தையோடும் படிக்க வேண்டும். திருமுறைகளில் உள்ள திருப்பாடல்களின் பொருள் தெரிந்து ஓதுவதும் படிப்பதும் மிகு நன்மை பயக்கும். பொருள் அறியாமலும் படிக்கலாம், ஓதலாம் அதாலும் பலன் உண்டு இல்லையென்று கூறமுடியாது. ஒரு மருந்தின் குணத்தை அறிந்து சாப்பிடுவது நற்பலனை அளிக்கும். அதின் குணத்தை அறியாது வைத்தியர் கொடுத்தபடி சாப்பிட்டாலும் பலன் உண்டு. அதுபோலவே திருமுறைப் பாசுரங்களும்.

பன்னிரண்டாந் திருமுறை

சேக்கிழார் பெருமானுல் பாடியருளிய பெரியபுராணம் என்னும் திருத்தொண்டர் புராணம் பன்னிரண்டாந்திருமுறையாக விளங்குகிறது. தமிழகத்தில் எழுந்த சைவப் பெருங் காப்பியங்கள் இரண்டு. ஒன்று பெரியபுராணம் மற்றது கந்தபுராணம். பெரியபுராணம் சேக்கிழார் பெருமானுல் அருளிச் செய்யப்பட்டது, கந்தபுராணம் கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகளால் அருளிச்செய்யப்பட்டது. இரு புராணங்களும் சைவ சமயத்தின் இரு கண்களாகும்.

சேக்கிழார் பெருமான் பெரியபுராணத்தை மிகுந்த ஆராய்ச்சியுடன் ஆக்கியுள்ளார். சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய திருத்தொண்டத் தொகையும், நம்பியாண்டார் நம்பியருளிய திருத்தொண்டர் திருவந்தாதியுமே பெரிய புராணத்துக்கு அடிப்படை நூல்கள். சேக்கிழார் பெருமான் திருத்தொண்டத் தொகையைத் தொகையாகவும், திருத்தொண்டர் திருவந்தாதியை வகையாகவும் பெரியபுராணத்தை விரியாகவும், தொகை வகை விரி என்னும் நூல் யாப்புக்கு அமைய அருளியவாறு காண்க இன்னும், பதினொருதிருமுறைகளையும், நாயன்மார் தோன்றிய ஊர்களில் அவர்காலத்து நிலவிய கர்ணபரம்பரைக் கதைகளையும், அவர்காலத்தில் இருந்த கல்வெட்டுகள், செப்பேடுகள் முதலியவற்றையும் ஆராய்ந்து, சிற்ப ஓவியச் சான்றுகளையும் துணைக்கொண்டு, நாயன்மார் சரித்திரங்களை அருளியுள்ளார். சைவ நெறியில் திருத்தொண்டர் திருக்கூட்டம், உலகம் என்றும் கண்டறியாத ஒரு தனிச்சிறப்பான சனநாயகம். இத்திருக்கூட்டத்தில் அந்தணர் முதல் புலையர் ஈருக உள்ள எல்

லாக் குலத்தவர்களும் சம நிலைபெற்றுள்ளார்கள். பலபடியிலுள்ள மக்களின் வாழ்க்கை முறைகள், நாட்டின் பெரும் பிரிவுகள், உட் பிரிவுகள், நாட்டின் பல வழங்கள், நாட்டு மக்களின் பல தொழில் கள், இயற்கைச் சிறப்புகள், அரசமுறைகள் ஆகிய எல்லாம் பெரிய புராணத்தில் சேக்கிழார் பெருமான் எடுத்து விளக்கியுள்ளார். இப் பெருங் காப்பியம் மூலம் சேக்கிழார் பெருமானின், சைவப் பற்று; திருமுறைகளில் ஈடுபாடு; இலக்கண இலக்கியப் புலமை; வரலாற்று வன்மை, இயல், இசை நாடகப் புலமை; மருத்துவம், சோதிடம், வானநூல் புலமை முதலியவற்றை நாம் கண்டு அனுபவிக்கலாம். இப்பெரிய புராணத்துள்ள நாயன்மார் வரலாறுகள் எங்கள் சமய மொழியும் பொது மொழியுமாகிய சம்ஸ்கிருத பாஷையிலும் இரு நூல்களில் காண லாம். அவை உப மந்நியுபத்தவிலாசம், அகத்திய பத்தவிலாசம் என்பனவாகும்.

## (இ) சைவசித்தாந்த சாத்திரங்கள்

மக்களை நல்வழிப்படுத்தி வாழ்வாங்கு வாழவைப்பது சமயம். உலகில் பல சமயங்கள் உள. அவைகளுள் எல்லாச்சமயக் கருத்துக் களையும் தன்னுள் அடக்கி சிறந்து விளங்குவது சைவ சமயம். இச் சைவ சமயம் அளப்பரும் தொன்மையும் மேன்மையும் உடையது. ஆகமம், அளவை, அனுபவம் என்னும் பிரமாணங்களை ஏற்று எக் காலத்துக்கும் பொருத்தமான சமயமாய் விளங்கும் மாட்சிமை உடையது. வேதங்கள் பொதுவாகவும் ஆகமங்கள் சிறப்பாகவும் கூறும் எல்லாப் பொருள்களையும் தன் இடத்தே உடையது இச்சம யம். ஆதலினால், இதனை "இராசாங்கத்தமர்ந்தது வைதிக சைவம்" என்று தாயுமானசுவாமிகள் கூறுவர்.

உலகத்தில் உள்ள பொருள்கள் மூன்றே மூன்றுதான். அவை கள் பதி, பசு, பாசம் என்பன. இம் முப்பொருள்களுக்குள் அடங் காத பொருள்கள் வேறொன்றுமில்லை. இம் மூன்றின் உண்மைகளை யும் இயல்புகளையும், தொடர்புகளையும், தர்க்கரீதியாக நிலைநாட்டி யும், விளக்கியும் நிற்பது சைவ சமயம். பாசத்தை நீக்கிப் பதியினை அடையும் முறையை அறிவித்தும், இறைவனும் உயிரும் கலந்த சுத்த அத்துவிதக் கலப்பைத் தெளிவு படுத்தியும் உள்ள சமயமும் சைவசமயமே. இச் சைவ சமயத்தைச் செந்நெறி, சிவநெறி என் றெல்லாம் கூறப்படும். இதன் இயல்பை வேதாகமங்கள் இயம்பு கின்றன. வேதாகமங்கள் இறைவனால் அருளிச் செய்யப்பட்டவை என்பதை நாம் முன் அறிந்துள்ளோம். ஆனால் அவ்வேதாகமங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர்களின் பக்குவ நிலைகளுக்கேற்பப் பற்பல வழிகளைக் கூறும். இவைகள் எல்லாவற்றையும் நாம் ஆராய்ந்து உணர்தல் எளிதன்று. எளிதன்றாயினும் உணர வேண்டிய அவசியம் நம்மனோர்க்கு உண்டு. உணராது போனால் விடுதலை இல்லை.

இதனாலேயே, உயிர்கள்பால் பேர் இரக்கமுள்ள பரம்பொருள் அவைகளுக்கு வேண்டப்படும் மெய்யறிவை அடைவதற்கு ஒரு வழியையும் வகுத்துள்ளார். எல்லா உயிர்களும் ஒரே காலத்துத் தோன்றி ஒரே காலத்து இறப்பன அல்ல. ஆற்றுத் - தொடர்ச்சியாக இடையீடு இன்றி வந்து கொண்டே இருக்கின்றன. இஃது அவற்றின் வினைக்கு ஈடான விளைவாகும். இங்ஙனம் தொடர்ந்து வந்துகொண்டிருக்கும் மக்கள் உயிர்க்குத் தொடர்ந்து நின்று அறிவை விளங்க வைக்கவேண்டிய பொறுப்பு இறைவனுடையதாகும்; எப்படி ஓர் உயிர்க்கு தத்துவங்களை உதவி அதன் இயக்கத்தை ஆக்கி வைக்கிறாரோ அப்படியே அந்த உயிருக்குக் குருமரபை ஏற்படுத்தி அதன் மூலம் அறிவை விளங்கவும் வைக்கிறார், இதனால், குரு சந்தானம் இறைவனின் அருட்பெருக்கே என்று நாம் உணரலாம். உலகில் மிக உயர்ந்தது இமயமலை. இதன் சிகரத்தில் தோன்றிவந்து பெருக்குடன் பாய்கின்றது கங்காநதி. இதனில் மூழ்கினோர் பாவம் நீங்கப் பெறுவர். இதுபோல், பிறவாயாக்கைப் பெரியோனாகிய சிவபெருமானிடத்தில் இருந்து வழிவழியாகப் பெருகிவரும் ஞானப்பெருக்கே நம்குரு பரம்பரை. இக்குரு பரம்பரையின் அருள் நோக்கு இல்லாமல் பிறவித்துன்பம் நீங்காது இந்த உண்மையை நாம் மனதில் கொள்ளவேண்டும்.

இங்ஙனமாகத் திருக்கயிலாயத்தே கல்லால மரநிழலிலே நட்சிறு மூர்த்தியாக எழுந்தருளியுள்ள ஸ்ரீகண்டபரம சிவனிடமிருந்து தோன்றிய பெருமை நம் குரு சந்தானத்துக்குரியது. இதனை நம் மண் உலகில் கொண்டுவந்தவர்கள் அகச் சந்தான குரவராகிய நால்வராவர். அவர்கள் திருநந்திதேவர், சனந்குமாரமுனிவர். சத்திய ஞானதரிசினிகள், பரஞ்சோதிமுனிவர் என்று கூறப்படுவோர். இவர்களைத் தேவ சந்தானத்தார் என்பர். நம் மண் உலகில், ஸ்ரீமெய்கண்ட தேவநாயனாரை முதல்வராகக் கொண்டு புறச் சந்தான குருபரம்பரை தோன்றியது. அகச் சந்தானகுரவருள், நான்காவதாகவுள்ள பரஞ்சோதி முனிவர் வேதாகம சாரமாகிய மெய்ஞ்ஞானத்தை வெண்ணெய்போல் கடைந்து ஸ்ரீமெய்கண்டதேவர்பால் அளித்தார். ஸ்ரீமெய்கண்ட தேவர்தாம் பெற்றமெய்ஞ்ஞானக் கொள்கையைத் தெய்வத்தீந்தமிழில் சிவஞானபோதம் என்னும் சித்தாந்த சாத்திரமாக நம் மனோர்க்கு அளித்தார். எப்படிக் குழந்தைப்பருவத்தினராகிய திருஞானசம்பந்தப் பெருமான் சிவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரம் பொருளின் அடங்காப் பெருமையை இசைமுறையில் தேவாரம் எனப்படுந் தீந்தமிழால் ஆக்கித் தோத்திரமாக நமக்கு அளித்தாரோ அப்படியே, சிவபரம்பொருள் அருளிய விரிந்த வேதாகமக்கருத்துக்களைச் சூத்திரமுறையில் சாத்திரமாக்கிக் குழந்தைப்பருவத்தினராகிய ஸ்ரீமெய்கண்டதேவர் தெய்வத்தீந்தமிழில் சிவஞானபோதமாக அருளியுள்ளார். இரு குழந்தைகளாலும் உள்ளத்தை உருக்கும் இசைப்பண்பும், உள்ளத்தைத் தெளிவிக்கும் ஞானப்பண்பும் நம் தமிழ்மொழிக்குத் தனிச்சிறப்பாக அமைந்துள்ளன.

நிற்க, புறச்சந்தான குரவர் மரபில் இரண்டாவதாக வந்தவர் ஸ்ரீ அருணந்திசிவம் என்பவர். இவர் தமது ஞானசாரியராகிய ஸ்ரீ மெய்கண்ட சிவம் அருளிச்செய்த சிவஞான போதம் என்னும் சாத்திரத்துக்கு வழி நூலாகச் சிவஞான சித்தியார் என்னும் சிறந்த நூலை அருளிச் செய்தார். இதன்பிறகு இக்குரு மரபில் மூன்றாவதாக விளங்கியவர் கடந்தை ஸ்ரீமறைஞான சம்பந்த தேவநாயனார். இவர் தம் குரவர்கள் அருளிய ஞான நூல்களைத் தம் மாணவர்கட்கு உபதேசம் செய்து கொண்டு திருக்களாஞ்சேரியில் பிரமபுரேசர் சந்நிதியில் இருந்தார். இவருடைய சீடராக விளங்கியவரே ஸ்ரீ உமாபதிதேவநாயனார். இந்நால்வரும் புறச்சந்தானாசாரியார்கள். ஸ்ரீ உமாபதிசிவம் எட்டுச் சித்தாந்த சாத்திரங்களை அருளிச் செய்துள்ளார். பின்னர், தாம் பெற்ற இன்பம் இவ்வையகமும் பெற வேண்டும் என்ற நோக்கத்துடன் ஸ்ரீ அருணமச்சிவாய தேவர் என்னும் ஒருவருக்கு ஞானோபதேசம் செய்து, அவரை அடைந்தவருக்கு அருளுபதேசம் செய்யும் நெறியையும் விளக்கி, அந்நெறியில் ஸ்ரீ அருணமச்சிவாய தேவரை வைத்து, கொற்றவன் குடியிலேயே அம்பலவாணர் திருவடிகளை அடைந்தருளினார். ஸ்ரீ அருணமச்சிவாய தேவருக்குப்பின் வந்த குருபரம்பரையின் விபரம் பின் கூறப்படும். மெய்கண்டசாத்திரங்கள் பதினான்குள் பதினொரு நூல்களை அருளிச் செய்தவர்கள் இங்கு காட்டிய புறச் சந்தானாசாரியருள் மூவராகும். ஆதலால் தான் இக்குருபரம்பரையை அதன் சூழ் நிலையில் வைத்து விளக்கியது. இனி மெய்கண்ட நூல்களை முறையாகப் பார்ப்போம்.

### 1. திருவுந்தியார்

திருவுந்தியார் என்னும் நூல் சைவசித்தாந்த சாத்திரங்கள் என்று தொகுத்துக் கூறப்படும் ஞான நூல்கள் பதினான்கினுள் முதலாவதாக வைத்து எண்ணப்படுவது. இது மெய்கண்டசாத்திரங்கள் என்னும் சைவசித்தாந்த சாத்திரங்களுள் காலத்தால் முந்தியது. திருவருள் நலமும் செறிந்தது. இது அருளிச் செய்யப்பட்ட காலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி. பி. 1148 என்பர். இதன் ஆசிரியர் திருவியலூர் ஸ்ரீ உய்யவந்ததேவநாயனுர் ஆவர். இவரை ஆளவந்ததேவர் எனவும் அழைப்பர். இவர், மக்கள் யாவரும் நன்னெறிப்பட்டு உய்யவேண்டும் என்னும் மனப்பாங்கு உடையவர் என்பது இவர் பெயரால் காணலாம். இவர் வடநாட்டிலிருந்து தென்னுடு போந்து தங்கினர் என்பர். இந்நூல் 45 கலித்தாழிசைகளால் ஆனது. செய்யுள் அமைப்பில் திருவாசகத்தில் உள்ள திருவுந்தியார் என்னும் பகுதியைப் பின்பற்றி இயற்றப்பட்டுள்ளது. ஒவ்வொரு பாட்டும் மூன்று அடிகளை உடையது. அவற்றுள் இரண்டாம் அடியும் மூன்றும் அடியும் "உந்தீபற" எனமுடியும். இம்முடிவுபற்றி இது திரு உந்தியார் என்னும் பெயர் பெற்றது. "உந்திபறத்தல், பெண்பிள்ளைகள் இருகைகளையும் இருமருங்கும் நேராக நீட்டிக் கால்விரல்களின் மேல் நின்று பாடிச் சுழன்று ஆடும் ஓர் ஆட்டம்" என்பர். வேறுசிலர், சிறுவர்கள் தும்பி பிடித்துப்பறக்கவிட்டு விளையாடுகையில் மகிழ்ந்து பாடுவது என்பர்.

இவர் பெயர் உய்யவந்தார் என்பது இவர்பாடியருளிய இறுதிப் பாட்டால் விளங்குகிறது. இவர் சிறந்த சிவாநுபூதிச்செல்வர். என்பது நூற்பொருளால் தெளியலாம். இவர் தமக்கு ஆசிரியர் என்று ஒருவரைப் பெயர்குறித்துக் கூருமையால், சிவபிரானே அருளாசிரியராகத்தோன்றி இவரை ஆட்கொண்டார் என்று கொள்ள இடம் உண்டு. இதனை அவர்பாடிய முதற்பாட்டே வலியுறுத்துகிறது. அது வருமாறு:

அகளமா யாரும் அறிவரிதப் பொருள்
சகளமாய் வந்ததென் றுந்தீபற
தானாகத் தந்ததென் றுந்தீபற.

உருவம் இன்றி யார்க்கும் அறியக் கூடாதபடி உள்ள பரம்பொருள், என் பக்குவம் கருதி, ஆசான் மூர்த்தியாய் உருவுகொண்டு வெளிவந்தது; வந்து, அடியேன் தானாகும்படி அருள் ஒளியைக் கொடுத்து ஆண்டது. அகளம்—உருவம் இல்லாதது; சகளம் உருவுடையது; அப்பொருள்—இன்னதென்று சுட்டப்படாத சிவம். தான் ஆதல்—பரமாசிவமாந்தன்மை யெய்துதல்.

- திரு. க. வஞ்சிரவேல் முதலியார் உரை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. திருக்களிற்றுப் படியார்

இந்நூலும் சிவஞான போதத்துக்குக் காலத்தால் முற்பட்டது. இதை இயற்றியருளியவர் திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனார். இவர், திருவியலூர் உய்யவந்த தேவநாயனாரின் மாணுக்கர் திருவியலூர் ஆளுடையாரின் மாணுக்கர். இது 100 வெண்பாக்களால் ஆனது. திருவுந்தியாருக்கு வார்த்திகமாக அமைந்துள்ளது. இந்நூற்கருத்தை உலகம் அறிய வேண்டும் என எண்ணிய இவ்வாசிரியர், திருவம்பலத்திலே திருக்களிற்றுப் படியிலே இந்நூலை வைத்தனர். படியில் செதுக்கப்பட்டிருந்த களிறு தனது கையை நிமிர்த்தி. நூலை வாங்கி நடராசப் பெருமான் திருவடியில் வைத்தது. இதனால் இதற்குத் திருக்களிற்றுப் படியார் என்னும் பெயர் வந்தது

## 3. சிவஞானபோதம்

மேற்கூறிய சித்தாந்த சாத்திரங்களுள் தலைசிறந்த தனிப் பெருநூல் சிவஞானபோதமாகும். இது புறச் சந்தானசாரியர்களுள் முதல்வரான ஸ்ரீ மெய்கண்ட தேவநாயனாரால் அருளிச் செய்யப்பட்டது. இச்சிவஞான போதம் பன்னிரு சூத்திரங்களை உடையது; அவற்றுள் முன் ஆறு சூத்திரங்களும் பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள்களின் பொது இலக்கணங் கூறுதலின் பொது அதிகாரம் எனவும் பின் ஆறு சூத்திரங்களும் முப்பொருள்களின் சிறப்பிலக்கணங்கூறுதலின் சிறப்பதிகாரம் எனவும் கூறப்படும். இனி, பொது அதிகாரத்துள், முன்மூன்று சூத்திரங்களும், முப்பொருள்களின் உண்மை கூறுதலின் பிரமாண இயல் எனவும், பின் மூன்று சூத்திரங்கள் அவற்றின் இலக்கணங்களைக் கூறுதலின் இலக்கண இயல் எனவும் கொள்ளப்படும். சிறப்பதிகாரத்துள் முன் மூன்று சூத்திரங்களும் முறையே அதிகாரியும், சாதனமும் சாதிக்கும் முறையுங் கூறுதலின் சாதன இயல் எனவும், பின் மூன்று சூத்திரங்களும் முறையே பாசவிடுதி, சிவப்பேறு, அப்பேறுபெற்ற சீவன் முத்தர் இயல்பு கூறுதலின் பயன் இயல் எனவும் பெயர் பெறும். இவ்வாறு பன்னிரண்டு சூத்திரங்களும் இரண்டு அதிகாரங்களாயும் நான்கு இயல்களாயும் இயலுகின்றன. இனி இந்நூலுக்கு ஸ்ரீ மெய்கண்ட தேவநாயனாரே, கருத்துரை, மேற்கோள், ஏது, திருட்டாந்தம் ஆகிய வார்த்திகப் பொழிப்புரையையும் செய்துள்ளார்.

இச்சிவஞானபோத நூலுக்குப் பல உரைகள் உண்டு. திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்து மாதவச் சிவஞான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமிகள் ஒரு சிற்றுரையும் ஒரு பேருரையும் அருளிச் செய்துள்ளார்கள். பேருரை சிவஞான மாபாடியம் என வழங்கும். ஸ்ரீசிவஞான சுவாமிகள் அருளிய சிற்றுரைக்கு, மேற்படி ஆதீன சைவப்பிரசாரகர், தூத்துக்குடி, திரு. பொ. முத்தையாபிள்ளை அவர்கள் ஒரு விளக்கம் எழுதியுள்ளார். இது மிகவும் சிறந்த நூல். பிள்ளை அவர்களின் விளக்கத்துடன் சிற்றுரையை எவரும், தாமாக இலகுவில், கற்றுக்கொள்ளலாம். இது இப்பொழுது அச்சில் இல்லை. சிவஞான போதத்துக்கு இவ்வுரைகளே அல்லாமல், ஸ்ரீ பாண்டிப் பெருமாள் விருத்தி, விளக்க உரை எனப்பல உரைகள் உண்டு,

## 4. சிவஞானசித்தியார்

ஸ்ரீ மெய்கண்ட தேவநாயனரின் முதல் மாணவர், அருணந்தி சிவாசாரிய சுவாமிகள் ஆவர். இவர் புறச்சந்தான குரவர்களுள் இரண்டாவதாக வைத்து எண்ணப்படுபவர். தமது ஞான குரவர் அருளிச் செய்த சிவஞானபோதத்துக்கு விளக்கமாகத் தம் ஆசிரியர் ஆணைப்படி சிவஞான சித்தியார் என்னும் நூலை அருளிச்செய்தார். பின் இருபாஇருபஃது என்னும் நூலையும் அருளிச் செய்தார். சிவஞானபோதம் முப்பொருள்களைத் தெளிவுறுத்தும் சிறந்த சைவ சித்தாந்தத் தமிழ்நூலாகும். ஆனல், அது சூத்திரங்களாகவும் வார்த்திகப் பொழிப்பாகவும் அருளிச்செய்யப்பட்டிருத்தலின், அந் நூ[illegible]பொருள்களை விரிவாக விளக்கி யாவருக்கும் தெளிவாக விளங்[illegible] முறையில், சிவஞானசித்தியார் அருளிச் செய்யப்பட்டுள்[illegible]ால் பரபக்கம் சுபக்கம் என இருபகுதிகளாக அமைந்[illegible]து. பரபக்கத்தில் புறப்புறம் முதலிய சமயங்களை, அவ்வச் சமயத்துவங்களை எடுத்துக்காட்டிக் கண்டித்தும், சுபக்கத்தில், ஏனைய சமயவாதிகள் ஆசங்கைகளை மறுத்துச் சிந்தாந்த சைவ உண்மைகளைப் புலப்படுத்தி நிரூபணம் செய்துமுள்ளார். இந்நூல் தமிழ்தினுமினிய மதுரமான செய்யுட்களால் ஆக்கப்பட்டுள்ளது. சுபக்கம் கடவுள்வாழ்த்து உட்பட 328 செய்யுட்களை உடையது. இது முதல்நூல்போலப் பன்னிரண்டு சூத்திரப் பிரிவாயுள்ளது. இதன்முன் ஆறு சூத்திரங்கள் பொது அதிகாரம் எனவும் பின் ஆறு சூத்திரங்கள் சிறப்பதிகாரம் எனவும் பெயர் பெறும். பொதுவதிகாரம் பிரமாண இயல், இலக்கண இயல் எனவும், சிறப்பதிகாரம் சாதன இயல், பயன் இயல் எனவும் வகுக்கப்பட்டுள்ளன. பிரமாண இயலில் மூன்று சூத்திரங்கள் உள. அவை முறையே பதி உண்மை, பசு உண்மை, பசு உண்மைகளைக் கூறும். இலக்கண இயலில் உள்ள மூன்று சூத்திரங்களும் பசு இலக்கணம், பாச இலக்கணம், பதி இலக்கணங்களை விளக்கிக் கூறும். சாதன இயலில் உள்ள மூன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூத்திரங்கள் முறையே சாதிக்கும் அதிகாரியின் இயல்பும் (பசு இயல்பு) சாதிக்கப்படும் பொருளது இயல்பும் (பதி-குரு இயல்பு) சாதிக்கும் முறையும் கூறும். பயன் இயலில் உள்ள மூன்று சூத்திரங்கள் முறையே பாசநீக்கம், சிவப்பேறு, சீவன் முத்தர் இயல்பு என்பனவற்றைக் கூறும். எனவே இம்முறைகள் முதல் நூற்கு உள்ளவாறே இந்நூற்கும் அமைந்துள்ளன. இப்பெருமை நோக்கியே தாயுமான சுவாமிகளும்:-

''பாரிலுள்ள நூல்களெல்லாம் பார்த்தறியச் சித்தியிலேயோர்
விருந்தப்பாதி போதும் எனவும்
''பாதிவிருத் தத்தாலிப் பார்விருத்த மாகவுண்மை சாதித்தார்
பொன்னடியைச் சாருநா ளெந்நாளோ.
என்றும் பாடியுள்ளார்கள்.

இத்தகைய மாட்சிமிக்க சிவஞான சித்தியார் சுபக்கத்துக்கு ஸ்ரீமறைஞானதேசிகர், ஸ்ரீசிவாக்கிரயோகியார், ஸ்ரீஞானப்பிரகாசர், ஸ்ரீசிவஞானயோகிகள், ஸ்ரீநிரம்ப வழகியார், ஸ்ரீசுப்பிரமணிய தேசிகர் ஆகிய அறுவர்களாலும் தனித்தனி செய்யப்பட்ட உரைகள் உள. பொதுவாக இவ்வுரைகளை ஒருங்கு சேர்த்து அறுவர் உரையென வழங்குவர். இவைகளேயன்றி, மாதவச்சிவஞான முனிவர் உரையை அடிப்படையாகக் கொண்டு தூத்துக்குடி பொ. முத்தையாபிள்ளை எழுதிய சித்தியார் விளக்க உரையும், [illegible]பு திரு. திருவிளங்கம் அவர்கள் எழுதிய சித்தியார் [illegible] உள்ளன.

## . இருபா இருபஃது

இந்நூலும் அருணந்திதேவநாயனாரால் அருளிச்செய்யப்பட்டது. இது பத்து திருவெண்பாக்களும் பத்துத் திருவாசிரியப்பாக்களும் முறையே விரவப் பெற்றது. பாச இலக்கணத்தைப் பகுத்து வினா விடையாகத் தெளிவிக்கின்றது. ஸ்ரீஅருணந்திதேவநாயனார், பாசம் பற்றி எக்காலத்தும் எவர்க்கும் எழக்கூடும் எல்லா ஐயங்களையும் பொருட்டு தமது குரவரைப் பலவகை வினாக்களால் வினவி அவ்வினாக்களுக்கு ஏற்ற விடைகளையும் சுட்டிக்காட்டியுள்ளனார். ஸ்ரீஅருணந்தி தேவநாயனார் ஸ்ரீமெய்கண்ட தேவநாயனாரின் உகந்த முதல் மாணவர் என்பதை நாம் அறிந்துள்ளோம். அவர் தம் குருவைச் சிவமாகக் கண்டும் கொண்டும் ஞானவாழ்வு பெற்றவர். ஆதலால், தம் ஆசாரிய மூர்த்திகளிடம் அவ்வப்போது பாச இலக்கணம் பற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினாவித் தெளிந்த ஞானக்கருத்துக்களை இந்நூல் வாயிலாக நமக்கு வாரிவழங்கியுள்ளார். பாசம் நீங்கினாலன்றி சிவத்திடம் நேசம் வளராது. பாச நீக்கமே நாம் முதற்கண் பெறவேண்டும். பாச நீக்கமே சிவப்பேற்றினைக் கொடுப்பது. இதனாலேயே இந்நூலாசிரியர் சிவஞானபோத நூலுக்கு விரிவுரைபோலச் சிவஞான சித்தியார் நூலை அருளியதோடு அமையாது இந்நூலையும் அருளியுள்ளார். இந் நூலுக்குத் திருவாவடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்த ஸ்ரீ நமச்சிவாயத் தம்பிரான் சுவாமிகள் ஓர் உரை அருளியுள்ளார். திரு. ஆ. ஈசுர மூர்த்திப்பிள்ளை அவர்களும் எளிய உரை ஒன்று எழுதியுள்ளார்.

6. உண்மை விளக்கம்

உண்மை விளக்கம் உண்மையினது விளக்கம் என விரித்து உரைக்கப்படும். இஃது உண்மையை விளக்கிக் கூறும் நூல் எனப் பொருள்படும். உண்மையாவது சிவபெருமான் அருளிச்செய்துள்ள வேதசிவாகமங்களில் உள்ள பதியின் உண்மை, பசுவின் உண்மை, பாசத்தின் உண்மை ஆம். அவ்வுண்மைகளை விளக்கிக் காட்டும் நூல் இது. இதனை அருளிச் செய்தவர்கள் திருவதிகை மனவாசகங்கடந்த நாயனார். இவர்கள் ஸ்ரீ மெய்கண்ட தேவநாயனாருடைய மாணவருள் ஒருவர். இந்நூலில் 54 செய்யுட்கள் உள. தத்துவங்கள் யாவை? ஆணவ மலமாவது யாது? வினையாவது யாது? ஆன்ம சொரூபமாவது யாது? கடவுள் சொரூபமாவது யாது? திருநடனமாவது யாது? ஐந்தெழுத்தின் உண்மை யாது? என மாணவர் வினவ, அதற்கு ஆசிரியர் விடை இறுத்தல் போல இந்நூல் அமையப் பெற்றது. ஆன்மதத்துவம், வித்தியாதத்துவம், சிவதத்துவம் என்பனவும் கூறப்பட்டுள்ளன. ஐந்தொழில் நடனம், நடனத்தின் உண்மை, அஞ்செழுத்து, அத்துவிதமுத்தி, குருலிங்கசங்கம வழிபாடு முதலியனவும் இதன்கண் நன்கு தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. இதற்குத் திருவாவடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்த ஸ்ரீ நமச்சிவாயத் தம்பிரான் சுவாமிகள் ஓர் உரை செய்துள்ளார். மேலும் யாழ்ப்பாணத்தில் ஒருமுறைக்கு இருமுறை வந்து, சைவ ஆசிரியர்களுக்கும் மற்றவர்களுக்கும் சைவசித்தாந்த நூல்களைப் பாடஞ் சொன்னவரும், காஞ்சிபுரம் பச்சையப்பன் உயர் நிலைப்பள்ளி அதிபராய் இருந்து இளைப்பாறியவரும், இப்பொழுது திருவாவடுதுறைஆதீன மகாவித்துவானாக விளங்குபவருமாகிய திரு. க. வச்சிரவேலு முதலியார் அவர்கள் B.A. L.T. எழுதிய தெளிவுரையும் உண்டு.

7. சிவப்பிரகாசம்

சிவப்பிரகாசம் என்பது சிவப்பொருளினது பிரகாசத்தை உணர்த்தும் நூல் எனப்பொருள் கொள்ளப்படும். முதல் நூல் சிவஞான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதம், வழிநூல் சிவஞான சித்தியார், இந்நூல் சார்பு நூலாம். சிவஞானபோதத்தையும், சிவஞான சித்தியாரையும், அபரஞான மாகிய சிவாகமங்களையும் குருவருளோடு கற்றுணர்ந்து, பரஞான மாகிய திருவருளையும் துணைக்கொண்டு, இந்நூலைக் கருணையினால், நம்மனோர் பொருட்டுப் புறச்சந்தான குரவருள் நான்காமவராகிய ஸ்ரீஉமாபதி தேவநாயனர் செந்தமிழிலே அருளிச் செய்தார்கள். இந்நூல் நூறு விருத்தப்பாக்களை உடையது. அவற்றுள் முன் ஐம் பதும் பொது அதிகாரம் என்றும், பின் ஐம்பதும் உண்மை அதிகா ரம் என்றும் வகுக்கப்பட்டுள்ளது பொது அதிகாரம் (1) பாயிரம் (2) பதி இலக்கணம் (3) பசு இலக்கணம் (4) பாச இலக்கணம் (5) அவத்தை இலக்கணம் என்றும், உண்மை அதிகாரம் (1) ஆன்ம இலக்கணம் (2) ஐந்து அவத்தை இலக்கணம் (3) உணர்த்தும் தன்மை (4) ஞானவாய்மை (5) ஞானத்தால் வரும் பயன் (6) புனித நாமம் (7) அணைந்தோர் தன்மை என்றும் பகுக்கப்பட் டிருக்கின்றன. சித்தாந்த சாத்திரங்களுள் இந்நூல் மிகச் சிறந்தது. இதன் செய்யுள் நடை மிக எளியது. முதல் நூல் வழிநூல்களில் கூறப் பட்ட விஷயங்களை, சுருங்கச் சொல்ல விளங்கவைப்பது. அன்றியும் இந்நூல் சிவஞானபோதம் சிவஞான சித்தியார் முதலிய மற்றச் சித் தாந்தசாத்திரங்களைப் படித்து அறிவதற்குப் பெருந்துணையாகவுள் ளது. இந்நூலுக்கு மூன்று உரைகள் உண்டு. ஒன்று மதுரைச் சிவப்பிர காசர் செய்தது. இது மிகவும் விரிந்த உரை. மற்றையது மாதவச் சிவஞான யோகிகள் மாணவர்கள் ஒருவரான, இலக்கணம் சிதம்பர நாத முனிவர் செய்தது. மூன்றாவது கொழும்பு திரு மு. திருவிளங் கம் அவர்கள் செய்தது. இந்த உரை, எளிய நடையில், யாரும் விளங்கக்கூடிய முறையில் செய்யப்பட்டுள்ளது.

8. திருவருட் பயன்

இந் நூல் குறள் வெண்பாக்களால் இயற்றப்பட்டுள்ளது. பத்து அதிகாரங்களை உடையது. ஒவ்வோர் அதிகாரத்திலும் பத்துச் செய் யுட்கள் உள. இறைவனது இயல்பு கூறும் முதல் அதிகாரம் பதிமுது நிலை என்று கூறப்படும். பொருள் செய்யும்போது முதுபதி நிலை என மாறிக்கொள்வர். பதி உண்மை கொண்டாலல்லது சமயநிலை நிலைக்காது. ஆதலால் பதி ஒருவர் உண்டு என்ற கொள்கையே ஞான நூல்களில் அளவை முகத்தாலும் (தர்க்கரீதியாகவும்) இலக் கண முகத்தாலும் முதற்கண் வற்புறுத்திக் கூறப்படும். பின், அப்பதி யோடு தொடர்புடைய பசுவின் இலக்கணம் இரண்டாம் அதிகா ரத்தில் கூறப்படுகிறது. ஆதலால் இரண்டாம் அதிகாரம் உயிரவை நிலை எனப் பெயர்பெறும். உயிர் அவை என்றமையால் பதிப்பொருள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றே என்பது உறுதியானதோடு, உயிர்கள் பல என்பதும் பெறப்பட்டது. நித்தப் பொருள்கள் மூன்று. அவற்றுள் சேதனப் பொருள்கள் இரண்டு (சேதனப்பொருள்-அறிவுடைப்பொருள்), சேதனப்பொருள்கள் இரண்டனுள் முற்றறிவுடையது பதி; சிற்றறிவுடையது பசு ஆதலால், பதியின் இயல்புகூறியபின் பசுக்களாகிய உயிர்களின் இயல்பு கூறப்பட்டது மூன்றும் அதிகாரம் பாசநிலை எனப்படும். இதனை இருள் மல நிலையென்றும் கூறுவர். முப்பொருள்களையும் முறையே கூறிவரும் வரிசையில் பதியும் பசுவும் கூறப்பட்டமையின் மூன்றும் அதிகாரம் பாசத்தைப் பற்றிக் கூறுகிறது. உயிர்களைப் பந்தித்து நிற்பது பாசம் ஆகையால் உயிர்கள் பசு எனப்பட்டன. நான்காம் அதிகாரம் அருளது நிலை எனப்படும். இருளாகிய பாசத்தை நீக்குவதற்குப் பெருந்துணையாய் உள்ளது திருவருள். இருளை ஒழிப்பது நமது கடமையாகும் இதற்கு நமது அறிவு போதாது திருவருளின் துணை இன்றியமையாது வேண்டப்படும் திருவருள் சிவபரம்பொருளின் கருணைவடிவாகும் ஆதலால் இவ்வதிகாரம் திருவருளின் இயல்பைக் கூறுகிறது. ஐந்தாம் அதிகாரம் அருளுருநிலை எனப்படும் அதாவது, குருவின் இயல்பு இவ்வதிகாரத்தால் கூறப்படுகிறது உயிர்கள் மல நீக்கம் பெற்றுச் சிவப்பேறு அடையவேண்டுமாயின் திருவருளை அறிந்து அடைந்து, அழுந்தி நிற்க வேண்டும் திருவருளை எப்படி அறிந்து அடைந்து அழுந்திநிற்பது என்ற விஷயம் இவ்வதிகாரத்தால் கூறப்படுகிறது திருவருளை ஞானசாரியரால்தான் அறிய முடியும். ஆசாரியர்களுள், சாதாரணமாகக் கல்வி போதிப்பவர்களும் உளர்; சமயத் துறையில் சமய விசேட தீட்சைகளைப் புரியும் குருமார்களும் உளர்; இவ்வதிகாரம் இருவேறெனவர்களைக் கூற வந்ததன்று. சிவமே குருவாகிச் சாதாரண உருவத்தில் வந்து அருள் செய்தல் முறைமையைக் கூறுகின்றது.

ஆறும் அதிகாரம் ''அறியும் நெறி'' என்று கூறப்படும். அதாவது உண்மைப் பொருளை உணரும் முறைமை என்பது பொருள். வீடுபேறு எய்துவதற்குத் துணைபுரிபவர் ஞானசாரியர். அந்தஞானசாரியர் இறைவன் திருவருளே என்பதும் தெரிந்து கொண்டோம். திருவருள் குருவாக வந்து உண்மையை உணர்த்துவிக்கிறது. அந்த உண்மைகள் யாவை என்பதை அறியவைப்பதே ஆறும் அதிகாரம். ஆதலின். நாம்கடைப் பிடிக்க வேண்டுவனவும் வேண்டாதனவுமாகிய செய்திகள் உணர்த்தப்படுகின்றன இவ்வதிகாரத்தில். ஏழாம் அதிகாரம் உயிர்விளக்கம் எனப்படும். உயிர் பாசத்தால் கட்டுண்டு கிடக்கும் நிலை விளக்கமற்ற நிலைஆகும். பாசத்தின் நின்றும் நீங்கினல் அல்லது உயிர் விளக்க நிலையை அடையாது. ஆன்மசுத்திய சிவத்தோடு ஆன்மாவைக் கலக்கத் தகுதியாக்குவது. வெளிச்சத்தால் அல்லது இருள் நீங்காது. அவ்வாறே அருளினல் அல்லது ஆன்மாவுக்குப் பாசம் நீங்காது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனபடியால், திருவருளை நாம்பெற வேண்டும். திருவருளைக் குரு அருளால் மாத்திரம் பெறலாம்; நூல்களைப் படிப்பதினால் பெறமுடியாது. சற்குரு ஓர் பக்குவ ஆன்மாவை ஆட்கொண்டு உயிர் விளக்கத்துக்கான செய்திகளை அறிவுறுத்துகின்றார். ஒன்றை அறிவதினால் பயன் விளைந்துவிடாது. அதனை அனுபவிக்க வேண்டும். அப்பொழுது தான் பயன் ஏற்படும். ஆகையால் இவ்வதிகாரத்தே கூறப்படும் வழியிலே நாம் தவறாது ஒழுகவேண்டும். அப்பொழுதுதான் ஆன்ம சுத்திநிலை ஏற்படும். எட்டாம் அதிகாரம் இன்புறுநிலை எனப்படும். உயிர் ஆன்ம சுத்தி அடைந்தபின், ஆன்மலாபம் அடைய வேண்டும். ஆன்மலாபமே ஆன்ம சுத்தியின் பயன். ஆன்மலாபம் எனினும் ஆனந்த விளக்கம் எனினும் ஒக்கும். ஆனந்த விளக்கம் இன்புறு நிலையாகும். இதனைப் பேரின்பநிலை என்றும் கூறுவர். இந்நிலையைப்பற்றி ஆசிரியர் இவ் அதிகாரத்திற் கூறுகின்றார். இனி, பேரின்ப நிலையை அடைந்தவர்கள் சீவன் முத்தர்கள். சீவன் முத்தருக்கு உடல் உண்டு. உடல் இருத்தலால் பாசம் இவர்களைத் தாக்கத் தலைப்படும். அப்படிப்பட்ட தாக்குதலை முறியடிக்காவிடில், சீவன் முத்தரும் பாச வலைப்பட்டு பிறப்பு எய்த நேரிடும். அப்பாசத் தாக்குதலை முறியடிப்பதற்கு ஏற்ற படைக்கலம் திருஐந்தெழுத்து. இதன் இயல்பை ஒன்பதாம் அதிகாரத்தால் கூறுகிறார். ஆதலால் ஒன்பதாம் அதிகாரம் ஐந்தெழுத்தருள்நிலை எனப்படும். ஐந்தெழுத்தோதி அருள்நிலையில் வழுவாவண்ணம் ஏகனாகி, இறைபணி நிற்பவர் சீவன் முத்தர். ஆன்மா சார்ந்ததின் வண்ணமாம் இயல்புடையது. உலகத்தைப் பற்றி நின்ற ஆன்மா இப்பொழுது இறைவனைப்பற்றி சிவமயமாய் நிற்கிறது. இங்ஙனம் இறைவனை அணைந்தோர் தன்மையை, கடைசி அதிகாரமாகிய பத்தாம் அதிகாரம் கூறுகிறது.

இவ்வளவு சிறப்பான வைப்புமுறையை உடையது இச் சிறந்த நூலாகிய திருவருட்பயன். அறம் பொருள் இன்பம் வீடுஆகியநான்கும் உறுதிப் பொருள்கள் மக்கள் முறையே அடையவேண்டியன இவையே ஆகும். இவற்றுள், அறம் பொருள் இன்பம் ஆகிய மூன்று உறுதிப் பொருள்களையும் திருவள்ளுவநாயனார் அருளிச் செய்த, சுத்தாத்து விதவைதிக சைவத்தமிழ் மறையாகிய திருக்குறள் விரித்துரைக்கிறது. வீட்டு நிலையின் இயல்பைக் கூறாது, அதற்கு நிமித்தமாகிய துறவறத்தின் இயல்பைக் கூறி முடிக்கின்றார் திருவள்ளுவ நாயனார். திருக்குறள் முடிந்த இடத்தில் இருந்து திருவருட்பயன் தொடங்குகிறது. திருக்குறளையும் திருவருட்பயனையும் சைவமக்கள் ஒரு நூலாகக் கொள்ள வேண்டும். ஏனெனில், அவைகள் இரண்டும் சேர்ந்து சைவ மக்கள் அடையவேண்டிய உறுதிப்பொருட்களாகிய அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கையும் விரித்துரைக்கின்ற படியால் என்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சிறந்த நூலுக்குப் பலர் உரை செய்துள்ளார்கள்; அவர்களுள் ஒருவர் திரு. சு. சிவபாதசுந்தரம் அவர்கள். இவர் பல வருடங்களாக, யாழ்ப்பாணம் விக்ரோரியாக்கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றியவர்; சிறந்த ஆசிரியராகவிருந்து பல மாணவர்களுக்குச் சைவ போதனை செய்து சைவப் பற்றை வளர்த்த பெரியார். இவர் எழுதிய உரை யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையாரால் அச்சிடப்பட்டுள்ளது. இதுவே உங்கள் பாடப்புத்தகமாகச் சோதனை ஆணையாளரால் வைக்கப்பட்டுள்ளது.

## 9. வினாவெண்பா.

இந்நூல் 13 வெண்பாக்களை உடையது. இது ஸ்ரீ உமாபதி தேவநாயனார், அருளிச் செய்த எட்டுச் சைவ சித்தாந்த நூல்களுள் மூன்றாவதாக வைத்து எண்ணப்படுவது. ஒவ்வொரு வெண்பாவும் வினாவும் முறையில் உள்ளது. மெய்ஞ்ஞானச் செய்தி பற்றி நம் உள்ளத்தே தோன்றக்கூடிய வினாக்களை எல்லாம், தாமே தெரிந்து தமது ஆசிரியரை வினாவு முறையாக, இப்பாடல்களை ஆக்கி அமைத்துள்ளார் இவ் ஆசிரியர். இங்ஙனம் வினாவியதைக் கூறும் வெண்பாவாதலின் வினாவெண்பா என்னும் பெயர் பெற்றது. பாசநிலை முதல் சிவபோகம் அளவும் உள்ள பன்னிரண்டு விஷயங்களைச் சைவ மக்களாகிய நாங்கள், தெரிந்து உய்திபெறுதற் பொருட்டு இந்நூலை ஆக்கி உபகரித்துள்ளார் என்று கொள்ளலாம். ஸ்ரீ அருணந்தி தேவநாயனார் செய்தருளிய இருபாஇருபஃது என்னும் நூல்போல் அமைந்துள்ளது இந்நூலும்.

## 10. போற்றிப்பஃறொடை

ஸ்ரீ உமாபதி தேவநாயனார் அருளிச் செய்த எட்டு நூல்களுள் நான்காவதாக வைத்து எண்ணப்படுவது இந்நூலாகும்; மெய்கண்ட சாத்திரம் பதினான்கனுள் பதினொராவதாகக் கொள்ளப்படும். இது கலிவெண்பா என்னுஞ் செய்யுள் வகையால் இயற்றப்பட்டுள்ளது. மொத்தம் 95 கண்ணிகள் இந்நூலில் உள்ளன. ஆதலால் இந்நூல் 190 அடிகளை உடையது. கேவல நிலையில் உள்ள ஆன்மா புனித அத்துவிதம் எனப்படும் சுத்தநிலையை அடைகின்ற வரையில், சிவபெருமான் தம் பெருங்கருணையால், பாசவலியைக் கெடுத்து எப்படி ஆட்கொள்ளுகின்றான் என்ற விஷயத்தைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் வேதாகம சாத்திர முறைப்படி ஸ்ரீ உமாபதி தேவநாயனார் இந்நூலில் கூறியருளுகின்றார். யாழ்ப்பாணத்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோப்பாயைத் தமது பிறப்பிடமாகக் கொண்டவரும், திருவாவடுதுறை ஆதீனத்து மகா வித்துவானாக இருந்தவரும், வித்துவ சிகாமணியும் ஆகிய ஸ்ரீ சபாபதி நாவலர் அவர்கள் ''பந்தமும் வீடும் உந்தன் அருளால் உயிர்க்கு நிகழும் முறைமையினை படியினில் நல்லோர் தெளிந்துய்ய'' அருளிச் செய்யப்பட்டது என்று இந் நூலைப் பற்றிக் கூறியுள்ளார்.

## 11. கொடிக்கவி

நம் உமாபதி தேவநாயனார் கொற்றவன் குடியில் எழுந்தருளி இருக்கும் நாளில், ஸ்ரீ நடேசபெருமானுக்குக் கொடியேற்ற உற்சவம் செய்யவேண்டிய காலம் வந்தது. அன்று சிவாச்சாரிய சுவாமிகட்குரிய முறைநாள். ஆனால், தில்லைவாழந்தணர்கள் அவருக்குப் பதிலாக வேறொருவரை நியமித்துத் துவஜாரோகணத்தை (கொடியேற்றத்தை) நிறைவேற்றத் துணிந்தனர் அது முடியவில்லை. யாவரும் துயர் உற்றனர். அப்போது தில்லையம்பலவன் ''நாம் கொற்றவன்குடியில் உமாபதி சிவாசாரியருடைய பூசைப் பேடகத்தே எழுந்தருளி அவர் செய்யாநின்ற பூசனைகளை ஏற்றுவருகிறோம் அவரைக் கொண்டு துவஜாரோகணம் நடத்துங்கள்'' என்று கூறியருளினார். அந்தணர்கள் நிகழ்ந்தனவற்றை நாயனாருக்கு விண்ணப்பித்தனர்; சுவாமிகள் கோயிலுக்குப் போந்து, ஆகம விதிப்படி யாவும் புரிந்து, கொடிமரத்தருகே சென்று நின்று, கொடிக்கவி எனப்படும் ஸ்ரீ பஞ்சாக்கரப் பாசுரத்தைத் திருவாய் மலர்ந்தருளினார். உடனே கொடி ஏறியது.

இந்நூல் ஒரு கலித்துறையையும் மூன்று திருவெண்பாக்களையும் உடையது. இதனைப் பஞ்சாக்கரப் பாசுரம் உரைக்கும் நூல் எனவும் கூறுவர். இந்நூல் கி. பி. 1310ஆம் ஆண்டில் இயற்றப்பட்டதென்பர். இதன் பெருமையினை ஸ்ரீசபாபதி நாவலர் அவர்கள் ''இது மாயாமல இருளின் ஒபாது ருளிக்கும்—மன்னுயிர் அருள் கண்டு முன்னவன் சொரூபம்—துன்னி ஒன்றாகிச் சொல்லொணா இன்ப—அருள்வாருதியில் திளைக்கும் மாட்சி—அஞ்செழுத்தின் நேர் பெற எடுத்து—நின்மல வென்றிக் கொடியாய் விளங்கக் கொற்றவன்குடி உமாபதி சிவம் கூறியருளியது என்பர்.

## 12. நெஞ்சுவிடுதூது

இந்நூலும் உமாபதி தேவநாயனாரால் அருளிச் செய்யப்பட்டது. தூது என்பது தமிழ் மொழியில் வழங்கும் 96 வகைப்பிரபந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சிறந்த நூலுக்குப் பலர் உரை செய்துள்ளார்கள்; அவர்களுள் ஒருவர் திரு. சு. சிவபாதசுந்தரம் அவர்கள். இவர் பல வருடங்களாக, யாழ்ப்பாணம் விக்ரோரியாக்கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றியவர்; சிறந்த ஆசிரியராகவிருந்து பல மாணவர்களுக்குச் சைவ போதனை செய்து சைவப் பற்றை வளர்த்த பெரியார். இவர் எழுதிய உரை யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையாரால் அச்சிடப்பட்டுள்ளது. இதுவே உங்கள் பாடப்புத்தகமாகச் சோதனை ஆணையாளரால் வைக்கப்பட்டுள்ளது.

9. வினாவெண்பா.

இந்நூல் 13 வெண்பாக்களை உடையது. இது ஸ்ரீ உமாபதி தேவநாயனார், அருளிச் செய்த எட்டுச் சைவ சித்தாந்த நூல்களுள் மூன்றாவதாக வைத்து எண்ணப்படுவது. ஒவ்வொரு வெண்பாவும் வினாவும் முறையில் உள்ளது. மெய்ஞ்ஞானச் செய்தி பற்றி நம் உள்ளத்தே தோன்றக்கூடிய வினாக்களை எல்லாம், தாமே தெரிந்து தமது ஆசிரியரை வினாவு முறையாக, இப்பாடல்களை ஆக்கி அமைத்துள்ளார் இவ் ஆசிரியர். இங்ஙனம் வினாவியதைக் கூறும் வெண்பாவாதலின் வினாவெண்பா என்னும் பெயர் பெற்றது. பாசநிலை முதல் சிவபோகம் அளவும் உள்ள பன்னிரண்டு விஷயங்களைச் சைவ மக்களாகிய நாங்கள், தெரிந்து உய்திபெறுதற் பொருட்டு இந்நூலை ஆக்கி உபகரித்துள்ளார் என்று கொள்ளலாம். ஸ்ரீ அருணந்தி தேவநாயனார் செய்தருளிய இருபாஇருபஃது என்னும் நூல்போல் அமைந்துள்ளது இந்நூலும்.

10. போற்றிப்பஃறொடை

ஸ்ரீ உமாபதி தேவநாயனார் அருளிச் செய்த எட்டு நூல்களுள் நான்காவதாக வைத்து எண்ணப்படுவது இந்நூலாகும்; மெய்கண்ட சாத்திரம் பதினான்கனுள் பத்தாவதாகக் கொள்ளப்படும். இது கலிவெண்பா என்னுஞ் செய்யுள் வகையால் இயற்றப்பட்டுள்ளது. மொத்தம் 95 கண்ணிகள் இந்நூலில் உள்ளன. ஆதலால் இந்நூல் 190 அடிகளை உடையது. கேவல நிலையில் உள்ள ஆன்மா புனித அத்துவிதம் எனப்படும் சுத்தநிலையை அடைகின்ற வரையில், சிவபெருமான் தம் பெருங்கருணையால், பாசலவிளையக் கெடுத்து எப்படி ஆட்கொள்ளுகின்றான் என்ற விஷயத்தைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் வேதாகம சாத்திர முறைப்படி ஸ்ரீ உமாபதி தேவநாயனார் இந்நூலில் கூறியருளுகின்றார். யாழ்ப்பாணத்துக்

கோப்பாயைத் தமது பிறப்பிடமாகக் கொண்டவரும், திருவாவடுதுறை ஆதீனத்து மகா வித்துவானாக இருந்தவரும், வித்துவ சிகாமணியும் ஆகிய ஸ்ரீ சபாபதி நாவலர் அவர்கள் ''பந்தமும் வீடும் உந்தன் அருளால் உயிர்க்கு நிகழும் முறைமையினை படியினில் நல்லோர் தெளிந்துய்ய'' அருளிச் செய்யப்பட்டது என்று இந்நூலைப் பற்றிக் கூறியுள்ளார்.

## 11. கொடிக்கவி

நம் உமாபதி தேவநாயனார் கொற்றவன் குடியில் எழுந்தருளி இருக்கும் நாளில், ஸ்ரீ நடேசபெருமானுக்குக் கொடியேற்ற உற்சவம் செய்யவேண்டிய காலம் வந்தது. அன்று சிவாச்சாரிய சுவாமிகட்குரிய முறைநாள். ஆனால், தில்லைவாழந்தணர்கள் அவருக்குப் பதிலாக வேறொருவரை நியமித்துத் துவஜாரோகணத்தை (கொடியேற்றத்தை) நிறைவேற்றத் துணிந்தனர் அது முடியவில்லை. யாவரும் துயர் உற்றனர். அப்போது தில்லையம்பலவன் ''நாம் கொற்றவன்குடியில் உமாபதி சிவாசாரியருடைய பூசைப்பேடகத்தே எழுந்தருளி அவர் செய்யாநின்ற பூசனைகளை ஏற்றுவருகின்றோம் அவரைக் கொண்டு துவஜாரோகணம் நடத்துங்கள்'' என்று கூறியருளினார். அந்தணர்கள் நிகழ்ந்தனவற்றை நாயனாருக்கு விண்ணப்பித்தனர்; சுவாமிகள் கோயிலுக்குப் போந்து, ஆகம விதிப்படி யாவும் புரிந்து, கொடிமரத்தருகே சென்று நின்று, கொடிக்கவி எனப்படும் ஸ்ரீ பஞ்சாக்கரப் பாசுரத்தைத் திருவாய் மலர்ந்தருளினார். உடனே கொடி ஏறியது.

இந்தநூல் ஒரு கலித்துறையையும் மூன்று திருவெண்பாக்களையும் உடையது. இதனைப் பஞ்சாக்கரப் பாசுரம் உரைக்கும் நூல் எனவும் கூறுவர். இந்நூல் கி. பி. 1310ஆம் ஆண்டில் இயற்றப்பட்டதென்பர். இதன் பெருமையினை ஸ்ரீசபாபதி நாவலர் அவர்கள் ''இது மாயாமல இருளின் ஒபாது தெளிக்கும்—மன்னுயிர் அருள் கண்டு முன்னவன் சொரூபம்—துன்னி ஒன்றாகிச் சொல்லொணா இன்ப—அருள்வாருதியில் திளைக்கும் மாட்சி—அஞ்செழுத்தின் நேர் பெற எடுத்து—நின்மல வென்றிக் கொடியாய் விளங்கக் கொற்றவன்குடி உமாபதி சிவம் கூறியருளியது என்பர்.

## 12. நெஞ்சுவிடுதூது

இந்நூலும் உமாபதி தேவநாயனாரால் அருளிச் செய்யப்பட்டது. தூது என்பது தமிழ் மொழியில் வழங்கும் 96 வகைப்பிரபந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்களுள் ஒன்றாகும். ஸ்ரீ உமாபதி தேவநாயனார் தம் ஞானசாரி யராகிய ஸ்ரீ மறைஞானசம்பந்த நாயனார்பால் தமது நெஞ்சைத் தூது விடுத்தருளுதல் இந்நூலில் கூறப்பட்டுள்ளது இது ஒரு சித் தாந்த ஞான நூலாகும். இந்நூல் 129 கண்ணிகள் கொண்டது. இதனைச் சித்தாந்த ஞானநூல் எனச் ஸ்ரீ சபாபதி நாவலர் அவர் கள் கூறுவர். இந்நூலை ஓதுவதினால் மனம் ஒடுங்கிச் சிவத்தில் வயப் படும் என்பர். ஆசாரியரை சிவமே எனக்கருதப்படவேண்டும் என்ற எண்ணம் திடப்படும். இந்நூலை நாளும் பாராயணம் செய்வதால் நெஞ்சு நல்வழிப்படும் என்று பெரியோர் கூறியுள்ளார்கள். காலம் கி. பி. 1311 என்பர்.

## 13 உண்மைநெறிவிளக்கம்

இதுவும் உமாபதி தேவநாயனார் செய்தருளிய ஞான நூலாகும். இந்நூல் உண்மை நெறியினை ஆறு திருவிருத்தங்களால் செப்புகிறது. இதில் தச காரியம் விளக்கப்பட்டிருக்கிறது. தச காரியமாவன, தத் துவ ரூபம்; தத்துவதரிசனம்; தத்துவசுத்தி; ஆன்மரூபம்; ஆன்மதரி சனம்; ஆன்மசுத்தி; சிவரூபம்; சிவதரிசனம்; சிவயோகம்; சிவபோகம் என்பனவாம். எனவே முப்பொருள்பற்றிய செய்தி இதில் விளக்கப் படுகின்றது.

## 14. சங்கற்ப நிராகரணம்

இதுவே உமாபதி தேவநாயனார் இயற்றியருளிய எட்டுச் சைவசித் தாந்த நூல்களுள் இறுதியானது என்பர். இந்த நூலினிடத்தே, ஆசிரி யர், புறச்சமயச் சார்பாக மாயாவாதி—ஐக்கியவாதி ஆகிய இந்திறத் தார்கொள்கைகளைக் கூறியும் மறுத்தும், அகச்சமய சார்பில் பாடாண வாதி, பேதவாதி, சிவசமவாதி, சங்கிராந்தவாதி, சிவாத்துவித வாதி என்போர் வாதம் கூறியும் மறுத்தும், இறுதியில் சைவவாதியர் சங்கற்பம் காட்டி மறுத்தும் சித்தாந்தம் செய்கின்றார். அவரவர் தத்தம் மனம்போன வழியெல்லாம் சரியெனக் கொண்டொழுகுதல் தீமையைப் பயக்கும். ஆகவால் ஞானவான்கள் தெரிந்து, தெளிந்து கூறியுள்ள வேதாகம உடன்பாடான சித்தாந்த சைவநெறி, இன்ன தெனத் தெரிந்து அவ்வழிச் செல்லுதலே நன்மை பயக்கும். இவ்வகை யில் இந்நூல் பெரிதும் துணை புரிவதாகும். புறச் சமயக் கொள் கைகளையும் அகச்சமயக் கொள்கைகளையும் எடுத்துக்கூறி அவற்றின் குறைபாடுகளை எடுத்துக்காட்டி, உண்மை காணும் முறையில் ஆராய்வு கூறிச் சித்தாந்தம்செய்கிறது இந்நூல். காய்தல் உவத்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றி இந்நூலினைக் கற்போர் மெய்ப்பொருள் கண்டு இன்புறுவர் என்பது திண்ணம். இந்நூலைஇவ்வாசிரியர் 1313 ல் இயற்றியருளினர் என்பர். இந்த நூல் முழுவதும் ஆசிரியப்பாவினால் இயன்றுள்ளது. 1048 வரிகளைக் கொண்டது. இறுதியில் ஒரு வெண்பாவும் உளது.

தொகுப்புரை

மெய்கண்ட சாத்திரங்கள் பதினான்காகும். அவற்றுள் ஸ்ரீ உமாபதி தேவநாயனார் அருளிச் செய்த நூல்கள் எட்டு ஆகும். இவை சித்தாந்த அஷ்டகம் எனவும் பெயர் பெறும். இந்த எட்டு நூல்களையும் படித்து அறிபவர்கள் சித்தாந்த சைவ நெறியினை நன்கு தெளியப்பெற்றவர்களாவார். ஒருவர் இவைகளைப் படித்தறிந்து அவைகள் கூறும் உண்மைகளை உணர்ந்து ஒழுகப்பெறின் அவர்க்கு வீடுபேறு கிட்டுவது அரிதன்று. இந்த எட்டு நூல்களும் ஒன்றோடு ஒன்று நெருங்கிய தொடர்புடையன. இத்தொடர்பு பின் வருமாறு காட்டப்பட்டுள்ளது. ஒருவர் சங்கற்ப நிராகரண நூலை முற்றக்கற்று, சமய பேதங்களையும் சித்தாந்த நெறியையும் அறிந்து அந்த நன்னெறியின் உண்மைகளை உண்மைநெறிவிளக்க நூலை ஓதுதலால் உணர்ந்து, பிறகு நெஞ்சிலே ஞானசாரியரை நண்ணும் நாட்டத்தினை நெஞ்சுவிடுதூதால் அடைந்து, அப்பால் ஆசாரியர் கற்பித்தருளும் சித்தாந்த நெறி ஒன்றையே கடைப்பிடித்தொழுகுவதெனக் கொடிகட்டித் துணிதலைக் கொடிக்கவி நூல் அறிவாற் கொண்டு, அங்ஙனம் தனக்கு நன்னெறி காட்டியும் நிறுத்தியும் உதவவல்ல தேசிகரைச் சிவமெனவே போற்றும் பண்பினைப் போற்றிப் பஃறொடை நூலைப் படிப்பதனால்புரிந்து, அவ்வாசான் அருளால் தனது ஐயப்பாடுகளை எல்லாம் கேட்டுத் தெளிதலை வினாவெண்பா நூல் கற்றலால் எய்தி, இதன் பின்வரவாவும் திருவருட் செயலால் நிகழ்வனவே என்ற துணிவு தோன்றி நிலையுறுதலை திருவருட்பயன் நூலினைப் பயின்று திருவருளைப் பெற்று, அதன்பின் சிவப்பிரகாசம் கற்பதால் ஆன்மாவில் சிவம்பிரகாசிப்ப சிவஞான சித்தியார் மூலம் சிவஞான சித்தியெய்தி, சிவஞானபோதத்தால் சிவபோதம் நீங்கிச் சிவபோதம் அடைந்து சீவன்முத்தராய் சிவத்தோடு இரண்டறக் கலந்து சிவ சாயுச்சிய பதவியை அடையலாம் என அநுபூதிமான்கள் கூறியுள்ளார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்திற் சைவம்

ஆதியும் அந்தமும் இல்லாத சிவநெறி இந்தியாவில் மட்டுமன்றி உலகின் பற்பல பாகங்களிலும் பரவியிருந்த தென்பதற்கு அவ்வப் பகுதிகளில் கண்டெடுக்கப்பட்டுள்ள புராதன பொருட்களும், வரலாற்றுத் தகவல்களும் சான்று பகர்கின்றன. சைவசமயத்தின் தொன்மையையும் வியாபகத்தையும் விளங்கிக் கொள்ளவும் முடிகிறது.

ஈழத்திலும் சரித்திரகாலத்துக்கு முற்பட்ட காலம் தொட்டுச் சைவ சமயம் அநுட்டிக்கப்பட்டதை, புராதன சிவாலயங்களான திருக்கேதீச்சரம், திருக்கோணேஸ்வரம், பொலநறுவைச் சிவன்கோயில் முன்னேஸ்வரம் போன்றவற்றாலும், நாயன்மார் வரலாறுகள் தேவார திருவாசகம், இராமாயணம் போன்றவற்றாலும், கல்வெட்டுக்கள், ஸ்தலபுராணங்கள், பாளியில் எழுதப்பட்ட மகாவம்சமாகிய வரலாற்றுக் குறிப்பிலிருந்தும், தெரிந்து கொள்ள முடிகிறது.

இராவணனின் கதையோடு தொடர்புள்ள பல ஐதீகங்களும் மண்டோதரியின் வரலாற்றை மணிவாசகப் பெருமான் "ஆர்கலிசூழ் தென்னிலங்கை அழகமர் மண்டோதரிக்குப் பேரருள் இன்ப மளித்த பெருந்துறை மேயபிரானை" என்று கூறுவதாலும் ஈழத்தில் சைவத்தின் தொன்மை மேலும் வலியுறுத்தப்படுகிறது.

## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான்

### தோற்றம்

யாழ்ப்பாணத்து நல்லூரில் அவதரித்த நாவலர் பெருமான் ஈழநாட்டில் மாத்திரமன்றி தமிழ்நாட்டிலும் தமிழ் சைவசமய வளர்ச்சிக்காக அளப்பரிய பணிபுரிந்து சரித்திரத்தில் முதலிடம் பெற்ற பெருந்தகையாவர். அவர்கள் தோற்றிய காலத்தையும் செய்த தொண்டுகளையும் அறிந்துகொள்ள வேண்டியது அவசியமாகும்.

மேல்நாட்டவர் கீழ்நாடுகளான இந்தியா இலங்கை போன்ற நாடுகளுக்குப் படையெடுத்துவந்து, நாடுகளைக் கைப்பற்றித் தங்கள் சமயமாகிய கிறீஸ்த சமயத்தைப் பரவச் செய்தார்கள், கிறீஸ்தவ பாடசாலைகளைக் கட்டி, அதன் மூலம் தங்கள் சமய வளர்ச்சியைச் செய்தனர். போர்த்துக்கேயர் சைவக் கோயில்களை இடித்துத்தரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டமாக்கினர். திருக்கேதீச்சரம், கோணேஸ்வரம், நல்லூர்க் கந்தசுவாமிகோயில், நயினுதீவு நாகபூஷணி அம்மன் கோயில் ஆகியன வற்றையும் இன்னும் பல சைவக் கோயில்களையும் இடித்தனர் கிறிஸ்தவ தேவாலயங்களைக் கட்டினர். போர்த்துக்கேயருக்குப்பின் ஒல்லாந்தர் வந்தனர். அவர்களும் பல அநியாயங்களைச் செய்துளர். பின்னர் ஆங்கிலேயர் கைப்பற்றினர். ஆங்கிலேயர் ஓரளவு நீதியாக ஆட்சியை நடத்தினரேனும் கிறிஸ்தவ சமய வளர்ச்சியில் சில தந்திரங்களைக் கையாண்டனர். இங்ஙனமாக 400 வருடகாலம் ஈழ நாடு அந்நியராட்சியில் சிக்குண்டிருந்தது.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் நல்லூரில் கந்தர், சிவகாமி தம்பதிகளின் அருந்தவப் புதல்வராக 18-12-1822ல் தோற்றினுர். அக்கால வழக்கப்படி ஏடு தொடக்கப் பெற்று சுப்பிரமணிய உபாத்தியாயரிடம் ஆத்திசூடி கொன்றைவேந்தன் ஆகிய நீதி நூல்களையும் நிகண்டு முதலிய கருவி நூல்களையும் கற்று வந்தார். ஒன்பது வயதளவிலே இவர் திறமை வெளிப்பட்டது. தமிழ் இலக்கண இலக்கிய நூல்களை இருபாலை சேனாதிராயர், சரவணமுத்துப் புலவர் ஆகியோரிடம் மிகக் குறுகிய காலத்தில் கற்றுமுடித்தார். சைவசமய சாஸ்திர நூல்களையும் அதற்குத் தேவையான சம்ஸ்கிருதத்தையுங் கற்று சிறந்த புலவராக விளங்கினுர்.

**ஆசிரிய சேவை**

பாதிரியார் பாடசாலையில் (யாழ் மத்திய கல்லூரியில்) ஆங்கிலமுங் கற்றுர். ஆங்கிலத்தைத் தமிழில் மொழி பெயர்ப்பதிலும் தமிழை ஆங்கிலப் படுத்துவதிலும் சமர்த்தராக விளங்கினுர். இவரது புலமையைக் கண்ட பாதிரியார், தமது பாடசாலையிலேயே ஆசிரிய பதவி அளித்ததுடன் அவரைத் தம் குருவாகவும் மதித்து நடந்தார். பாதிரியார் வேண்டுகோளின்படி பைபிளைத் தமிழில் மொழிபெயர்த்துக் கொடுத்தார். இவரது மொழிபெயர்ப்பே சிறந்ததாகக் கொள்ளப்பெற்றது. மொழிபெயர்ப்பால் கிறீஸ்தவ சமயத்தைப் பற்றியும் அறிந்து கொண்டார்.

**சைவ உணர்ச்சி**

விபூதி தரித்துக் கொண்டு பாடசாலைக்குப் போனுல் குற்றம்; தமிழில் பேசினுல் குற்றம்; சிவாலயம் சென்றுல் தண்டம்; கிறிஸ்தவத்தைத் தழுவினுல் உத்தியோகம்; மதம் மாறினுல் பதவி உயர்வு; இவ்வாறுன செயல்களினுல் சைவ சமய வளர்ச்சி குன்றத் தொடங்கியது. நம்மவரிற் சிலரும் கிறிஸ்தவர்களுக்குப் பிற்பாட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுப் பாடினர். இவற்றையெல்லாம் உணர்ந்த ஆறுமுகனர் வண்ணார் பண்ணைச் சிவன் கோவிலில் வெள்ளிக்கிழமை தோறும் சைவப்பிர சங்கங்கள் செய்து வந்தார். ஆசிரியப் பதவியை உதறித்தள்ளி விட்டு தமிழ் சைவ வளர்ச்சியில் கண்ணுங் கருத்துமாகப் பணி யாற்றத் தொடங்கினர். தமது உடல், பொருள், ஆவி அனைத்தை யும் இதற்காக அர்ப்பணித்தார். பிரமச்சரிய விரதங் காத்து ஓயாது பணி செய்தார்.

### பாடசாலைகள் நிறுவுதல்

ஊர்கள் தோறும் சைவத் தமிழ்ப் பாடசாலைகளை நிறுவி தமி ழையும் சைவசமயத்தையும் வளர்க்க உறுதி கொண்டார். முதன் முதலாக வண்ணார்பண்ணையில் 1848ஆம் ஆண்டு தொடங்கினர். தாமும் அவர் மாணுக்கருமாக பாடசாலையை நடத்தி வந்தனர். ஆசிரிய வேதனத்துக்காக சிலகாலம் பிடியரிசிகூடத் தண்டினர் கள். சிதம்பரத்திலும் இதேபோன்ற ஓர் வித்தியாசாலை 1864ல் தாபித்தார். இன்னும் யாழ்ப்பாணத்தில் கந்தர்மடம், இணுவில், கொழும்புத்துறை, மாதகல், பருத்தித்துறை, கோப்பாய், ஆகிய இடங்களிலும் சைவப்பிரகாச வித்தியாசாலைகள் தொடங்கப்பெற் றன. அவை இன்றும் நற்பணியாற்றி வருகின்றன. 1872 இல் ஓர் ஆங்கில வித்தியாசாலையும் தொடங்கப்பெற்றது. அரசினரின் பா முகத்தால் அப்பாடசாலை 4 ஆண்டுகளில் நிறுத்தப்பட்டு பின்னர் 1889இல் யாழ் இந்துக்கல்லூரியாகப் பரிணமித்தது.

தமிழ்நாட்டில் வேதாரணியம், மாயூரம் ஆகிய இடங்களிலும் வித்தியாசாலைகள் ஸ்தாபிக்க எண்ணியிருந்தார்.

### அச்சகம் நிறுவியமை

நாவலர் காலத்தில் தமிழ் சைவ நூல்கள் எல்லாம் செய்யுள் வடிவத்தில் ஏடுகளிலே எழுதிவைக்கப்பட்டிருந்தன. இவற்றையெல் லாம் புத்தக ரூபத்தில் வெளியிட்டு உலகிற்குப் பயன் படச் செய்ய வேண்டுமென எண்ணினர். இதற்காக அச்சகம் நிறுவுவ தற்கு சென்னைக்குச் சென்று அச்சுப்பொருட்களைப் பெற்று 'வித்தி யாநுபாலன அச்சியந்திரசாலை' என்றபெயருடன் முதலில் யாழ்ப் பாணத்து நல்லூரில் 1849இல் நிறுவினர். பின்னர் அதனை வண் ணார்பண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலைக்குப் பக்கத்தில் கொண்டு வந்து நடத்தினர். அதன் பின்னர் தமிழ்நாடு முழுவதற்கும் பொது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக சென்னைக்குக் கொண்டு சென்றார். இன்றும் அவ்வச்சியந்திர .. ாலை நாவலர் நூல்களை வெளியிட்டு வருகின்றது.

நூல்கள் வெளியீடு

தமது அச்சகத்தில், வேதாகமங்களின் சாரத்தை வடித்தெடுத்து முதலாம் இரண்டாம், சைவவினா விடைகளையும் முதலாம் இரண்டாம் நான்காம் பாலபாடங்களையும் அச்சிட்டு வெளிப்படுத்தினார் அவற்றைப் பாடசாலைகளில் உபயோகித்தும் வந்தார். தொல்காப்பியம், நன்னூல் காண்டிகை, நன்னூல் விருத்தி, திருக்குறள், பத்துப் பாட்டு, பாரதம், இலக்கணச் சுருக்கம், இலக்கண வினாவிடை, ஆகிய தமிழ் நூல்களையும்; பாடசாலை மாணவர்களுக்கென இலங்கைப் பூமிசாஸ்திரம் என்னும் நூலையும்; பெரியபுராணம், கந்தபுராணம், திருவிளையாடற்புராணம், திருக்கோவையார், கோயிற்புராணம், தருக்கசங்கிரகம், சிவாலய தரிசனவிதி ஆகிய சமயநூல்களையும் வெளியிட்டார். செய்யுள் வடிவிலேயிருந்த பெரியபுராணம், கந்த புராணம், திருவிளையாடற்புராணம், ஆகியவற்றை இலகுவான வசனநடையில் ஆக்கினார். பெரியபுராணத்திற்கு நாவலர் எழுதிய சூசனம் அரும் பெரும் தத்துவப் பொருள்களை இனிது விளக்குவதாகும் (.. ாரைக்கால் அம்மையார் புராணம் வரையும் சூசனம்எழுதிமுடித் .. ). இவரை வசன நடைகைவந்த வல்லாளர் எனப்போற்றுவர். .. வர் பதித்த நூல்களில் மருந்துக்கேனும் பிழைகாண முடியாமை .. தனிச் சிறப்பாகும்.

நாவலர் பட்டம்

ஆறுமுகனாரின் தமிழ், சைவ அறிவினையும் பிரசங்க வன்மையையும் அறிந்த திருவாவடுதுறை ஆதீனத்தார் 1949ல் இவரை வரவழைத்து, பதிபசுபாசவிளக்கங்கள் பற்றிய விரிவுரைகளைச் செய்வித்தனர். இவரின் இலக்கண இலக்கியத்திறமையையும் சைவ நூல்களின் நுண்ணிய அறிவையும் கண்டு மிக மகிழ்ச்சி எய்தினர். இவர் நாவன்மையைப் பாராட்டுமுகமாக 'நாவலர்' என்ற பட்டத்தைச் சகல விருதுகளோடும் வழங்கினர். அன்று தொடக்கம் 'நாவலர்' என்றதும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரையே குறிப்பதாயிற்று. இவர் பிரசங்க வன்மையைக் கேள்வியுற்ற இராமநாதபுரம், மதுரை மீனாட்சியம்மை சந்நிதானம், தருமபுர ஆதீனம், திருவண்ணாமலை ஆதீனம் காஞ்சிபுர ஆலயம், இவர் பிரசங்கத்தைக் கேட்ட பண்டார சந்நிதிகளும்சைவாசாரியர்களும் பரவசமாய்ப் பெருமகிழ்ச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சியுற்றார்கள் திருவண்ணாமலை யாதீனத்துப் பண்டார சந்நிதிகள் இவரைச் சிவிகையிலேற்றி வாத்திய கோஷத்தோடு, பட்டணவழியாக அழைத்துச் சென்றனர். பட்டம் பெற்று யாழ்ப்பாணம் வந்தபோது சைவப்பெரியார்கள் 'ஐந்தாங்குரவர்' என்ப்போற்றி அழைத்து வந்தனர்.

நாவலர் சைவப்பணி

நாவலர் பெருமான் சிறுவயது தொடக்கம் புராணம் படிக்கும் இடங்களுக்குச் சென்று வருவார். படிக்கும்போது பிழைகளைத் திருத்துவார். தாமும் பயன் சொல்லுவார். பாதிரியார் பாடசாலையில் படிப்பிக்கும் வேளையில் கிறீஸ்தவர் சைவத்தை நசுக்குவதற்குச் செய்த சூழ்ச்சிகளை அறிந்து வண்ணைச் சிவன் கோவிலில் சைவப்பிரசங்கங்கள் செய்து வந்தார். பஞ்சமா பாதகங்களைப் பற்றியும், பதி, பசு பாச விளக்கங்களைப் பற்றியும், மற்றும் ஆலயதரிசனம், விரதங் காத்தல் ஆகிய சைவசமய தத்துவங்களைப் பற்றியும் அரிய பிரசங்கங்கள் செய்தார். இதனால் உத்தியோகம் பதவி காரணமாக மதம் மாறியவர்கள் சைவசமயத்தை மீண்டும் தழுவினர். பாவச் செயல்களைச் செய்வதில் நின்று நீங்கினர். அநேகர் சமயதீட்சை பெற்றனர். விபூதி உருத்திராக்கம் தரித்தார்கள். ஆலய தரிசனம் தவறாது செய்து வந்தனர். விரத அநுட்டானங்களைத் தவறாது செய்தனர். தேவார திருவாசகங்களை ஓதினர். புராணங்களைக் கேட்டனர். அத்துமட்டுமன்றி ஆலய பூசகர்கள் அறிவுள்ளவர்களாயும், ஒழுக்கநெறி உள்ளவர்களாயும் இருக்க வேண்டியதன் அவசியத்தையும் வற்புறுத்தி வந்தார். இதனால் நாட்டில் மீண்டும் சைவ ஒளி வீசத்தொடங்கியது.

ஆசிரிய பதவியை உதறித்தள்ளி வண்ணையில் சைவப்பிரகாச வித்தியாசாலையைத் தாபித்து கருவி நூல்களையும் சமய நூல்களையும் முறையாகக் கற்பித்து வந்தார். இவரிடங் கற்ற பலர் ஊர்கள் தோறும் சமயப் பிரசாரகர்களாகப் பணியாற்றினர். ஊர்கள் தோறும் சைவப் பாடசாலைகள் எழுந்தன.

அச்சியந்திரசாலை நிறுவி சமய நூல்களை வெளியிட்டார். யாழ்ப்பாணச் சமய நிலையினைத் துண்டுப்பிரசுரங்கள் மூலம் வெளியிட்டார். கிறிஸ்தவர் செய்த சைவதூசணங்களுக்கு விடையாக சுப்பிரபோதம், மித்தியாவாத நிரசனம், சைவதூஷண பரிகாரம் என்னும் நூல்களை வெளியிட்டு உதவினர். நல்லூர் சைவப்பிரகாச மடாலயம் தாபித்து தமிழ்நாட்டிலிருந்து ஓதுவார்களை வரவழைத்து அருட்பாடல்களைப் பண்ணோடு பாடச் செய்தார். நல்லூர் திருவிழாக் காலத்தில் இவ்வோதுவார்களைக் கொண்டு திருமுறைகளை ஓதுவித்தார். ஆலய விழாக்களில் வாணவேடிக்கை, தாசிகள் நடனம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வின் கேளிக்கைகளை நீக்கச் செய்தார். பலியிடும் வழக்கத்தை ஒழிக்கச் செய்தார். ஆலயங்களை ஆகம முறைப்படி அமைக்கவும் பூசை முதலியன தவறாது நடக்கவும் செய்வித்தார்.

திருக்கேதீச்சரம், கீரிமலைச் சிவன் கோயில் ஆகிய பழைமை வாய்ந்த ஆலயங்களை புனருத்தாரணம் செய்ய வேண்டுமென 1872ல் வற்புறுத்தி வந்தார். இவையிரண்டும் இன்று முற்றுப் பெற்றன. நல்லூர் கந்தசாமி கோயிலை ஆகம முறைப்படி கட்டவேண்டுமெனக் குரல் கொடுத்தார். அக்கால அதிகாரியின் ஒத்துழைப்புடன் இந்தியாவிலிருந்து கருங்கற்கள் பெற்றுக் கொடுத்தார். அது முற்றுப் பெறவில்லை.

சமூகப்பணி

நாவலர் காலத்தில் யாழ்ப்பாணத்தில் கடமையாற்றிய அரசாங்க அதிகாரிகள் செய்த அநியாயங்களை எடுத்து அம்பலமாக்கி நீதி கிடைக்கச் செய்தார். கரையூரில் பேதிநோய் உண்டானபோது, அதிகாரிகள் செய்த தவறுகளை அரசினர்க்கு எடுத்துக்காட்டி வாதாடினார். நாட்டில் பஞ்சம் உண்டானபோது தம்மிடத்தில் உள்ள நெல்லைக் கொண்டு கஞ்சித் தொட்டித் தர்மம் செய்தார்.

பல்லாண்டு காலமாக கிறீஸ்தவப் பிரதிநிதி அரசாங்க சபைக்குச் செல்லும் பாரம்பரியத்தை நீக்கி சேர். பொன். இராமநாதன் அவர்களை போட்டியில் நிற்கச் செய்து, ஊர்கள் தோறும் கூட்டம் நடத்தி வெற்றியீட்டச் செய்தார்.

நாவலரின் பெருமைகளைப் பற்றி சேர். முத்துக்குமாரசுவாமி அவர்கள் 19–10–1876 லும் சேர். பொன். இராமநாதன் அவர்கள் 11–2–1884 லும் சட்டசபையில் புகழ்ந்து பேசியுள்ளதை நாம் அறியலாம்.

தமிழ் மக்கள் நலன்கருதி யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் நிறுவப்பட்டு, தமிழ்க் கலைவளர்ச்சிக்கு ஆக்கமளிக்கு முகமாக சமய சாஸ்திரம், தர்க்கம், வைத்தியம், சோதிடம் பூமிசாஸ்திரம், சரித்திரம், நீதி நூற்கல்வி, வேளாண்மை நூல், வாணிக நூல், அரச நீதி, ஓவியம் சிற்பம், தமிழ் வரலாறு, வியாசம், விஞ்ஞானம், கணிதம் முதலான பாடங்களை நான்கு ஆண்டுகள்ல் வகுத்துக் கற்பிக்க வேண்டுமெனவும், கற்று முடிந்தபின் அறிவுக்கேற்ற பட்டங்கள் வழங்கவேண்டுமெனவும், எண்ணியிருந்தார்.

நாவலர் கட்டுரைகள் 'இலங்காபிமானி' 'இலங்கைநேசன்' ஆகிய பத்திரிகைகளில் வந்துள்ளன. 'உதயபானு' என்னும் சைவப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரிகை நடத்த முயன்றார். இவருடைய மாணாக்கர்களால் சிறிது காலம் நடாத்தப்பட்டு வந்தது. பின் இந்துசாதனமாகப் பரிணமித்தது.

கருங்குழி இராமலிங்கபிள்ளை பாடிய பாடல்கள் அருட்பாடல்களல்லவென்றும், சமயாசாரியர்களின் அருட்பாடல்களின் தரத்துக்கு வைக்கக் கருதுதல் தகாதென்றும், தர்க்கரீதியான நியாயங்காட்டி 'போலியருட்பா மறுப்பு' என்னும் நூல் ஒன்றையும் வெளியிட்டார்.

சிதம்பரத்தில் சேக்கிழார் பெருமானுக்குக் கோவில் கட்டிய பெருமை நாவலர் ஒருவருக்கே உரியதாகும்.

நாவலர் விக்கியாபனம்

யாதாயினும் ஒரு சமயத்தை மெய்யென்று நம்புகிறவன், அந்தச் சமயத்தின்வழி ஒழுகும் ஒழுக்கம் இல்லாத பொழுது, பயன் பெறுன். அந்தச் சமயத்துக்கு உரிய கடவுள் இவரென்பதும், அவருடைய இலக்கணங்களும், அவரால் விதிக்கப்பட்ட புண்ணியங்களும், விலக்கப்பட்ட பாவங்களும், அந்தப் புண்ணிய பாவங்களின் பலன்களாகிய சுகதுக்கங்களும், அவரை வழிபடும் முறைமையும், அந்த வழிபாட்டினலே பெறப்படும் பிரயோசனமும், ஆகிய இவைகளை அறியும் அறிவு உதியாத பொழுது, அந்த ஒழுக்கம் உண்டாகாது. சற்குரு முகமாக விதிப்படிபெறப்படுஞ் சமய நூற் கல்வி கேள்விகள் இல்லாத பொழுது அந்த அறிவு உதியாது. ஆதலால், கல்வியும் அறிவும் ஒழுக்கமுமாகிய இந்த மூன்றும் வேண்டும். இது எல்லாச் சமயததாருக்கும் ஒத்த துணிவு.

நம்முடைய சைவசமயிகள் சைவ நூல்களைக் கல்லாமையினுலும், எங்கேயாயினும் சிலர் கற்றாலும், அவர்கள் பிறருக்குக் கற்பித்தலும் யாவரும் எளிதில் அறிந்து உய்யும்படி சமயாசாரங்களைப் போதித்தலும் இல்லாமையாலும், நமது சற்சமயமாகிய சைவசமயம் வரவரக் குன்றுகின்றது.

ஆதலால் நமது தமிழ் நாடெங்கும் பாடசாலைகளைத் தாபித்து, பிள்ளைகளுக்குச் சமய நூல்களையும், இம்மை மறுமைப் பயன்களுக்குத் துணைக்காரணமாய் உள்ள பொருளை ஈட்டுதற்கு வேண்டும் லௌகிக நூல்களைக் கற்பித்தலும், திருக்கோயில்கள் தோறும் சனங்களுக்குச் சமய நெறியைப் போதித்தலும், மிக மேலாகிய புண்ணியங்களாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாத் தருமங்களையும் அறிந்து விதிப்படி சிரத்தையுடனே செய்து பயன் பெறுதற்குச் சமய நூலுணர்ச்சியே ஏதுவாதலால், அப்படிப்பட்ட சமய நூலுணர்ச்சியை வளர்த்தலாகிய இந்தத் தருமமே எல்லாத் தருமங்களிலும் மிக மேலானது என்பதும், எல்லாத் தருமங்களுக்கும் மூலம் என்பதும், சொல்ல வேண்டுமா?

வேதாகமங்களை ஓதுதலும், அறிவு நூல்களைப் பிறருக்கு விரித்துணர்த்துதலும், தருமங்களை எடுத்துப் போதித்தலும், பள்ளிக் கூடங் கட்டுதலும் பெரும் புண்ணியங்கள் என்பது ஞானாமிர்தம் என்னும் ஞான நூலில் வகுத்துச் சொல்லப்பட்டது.

இன்னும் கன்மயாகம், தபோயாகம், செபயாகம், தியான யாகம், ஞான யாகம் என ஐவகை யாகங்கள் உண்டு. அவைகளுள் கன்மயாகமாவது:— சிவனை விதிப்படி பூசித்து அக்கினிகாரியம் முதலியன செய்தல்; தபோயாகமாவது:— சரீரம் வாடச் சந்திராயணம் முதலிய விரதங்களை அனுட்டித்தல்; செபயாகமாவது:— மந்திரங்களை விதிப்படி உச்சரித்தல்; தியான யாகமாவது:— மனசை வேறொரு விடயத்திலும் பொருந்தா வண்ணம் நிறுத்திச் சதா சிவாதி விக்கிரகங்களை அன்பினாலே தியானித்து அந்தத் தியானத்திலே இடைவிடாது கலந்து நிற்றல்; ஞானயாகமாவது:— சிவனை அறிவிக்கும் திவ்வியாகமங்களைத் தாம் ஓதுதலும் பிறரை ஓதுவித்தலும், அவைகளிலே சொல்லப்படும் பொருளைத் தாம் ஓதுதலும் பிறரை ஓதுவித்தலும், அவைகளில் சொல்லப்படும் பொருளைத் தாம் தெளிதலும், பிறரைத் தெளிவித்தலும். அந்தப் பொருளை நாடோறும் மறவாமல் மனசிலே தெளிதலுமாம். இந்த ஞானயாகமே பக்குவான்மாக்களுக்கு வைப்புமாய்ப் பிறவிநோய்க்கு மருந்துமாய், உயர்வொப்பின்றி நிற்குந் தலைமையுடையது.

எல்லாத் தருமங்களுக்கும் மூலமாய், அவ்வெல்லாத் தருமங்களையும் தன்னுள் அடக்கி அவ்வெல்லாத் தருமங்களுக்கும் மேற்பட்டு விளங்கும் இச்சிவதருமம் நமது தமிழ் நாடெங்கும் வளர்ந்தோங்கல் வேண்டும் என்னும் பேராசையானது என் சிறுவயசில் என்னுள்ளத்திலே தோன்றி நாடோறும் பெருகிப் பெருகி, இப்பொழுது அவ்வுள்ளத்தை விழுங்கித் தான் மேற்கொண்டு நிற்றலால், நான் என் மென்மையை நினைந்து நினைந்து தடைப்படாமல், உயிர்க்குயிராகிய சிவனது வன்மையை, 'ஆட்டுவித்தாலாரொருவர் ஆடாதாரே' என்னும் அருமைத் திருவாக்கை நினைந்து நினைந்து, அவருடைய திருவருளை முன்னிட்டு நின்று, முன்னே சிவஸ்தலங்கள் எல்லாவற்றுள்ளும் மிக மேலாகி எல்லார்க்கும் பொதுவாயுள்ள சிதம்பரத்திலே சில முயற்சிகள் செய்யக் கருதுகிறேன் அவை வருமாறு:—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிதம்பரத்திலே திருவீதியில் விசாலமாகிய ஒரு நிலம் வாங்க வேண்டும். இந்த நிலத்திலே ஒரு பாடசாலையும், பூசைக்கட்டு, சாத்திரக்கட்டு, சமையற் கட்டு என மூன்று கட்டுள்ள ஒரு திருமடமும் கட்டுவிக்கவும், சிவபூசைக்கு உபயோகமாகும் பொருட்டு ஒரு சிறு நந்தவனம் வைக்கவும் வேண்டும்.

இந்தப் பாடசாலையிலே கல்வி அறிவு ஒழுக்கங்களிற் சிறந்த உபாத்தியாயர்களை நியமித்து, பிள்ளைகளுக்குப் பால பாடங்கள், நிகண்டு, திருவள்ளுவர் முதலிய நீதி நூல்கள், சிவபுராணங்கள், இலக்கணம், கணிதம், தருக்கம், வெளிப்படையாகச் செய்யப்பட்ட சைவசமய நூல்கள், பூகோள நூல், ககோள நூல், வைத்தியம், சோதிடம், வேளாண்மை நூல், வாணிக நூல், அரச நீதி, சிற்பநூல் முதலானவைகளைப் படிப்பிக்க வேண்டும்.

சாமர்த்தியராகிய ஓதுவார்களை நியோகித்து சில பிள்ளைகளுக்குத் தேவாரமும் திருவாசகமுமாகிய தமிழ் வேதத்தைப் பண்ணுடன் ஓதவும், சுத்தாங்கமாக ஓதவும் பழக்குவிக்க வேண்டும்.

திருக்கோயிலிலேனும் திருமடத்திலேனும், நாடோறும் இரவிலே, கேட்போர் யாவர்க்கும் பயன்படும் பொருட்டு, இந்த உபாத்தியாயர்களைக் கொண்டு, பெரியபுராணம், திருவிளையாடற்புராணம், திருவாதவூரடிகள் புராணம், கோயிற்புராணம், கந்தபுராணம், உபதேசகாண்டம், வாயுசங்கிதை முதலிய சிவபுராணங்களையும், சிவதருமோத்தரத்தையும் படித்துப் பொருள் சொல்லுவிக்க வேண்டும்.

சாயங்காலத்திலே, சிவதரிசனம் பண்ணுகிறவர்களுக்குச் சிவபத்தி விளையும் வண்ணம், இந்த ஓதுவார்களைக் கொண்டு சிவசந்நிதானத்திலே தேவாரத்தைப் பாடுவிக்கவும், சாரங்கியில் வாசிப்பிக்கவும் வேண்டும்.

தமிழ் நாட்டார் உய்யும் வண்ணம், தமிழ் வேதஞ் செய்தருளிய திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் முதலிய சமயகுரவர் நால்வருக்கும் பெரிய புராணஞ் செய்தருளிய சேக்கிழார் நாயனாருக்கும் தமிழ்ச் சித்தாந்தஞ் செய்தருளிய மெய்கண்டதேவர் முதலிய சந்தான குரவர் நால்வருக்கும், இந்தத் திருமடத்திலே வருடந்தோறும், அவரவர் பரிபூரணத் தசையடைந்தருளிய திரு நட்சத்திரத்திலே குருபூசை செய்து, அவரவர் மகிமையை யாவர்க்கும் விரித்துரைக்க வேண்டும்.

இந்தப் பாடசாலையிலே கற்றவர்களுள்ளும் பிறருள்ளும், கல்வியறிவொழுக்கங்களிற் பரிபக்குவர்களுக்குச் சைவாசாரிய[illegible]ர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு நிருவாண தீட்சை செய்வித்து, இந்தத் திருமடத்திலே ஞான நூல்களாகிய சைவசித்தாந்த சாத்திரங்களைப் படிப்பிக்க வேண்டும்.

இங்கே படிக்கும் மாணாக்கர்கள் கற்ற கல்வியை, வருடந் தோறும் மடாதிபதிகளும், வித்துவான்களும், பிரபுக்களும், கூடிய சபையிலே, பரீட்சை பண்ணவேண்டும்.

வருடந்தோறும் இந்தத் தருமத்தின் வரவுசெலவுக் கணக்கும், இது நடாத்தப்படுங் கிரமமும், பிறவும், விவரமாய் அடங்கிய அறிவிப்பை இந்தச் சபையார்முன் படித்து, பின்பு அச்சிற் பதிப்பித்து, எங்கும் பிரகடனஞ் செய்யவேண்டும்.

இங்கே கற்றுத்தேர்ந்த மாணாக்கர்களை இந்தச் சபையாருக்கு முன்னே பரீட்சை செய்து, கற்றுவல்லவர்களென நன்கு மதிக்கப்பட்டவர்களுக்கு, அவரவர் தகுதிக்கேற்ற பெயரும் சின்னமுங் கொடுக்க வேண்டும்.

மேற் கூறியபடி ஒரு வித்தியாசாலை நடத்தப்படுமாயின் அதிலே தேர்ச்சியடைந்தவர்களைத் திருக்கோயில் அதிகாரிகளெல்லாரும் தங்களாலே நடாத்தப்படும் திருக்கோயில்களிலே சைவப்பிரசாரகர்களாக நியோகித்து அவர்களைக் கொண்டு சனங்களுக்குச் சைவசமயத்தைப் போதிப்பிக்கலாமே. தேவாலயந்தோறும் தேசபாஷைகளிலே சைவசமயத்தைப் போதித்தல் வேண்டுமென்று காமிகாகமத்திலே சிவபெருமானால் விதிக்கப்பட்டிருக்கிறது.

இதுவே எல்லாத் தருமங்களுக்கும் மூலமாகிய உத்தமோத்தம தருமம் என்பது சாத்திரம், புத்தி, அனுபவம் என்னும் மூன்றுக்கும் ஒத்த துணிவு.

இப்பேராசையினால் இருபது வருடகாலம் நான் செய்த முயற்சிகள் பல; அவைகளுள்ளே சித்திபெற்றவை மிகச் சில; சைவசமயிகள் யாவரும் சைவசமயத்திலே சிரத்தையுடையவர்களாகித் தங்கள் தங்களாலியன்ற உதவி செய்தார்களாயின், நான் எடுத்த முயற்சிகளெல்லாம் இதற்கு முன்னரே நிறைவேறிவிடும்; நிறைவேறின், என்னைப்போலவேபிறரும் அங்கங்கே நன்முயற்சிகளைச் செய்வார்கள்; செய்யிற் கல்வியும் சமயமும் தமிழ்நாடெங்கும் தழைத்தோங்கும்.

## நாவலர் கடைசிப்பிரசங்கம்

இவர் கடைசியாகப் பிரசங்கம் செய்தது யாழ்ப்பாணம் சைவப்பிரகாச வித்தியாசாலையில் ஆடிமாசத்திற் (1879) சுந்தர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூர்த்தி நாயனர் குருபூசைத் தினமாகிய சுவாதி நட்சத்திரத்திலன் றேயாம். பிரசங்கம் தொடங்கினதும் முடிந்ததும் சுவாதி நட்சத்திரங்களிலேயாம். அன்று எடுத்துக் கொள்ளப்பட்ட பிடிகை ''பொன்னு மெய்ப் பொருளுந் தருவானை'' என்னுஞ் சுந்தரமூர்த்தி நாயனர் தேவாரமாம். பிரசங்க முடிவிலே சனங்களை விளித்து ''நான் உங்களிடத்துக் கைமாறு பெறுதலைச் சிறிதும் எண்ணுது 32 வருடகாலம் உங்களுக்குச் சைவசமயத் துண்மைகளைப் போதித்து வந்தேன் எனக்குப் பின் சைவசமயங் குன்றிப்போமென்று பாதிரிமார் சொல்லுகிறுர்கள். ஆதலால், நான் உயிரோடிருக்கும் போதே உங்களுக்காக ஒரு சைவப்பிரசாரகரைத் தேடிக் கொள்ளுங்கள் இன்னும் என்னைப் போலப் படித்தவர்களும் சன்மார்க்கர்களுமாய் அநேகர் வருவார்கள். ஆனல் உங்களுடைய வைவுகளைக் கேட்டுக் கேட்டுக் கைமாறு கருதாது சமயத்தைப் போதிக்க என்னைப்போல ஒருவரும் வரார். இதுவே என்னுடைய கடைசிப் பிரசங்கம். இனிமேல் நான் உங்களுக்குப் பிரசங்கம் பண்ண மாட்டேன்.''

## ஈழத்துச் சிவத்தலங்கள்

திருக்கேதீச்சரம்

மன்னர் மாவட்டத்து மாதோட்டத்தில் பாலாவியின் கரையில் அமைந்தது. இராகு கேதுக்களால் வழிபடப்பெற்றது சம்பந்தர், சுந்தரர் இருவராலும் பாடப்பெற்ற பெருமையும் உடையது சில நூற்றுண்டுகளுக்கு முன் மண்மூடிக்கொண்டது. இதன் பெருமையை 1872 ல் நாவலர் பெருமான் வெளிப்படுத்த, திரு மு. பசுபதி செட்டியாரும் நாட்டுக்கோட்டைச் செட்டியார்களும் செய்த பெருமுயற்சியின் பயனக 1903 ல் கோயில் அமைக்கப்பட்டது. 1955 தொடக்கம் சேர். கந்தையா வைத்தியநாதன் தலைமையில் உருவான திருப்பணிச்சபையே இன்றைய பெருங்கோயிலின் பொலிவிற்குக் காரணமாகும்.

கௌரியம்மை சமேத திருக்கேதீச்சர நாதரை சம்பந்தர், சுந்தரர் பாடியதோடு நமது நாட்டுச் சைவப் பெருமக்களும் பாடிப் பரவியுள்ளனர்.

பண்டிதர்ச. இராமச்சந்திரன் திருக்கேதீச்சர புராணமும் பேராசிரியர் சி. இ. சதாசிவம்பிள்ளை திருக்கேதீச்சர நாதன் கிள்ளை விடுதூதும், கௌரியம்மை பிள்ளைத்தமிழும் பாடியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### திருக்கோணேஸ்வரம்

தட்சண கயிலாயம் எனவும் வழங்கும் இத்தலம், திருக்கோணமலைக் கடற்கரையில் கற்பாறை ஒன்றில் அமைந்துள்ளது. இவ்விடத்தைச் சுவாமிமலை என்பர். பிரடறிக் கோட்டை எல்லையுடன் உள்ளது.

மாதுமையாள் சமேத கோணேசுவரரை சம்பந்தப்பெருமான் தேவாரம் பாடிப்பரவியுள்ளார். இராவணனின் தாயார், கயபாகு மன்னன், இராசேந்திரன், சடையவர்மன் வீரபாண்டியன் போன்றோரால் வழிபடப்பட்ட தொன்மை வாய்ந்த இத்தலம் சோழர்களின் தொண்டின் அறிகுறிகளாகிய விக்கிரகங்கள் சிற்பவேலைப் பாடுடைய தூண்கள் இன்றும் காணக்கூடியதாயுள்ளன.

16 ஆம் நூற்றுண்டின் தொடக்கத்தில் போர்த்துக்கேயரின் ஆட்சியில் இடியுண்ட திருக்கோயில் 1956 இல் ஆரம்பிக்கப்பட்ட திருப்பணிச் சபையினரால் புதிதாக நிர்மாணிக்கப்பட்டது. இத்திருப்பணியின் போது கண்டு எடுக்கப்பட்ட சோமாஸ்கந்தர், பார்வதி, சந்திரசேகரர் விக்கிரகங்கள் பிரதிட்டை செய்யப்பட்டுள்ளன. பாபநாசம் என்னும் தீர்த்த விசேடமும், சுவேதகூவிளம் என்னும் தலவிருட்ச விசேடமும் கொண்ட இத்தலம் இயற்கை எழில் மிகுந்ததாய் அருள் பாலித்து நிற்கும் சிறப்பைச் சம்பந்தப் பெருமான் பாடல்கள் காட்டுகின்றன.

### முன்னேச்சரம்

முனி வழிபட்ட காரணத்தால் முனீச்சரம் என்றும் வழங்கும் இப்பழைய சிவத்தலம் சிலாபத்திலிருந்து ஒரு மைல்தூரத்தில் அமைந்துள்ளது. முன்னையே தோன்றிய தலம் என்னும் பொருளைத் தரும் முன்னேச்சரம் ஈழநாட்டினர் எல்லோரும் போற்றும் பெருமை வாய்ந்தது.

வடிவாம்பிகா சமேத முன்னைநாதரை இராமபிரானும் வியாச முனிவரும் வணங்கியதாகத் தட்சண கைலாய மான்மியம் கூறுகிறது. குளக்கோட்டன், ஆறும் ஒன்பதாம் பராக்கிரமபாகுகள், கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கன் போன்றோர், இத்தலத்தைப் பரவியதோடு திருத்தொண்டுகளும் செய்தமையை கல்வெட்டுக்களும் வரலாற்றுக் குறிப்புகளும் தெரிவிக்கின்றன. கி. பி. 16 ஆம் நூற்றுண்டில் போர்த்துக்கேயரால் சிதைவுற்ற ஆலயத்தை கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கன் புதுப்பித்தான். 19ஆம் நூற்றுண்டில் தீராத நோய்வாய்ப்பட்ட காஞ்சிபுரம் குமாரசாமிக் குருக்கள் இங்கு வந்து நோய் நீங்கப் பெற்றுர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளரசு மரத்தைத் தலவிருட்சமாகக் கொண்ட இப்பழம் பெரும் தலத்திலே நல்லவிநாயகர், சண்முகசுந்தரர் முதலான மூர்த்திகளுடன் அறுபத்துமூவர் திருவுருவங்களும் பிரதிட்டை செய்யப் பட்டுள்ளமை ஒரு தனிச்சிறப்பாகும்.

இத்தல வரலாற்றை, ஸ்ரீ முன்னேஸ்வர மான்மியம், ஸ்ரீ முன்னைநாதசுவாமி வடிவாம்பிகை திருவூஞ்சல், முனிசூரா நவமணி மாலை போன்ற நூல்கள் பேசுகின்றன. இதன் தீர்த்தம் மாயவனாறு.

### பொலநறுவைச் சிவன்கோயில்

சோழப்பேரரசனாகிய இராசராசன் ஈழத்தை வென்று, தலைநகராகிய பொலநறுவையில் வானவன் மாதேவி ஈசுரமுடையான் திருக்கோயில் என்ற பெயரோடு நிறுவிய சிவாலயம் இதுவே. சோழர்காலச் சிற்பத்திறன் காட்டும் கலைக்கோயிலாக இது அன்று விளங்கியிருக்க வேண்டும். என்பதற்கு இன்று காணப்படும் இடிபாடுகள் சான்றாகும்.

### நகுலேச்சரம்

யாழ்ப்பாணக் குடாநாட்டின் வடகரையோரத்தில் இன்று கீரிமலை எனவழங்கும் இடத்தில் அமைந்த தொன்மைவாய்ந்த சிவ தலம் இதுவாகும். இங்கு கோயில் கொண்டிருக்கும் நகுலாம்பிகை சமேத நகுலேச்சுரரை கீரி முகமுடைய நகுல முனிவர் வணங்கித்தன் கீரிமுகம் நீங்கப் பெற்றதால் இப்பெயர் பெற்றது எனவும் தீர்த்தம் நகுலேச தீர்த்தம் எனவும் கொள்ளப்படுகின்றது.

இத்தலத்திற்குப் பலபெயர்கள் வழங்கப்பட்டதைப் புராணங்கள் வாயிலாக அறியலாம். இராமாயண காலத்துக்கும் முற்பட்டது என்பர். வீணாகான புராணம் என்ற பெயரும் புனித தீர்த்தத்தில் நீராடிப் பலர் பெரும் பேறுகளும், நோய் நீக்கமும். பெற்றமையால் புண்ணியபுரம் என்ற பெயரும் பெற்றது. சோழ அரசகுலப் பெண் மணியாகிய மாருதப்புரவல்லி தன் குதிரைமுகமும், குன்மநோயும் நீங்கப்பெற்ற தலம் இதுவென்பர்.

ஏனைய சிவாலயங்களைப் போன்று இதுவும் பறங்கியரால் சிதைவுற்றுப் பின் நாவலர் பெருமானின் பெருமுயற்சியால் சைவப் பேரன்பர்களினால் கட்டப்பட்டது. அடியார்கள் தங்கவசதியான பல மடங்களையும் இங்கு அன்பர்கள் நிறுவியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வண்ணை வைத்தியேசுவரன் கோயில்**

யாழ் நகரின் வண்ணையம்பதி (வண்ணார்பண்ணை) யில் 18 ஆம் நூற்றுண்டின் பிற்பகுதியில் பெருவணிகர் வைத்தியலிங்கச் செட்டியாரால் தாபிக்கப்பட்டமையால் வைத்தியேசுரன் கோயில் எனப் பெயர் பெற்றது. செட்டியார் சிவன்கோயில் என்றும் வழங்கப் படுகிறது.

18 ஆம் நூற்றுண்டில் சோழ நாட்டிலுள்ள திருவாரூரிலிருந்து வந்த கோபாலச் செட்டியாரின் மகனுன வைத்திலிங்கச் செட்டியார், ஒல்லாந்த தேசாதிபதியின் பெருமதிப்புக்குரியவராக வாழ்ந்தார். முத்துக் குத்தகை மூலம் பெரும் பொருள் திரட்டிய இவரை கூழங்கைத் தம்பிரான் என்ற சான்ருேர் தெய்வப்பணியில் ஈடுபடுத்தினர். இதன் பேறே இத்திருத்தலமாகும்.

நகர் நடுவே கோயில் கொண்டருளியிருக்கும் தையல்நாயகியாம் ஸ்ரீ வாலாம்பிகாதேவி சமேத வைத்தியேசுவரப் பெருமான் அருள் வளத்தால் நகரின் சிறப்பு மிகவுயர்ந்தது. இத்தலத்தின் வரலாறு கூறும் பிரபந்தங்கள் பல. ஆங்கு நல்லைநகர் நாவலர் பெருமானின் பிரசங்க மாரி பெய்து சைவப்பயிர் வளர்ந்ததும் குறிப் பிடத்தக்கது

**நல்லூர் கந்தசுவாமி கோயில்**

ஈழத்தின் வடபகுதியில் ஆட்சி செய்த பண்டைய அரசர்களின் தலைநகராக விளங்கிய யாழ்ப்பாணத்து நல்லூரில், 12 ஆம் நூற்றுண்டில் புவனேகபாகுசிங்கையாரியச் சக்கரவர்த்தியால் அமைக்கப்பட்ட கந்தசுவாமி கோயில் 1621 இல் போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்டது. பிற்காலத்தில் அடியார்களால் நிறுவப்பட்ட கோயிலே இன்று காணப்படுவதாகும். அடியார் கூட்டத்தை ஈர்த்து அருள் வழங்கும் சிறப்புடையதாக விளங்கும் இத்தலத்தில் முருகனின் ஞானசக்தியாகிய வேலே, கருவறையில் பிரதிட்டை செய்யப்பட்டுள்ளது. விநாயகர், விஷ்ணு, பழனியாண்டவர் முதலான பரிவார மூர்த்திகளோடு அழகிய நந்தவனமும், சுற்றுமதில்களும் கோபுரங்களும் உடையது.

காலந் தவருமல் நித்திய நைமித்தியங்கள், சிறப்பாக நடைபெறுவது ஒரு தனிச்சிறப்பாகும். வருடாந்தத் திருவிழா ஆவணி மாசத்தில் ஆரம்பமாகி இருபத்தைந்து நாட்கள் நடக்கும். கைலாச வாகனம், தேர், தீர்த்தம், பூங்காவனம் என்பன மிகச்சிறப்புடன் நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லை முருகனின் அருள் வளம் பாடும் நூல்கள் மிகப்பல. அவற்றுள்ளும் சிறப்பாக அ. சிவசம்புப்புலவர், இருபாலை சேனாதி ராயர் சுன்னாகம் குமாரசுவாமிக் கவிராயர், திருநெல்வேலி சி. கதிரவேற்பிள்ளை, நல்லைப்பரமானந்தப் புலவர், நவாலியூர் சோமசுந்தரப் புலவர், புலோலி வே. தா: தியாகராசபிள்ளை, கொக்குவில் சபாரத்தின முதலியார், சரவணை ஆ. தில்லைநாதப் புலவர், கோப்பாய் சபாபதி நாவலர், காரைநகர் சுப்பையர், நல்லூர் கந்தப்பிள்ளை (நாவலர் தந்தை), நயினை நாகமணிப் புலவர், நல்லூர் சரவணமுத்துப் புலவர், பண்டிதர் வ. மு. இரத்தினேஸ்வர ஐயர், வித்துவான் க. வேந்தனார் ஆகியோரைக் குறிப்பிடலாம்.

நல்லூர் வரலாற்றை யெல்லாம் ஒருங்கு சேர்த்து எழுதி உதவியவர் முதலியார் குலசபாநாதன் அவர்களாவர்.

மண்டூர் கந்தசாமி கோயில்

மட்டக்களப்பு மாவட்டத்தில் மிகவும் தொன்மையான முருகன் திருப்பதி இதுவாகும். தில்லைமரம் தலவிருட்சமாகையால் தில்லை மண்டூர் என்றும் வழங்கடபடும். இயற்கைவளம் செறிந்த குறிஞ்சியும் முல்லையும் முயங்கி மயங்கும் சூழலில் குமரன் கோயில் கொண்டிருக்கிறான்.

இத்தலத்தின் பழைமையை பூர்வீக குடிகளாகிய வேடுவர் தொடர்பு எடுத்தியம்புகிறது. வணக்கத்துக்குரிய காட்மன் பாதிரியாரின் ''கிழக்கிலங்கை இந்துக்கோயில்கள்' என்ற நூலிலும் இக்கோயில் குறிக்கப்படுகிறது.

இவ்வாலயம் கதிர்காமம் போல ஆகமக் கோட்பாடுகளுக்கு அமையாத போதிலும் பக்தி உணர்வின் பெரும்பானதாக நிலவுகிறது எனலாம். இங்கு நடக்கும் வழிபாட்டு முறைகள் — வாய்கட்டிப் பூசை செய்தல், திரை நீக்கப்படாமை — கதிர்காமத்தில் நடப்பவற்றை ஒத்திருப்பதால் இதைச் ''சின்னக்கதிர்காமம்'' எனவும் வழங்குவர். இங்கு பூசைத் தொண்டு செய்வோரை கற்பகமார் என அழைப்பர்.

மேளம் அடித்தல், கொடி, குடை, ஆலவட்டம் தாங்குதல் முதலாம் புறத் தொண்டு செய்வோரை கோயிலாளர் என்பர். கோயில் கருமங்களை நடத்த 'ஐவர் குழு' ஒன்று உண்டு. முதல்வர் அல்லது முகாமைக்காரரை வண்ணக்கர் என்பர். இவர்கள் தொண்டு தொட்டே குடியுரிமையாக இத்தொண்டுகளுக்கு உரிய குடிகளால் தெரிந்தெடுக்கப்படுகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டியரசர்களால் இக்கோயில் போற்றப்பட்டிருக்கிறது. பழுகாமம் என்ற ஊரிலே கண்டியரசர்கள், தங்கள் மட்டக்களப்பு விஷயத்தின்போதெல்லாம் தங்கியமையால் சிங்காரக்கண்டி என்று பெயர் பெற்றதும், இவ்வூரில் உள்ள பெரிய கவுந்தன் குடிமக்களுக்கு கோயில் நிர்வாகத்தில்பங்கிருப்பதும் இதனை வலியுறுத்துகின்றன.

வருடாந்தம் நடக்கும் திருவிழாக்கள், ஆடம்பரம் வீண்செலவு வேடிக்கைகள் இன்றிப் பக்திமயமாக நிகழ்கின்றன. வேடுவகுலத் தலைவன் வில்லேந்தி சுவாமிக்கு முன், புறமுதுகு காட்டாது, மெய் காவல் செய்து செல்லும் காட்சி பரவசமூட்டுவதாகும். ஆரத்திப் பெண்கள் பரவச நிலையில் மூர்ச்சை அடைவதும். கற்பகனார் கையால் நீறும் நீரும் பெற்று மயக்கம் தெளிதலும் தீர்த்தத் திருவிழா விலன்று கற்பகனார், ஆவேசமுறுவதும், அறிவிழப்பதும் பக்தர்கள் தூக்கிச் செல்வதும், சிந்தையை இறையன்பில் மூழ்கவைக்கும் காட்சிகளாகும்.

### கதிர்காமம்

இலங்கையிலே உள்ள முருகன் பதிகளுள் பழைமையும், பெருமையும் திருப்புகழ் பாடப்பெற்றதும் பௌத்தர், இஸ்லாமியர் போன்றவர்களாலும் போற்றி வணங்கப்படுவதும். கதிர்காமமே.

மாணிக்க கங்கையின் பக்கத்தே நினைவளமும் காடும் சூழ்ந்த நிலையில் அமைந்து அன்பர்களை தன்பால் ஈர்க்கும் ஞானத்தலமாக விளங்குகிறது.

விஜயன் சுந்தப்பெருமானுக்குக் கோயில் அமைத்தான் என்று யாழ்ப்பாண வைபவ மாலையும், துட்டகைமுனு கோயில் அமைத்தான் என்று 'கந்த உபாநன' என்ற சிங்கள நூலும், ஐந்தாம் மகிந்தன் வழிபாடியற்றிய வரலாற்றை மகாவம்சமும் கூறுகின்றன.

இரண்டாம் இராசசிங்கனும் இங்கு திருப்பணி செய்ததாக வரலாற்றாசிரியர் கருதுகின்றனர். முத்துலிங்கசுவாமிகள் (கி. பி. 17) பாலசுந்தரி அம்மையார் (கி. பி. 19) பால்குடிபாபா முதலான மெய்யடியார்களும் இப்பெருமானை வழிபட்டு அருள்பெற்றனர்.

கோயில் மிகச் சிறியது. மூலத்தானம் திரைச் சீலையால் மறைக்கப்பட்டிருக்கும். மூலத்தானத்தில் ஓர் இயந்திரப் பெட்டி உள்ளது. இப்பெட்டியே திருவிழாக்காலத்தில் யானைமீது எழுந்தருளப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுகிறது. சிங்களக் 'கப்புருளை' மார்களே பூசகர்கள். இங்குள்ள பிள்ளையார், தெய்வானையம்மை, கோயில்களில் பிராமணரே பூசை செய்கிறார்கள். ஆடிமாசத்தில் திருவிழா நடக்கும் திருவிழாக்காலங் களில், மாணிக்க கங்கையில் தீர்த்தமாடுவதும். காவடி எடுப்பதும் கர்ப்பூரச்சட்டி ஏந்துவதும் தேனும் தினைமாவும் படைப்பதும் விசேட நிகழ்ச்சிகளாகும். 'கதிரமலை' எனவழங்கும் குன்றேறி அங்குள்ள வேலைத்தரிசிப்பதும் நான்கு மைல் தூரத்தில் உள்ள செல்லக்கதிர் காமத்தில் மாணிக்கப்பிள்ளையாரை வணங்குவதும் அடியாரைப் பரவசப்படுத்துவதாகும்.

## சைவசித்தாந்தம் - தத்துவம்

சிவசம்பந்தமான சைவசமயத்தின்-வாழ்க்கைநெறியின்-முடிந்த முடிபாகிய உண்மைகளை எடுத்துக் கூறுவது சைவசித்தாந்தம்.

பதி, பசு, பாசம், எனும் முப்பொருள் உண்மையையும், இவை களின் அநாதியாம் தன்மையையும், ஒன்றுக் கொன்று உள்ள தொடர்பினையும் பேரறிவும் பெரும் பொருளாம் பதி, சிற்றறிவின தாகிய ஆன்மாவின் மீட்சிக்காக, சடப்பொருள்களாகிய பாசங்களி லிருந்து ஆன்மாவை விடுவிக்க ஐந்தொழில்கள் புரியும் கருணையையும், இதற்காகப் பதி கொள்ளும் அருட் கோலங்களையும், பதியின் எண் குணங்களையும் விளக்குவதே சைவசித்தாந்த தத்துவம் எனலாம். இத்தத்துவத்தின் தனிப்பெருஞ் சிறப்பு நோக்கி மேல்நாட்டு மேதைகளும், இதைத் திராவிட மக்களின் பேரறிவுப் பெரும்பயன் எனப் போற்றினர்.

பதி:— பதியாகிய இறைவன் பசுக்களாகிய உயிர்களின் அறி வுக்கு அப்பாற்பட்டவனாக இருக்கிறான். இதனையே, மாணிக்கவாசகர் ''சித்தமும் செல்லாச் சேட்சியன'' என்றும் ''மாற்றமனங்கழிய நின்ற மறையோன்'' என்றும் போற்றுகின்றார். இந்த நிர்க்குண நிலையை சொருபநிலை என்பர். இது இறையின் சிறப்பியல்பு ஆகும்.

சொருப நிலையிலிருந்து, உயிர்கள் மேல் வைத்த பெருங்கருணை யினால், அவைகளை உய்விக்க மேற்கொள்ளும் ஐந்தொழிலுக்காக அருவம், அருவுருவம், உருவம் என மூவகைத் திருமேனி கொண்டு அருள்புரியும் நிலையை தடத்தநிலை என்பர். இது இறையின் பொது இயல்பு ஆகும். சிவம், சத்தி, நாதம், விந்து என்னும் நான்கும் அருவத்திருமேனிகள். மகேசுரன், உருத்திரன், திருமால், பிரமன், என்னும் நான்கும் உருவத்திருமேனிகள், சதாசிவம் (சிவலிங்க வடிவம்) அருவுருவத்திருமேனி, இவற்றை 'நவந்தருபேதம்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று சைவசித்தாந்தம் விதந்துரைக்கும். உருவத்திருமேனிகளில் பிரமனாய் படைத்தலையும், விட்டுணுவாய் காத்தலையும், உருத்திரனாய் அழித்தலையும், மகேசுரனாய் மறைத்தலையும், சதாசிவனாய் அருளலையும் செய்தருளுவார்.

உயிர்களிடத்துள்ள பேரருளால், மல நீக்கம் செய்யவே இறைவன் ஐந்தொழில் புரிகின்றான். மலம் வலிகெட்டபோது உயிர்கள், தம்மை உணர்ந்து, தம் தலைவனையும் உணரும். தலைவனாகிய சிவத்தை நாடி ஒன்றாக நிற்கும் பேரானந்தப் பெருவாழ்வு தருவதே ஐந்தொழிலின் நோக்கமாகும்.

நிர்மலன் என்றும் ஆதியும் அந்தமும் இல்லான் என்றும் போற்றப்படும் இறைவன் எண்குணத்தான் என்றும் போற்றப்படுகிறான். எண்குணங்களாவன, தன்வயத்தனாதல், தூய உடம்பினனாதல், இயற்கை உணர்வினனாதல், இயல்பாகவே பாசங்களில் நீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றல் உடைமை, வரம்பிலின்பமுடைமை, முற்றுமுணர்தல். இறைவன் நீக்கமற நிறைந்து, ஒன்றிலும் தான் தோயாது' தன்னையடைந்தார்க்கு இனியனாய், சலனமில்லானாய் நிற்பன்.

பசு:— உயிர், ஆன்மா, சீவன், பசு என்பன ஒரு பொருட்சொற்களே. பாசத்தால் கட்டுண்டு இருப்பதால் பசு எனப்பெயர் பெற்றது. பசுக்கள் கணக்கற்றவை. பசுக்கள் சார்ந்ததின் வண்ணமாகும் இயல்புடையன. இதனாலேயே பசுக்கள் மலத்தைச் சார்ந்து நிற்கும் போது மயக்கத்தையும் சிவத்தைச் சார்ந்து நிற்கும் போது தெளிவையும் பெறுகின்றன.

பசுக்கள் மலசம்பந்தத்தால் முற்றாகச் செயலற்றுக்கிடக்கும் நிலையும் உண்டு. இந்நிலையை கேவல நிலை அல்லது கேவலாவத்தை என்பர். கேவல நிலையில் உள்ள பசுக்கள் மீது கருணை கொண்ட இறைவன், அவைகளை தாம் தாம் செய்த வினைப்பயன்களை அநுபவிக்கும்படி உடல், உலகம் முதலியவற்றைத் தருகிறான். இவற்றை நுகரும் நிலையை சகல நிலை அல்லது, சகலாவத்தை என்பர். இந்நிலையில் பசுக்கள் இறையுணர்வு வரப்பெற்று அசத்தையும் சத்தையும் அறிந்து, இறையருளில் திளைத்து பேரானந்தத்தை நுகரத் தொடங்கும், இந்நிலையே சுத்தநிலை எனப்படும்.

மலசம்பந்தம் குறித்துப் பசுக்களை சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர் என மூவகைப்படுத்துவர். ஆணவம் கன்மம் மாயை ஆம் மும்மலங்களாலும் கட்டுண்டு தம்மையே உணராத ஆன்மாக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைச் சகலர் என்றும், ஆணவம், கன்மம் இரண்டும் உடையவர்களை பிரளயாகலர் என்றும் மூலமாகிய ஆணவமலம் மட்டும் உள்ளவரை விஞ்ஞானகலர் என்றும் வகைப்படுத்துவர்.

பாசம்:— மலம், தளை என்பன ஒரு பொருட் சொற்கள். ஆணவம், கன்மம், மாயை எனப் பாசத்தை மும்மலங்கள் என்பர். ஆணவம் அநாதியானது. செம்பிற் களிம்பு போலப் பசுக்களைப் பற்றி நிற்பது. எனவே மூலமலம் என்றும் பெயர் பெறும். ஆணவம் தன்னையுங்காட்டாது, பிறபொருளையும் காட்டாது பலவிதமான அநர்த்தங்களுக்குக் காரணமாகையால் இருளிலும் கொடியது என்பர். ஆணவத்தின் வலியைக் கெடுத்து ஆன்மாவை ஈடேற்றவே திருவருள் தொழிற்படுகிறது. இதை அழித்தல் இல்லை. ஆணவ முனைப்பால் பசுக்கள் இயற்றும் வினையே கன்மம் எனப்படும். இவ்வினைகளும் நல்வினை தீவினை என இருவகைப்படும். இரண்டுமே பிறவிக்குக் காரணமாகும். மனத்தாலும், வாக்காலும், காயத்தாலும் வினைகள் செய்யப்படுகின்றன. எனவேதான் செய்வதெல்லாம் நல்வினையாக அமையவேண்டும் என்பதற்காக 'திரிகரண சுத்தி' என்றூர். மாயை: காரிருளில் மின்மினிபோல, ஆணவத்தால் அறிவிழந்த உயிர்களுக்கு ஒரு சிறிது அறிவைத்தருவது மாயை. 'விடிவாமளவும் விளக்கனைய மாயை என்பர் உமாபதி சிவம். சிவப்பேரொளியால் ஆணவமயக்கம் நீங்கப் பெறுவதற்கு வழிவகுப்பது மாயை. நிலையில்லாதவற்றை நிலை எனக்கொண்டு மயங்கிப்பின் உண்மை அறிந்து தெளிந்து, நிலையான பரம் பொருளைத்தேட உந்துவது மாயை எனலாம். இன்னும் மாயையை, சுத்தமாயை, அசுத்தமாயை பிரகிருதி மாயை என வகுப்பர்.

திருவருள்

தொடர்புடையாரிடத்து உண்டாகும் ஈடுபாடு அன்பு எனப்படும். அன்பு செய்யப் பழகும் ஒருவன் தொடர்பில்லாதவரிடமும் இரக்கம் காட்டவும், பிரதிபலன் எதுவும் கிடையாது எனத் தெரிந்தும் பிறர் துயர் நீக்க முற்படும் நிலையே அருள் எனலாம். 'அருள் எனும் அன்பு ஈன் குழவி' என்கிறூர் வள்ளுவர். இந்த அருள் தேவதேவன் திருக்குணத் தொன்றும். இறைவன் ஆன்மாக்களாகிய எம்மேல் கொண்ட பெருங்கருணையே திருவருள். சிந்திக்கும் ஆற்றல் படைத்த மனிதன் அது செய்யாது, தக்கது தகாதது உணரமுடியாமல் தத்தளிக்கும் போது, வழிகாட்டி அருளும் பெருங்கருணைத் திறத்தையே 'அருளாட்சி' என்கிறூர்கள். இறைவன் அருளாளன். வழி தவறியபோது தடுத்து நெறிப்படுத்தும்போது, துன்பம் போலத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன்றினுலும் அதுவும் கருணையே. எம்மிடத்திருந்து எதுவும் அவனுக்குத் தேவையில்லாதிருந்தும் எம்மால் பதிலாக எதையும் செய்யமுடியாதிருந்தும் இறைவன் கருணை எம்மீது என்றும் இருந்து கொண்டிருக்கிறது. இதுவே திருவருள்.

திருவருள், அறியாமையை விலக்கி, உயிர்களாகிய நாம், நம்மையும், சூழ்ந்துள்ள பொருட்களையும், நிலையாய பதியை அறிவதற்கும், அவனை அடைந்து, அழியாதபேரின்பவாழ்வைத் துய்ப்பதற்கும் வாய்ப்பாதலால், எம்மால் பெறக்கூடியவற்றுள் எல்லாம் தலையாயது திருவருளே; ஆனுல் நாம் திருவருளின் மத்தியில் இருந்தும், அதன் பெருமையை அறியாது இருக்கிறோம். பாற்கடலில் வாழும் மீன்கள் அப்பாலை உண்டு அல்லற்படாமல் வாழ வழியிருந்தும் அது செய்யாது தம் சிற்றறிவாலும், பிறப்பின் தன்மையாலும் சிறு மீன்களைத் துரத்திச் சென்று, கிட்டியபோது சிறிது இன்பமும், கிட்டாத போது துன்பமும் எய்துதல் போல உயிர்களாகிய நாமும், திருவருளை நுகராமல், அதன்வழி செல்லாமல் எம்முந்தைத் தீவினையால், நிலையற்றவற்றை நிலை எனக்கருதி அலைகின்றோம் என்று அருமையாக எமது வருத்தத்துக்குரிய நிலையை விளக்கிவைத்தார்கள் அருளாளர்களாகிய சமய, சந்தான குரவர்கள்.

உயிர்களைப் பீடித்திருக்கும் ஆணவத்தின் தன்மையை, உயிர்களோடு கூடி நின்றும் அவைகளின் சிறுமையில் தோய்வற்று நிற்கும் திருவருளே அறியும், அறிந்து அருளும் செய்யும்.

உயிர்களிடத்துள்ள ஆணவ மலத்தை வலியற்றதாக்கி, உண்மை அறிவைத் தோற்றுவிப்பது திருவருளே. இதைக் குருவடிவாக நின்று செய்யும் என்பர். இதனை அருணகிரிநாதர். "குருவடிவாய் வந்தென் னுள்ளங்குளிரக் குதிகொண்டனவே" என்கிறார்.

## முத்தி

பற்றுக்களுககுக் காரணமாகிய மும்மலங்களிலிருந்து விடுவிக்கப்பட்டு, சிவானந்தத்தை அநுபவிக்கும் பேரானந்தப்பெருவாழ்வே முத்தி. முத்திநிலையை அடைவதற்குச் சாதனங்களாக நாற்பாதங்கள் கூறப்படுகின்றன. நாற்பாதங்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பனவாம். நாற்பாதங்கள் இருவினையொப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம் என்பனவற்றை நிகழ்விக்கும்.

நல்வினை தீவினை இரண்டும் பிறவிக்குக் காரணம். எனவே செய்யப்படவேண்டிய நல்வினையையும், தன் செயலாகக் கருதாது,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் செய்விக்கத்தான் செய்யும் செயலாகக் கொள்ளும் போது ஆணவம் வலியிழந்து போக சிவம் ஆன்மாவிற் பதியும். இதுவே சிவசாயுச்சியம் எனப்படும்.

## அத்துவித முத்தி

உயிர்கள் சிற்றறிவும் அதனுல் சிறு தொழிலும் உடையன. இவ்வுயிர்களின் சிறுமையைத் திருவருள் தன் கருணைத்திறத்தால் நீக்கி, அவைகளில் சிவம் பிரகாசிக்கச் செய்கிறது. இப்படிச் சிவமும் உயிரும் ஒன்றுபட்டு நிற்கும் நிலையே அத்துவிதநிலை என்பர். இரண்டறக் கலந்த நிலையே அன்றி ஒன்றல்ல. "சிவமாக்கி எனை ஆண்ட அத்தன்" மாணிக்கவாசகர்.

சிவன் முத்தி: இவ்வுலகில் சீவிக்கும் போதே, பாசத்தினின்றும் விடுபட்டு, பரமே பார்த்திருப்பர். உலகியலில் ஈடுபட்டவர் போலத் தோன்றிலும் உண்மையில் தோயாதவர்கள். இறையனுபவத்தை இவ்வாழ்விலேயே பெற்றவர்கள்;

பரமுத்தி: முத்தி நிலையிலே மிக உயர்ந்த நிலை. இந்நிலை அடைந்த உயிர்கள் மீளப்பிறத்தலோ, பிரபஞ்ச விடயங்களில் கருத்துக் கொள்வதோ இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவசாதனை

## சிவசின்னங்கள்

### திருநீறு

திருநீறானது சிவசத்தியின் வடிவமாயுள்ளது. சம்பந்தசுவாமி பாடியருளிய திருநீற்றுப் பதிகமானது பரையின் வரலாறுகும் (பரை என்றது சிவசத்தியாகிய பராசத்தியையாம்) என்னும் ஆன்றோர் வாசகு இதற்கு நேரான சான்றாகும். 'நீற்றுப்பதிகம் நிகழ்த்துங் காலை மாற்றுப் பரையின் வரலாறுகும்' என்பது அவ்வாக்கு. ''முத்தி தருவது நீறு'' என்றும், ''போதந் தருவது நீறு'' என்றும் சம்பந்த சுவாமிகள் பாடியருளியதும் இதைக் காட்டுகின்றது. எவ்வாறெனில், ஆன்மாக்களுக்கு முத்தியையும் போதத்தையும் (சிவ ஞானம்) கொடுப்பது சிவசத்தி எனத் திருவருட்பயன் முதலிய ஞான நூல்கள் கூறுகின்றன; திருநீறு முத்தியையும் போதத்தையுங் கொடுத்தலால், அது சிவசத்தி சாந்நித்தியமாதற்குச் 'சிவசிவ' என்னும் மந்திரத்தையேனும் செபித்தல் வேண்டும். அநுட்டான முறையாகப் பூசும்போது பதினொரு மந்திரங்களும் அதிலே பதிக்கப் படவேண்டும்.

திருநீற்றை உத்தூளனமாகவேனும், திரிபுண்டரமாகவேனும் தரிக்கலாம். உத்தூளனமாவது பரவப் பூசுதல். திரிபுண்டரமாவது மூன்று குறியாகத் தரிப்பது. மூன்று குறியாகத் தரிக்கும் போது குறிகள் வளையாமலும் இடையறாமலும் ஒன்றையொன்று தீண்டாமலும் மிக அகலாமலும் இடைவெளி ஓரங்குலமிருக்கத் தரித்தல் வேண்டும்.

சிரம், நெற்றி, மார்பு, கொப்பூழ், முழந்தாள்கள், புயங்கள், முழங்கைகள், மணிக்கட்டுக்கள், விலாப்புறங்கள், முதுகு, கழுத்து என்னும் பதினாறு இடத்தும் குறி தரிக்கலாம். நெற்றியில் இரண்டு கடைப்புருவ எல்லை நீளமும், மார்பிலும் புயங்களிலும் அவ்வாறங்குல நீளமும், மற்றைத் தானங்களில் ஒவ்வோர் அங்குல நீளமுமாகத் தரிக்க வேண்டும். திருநீற்றுக்கு மேலே சந்தனமேனும் குங்குமமேனுங் அணிதலாகாது. இவற்றைத் திருநீற்றுக்குக் கீழே புருவ நடுவிலே தரிக்கலாம்.

காலையிலும், மத்தியானத்திலும் மாலையிலும், ஸ்நானஞ் செய்தவுடனும், பூசைக்கு முன்னும் பின்னும், போசனத்துக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னும் பின்னும், நித்திரைக்கு முன்னும்பின்னும், மலசலமோசனஞ் செய்து கைகால் கழுவிய பின்னும். தந்த சுத்தி செய்த பின்னும் திருநீறு அவசியம் பூசுதல் வேண்டும். நடந்து கொண்டும், கிடந்து கொண்டும், பாவிகள் முன்னும் விபூதி தரித்தல் குற்றமாகும். விபூதி தரிக்கும் பொழுது சிந்தினால் சிந்திய விபூதியை எடுத்து விட்டு நிலத்தைச் சுத்திகரித்தல் வேண்டும்.

விபூதியாவது பசுவின் சாணத்தை அக்கினியினாலே தகித்தலால் உண்டாகிய திருநீறு. நோயுள்ளதும், அங்கவீனமானதும் பித்துக் கொண்டதுமான பசுவின் சாணத்தை உபயோகித்தலாகாது. வெள்ளை நிற விபூதியே தரிக்கத் தக்கது. தகிக்கப்பட்ட நீற்றை எடுத்து, புதுவஸ்திரத்தினாலே வடித்து, புதுப்பாண்டத்தினுள்ளே இட்டு, மல்லிகை, முல்லை, பாதிரி, சிறு சண்பகம் முதலிய சுகந்த புஷ்பங்களை உள்ளே இட்டு, புது வஸ்திரத்தினாலே அதன் வாயைக் கட்டி வைத்துக் கொள்ளவேண்டும்.

விபூதியை பட்டுப்பையிலேனும், சம்புடத்திலேனும், சுரைக் குடுக்கையிலேனும், வில்வக் குடுக்கையிலேனும் எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும்.

ஆசாரியராயினும் சிவனடியாராயினும் விபூதி தந்தால், அவரை நமஸ்கரித்து, இரண்டுகைகளையும் நீட்டி வாங்கித் தரித்துக் கொண்டு, மீண்டும் நமஸ்காரம் செய்தல் முறையாகும்.

எக்கருமத்தையும் செய்யப்புறப்படுமுன் திருநீறு தரித்துக் கொண்டே செய்தல் வேண்டும். விபூதி அணியாதவருடைய நெற்றி சுடுகாட்டுக்குச் சமமாகும். 'நீறில்லா நெற்றி பாழ்' எனவும் ஔவையார் தமது நீதி நூலில் கூறியுள்ளார்.

திருநீற்றின் மகிமை சம்பந்தசுவாமி பாடியருளிய திருநீற்றுப் பதிகத்திலும், வேதங்களிலும் அநேக உபநிடதங்களிலும் நன்றாக விளக்கப்பட்டிருக்கின்றது. திருநீற்றுக்கு ஐந்து பெயர்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவையாவன: விபூதி – மேலான செல்வத்தைக் கொடுப்பது; பசிதம் – ஒளியைத் தருவது (ஒளி–ஞானம்) பஸ்மம் – பாவங்களை நீக்குவது; க்ஷாரம்–தடைகளை அறுப்பது; இரட்சை – காப்பது என்பனவாம். ஒருவன் திருநீறு பூசினால், அத் திருநீறு படிகின்ற ஒவ்வொரு, மயிர்த்துவாரமும் சிவலிங்கமாகிற தென்றும், ஞானாக்கினியினாலே தகிக்கப்பட்ட பசுமல நீக்கத்தில் விளங்குஞ் சிவப்பேற்றிற்கு அறிகுறி என்றும் சொல்லப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரிபுண்டரத்தின் முதற்குறி பிரணவத்தில் அகரத்தையும் கிரியா சத்தியையும் மகேசுரனையும் குறிக்கின்றது என்றும், இரண்டாவது குறி உகரத்தையும் இச்சா சத்தியையும் சதாசிவனையுங் குறிக்கின்றது என்றும், மூன்றாவது குறி மகரத்தையும் ஞானசத்தியையும் மகாதேவனையுங் குறிக்கின்றது என்றும், ஏழாம் எட்டாம் ஒன்பதாம் மந்திரங்களிற் சொல்லப்பட்டிருக்கிறது.

... ஆதியின் மேல்
"உற்றதிரு நீறுஞ் சிவாலயமும் உள்ளத்துச்
செற்றி புலையர்பாற் செல்லாதே"
என நெஞ்சுவிடு தூதும் தெரிவிக்கின்றது.

**உருத்திராக்ஷம்**

ஆன்மாக்கள் பாசங்களினால் அடையுந் துன்பங்களைக் குறித்துச் சிவபெருமான் இரங்குகின்றார். அவருடைய இரக்கம் அவரது திருக்கண்ணினின்றுஞ் சொரிந்து கொண்டிருக்கின்றது. அந்த இரக்கத்தைக் குறிப்பது உருத்திராக்ஷமாம். (உருத்திரன் – சிவன், அக்ஷம் – கண்) ஆதலால் சைவர்கள் உருத்திராக்க மணி தரிப்பர்.

உருத்திராட்சத்தைக் காணும் பொழுதெல்லாம் அது சிவபெருமானுடைய கருணையென்று நாம் அதை வணங்க வேண்டும். "சிவபெருமான் நம்முடைய பாசங்களாகிய துன்பத்துக்காக இவ்வளவு இரங்குவாரானால், நாம் அவைகளைப் போக்க எவ்வளவு முயற்சி செய்தல் வேண்டும். நாம் அதை விட்டு உலக இன்பங்களையே நினைத்தல் ஆகாது" என்று உருத்திராக்கத்தைக் காணும் போது நாம் எண்ணுகிறோம். சந்தியா வந்தனம், சிவமந்திர செபம், சிவபூசை, சிவத்தியானம், சிவாலய தரிசனம் முதலிய சிவவழிபாடு செய்யுங் காலங்களில் உருத்திராட்சம் தரிப்பது உத்தமம்.

உருத்திராக்கம் சிரசில் இருபத்திரண்டு மணியும், கழுத்தில் முப்பது மணியும், கைகளில் பன்னிரண்டு மணியுமாகத் தரிக்கலாம். உருத்திராக்கம் தரிப்பவர்கள் உள்ளபடி சிவபத்தர்களாய் இருத்தல் வேண்டும்.

உருத்திராக்க மணி கோக்கும் போது பொன், வெள்ளி, தாமிரம், முத்து, பவளம், பளிங்கு ஆகியவற்றை இடையிடையே இட்டு, முகத்தோடு முகமும் அடியோடு அடியும் பொருந்தக் கோத்துத் தரித்தல் வேண்டும்.

வித்தியேசுரர் ஆகியோரும் பிரமா, விஷ்ணு ஆகிய தேவர்களும், முனிவர்களும், சிவனடியார் பலரும் உருத்திராக்கம் தரித்து சிவனருள் பெற்றுள்ளதாக வரலாறு கூறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவாலய வழிபாடு

## திருக்கோயில் அமைப்பு

சர்வ வியாபகராய் நித்தியானந்தராய் உள்ளவர் இறைவன் உலகத்துக்குக் கருத்தா சிவபெருமான்; ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு சிவாலயங்கள் அமைக்கப்பட்டு வழிபாடுகள் செய்யப்படுகின்றன; ஆலயங்கள் ஆகம முறைப்படி அமைக்கப்படும். ஆன்மாக்கள் மனம், வாக்கு, காயம் ஒருமித்து வழிபட்டு உய்திபெறுவர்.

சிவாலயத்தில் மூர்த்தி எழுந்தருளியிருக்கும் இடம் மூலஸ்தானம் அல்லது கருப்பக்கிருகம் எனப்படும். இதனைக் கருவறை என்றுங் கூறுவர். இதனை அடுத்து அர்த்த மண்டபம் மகாமண்டபம், ஸ்நான மண்டபம் அலங்கார மண்டபம், சபா மண்டபம் என்பன அமைக்கப்படும்

ஆலயங்கள் மனித உடலின் உறுப்புக்களைப் போலவும் அமைகின்றன. எமது உடலின் மூலம், தொப்பூழ், வயிறு, மனம், மிடறு புருவநடு என்பனவற்றை மேற்கூறிய ஆறு அங்கங்களும் குறிக்கும்.

சிவலிங்கத்திற்கு எதிர்முகமாக நந்தி அமைக்கப்படும். அடுத்து பலிபீடமும் பின்பக்கத்தில் கொடி மரமும் அமைப்பர்.

மூலஸ்தானத்தின் வலது பாகத்தில் விநாயகரும், இடது புறத்தில் சுப்பிரமணியரும் மற்றும் பரிவார மூர்த்திகளும் வீற்றிருப்பர். மூலஸ்தானத்தின் மேற்பகுதியில் தூபி கட்டப்படும். ஆலயத்தை வலம் வருமாறு உட்பிரகாரம் வெளிப்பிரகாரம் ஆகிய வீதிகள் அமைக்கப்பட்டிருக்கும்.

மேற்கூறிய மண்டபங்களுடன் வசந்த மண்டபம், நிருத்த மண்டபம், சபா மண்டபம், ஆயிரங்கால் மண்டபம் ஆகியனவும் திருக்கோயிலின் வெளிப்புறத்தே திருக்குளமும் அமைக்கப்படும்.

## கோபுரம்

கோபுரம் இறைவனின் வீரச் செயல்களையும் திருவிளையாடல்களையும் உணர்த்துகின்ற உருவங்களையும் காட்டி நிற்கும்; கோபுரத்தைத் தூலலிங்கம் என்றுங் கூறுவர்; கோபுரத்தில் உலகத்தின் தோற்றத்தில் காணப்படும். சீவராசிகள் புராணவரலாறுகள் நந்தி ஆகியவற்றைச் சிற்பங்களால் அமைப்பர். கோபுரவாயிலின் இரு மருங்கிலும் துவாரபாலகர் வீற்றிருப்பர்; ஆலயஞ் செல்பவர் கோபுரத்தைக் கண்டதும் வணங்க வேண்டும் என்ற விதி உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடிமரம்

திருவிழாக் காலத்திலே கோயிலுக்குப் போனால் கொடிமரத்திலே ஒரு சீலை சுற்றியிருப்பதைக் காணலாம். சீலையிலே ஒரு பசு எழுதப்பட்டிருக்கிறது. அந்தச் சீலையோடு ஒரு தர்ப்பைக் கயிறு சேர்ந்திருக்கிறது. கொடிமரம் சிவம் என்றும், பசு எழுதப்பட்ட சீலை ஆன்மா என்றும், தர்ப்பைக்கயிறு பாசம் என்றும் சிவாகமம் சொல்லுகின்றது.

கடவுளிலே ஆன்மா தங்கியிருப்பது போலக் கொடிமரத்திலே சீலை தங்கியிருக்கின்றது. கொடிமரமும் சீலையுமென்று இரண்டு பொருள்கள் இருந்தாலும், அதைப் பார்க்கிறவர்கள் கொடிமரமென்று ஒரே பொருளாக மதிக்கிறார்கள். சிவமும் ஆன்மாவும் அத்துவித மென்பதை இது விளக்குகின்றது; கயிறு சீலையைச் சுற்றியிருப்பது போலப் பாசம் ஆன்மாவைச் சுற்றிக் கொண்டிருக்கிறது. முந்திய அதிகாரத்திலே சொல்லப்பட்ட முப்பொருட் சம்பந்தங்களைக் கொடிமரத்திற் காணலாம்.

பலிபீடம்

கொடிமரத்துக்கு அப்பால் பலிபீடத்தைக் காணலாம். அதுவும் சிவத்தையே குறிக்கும். அதற்குப் பத்திரலிங்கம் என்று பெயர் அதிலே நாம் நம்முடைய அகங்காரங்களைப் பலிசெய்து, நம் செயல் ஒன்றுமில்லை, எல்லாம் சிவன் செயல்'' என்று தெளியலாம்.

சிவலிங்கம்

அதற்கு அப்பால் மூலஸ்தானத்திலே சிவலிங்கம் இருக்கிறது. சிவலிங்கம் சோதிக்கொழுந்து ரூபமுள்ளது. சோதி என்பது ஞான சோதி; நமது பாசங்களை எரிப்பதாகிய நெருப்பு வடிவம்; நெருப்பானது அழுகுப் பொருட்களை எரிப்பதுபோல சிவமாகிய ஞானசோதி ஆன்மாக்களுக்கு அஞ்ஞானத்தைக் கொடுப்பனவாகிய பாசங்களை எரிப்பது. ஆகவே சிவலிங்கப்பெருமானது ஞானரூபத்தைக் குறிக்கின்றது. வணங்குவோர் தங்களைச் சிவபெருமானாகிய லிங்க அக்கினியிலே ஒப்புக் கொடுத்து விட்டால், அது அவர்களுடைய பாசங்களை எரித்து அவர்களைச் சுத்தமாக்கி விடும்.

நந்தி

அப்படிச் சுத்தமாக்கப்பட்ட ஆன்மாவைக் குறிப்பது பலி பீடத்துக்கும் சிவலிங்கத்துக்கும் இடையிலுள்ள நந்தியாம்; நந்தி என்றால் சிவன் என்பது கருத்து. பாசங்களினின்றும் நீங்கிய ஆன்மாவானது சிவமாகி அருளுருவம் பெற்று அவரோடு ஒன்றாக நிற்கும் என்பதை இது காட்டுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதாகமங்களிலுள்ள உண்மைகளின் சாரம் முழுவதும் சோயிலிலுள்ள திருவுருவங்களில் அமைந்திருப்பதைக் காணலாம்.

**உமாதேவியார்**

உமாதேவியார் சிவபெருமானுடைய அருட்சத்தி என்று சொல்லப்படுவர். இவ்வுலகத்திலே எங்களை அதிக அன்பாய்க் காத்து வருபவர் நமது தாயாரே. அதுபோல நம்மை தமது அன்பினாலே ஈடேறச் செய்பவர் சிவ அருட்சத்தியாகிய உமாதேவியாரே. ஆதலால் நாம் அவரை நம்முடைய அம்பாள் என்று சொல்லுகிறோம். அவருக்கு அபயம் வரதம் என்னும் இரண்டு திருக்கரங்கள் உண்டு. பாசங்களாற் கட்டுப்பட்டு அஞ்ஞானமாகிய இருளால் மூடப்பட்டிருக்கும் ஆன்மாவானது, தான் உய்தற் பொருட்டு திருவருளைத் தேடி வரும் பொழுது, உலகத் துன்பங்களுக்குப் பயப்படவேண்டாமென்று குறித்து ஆறுதல் பண்ணி, அநுக்கிரகஞ் செய்யும் பாவனையையுடைய திருக்கரம் அபயகரமென்று சொல்லப்படும். ஞானமாகிய திருவடியைக் காட்டி, "இதைத் தருவோம், பெற்றுக்கொள்" என்று குறிக்குந் திருக்கரம் வரதகரம் எனப்படும். இப்படியான திருக்ககரங்கள் மற்றைய மூர்த்திகளுக்கும் உள்ளன.

**விநாயகக் கடவுள்**

விநாயகக் கடவுளுக்கு யானைமுகம் போன்ற முகம் இருப்பதை நீங்கள் காண்கிறீர்கள். இந்த முகம் 'ஓம்' என்ற எழுத்தைப் போன்று அதைக் குறிக்கின்றது. இந்த எழுத்துப் பிரணவமாகிய சுத்த ஞானத்தைக் காட்டுவது.

"பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன்
சரணவற் புதுமலர் தலைக்கணிவோமே"

விநாயகக் கடவுள் சுத்தஞானமே உருவமாக உடையவர். சிவபெருமானும் ஞானமே உருவமாக உடையவர் ஆதலால் விநாயகக் கடவுளும் சிவபெருமானும் ஒருவரேயாவர். சிவலிங்கமும் பிரணவ ரூபம் என்பது முன்னர் காட்டப்பட்டது. விநாயகக் கடவுள் ஞானமே உருவமாக உடைய மூர்த்தியாதலால், ஞானத்தைப் பெறுவதற்கு அவரை நாம் வழிபடுகின்றோம்.

**வைரவக் கடவுள்**

வைரவக் கடவுளுடைய திருக்கரத்திலே சூலாயுதம் இருக்கிறது. அதற்கு மூன்று கவர்கள் உண்டு. அந்த மூன்று கவர்களும் ஐந்தொழிலையுஞ் செய்யும் ஆரணி, ஜநநி, ரோதயித்திரி என்ற மூன்று சத்திகளையும் குறிக்கின்றன என்று வாதுள ஆகமம் கூறுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைத்தல் முதல் அருளலீருகிய ஐந்தொழிலும், படைத்தல் காத்தல் அழித்தல் என மூன்ருக அடக்கிச் சுருக்கிக் கூறப்படுதல் உண்டு. ஆதலினுலே, அத்தொழிலுக்குரிய மூன்று சக்திகளேயும் சூலத்தின் கவர்களும் குறிப்பனவாகும்.

''மூவிலை யொருதாட் சூல மேந்துதல்
மூவரும் யானென மொழிந்த வாறே''

என்று பட்டினத்தடிகள் கூறியுள்ளமையும் கவனிக்கத்தக்கது.

'மூவரும் யான் என மொழிந்தவாறே' என்றது, படைத்தல் முதலிய முத்தொழிலுக்கும் உரிய கடவுளராகிய பிரமா, விஷ்ணு, உருத்திரன், ஆகிய மூவராக (மூவரை அதிட்டித்து) நின்று அம் முத்தொழிலேயும் செய்பவன் யானே என்றவாறு அறிக.

சூலத்தின் முக்கவர்களும் சக்திகளாயின், அச்சூலத்தைத் தாங்கிய வைரவக் கடவுள் 'சக்தன்' ஆவர்; முக்கடவுளரையும் அம் மூன்று சக்தியால் அதிட்டித்து நின்று முத்தொழிலேயும் செய்பவரும் அவரேயாகும்.

வைரவக் கடவுள் சூலாயுதத்தைத் தரித்திருப்பதனுல் அவர் பஞ்ச கிருத்தியங்கள் செய்பவரென்று நன்கு விளங்குகின்றது. பஞ்ச கிருத்தியஞ் செய்பவர் சிவபெருமானுதலால். வைரவக் கடவுளும் சிவபெருமானும் ஒருவரே என்பது வெளிப்படை.

அன்றியும் முன்ஞெரு காலத்திலே பிரமா முதலிய தேவர்களெல்லாரும் செருக்குள்ளவர்களாகிக் கடவுளே வணங்காமல் மிகவும் கெட்டு அலைந்தார்கள். வைரவக் கடவுள் அவர்கள் கெட்டுப் போனதைக் கண்டு இரக்கங் கொண்டு பிரமாவினுடைய தலைகளில் ஒன்றைக் கிள்ளியும், மற்றத் தேவர்களுக்கு வேறு வைத்தியஞ் செய்தும், அவர்களுடைய செருக்கை அகற்றி அவர்களே நல்வழிப்படுத்தினர் என்று புராணங்கள் சொல்லுகின்றன.

ஆயினும் அப்பர்சுவாமிகள் ''பிரமன்றன் சிரமரிந்த பெரியோய் போற்றி'' எனச் சிவபெருமானே பிரமாவினுடைய தலையைக் கிள்ளினுரென்று பாடியருளினுர். இதனுலும், வைரவக் கடவுளும் சிவபெருமானும் பேதமற்றவர்கள் என்று விளங்குகின்றது. தேவர்கள் கெட்டுப்போகாதபடி அவர்களுடைய செருக்கை அடக்கி அவர்களே நல்வழிப்படுத்திக் காத்ததுபோல, நம்முடைய செருக்கையும் அடக்கி நாம் அவரைத் தியானித்து உய்ய அருளும்படி வைரவக் கடவுளே வழிபடுகின்ருேம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரபத்திரக் கடவுள்

நாமெல்லாம் உலக காரியங்களைத்தான் அதிகமாக நினைக்கின்றோம். கடவுளை அவ்வளவு அதிகமாக நினைக்கிறதில்லை. கடவுளை நினைக்கிற பொழுதும் சிலகாலங்களிலே உலக காரியங்களைப்பற்றிய எண்ணம் வந்ததும் கடவுளைப்பற்றிய எண்ணத்தை மறைத்து விடுகின்றது. ஒருநாள் ஒருவர் சிவபூசை செய்து கொண்டிருந்தார். அப்போது அவருடைய எசமானன் கூப்பிட்டான். அவர் சிவபூசையை அவ்வளவில் விட்டு அவனிடம் போனார். சிவபூசையிலும் பார்க்க எசமானுடைய பேச்சு மேலானதென்று அவர் நினைத்தார். இப்படியாக நினைப்பது எல்லாப்பிழைகளிலும் பெரும்பிழை! இப்படியே கடவுளுடைய முதன்மையை மறைப்பதாகிய பிழையை நீக்குவதற்காக வீரபத்திரக் கடவுளை நாம் வழிபடுகின்றோம்.

முற்காலத்திலே தக்கன் என்று ஒருவன் இருந்தான். அவன் சிவபெருமான் மேலானவர் அல்லர் என்று நினைத்து நடந்தான். வீரபத்திரக் கடவுள் அவன்மேல் இரங்கி அவனுக்குப் பரிகாரஞ் செய்து அவனுக்கு நல்லறிவு வரச் செய்தார். தக்கனுக்கு இப்படி நல்லறிவு வரச் செய்தவர் சிவபெருமானே என்று மாணிக்கவாசக சுவாமிகள்

'தக்கனையு மெச்சனையுந் தலையறுத்துத் தேவர்கணந்
தொக்கனவந் தவர்தம்மைத் தொலைத்ததுதா னென்னேடி
தொக்கனவந் தவர்தம்மைத் தொலைத்தருளியருள்கொடுத்தங்
கெச்சனுக்கு மிகைத்தலைமற் றருளினன்காண் சாழலோ'

என்று பாடியருளினர். ஆதலால் வீரபத்திரக் கடவுளும் சிவபெருமானும் ஒருவரே யாவர்.

சுப்பிரமணியக் கடவுள்

சிவபெருமானும் சுப்பிரமணியக் கடவுளும் ஒருவரேயென்பதைக் கந்தபுராணத்தில் இலகுவிற் காணலாம்; சிவபெருமான் அப்படிச் சொல்லியருளியதாகச் சரிதங் கூறப்படுகிறது.

ஆதலி னமது சத்தி யறுமுக னவனும் யாமும்
பேதக மன்றால் நம்போற் பிரிவிலன் யாண்டு நின்றான்
ஏதுமில் குழவி போல்வான் யாவையு முணர்ந்தான் சீரும்
போதமு மழிவில் வீடும் போற்றினர்க் கருள வல்லான்.

மேலும், சுப்பிரமணியக் கடவுள் குருமூர்த்தியுமாம். "குருவடிவாய் வந்தென் உள்ளங் குளிரக் குதிகொண்டனவே'' என்பதைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தரலங்காரத்திற் காண்க. உலக குருவாகிய அகத்திய முனிவருக்கு இவரே குருவாயிருந் தருளினர்.

"அருமறையா கமமங்க மருங்கலை நூல் தெரிந்த
அகத்தியனுக் கோத்துரைக்கும் அருட்குருவாங் குருவை"

என்று சிவஞானசித்தியாரிற் (பரபக்கம், மங்க 5) கூறப்பட்டிருக்கிறது. எங்களுக்குக் குருவாக இருந்து. பாசங்களை நீக்குதற்கு ஆகவேண்டும் வழிகள் எல்லாவற்றையும் காட்டி, மோட்சத்தைத் தரும்படி நாம் சுப்பிரமணியக் கடவுளை வழிபடுகின்றோம். அவருக்குப் பக்கததிலேயுள்ள தெய்வானையம்மை கிரியாசத்தி யாதலால் நல்ல செய்கைகளை நாங்கள் செய்ய அருள வேண்டுமென்று அவரைப் பணிகின்றோம். வள்ளிநாயகியம்மை இச்சாசத்தி யாதலால், நமக்கு நல்ல இச்சைகள் உண்டாக அருள வேண்டுமென்று அவரை வணங்குகின்றோம். அவருடைய திருக்கரத்திலேயுள்ள வேலாயுதம் ஞானசத்தியாதலால் நமது அஞ்ஞானத்தை நீக்கி ஞானத்தைத் தரும்படி வேலாயுதத்தை வணங்குகின்றோம்.

இச்சா சத்தி, கிரியாசத்தி, ஞானசத்தி ஆகிய இம்மூன்று சத்திகளும் சிவபெருமானுடைய சத்திகளாவர்; இவர்கள் சுப்பிரமணியக் கடவுளிடத்தும் இருந்தாலும் சிவபெருமானும் சுப்பிரமணியக் கடவுளும் ஒருவரே யென்பது பெறப்படும்.

**நடேசப் பெருமான்**

நடேசப்பெருமானுடைய ஒரு திருக்கரத்திலே உடுக்கை இருக்கின்றது. அது படைத்தலாகிய தொழிலைக் குறிக்கின்றது. அபயமாகிய ஒரு திருக்கரம் காத்தலாகிய தொழிலைக் குறிக்கின்றது. வேறொரு திருக்கரத்திலே நெருப்பு இருத்தல் அழித்தலைக் குறிக்கின்றது. ஊன்றி நிற்கின்றதாகிய ஒரு பாதம் மறைத்தலைக் குறிக்கின்றது. உயர்த்திய மற்றப் பாதம் அருளலைக் குறிக்கின்றது

## சிவாலய தரிசனம்

அதிகாலையில் நித்திரைவிட்டெழுந்து, காலைக்கடன்களை முடித்து, ஸ்நானஞ் செய்து தோய்த்துலர்ந்த வஸ்திரந் தரித்து விபூதி அணிந்து கொண்டு, சிவத்தியானத்துடன் கோயிலுக்குப் போதல் வேண்டும்.

கோயிலுக்குக் கிட்டப்போனவுடனே கைகால்களைக் கழுவிக் கோபுரத்தைக் கும்பிட்டுக் கொண்டு, திருநந்திதேவரை வணங்கி, "பகவானே, அடியேன் உள்ளே புகுந்து தரிசிப்பதற்கு அனுமதி தந்தருளுக" என்று வேண்டிக் கொண்டு உள்ளே போதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பு பலிபீடத்தையும் திருநந்தி தேவரையும் கும்பிடவேண்டும். அதன் பின் பிள்ளையாரையும் சிவலிங்கப் பெருமானையும் உமாதேவியாரையும், நடேசர், தட்சணாமூர்த்தி, சோமாஸ்கந்தர், சந்திரசேகரர், வைரவர், வீரபத்திரர் சுப்பிரமணியர், முதலிய மூர்த்திகளையும், சமயகுரவரையும் தரிசனம் செய்தல் வேண்டும்.

பிள்ளையாரைத் தரிசனம் செய்யும் பொழுது முட்டியாகப் பிடித்த இரண்டு கைகளினாலும் நெற்றியிலே மூன்று முறை குட்டிக் கும்பிடல் வேண்டும். கும்பிடும்போது வடக்கு அல்லது கிழக்கு நோக்கி நிற்றல் வேண்டும்.

ஆண்கள் அட்டாங்க நமஸ்காரமும், பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும் மூன்று தரத்துக்குக் குறையாமற் செய்தல் வேண்டும். அட்டாங்க நமஸ்காரமாவது:— தலை, கைகள், செவிகள், புயங்கள், மோவாய் என்னும் எட்டு அவயவங்களும் நிலத்திலே பொருந்தும் படி வணங்குதல். பஞ்சாங்க நமஸ்காரமாவது: தலை, கைகள், முழந்தாள்கள் என்னும் ஐந்து உறுப்புக்களும் நிலத்திலே பொருந்த வணங்குதல்.

பின்பு எழுந்து இரண்டு கைகளையுங் குவித்துத் தியானஞ் செய்து கொண்டு, மெல்ல மெல்லக் கோயிலை வலம் வந்து பின்பு சந்நிதானத்திலே நமஸ்காரஞ் செய்தல் வேண்டும். பிரதட்சணஞ் செய்த பின்பு, சண்டேசுரர் சந்நிதியை யடைந்து கும்பிட்டுத் தோத்திரஞ் செய்து வணங்கல் வேண்டும். பின்னர் சுவாமி சந்நிதானத்தில் வந்து மீண்டும் நமஸ்காரஞ் செய்து, சிவத்தியானத்துடன் வீட்டுக்குப் போதல் வேண்டும்.

ஒவ்வொரு நாளும் கோயிலுக்குப் போக இயலாதவர் திங்கட்கிழமை, செவ்வாய்க்கிழமை, வெள்ளிக்கிழமை, பிரதோஷம், பௌர்ணிமை, அமாவாசை, திருவாதிரை, கார்த்திகை, மாசப்பிறப்பு, சூரிய கிரணம், சந்திரகிரணம், சிவராத்திரி, நவராத்திரி, விநாயகர் சதுர்த்தி, விநாயகர் சட்டி, கந்த சட்டி, சித்திரைப் பரணி, ஐப்பசிப்பரணி முதலிய புண்ணிய காலங்களினாயினும் சுவாமி தரிசனஞ் செய்தல் வேண்டும்.

கோயிலுக்குப் போகும் பொழுது பழம், பாக்கு, வெற்றிலை, கர்ப்பூரம், மலர்கள் ஆகியனவற்றைத் தட்டத்தில் கொண்டு செல்லலாம். தட்டத்தை மேலே தூக்கிச் செல்ல வேண்டும். அரையின் கீழ்ப்படக் கொண்டு செல்லுதல் குற்றமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கோயிற் கிரியைகள்

திருக்கோயில்களில் நிகழும் கிரிகைகளை நித்திய, நைமித்திய காமியக் கிரிகைகள் என மூவகைப்படுத்தலாம்.

தினந்தோறும் நிகழும் பூசை முதலியன நித்தியக் கிரியைகள் என்றும், காரணங் கொண்டு நிகழும் திருவிழாக்கள் நைமித்தியக் கிரியைகள் என்றும், இறைவனிடம் பேறு வேண்டிச் செய்யப்படும் யாகம் போன்றவை காமியக் கிரியைகள் என்றும் கொள்ளப்படும். இவை அனைத்தும் ஆன்மாக்களின் ஈடேற்றம் கருதிச் செய்யப்படுவனவாதலால் பரார்த்தக்கிரியை எனவும் வழங்கும்.

### நித்தியக் கிரியைகள்

தினமும் அவ்வக் கோயில்களின் வசதிக்கும் மரபுக்கும் ஏற்பப் பலமுறை நடக்கும் பூசை நித்தியக்கிரியையாகும். மூன்று, ஆறு பன்னிரண்டு முறையேனும் பூசை நிகழும். ஆறுமுறை செய்யப்படும் பூசைகள் உஷக்கால பூசை (திருவனந்தல்) காலை சந்திப் பூசை, உச்சிக் காலப் பூசை, சாயரட்சைப் பூசை, இரண்டாங் காலப் பூசை, அர்த்த யாமப் பூசை எனப்படும். இப்பூசைகள் ஒவ்வொன்றிலும் அபிடேகம், அலங்காரம், நிவேதனம், தீபாராதனை, அருச்சனை, தோத்திரம், வாழ்த்து, என ஏழு அங்கங்கள் உள.

எண்ணெய், பால், இளநீர் முதலியவற்றாலும் நன்னீராலும் இறைவன் திருமேனியை நீராட்டுதல் அபிடேகம் எனவும், பட்டுப் பீதாம்பரம், மலர்மாலை, சந்தணம், ஆபரணங்கள் முதலியவற்றால் திருமேனியை அலங்கரித்தல் அலங்காரம் எனவும், அன்னம், பலகாரம், பழம், தாம்பூலம், ஆகியவற்றை இறைவனுக்குச் சமர்ப்பித்தல், நிவேதனம் எனவும், கர்ப்பூரதீபம், பஞ்சாராந்திரிகை, பஞ்சதீபம், அடுக்குத் தீபம் போன்றவற்றை இறைவன் திருமுன்பு பிரணவ வடிவமாகக் காட்டுதல் தீபாராதனை எனவும், இறைவன் சிறப்புக்களை மந்திர ரூபமாகச் சொல்லி பத்திரபுஷ்பங்களை அவன் திருவடியிற் சாத்துதல் அருச்சனை எனவும், வேதமந்திரங்களாலும் திருமுறைகளாலும் துதித்தல் தோத்திரம் எனவும், நித்திய, நைமித்திய காமியக் கிரியைகளின் போது அறியாது நிகழ்ந்த குறைகள் நிறைவாதற்கும் எல்லோரும் நலம் பெற்று வாழ வாழ்த்துதல் வாழ்த்து எனவும் சொல்லப்படும்.

### நைமித்தியக் கிரியைகள்

நித்தியக் கிரிகைகளில் ஏற்படுகின்ற குறைபாடுகளை நிறைவு செய்யும் நோக்கம் காரணமாகச் செய்யும் கிரியை நைமித்தியமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நைமித்தியக் கிரியைகள் வாரம் ஒருமுறை நிகழும் சோமாவாரம், இருவாரங்களுக்கு ஒருமுறை நிகழும் பிரதோஷம், மாதம் ஒருமுறை நிகழும் கார்த்திகை, வருடம் ஒருமுறை நிகழும் மகோற்சவம் எனப் பலவகைப்படும்.

இக்காலங்களிலாகுதல் ஆலயங்களுக்குச் சென்று நாள்தோறும் இறைவழிபாடு செய்ய முடியாமைக்காக வருந்தி இறைவனிடம் வேண்டுதல் செய்தல் முக்கியமானதாகும். இக்காலங்களில் பிராயச்சித்த பூசை என்று சிறப்பாக ஒரு பூசை செய்வார்கள். அறியாமல் பல தவறுகள் இக்காலங்களில் கிரியைகள் செய்வோர் செய்விப்போர் விட்டிருக்கலாம். இவைகளைப் பொறுத்துக் கொள்ளும்படி இறைவனை வேண்டிச் செய்யப்படுவது இப்பூசை. அறியாது நிகழ்ந்த தவறுகளுக்கே பிராயச்சித்தம் என்பது கவனிக்கத் தகுந்தது.

காமியக் கிரியைகள்

பயனை விரும்பிச் செய்யப்படும் கிரியைகள் காமியமாகும், நைமித்தியக் கிரியைகளும் காமியக்கிரியைகளாகலாம். சிறப்பாக, இலட்சார்ச்சனை, யாகங்கள் போன்றவை காமியமாகும். நாட்டில் பஞ்சம், நோய்பரவுங் காலத்தில் அரசர்களாலோ, மக்களாலோ, துன்பம் தீர்த்து அருள் தரும்படி இறைவனை வேண்டிச் செய்யப் படுபவை அனைத்தும் காமியக்கிரியைகள் எனலாம்.

## சிவாலயத் தொண்டுகள்

திருவலகிடுதல், திருமெழுக்குச் சாத்துதல், திருநந்தவனம் வைத்தல், பத்திர புஷ்பமெடுத்தல், திருமாலைகட்டுதல், சுகந்த தீபமிடுதல், திருவிளக் கேற்றுதல், பூசைத்திரவியங்கள் கொடுத்தல், தோத்திரம் பாடல், ஆனந்தக் கூத்தாடல் ஆகியன சிவாலய கைங் கரியங்களாம்.

திருவலகிடுதல்

சூரியன் உதிக்குமுன் ஸ்நானஞ் செய்து, சந்தியாவந்தனம் முடித்துக் கொண்டு திருக்கோயிலினுள்ளே புகுந்து மெல்லிய துடைப்பத்தினலே மேற்பட அலகிட்டு, குப்பையை வாரி தூரத்தே கொண்டுபோய்க் குழியில் கொட்டிவிட வேண்டும். ஆலய வீதி களிலுள்ள புல் பூடுகளைச் செதுக்கித் துப்புரவு செய்தல், கோபுர த்திலும் மதில்களிலும் உண்டாகும் செடிகளை அழித்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### திருமெழுக்குச் சாத்துதல்

ஈன்றணிமையதும், நோயையுடையதும் அல்லாத பசுவினது சாணியைப் பூமியிலே விழுமுன், இலையில் ஏந்தியாயினும், ஏந்தல் கூடாத போது, சுத்த நிலத்தில் விழுந்த சாணியை மேல் கீழ் தள்ளி நடுப்பட எடுத்தாயினும், சுத்த சலத்துடன் சேர்த்து ஆலய நிலத்தை மெழுகல் வேண்டும். கருங்கல் நிலமாயின் கழுவிவிட வேண்டும்.

### திருநந்தவனம் அமைத்தல்

சுடுகாட்டுக்கும், மலசல மோசனபூமிக்கும், சண்டாள பூமிக்கும் சமீபத்திலல்லாததாய், நான்கு பக்கத்தும் சுவரினுலேனும் வேலியினுலேனுஞ் சூழப்பட்டதாய்க் கீழே ஆழமாக வெட்டி எலும்பு முதலிய குற்றங்கள் அறப் பரிசோதிக்கப்பட்டதாய், பசுநிரை கட்டப்பெற்றுக் கோசல கோமயத்தினுலே சுத்தியடைந்த நிலத்தில் நந்தவனம் அமைத்தல் வேண்டும்.

வில்வம், பாதிரி கோங்கு, பன்னீர், கொன்றை, புலிநகக் கொன்றை, பொன்னுவிரை, மந்தாரை, சண்பகம், மகிழ், புன்னை, வெட்சி, கடம்பு, ஆத்தி, பவளமல்லிகை, வன்னி, பலாசு, மாவிலங்கை, நுணு, விளா, முக்கிளுவை, நெல்லி, நாவல், இலந்தை, பலா, எலுமிச்சை, நாரத்தை, மாதுளை, வாழை, செவ்விளநீர் ஆகிய மரங்களை உண்டாக்கவேண்டும், மரங்களில் உண்டாகும் பூ கோட்டுப் பூ எனப்படும்.

அலரி, நந்தியாவர்த்தம் குடமல்லிகை, வெள்ளெருக்கு, செம்பரத்தை, மந்தாரை, துளசி, நொச்சி, செங்கீரை, பட்டி, நாயுருவி கருவூமத்தை, பொன்னூமத்தை, கத்தரி, தகரை, செவ்வந்தி, தும்பை, வெட்டிவேர் இலாமச்சை, தருப்பை மருக்கொழுந்து, சிவகரந்தை, விஷ்ணுகாந்தி, மாசிப்பச்சை, திருநீற்றுப்பச்சை, பொற்றலைக் கையாந்தகரை, எள்ளு, பூளை, அறுகு என்னுஞ் செடிகளையும் உண்டாக்க வேண்டும். செடிகளில் உண்டாகும் பூ நிலப் பூ எனப்படும்.

மல்லிகை, முல்லை, இருவாட்சி, பிச்சி, வெண்காக் கொன்றை கருங்காக் கொன்றை, கருமுகை, தாளி, வெற்றிலை என்னும் கொடிகளையும் உண்டாக்க வேண்டும்.

செந்தாமரை, வெண்டாமரை, செங்கழுநீர், நீலோற்பலம், செவ்வாம்பல், வெள்ளாம்பல் என்பனவாகிய, நீர்ப்பூக்களையும் உண்டாக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விடத்தை அசுசிப்படுத்துதலும், இங்குள்ள பத்திரபுஷ்பங்களை, கடவுட் பூசைக்கன்றி வேறு பிறவற்றிற்கு உபயோகித்தலும் குற்றமாகும்.

## பத்திர புஷ்பமெடுத்தல்

தீட்சை பெற்று சமயாசாரம் உள்ளவரே பத்திர புஷ்பம் எடுக்கத் தகுதியுடையவர். தினமும் சூரியன் உதிக்குமுன் ஸ்நானஞ் செய்து சந்தியாவந்தனம் முடித்துக் கொண்டு, சிவத்தியானத்துடன் சென்று பூக்கூடையில் பத்திர புஷ்ப மெடுத்தல் வேண்டும்.

விநாயகருக்குத் துளசியும், சிவனுக்குத் தாழம்பூவும், உமாதேவிக்கு அறுகும் நெல்லியும், வைரவருக்கு நந்தியாவர்த்தமும், சூரியனுக்கு வில்வமும், விஷ்ணுவுக்கு அக்ஷதையும் பிரமனுக்குத் தும்பையும் ஆகாவாம்.

## திருமாலை கட்டுதல்

திருமாலைக் குறட்டைச் சலத்தினால் அலம்பி இடம்பண்ணித், திருப்பூங்கூடையிலுள்ள பத்திரபுஷ்பங்களை எடுத்து வைத்துக் கொண்டு, மௌனியாய் இருந்து, சாவதானமாக ஆராய்ந்து பழுதுள்ளவைகளை அகற்றி விட்டு, இண்டை, தொடை, கண்ணி, பந்து, தண்டு முதலிய பலவகைப்பட்ட திருமாலைகளைக் கட்டவேண்டும்.

## சுகந்த தூபமிடல்

வாசனைத் திரவியங்கள் கலந்து இடிக்கப்பட்ட சாம்பிராணி கொண்டு சுகந்த தூபமிடல் வேண்டும்.

## திருவிளக்கேற்றல்

கருமை சேர்ந்த பொன்னிறமான பசுவின் நெய் கொண்டு திருவிளக்கேற்றுதல் உத்தமம். மற்றைய பசுக்களின் நெய், வெள்ளெள்ளின் நெய் மத்திமம், ஏனையவை அதமமாம். தாமரை நூல் வெள்ளெருக்கு நூல், பருத்தி நூல், என்பவற்றை ஏழு, பதினொரு, பதினாறு இருபத்தொரு இழைகளால் கர்ப்பூரப்பொடி சேர்த்து திருவிளக்குத்திரி இடல் வேண்டும்.

மாவிளக்கு ஏற்றுதல்: பகலிலே போசனஞ் செய்யாது சனிப் பிரதோஷத்திலும், சிவராத்திரியிலும் செஞ்சம்பாவரிசி மாவினாலே அகல் பண்ணிக் கபில நெய் மூன்று நாழியேனும், ஒன்றரை நாழியேனும், முக்கால் நாழியேனும் வார்த்துக் கைப்பெருவிரல் பருமையுடைய வெண்டாமரை நூல் திரியிட்டு ஏற்றுதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பூசைத்திரவியங்கள் கொடுத்தல்**

பாதிரிப்பூ தாமரைப்பூ முதலிய சுகந்த புஷ்பங்களும் எண்ணெய் சந்தனம், அறுகு, இலாமச்சம் வேர், வெட்டி வேர், வெண்கடுகு, ஏலம், எள், தேன், சர்க்கரை, கரும்புச்சாறு, எலுமிச்சம்பழம், மாதுளம் பழச்சாறு, எண்ணெய்க்காப்பு, நெல்லிக்காப்பு, மாக்காப்பு ஆகியவற்றைப் பூசைத் தேவைக்கேற்றவாறு கொடுத்துதவலாம்.

**சமயப்பிரசங்கங்கள் செய்தல்**

திருக்கோயில்களிலே சமய ஆசாரியர்களைக் கொண்டு பதி, பசு பாச உண்மைகளையும் திருமுறைப் பெருமைகளையும் விரித்துரைப்பித்தல், அடியார்களுக்கு மகேசுரபூசை செய்வித்தலும் மிகப் பெரிய பணியாகும்.

**பொதுவான பணிகள்**

திருக்கோயிலையும், திருக்குளத்தையும் எச்சில் மலம் முதலியவைகளினல் அசுசியடையா வண்ணம் பாதுகாத்தல், ஆசாரம் இல்லாதவரும், சட்டையிட்டுக் கொண்டும், வாயிலே வெற்றிலைபோட்டுக்கொண்டும் உட்புகாவண்ணம் தடுத்தல், திருவிழாக் காலத்தில் திருவீதி யெங்கும் திருவலகிட்டுச் சலந் தெளித்தல், வாகனந் தாங்கல், சாமரம் வீசுதல், குடை கொடி ஆலவட்டம் பிடித்தல், தீவர்த்தி பிடித்தல் ஆகிய பணிகளையும் செய்யவேண்டும்.

**தோத்திரம் பாடல்**

தேவாரம் திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம் ஆகிய அருட்பாக்களை மனங்கசிந்துருகக் கண்ணீர் சொரிய, உரோமச் சிலிர்ப்ப பண்ணோடு பாடல் வேண்டும்.

**ஆனந்தக் கூத்தாடல்**

உலகத்தார் நகைக்கினும் அதனைப்பாராது, நெஞ்சு நெக்குருகக், கண்ணீர் பொழிய, மெய்ம்மயிர் சிலிர்ப்பக், கைகளைக் கொட்டித் தோத்திரங்களைப் பாடிக், கால்களைச் சதிபெற வைத்து ஆனந்தக் கூத்தாடல் வேண்டும்.

**திருக்கோயிலிலே செய்யத்தகாத குற்றங்களாவன :**

ஆசாரமில்லாது போதல், கால்கழுவாது போதல், எச்சில் உமிழ்தல், மலசலங்கழித்தல், மூக்குத்தூள்போடுதல், வெற்றிலை பாக்குண்டல், மூக்கு நீர் சிந்துதல், போசனம் பண்ணுதல், ஆசனத்திருத்தல், சயனித்தல், காலை நீட்டிக்கொண்டிருத்தல், மயிர்கோதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடித்தல், சூதாடல் தோளிலே தலையிலே வஸ்திரம் தரித்துக் கொள்ளுதல், சட்டையிட்டுக் கொள்ளுதல், பாதரட்சை இட்டுக் கொள்ளுதல், விக்கிரகத்தைத் தொடுதல், நிருமாலியத்தை மிதித்தல் கடத்தல், கொடித்தம்பம் பலிபீடம் இடபதேவர் விக்கிரகம் என்னும் இவைகளின் நிழலை மிதித்தல் வீண்வார்த்தை பேசுதல், சிரித்தல் சண்டையிடுதல், விளையாடுதல், சுவாமிக்கும் பலிபீடத்துக்கும் குறுக்கே போதல், ஓடிவலம் வருதல். சுவாமிக்கும் பலிபீடத்துக்கும். இடையே நமஸ்கரித்தல், சிவபொருமானை முற்பக்கத்தும் பிற்பக்கத்தும் நின்று வணங்குதல், திருவிளக்கு அவியக்கண்டும் தூண்டாதொழிதல் முதலியனவாம்.

மேலும், ஆலயத் திருவிழாக் காலங்களில் சுவாமியுடைய திருமேனியில் பொய்க்கரம், கால்களை வைத்துக் கட்டுதல், வாணவேடிக்கை, தாசிகள் நடனம், பலியிடுதல், அர்த்தயாமத்தின் பின் பூசை திருவிழா நடத்துதல், ஆகியனவும் குற்றமாகும். ஆகம விரோதமுமாம். (சிவராத்திரியில் மாத்திரம் நான்கு யாமமும் வழிபாடு செய்யலாம்)

சமய அறிவு தருமநெறி இல்லாதவர்கள் கோயில் அதிகாரிகளாக வருவதும், சிவாகம அறிவில்லாத பூசகர்களை நியமிப்பதும் குற்றமாகும்.

## விரதங்கள்

விரதமாவது மனம் பொறிவழி போகாது நிற்றல் பொருட்டு உணவைவிடுத்தேனும் சுருக்கியேனும் மனம், வாக்கு காயம் மூன்றினாலும் கடவுளை விதிப்படி மெய்யன்போடு வழிபடுதலாம்.

சிவவிரதமாவது: சோமாவார விரதம், திருவாதிரை விரதம் உமாமகேசுர விரதம், சிவராத்திரி விரதம், கேதாரவிரதம், கலியாண சுந்தர விரதம், சூல விரதம், இடப விரதம், என எட்டாம்; பிரதோஷ விரதமும் சிவவிரதமாம்.

திருவாதிரை விரதம்: மார்கழி மாசத்துத் திருவாதிரை நட்சத்திரத்திலே சபாநாயகரைக் குறித்து அநுட்டிக்கும் விரதமாம். இதில் உபவாசஞ் செய்தல் வேண்டும். சிதம்பரத்தில் இருந்து அநுட்டித்தல் உத்தமோத்தமமாம்.

சிவராத்திரி விரதம்: மாசிமாசத்துக் கிருஷ்ண பட்ச சதுர்த்தசி திதியிலே சிவபெருமானைக் குறித்து அநுட்டிக்கும் விரதமாம். இதில், உபவாசஞ் செய்து, நான்கு யாமமும் நித்திரையின்றிச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபூசை செய்தல் வேண்டும். நான்கு யாமப் பூசையும் அவ்வக் காலங்களிற் செய்வது உத்தமம். ஒரு காலத்தில் சேர்த்துச் செய்வது மத்திமம். பரார்த்தம் ஆன்மார்த்தம் என்னும் இரண்டினும் சிவராத்திரி நான்கு யாமப் பூசையிலே சூரியதேவர் முதலிய பரிவாரங்களுக்குஞ் சோமாஸ்கந்த மூர்த்தி முதலிய மூர்த்திகளுக்கும் பூசை செய்ய வேண்டியதில்லை. பரார்த்தத்திலே மகாலிங்க முதலிய மூர்த்திகளுக்கும், ஆன்மார்த்தத்திலே மகர லிங்கத்துக்கும் மாத்திரம் பூசை செய்யக்கடவர்.

பரார்த்தம் ஆன்மார்த்தம் என்னும் இரண்டினும் விநாயகக் கடவுளுக்கு மாத்திரம் நான்கு யாமமும் பூசை செய்யலாம். சண்டேசுர பூசை நான்கு யாமமுஞ் செய்தல் வேண்டும். சிவபூசையில்லாதவர், நித்திரையின்றி ஸ்ரீபஞ்சாட்சர செபமுஞ் சிவபுராண சிரவணமுஞ் செய்து நான்கு யாமமும் சிவாலய தரிசனம் பண்ணல் வேண்டும். இதில் உபவாசம் உத்தமம். நீரேனும் பாலேனும் உண்பது மத்திமம். பழம் உண்பது அதமம். பலகாரம் உண்பது அதமாதமமாம்.

சிவராத்திரி தினத்திலே இராத்திரியில் பதினொன்கு நாழிகைக்கு மேல் ஒரு முகூர்த்தம் லிங்கோற்பவ காலம். நான்கு யாமமும் நித்திரை விழிக்க இயலாதவர், லிங்கோற்பவ காலம் நீங்கும் வரையினாயினும் நித்திரை யொழித்தல் வேண்டும். இக்காலத்திலே சிவதரிசனஞ் செய்வது உத்தமோத்தம புண்ணியமாம். சிவராத்திரி விரதம் சைவமக்கள் யாவராலும் ஆவசியம் அநுட்டிக்கத்தக்கது.

## பிரதோஷ விரதம்

சுக்கில பட்சம் கிருஷ்ண பட்சம் என்னும் இரண்டிலும் வருகின்ற திரயோதசி திதியிலே, சூரியாதஸ்மயனத்துக்கு முன் மூன்றே முக்கால் நாழிகையும், பின் மூன்றேமுக்கால் நாழிகையுமாய் உள்ள காலமாகிய பிரதோஷ காலத்திலே, சிவபெருமானைக் குறித்து அநுட்டிக்கும் விரதமாம். இவ்விரதம் ஐப்பசி, கார்த்திகை, சித்திரை, வைகாசி என்னும் நான்கு மாதங்களுள் ஒன்றிலே, சனிப்பிரதோஷ முதலாகத் தொடங்கி அநுட்டித்தல் வேண்டும்.

பகலிலே போசனஞ் செய்யாது, சூரியன் அஸ்தமிக்க நான்கு நாழிகை உண்டு என்னும் அளவிலே ஸ்நானஞ் செய்து, சிவபூசை பண்ணித் திருக்கோயிலிற் சென்று சிவதரிசனஞ் செய்து கொண்டு, பிரதோஷ காலங்கழிந்தபின் சிவனடியாரோடு போசனம் பண்ணல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதோஷ காலத்திலே போசனம், சயனம், ஸ்நானம், விஷ்ணு தரிசனம், எண்ணெய் தேய்த்தல், வாகன மேறல், மந்திர செபம், நூல்படித்தல் என்னும் இவ்வெட்டுஞ் செய்யலாகாது. பிரதோஷ காலத்திலே நியமமாக மெய்யன்போடு சிவதரிசனஞ் செய்துகொண்டு வரின், கடன், வறுமை, நோய், பயம், கிலேசம், அவமிருத்து, மரணவேதனை, பாவம் என்னும் இவைகளெல்லாம் நீங்கும். அஸ்த மயனத்துக்கு முன்மூன்றே முக்கால் நாழிகையே சிவதரிசனத்துக்கு உத்தம காலம்.

### தேவி விரதம்

தேவிவிரதம், சுக்கிரவார விரதம், ஐப்பசியுத்தரவிரதம், நவ ராத்திரி விரதம் என மூன்றும். சுக்கிரவார விரதமாவது:- சித்திரை மாசத்து சுக்கில பட்சத்து முதற் சுக்கிரவாரந் தொடங்கிச் சுக்கிர வாரந் தோறும் பார்வதி தேவியாரைக் குறித்து அநுட்டிக்கும் விரதமாம். இதில் ஒரு பொழுது பகலிலே போசனஞ் செய்யலாம். ஐப்பசி உத்தர விரதமாவது:- ஐப்பசி மாச உத்தர நட்சத்திரத் திலே பார்வதி தேவியாரைக் குறித்துச் செய்தல். இதில் பகலில் ஒரு வேளை போசனஞ் செய்யலாம்.

### நவராத்திரி விரதம்

புரட்டாதி மாசத்துச் சுக்கில பட்சப் பிரதமைமுதல் நவமிறாகிய ஒன்பது நாளும் பார்வதிதேவியாரைக் கும்பத்திலே பூசை செய்து அநுட்டிக்கும் விரதமாம். ஒன்பதாம்நாள் மகா நவமி என் றும், பத்தாம் நாள் விஜய தசமி என்றும் பெயர் பெறும். இந்த ஒன்பது நாட்களிலும் பார்வதி தேவியாரை துர்க்கை, இலக்குமி, சரஸ்வதி ஆகிய திருவுருவங்களாக உருவகித்து முறையே மும்மூன்று நாட்களில் வழிபாடியற்றுவர். இதில் முதல் எட்டுநாளும் பணிகாரம், பழம் முதலியவை உட்கொண்டு மகா நவமியில் உபவாசஞ் செய்தல் வேண்டும். விஜய தசமியில் வித்தியாரம்பம் முதலிய புதுக் கருமங்கள் செய்வர்.

### விநாயக விரதம்

சுக்கிரவார விரதம், விநாயக சதுர்த்தி விரதம், விநாயக சட்டி விரதம் என மூன்றும். சுக்கிரவார விதமாவது: வைகாசி மாசத்துச் சுக்கிலபட்சத்து முதற் சுக்கிரவாரந் தொடங்கிச் சுக்கிர வாரந் தோறும் அநுட்டித்தல். இதில் பழம் முதலியன இரவில் உட்கொள் ளலாம். விநாயகசதுர்த்தி விரதமாவது: ஆவணி மாதத்துச் சுக்கில பட்ச சதுர்த்தியிலே விநாயகரைக் குறித்து அநுட்டித்தல். இதில் ஒரு பொழுது பகலிலே போசனஞ் செய்து, இரவிலே பழமேனும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிகாரமேனும் உட்கொள்ளலாம். இத்தினத்தில் சந்திரனைப்பார்ப்பது குற்றமாகும். விநாயக சட்டி விரதமாவது: கார்த்திகை மாசத்துக் கிருஷ்ண பட்சப் பிரதமை முதல் மார்கழி மாசத்துச் சுக்கிலபட்ச சட்டியீறுகிய இருபத்தொரு நாளும் விநாயகரைக் குறித்து அநுட்டித்தலாம். இதில் இருபத்தோரிழையாலாகிய காப்பை ஆடவர் வலக்கையிலும் பெண்கள் இடக்கையிலுங் கட்டிக்கொண்டு, முதலிருபது நாளும் ஒவ்வொரு பொழுது போசனஞ் செய்து, இறுதி நாளாகிய சட்டியில் உபவாசம் இருத்தல் வேண்டும்.

சுப்பிரமணிய விரதம்

சுக்கிரவார விரதம், கார்த்திகை விரதம், கந்தசட்டி விரதம் என மூன்றும். சுக்கிரவார விரதமாவது: ஐப்பசி மாசத்து முதற் சுக்கிரவாரந் தொடங்கிச் சுக்கிர வாரந்தோறும் சுப்பிரமணியக் கடவுளைக் குறித்து அநுட்டித்தலாம். இதில் உபவாசம் உத்தமம். அது கூடாதவர் இரவிலே பழம் முதலியன உட்கொள்ளலாம். அதுவும் இயலாதவர் பகலிலே ஒரு பொழுது போசனஞ் செய்யக் கடவர். இவ்விரதம் மூன்று வருடகாலம் அநுட்டித்தல் வேண்டும். கார்த்திகை விரதமாவது: கார்த்திகை மாசத்துக் கார்த்திகை நட்சத்திரம் முதலாகத் தொடங்கி கார்த்திகை நட்சத்திரந்தோறும் அநுட்டித்தலாம். இதில் உபவாசம் உத்தமம், அது கூடாதவர் பழம் ஆதியன இரவில் உட்கொள்ளலாம். இவ்விரதம் பன்னிரண்டு வருடகாலம் செய்துவரல் வேண்டும். கந்த சட்டி விரதமாவது: ஐப்பசி மாசத்துச் சுக்கிலபட்சப் பிரதமை முதற் சட்டியீறுகிய ஆறு நாளுஞ் சுப்பிரமணியக் கடவுளைக் குறித்து அநுட்டித்தல். இதில் ஆறுநாளும் உபவாசஞ் செய்வது உத்தமம். அது கூடாதவர் முதல் ஐந்து நாளும் ஒவ்வொரு பொழுது உண்டு, சஷ்டியில் உபவாசஞ் செய்யக்கடவர். இவ்விரதம் ஆறுவருட காலம் அநுட்டித்தல் வேண்டும்.

## குரு லிங்க சங்கமம்

சிவபிரான் 'ஆன்மாக்கள் செய்யும் வழிபாட்டை ஏற்று அருள் செய்யும் சாதனங்களுள் குரு லிங்க சங்கமம் ஆகிய மூன்றும் இடம் பெறுகின்றன. இறைவன் குருவடிவாகவும், லிங்கம் முதலிய திருக்கோலங்கள் வாயிலாகவும், சங்கமமாகிய சிவனடியார் திருக்கூட்ட வாயிலாகவும் அருள் புரிவான்.

குரு :- குரு என்ற சொல் பாசத்தை நீக்குபவர் என்ற பொருள் தருகிறது. எனவே மயக்கம், தெளிவின்மை, உண்மையுணராமை, போன்றவற்றிற்குக் காலாகிய பாசத்தை நீக்க குரு அருள் அத்தியாவசிய மாகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாத்திரபோதனை, செய்பவர் அனைவரும் குரு எனக்கொள்ளத் தக்கவரே. சிறப்பாக ஆன்மாவைப் பிடித்திருக்கும் ஆணவ மலத்தை வலிகெடுத்தருள்வதற்காகச் சிவபெருமானே குருவடிவு தாங்கி வருவர் என்பது சைவசித்தாந்தத் துணிபாகும். குரு தீட்சை மூலம் மலபரிபாகஞ் செய்வர். தீட்சைகள் நயன தீட்சை பரிச தீட்சை மானசதீட்சை, சாத்திர தீட்சை, வாசக தீட்சை, யோகதீட்சை ஔத்திரி தீட்சை எனப்படும். சமய தீட்சை சரியை வழி நிற் போர்க்கும் விசேட தீட்சை கிரியை யோகவழி நிற்போர்க்கும் நிர்வாண தீட்சை ஞானவழி நிற்போர்க்கும் குருவினால் தரப்படு கின்றன.

இலிங்கம்: ஆன்மாக்களும் உலகங்களும் லிங்கத் திருமேனியி[illegible] ஒடுங்கவும் தோன்றவும் செய்கின்றன. அருவத்திருமேனிகளாகிய சிவ[illegible] சக்தி, நாதம், விந்து நான்கையும் நிட்களலிங்கம் என்றும் மகேசுரன், திருமால், பிரமன், உருத்திரன், ஆகிய உருவத்திருமேனிகள் நா[illegible] கையும் சகளலிங்கம் என்றும் கூறுவர். திருக்கோயிலில் உள்ள விக்கி ரகங்கள் அனைத்தையும் சிவமாகவே கருதிவழிபட வேண்டும். சிவ லிங்கவடிவம் முக்கியமானது. இதன் அடிப்பாகம், ஆவுடையார், என் றும் மேற்பாகத்தில் நீண்டு உருண்டு இருக்கும் தண்டு 'பாணம்' அல் லது இலிங்கம் என்றும் சொல்லப்படும்.

சிவபெருமான் ஆன்மாக்களுக்கு அருள் செய்யும் பொருட்டு எழுந்தருளியிருக்கும் சிவலிங்கம் பரார்த்தலிங்கம்' எனவும் குருவி னால் சீடனுக்கு ஆன்மார்த்த பூசைக்காக எழுந்தருளிவித்துக் கொடுக்கப்படும் லிங்கம் இட்டலிங்கம், ஆன்மார்த்தலிங்கம் எனவும் கொள்ளப்படும்.

பரார்த்தலிங்க வகை ஐந்து :- தானே தோன்றியது சுயம்பு லிங்கம். சிவகணர்களாகிய விநாயகர், சுப்பிரமணியர், முதலியோரால் தாபிக்கப்பட்டது காணலிங்கம். மால், பிரமன் போன்ற தேவர்க ளால் வழிபடப்பட்டது தெவிகலிங்கம். இருடிகள் அசுரர் போன் றோரால் தாபிக்கப்பட்டது ஆருடலிங்கம். மானிடர்களால் தாபிக்கப் பட்டது மானுடலிங்கம்.

இட்டலிங்கம்:- வாணலிங்கம், படிதலிங்கம், இரத்தினலிங்கம் க்ஷணிகலிங்கம் எனப் பலவகைப்படும்.

சதாசிவரூபமாகிய லிங்கத்திலிருந்து முத்தொழிலும் நடத்த லால் சிவலிங்கம் மும்மூர்த்திகளையும் அடக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சங்கமம்:—** சங்கமம் என்பது சிவனடியார் திருக்கூட்டம். சிவனடியார்கள் சிந்தை சிவனாய் இருப்பதால் சிவனையே ஒப்பர் என்பர். சிவனடியார் பெருமை பேசும் சிறந்த சைவத் தமிழ்க் காப்பியம் பெரியபுராணம். சிவனை எமக்கு என்றும் நினைவு படுத்துவதாலும் இறைவனின் தன்மைகளை இவர்களிடத்தில் நாம் காணக்கூடியதாக இருப்பதாலும் எமது வணக்கத்துக்கு உரியவர்கள். சிவனடியார் சேர்க்கை இருக்கும் போது ஆணவ முனைப்பு அற்று சிவனை நினைப்பற நினைக்கும் பேறு கிட்டும் என்பதை உணர்த்தவே மணிவாசகப் பெருமான் "உன் அடியார் நடுவிருக்கும் அருளைப் புரியாய்" என்று வேண்டுகின்றார்.

இவர்கள் பெருமையைச் சேக்கிழார் பெருமான் ...சுருக்கும் வகையில் போற்றுகிறார். பஞ்சபூதங்கள் நிலை தடு...னாலும், மாதோர் பாகன் மலர்த்தாள் மறக்காதவர்கள் என்...ஓடும் செம்பொன்னையும் ஒரு விதமாகவே கணிக்கும், பற்று அற்ற ... என்றும் சிவபெருமானை வழிபடுவதைத் தவிர வேறு எதையும் வேண்டாத விறலினர் என்றும் கூறுகிறார். இவர்கள் கூட்டத்தைப் புனிதர் பேரவை என விளிக்கிறார். அடியார் பெருமையை சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குத் திருவாரூர் தியாகராசர் அறிவிப்பதாகச் சேக்கிழார் பெருமான் கூறும்.

"பெருமையால் தம்மை ஒப்பார் பேணலால் எம்மைப் பெற்றார். ஒருமையால் உலகை வென்றார் — இருமையும் கடந்து நின்றார்" எனும் தெய்வத் தமிழ்ப் பதங்கள் சிந்தை கொள்ளத்தக்கன. சிவனடியார் பெருமையை, அவர்களை நாளும் ஆட்கொள்ளும் நம்பர் தான் அளக்கவல்லார் என்ற சேக்கிழார் பெருமான் கூற்றும் நினைக்கத்தக்கது. இதனையே ... கண்டார் சுருக்கமாக,

"அம்மலங்கழீஇ அன்பரொடு மரீஇ
மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரனெனத் தொழுமே" என்கிறார்.

## சமயதீட்சை

தீட்சைகளின் வகையும் குருவின் தன்மையும் முன்பு விளக்கப்பட்டுள்ளது. சமயதீட்சை சரியைவழி நிற்போர்க்கு உரியதாகும்; சைவசமயிகட்கு ஸ்ரீபஞ்சாட்சர செபம் கட்டாயமானது. எனப்படுவதாலும் இச் செபம் செய்வதற்கு அதிகாரம் குருவினால் சமயதீட்சை பெறும் போதே கொடுக்கப்படுவதாலும் சமய தீட்சை இன்றியமையாத தொன்றாகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயதீட்சை பெறுவோர் ஒழுக்க சிலராய், மதுமாமிசமின்றி ஆசாரம் உடையவர்களாய் இருத்தல் அவசியம். சமய தீட்சை பெறுபவர்கள் குருவின் கட்டளைப்படி சந்தியாவந்தனம் செய்யக் கடவர். இவர்களே சிவத்தொண்டு செய்ய உரிமையுடையவர்கள் என்றும் சொல்லப்படுகிறது. சமய தீட்சை வைகாசி ஐப்பசி, கார்த்திகை மாசங்களில் பெறுவது உத்தமமாகும். ஆண்பெண் இருபாலாரும் உரியவர்களின் உத்தரவுப்படி 7 வயதிலாவது 9 வயதிலாவது பெற்றுக் கொள்வது உத்தமமாகும்.

## சைவ நாற்பாதம்

இறைவன் திருவடிப் பேற்றை அடைதற்குரிய பாதங்களைச் சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்காக வகுத்துள்ளனர். ஒவ்வொரு பாதங்களிலும் உபாயநிலை, உண்மைநிலை என இருவகை உண்டு. உலக இன்பங்களைப் பெறுவதற்குச் செய்யப்படுவதை உபாயநிலை என்றும், முத்தியின்பத்தை வேண்டிச் செய்யப்படுவதை உண்மைநிலை என்றும் கூறுவர். உபாயநிலை உண்மை நிலைக்கு உறுதுணையாவதை மறுத்தற்கில்லையாகையால் இருநிலைகளும் வேண்டப்படுவனவே.

சரியை: புறத்தாலும், அகத்தாலும் வழிபடுதல் சரியை ஆலயத் தொண்டு சிவனடியார்களுக்குச் செய்யும் தொண்டு புறத்தொண்டு என்றும் மானசமாக செய்யப்படும் பாராயணம் போன்றவற்றை அகத் தொண்டு என்றும் கொள்ளலாம்.

சரியை வழிபாடியற்றுபவர்கள் சாலோகமுத்தி பெறுவர் எல்லா உலகங்களிலும் சஞ்சரிக்கும் உரிமை இவர்களுக்கு உண்டு. இதைத் தாசமார்க்கம் என்றும் கூறுவர். எசமானின் அன்புக்குப் பாத்திரமானவன் வீட்டில் எப்பகுதிக்கும் தடையின்றிச் செல்லும் உரிமை உடையதனுதல் போல இறைவனின் தாசன் எங்கும் சஞ்சரிக்கும் உரிமை பெறுகிறுன்.

கிரியை: சிவலிங்கப்பெருமானை அகத்தும் புறத்தும் பூசித்தல் கிரியை. மலர்கள், தூபதீபம், திருவமுது தயாரித்தல், வழிபடல் இதனுள் அடங்கும். கிரியை வழிபாடியற்றுபவர்கள் சாமீபமுத்தி பெறுவர். எல்லா உலகத்தும் சஞ்சரிக்கும் தகுதியுடன் அவ்வவ்வுலகத் தலைவர்கள் பக்கத்திருக்கும் உரிமையும் உடையவர் என்பது கருத்து; இதைச் சற்புத்திரமார்க்கம் என்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோகம் :

சிவத்தியானத்தின் முயற்சியால் தியானிப்பவனும் தியானமும், தியானப்பொருளாகிய சிவம் மட்டுமே ஆகி நிற்றல் யோகம் என லாம். இது இயமம், நியமம், ஆசனம், பிராணுயாமம் பிரத்தியா காரம், தாரணை, தியானம், சமாதி என எட்டுவகைப்படும். இவற் றுள் முதல் நான்கும் யோகத்திற் சரியை எனவும், அடுத்த இரண் டும், யோகத்திற் கிரியை எனவும், தியானம் யோகத்தில் யோகம் எனவும் சமாதியோகத்தில் ஞானம் எனவும் கொள்ளப்படும்.

யோகவழி நிற்பவர்கள் சாரூபமுத்தி பெறுவர். அவர்கள் சகல உலகங்களிலும் சஞ்சரித்தல், தலைவர்களின் பக்கத்திருத்தல் என்ப வாடு அத்தலைவர்களின் தோழர்களாய் அவர்கள் தன்மைகளைத் [illegible]மும் பெறும் உரிமை உடையவர்கள். இதைச் சகமார்க்கம் [illegible]றும் கூறுவர்.

[illegible]னம்:

[illegible]ஞான நிலையாம் அறிவு நிலையில் இறைவனைச் சச்சிதானந்த [illegible]பியாய் அறிந்து அறிவுத் தொழிலாலே வணங்குதல் ஞான [illegible]ாகும். இந்நெறி ''சன்மார்க்கம்'' எனவும், அடையும் முத்தி ''சாயுச்சியம்'' எனவும் கூறுவர். சாயுச்சியம் என்பது இறைவனோடு இரண்டறக் கலந்து நிலையான சிவானந்தத்தில் பெறும் பரமுத்தி யாகும். இதுவே யாவினும் மிக உயர்ந்த நிலையாகும்.

இந்த நான்கு பாதங்களையும் முறையே தாசமார்க்கம், புத்திர மார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் எனவும் கூறுவர்.

குறிப்பு:

நாயன்மார் நால்வரும் இம்மார்க்கங்களை வாழ்ந்து காட்டியவர் கள் என்று கொள்ளப்படுவதாலும், சரியையிலும் கிரியை நிலை உயர்ந் தது எனப் பொதுவாகக் கொள்ளப்படுவதாலும், நால்வர் பெரு மக்களும் அடைந்த முத்தி தரத்தால் வேறுபட்டவை எனக் கருதப்படக் கூடாது. எப்படி எனின் ஒவ்வொரு பாதமும் தம்முள் நான்காய் விரியும். சரியை நிலையிலேயே சரியையிற் சரியை, சரியை யிற் கிரியை, சரியையில் யோகம், சரியையில் ஞானம் எனும் நிலைக ளையும் அடையலாம் என்பது சாத்திர உடன்பாடு. எனவே நாயன் மார்கள் ஒவ்வொரு நிலைகளை எமக்கு அறிவுறுத்தற்காக அவ்வவ் நிலையில் வாழ்ந்து காட்டினார்களே தவிர உண்மையில் ஞான நிலையி லேயே நின்று பரமுத்தி எய்தினர் எனக் கொள்வதே சாலப் பொருந் துவதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

உமாபதி சிவாசாரியார் அருளிச் செய்த

# திருவருட் பயன்

திருவருட்பயன் என்பது திருவருளின் பயனை விளக்கும் நூல் என விரியும். இந்நூலின் முதல் ஐந்து அதிகாரம் திருவருளைப்பற்றியும், மற்றைய ஐந்து அதிகாரம் திருவருளின் பயனைப் பற்றியும் கூறுவன. முதல் ஐந்தும் முறையே திருவருளைக் கொடுக்கும் பதியின் தன்மையையும், திருவருளைப் பெறும் உயிரின் தன்மையையும் திருவருளால் நீக்கப்படும் மலத்தின் தன்மையையும், திருவருளின் தன்மையையும், பேரருளின் வடிவாகிய குருவின் தன்மையையும் விளக்கும். பின்னைந்தும் முறையே, ஆன்மா வானது பேரருளாற் பேரறிவைப் பெறும் முறைமையையும், அதனுல் மலத்தினின்று நீங்கும் முறைமையையும், அதனுற் பேரானந்தத்தைப் பெறும் முறைமையையும், பேரானந்தம் பெற்றோர் சீவன் முத்தராயின் அவரது வாசனுமலத்தைக் கெடுக்கும் ஐந்தெழுத்தோதும் முறைமையையும், சீவன்முத்தரது தன்மையையும் கூறுவன.

காப்பு

நற்குஞ் சரக்கன்று நண்ணிற் கலைஞானங்
கற்குஞ் சரக்கன்று காண்.

[நல் குஞ்சரக் கன்று நண்ணில், கலைஞானம் கற்கும் சரக்கு அன்று; காண்.]

பதவுரை:—நற்குஞ்சரம் - நல்லருளைப் பொழிவதும் யானைமுகத்தைப் போன்றதுமான பிரணவத் திருமுகத்தையுடையவரும், கன்று - எப்போதும் இளமையா யுள்ளவருமாகிய விநாயகக்கடவுளை, நண்ணில் (ஒருவர் மனத்தினுலும், சொல்லினுலும், உடம்பினுலும்) வழிபடுவராயின் (அவருக்கு), கலைஞானம் - ஞானசாத்திரம், கற்கும் சரக்கு அன்று - வருந்திக் கற்கவேண்டிய பண்டம் அன்று; ஆதலால், அவருடைய திருவடியை வழிபடும் அடியேன் செய்யும் ஞானநூல் எவ்வகையாலும் தவறின்றி இனிது முடிக.

பிரணவத்திலுள்ள நாதத்துக்கு வரிவடிவு கீறு; விந்துவுக்கு வரிவடிவு சுழி. இந்தக் கீறுஞ் சுழியும் சேரும்போது யானையினது துதிக்கையை ஒத்த வடிவம் உண்டாகும். விநாயகக் கடவுளின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரூபம் பிரணவமாதலால், அதன் பகுதிகளாகிய நாதமும் விந்துவும் விநாயக மூர்த்தியின் துதிக்கையாகின்றன. அதனால், விநாயகக் கடவுளின் திருமுகம் யானைமுகத்தைப் போன்றிருக்கின்றதெனக் கூறுவர். பிள்ளையார் சுழி எனப்படும் உ என்னும் எழுத்தும் நாத விந்துக்களின் வரிவடிவமாம். அவை பாம்பினுடைய உடலையுந் தலையையும் ஒத்திருத்தலாற்போலும், அவற்றிற்குக் காரணமாகிய குண்டலினிசத்தி பாம்பென்று ரூபிக்கப்படுகின்றது. சிவபெருமான் அணிந்திருக்கும் பாம்பு குண்டலினி சத்தியென்று ஆகமங் கூறுகின்றது. இவற்றின் விரிவைப் பின்னே காண்க.

[சரக்கு - பண்டம் - பொருள்]

## முதல் அதிகாரம் — பதிமுதுநிலை

அஃதாவது மேலாகிய கடவுளின் இயல்பு

### கடவுளின் இயல்பு

**அகர வுயிர்போ லறிவாகி யெங்கும்**
**நிகரிலிறை நிற்கு நிறைந்து.**

[அகர உயிர்போல் நிகரில் இறை, அறிவு ஆகி எங்கும் நிறைந்து நிற்கும்.]

ப—ரை: அகர உயிர்போல் - அ என்னும் ஒலியானது மற்றைய எழுத்துக்களுக்கு முதலாய் அவற்றில் வேறறக் கலந்திருப்பது போல, நிகரில் இறை-ஒப்பற்றவராகிய முதல்வர், எங்கும் நிறைந்து (அறிவுள்ளனவும் அறிவில்லாதனவுமாகிய பொருள்கள்) எல்லாவற்றிலும் வேறறக் கலந்து, அறிவாகி - அறிவே வடிவமாகி, நிற்கும் - தொடக்கமும் முடிவுமின்றி நிற்பர்.

அகரவுயிரிலுள்ள அங்காப்போசையின்றி ஏனைய எழுத்துக்கள் தோற்றமாட்டா. அதுபோல முதல்வனின்றி ஆன்மாக்கள் இயங்கமாட்டா. அன்றியும் அங்காப்போசை ஏனைய எழுத்தோசைகளில் வேறற நிற்பது போல, முதல்வன் ஆன்மாக்களில் வேறற நிற்பன்.

[அங்காத்தல் - வாய்திறத்தல்]

### சிவசத்தியின் தன்மை

**தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தருஞ்சத்தி**
**பின்னமிலா னெங்கள் பிரான்,**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ப—ரை: தன் நிலைமை - (மனவாக்குக் கெட்டாததும் மல பந்த மில்லாததும் பேரானந்தமானதும் ஆகிய) தமது ஒப்பற்ற நிலையை, மன் உயிர்கள் - நிலைபெற்ற ஆன்மாக்கள் யாவும், சாரத் தருஞ் சத்தி பின்னம் இலான் - பொருந்தும்படி அருளுகின்ற சத்தி யின் வேறுகாதவர், எங்கள் பிரான் - எமது இறைவராகிய சிவ பெருமான்.

[பின்னம்—பிரிவு]

ஆன்மாக்கள் என்றுமுள்ளவையாதலால் மன்னுயிர் என்றார். நெருப்பின் சூடு நெருப்பின் வேறுகாததுபோல, சிவசத்தி சிவத் தின் வேறுகாததாம், இதை "மூலமாகிய மும்மலமறுக்கும் தூய மேனிச் சுடர்விடு சோதி" என வரும் திருவாசகத்திலுங் காண்க. உயிர்கள் சத்தியினது தொழிலினுல் அறிவாகிய சிவத்தின் நிலைமை யை அடையுமென்றதனுலே, அவற்றினறிவு தடைப்பட்டுள்ளதென் பதும், அதைத் தடுப்பதாகிய மலமுண்டென்பதும், அந்த மலத்தைக் கெடுப்பது சிவசத்தியென்பதும் பெறப்பட்டன. ஆசிரியர் சைவசித் தாந்த உண்மை முழுவதையும் இவ்விரு திருக்குறளினும் தொகுத்துக் கூறி, மேல்வருந் தொண்ணூற்றெட்டுத் திருக்குறளினும் விரித்துக் கூறியருளுகின்ருர்.

வறுத்தல் அவித்தல் பொரித்தல் முதலிய பலவகைப் பாகத் தொழில்களை நெருப்பினது சூடு செய்வது போல, படைத்தல் காத் தல் முதலிய தொழில்களைச் சிவபெருமானுடைய சத்திசெய்கின்றது. வெவ்வேறு தொழில்களைச் செய்யும்போது நெருப்பின் சூடு வெறுபடு வதன்று. ஒரு பொருள் சூட்டை நெய்யோடு பெறும்போது பொரிக் கப்படுதலும், நீரோடு சேரும்போது அவிக்கப்படுதலும், சட்டியோடு நேரே சேரும்போது வறுக்கப்படுதலுங் காண்கிருேம், இந்த வேறுபாடுகள் இந்தப் பொருள்கள் வெவ்வேறு பொருள்களோடு சேருவதால் வருவன. ஆயினுஞ் சூடு ஒன்றேயாம். இதைப்போ லவே ஆன்மாக்களுக்காகச் செய்யப்படுவனவாகிய படைத்தல் காத் தல் முதலிய தொழில்கள், அவைகள் சேர்ந்து நிற்கும் ஆணவம் கன்மம் மாயை ஆகிய இவற்றின் வேறுபடுந் தன்மைகளினுல் உன் டாகும் பேதங்களாம். அருட்சத்தியின் வேறுபாட்டினுல் வருவன வல்ல, ஆகவே சிவபெருமான் ஒரு மாறுதலுமடையாமல் நிற்பது போலவே, அவருடைய சத்தியும் ஆன்மாக்களை ஈடேற்றும் முயற்சி களில் ஒரு மாறுதலும் அடையாமல் நிற்கின்றது.

ஆயினும் தொழில் வேறுபாட்டினுலே சிவசத்திக்குப் பராசத்தி, ஆதிசத்தி, இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியாசத்தி என்றற்ருெடக்கத் தனவாகப் பல பெயர்களுண்டு. இவற்றுட் பராசத்தி அருளலைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யும்; ஆதிசத்தி ஆன்மாக்களின் மலம் பக்குவப்படுதற்காக ஆரணி, ரோதயித்திரி, ஜநநீ என்னும் சத்திகளைக்கொண்டு ஏனைய நான்கு தொழில்களையும் செய்விக்கும். இவ்வைந்து தொழில்களையும் நியமித்து, அறிந்து, செய்யும் சத்திகள் முறையே இச்சாசத்தியென்றும், ஞானசத்தியென்றும், கிரியாசத்தியென்றும் சொல்லப்படும்.

இவைகளேயன்றி ஈசானம் முதற் சத்தியோசாதம் ஈருகிய பஞ்ச சத்திகளாயும் நிவிர்த்திமுதற் சாந்தியதீதை யீருகிய பஞ்ச சத்திகளாயும், பிறவாயும் சிவசத்தி வரும். (2)

## சிவத்தின் பெருமை

பெருமைக்கும் நுண்மைக்கும் பேரருட்கும் பேற்றி
னருமைக்கு மொப்பின்மை யான்.

ப—ரை; பெருமைக்கும் - (சிவபெருமானனவர்) நிறைவினுலும், நுண்மைக்கும் - அறிதற்கருமையினுலும், பேர் அருட்கும் - மிகுந்த அருளினுலும், பேற்றின் அருமைக்கும் - ஒருவராற் பெறுதற்கருமையினுலும், * ஒப்பின்மையான் - தமக்கு ஒப்பில்லாதவர்.

## சிவத்தின் அருட்செயல்கள்

ஆக்கி யெவையு மளித்தா சுடனடங்கப்
போக்குமவன் போகாப் புகல்

[எவையும் ஆக்கி, அளித்து (அழித்து), ஆசு உடன் அடங்கப் போக்கும் அவன், போகாப் புகல்.]

---

* சில புறச்சமயங்கள் கடவுளை அடைதல் இலகுவான செயல் என்று கூறும், இப்படிக் கூறுவதே அவைகள் பொய்ச்சமயம் என்பதற்குச் சாட்சியாம். யோக்கியமான சர்வகலாசாலைகளில் உயர்ந்த பட்டங்களைப் பெற விரும்புவோர் இடைவிடாது படித்தல்வேண்டும். அயோக்கியமான பாடசாலைகளில் அற்ப படிப்புமின்றிப் பணங் கொடுத்துப் பெறப்படும் உயர்ந்த பட்டங்கள் வீண்பட்டங்களாதல் போலச் சாதனையின்றி இலகுவாக அடையுங் கதிகளும் அக்கதிகளுக்குத் தலைமையையுடைய கடவுளென்று சொல்லப்படும் பொருள்களும் வீண்பொருள்களாம். கடவுள் அடைதற்கரியர் என்று சொல்லி, அடைதற்கு வேண்டிய சாதனங்கள் எல்லாவற்றையுந் தருஞ் சமயமே சற்சமயமாம், (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ப—ரை: எவையும் ஆக்கி - உயிர்களெல்லாவற்றையும் தோற்றுவித்து, அளித்து - காத்து மறைத்து, ஆசு உடன் அடங்கப் போக்கும் அவன் - (சர்வ சங்காரத்தில்) ஆணவ மலத்தோடு கேவலமாய் நிற்க ஒடுக்கி ஆணவ மலத்தோடு மற்ற மலங்களையும் ஒருங்கே போக்கி அருளைச் செய்யுங் கடவுள், போகாப் புகல்-எக்காலத்தும் உயிர்களுக்கு நீங்காத ஆதாரமாயுள்ளவர்.

[ஆசு—குற்றம்—ஆணவம்]

மலத்தை நீக்கி ஆன்மாக்களுக்குச் சிவத்தின் நிலைமையைக் கொடுத்தலே ஐந்தொழிலின் நோக்கம். இவ்வைந்தொழில் தூலம் சூக்குமம் என இருவகைப்படும், இவற்றுள் தூல பஞ்சகிருத்தியமானது மகா பஞ்ச கிருத்தியம் நித்திய பஞ்ச கிருத்தியம் என இருவகைப்படும். மகா பஞ்சகிருத்தியத்தில் படைத்தலாவது உலகங்களையும் ஆன்மாக்களின் மூவகைச் சரீரங்களையும் (தூலம், சூக்குமம், காரணம்) தோற்றுவித்தல்; காத்தல் அவைகளை நிலைபெறச் செய்தல்; அழித்தலாவது தோற்றுவித்துக் காத்த அவற்றை மூல காரணமாகிய மாயையிலே ஒடுக்குதல். மறைத்தல் ஆணவ மலத்தின் வீரியத்தை முற்றாகத் தடுத்தல்; அருளல் சர்வசங்கார காலத்திலே பக்குவமுள்ள ஆன்மாக்கள் யாவற்றிற்கும் ஒருங்கே முத்தி கொடுத்தல். படைத்தலும் காத்தலும் ஆன்மாக்கள் கர்மத்தை அனுபவித்து ஆணவ மலத்தைப் பரிபாகப் படுத்தற்கும். அழித்தல் ஆன்மாக்கள் இளைப்பாறுதற்கும் கர்மமலம் பரிபாகப்படுதற்கும் செய்யப்படுவன.

நித்திய பஞ்சகிருத்தியத்தில்: படைத்தலாவது ஆன்மாக்களுக்குத் தூலசரீரங்களைக் கொடுத்தல்; ஒரு ஆன்மாவின் கர்மங்களுள் எவற்றின் பலனை அனுபவித்தல் அதற்குச் சிறந்த நன்மையைக் கொடுக்கத் தக்கதோ அவற்றின் பலனை அனுபவித்தற்குத் தக்க சரீரங் கொடுக்கப்படும். அந்தக் கர்மங்களுக்குப் பிராரப்தம் என்று பெயர். பிராரப்தத்தை அனுபவிக்கும் வரையும் தூல சரீரத்தை நிலைப்படுத்தல் காத்தல் எனப்படும் ஆன்மா அந்த உடம்போடு இருக்கும்போது பிராரப்தம் அனுபவிக்கப்பட்டுத் தொலைக்கப்படுவது மன்றி, அது அனுபவிக்கப்படும்போது ஆணவ முனைப்பினுற் புதுக் கர்மஞ்செய்யப்படுகின்றது; இப்புதுக் கர்மம் ஆகாமியமெனப்படும். ஆணவத்தை முயற்சிப்பண்ணிக் கர்மத்தை அனுபவிப்பித்து ஆணவ வலியைக் கெடுத்தல் மறைத்தல் எனப்படும். பிராரப்தம் முடிந்தவுடனே ஆன்மா தூல உடம்பிலிருந்து பிரிக்கப்படுகின்றது. இவ்வாறு பிரித்தல் அழித்தல் எனப்படும். ஆணவம் முற்றாக வலிகெட்ட பின்பு ஆன்மாவிற்குக் கர்மம் புதிதாக உண்டாகாது; வேறு சரீரமுந் தேவையில்லை. ஆதலால் ஆணவம் வலியற்றுப் போகக் கர்மமலமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாயாமலமும் அப்பிறவியோடு நீங்குகின்றன. இப்படியே கடவுள் மும்மலங்களையும் நீக்கி ஆன்மாவைச் சிவமாக்கிப் பேரின்பத்தைக் கொடுத்தல் அருளல் எனப்படும்.

சூக்கும ஐந்தொழிலாவன சங்காரத்தின் பின்னர், ஆன்மா கேவல நிலையிலிருக்கும்போது செய்யப்படுவனவாம்.

இந்த ஐந்து தொழில்களும் கடவுளுடைய சந்நிதி மாத்திரத்தில் நடைபெறுகின்றன. இவைகள் நடைபெற வேண்டுமென்று அவர் எண்ணுவதுமில்லை, ஒரு காரியம் தடைபெற வேண்டுமென்றெண்ணுவது விகாரம், கடவுள் நிர்விகாரி.

கடவுள் இவ்வைந்து தொழில்களையுஞ் செய்து பெறுதற்கரிய தமது திருவடியைக் கொடுக்கின்றார் என்பதும், ஆன்மாக்களெல்லாம் எல்லா நிலைகளிலும் அவரிலே இருக்கின்றன என்பதும் இச் செய்யுளாற் பெறப்பட்டன. (4)

## அருட்செயல்களை நடத்தும் திருமேனிகள்

**அருவு முருவு மறிஞர்க் கறிவா**
**முருவு முடையா னுளன்.**

[உடையான், அருவும் உருவும் அறிஞர்க்கு அறிவாம் உருவும் உளன்,]

ப—ரை: அருவும் - சிவம், சத்தி, நாதம், விந்து ஆகிய நான்கு அருவத் திருமேனிகளும், உருவும் - மகேசுரன், உருத்திரன், மால், அயன் ஆகிய நான்கு உருவத் திருமேனிகளும், அருவும் உருவும் - சதாசிவனென்னும் அருவுருவத் திருமேனியும், அறிஞர்க்கு - ஞான மார்க்கத்தார்க்குரிய, அறிவாம் உருவும் - ஞானவடிவமும், உடையான் - எமது தலைவராகிய சிவபெருமான், உளன் - உடையவர்.

[அறிவாம் உரு—ஞானரூபமாகிய மந்திரத் திருமேனி]

சிவபெருமானுடைய திருமேனிக்கு லிங்கம் என்று பெயர், லிங்கம் என்பதன் பொருள் ஆன்மாக்களும் உலகங்களும் ஒடுங்குதற்கும் தோற்றுதற்குமான இடம். லிங்கம் = லி + கம், லி = லயம் = ஒடுங்குதல். கம் = போதல் = தோன்றுதல், மேலே சொல்லப்பட்ட நான்கு அருவத் திருமேனிகளும் நிஷ்கள லிங்கமென்றும்: உருவத் திருமேனிகள் சகள லிங்கமென்றுஞ் சொல்லப்படும். ஒன்பது திருமேனிகளும் ஐந்து தொழில் செய்தற்கும், சரியை கிரியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோகங்களில் நின்றோர் தியானித்தற்கும் உரிய சிவசத்தி வடிவங்களாம், இதை ''படைப்பாதித் தொழிலும் பத்தர்க் கருளும் பாவனையும்'' என்பதனுல் அறிக.

பரமசிவன்: இருவகைப் பிரபஞ்சங்களும் ஒடுங்கிய பின்னர் யாவற்றையும் பொதுமையில் நோக்கி நிற்பவர்.

சிவம்: சர்வ சங்காரத்தின் பின் இருவகைப் பிரபஞ்சங்களும் மீளத் தோன்றுமாறு குறித்து ஞானசத்தி மாத்திரையால் நோக்கி நிற்பவர்; இவருக்குப் பரநாதம் என்ற பெயருமுண்டு.

சத்தி: மேலே சொல்லிய சிவத்தின் சத்தி; பரவிந்து என்றும் பெயர்.

நாதம்: சூக்குமமான இச்சா ஞானக் கிரியைகளோடு நின்று சூக்கும ஐந்தொழில் செய்பவர். அபரநாதம் என்றும் பெயர்.

விந்து; நாதத்தின் சத்தி; அபரவிந்து என்றும் பெயர்,

சதாசிவம், தூல இச்சா ஞானக் கிரியைகளோடு நின்று இருவகைப் பிரபஞ்சங்களும் தோற்றுதற்கு மூலகாரணராயுள்ளவர்.

மகேசுரன்: சுத்தப் பிரபஞ்சங்களைத் தோற்றுவித்துத் தொழில் செய்பவர்.

உருத்திரன், மால், அயன்: அசுத்த மாயையில் தொழில் செய்பவர்,

இவ்வொன்பது பேதங்களுள் சத்தியும் விந்துவும் சத்திபேதங்களாம். சிவத்திலிருந்து சத்தியும், நாதத்திலிருந்து விந்துவும் தோன்றியதால், தோற்ற முறைமைபற்றி இவைகளும் சேர்த்து எண்ணப்பட்டன. இவைகளிரண்டும் ஒழிந்த ஏழுமே சிவபேதமாதல் போல, மனோன்மனி, மகேசை, உமை, திரு, வாணியாகிய ஏழும் சத்திபேதங்களாம்.

மகேசுரர் முதலான உருவத் திருமேனிகளை சரியாவான்கள் பூசிப்பர். சரியாவான்கள் ஞானத்திற் குறைந்தவராதலாற் கை, கால் முதலிய அவயவங்களுடைய திருமேனிகளையே வழிபடத்தக்கவராவர். ஆதலால் இந்தத் திருமேனிகளுக்கு அவயவங்கள் கற்பிக்கப்பட்டன சதாசிவத் திருமேனி கிரியாவான்களாற் பூசிக்கப் படுவது. அதற்கு ரூபம் சிவலிங்கம்; சிவலிங்கத்துக்கு ரூபமிருப்பினும், அவயவங்களில்லாமையால் அது ரூபாரூப மெனப்படும். சிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலிய நாலும் யோகிகளால் தியானிக்கப்படுவன. உருவத் திரு மேனிகளுக்குக் கற்பிக்கப்பட்ட தலை, கை, கால் முதலிய அவயவங் கள் உள்ளபடி அருள்வடிவமாம்.

ஈசானம் முதலிய ஐந்து திருமந்திரங்களும் அருளல் முதலிய ஐந்தொழில்களையுஞ் செய்யும் திருவருள். சிகை, சுவதந்திரசத்தி சிரசு நித்திய திருப்தி. இருதயம், அஸ்தித்துவம். கண்கள் சகத்துக்கு மூலமாயிருக்கிற சத்தி. அஸ்திரம் அடியாரது அஞ்ஞானத்தை நீக்கும் சத்தி. கவசம் இரட்சிக்கும் சத்தி அவருடைய திருக்கரத் துள்ள சூலம் ஆரணி முதலிய மூன்று சத்திகள். மழு - சத்தியம். வாள் - கீர்த்தி. நாகம் - குண்டலினி சத்தி. நெருப்பு - பாச சங்காரம். சந்திரன் - முற்றறிவு. மான் - வேதம். (5)

## அத்திருமேனிகளைத் தோற்றுவிப்பவர் அவரே

**பல்லா ருயிருணரும் பான்மையென மேலொருவ**
**னில்லாதா னெங்க ளிறை**

[பல் ஆர் உயிர், உணரும் பான்மை என, மேல் ஒருவன் இல்லா தான் எங்கள் இறை.]

ப—ரை; பல் ஆர் உயிர் - அளவில்லாதனவாய் எங்கும் நிறைந் திருக்கும் ஆன்மாக்கள், உணரும் பான்மையென- (அவற்றிற்குத் தலைவராகிய கடவுள் அருளிய உட்கருவி புறக்கருவிகளைக் கொண்டு) அறியுந் தன்மைபோல, மேலொருவன் இல்லாதான் - தமக்கு (கருவிகளைக் கொடுத்தற்கு) ஒரு தலைவனில்லாதவர், எங்கள் இறை - எமதுபதியாகிய சிவபெருமான்.

மேலைச் செய்யுளிற் சொல்லிய திருமேனிகள் கடவுளுக்கு வேறொருவராற் கொடுக்கப்படவில்லை யென்பதும், அவர் இயற்கை யுணர்வினரன்றிக் கரணத்தால் அறிபவரல்ல ரென்பதும், அவரே பரமபதியென்பதும் இச்செய்யுள் காட்டுகின்றது.

சரீரத்தினது துணையைக் கொண்டு நாம் பொருட்களை அறி கிறோம். இச்சரீரம் கடவுளாற் கொடுக்கப்பட்டது. ஆதலால் அவர் நமக்குத் தலைவராகிறார். அவருக்குச் சரீரம் இல்லாமையால் சரீரத்தைக் கொடுத்தற்கு அவருக்குத் தலைவருமில்லை. சரீரக்கருவி களால் அறியுமறிவு இடையிலே தோன்றுமறிவு. காணாத பொரு ளைக் காணும்போது அப்பொருளினறிவு அப்போது உண்டாகிறது. இப்படியே ஆன்மாக்களின் அறிவெல்லாம் இடையிலுண்டாவன. கடவுள் இயற்கை யறிவினராதலால் யாவற்றையும் என்றும் அறிபவர். (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருட்செயல்களின் பயன் ஆன்மாவிற் சிவம் பிரகாசித்தல்

**ஆனு வறிவா யகலா னடியவர்க்கு**
**வானுடர் காணுத மன்.**

ப—ரை: வானுடர் காணுத மன் - (நிறைந்த இன்பத்தை அனுபவிப்பதற்கு வேண்டிய பசு நல்வினை செய்தவர்களாயினும் பேரன்பில்லாதவர்களாதலால்) தேவர்களுங்காணுத சிவபெருமான், ஆனு அறிவாய் - எவ்விடத்தும் நிறைந்து நீங்காத ஞானமாய், அடியவர்க்கு - அவருடைய அடியார்களுக்கு, அகலான் - மறையாமல் வெளியாக நின்று பேரின்பத்தைக் கொடுப்பர்.

[வான் நாடர் —தேவர்]

கடவுள் எவ்விடத்தும் இருப்பவராயினும் தம்மை மெய்யன் போடு வழிபடுபவராற் காணப்பட்டும், மற்றையோரால் காணப் படாமலும் இருப்பர் என்பது கருத்து. இதை விளக்குதற்கு, ''அன்ப ருள்ளங் கரந்து நில்லாக் கள்வனே'' என்றும், ''கனவிலும் தேவர்க் கரியாய் போற்றி'' என்றும் மாணிக்கவாசக சுவாமிகள் சொல்லி யருளினுர். பசுநல்வினை செய்ததின் பயனுய்த் தேவராய்ப் பிறந்தவர் களும் அவரை அறியார் எனவே, தீவினை செய்வோர் அறியார் என்பது சொல்லாமலே விளங்கும். சிவபெருமானை அறியவேண்டு மாயின் சிவநல்வினை செய்தல் வேண்டும். ''அறிவாய்'' என்றதனுற் சிவபெருமான் அருளும் மெஞ்ஞானத்தினுல் மாத்திரம் அவரை அறியலாம் என்பது பெறப்பட்டது. இந்த மெய்ஞ்ஞானம் சிவ நல் வினை செய்வதால் வருவது. இதை, ''புண்ணியமேல் நோக்குவிக் கும் பாவங் கீழ்நூக்கும் புண்ணியனைப் பூசித்த புண்ணியத்தினுலே நண்ணிய ஞானத்தினுல்...........முத்திபெறும்'' என்னுஞ் செய்யு ளினுங் காண்க. (7)

### சிவத்தின் வியாபகம்

**எங்கு மெவையு மெரியுறுநீர் போலேகந்**
**தங்குமவன் முனே தனி.**

[அவன், எங்கும் எவையும் எரி உறு நீர்போல் ஏகம் தங்கும்; தானே தனி.]

ப—ரை: அவன் - சிவபெருமான், எங்கும் - எல்லா உலகங்களி லும், எவையும் - எல்லா உயிர்களிலும், எரி உறு நீர்போல் - சூடு பொருந்திய நீர்போல், ஏகம் தங்கும் - வேறற நிற்பர், தானே - (அவைகளோடு சேர்ந்து நின்றும்) அவற்றின் தன்மை சாராமல், தனி - அவற்றைக் கடந்து நிற்பர்.

[ஏகம் தங்கும்—ஒன்றுகக் கலந்திருப்பர்]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகங்களும் உயிர்களும் அவருடைய ஆணைப்படி நிற்பன; அவர் வேறொன்றின் ஆணைப்படி நில்லாத சுவதந்திரர் ஆதலால் ''தானே'' என்றார்.

நீரோடு சூடு நிற்றலால் நீரின் நிறைவு கெடாதது போல, பதியோடு பசுபாசங்கள் நிற்றல் பதியின் நிறைவைக் கெடுக்கத்தக்க தன்று. இனி, ஞாயிறின் ஒளிக்குமுன் மின்மினியின் ஒளி சூனிய மாக, ஞாயிறின் ஒளி ஒன்றே விளங்குவதுபோல, பதிக்கு முன் பசு பாசங்கள் சூனியமாகப் பதியொன்றே பொருளாகும். ஆதலால் ''அவன் ஏகம் தங்கும்'' என்றார்.

பதி, திருவருள், திருவருளின்பயன் ஆகிய இவற்றின் இயல்பைக் கூறிய ஆசிரியர் திருவருளின் பெரும் பயனைப் பெறும் வழியைக் கூறமுன், பதியோடு பதியல்லாத பொருள்கள் உளவாயின் பதிக்கு நிறைவு கெடுமென்று மயங்குவோரது மயக்கத்தை இத்திருக்குற ளால் நீக்குகின்றார். (8)

## திருவருளை நுகரும் வழி

**நலமில னண்ணார்க்கு நண்ணினர்க்கு நல்லன்**
**சலமிலன் பேர்சங்க ரன்.**

[நண்ணார்க்கு நலம் இலன்: நண்ணினர்க்கு நல்லன்; சலம் இலன்; பேர் சங்கரன்.]

ப—ரை: நண்ணார்க்கு நலமிலன் - தம்மை யடைந்து வழி படாதவருக்குத் தமது பேரின்பத்தைக் கொடாதவர், நண்ணி னர்க்கு நல்லன் - அன்போடு வழிபடுபவருக்கு முத்தியின்பத்தைக் கொடுப்பவர், சலமிலன் - வழிபடாமையினால் வெறுப்பேனும் வழி படுதலால் விருப்பேனும் இல்லாதவர், பேர் சங்கரன் - (சர்வான் மாக்களுக்குஞ் சுகத்தையே செய்பவராதலாற்) சங்கரன் என்னும் திருநாமத்தை யுடையவர்.

[சம் + கரன்—சுகஞ் செய்பவன்]

எல்லா உயிர்களுக்குஞ் சுகத்தைச் செய்பவர் என்றதனால் வழி படாதவருக்கும் நன்மை செய்பவர் என்பது பெறப்படும். அவர் படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் என்னும் நான்கு அருட் செயல்களால் அவர்களது ஆணவ மலத்தை முதிர்வித்து அவர்களை நண்ணுபவராக்கி நண்ணியபின் பேரருளாகிய முத்தியின்பத்தைக் கொடுப்பர். குளிருள்ளவர்கள் நெருப்பைச் சமீபித்தால் குளிர் நீங்கப் பெறுவர். தூரத்தில் நிற்பவர்கள் குளிர் நீங்கப் பெறார். இவர்கள் சமீபித்தலாலும் தூரத்தில் நிற்றலாலும் நெருப்புக்கு நய மேனும் நஷ்டமேனுமில்லை. அதுபோல ஆன்மாக்கள் வழிபட்டு நண்ணுதலால் ஆணவம் நீங்கப்பெறுவர். ஆதலால் 'நண்ணினர்க்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லன்' என்றார். அவைகள் அவரை நண்ணுவாயின் ஆணவத்தை விரைவில் நீங்கப் பெறா. ஆதலால் ''நண்ணார்க்கு நலமிலன்'' என்றார். அவர்கள் வழிபடுதலாலேனும் வழிபடாமையாலேனும் அவருக்கு நயமேனும் நஷ்டமேனும் விருப்பேனும் வெறுப்பேனும் இல்லையாதலால் ''சலமிலன்'' என்றார். மனச்சலனத்தால் உண்டாவன விருப்பு வெறுப்புக்கள்.

இச்செல்யுளிலுள்ள மொழியும் பொருளும்;

''சலமிலன் சங்கரன் சார்ந்த வர்க்கலால்
நலமிலன் நாடொறும் நல்கு வானலன்
குலமில ராகிலுங் குலத்துக் கேற்பதோர்
நலமிகக் கொடுப்பது நமச்சி வாயவே.

என்னுந் தேவாரத்திற் காண்க. (9)

## அவ்வழியில் ஆன்மாவைச் செலுத்துதல்

**உன்னுமுள தைய மிலதுணர்வா யோவாது**
**மன்னுபவந் தீர்க்கு மருந்து**

[உணர்வாய் மன்னு பவம் தீர்க்கும் மருந்து ஓவாது உன்னும்; உளது; ஐயம் இலது.]

ப—ரை; உணர்வாய் - ஞானமாய் நின்று, மன்னுபவம் - அநாதியான பிறவிக்குக் காரணமாகிய ஆணவமென்னும் வியாதியை தீர்க்கும் மருந்து - (திருவருளென்னும் மருந்தை யூட்டித்) தீர்க்கும் வைத்தியநாதராகிய சிவபெருமானை, ஓவாது உன்னும் - இடையறாமல் அன்போடு நினைத்து வழிபடுங்கள், உளது - இதனால் வரும் முத்தியின்பமே நிலையான செல்வம், ஐயம் இலது - அவரை அன்போடு வழிபட்டால் அந்த முத்தியின்பத்தை விரைவில் அடைதற்குச் சந்தேகமில்லை.

[ஓவாது—ஓயாது. பவம்—பிறப்பு]

ஆணவத்தின் பிரதானமான தொழில் அறிவை மறைத்தலாதலால் அதைக் கெடுக்கத்தக்கது அறிவே என்பதைக் காட்ட 'உணர்வாய்' என்றார்.

என் கையிலுள்ள கொப்புளத்தை அன்புள்ள ஒரு வைத்தியன் கத்தியால் வெட்டுகிறான். வெட்டும்போது எனக்குத் துன்பம் உண்டாயினும் அந்தத் துன்பத்திலும் பெருந்துன்பமாகிய கொப்புளத்தின் வருத்தத்தை மாற்றுவதே வைத்தியனுடைய கருத்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுபோல, நாம் தீவினை செய்தோமாயின், அந்தத் தீவினையாகிய மலத்தினால் நாம் படும் பெருந்துயரத்தை நீக்கும் வைத்தியமுறையாக அதற்கேற்ற துன்பங்களைத் தந்து சிவன் அத்தீவினையாகிய மலத்தை நீக்குவர். மருந்துகளிற் சில கசப்பாயும், சில இனிப்பாயும் இருத்தல்போல, வினைகளை நீக்கும் மருந்தும் துன்ப மின்பமென இரு வகைத்தாம்.

இந்த உண்மையை விளக்குதற்குச் சிவபெருமானுடைய திருவருளை மருந்து என்றார். ஆன்மாவின் கன்மங்கள் அதனுடைய ஆணவம் மாயை என்னும் ஏனைய மலங்களால் வரையறுக்கப்படும். இவைகளையன்றி ஆன்மா வேறு வகையாகக் கன்மஞ் செய்ய மாட்டாது. (10)

## இரண்டாம் அதிகாரம்—உயிரவை நிலை

அஃதாவது பலவாய உயிர்களது தன்மை

### ஆன்மாக்கள் எண்ணில்லாதன

**பிறந்தநாண் மேலும் பிறக்குநாள் போலுந்**
**துறந்தோர் துறப்போர் தொகை**

[துறந்தோர் தொகை பிறந்தநாள் போலும்; துறப்போர் தொகை மேலும் பிறக்கும் நாள் போலும்.]

ப...ரை: துறந்தோர் தொகை - ஆன்மாக்களுள் முத்தியடைந்தோர் தொகை, பிறந்த நாள் போலும் - ஆன்மாக்கள் பல பிறவிகளிற் பிறந்து வாழ்ந்த நாட்களின் தொகைக்குச் சமமாம், துறப்போர் தொகை - முத்தியடையாமல் இருக்கும் ஆன்மாக்களின் தொகை, மேல் பிறக்கும் நாள் போலும் - ஆன்மாக்கள் இனிப் பல பிறவிகளிற் பிறந்து வாழும் நாட்களின் தொகைக்குச் சமமாம்.

[துறப்போர்—இனி முத்தியடைவோர்]

''துறந்தோர் துறப்போர்'' என்றதினால் ஆன்மாக்கள் யாவும் அநாதியே மலபந்த முள்ளன என்பதுங் காட்டப்பட்டது. சிருஷ்டிக்குத் தொடக்கமில்லையாதலாற் பிறந்தநாள் அநந்தம், ஆதலால் ஆன்மாக்களும் அநந்தமென்பது கருத்து.

கடவுள் ஒருவராய் இயல்பாகவே பாசங்களி னீங்கினவராக, ஆன்மாக்கள் பலவாய் இயல்பாகப் பாசத் தடையுடையவை, கடவுள் அநாதியே நிர்மலராதலால், அவர் ஆன்மா ஆகார். சுத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானரூபியாய் ஆணவம் மாயைகளுக்கு மேலாய் அவற்றை யடக்கி யாளும் சர்வ வல்லமையுள்ளவராதலால், அவர் அவைகளாற் பிணிக்கப்பட்டுப் பசுவானாரென்பது பொருந்தாது. அவற்றுள் தம்மை அகப்படுத்தினாரென்னில் அதற்கொரு பிரயோசனமிருத்தல் வேண்டும். விளையாட்டுக்காகச் செய்கிறாரென்னில், அந்த விளை யாடல் அவருக்குத் தேவையான பொருளாக முடிகின்றது. கட வுள் பரிபூரணராதலால் தேவையொன்றுமில்லாதவர். ஆதலால், விளையாட்டுக்காகத் தம்மை மாயைக்குள் அகப்படுத்துகிறாரென்பது பொருந்தாது. ஆன்மாக்கள் கடவுளல்லவாயினும், சூரியனிலிருந்து வரும் ஒளிபோலக் கடவுளின் அம்சமென்னில், அதுவும் பொருந் தாது. அவரின் அம்சமும் அஞ்ஞானத்தைப் பொருந்தாதாதலின், சூரியனிலிருந்து ஒளி வருவதுபோலக் கடவுளிலிருந்து வருவது அவருடைய சத்தி, ஆன்மாவன்று.

கடவுளும் ஆன்மாவும் ஒன்றல்லவாயின், இரண்டு பொருள் களும் ஓரிடத்திலிருத்தல் இயலாதாதலாற் கடவுள் சர்வவியாபக ரல்லரென்று முடியுமேயென்னில், கடவுளாயினும் ஆன்மாவாயி னும் இருத்தற்கு இடம் வேணடிய பொருளல்ல. நீளம், அகலம் உயரமுள்ள பொருள்களுக்கே இடம் வேண்டும். கடவுளும் ஆன்மா வும் அப்படியான பொருள்களல்ல. ஆதலால் ஆன்மாவினுண்மை யாற் கடவுளுடைய வியாபகத்திற்குக் குறைவில்லை. கடவுள் ஆன் மாக்களோடு கலந்து நிற்குந் தன்மையிற் சத்தியெனவும், அவை களுக்கு ஐந்தொழில் செய்து அவர்களை ஈடேற்றியாளும் தன்மை யிற் பதியெனவும், அவைகளைக் கடந்து நிற்குந் தன்மையிற் சிவ மெனவும் சொல்லப்படுவர். அநாதியாயுள்ள இந்த இரண்டு பொருள் களுக்குமுள்ள தொடர்பு எப்படிப்பட்டதெனில், வைத்தியனுக்கும் நோயாளிக்கும், பிதாவுக்கும் பிள்ளைக்கும், அரசனுக்குங் குடிகளுக்கு முள்ள தொடர்பு போலாம். (1)

## மூவகை ஆன்மாக்கள்

திரிமலத்தா ரொன்றதனிற் சென்றார்க ளன்றி
யொருமலத்தா ராயு முளர்,

ப—ரை: திரிமலத்தார் - ஆணவம், கன்மம், மாயையென்னும் மும்மலத்தையுடைய சகலர் எனவும், அதனில் ஒன்று சென்றார் கள் - மும்மலங்களில் ஒன்றாகிய மாயை நீங்கி ஆணவம், கர்மம் என்னும் இருமலங்களையுடைய பிரளயாகலரெனவும், அன்றி - இவர் களைத் தவிர, ஒருமலத்தாராயும் - மாயையுங் கன்மமுமின்றி ஆண வமாகிய ஒருமலமுடைய விஞ்ஞானகலர் எனவும், உளர் - மூவ கையாய ஆன்மாக்கள் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரளயாகலர் என்னும் சொற்குப் பிரளயத்திற் கலை நீங்கிய வர் என்பதும், விஞ்ஞானகலர் என்பதற்கு விஞ்ஞானத்தாற் கலை நீங்கியவர் என்பதும் பொருள். இவர்கள் இவ்வாறு பக்குவ விசேடத்தாற் கலை நீங்கியவர்களென்றும், அநாதியே கலை நீங்கியவர்களென்றும் இரு வகையினர்.

[பிரளய + அகலர். விஞ்ஞான + அகலர். அ + கலர் = கலை நீங்கிய வர். ச + கலர் = கலையோடு கூடியவர்.]

சகலர்க்கு ஆணவமலம் தூலதரமாயும், பிரளயாகலர்க்குத் தூல மாயும், விஞ்ஞானகலர்க்குச் சூக்குமமாயும் உள்ளது. விஞ்ஞானகலர்க்கும் மாயாகன்மங்கள் உளவாயினும், ஆணவவலி சூக்கும மாதலால் அவர்கள் இவற்றால் தாக்கப்படாராதலால், ஒருமலத்தாரெனப்பட்டனர். பிரளயாகலர்க்கு மாயை உளதாயினும் ஆணவ வலி தூலமாதலால், அவர்கள் மாயையினாற் றாக்கப்படாமையால் இருமலத்தாரெனப்பட்டனர்.

## மூவகை ஆன்மாக்களின் வேறுபாடு

> மூன்றுதிறத் துள்ளாரு மூலமலத் துள்ளார்கள்
> தோன்றலர்தொத் துள்ளார் துணை.

[மூன்று திறத்து உள்ளாரும் மூலமலத்து உள்ளார்கள்; தோன்றலர் தொத்து உள்ளார் துணை. (துணையுள்ளார் தொத்துத் தோன்றலர்)]

ப—ரை: மூன்று திறத்து உள்ளாரும் - அம் மூவகை ஆன்மாக்களும், மூலமலத்துள்ளார்கள் - அநாதியே ஆணவமல சம்பந்தர்களாய் இருக்கிறவர்கள், துணையுள்ளார் - பிரகிருதிமாயை என்னுந் துணையினையுடைய சகலர். தொத்துத் தோன்றலர் - மலத்தினாற் பிணிக்கப்பட்டிருக்குந் தமது நிலையை அறியாதவர்.

[மூலமலம்—ஆணவம். தொத்து—கட்டு, மலபந்தம்]

''மூலமலத்துள்ளார்கள்'' என்றதனால் விஞ்ஞானகலருக்கு ஆணவம் உண்டென்பதும், சகலர் பிரகிருதிமாயை உடையவர் என்பதனாற் பிரளயாகலருக்கு அம்மாயை இன்றென்பதும் பெறப் படும். விஞ்ஞானகலரும் பிரளயாகலரும் மலத்தினாற் பிணிக்கப் பட்டதை உணர்பவராம். (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆன்மா வலியற்றது.

**கண்டவற்றை நாளுங் கனவிற் கலங்கியிடுந்**
**திண்டிறலுக் கென்னே செயல்.**

ப—ரை: நாளும் கண்டவற்றை - நனவிலே நாள்தோறுங் கண்ட பொருள்களை, கனவிற் கலங்கியிடும் - கனவிலே மாறிக் காண்கின்ற, திண் திறலுக்கு - வலியற்ற ஆன்மாக்களுக்கு, செயல் என்னே - தம் செயலாவது யாது ?

திண்திறல் என்பது இகழ்ச்சிக் குறிப்பு, நனவிலே காணப்படும் பொருள்கள் மனத்திலே பதிந்திருப்பன. அந்தப் பொருள்கள் கனவிலே காணப்படுந் தன்மை ஆன்மாவினுடைய இன்ப துன்ப நுகர்ச்சிக்குத் தக்கதாய் மாறும். ஆன்மா கர்ம வசத்தால் வருந்த வேண்டியதாயின், உயிரோடிருக்கும் நண்பர் ஒருவர் இறந்தவர் போலவும், மகிழ வேண்டியதாயின் இறந்தவர் உயிரோடிருப்பவர் போலவுந் தோன்றுவர். இப்படியான கனவினுற் பிராரத்த வினை சிறிது அநுபவிக்கப்படுகின்றது. நனவிலே கண்டபடி கனவிலே காணும் ஆற்றல் ஆன்மாவுக்கில்லாமையால் அது திறலற்றதாகும்.

## ஆன்மா அறிவிக்க அறிவது

**பொறியின்றி யொன்றும் புணராத புந்திக்**
**கறிவென்ற பேர்நன் றற.**

[பொறி இன்றி ஒன்றும் புணராத புந்திக்கு அறிவு என்ற பேர் நன்று அற.]

ப—ரை: பொறியின்றி - ஐம்பொறிகளில் ஏதாயினுமொன்றில்லாமல், ஒன்றும் புணராத புந்திக்கு - ஒரு விஷயத்தையும் அறியமாட்டாத ஆன்மாவுக்கு, அறிவு என்ற பெயர் - அறிவு என்றுரைத்த பெயர், அற நன்று - பிழையானதாம்.

புந்தி ஆகுபெயராய் ஆன்மாவை உணர்த்திற்று. நன்று இகழ்ச்சிக் குறிப்பு சகலாவத்தையிலே ஆன்மாக்கள் பொறிகளினது துணை கொண்டே அறிவன; ஆதலால் அந்த நிலையிலே தாமே அறியும் அறிவில்லாதன. (5)

## ஆன்மா இயல்பாக அறிவுப் பொருள்

**ஒளியு மிருளு முலகு மலர்கட்**
**டெளிவி லெனிலென் செய.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[ஒளியும் இருளும் உலகும் அலர்கண் தெளிவு இல் எனில் என் செய?]

ப—ரை; ஒளியும் - சூரியன் நெருப்பு முதலிய சுடர்களும், இருளும் - மயக்கத்தைத் தருவதாகிய இருளும், உலகும் - (பலவகைப் பட்டபொருள்களோடு சிறந்துநிற்கும்) உலகமும், அலர்கண் தெளிவு இல் எனின் - விழித்திருக்கும் கண்ணிற் காணுந்தன்மை இல்லையா யின், என்செய - என்ன பயனை உடையன?

அவைகளிருந்தும் அவைகள் அறியப்படாமற்போம். அப்படியே ஒளியாகிய சிவமும் இருளாகிய மலமும் உலகமாகிய மாயையும், விழித்திருக்கும் கண்ணாகிய ஆன்மாவுக்கு அறியுமாற்றலில்லையாயின், அறியப்படமாட்டா. ஆயினும், அவற்றை ஆன்மா அறிதலால், அது அறிவுப் பொருளேயாம். அந்த அறிவைக்கொண்டு, ஆன்மா வானது தொழில்களைச் செய்யும் முறைமையையும், விரும்பவேண் டியவை எவையென்பதையும் அறிதலால், அதற்கு அறிவு, தொழில், இச்சை ஆகிய மூன்றும் உள்ளவைகளாம். இவைகள் முறையே ஞானசத்தி, கிரியாசத்தி, இச்சாசத்தி எனப்படும்.

## ஆன்மா சதசத்து

**சத்தசத்தைச் சாரா தசத்தறியா தங்கணிவை**
**யுற்றசத சத்தா முயிர்.**

[சத்து அசத்தைச் சாராது; அசத்து அறியாது; அங்கண், இவை உற்ற சதசத்தாம் உயிர்.]

ப—ரை;- சத்து அசத்தைச் சாராது - நிலைபெற்ற ஞான மாகிய சிவம் நிலையற்றனவாகிய மாயைப் பொருள்களைப் புதிதாகச் சுட்டியறியவேண்டுவதில்லை (அவர் என்றுமறிபவராதலால்), அசத்து அறியாது - சடப் பொருள்கள் ஒன்றையு மறியமாட்டா, அங்கண் - அப்படியிருத்தலால், இவை உற்ற - சிவத்தையும் சடப்பொருள்களை யும் அறிவன, சதசத்தாம் உயிர் - சத்தாகாமலும் அசத்தாகாம லும் சதசத்தாயிருக்கும் ஆன்மாக்கள்.

[சத் + அசத் = சதசத்(து). சத் - உள்பொருள். அசத் - இல் பொருள்.]

உயிர் கடவுளை எவ்வாறறியுமெனின், அவருடைய ஞானம் கிடைக்கும்போது அதைக்கொண்டு அது அவரை அறியும், அப் படி அறியும்போது, அவரைத் தன்னின் வேறாய் அறியாது; அது அவராகி நின்றே அறியும். ''உய்த்தல்'' என்றும் பாடமுண்டு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவஞானத்தைப் பெறுதற்குமுன் நாம் கடவுளை யறிய இயலாதாயின், அவரைத் தியானித்தலும் வணங்குதலும் எவ்வாறுகும்? தியான வணக்கங்களின்றி முத்திநிலை கைகூடாதே! கடவுள் தம்மை வழிபடுதற்கு அநேக மூர்த்தங்களை ஆகமங்களிலே விதித்தருளினுர். அவைகள் சிவாலயங்களிலுள்ள திருவுருவங்கள். அவைகளைக் கண்ணுல் தரிசித்துக் கடவுளாக நினைத்து வணங்கினுல் அவரை நேரே வணங்கும் பலனுண்டாகும். அந்தத் திருவுருவங்களைத் தியானித்தல் அவரைத் தியானித்தலாம். கோயிலிற் செய்யப்படும் தொண்டுகள் அவருக்கு நேரே செய்யப்படுந் தொண்டுகளாம். இவைகளோடு சத்தி ரூபமாகிய மந்திரங்களை உச்சரித்தலும், தேவார திருவாசக முதலிய அருட்பாக்களைப் பாடுதலும் அவரைச் சமீபிக்கச் செய்யும் வழிகள். கோயிலுக்குப் போக இயலாத காலங்களிலே, அங்கேயிருக்குந் திருவுருவங்களை மனத்திலே பதித்து வழிபடலாம். யோக நிலையை அடைந்தவர்கள் கோயில்வழிபாட்டோடு யோகவழிபாடுஞ் செய்வர். கோயில் வழிபாட்டைப் பழிப்போர் சிலர், சிற்சில வடிவங்களாகக் கடவுளை நினைத்து வழிபடுவதாகக் கூறுவர். அவர் நினைக்கும் உருவங்களும் கடவுளுடைய உருவங்களல்லவே. அவைகளிலே சிவபெருமானுடைய திருக்குணங்கள் அமையப்பெருமையாலும், கோயிலிலுள்ள திருவுருவங்களில் அவைகள் அமைந்திருத்தலாலும், அவர்களது மனம் போனபடியே எண்ணு முருவங்கள் பெரும் பயனற்றவைகள். வேறு சிலர் அவருடைய குணங்களைத் தியானிக்கிறுர்களாம். குணத்தைத் தியானித்தல் அவரைத் தியானித்தலன்று. யோகக் காட்சியும் பரமசிவத்தைக் காண்பதன்று. ஆதலாற் கடவுளை நேரே யறியுஞ் சுத்தஞானிதவிர்ந்த மற்றையெல்லோரும் பிரதிமை வாயிலாகவே கடவுளை வணங்குகின்றனர். பிரதிமைகளுட் கோயிலிலுள்ள பிரதிமைகள், சிவபெருமானுற் கற்பிக்கப்பட்டமையாலும், அன்பர்களுக்கு அப்படியான உருவங்கள் தோற்றி அருள்செய்ததினுலும், சிவசத்தியாகிய மந்திர நியாசத்தினுலே அவருடைய திருவருள் தயிருள் நெய்போலத் தோன்றி நிற்றலாலும், எல்லாப் பிரதிமைகளுள்ளும் சிறந்தவைகளாம். (7)

[பிரதிமை — உருவம், விக்கிரகம்]

## ஆன்மா தன்வயமில்லாதது

இருளி லிருளாகி யெல்லிடத்தி லெல்லாம்
பொருள்க ளிலதோ புவி,

[இருளில் இருள் ஆகி, எல் இடத்தில் எல் ஆம் பொருள்கள் இலதோ புவி.]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ப—ரை: இருளில் இருளாகி - இருள் வந்த காலத்து இருளாகியும், எல் இடத்தில் எல் ஆம் பொருள்கள் - ஒளி வந்தபோது விளங்கியும் நிற்கும் பொருள்களே, புவி இலதோ - பூமியுடைய தன்றோ? (அப்படியான பொருள்கள் பூமியிலுண்டு; அவை படிகம் முதலியன. ஆன்மா இப்படியான பொருள்களைப் போல்வது.)

[எல் - ஒளி. எல் ஆம் பொருள் - ஒளியாகும் பொருள் - பிரகாசிக்கும் பொருள். படிகம் - பளிங்கு.]

படிகமானது இருளிலே இருட்டன்மையாயும், நடுப்பகற் சூரிய ஒளி படும்போது ஒளி மயமாயும் இருக்கும். அதுபோல ஆன்மாவானது ஆணவத்தோடு சேர்ந்து நிற்கும் போது அறிவுகெட்டுச் சடப்பொருளாயும் சிவஞானத்தைப் பெறும்போது முற்றறிவுடைய பொருளாயும் உள்ளது. "ஆணவத்தோ டத்துவித மானபடி மெய்ஞ்ஞானத் தாணுவினோ டத்துவித மாகுநா ளெந்நாளோ" என்றார் தாயுமானவர். ஆன்மாவானது ஆணவத்தினாலே தாக்கப்படுதலால் அது தன்வயமில்லாததாம். (8)

## ஆன்மா சிவத்தைக் காணாமைக்குக் காரணம்

ஊமன்கண் போல வொளியு மிகவிருளே
யாமன்கண் காணா தவை.

[மன் கண் காணாதவை, ஊமன் கண் போல ஒளியும் மிக இருளே யாம்.]

ப—ரை: ஊமன் கண் போல - கூகையின் கண்ணுக்குச் சூரியனது ஒளி தோன்றாமலிருப்பதுபோல, மன்கண் காணாதவை - சிவபெருமான் அருளும் ஞானத்தைக் கொண்டு காணாத ஆன்மாக்களுக்கு, ஒளியும் மிக இருளே ஆம் - சிவமாகிய ஒளி தோன்றாமல் நிற்கும்.

ஊமன்கண் என்னுமிடத்திலும் காணாதவை என்னுமிடத்திலும் . ரன்காம் வேற்றுமை விரிக்க. மன்கண் - சிவஞானம்.]

"வாமன்" என்றும் பாடமுண்டு. வாமன் - சிவபெருமான். சூரியப்பிரகாசமானது கூகையினது கண்ணிலும் மனிதர் ஆடு மாடு முதலிய உயிர்களினது கண்ணிலும் ஒரேதன்மையாகவே படுகின்றது. ஆயினும் அந்தப் பிரகாசத்தைக் கூகை காணமாட்டாமலும் மனிதர் முதலிய உயிர்கள் காணக்கூடியதாகவும் இருக்கின்றது. இந்த வேறுபாடு கண்களிலுள்ள வேறுபாடன்றிச் சூரியப் பிரகாசத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லுள்ள வேறுபாடன்று. அதேபோலக் கடவுள் எல்லா ஆன்மாக்களிலும் ஒரேதன்மையாகக் கலந்து நிற்கவும், அவைகளின் வேறுபாடான நிலைகளினால் சில அவரை அறியத் தக்கனவாயும், வேறுசில அறியமாட்டாமலும் இருக்கின்றன. ஆணவச் சார்புள்ள ஆன்மா கடவுளை அறியமாட்டாது; திருவருட்சார்புள்ள ஆன்மா சிவஞானமாகிய கண்ணாற் கடவுளைக் காணும். (9)

## ஆன்மா அருளைப்பெற முயலல்வேண்டும்

**அன்றளவு மாற்றுமுயி ரந்தோ வருடெரிவ**
**தென்றளவொன் றில்லா விடர்**

[அன்று அளவும் அளவு ஒன்று இல்லா இடர் ஆற்றும் உயிர் அந்தோ! அருள் தெரிவது என்று?]

ப—ரை: அன்று அளவும் - அநாதியாகவே, அளவொன்று இல்லா இடர் - (பிறந்திறந்து) அளவில்லாத துன்பங்களை, ஆற்றும் உயிர் - தாங்கி நிற்கும் உயிர்கள், அந்தோ - ஐயோ!, அருள் தெரிவது என்று - ஆணவம் நீங்கித் திருவருளாகிய ஞானத்தைப் பெற்றுப் பேரின்பத்தை யடைவது எக்காலம்!

நாம் படுந் துன்பத்திற்குக் கணக்கில்லையாதலால், அவற்றினின்று நீங்குதற்கு முயலல்வேண்டுமென்பதும், அதற்காகத் கடவுள் விதித்தபடி நடந்து அவரிலுள்ள பற்றை வளர்த்தல் வேண்டுமென்பதும் இதன் கருத்து. (10)

# மூன்றும் அதிகாரம்—இருண்மலநிலை

அஃதாவது ஆன்மாவின் அறிவை மறைத்து இருள்போலநிற்கும் ஆணவத்தினது தன்மை. ஆணவத்தை நீக்குதற்குக் கருவியாயுள்ள மாயையினது தன்மையும் ஆணவத்தாலுண்டாகும் கர்மத்தினது தன்மையும் தொடர்புபற்றிக் கூறப்படுதலால் இவ்வதிகாரம் மும்மலங்களையும் விளக்குகின்றது.

## முப்பொருளும் இன்பதுன்பமும் உள்ள பொருள்கள்

**துன்றும் பவத்துயரு மின்புந் துணைப்பொருளு**
**மின்றென்ப தெவ்வாறு மில்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ப—ரை: துன்றும் பவத்துயரும் - நெருங்கிய பிறவித்துன்பமும், இன்பும் - முத்தியாகிய பேரின்பமும், துணைப்பொருளும் - பிறவித் துன்பத்துக்குக் காரணமாகிய மும்மலங்களும் முத்திக்குக் காரண மாகிய சிவமும், இன்று என்பது - இல்லாத பொருள்கள் என்று சொல்லுவது, எவ்வாறும் இல் - சுருதி யுத்தி அனுபவம் என்னும் அளவைகள் எவ்வாற்றாலு மில்லை.

சுருதியாவது வேதாகமங்களாகிய கடவுள்வாக்கு. அநுபவ மாவது இந்திரியங்களால் அறியப்படும் அறிவு. யுத்தியாவது அனு பவவுணர்வை அளவை நூற்படி பலவாறுகப் பொருந்தலாற் பெறப் படும் அறிவு. இவை முறையே உரை, கருதல், காண்டல்எனப்படும்.

## ஆணவத்தினுண்மை அனுமானத்தால் துணியப்படும்

இருளான தன்றி யிலதெவையு மேகப்
பொருளாகி நிற்கும் பொருள்.

ப—ரை: எவையும் - உலகத்திலே யுள்ள பல வகைப்பட்ட பொருள்களும், ஏகப் பொருளாகி - (அவற்றின் தன்மை தோன்று மல்) ஒரே பொருளாக, நிற்கும் பொருள் - தோன்றச் செய்யும் பொருள், இருளானதன்றி இலது - இருளுருவான பொருளன்றி வேறு பொருள் இல்லை.

இருள் மிகுந்த இரவிலே, வழியில் நிற்கும் மரம் மரமாகத் தோன்றுது; அவ்வழிச் செல்வோர் அதைக் காணுது அதிலே தலை யைத் தாக்குவர். அதிலே கிணறிருந்தால், கிணறு தோன்றுமை யாற் கிணற்றுள் வீழ்வர்; பாம்பு கிடந்தால், அது தோன்றுமை யால், அதிலே மிதித்துக் கடிக்கப்படுவர். இவ்வாறு, பொருள்க ளுடைய தன்மையை மறைப்பது இருளுருவமான பொருள். பதி பசு பாசங்களின் தன்மை மறைக்கப்படுகின்றபடியால், அவற்றை மறைப்பதாகிய இருள் போன்ற பொருள் ஒன்று இருத்தல் வேண் டும் என்பது அநுமானம். இப்பொருள் ஆணவம் எனப்படும். இது பிறவித் துன்பத்தை மறைத்து அதை இன்பமாகக் காட்டி, ஆன் மாவை அத்துன்பத்துக்குக் காரணமாகிய வினையிலே செலுத்து கின்றது; வீட்டின் பேரின்பத்தை மறைத்துத் துன்பமாகக் காட்டி, அந்த வழியில் ஆன்மாவைச் செல்லவிடாது தடுக்கின்றது; கடவு ளுடைய திருவருளின் பெருமையை மறைத்து ஆன்மாவுக்கு அகந்தை மமதைகளை உண்டாக்கி மயக்குகின்றது. அகந்தை மமதைகள் ''யான்'' ''எனது'' எனவும்படும். இவைகள் மயக்கங்கள் என்பதை 'யானெனதென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க், குயர்ந்த உலகம், புகும்'' என்னுந் திருவாக்காலுந் தெளிக.

[அகம் - நான்: மம - என்னுடைய]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணவத்தின் குணங்கள்: மோகம், மதம், ராகம், விஷாதம், சோஷம், வைசித்திரியம், அரிசம் முதலியன. மோகம் நல்லறிவை மயக்குவது. மதம் உலக இன்பங்களை மேலாக மதிக்கச் செய்வது. ராகம் உலக இன்பங்களில் ஆசையை உண்டாக்குவது. விஷாதம் அனுபவித்த இன்பம் பின்பு கிடையாதபோது வருத்துவது. சோஷம் பற்றுள்ளவர்களிலிருந்து நீங்க வேண்டிய காலத்தில் வருத்தி உடம்பை மெலியச் செய்வது. வைசித்திரியம் ஆன்மா தன்னிலுள்ள குற்றங்களைக் கடவுளி லேற்றித் தன்னுடைய பெருமைகளை வியந்து அதிசயிக்கச் செய்வது. அரிசம் உலக இன்பங்களை அநுபவிக்கும்போது ஆன்மா தனக்கு ஒரு குறையுமில்லை என நினைக்கச் செய்வது. இவற்றுள் ராகமாகிய அவாவே உயிர்களை அதிகமாய் அலைப்பது "அவாவெள்ளக் கள்வனேனை" என மணிவாசகப் பெருமானுரும், "அவா வென்ப தெல்லாவு யிர்க்கு மெஞ்ஞான்றுந், தவாஅப் பிறப்பீனும் வித்து" (37 1.) எனத் திருவள்ளுவநாயனுரும் பாடியருளினுர்கள்.

*ஆணவம் - அணுவாக்குவது. அணு - மிகச் சிறிய பொருள்;* ஆன்மாவின் சர்வஞ்ஞத்துவத்தைத் தடுத்து, அதின் அறிவை அணுவாக்குதலினுல் ஆணவமெனப்படுகிறது. (2)

## ஆணவம் இருளிற் கொடியது

**ஒருபொருளுங் காட்டா திருளுருவங் காட்டு**
**மிருபொருளுங் காட்டா திது.**

ப—ரை; இருள் - இருளானது, ஒரு பொருளுங் காட்டாது - மற்றைய பொருள்களைக் காட்டாதாயினும், உருவங் காட்டும் - தன்னுடைய உருவத்தைக் காட்டும்; இது - இந்த ஆணவமானது. இரு பொருளுங் காட்டாது - பிற பொருள்களையும் தன்னையும் மறைக்கின்றது; ஆதலால், இது இருளினுங் கொடியது.

[இரு பொருள் - ஆணவமாகிய பொருளும் அதனுல் மறைக்கப்பட்ட பொருளும்.]

இருள் தன்னுடைய உருவத்தைக் காட்டுதலினுலே, இருளுள்ள போது விளக்கோடு போவார்கள்; விளக் கில்லையாயின் அவதானமாய்ப் போவார்கள். ஆதலால், இருளினுல் துன்பமடைவோர் மிகச் சிலர். ஆணவ இருளானது தன்னைக் காட்டாது நிற்றலால், ஆன்மாக்கள் அதினுடைய வஞ்சனையை உணராமல், ஒவ்வொரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிமிஷமும் அதனால் மயக்கமுற்று, அதினுடைய வலையிற் சிக்கி வருந்துகின்றன. ஒருவன் கொடிய கொலைத் தொழிலைச் செய்யும் போது, அதைச் சரியான செயலென்று நினைத்துச் செய்கிறான். கைக்கூலி வாங்குகிறவன் தன்னுடைய செயல் மிகச் சாதுரியமான தென்று நினைத்து அந்தத் தீய தொழிலைச் செய்கிறான். புலாலுண்ணல் தீய செயலென்று உணர்ந்தவர்களும், ''அஃதெப்படி யாயினுமாகுக, நாம் உண்போம்'' என்று சொல்லக் கூடியதாகப் புலாலிலே பேராசை யுண்டாகின்றது. இப்படியே, தீய செயல்களை நல்லவைகள் போலக் காட்டித் தன்னை மறைத்து அடுத்துக் கெடுக்குங் குணமே ஆணவத்திலுள்ள பெரும் பொல்லாங்காம். (3)

## ஆணவம் அநாதியாய் ஆன்மாவோடுள்ளது.

**அன்றளவி யுள்ளொளியோ டாவி யிடையடங்கி**
**யின்றளவு நின்ற திருள்.**

[இருள், உள்ளொளியோடு அன்று அளவி, ஆவியிடை அடங்கி இன்று அளவும் நின்றது.]

ப—ரை: அன்று அளவி - அநாதியே ஆன்மாவோ டுள்ளதாய், உள் ஒளியோடு ஆவியிடை அடங்கி - அவ்வான்மாவுக்குப் பிராணனாகிய சிவமும் அதனோடு நிற்க அந்தச் சிவத்தைச் சாராது, ஆன்மாவைச் சார்ந்து, இருள்-ஆணவமானது, இன்றளவும்-இன்று வரைக்கும், நின்றது - நீங்காது நின்றது.

மாயை கர்மமாகிய மற்றைய மலங்கள் சர்வசங்கார காலத்தில் ஆன்மாவை விட்டு ஒதுங்கி நின்று மகா சிருட்டித் தொடக்கத்தில் அதைச் சார்வன. ஆணவமானது சர்வசங்காரத்திலும் ஆன்மாவோடு நிற்பது. ஆகவே அது முத்திநிலை வரைக்கும் ஆன்மாவினின்றும் நீங்காதது: அது ஆன்மாவோடு நிற்குமன்றி, ஆன்மாவுக் குயிராய் நிற்குஞ் சிவத்தைப் பற்றாது. (4)

## ஆணவம் அநந்த சத்திகளை யுடையது

**பலரைப் புணர்ந்துமிருட் பாவைக்குண் டென்றுங்**
**கணவர்க்குந் தோன்றாத கற்பு.**

ப—ரை; பலரைப் புணர்ந்தும் - எண்ணில்லாத ஆன்மாக்களைப் பொருந்திக் கலந்து நின்றும், இருட் பாவைக்கு - ஆணவமாகிய பெண்ணுக்கு, கணவர்க்கும் என்றுந் தோன்றாத கற்பு உண்டு - தனது நாயகராகிய ஆன்மாக்களுக்குத் தன்னைக் காட்டாம லிருக்கும் நியம முண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்புள்ள பெண்கள் பிற ஆடவர்களோடு சேராதவர்களாய்த் தம்முடைய சொந்த நாயகருக்குத் தம்மைக் காட்டி நிற்பர். இவர்களுடைய தன்மைக்கு முழு மாறாக, ஒரு ஆன்மாவைப் பிடித்திருக்கும் ஆணவமே பிற ஆன்மாக்களோடு சேர்ந்தும் அந்த ஆன்மாவுக்குந் தன்னைக் காட்டாமல் நிற்கின்றது. "ஒவ்வோ ரான்மா மாவையும் பிடித்திருக்கும் ஆணவம் வேறு ஒன்று?" என்னுங் கேள்விக்கு விடையாக, அது வேறன்று என்பதைக் காட்ட "இருட் பாவை" என்றும், அது பலவகைச் சத்தியுடைய தென்பதைக் காட்ட "பலரைப் புணர்ந்தும்" என்றுங் கூறப்பட்டது. "ஒன்ற தாய் அநேக சத்தி யுடையதாய்" என்றார் பிறரும். (5)

## ஆணவம் மெய்யுணர்வைத் தடுப்பது

**பன்மொழிக ளென்னுணரும் பான்மை தெரியாத**
**தன்மையிரு ளார்தந் தது.**

[பன்மொழிகள் என்? உணரும் பான்மை தெரியாத்தன்மை, இருளார் தந்தது.]

ப—ரை: பன்மொழிகளென் - வேறு பல காரணங்களைப் பேசிப் பயனென்ன, உணரும் பான்மை தெரியாத தன்மை - (ஆன்மா உண்மைகளை) அறியாமல் நிற்கும் மயக்கம், இருளார் தந்தது - ஆணவம் தந்த மயக்கமாம்.

[இருளார் - இருள் - ஆணவம். ஆர்விகுதி இகழ்ச்சிக்குறிப்பு]

(1) சிலர் இந்த மயக்கம் மாயையினுல் உண்டானதென்பர், சர்வசங்கார காலத்திலே மாயை ஆன்மாவினின்றும் நீங்கும்போது ஆன்மா ஞானத்தைப் பெருமையாலும், மாயையினுல் உண்டாக்கப் பட்ட சரீரம் அஞ்ஞானத்தைச் சிறிது நீக்கி நன்மை தீமையை ஒருவாறு உணருதற்குக் கருவியாயிருத்தலாலும், அஞ்ஞானத்திற்கு மாயை காரணமென்பது பொருந்தாது,

(2) வேறு சிலர் இதற்குக் காரணம் கர்மம் என்பர். கர்ம மானது மோகம், மதம் முதலிய மயக்கங்களின் காரியமாதலால், அது மயக்கத்துக்குக் காரணமாகாது.

(3) வேறு சிலர் ஆணவமானது ஞானத்தின் இன்மையன்றி ஒருபொருளன்றென்பர். அது இல்பொருளாயின். அதிலிருந்து உள்ளபொருளாகிய அவா உண்டாகாது. ஆதலால், ஆணவம் ஞானத்தின் இன்மையன்று. ஆன்மாவின் மயக்கத்துக்குப் பலர் பலவாறு காரணங் கற்பித்தலால், "பன்மொழிக ளென்" என்றார்.

ஆன்மா அறியவேண்டிய உண்மைகளாவன: கடவுள் ஒருவர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் அவருக்கு அடிமையாகிய ஆன்மாக்கள், நம்மைச் சமீபித்திருப்பது மலம், அம்மலத்தினின்றும் நீங்கி நித்தியானந்தத்தை அனுபவிப்பதே நாம் அடையவேண்டிய நிலை என்பன முதலானவையாம். (6)

## ஆணவம் ஆன்மாவின் குணமன்று

இருளின்றேற் றுன்பே னுயிரியல்பேற் போக்கும்
பொருளுண்டே லொன்ருகப் போம்.

[இருள் இன்றேல் துன்பு ஏன்? உயிரியல்பேல், போக்கும் பொருள் உண்டேல் ஒன்ருகப் போம்.]

ப—ரை: இருள் இன்றேல் - ஆணவம் என்ற பொருள் இல்லையாயின், துன்பு ஏன் - ஆன்மாவுக்குப் பிறவித் துன்பமிராது; உயிரியல்பேல் - இந்த ஆணவம் ஆன்மாவின் குணமாயின், போக்கும் பொருள் உண்டேல் - ஆணவத்தைக் கெடுக்கத்தக்க பொருளொன்று உள்ளதாயின், ஒன்ருகப் போம் - (அப்பொருள் ஆணவத்தைக் கெடுக்கும்போது) அக் குணத்தையுடைய பொருளாகிய ஆன்மாவுங் கெட்டுப்போம்.

[அவ்வாறு ஆன்மா கெட்டுப்போகாமையால், ஆணவம் ஆன்மாவின் குணமன்று,]

''இருளின்றேல் துன்பேன்'' என்று, துன்பத்துக் காரணம் ஆணவம்'' என்றதினுலே துன்பத்துக்கு நேரே காரணமாகிய கர்மம் ஆணவத்தா லுண்டாவ தென்பது பெறப்படும்.

குணம் அழியும்போது குணத்தையுடைய பொருளும் அழியவேண்டும். நெருப்பின் குணமாகிய சூடு இல்லாமற் போகும்போது நெருப்பும் இல்லாமற் போம். நான்கு பக்கமும் சமமாயிருத்தல் சதுரத்தின் குணம். சமமா யிருக்குங் குணங் கெடச் சதுரமுங் கெடும். அதுபோல, ஆணவம் ஆன்மாவின் குணமாயின், அது திருவருளாற் கெடும்போது ஆன்மாவுங் கெடவேண்டும். முத்தி நிலையில் ஆன்மா கெடாதிருத்தலால், ஆணவம் அதன் குணமன்று என்பது அநுமானம். (7)

## ஆணவம் அநாதி

ஆசாதி யேலணைவ காரணமென் முத்திநிலை
பேசா தகவும் பிணி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ப—ரை: ஆசு ஆதியேல் - ஆணவமானது ஆன்மாவை இடையிற் சேர்ந்ததாயின், அணைவ காரணம் என் - அது அதைச் சேர்தற்கு இடையிலுண்டான காரண மென்ன; (அன்றியும்), முத்தி நிலை - (ஆன்மா சுத்தமாயிருக்கும்) முத்தி நிலையிலும், பிணி பேசாது அகவும் - ஆணவம் ஒரு காரணமுமின்றி, முன் போலவே, அதைத் திரும்பவும் பிடித்தல் கூடும்.

ஒரு பொருள் இருந்தபடி யிருப்பதற்குப் புதுக் காரணம் வேண்டியதில்லை. [உ—ம்] (1) ஒரு பலகையின்மே லிருக்கும் புத்தகம் இருந்தபடியே யிருப்பதற்குப் புதிதாகக் காரணஞ் சொல்ல வேண்டியதில்லை. எந்தெந்தத் தத்துவங்கள் அதை அந்த இடத்தில் முன் நிறுத்தினவோ, அவைகளே அதைப் பின்னும் நிறுத்தத் தக்கவை. அந்தப் புத்தகம் பின்பு அதிலில்லையாயின், அந்த மாறுதலைச் செய்தற்கு ஒரு புதுக்காரணம் வேண்டும். அந்த இடத்தில் அதை நிறுத்தின தத்துவங்கள் குறைந்தாயினும் கூடியாயினும் இருத்தல் வேண்டும். அந்தப் பலகையைச் சரித்தலாகிய ஒரு தத்துவம் கூடுவதால் அந்தப் புத்தகம் விழக்கூடும்; அல்லது அந்தப் பலகையைத் தாங்கி நிற்கும் கால்கள் இரண்டு விலகுவதனுல் அந்தப் புத்தகம் விழக்கூடும். (2) முன் பனிக்கட்டியாயிருந்த பொருள் பின்னுங் கட்டியா யிருத்தற்குக் காரணந் தேடவேண்டியதில்லை. பின்பு அது நீரானுல், அதற்குக் காரணம் வேண்டும். இப்படியே ஒரு பொருளினது நிலைமை மாறும்போது அந்த நிலை மாறுதற்குக் காரணம் வேண்டுமாதலால் ஆணவமானது முன் வேறிடத்தில் நின்று பின் ஆன்மாவைச் சேர்ந்ததாயின், அந்த ஆணவத்தின் நிலையை மாற்றி ஆன்மாவோடு சேர்த்த ஒரு காரணம் இருத்தல் வேண்டும். அப்படி அதை ஆன்மாவோடு சேர்க்கத்தக்க பொருள் ஒன்றுமில்லை. ஏனெனில், ஆன்மாவும் ஆணவமுமல்லாமல் நிற்கும் பொருளாகிய கடவுள் பேரருளுடையராதலால், ஆன்மாவுக்குத் துன்பத்தை வருவிக்கும் மலத்தை அதனோடு சேர்க்கமாட்டார். ஆன்மாவும் அறிவுடையதாதலால் தனக்குத் தீமையான ஒரு பொருளைத் தேடிப் பிடியாது. ஆணவம் சித்துப் பொருளன்ருதலால் தானுக ஆன்மாவைச் சேரமாட்டாது. ஆணவத்தை ஆன்மாவோடு சேர்க்கத்தக்க காரண மில்லையாயின், ஆணவம் ஆன்மாவை இடையிட்டுச் சேர்ந்ததன்றென்பது துணியப்படும். ஆதலால், ஆணவம் அநாதியே ஆன்மாவோ டுள்ளது. அன்றியும், சுத்தமான ஆன்மாவை ஆணவம் இடையிலே தானுகப் பிடித்ததாயின், ஆன்மா முத்தியடைந்த பின்னும் அது ஆன்மாவோடு சேரத்தக்கதாகும். முத்திக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குப் பின் ஆணவம் ஆன்மாவைச் சேருவதில்லையாதலால், அது ஆன்மாவை யிடையிலே சேர்ந்ததன்றென்பது துணிபாம்.

ஆணவத்தின் சத்திகள் ஆன்மாவின் இன்ப துன்ப நுகர்ச்சியாற் பிறக்கும் மெய்யறிவாலே தடுக்கப்படுகின்றன. நல்வினை செய்தலால் வரு மின்பம் நல்வினையிலே விருப்பையும், தீவினையால் வருந்துன்பம் தீவினையிலே வெறுப்பையும் ஆக்கி, ஆணவமல சத்தி ஒருவாறு மடங்குதற்கும் சிவபெருமானது திருவருளை அதிகமாக நுகருதற்கும் கருவியாகின்றன. இறுதியிலே ஆணவசத்திகள் முற்றாகத் தடைபடலும் திருவருள்நுகர்ச்சி நிறைவாதலும் நிகழ்கின்றன. இந்நிகழ்ச்சி முத்தி யெனப்படும்.

தீவினைப் பயனை ஒருகால் மாத்திரம் அநுபவித்தலால் அத்தீவினைக்குக் காரணமாய் நின்ற அவா கெட்டுப்போகா தென்பது, சிறைத் தண்டனையை அநுபவித்த கள்வன் பின்னும் களவு தொழிலில் முயல்வதால் அறியப்படும். (8)

## ஆணவத்தைக் கெடுக்கும் ஒரு கருவி மாயை

**ஒன்று மிகினு மொளிகவரா தேலுள்ளம்**
**என்று மகலா திருள்.**

[உள்ளம் ஒன்று மிகினும் ஒளி கவராதேல், இருள் என்றும் அகலாது.]

ப—ரை: உள்ளம் - ஆன்மாவானது, ஒன்று மிகினும் ஒளி கவராதேல் - மாயையினால் உண்டாகிய உடம்பு முதலியவைகள் கிடைத்த காலத்திலும் அறிவைப் பெறமாட்டாதாயின், இருள் என்றும் அகலாது - ஆணவ மயக்கம் ஒரு காலமும் அதை விட்டு நீங்காது.

ஆன்மா முத்தியில் ஆணவத்தினின்று நீங்குகின்றது. ஆதலால் மாயையினுடைய சார்பினால் அது அறிவைப் பெறுமென்பது கருத்து; "மாயைகொடு மலமழிப்பன் முன்னோன்" என்றார் பிறரும். மாயை = மா + யா; மா என்பது ஒடுங்குதல்; யா என்பது விரிதல்; அஃதாவது, தத்துவங்கள் தன்னில் ஒடுங்குவதற்குந் தன்னில் நின்று தோன்றுதற்கும் முதற்காரணமாயுள்ள பொருள் என்பது. மாயையானது சுத்தமாயை அசுத்த மாயை என இருவகைப்படும். சுத்தமாயைக்கு மாமாயை, விந்து, குண்டலினி, குடிலை என்னும் பெயர்களுண்டு. அசுத்தமாயைக்கு அதோமாயை, மோகினி என்னும் பெயர்களுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுத்தமாயையிலிருந்து வாக்கும், கலையும், சுத்த தத்துவங்களும் தோன்றும். வாக்காவது எழுத்தொலிகளின் வடிவினதாய் அபர ஞானத்தைக் கொடுப்பது. இது தூலவைகரி, சூக்குமவைகரி, மத்திமை, பைசந்தி, சூக்குமை யென ஐவகைப்படும். இவற்றுள் தூலவைகரி பிறர் செவிக்குக் கேட்பது; சூக்குமவைகரி தன் செவிக்கு மாத்திரங் கேட்பது. மத்திமை செவிக் கெட்டாததாய் சூக்குமமாய் அட்சரங்கள் பிரிந்து தோன்ற வருவது. இவைகள் மூன்றும் சவிகற்ப ஞானத்துக் கேதுவாவன. பைசந்தியானது அக்கரங்கள் பிரிந்து தோன்ருது நிர்விகற்ப ஞானத்துக்கு ஏதுவாவது. சூக்குமையானது ஞான ஒளியாய் ஏனைய வாக்குக்ககள் தோன்றுதற்குக் காரணமாய் அழிவற்றதாயுள்ளது.

வாக்கிலிருந்து சத்தப்பிரபஞ்சங்கள் தோன்றும். சத்தப் பிரபஞ்சங்களாவன, அகரம் முதலிய ஐம்பத்தொரு அக்கரங்களும், பிரணவம் முதலிய எண்பத்தொரு பதங்களும், ஈசானம் முதலிய பதினெரு மந்திரங்களுமாம்.

கலையானது சிவசத்தியால் அதிட்டிக்கப்பட்டு ஏனைய பிரபஞ்சங்களைத் தாங்கி நிற்பது. இவற்றை அதிட்டிக்கும் சத்தியானது தொழில் வேறுபாட்டால் நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந்தியதீதை என ஐந்து பெயர்களைப் பெறும். அது ஆன்மாக்களின் பந்தத்தை நீக்குங்கால் நிவிர்த்தி யென்றும், நிவிர்த்தி பெற்ற ஆன்மாக்களை அந்நிலையில் நிறுத்துங்கால் பிரதிட்டை யென்றும், அவற்றிற்கு ஞானத்தைப் பயப்பிக்குங்கால் வித்தையென்றும், ஞானத்தைப் பெற்றவைகளில் விருப்பு வெறுப்பைச் சாந்தி பண்ணுங்கால் சாந்தி யென்றும், சாந்தி நிலையையுங் கடக்கச் செய்யுங்கால் சாந்தியதீதை யென்றுஞ் சொல்லப்படும். இதனுல் அதிட்டிக்கப்படும் கலைகளும் முறையே இப்பெயர்களைப் பெறும்.

[சாந்தி + அதீதை = சாந்தியதீதை. அதீதை — கடந்தது]

சுத்த தத்துவங்களிலிருந்து புவனங்கள் தோன்றும். கலை, தத்துவம், புவனம் ஆகிய மூன்றும் அத்தப்பிரபஞ்சங்க ளெனப்படும், சத்தப்பிரபஞ்சங்களும் அத்தப் பிரபஞ்சங்களும் அத்துவாக்கள் எனப்படும்.

சுத்த தத்துவங்களாவன: சிவம், சத்தி, சதாசிவம், ஈசுரம், சுத்தவித்தையாகிய ஐந்துமாம். இவற்றுள், சிவதத்துவம் சிவபிரானது ஞானசத்தியின் சங்கற்பத்தால் சுத்தமாயையிலிருந்து தோன்றுவது. சூக்குமை வாக்காகிய நாதம் இத் தத்துவத்தைப் பற்றி நிற்றலால் இது நாததத்துவம் எனவும் படும். இப்படிச் சிவதத்துவமாய் நின்ற சுத்தமாயை, சிவபிரானது கிரியாசத்தியின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கற்பத்தினுல் சத்தி தத்துவமாகும். இது பைசந்தியென்னும் வாக்கிற்குப் பற்றுக்கோடாகலின் விந்து தத்துவமென்றும் பெயர் பெற்று நிற்கும். சிவபிரானது ஞானக் கிரியா சத்திகளின் சங்கற் பத்தாற் சத்தி தத்துவத்தினின்று சதாசிவ தத்துவம் தோன்றும். இதிலே கிரியாசத்தியின் சங்கற்பம் மிக்குச் செல்லுதலால், இதி லிருந்து ஈசுர தத்துவமும், இதிலே ஞானசத்தி மிக்குச் செல்லுதலாற் சுத்த வித்தியா தத்துவமும் தோன்றும்.

இவற்றிலுள்ள சிவசத்திகளும், அவற்றின் கலைகளும், ஆன் மாக்களும், இப்பக்கத்தில் வரும் கோட்டு வடிவத்திற் காண்க.

| தத்துவம் | சத்திகள் | கலைகள் | ஆன்மாக்கள் |
|---|---|---|---|
| சிவ தத்துவம் | ஞானசத்தி | இந்திரை முதலிய 10 | சூக்கும லய வாசனை மாத்திரமுள்ள முத்தர் |
| சத்தி தத்துவம் | கிரியாசத்தி | நிவிர்த்தி முதலிய 5 | தூல லய வாசனையுடைய முத்தர் |
| சதாசிவம் | ஈசானி முதலிய 5 ஆரணி முதலிய 3 | சசினி முதலிய 38 | அணுசதாசிவர் முதலியோர் |
| ஈசுரம் | | | வித்தியேசுரர், உருத்திரர். |
| சுத்த வித்தை | வாமை முதலிய 9 | | நந்தி முதலிய கணங் கள். கீழுள்ள உருத் திரன், மால், அயன் முதலியோரைத் தொ ழிற்படுத்தும் உருத் திரன், மால் அயன் முதலியோர். |

அசுத்தமாயையிலிருந்து காலம், நியதி, கலையாகிய மூன்றுந் தோன்றும். காலம் ஆன்மாக்களுக்குரிய இன்ப துன்பமாகிய போகங்களை அனுபவிக்கவேண்டிய காலங்களிலே சிவசத்தியினுடைய தூண்டுதலால் அனுபவிக்கச் செய்வது; நியதி அவரவர் செய்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கர்மத்தின் பலனை ஏறுமலும் குறையாமலும் அளவாக அனுபவிக்கும் ஒழுங்கைச் செய்வது, (நியதி - ஒழுங்கு.) கலையானது கர்மத்திறைல் வரும் இன்ப துன்ப நுகர்ச்சியிறைல் ஆணவப்பிணிப்பு குறைய, ஆன்மாவினது கிரியாசத்தி சிறிதுசிறிதாக விளங்குவதற்குத் துணையாய் நிற்பது. கலையினின்றும் வித்தை தோன்றும். இது ஆணவ வலி குறைய, ஆன்மாவினது ஞானசத்தி விளங்குதற்குத் துணையாய் நிற்பது. வித்தையினின்றும் இராகம் தோன்றும். இது ஆன்மாக்களின் மலத்துக்குத் தக்கதாகப் பிரகிருதிதத்துவத்திலுள்ள விஷயங்களிலே செல்லுந் தன்மையான ஆசையை யுண்டாகச்செய்வது. ஆதலால் இது ஆன்மாவின் இச்சாசத்தி முயற்சி செய்யத் துணையாவது. இவ் வைந்து தத்துவங்களும் ஆன்மாவின் பஞ்ச கஞ்சுகம் (ஐந்து சட்டை) எனப்படும். இராகம் வித்தை கலை ஆகிய மூன்றும் ஆன்மாவினுடைய இச்சா ஞானக் கிரியாசத்திகள் தொழில் செய்தற்குத் துணையாதலால், அது தன்னையுணர்ந்து, நான் இச்சிக்கிறேன், நான் அறிகிறேன், நான் செய்கிறேன் என்று கருதுகின்றது. இப்படிக் கருதுவிக்கும் தத்துவம் புருட தத்துவம் எனப்படும். திரியும் எண்ணெயும் நெருப்புஞ் சேர விளக்கென்ற பொருள் தோன்றுவதுபோல, கலை வித்தை இராகம் ஆகிய மூன்றுஞ் சேரப் புருஷ தத்துவம் தோன்றும். இத்தன்மைத்தாகிய ஆன்மாவையே புருடன் என்பாருமுளர். கலையினின்றும் மூலப் பிரகிருதி தோன்றும். காலம், நியதி, கலை, வித்தை, இராகம், புருஷன், மூலப்பிரகிருதி ஆகிய ஏழும் வித்தியா தத்துவங்களெனப்படும்.

பிரகிருதியிலிருந்து குணதத்துவம் தோன்றும். இதிலே சத்துவம், ராஜசம், தாமசம் என்னும் மூன்று குணங்களும் சமமாய் நிற்கும். சத்துவ குணமானது மன உறுதி, சாமர்த்தியம் சாந்தம், பெருமகிழ்ச்சி, நேர்மை, நன்முயற்சி, இனிமை, பொறுமை, திருப்தி, மோக்ஷஆசை, இந்திரிய அடக்கம், சீவகாருண்ணியம் ஆகிய இவைகளை உண்டாக்கும். இராஜச குணம் கடினம், உலக விஷயங்களில் உற்சாகம், செருக்கு, தயவின்மை, உலகவின்ப இச்சை, இடம்பாசாரம் ஆகிய இவைகளை உண்டாக்கும். தாமசகுணம் திருப்தியின்மை, சோம்பல், இழிவான சீவியம், தீயஉணவிலிச்சை, பேருண்டிப் பிரியம், பிறருக்கிடர் செய்தல், அறிவீனம் ஆகிய இவற்றை உண்டாக்கும். குணதத்துவத்தினின்றும் சத்துவம் மிக்கதாய்ப் புத்தி தோன்றிப் பொருள்களை ஆராய்ந்து நிச்சயிக்கும். புத்தியினின்றும் இராஜசம் மிக்கதாய் அகங்காரம் தோன்றி அகந்தைக்குக் காரணமாய் உடம்பிலுள்ள வாயுக்களை எழுப்பித் தொழில் செய்தற்குக் காரணமாகும். இது சத்துவம் மிகுந்து நிற்கும்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


தைசதமென்றும், ராஜசம் மிகுந்து நிற்கும்போது வைகரியென்றும், தாமசம் மிகுந்து நிற்கும்போது பூதாதி யென்றும் பெயர் பெறும். இவற்றுள் தைசதத்தினின்றும் மனம் தோன்றி இச்சைக் கிடனுகி, இச்சித்தவற்றிலே பொறிகளைச் செலுத்தி இது இன்னதென்று சங்கற்பித்துப் பின்பு ஐயுற்று நிற்கும். முன் கண்ட ஒருவரை நாம் காணும்போது அவருடைய நினைப்பேனும் அவரைப் போன்ற ஒருவரது நினைப்பேனும் மனத்துக்குத் தோன்றி இவர் அவர் என்ற சங்கற்பமுண்டாகும். அது நிச்சயமாகாவிடில் அதைச் சிந்திக்கும்போது அவரோ வேறெவரோ என்ற ஐயமுண்டாகும். இவ்வாறு தூக்கிச் சிந்திக்கும்போது மனம் சித்தமெனப்படும்.

தைசதத்தினின்றும் காது, துவக்கு, கண், நாக்கு, மூக்கு என்னும் ஐந்தும் தோன்றும். வைகரி யகங்காரத்தினின்றும் கர்மேந்திரியங்களாகிய வாக்கு, பாதம், பாணி, பாயு, உபத்தம் என்னும் ஐந்துந் தோன்றும். பூதாதி யகங்காரத்தினின்றும் சத்தம், பரிசம், ரூபம், இரசம், கந்தம் என்னும் ஐந்து தன்மாத்திரைகள் தோன்றும். தன்மாத்திரைகள் ஐந்தினின்றும் முறையே வான், வளி, தீ, நீர், நிலம் ஆகிய பூதங்கள் ஐந்துந் தோன்றும். நிலத்தத்துவ அணுக்கள் நாற்கோணம்; நீரணுக்கள் பிறைவடிவம்; தீயணுக்கள் முக்கோணம்; வளியணுக்கள் அறுகோணம்;வானணுக்கள் வட்டம்.

சிவபெருமானுடைய சத்திகள் நின்று முயற்சி செய்யுந் தத்துவங்களாதலால், சிவதத்துவம் பிரேரக காண்டம் எனப்படும். சிவதத்துவத்துக்குக் கருவியாய் நின்று ஆன்மாவைப் போகம் அனுபவிக்கப் பண்ணுகையால், வித்தியாதத்துவம் போககாண்டம் எனப்படும். அனுபவிக்கப்படும் பொருள்களைக் கொடுத்தலால், ஆன்மதத்துவம் போக்கிய காண்டம் எனப்படும். இது எவ்வாறெனில்,

சத்தி தத்துவம் கலாதத்துவத்தைப் பிரேரிக்க, அது ஆன்மாவின் கிரியாசத்தி விளங்குதற்குத் துணையாகும். அவ்விளக்கத்தைக் கொண்டு அகங்காரம் தொழில் செய்விக்கும். ஈசுரம் அராக தத்துவத்தைப் பிரேரிக்க, அது ஆன்மாவின் இச்சாசத்தி விளங்கத் துணையாகும். அவ்விளக்கத்தால் மனம் இச்சிக்கும். சுத்தவித்தை வித்தையைப் பிரேரிக்க, அது ஆன்மாவின் ஞானசத்தி விளங்கத் துணையாகும். அதைக் கொண்டு புத்தி பொருளை நிச்சயிக்கும். இனி புருஷன், சித்தம், மனம், புத்தி, அகங்காரமாகிய ஐந்து தத்துவங்ளும் பிரணவத்தின் பகுதிகளாகிய நாதம் விந்து மகரம் உகரம் அகரம் ஆகிய அட்சரங்களால் முறையே செலுத்தப்படுகின்றன. இவ்வட்சரங்களை அதிட்டிக்கும் அதி தெய்வங்கள் சதாசிவன் மகேசுரன் உருத்திரன் மால் அயன் ஆவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானேந்திரியங்களும் கர்மேந்திரியங்களும் நாம் தூலமாகக் காணும் காது முதலிய உறுப்புக்களும் வாய் முதலிய உறுப்புக்களு மல்ல. அவைகள் அதி சூக்குமமான வஸ்துக்கள். உதாரணமாகக் காது என்னும் ஞானேந்திரியமாவது காதை அதிட்டித்து மூளையிலே யுள்ள சுரோத்திர மத்தியத்திலுள்ள அசைவை மனத்துக்குச் சூட்சுமமாகக் காட்டுவது. கை யென்னுங் கர்மேந்திரியம் நீட்டுதல் சுருக்குதலாகிய தொழிலைச் செய்விப்பதாய்க் கை கட்புருவம் முதலிய பல இடங்களில் வியாபிக்கும். தன்மாத்திரைகளாவன ஞானேந்திரியங்கள் விஷயங்களை அறிதற்குக் கருவியாயுள்ளவைகள். இதை, ''நேச விந்திரியங்கட்கு நிகழறிவிதனுற் காண்டும்'' என்பதனலறிக.

பூதங்களெனப்படும் நிலம் நீர் தீ காற்று வெளி யென்பன நமது கண்ணுக்குத் தோன்றும் நிலம் நீர் முதலியவைகளல்ல. பூதங்கள் கண்ணுக்குத் தோன்ருத அணுக்கள். அவைகள் பல வகையாகச் சேர்ந்து நமது கண்ணுக்குத் தோன்றும் நிலம் நீர் முதலிய பொருள்களாகின்றன. (9)

## மாயை கன்மங்களின் இயல்பு

**விடிவா மளவும் விளக்கனைய மாயை**
**வடிவாதி கன்மத்து வந்து.**

ப—ரை: மாயை வடிவாதி - மாயையினலாகிய தனு கரண புவன போகங்கள், கன்மத்து வந்து - ஆன்மாக்களுடைய புண்ணிய பாவங்களுக்குத் தக்கவைகளாகத் தோன்றி, விடிவாம் அளவும் விளக்கு அனைய - விடியும் வரையும் இருளை ஒருவாறு நீக்கத்தக்க விளக்குப் போல, ஆன்மா சிவஞானமாகிய பேரொளியைப் பெறுகின்ற முத்திநிலை வரையும் ஆணவ இருளை ஒருவாறு நீக்கத் தக்க அறிவைக் கொடுக்கும் கருவியாக நிற்கின்றன.

[வடிவு — உருவுடைய தநு. வடிவு ஆதி - தநு முதலியன]

தநு = உடம்பு; கரணம் = இந்திரியம் முதலிய புறக் கருவிகளும் மனம் முதலிய உட்கருவிகளும்; புவனம் = வசிக்கும் உலகம்; போகம் = அநுபவிக்கப்படும் பொருள்கள்.

வினை, பசுவினை சிவவினை என இருவகைப்படும். பசுவினை யாவது உயிர்களுக்குச் செய்யப்படும் வினை. அவைகளுக்கு நன்மை செய்தல் பசுநல்வினை; அவைகளுக்குத் தீமைசெய்தல் பசுத்தீவினை. பசுநல்வினைகளாவன:- ஈதல், வேட்டல், வாய்மை, இரக்கம், பெரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாரைப் பேணல் முதலியன. பசுத்தீவினைகளாவன:- சிவனடியார் நிந்தை, கொலை, புலாலுண்ணல், களவு, நன்றி மறத்தல், வஞ்சனை, பொருமை முதலியன. சிவநல்வினைகளாவன: சரியை, கிரியை, யோகம் என்னும் மூன்று மார்க்கங்களிலும் செய்யப்படுபவை; அந்த மார்க்கங்களில் நின்று அவைகளைச் செய்யாதொழிதல் சிவத் தீவினை. அகந்தை மமதையின்றித் தன் செயலற்றுச் சிவன்செய லாகச் செய்யப்படும் வினைகள் ஞானமார்க்கத்துச் சிவபுண்ணி யங்கள்; இவைகள் விருப்பு வெறுப்பின்றிச் செய்யப்படுதலால் பயன் தரா. வினையானது செய்யப்படும்போது ஆகாமியமென் றும், பயன் தரும் வரையும் சூக்குமமாய்ப் புத்தி தத்துவத்தைச் சார்ந்து நிற்கும்போது சஞ்சிதமென்றும் புண்ணிய பாவமென்றும், பயன்படும்போது பிராரத்தமென்றும் பெயர்பெறும்.

இவற்றைத் தெளிவாகக் கூறுகில்: எடுத்த ஒரு பிறவியிலே செய்யப்படும் வினை ஆகாமியமாம்; பழைய வினையுள்ளே எடுத்த பிறவியிலே அநுபவிக்கப்படும் வினை பிராரத்தமாம். பழைய வினை யிலே அநுபவிக்கப்படாது எஞ்சி நிற்கும் வினை சஞ்சிதமாம்.

கடவுள் மாயையினின்றும் தனு கரண புவன போகங்களை ஆக்கி, ஆன்மாக்களுக்குக் கொடுத்தலின் முதனோக்கம் ஆணவத்தின் வலியைக் கெடுத்தலாம். அவைகளின் தன்மையும் அளவும் ஆன்மாக் கள் அனுபவிக்கவேண்டிய பிராரத்தத்துக்குத் தக்கனவாம். பிரா ரத்தம் இச்சை, பரேச்சை, அநிச்சை என மூன்றுவிதமாய்ப் பலன் கொடுக்கும். ஒருவன் இன்பத்தைத் தேடி அநுபவித்தல் இச்சை; இன்ப துன்பத்தைப் பிறர் ஊட்டுதல் பரேச்சை; தற்செயலாக வருவது அநிச்சை. பிராரத்தத்தினுல் வருந்துன்பங்கள் ஆதிதெய் விகம், ஆத்தியான்மிகம், ஆதிபௌதிகமென மூவகைப்படும். ஆதி தெய்விகமாவது தெய்வத்தையே காரணமாகக் கொண்டு வருவது. இது கருப்பாசயத்து வேதனை, உடம்பு திரைதல், நரகவேதனை முதலி யன. ஆத்தியான்மிகமாவது வியாதி சத்துருக்கள் கள்வர் விலங்குகள் முதலிய காரணங்களால் வருஞ் சரீரவேதனையும், அழுக்காறு துக்கம் முதலிய மனவருத்தங்களுமாம். ஆதிபௌதிக மாவது குளிர் சூடு காற்று இடி மின்னல் முதலியவற்ருல் வருந் துன்பங்கள்.

வினைகள் மந்திரம், பதம், வன்னம், புவனம், தத்துவம், கலை ஆகிய ஆறுஅத்துவாக்களிலும் நிற்பன. மந்திரம், பதம், வன்னம் ஆகிய இவற்றை உச்சரிக்க வேண்டிய முறைப்படி உச்சரித்தல் புண்ணியம். அவ்வாறு உச்சரியாமை பாவம். இந்தப் புண்ணிய பாவங்கள் இந்த அத்துவாக்களில் நிற்பன. புவனநாயகருக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணிய பூசாதிகளாலே புண்ணியம்; நிந்தை முதலியவற்றாற் பாவம். இப்புண்ணிய பாவங்கள் புவனத்துவாவில் நிற்பன. ஞானேந்திரிய கன்மேந்திரிய அந்தக்கரணங்களாற் பண்ணிய உபகாரங்களும் நல்ல பொருள்களை அனுபவித்தலும் புண்ணியம். அவற்றாற் பண்ணிய அபகாரமும் தீய பொருள்களை அனுபவித்தலும் பாவம். இவைகள் தத்துவங்களில் நிற்பன. கலைகளுக்கு அபிமானிகளான பஞ்சசத்திகளுக்குப் பண்ணிய பூசாபூசைகள் புண்ணிய பாவங்களாம். அவைகள் கலைகளில் நிற்பன.

ஆகாமியமானது திருட்டம், அதிருட்டம், திருட்டாதிருட்டமென மூவகைப்படும். திருட்டமாவது அவ்வினை செய்யப்பட்ட பிறவியிலே பயனைக் கொடுப்பது. ஒருவன் ஒரு தீவினை செய்து அதற்குத் தக்க இராச தண்டனையைப் பெற்றானாகில் அத்தீவினை திருட்டம். அதிருட்டமாவது செய்த பிறவியிலே பயனைக் கொடாத வினை. கன்மங்களுட் பெரும்பாலானவை இத் தன்மையன. திருட்டாதிருட்டமாவது செய்த பிறவியிலும் அதன் பின்னும் பயனைக் கொடுப்பது. பெரும் பாதகஞ் செய்தோர் சிலர் அப்பிறவியிலே மனம் வருந்துவர்; அப்பிறவியின் பின்னும் வருந்துவர். புண்ணியஞ் செய்தோர் சிலர் அப்பிறவியிலே மகிழ்ச்சியுடையராய் அதன் பின்னும் இன்புறுவர். இவ்வினைகள் திருட்டாதிருட்டம். (10)

## நான்காம் அதிகாரம் -- அருளதுநிலை

அஃதாவது திருவருளின்து தன்மை. திருவருளாவது பதிமுதுநிலை யதிகாரத்தில் இரண்டாஞ் செய்யுளிற் சொல்லப்பட்ட 'தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத்தருஞ் சத்தி'யாம்.

### அருளின் பெருமை

**அருளிற் பெரிய தகிலத்து வேண்டும்**
**பொருளிற் றலையிலது போல்.**

[அகிலத்து, வேண்டும் பொருளில் தலை இலது போல், அருளில் பெரியது (இலது).]

ப—ரை: அகிலத்து வேண்டும் பொருளில் - பூமியிலே (ஆன்மாக்கள் அவ்வக் காலத்தில் இன்றியமையாததாக) விரும்பும் பொருளிலும், தலையிலதுபோல் - மேலான பொருள் இல்லாதது போல, அருளிற் பெரியது (இலது) - திருவருளுக்கு மேலானதும் ஒப்பானதுமான பொருள் இல்லை.

[அகிலம் - பூமி. தலை - தலையானது, மேலானது]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோடிக் கணக்கான திரவியத்தை யுடைய ஒருவன் தண்ணீர் அகப்படாத தனிவழியிலே போகும்போது, அவனுக்குத் தாங்குதற் கரிய தாகம் வருமாயின், அவனுக்கு வேண்டும்பொருள் தண்ணீரே. அப்போது, ஒருவன் தண்ணீர் கொண்டு வருவானாயின் அதைப் பெற்றுக்கொள்ளுதற்கு அவன் தன்னுடைய கோடி திரவியத்தை யுந் தன்னுடைய சுயாதீனத்தையும் அவனுக்குக் கொடுக்க விரும்பு வான். ஆதலால் அச்சமயத்தில் "வேண்டும் பொரு" ளாகிய தண் ணீரிலும் பார்க்க மேலான பொருள் அவனுக்கு உலகத்திலில்லை. தாங்குதற்கரிய வியாதியால் வருந்தும் ஒருவனுக்கு அவ்வேதனையை நீக்கக்கூடிய மருந்து அச் சமயத்திலே "வேண்டும்பொரு" ளாகும். அதைப் பெற்றுக் கொள்ளுவதற்குத் தனக்குள்ள எல்லாவற்றையுங் கேட்டாலுங் கொடுப்பான். உலக வாழ்க்கைக்கு "வேண்டும் பொருள்" உலகப் பொருள்களுக்குள் ஒப்பு உயர்வு இல்லாதிருத் தல்போல, முத்தியின்பத்துக்கு இன்றியமையாத திருவருளானது ஒப்பு உயர்வு இல்லாத பொருளாகின்றது. தண்ணீர் கிடையாத இடத்திலே தாகத்தினாற் சுழன்று வருந்துகிற ஒருவன் அதைப் பெற்றுக்கொள்ளுதற்குத் தனக்குரிய பொருள்கள் எவைகளையுங் கொடுக்கவும் தன்னாலியன்ற முயற்சிக ளெல்லாவற்றையும் செய்ய வும் உண்டாகும் விருப்பத்திலும் பார்க்க அதிகமான விருப்பத் தோடு, ஆன்ம ஈடேற்றத்திற்கு இன்றியமையாததாகிய திருவருளைப் பெறுதற்கு, ஒருவன் தன்னுடைய பொருட்செல்வம் கல்விச்செல் வம் சிரத்தையாகிய இவற்றை முற்றாக உபயோகித்துத் தன்னு டைய வாக்காலும் காயத்தாலும் மனத்தாலும் செய்யத்தக்க முயற்சிக ளெல்லாம் செய்யவேண்டும் என்பதாம். "வைத்த பொருளுடலாவி மூன்றும் நின் கைவசமே யான் கொடுக்க வாங்கிக் கொண்டு, சித்தமிசைப் புகுந்தது" என்று தாயுமானசுவாமியும், "யாமோதிய கல்வியுமெம்மறிவுந் தாமேபெற வேலவர் தந்ததனாற் பூமேன்மயல் போயறமெய்ப் புணர்வீர், நாமே னடவீர் நடவீ ரினியே" என்று அருணகிரிநாதரும் பாடியதைக் காண்க. லௌகி கர்கள் இவ்வளவு செய்தல் இயலாதாதலால், திருவருளைப் பெறும் முயற்சிகளாகிய தேவார திருவாசக பாராயணம், திருத்தொண்டு கள், கடவுள் வழிபாடு முதலியவைகள் செய்யக்கூடிய சமயங்க ளிலே, விஷய இன்பங்களை இழக்கினும் இவைகளைப் பொருட்படுத் தாது, ஆன்ம ஈடேற்றத்துக்கு வேண்டிய முயற்சிகளையே செய்ய வேண்டும். கல்வியைக்கொண்டு ஞானசாஸ்திரங் கற்கவும் போதிக் கவும் சமயங் கிடைத்திருக்கும்போது அந்தக் கல்வியை லௌகிக விஷயத்தில் உபயோகிக்கலாகாது. செல்வத்தையும் அவசியமான நல்வழிகளில் உபயோகித்தல் தக்கதாம். (1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவருளின் பயன்

பெருக்க நுகர்வினை பேரொளியா யெங்கு
மருக்கனென நிற்கு மருள்.

[அருள், அருக்கன் என, பெருக்கம் (ஆய்) நுகர்வினை (ஆய்) பேர் ஒளி ஆய், எங்கும் நிற்கும்.]

ப—ரை. அருக்கனென — (உலகத்திலுள்ள உயிர்த் தோற்றங்களுக்கு வேண்டிய ஆகாரம் முதலியவைகளைக் கொடுத்து அவைகளை அனுபவிப்பித்து ஒளியைக் கொடுத்து நிற்குஞ்) சூரியனைப் போல், அருள் - திருவருளானது, பெருக்கமாய் - கர்மங்களை வளர்ப்பதாய், நுகர்வினையாய் - (அவைகளைத் தொலைத்தற்காக இன்ப துன்பங்களை) அனுபவிப்பிப்பதாய், பேரொளியாய் - (அந்த அனுபவத்தினால் ஆணவத்தின் வலியைக் குறைத்து ஆன்மாவின் ஞான சத்தியாகிய) ஒளியை மேலாக விளக்குவதாய், எங்கும் நிற்கும் - எல்லா ஆன்மாக்களிடத்திலும் நிற்கும்.

ஆணவத்தினாலே மனத்திலுண்டாகிய சலனங்களாகிய ஆசை கோபம் மயக்கம் முதலியவைகள் முழு வலியோடு நிற்பனவாயின், அவைகள் தம் வழியே சென்று பின்புதான் அடங்கும் இயல்பையுடையன. ஒரு தாயானவள் தன்னருமையான பிள்ளை திடீரென இறந்ததைக் காணும்போது மிகுந்த துக்கத்தை யடைகிறாள். அந்தச் சமயத்திலே யார் என்ன தேறுதல் சொன்னாலும் அவள் கேளாள். அவள் தலையிலும் நெஞ்சிலும் அடித்து அழுது வருந்திய பின்புதான் அத் தேறுதலைக் கேட்டுப் படிப்படியே துயர் தீருவாள். இப்படியே ஆணவத்தினால் உண்டாகிய மனச்சலனம் முழு வலியோடு நிற்கும்போது தன் வழியே போய் வினைகளைச் செய்விக்கும், வினைகளைச் செய்ய விடுதலும் ஆணவம் வலி கெடுதற்கு நிமித்த காரணமான திருவருட் செயலாம். இதனை ஆசிரியர் ''பெருக்கமாய்'' என்றார். இந்த வினையைத் தீர்த்தற்காகத் திருவருள் ஆன்மாவுக்கு இன்ப துன்பங்களைக் கொடுக்கின்றது, இது ''நுகர்வினை'' எனப்பட்டது. இவைகளை அனுபவிக்கும்போது ஆணவப் பிணிப்புக் குறைகிறது, அப்போது அருளானது ஆன்மாவின் ஞான சத்தியை விளக்கும். திருவருள் ஞான சத்தியை விளக்குதலாற் ''பேரொளியாய்'' என்றார். சூரியன் பூமியின் ஒருபக்கத்தில் நிற்கும்போது மற்றப் பக்கம் இருள் அடைவதுபோலாகாமல், திருவருள் எங்கும் பிரகாசிப்பதால் ''எங்கும் அருக்கனென'' என்றார்,

## அருளின்றி அறிவு பெறப்படாது

ஊனறியா தென்று முயிரறியா தொன்றுமிது
தானறியா தாரறிவார் தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[ஊன் என்றும் அறியாது; உயிர் ஒன்றும்தான் அறியாது; இதுதான் அறியாது ஆர் அறிவார்?]

ப—ரை; ஊன் என்றும் அறியாது - (அசேதனங்களாகிய தத்துவங்களா லாக்கப்பட்ட) உடல் ஒரு காலமும் ஒன்றையும் அறியமாட்டாது, உயிர் ஒன்றும் அறியாது - ஆன்மா ஆணவத்தாற் பிணிக்கப்பட்டிருத்தலால் ஒன்றையும் தானுக அறியமாட்டாது. இது தான் அறியாது - இத் திருவருளறிந்து சேர்த்தாலன்றி, ஆர் அறிவார் - அறிவைப் பெறக் கூடிய ஆன்மா எது?

[அறியாது - முதலிரண்டும் முற்று வினைகள். மூன்ருவது எச்சவினை; அறிவியாமல் என்று பொருள். ஊன் - ஊனுலாகிய உடல்.]

மூன்ருமதிகாரத்தில் மாயையினுல் ஆணவம் நீக்கப்படுமென்று சொல்லி யிருத்தலால், ''திருவருள் வேண்டியதேன்'' என்னும் வினுவுக்கு இச் செய்யுள் விடையளிக்கின்றது. மாயையினின்றுந் தோன்றிய தனுகரண புவன போகங்கள் மல நீக்கத்திற்குத் துணைக் காரணமன்றி நிமித்தகாரணமல்ல. நிமித்தகாரணந் திருவருளே, அஃதில்லையாயின் ஆன்மாக்கள் தனுகரணுதிகளைப் பெறுவதும் பயனடைவதுமில்லை. ''ஊனறியாதொன்றும்'' எனவும் பாடம். (3)

## ஆன்மாக்கள் அருளை அறியாமைக்குக் காரணம்

பாலாழி மீனுளும் பான்மைத் தருளுயிர்கண்
மாலாழி யாழ மறித்து.

[உயிர்கள் அருள் மறித்து மால் ஆழி ஆழும். பால் ஆழி மீன், ஆளும் பான்மைத்து.]

ப—ரை: உயிர்கள் - ஆன்மாக்கள், அருள் மறித்து - (தாம் வாழுதற் கிடமாகிய) அருளை (ப் பயன்படுத்திச் சிவானந்தத்தை அடைதலைத்) தவிர்த்து, மால் ஆழி ஆழும் - மயக்கத்தைக் கொடுக்கும் உலக விஷயமாகிய சமுத்திரத்தில் ஆழ்ந்து நிற்கும், (அப்படி நிற்றல்) பால் ஆழி மீன்—பாற்சமுத்திரத்தில் இருக்கும் மீன்கள், ஆளும் பான்மைத்து - அங்கே நிறைந்துள்ள பாலைப் பருகாமல் இழிவான பிராணிகளைத் தேடியுண்ணும் முறைமைபோலாகும்.

[மால் - மயக்கம். பான்மை - தன்மை - முறைமை.]

பாற்கடலிலுள்ள மீன்கள் எங்கும் எப்போதும் இடைவிடாமற் பாலைக் காண்பதினுல், பால் என ஒரு பொருள் இருத்தல் அவைகளுக்குத் தோன்ருது. அதுபோல ஆன்மாக்கள் இடையருமல் அருளிலே வசித்தலால் அருளை உணராமல் இருக்கின்றன. கடலிலே இழிவான பிராணிகள் தோன்றுவதையும் மறைவதையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீன்கள் காண்பதனால், அவைகளைப் பொருளாக எண்ணி அவைக ளைத் தேடுவதும் தின்பதுமே முயற்சியாகக் கொள்கின்றன. ஆன் மாக்களுக்கு விஷய இன்பங்கள் சிலகாற் கிடைத்துச் சிலகாற் கிடையாமையால், அவைகள் அவ்வின்பங்களையே பொருளாக எண்ணி அவைகளைத் தேடுவதும் அனுபவிப்பதுமே முயற்சியாகக் கொள்கின்றன. மீன்கள் பாலைக் கண்டும் அதை வேண்டும் பொரு ளென் றறியாததுபோல; ஒருவகையான ஆன்மாக்கள் திருவருளின் செய்கைகளைக் கண்டும் அதை அறியாம லிருக்கின்றன. அந்த ஆன்மாக்கள் திருவருளை உணரத்தக்கவையாகும்போது அதையே தமக்கு வேண்டிய பொருளாகக் கொண்டு அதைப் பெறுதற்கு முயற்சி செய்யும்; இன்பங்களைத் தேடமாட்டா. '' மாலாழி யாளும்'' எனவும் பாடம். (4)

## இதுவுமது

அணுகு துணையறியா வாற்றேனி லைந்தி
னுணர்வை புணரா துயிர்.

ப—ரை: அணுகு துணை அறியா ஆற்றேனில் - தனக்குப் பின்னே சமீபத்திலே துணையாக வருபவனை அறியாத வழிப்போக் கனைப் போலவும், ஐந்தின் - தம்முடைய காட்சிக்குத் துணையாக நிற்கும் ஆன்மாவை அறியாத ஐம்பொறிகளைப் போலவும், உயிர் உணர்வை உணராது - ஆன்மா தனக்குத் துணையாக நிற்கும் ஞான மாகிய அருளை உணர்வதில்லை.

[ஆற்றேனில் ஐந்தின் என்பவற்றிலுள்ள இல், இன் உருபுகள் ஒப்புப்பொருளன. ஆறு - வழி. உணர்வு - ஞானமாகிய அருள். ஐந்து - ஐம்பொறிகள்.]

ஒரு வழிப்போக்கன் தான் அடையவேண்டிய இடத்திலே கண்ணுள்ளவனாய் அதையே எண்ணிக்கொண்டு போவானாகில், அவனுக்குப் பின்னே துணையாகப் போகிறவனை முற்றாக மறந்து விடுவான். அவன் சேருமிடத்தை எண்ணானாயின், தன்னுடைய துணையை அறிந்து துணைவன் என்று மகிழ்வான். அது போலச் சில ஆன்மாக்களுக்குத் திருவருளை உணரும் அறிவிருக்கவும், அவை கள் உலக இன்பங்களிலே கண்ணாயிருத்தலால் திருவருளை நினைப்ப தில்லை. இந்த ஆன்மாக்கள் ஒருவகையானவை. ஐம்பொறிகள் ஆன்மாவை அறியுஞ் சத்தியில்லாதன. அவைபோல வேறொரு வகை ஆன்மாக்கள் திருவருளை அறியுஞ் சத்தியில்லாமல் நிற்கின் றன. சிலகாலஞ் சென்றபின், ஆணவப்பீடை வேண்டிய அளவு கெட, இவை திருவருளை அறியும் ஆற்றலைப் பெறும். (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதுவுமது

**தரையை யறியாது தாமே திரிவார்**
**புரையை யுணரா புவி.**

ப—ரை: தரையை அறியாது - பூமியை (த் தமக்கு ஆதார மென்று( உணராமல், தாமே திரிவார் புரையை - தாமே (தமக்கு ஆதாரமானாற் போலப்) போக்கு வரவு செய்பவருடைய அறிவீனத்தை, புவி உணரா - ஆன்மாக்கள் அறியமாட்டா; (ஏனெனில், அவைகள் தாமே தமக்கு ஆதாரமென்றெண்ணுவதுபோல, இவைகள் திருவருளைத் தமக்காதாரமென் றறியாமல் தாமே தமச்கு ஆதாரமென்று மயங்கும் அறிவீனத்தை யுடையன.)

[புரை - குற்றம், அறியாமை. தரை - தரையிலுள்ள ஆன்மாக்கள்.]

பூமியிலுள்ளவர்கள் தம்முடைய சரீர முயற்சியினாலே தமக்கு வேண்டியவற்றைப் பெறுகிறார்கள். ஆயினும் சரீர முயற்சிக்கு வேண்டிய ஆகார முதலியவற்றையும் சரீர முயற்சியால் அடையும் பொருள்களையும் பூமியே கொடுக்கின்றது. தமது கண் காணப் பூமியில் உலாவுகின்றார்கள். பூமி யில்லையாயின் ஒரு கணப்பொழுதேனும் வாழமாட்டார்கள். ஆயினும் அவர்கள் பூமியைத் துணையென்று நினையாமல் தாமே தமக்குத் துணையென்று நினைக்கின்றார்கள். இதுபோல, ஆன்மாக்கள் திருவருள் கொடுத்த சத்தியைக் கொண்டு வாழ்வனவாயினும் ஆணவ மறைப்பினாலே திருவருளை மறந்து தமது வல்லமையினாலே தாம் வாழ்வதாக எண்ணுகின்றன. தரையிலுள்ளவர்கள் கடலிற் போகும்போது தோணியின் ஆட்டத்தாலும், நெடும் பிரயாணமாயின் ஆகாரமில்லாமையாலும், தரை தமக்கு ஆதாரமாயிருப்பதை உணருவர், அதுபோல இரத்த மிகுதியாலும் செல்வச் செருக்கினாலும் அருளை நினையாதவர்கள் இரத்தங் குறைந்து வியாதி பிடித்த காலத்திலேனும் வறுமை வந்த காலத்திலேனும் திருவருளை நினைப்பதுண்டு. இவர்கள் ஒருவகையான ஆன்மாக்கள்.

திருவருளை யறியாத ஆன்மாக்களின் நிலை இம் மூன்று கவிகளிலும் நான்காக வகுக்கப்பட்டிருப்பதைக் காண்க. (6)

## அருளை நாடுகிறவன் எளிதில் அறிவன்.

**மலைகெடுத்தோர் மண்கெடுத்தோர் வான்கெடுத்தோர் ஞானந்**
**தலைகெடுத்தோர் தற்கேடர் தாம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ப—ரை: மலை கெடுத்தோர் - மலையின் மேல் நின்று கொண்டு மலையைத்தேடுபவரும், மண் கெடுத்தோர் - நிலத்திலே நின்று நிலத்தைத் தேடுவோரும், வான் கெடுத்தோர் - தாம் உலாவுமிட மாகிய ஆகாயத்தில் நின்று ஆகாயத்தைத் தேடுவாரும், ஞானந் தலைகெடுத்தோர் - ஞானமாகிய அருளிலே தங்கி நின்று அதைத் தேடுவோரும், தற்கேடர் தாம் - தம்மைக் காணுமல் தம்மைத் தேடும் அறிவிலிகளை ஒப்பர்.

கெடுத்தல் - இழத்தல், இழந்தவர் இழந்ததைத் தேடுவராதலால் கெடுத்தோர் தேடுவோர்மேல் நின்றது.

மலையில் நிற்பவன் பார்த்தவுடனே மலையைக் காண்பான். அதுபோல அருளில் நிற்பவன் அதைப் பார்த்தவுடனே அதைக் காண்பான். ஆதலால் அருளானது அதைத் தேடுபவரால் எளிதில் அறியத்தக்க பொருள். ஒருவன் தன்னுடைய சரீரத்தை உற்றுப் பார்க்கும்போது ஒவ்வோரிடத்திலும் திருவருளின் செயலைக் காண் பான். திருவரு ளில்லையாயின் சரீரமானது அணு வணுவாகப் பரந்து உடனே அழிந்துபோம். மனித சரீரத்திலுள்ள பகுதிக ளெல்லாம் ஒன்றுக்கொன்று துணையாக அதி சித்திரமாக அமைக் கப்பட்டிருத்தலை ஒருவன் உற்றுநோக்குவானாயின், அத்திருவருளின் சகாயத்தால் நேர்ந்ததென்பதைத் தடையின்றி உணருவான். சரீரத்தைத் தந்ததுமன்றிச் சரீரம் நிற்றற்கு நிலத்தையும், உலா வுதற்கு ஆகாயத்தையும், சுவாசித்தற்குக் காற்றையும், உண்ணு தற்கு நீரையும் ஆகாரத்தையும், இவையெல்லாம் நிலைபெறுதற் குச் சூரியனையும் தந்தது திருவருளென்பது இனிது விளங்கும். திருவரு ளில்லையாயின் இவையொன்று மில்லையாம். ''ஆண்டநீ யருளிலையானால், வார்கட லுலகில் வாழ்கிலேன் கண்டாய்'' என்று மாணிக்க வாசக சுவாமி திருவாய்மலர்ந்தருளினர், ஆதலால் திரு வருளைத் தேடுபவன் அதை எளிதிற் காண்பான். அதை அறியா திருப்பவன் சிதடன் என்பது கருத்து. (சிதடன் - மூடன், குருடன்.)

## இதுவுமது

**வெள்ளத்து ணாவற்றி யெங்கும் விடிந்திருளாம்**
**கள்ளத் திறைவர் கடன்.**

ப—ரை: கள்ளத்து இறைவர் கடன் - (நிறைந்த அருளோடு கலந்து நின்றும் அதனால் வரும் பேரின்பத்தை அனுபவியாமல்) பொய்வழியில் தலைமை பெற்று நிற்கும் ஆன்மாக்களுடைய தன்மை. வெள்ளத்துள் நாவற்றி - நிறைந்த நல்ல நீரிலே செல்லும்போது பிற பொருளிலே நாட்ட முள்ளவன் அதைப் பருகாமல் நா வரண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வதையும், எங்கும் விடிந்து இருளாம் - எவ்விடத்திலும் இருள் நீங்கி விடிந்த பின்பும் கண்ணைப் பயன்படுத்தாது தடுமாறி நிற்ப தையும் போலும்.

[கள்ளத்திறைவர் என்றது ஆன்மாக்களை, கடன் - தன்மை]

''கள்ளத்திறைவர்'' என்றதனுல் ஆன்மா அறியத்தக்கதா யிருந்தும் அறிதற்குச் சற்றேனும் முயற்சி செய்யாமற் பொய்வழி யில் நிற்கின்றதென்பதும், அப்படி நிற்பதற்குக் காரணம் அருட் குறைவன்றென்பதும் பெறப்பட்டன.

முற்செய்யுளிலே திருவருளைத் தன்னிலே காணலாம் எனக் கூறிய ஆசிரியர், இச்செய்யுளில் தன்னைச் சூழ்ந்த பொருள்களிலும் காணலாம் என்பதை விளக்க ''வெள்ளத்துள் நாவற்றி'' என்ருர், யானை முதலிய மிகப் பெரிய பிராணிகளும், கொசுகு முதலிய மிகச் சிறிய பிராணிகளும் தம்முடைய சீவனைக் காத்தற்கு வேண் டிய வழிக ளெல்லாவற்றையும் பெறுதற்கு மூலகாரணமாய் நின் றது எது என்று நோக்கில், அது திருவருளே என்பது வெளிப்படை. திருவருளி னுண்மை இவ்வளவு எளிதில் அறியத்தக்கதா யிருக்க வும் அதை அறியாதிருப்பது ஆன்மாவின் அறிவுக் குறைவே, இர விலே ஆகாயத்திலே கணக்கில்லாத நட்சத்திரங்களைக் காண்கிருேம்; ஒவ்வொரு நட்சத்திரமும் நமது சூரியனைப்போன்றது. சூரிய னிலும் மிகப் பெரிய நட்சத்திரங்கள் கோடிக்கணக்காய் உள்ளன; பூமியையும் பூமியைத் தாங்குஞ் சூரியனையும் சூரியனிலும் பெரிய நட்சத்திரங்களையும் மற்றைய வானசோதிகளையும் இயக்குஞ் சத்தி எத்துணைப் பெரிதாதல் வேண்டும்! இவ் வான சோதிகளைப் பார்த் திருந்தும், திருவருளையும் அதன் பெருமையையும் உணரமாட்டா தார் கள்ளத்திறைவரேயாவர். (கள்ளத்திறைவர் - கள்ளத்திலே அதிகரித்தோர்) (8)

## அருளை அறியும் வழி

**பரப்பமைந்து கேண்மினிது பாற்கலன்மேற் பூஞை**
**கரப்பருந்த நாடுங் கடன்.**

ப—ரை; பரப்பு அமைந்து கேண்மின் - (ஞானநூல்களைக் கேட் கும்போது) பரபரப்பில்லாமல் நிறைந்த ஊக்கத்தோடு அவதா னித்துக் கேளுங்கள் (அப்படியன்றி வேறு விஷயங்களில் மனத்தை விட்டால் மாறுபாடாக விளங்கித் துன்பத்தை யடைவீர்கள்), இது - மனவொடுக்கமின்றிக் கேட்டல், பாற்கலன்மேற் பூஞை - உறியி லுள்ள பாற்குடத்திற்கு மேலே நிற்கும் பூனையானது, கரப்பு அருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடும் கடன் - இறப்பிலோடுங் கரப்பைத் தின்னுதற்காகப் பாற் குடத்தில் நின்றும் பாய்ந்தோடும் தன்மைபோலாகும்.

பரப்பு - (மனம் உலக விஷயங்களிற்)பரவியோடுதல்; அமைந்து- அடங்கி, ஒழிந்து; மன ஒருமைப்பாட்டுடன் என்றபடி.

[கரப்பு - கரப்பான் என்னும் பூச்சி. இது என்னும் சுட்டு பரப் பமையாது கேட்டலைக் குறித்தது.]

பூனை பாற்குடத்தினின்றுந் துள்ளிப் பாயும்போது, உறியினின் றும் பாற்குடம் விழுந்துடையப் பால் பூனைக்குப் பயன் படாமற் போகும். அதுபோல விளங்குதற்கரிய ஞானநூலைக் கற்கும்போது பிற விஷயங்களில் மனசைப் போக்குபவர் அதன் பொருளை மாறு பாடாக உணர்ந்து தடுமாறி வருந்துவர். கரப்பு ஒரு சிறுபிராணி. பூனை அதை உண்ணுதற்காகப் பாலை விட்டுப்போதல் பெரும் பேதைமை. அதுபோல அற்பமான உலக இன்பங்களை நாடி ஞானநூ லுபதேசத்தை அவதானியாமலிருத்தல் புல்லறிவாண்மையாம்.

ஞானநூல்களாவன வேதசிவாகமங்களும், அவற்றின் சாரமா கிய சிவஞானசித்தியார் முதலிய சைவசித்தாந்த சாத்திரங்களும், சிவபெருமானுடைய திருவருள் பதிந்த தேவாரம், திருவாசகம் முதலிய மெய்ஞ்ஞானிகள் வாக்குக்களுமாம். அருள் நூலைக் கேட்கும் முறைமை இச்செய்யுளில் விளக்கப்பட்டுள்ளது. அவற்றைக் கேட்டு அருளைப் பெறுதற்குப் பலவகையான சாதனங்கள் அனுட்டிக்கப் படல்வேண்டும். சரீரசுகம் வேண்டியவர்கள் சரீராப்பியாசஞ்செய்வ தும், விவேகவிருத்தி வேண்டியவர்கள் கலாப்பியாசஞ் செய்வதும் எவ்வளவு ஆவசியகமோ, ஞானவளர்ச்சி வேண்டியவன் ஞானப்பி யாசஞ் செய்வது அவ்வளவு ஆவசியகம். கணிதத்திலுள்ள ஒரு பாடத்தை ஒருவன் நிதானமாக விளங்கவேண்டுமாயின், அதைச் சார்ந்த பல அப்பியாசங்களைச் செய்யவேண்டும்; நீந்தப் பழகவேண் டியவன் அநேக நாட்களாக அதிலே பயிலல் வேண்டும். அது போலக் கடவுளுடைய திருவருளைப் பெறவேண்டின் அதற்குரிய சாதனங்களைப் படிப்படியாக நெடுங்காலம் பயின்று வரல்வேண் டும். சாதனை எவ்வளவு அதிகமாகச் செய்யப்படுகின்றதோ திரு வருட்பேறும் அவ்வளவு அதிகமாகும்.*

* அற்ப முயற்சியாற் பெரும்பேறு ஒருகாலும் வராது. ஆத லால் எந்தச் சமயங்களிலே சாதனை குறைவோ அந்தச் சமயங்கள் மெய்ச்சமயங்களாகா என்பது இனிது விளங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லௌகிகர்கள் அருள்பெறும் வழியை யடைதற்கு, உண்மை நாயன்மார் சரித்திரங் கேட்டலும், சிவபத்தரோடு சேருதலும் முதற்படியாம். அவர்களோடு சேருதலாலும் அச்சரித்திரங்களைக் கேட்டலாலும் அவர்களுடைய செயலிற் பற்றுண்டாக, அவர்களைப் போல நடக்க இவர்களும் விரும்புவர். அப்போது தேவார திருவாசகங்களை ஓதலுங் கேட்டலும் அவர்களுடைய உள்ளத்தைக் கவர்ந்து அதைக் கடவுளிலே செலுத்தும், பின்பு ஆலய வழிபாடு கடவுளிலே மனசைப் பதிக்கும். கடவுளிலே பற்றுடையவராயின் அவர்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு பாதங்களையும் அனுட்டித்துத் திருவருளை யடைவர்.

இந்நான்கு பாதங்களுள் ஒவ்வொன்றும் உபாயநிலை உண்மை நிலை என இருவகைப்படும். உபாயநிலை பத்தி குறைந்த நிலை. உபாயச் சரியை, உபாயக் கிரியை, உபாய யோகம், உபாய ஞானம் ஆகிய நான்கையும் அநுட்டித்தபின், உண்மைச் சரியை, உண்மைக் கிரியை, உண்மை யோகம், உண்மை ஞானம் ஆகிய இவற்றை அநுட்டிப்பர். ஒவ்வொரு பாதத்திலும் சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் நான்கு பாதங்களுமுண்டு. அவை சரியையிற் சரியை, சரியையிற் கிரியை, சரியையில் யோகம், சரியையில் ஞானம் எனவரும். ஆகவே சைவசமயப் படிகள் உபாய நிலை பதினாறும், உண்மைநிலை பதினாறுமாக முப்பத்திரண்டென்றறிக. இவற்றுள் ஒவ்வொரு வகையிலும் பல பேதங்களுண்டு.

சரியை—பெரும்பாலும் புறத்தொழிலாலும் சிறுபான்மை அகத்தொழிலாலுங் கடவுளை வழிபடுதல் சரியை. சந்தியாவந்தனஞ் செய்தலும், ஆலய வணக்கம், ஆலயத்தைக் கூட்டுதல், மெழுகுதல், தீவர்த்தி பிடித்தல் முதலிய ஆலயத் தொண்டுகளும், சிவனடியார்க்குச் செய்யப்படுந் தொண்டுகளும் சரியையிற் சரியை. இதை ''நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா'' என்று தொடங்கும் அப்பர்சுவாமி தேவாரத்திற் காண்க. உருவத் திருமேனிகளுள் ஒன்றைப் பூசித்தல் சரியையிற் கிரியை. கடவுளைத் தியானஞ் செய்தல் சரியையில் யோகம், அந்தத் தியானத்தாற் பெறப்படும் அநுபவ உணர்வு சரியையில் ஞானம்,

கிரியை—சரியையில் ஞானத்தால் வரும் பக்குவத்தால் நுண்ணுணர்வுடையாராய்ப் புறத்தொழிலாலும் அகத்தொழிலாலும் அருவுருவத் திருமேனியை விதிப்படி வழிபடல் கிரியை. சிவபூசைக்கு வேண்டப்படும் உபகரணங்களெல்லாம் செய்துகொள்ளல் கிரியையிற் சரியை, சிவாகமத்தில் விதிப்படி சிவலிங்கத்திற் செய்யும் பூசனை கிரியையிற் கிரியை, மானதபூசை கிரியையில் யோகம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானதபூசையின் அநுபவத்தால் நிகழும் உணர்வு கிரியையில் ஞானம்.

யோகம் — கிரியையில் ஞானத்தாலுண்டாகும் பக்குவத்தால் அதிநுட்ப அறிவுடையராய் அகத்தொழில் மாத்திரையாய் அருவத் திருமேனியை வழிபடுதல் யோகம். இது இயமம், நியமம், ஆசனம், பிராணயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்னும் எட்டங்கங்களை யுடைமையால் அஷ்டாங்கயோக மெனப்படும். அகிம்சை, வாய்மை, திருடாமை, பிரமசரியம், அன்பு, வஞ்சனையற்றிருக்கை, பொறுமை, தைரியம், ஆசாரம், சுத்தி என்னும் பத்தும் இயமம். தபசு, சந்தோஷம், தேவசிந்தனை, தானம், ஈசுரபூசை, ஞானசாத்திரங் கேட்டல், பழிக் கஞ்சுதல், பத்தி, செபம், விரதம் என்னும் பத்தும் நியமம். சுவாசத்தை அடக்கி யாளுதல் பிராணயாமம், மனசைப் புறவிஷயங்களிற் செல்லாமற் றடுத்தல் பிரத்தியாகாரம். மனசை ஒரு வழியில் நிறுத்தல் தாரணை. சிவபெருமானுடைய அருவத் திருமேனியைத் தியானித்தல் தியானம். அத்தியானத்தில் நிலைபெறுதல் சமாதி.*

இயமம், நியமம், ஆசனம், பிராணயாமம் என்னும் நான்கும் யோகத்திற் சரியை. பிரத்தியாகாரமும், தாரணையும் யோகத்திற் கிரியை. தியானம் யோகத்தில் யோகம். சமாதி யோகத்தில் ஞானம்.

ஞானம் — யோகத்தில் ஞானத்தினு லுண்டாகும் பக்குவ விசேடத்தால் மெய்யுணர்வு விளங்கிக் கடவுளைச் சச்சிதானந்த சொரூபியாக அறிந்து அறிவுத் தொழிலாற் கடவுளை வழிபடல் ஞானம். ஞானசாஸ்திரங்களை ஆசாரியரிடங் கேட்டல் ஞானத்திற் சரியை. கேட்டவற்றை ஆராய்ந்து சிந்தித்தல் ஞானத்திற் கிரியை. தெளிதல் ஞானத்தில் யோகம். நிட்டை கூடல் ஞானத்தில் ஞானம்.

ஞானசாஸ்திரத்தைக் கேட்கும்போது சித்தசலனமின்றி யிருத்தல் அவசியமாதலாற்றான் "பரப்பமைந்து கேண்மின்" என்றார், "பப்பற வீட்டிருந் துணரு நின்னடியார்" என்பது திருவாசகம்; பப்பு என்பது பரப்பு; பரபரப்பு எனப்படுவது இது.

ஞானமார்க்கத்தார் சரியை கிரியை யோகங்களையும், யோக மார்க்கத்தார் சரியை கிரியைகளையும், கிரியா மார்க்கத்தார் சரியையையும் அனுட்டிக்க உரிமை யுடையவர்.

---

* இயம நியமம் இல்லாதார்க்கு யோகம் கைகூடாது. இவைகளின்றி மூச்சையடக்கிப் பயிலுவது யோகமன்று. "துருத்தியெனும்படி கும்பித்து வாயுவைச் சுற்றி முறித், தருத்தி யுடம்பை யொறுக்கி லென்னாம்" என்றனர் அருணகிரிநாதர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரியை கிரியை யோகம் ஞானமாகிய நான்கையும் அனுட்டித்தோர் முறையே சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம் என்னும் முத்திகளைப் பெறுவர். இவற்றுள் உபாயச்சரியை முதல் முதல் உபாயஞானம் ஈறுகிய சிவ புண்ணியங்கள் செய்தோர் பிருதுவி தத்துவத்திலுள்ள காலாக்கினி ருத்திரபுவனம் வரையிலுமுள்ள புவனபதிகளுடைய உலகங்களிற் சாலோகம் முதலியவற்றைப் பெறுவர். உண்மைச் சரியை உண்மைக் கிரியை உண்மை யோகங்களை அனுட்டித்தோர் சீகண்ட புவனம் முதல் சுத்தவித்தைக்குக் கீழ்வரையிலுள்ள புவனபதிகளுடைய உலகத்திற் சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம் என்னும் பத முத்திகளைப் பெறுவர். ஞானத்தில் ஞானத்தின் கடைசி நிலையை அடைந்தோர் சாயுச்சியமாகிய பரமுத்தியை அடைவர். உபாய மார்க்கத்திலும் உண்மை மார்க்கத்திலும் ஒவ்வொரு பாதத்திலும் சரியையின்பலன் அந்தந்தப் பாதத்துக்குரிய புவனத்தில் வாழ்தலாம். கிரியா யோக ஞானங்களின் பலன் அந்தந்தப் பாதத்துக்குரிய புவனத்திலே முறையே சாமீபம், சாரூபம், சாயுச்சியம். உதாரணமாக உண்மைச் சரியையிற் சரியையின் பலன் சீகண்ட புவனத்திற் சாலோகம். உண்மைச் சரியையிற் கிரியையின் பலன் சீகண்டபுவனத்திற் சாமீபம். இப்படியே மற்றவைகளும்.

சாலோகமாவது அவ்வுலகத்திலிருந்து போகங்களை யனுபவித்தல். சாமீபம் - அந்தந்த உலகங்களில் விசேஷ போகங்களை அனுபவித்து வாழ்தல். சாரூபம் - அந்தந்தப் புவனபதிகளோடு ஒத்த இன்பங்களைப் பெற்று வாழ்தல். சாயுச்சியம் - அந்தந்தப் புவனபதிகளால் அதிட்டிக்கப்பட்டு அவருடைய அதிகாரங்களைச் செய்து வாழ்தல்.

பதமுத்தியை அடைந்தோருக்குச் சிவவினை யொப்பு உண்டாயின் அங்குத்தானே ஞானநெறியை யடைந்து பின் பரமுத்தியை அடைவர். சிவவினையொப்பு உருதார் பதமுத்திகளிலிருந்து நீங்கிப் பிறவியெடுத்துச் சிவ வினை யொப்பு நிகழ்ந்தபின் ஞான நெறியை அடைவர். அபரமுத்தி யடைந்தோர் பிறவியை எடாது நேரே பரமுத்தியை அடைவர்.

சரியையிலுள்ளோர் தம்மைக் கடவுளின் அடிமையாகக் கொள்ளுவதாற் சரியைமார்க்கம் தாசமார்க்க மெனப்படும். விசேட தீட்சையிலே சிஷ்யன் சிவபுத்திரனுக்கப்படுதலாற் கிரியா மார்க்கம் புத்திரமார்க்கமெனப்படும். யோகமார்க்கத்திலே சிவத்தோடு கூடுதலால் அது சகமார்க்கமெனப்படும். ஞானமார்க்கம் கடவுளும் ஆன்மாவும் ஒன்றுகி நிற்கும் உண்மை நிலையாதால் சந்மார்க்கம் எனப்படும்.

(தாசன் - அடியவன். சகா - தோழன். சத் - உண்மை.) (9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவருளை அறியாதார் சிறுமை

இற்றை வரையியைந்து மேதும் பழக்கமில்லா
வெற்றுயிர்க்கு வீடு மிகை.

ப—ரை: இற்றைவரை இயைந்தும் - இவ்வளவு காலமும் திருவருளோடு கலந்து நின்றும், ஏதும் பழக்கமில்லா - அதைச் சற்றேனும் உணரமாட்டாத, வெறு உயிர்க்கு - அறிவில்லாத ஆன்மாவுக்கு, வீடு மிகை - வீடு மிகையாகும்.

முதல் மூன்றதிகாரங்களிலும் முப்பொருள்களை விளக்கி முடித்த ஆசிரியர் இல்வதிகாரத்தில் திருவருளின் தன்மையைக் கூறி. அதைப் பெருதது மாணவர்களின் சாதனைக் குறைவாகிய குற்றமென்று முடிக்கிருர். (10)

# ஐந்தாம் அதிகாரம் - அருளுருநிலை

## அஃதாவது ஞானவடிவாகிய குருவினது தன்மை

### குருவடிவாய் வருவது திருவருள்

அறியாமை யுண்ணின் றளித்ததே காணுங்
குறியாகி நீங்காத கோ.

ப—ரை: அறியாமை உள்நின்று அளித்ததே - கண்ணுற் காணப்படாமல் ஆன்மாக்களில் நின்று (படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல் என்னும் நான்கு தொழில்களையும் செய்து) இரட்சித்துவந்த அதுவே, காணும் குறி ஆகி - (எஞ்சியதாகிய அருளலைச் செய்தற்காக) காணக்கூடிய குருவடிவை எடுத்து, நீங்காத கோ - உடனாய் நின்று ஆட்கொள்ளும் திருவருளாகும்.

[அளித்தது ஏ - அளித்ததாகிய திருவருளே (வினையாலணையும் பெயர். குரு = கு + ரு = பாசத்தை நீக்குபவர்[

மலம் வலிகெடவே, ஆன்மா ஞானத்தைப் பெறுகின்றது; ஆயினும் அந்த ஞானம் தானுக விளங்கமாட்டாது. அதை விளங்கச் செய்தற்கு ஞாஞசாரியன் வேண்டும். இது எதுபோலவென்ருல்: ஒரு குழந்தையைப் பெறுமுன் ஒரு பெண்ணுடைய சரீரத்திலே முலைப்பாலுக்குக் காரணமாகிய பதார்த்தங்க ளிருக்கவும் முலைப்பால் தோன்ருது; இவளுக்கு ஒரு குழந்தை உதிக்க அது தோன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறது. குழந்தையின்றிப் பால் தோன்றுது: அதுபோல, ஞானு சாரியனின்றி ஞானந் தோன்றுது. ஆதலால், ஆன்மா ஞானத்தை அடைதற்கு ஞானுசாரியன் இன்றியமையாதவன்.

அறியாமை - அறியப்படாமல்; (எதிர்மறை வினையெச்சம்) (1)

## அருளே ஆணவத்தைப் போக்கத்தக்கது

**அகத்துறுநோய்க் குள்ளின ரன்றி யதனைச்**
**சகத்தவருங் காண்பரோ தான்.**

ப—ரை: அகத்து உறுநோய்க்கு - ஒரு வீட்டி லிருப்பவனுக்கு வந்த பிணியை, உள்ளினரன்றி - அவ்வீட்டி லுள்ளவர் அறிவரே யன்றி, அதனை - அந்த நோயை, சகத்தவருங் காண்பரோ - தூரத்திலுள்ளவரும் அறிவாரோ? அறியமாட்டார்; (அதுபோல ஆன்மாவிலுள்ள மலமாகிய நோயை ஆன்மாவோடு கலந்து நிற்கும் அருளறிவதன்றி வேருென்றும் அறியமாட்டாது.)

ஆதலால், ஆன்மாவோடு சேர்ந்திருக்கும் திருவருளானது குருவாக வந்து போக்கினுலன்றி, ஆணவமாகிய வியாதி வேறு வழியாகத் தீராதென்பது கருத்து.

[அகம் - வீடு. ஆகுபெயராய் வீட்டிலிருப்பவனை உணர்த்தியது. சகம் - உலகம். உள்ளினர் - வீட்டினுள்ளிருப்போர்.] (..)

## குருவைச் சிஷ்யனன்றிப் பிறரறியார்

**அருளா வகையா லருள்புரிய வந்த**
**பொருளா ரறிவார் புவி.**

ப—ரை: அருளா வகையால் - (படைத்தல், காத்தல், அழித்தல். மறைத்தல் என்னும் நான்கினையும்) மறைந்து நின்று செய்தது போல, அருள்புரிய வந்த - (மானுட வடிவத்தினுலே தன்னை மறைத்து) அருளல் என்னுந் தொழிலைச் செய்ய வந்த. பொருள் - குருவடிவத்தை, புவி ஆர் அறிவார் - (பக்குவமுள்ள சிஷ்யனே யன்றிப்) பூமியில் வேறு யார் அறியத் தக்கவர்? (வேருெருவரும் அறியார்.)

''பொருளா வறியா'' என்றும் பாடமுண்டு. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பக்குவமில்லாதார் அறியாமைக்குக் காரணம்

பொய்யிருண்ட சிந்தைப் பொறியிலார் போதமாம்
மெய்யிரண்டுங் காணார் மிக.

ப—ரை: பொய் - நிலையற்றதாகிய உலக இன்பத்திலே கருத்துடையராய், இருண்ட சிந்தை - ஆணவமலத்தால் மறைக்கப்பட்ட அறிவினையுடைய, பொறியிலார் - ஞானமாகி ஒளியைப் பெறுதோர் போதமாம் மெய் இரண்டும் - அறிவுமயமாகிய அருளையும் அவ்வருள் அதிட்டித்து நிற்கும் குருவடிவத்தையும், காணார் மிக - சிறிதுமறியமாட்டார்.

[பொறி - ஞான ஒளி. போதம் அறிவு,]

ஞானக்கண் இல்லாதோ ராதலாற் பக்குவ மில்லாதோர் சற்குருவை அறியாரென்பது கருத்து. அருள்கொண்ட மனிதவடிவை யறியமாட்டாதார் அருளின் இயற்கையான அகண்ட ஞானவடிவையும் உணரா ரென்பது சொல்லாமலே அமையும். (அகண்ட - சர்வ வியாபகமான, எல்லையில்லாத) (4)

## சகலருக்குக் குருவாய் வருதலின் நோக்கம்

பார்வையென மாக்களை முன் பற்றிப் பிடித்தற்காம்
போர்வையெனக் காணார் புவி.

ப—ரை: பார்வை என - அவ்வவ்வினத்துப் பழக்கப்பட்ட விலங்குகளின் துணையைக்கொண்டு வன விலங்குகளைப் பிடிப்பது போல, மாக்களை முன் பற்றிப் பிடித்தற்காம் - (மனித உருவமாகிய குருவடிவத்தைத் திருவரு ளெடுப்பது) மனிதரை நேர் நின்று வசப்படுத்தி ஆட்கொள்ளுதற்காம். புவி - பக்குவ மில்லாதோர், போர்வை யெனக் காணார் - அது அருள் போர்த்துக் கொண்ட குருவடிவம் என்பதை அறியார்.

[பார்வை - புதிய மிருகங்களைப் பிடிப்பதற்காகப் பழக்கப்பட்ட காட்சிப் பொருளாகிய மிருகம்]

பழக்கப்பட்ட விலங்குகளைக்கொண்டு வன விலங்குகளைப் பிடிப்பதுபோல, அருளானது ஞானசாரியனைக்கொண்டு பக்குவமுள்ள ஆன்மாவை ஆட்கொள்ளும்.

ஒருவன் ஒரு புடைவையாலே தன்னை முற்றுகப் போர்த்துக் கொண்டிருப்பானுயின், தூரத்தில் நின்று பார்ப்போர் அவனை ஒரு புடைவைக் குவியலென்று நினைப்பாரன்றி, அதற்குள் மறைந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பவன் மனிதனென்றும், அது போர்வையென்றும் அறிய மாட்டார். அதுபோலத் திருவருள் ஆசிரியனில் மறைந்து நிற்கும் போது, பக்குவமில்லாதோர் அவனை மனிதனாக அன்றித் திருவருளின் போர்வையென அறியமாட்டார்.

மனிதரை ஆட்கொள்ளும் வழி எழுவகைத் தீக்ஷைகளாம். அவையாவன: நயனம், பரிசம், மானசம், வாசகம், சாத்திரம், யோகம், ஔத்திரி.

(தீக்ஷை = தீ + க்ஷா = ஞானத்தைக் கொடுத்துப் பாசத்தைக் கெடுப்பது)

இவற்றுள் நயன தீட்சையாவது: ஆசாரியர் சிவமாக நின்று சிஷ்யனைத் தலை தொடங்கிக் கால்வரையும் அருட்பார்வையாற் பார்த்து அவனுடைய ஆணவத்தைக் கெடுத்தல். பரிச தீட்சையாவது: ஆசாரியர் தம்முடைய கையைச் சிவபெருமானுடைய திருக்கரமாகப் பாவித்துச் சிஷ்யனுடைய தலையில் வைத்து அவனுடைய மாயாமலத்தைக் கெடுத்தல். மானச தீட்சையாவது: யோகமார்க்கத்தால் ஆசாரியர்சிஷ்யனுடைய மனத்திற் பிரவேசித்து ஆன்மபோதத்தை நீக்கிச் சிவபோதத்தை உண்டாக்குதல். சாத்திர தீட்சையாவது: வேதம் ஆகமம் ஆகிய இறைவனருளிய நூல்களிலுள்ள உண்மைகளைச் சுருக்கி விளக்குதல். வாசக தீட்சையாவது; திருவைந்தெழுத்தையும் பதினொரு மந்திரங்களையும் அந்தந்த எழுத்துக்குரிய மாத்திரைகளோடு உபதேசித்தல். யோக தீட்சையாவது: ஆசாரியர் சிஷ்யனது இருதயத்திற் பிரவேசித்து ஆன்மாவைச் சிவத்தோடு சேர்த்தல். ஔத்திரி தீட்சையாவது: ஓமத்தோடு செய்யப்படுந் தீட்சை; (ஔத்திரி - ஓம சம்பந்தமானது) ஹோத்திரம் - ஓமம்.) ஔத்திரி தீட்சைக்கு உரித்தில்லாதார்க்கு நயன தீட்சை முதலிய தீட்சைகள் செய்யப்படும். அவை ஔத்திரியோடு கூடவுஞ் செய்யப்படுவன. (ஹௌத்ரீ என்ற வடமொழி ஔத்திரி எனத் தற்பவமாய்த் திரிந்தது.)

ஔத்திரி தீட்சை: கிரியாவதி ஞானவதி என இருவகைப்படும். கிரியாவதியாவது குண்டமண்டலங்களுடன் ஓமம் முதலிய கிரியைகளாற் செய்யப்படுவது. ஞானவதி குண்டமண்டலங்களையும் கிரியைகளையும் மானசமாகச் செய்வது. இத் தீட்சைகள் சமயம், விசேடம், நிர்வாணமென மூவகைப்படும். சமய தீட்சை சரியைக்கும், விசேட தீட்சை கிரியைக்கும் யோகத்திற்கும், நிர்வாண தீட்சை ஞானத்திற்கும் உரியன. நோய்முதலிய காரணங்களினால் தீட்சைகளுக்குரிய அநுட்டானங்களைச் செய்ய இயலாதார்க்கு அவ் வனுட்டானங்கள் ஆகுதியாற் சுத்திசெய் தொழிக்கப்படும். அது நிர்ப்பீச மெனப்பு

7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டும்; மற்றவர்களுக்குச் செய்யப்படுந் தீட்சை சபீசம். நிர்வாண தீட்சை பெறுவோர்களுள் அபரமுத்தி முதலிய போகங்களை விரும்புவோருக்குச் செய்யப்படுவது லோகதர்மிணி; மற்றவர்களுக்குச் செய்யப்படுவது சிவதர்மிணி. சிவதர்மிணி பெறுவோருள் உடனே முத்தி அடைவோர் சத்தியோ நிர்வாணத்தையும், தேகாந்தத்தில் முத்தி அடைவோர் அசத்தியோ நிர்வாணத்தையும் பெறுவர். (5)

## குரு சாத்திர தீட்சைக்கு இன்றியமையாதவர்

**எமக்கெ னெவனுக் கெவைதெரியு மவ்வத்**
**தமக்கவனே வேண்டத் தவிர்.**

ப — ரை: எமக்கு என் - (குருவினால்) எமக்கு என்ன பயன் (என்று கேட்டால்), எவனுக்கு எவை தெரியும் - எவனுக்கு ஞான நூற் பொருள்கள் உள்ளபடி தெரியுமோ, அவ் அத் தமக்கு அவனே வேண்ட - அந்நூற் பொருள்கள் தமக்கு அவனைக் குருவாக வேண்டி நிற்றலால், தவிர் - (குருவின் தேவையை நீ யுணர்வாயஆதலால் ''எமக்கென்'' என்னுங் கேள்வியை) விடுவாயாக.

ஞானசாரிய னில்லாமற் கற்கும்போது ஞான நூல்களின் பொருள் மாறுபாடாகத் தோன்றும்; அல்லது தோன்றாமல் நிற்கும்; ஆதலால் நமக்கு ஞானசாரியன் வேண்டாமென்று சொல்லிக்கொண்டு நூல்களைக் கற்கும்போது, அவை நமக்கு விளங்காமையினாலே அவன் இன்றியமையாதவனென்று நாமே உணரத் தக்கதாக நேரும். இதை உணர்த்துதற்காக, ''அவ்வத் தமக்கவனே வேண்ட'' என்றார். ஞான நூலல்லாதவை ஆசாரியனின்றியுங் கற்கப்படலாம். ஞானநூ லுணர்ச்சி ஆசாரியனை யின்றியமையாதது. ''ஆசானருளா லடிசேர்ஞானம் வந்திடும்; மற்றொன்றானும் வாராதாகும்'' என்றார் பிறரும். (6)

## நயன தீட்சை

**விடநகுல மேவினுமெய்ப் பாவகனின் மீளுங்**
**கடனிலிருள் போவதிவன் கண்.**

[விடம், நகுலம் மேவினும், மெய்ப் பாவகனில் மீளும் கடனில், இருள் போவது இவன் கண்]

ப — ரை: விடம் - (ஒருவன் விஷம் தீண்டப்பெற்றால் அந்த) விடமானது, நகுலம் மேவினும் (மீளாது) - கீரி நேரே வந்து நிற்பினும் நீங்காது, பாவகனின் மீளும் - கீரியாகத் தன்னைப் பாவிக்கும் மாந்திரீகனால் நீங்கும், கடனில் - இந்த முறைமைபோல, (திரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருளானது நேரே நின்றும் மலங்களைப் போக்காது; தான் அதிஷ்டித்தற்கு ஒரு குரு வடிவைக் கொண்டு பார்வையாலும் பாவனையாலும் ஆணவத்தை நீக்கும்), இருள்போவது இவன் கண் - மலத்தை நீக்குவது குருவினுடைய கண்.

[பாவகன் - பாவனை செய்வோன், மாந்திரீகன்.]

நயன தீட்சையிலே குரு சிஷ்யனுடைய சரீரம் முழுவதையும் பார்த்து அவனைச் சிவசொரூபமாகப் பாவிப்பன்.

கிரியானது ஆதிபௌதிக நகுலம், ஆதி தைவிக நகுலம், ஆத்தியான்மிக நகுலம் என மூன்று வகைப்படும். அவற்றுள், உலகத்திற் காணப்படுங் கீரி ஆதிபௌதிக நகுலம் அதற்கு அதிதெய்வமாய், மாந்திரிகன் அதுபோல வைத்துத் தியானம் செய்து கணிக்கப்படும் மந்திரம் ஆதி தைவிக நகுலம், அந்த மந்திரத்தினிடமாக நின்று மாந்திரிகனுக்குப் பயன் கொடுப்பதாகிய சிவசத்தி ஆத்தியான்மிக நகுலம். இவற்றுள் ஆதிபௌதிக நகுலத்தைக் கொண்டு விஷத்தைத் தீர்த்தல் இயலாது. மாந்திரிகன் ஆதி தைவிகமாகிய நகுல மந்திரத்தை ஒவ்வொரு நாளும் உச்சரித்து வந்த பழக்கத்தினாலே அந்த மந்திர ரூபமே தானாகப் பாவனை செய்து தன்னறிவை அதன் வசப்படுத்தி நிற்றல் நகுல பாவனையெனப்படும், அவன் அந்தப் பாவனையாய் நின்று அம் மந்திரக் கண் கொண்டு பார்க்க, அந்தப் பார்வையானது மந்திரத்திற் பதிந்த சத்தியினால் விஷத்தைத் தீர்க்கும்.

அதுபோல, ஆசாரியன் பஞ்சாட்சர செபப் பயிற்சியினாலும், தன்னைச் சிவமாகப் பாவித்துத் தன்னைச் சிவவசப்படுத்தியதனாலும், அவனுடைய பார்வையிலிருக்கும் மந்திரசத்தியினால் சிஷ்யனிலுள்ள விஷமாகிய ஆணவவலி தடைப்படும். ஆதி பௌதிக நகுலத்தால் விஷங் கெடாமல், நகுல பாவனை செய்யும் மாந்திரிகனுடைய பார்வையினால் அது கெடுவதுபோல, என்றுங் கூட நிற்பதாகிய திருவருளால் மலமானது இறுதியில் நீக்கப்படாமல், அத் திருவருளைத் தானாகப் பாவித்து அத் திருவருளால் அதிட்டிக்கப்பட்ட குருவினது பார்வையினால் நீங்கும். "எவன் கண்" எனவும் பாடம். (7)

## மூவகை ஆன்மாக்களுக்கும் அருள் செய்யும் முறை

அகலத் தருமருளை யாக்கும் வினைநீக்குஞ்
சகலர்க்கு வந்தருளுந் தான்.

[அகலத்து அரும் அருளை ஆக்கும்; வினை நீக்கும்; சகலர்க்கு தான் வந்து அருளும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ப—ரை: அகலத்து அரும் அருளை ஆக்கும் - விஞ்ஞானகலரிற் பக்குவமுடையாருக்குச் சிவபெருமான் அவர்களது அறிவிலே நின்று அருள் செய்து மலத்தை நீக்குவர், வினை நீக்கும் - பிரளயாகலரிற் பக்குவர்க்கு அவர்களைப்போல முன்னிலையாய் நின்று (ஆணவத்தோடு) கர்மத்தையும் நீக்குவர், சகலர்க்குத் தான் வந்து அருளும் - சகலரிற் பக்குவருக்குக் குருவடிவாய் வந்து மும் மலங்களையும் நீக்கியருளுவர்.

அகலம் - கலை நீங்கின ஆன்மா. விஞ்ஞானகலரிலே மலமானது சூக்கும [illegible] நிற்றலால், திருவருள் அவருக்குள் அறிவாக நின்று உணர்த்த அம்மலம் நீங்கும். பிரளயாகலரிலேயுள்ள தூலமல சத்தியானது, திருவருள் நேர்நின்று நயனம் பரிசம் வாசகமாகிய தீட்சைகளைச் செய்ய நீங்கும். சகலரிலுள்ள தூலதர மல சத்தியானது, ஞான நூற் போதனையினாலும், அனுபவ சாட்சியினாலும் பலவகைப்பட உணர்த்த நீங்கும். ஆதலால் திருவருளானது சகலருக்குக் குருவை ஆதாரமாகக்கொண்டு தீட்சை செய்யும். இது ஆதார தீட்சை எனப்படும். நேராகச் செய்யப்படுந் தீட்சை நிராதார மெனப்படும். மும் மலங்களுள் ஆணவமும் ஆகாமியமும் ஞானத்தினாலே, ஒளி முன் இருள்போல நீக்கப்படும்; சஞ்சிதம் தீட்சைக் கிரியையினாலே நீக்கப்படும்; பிராரப்தம் எஞ்சியிருந்தால் அநுபவத்தினாலே தீரும்; ஆணவ கன்ம மலங்கள் நீங்குதல் காரணமாகப் பிறவி அறுதலால், மாயா மலம் தீரும். (8)

## சிவபெருமானே குருவாதல் வேண்டும்

**ஆரறிவா ரெல்லா மகன்ற நெறியருளும்**
**பேரறிவான் வாராத பின்.**

ப—ரை: எல்லாம் அகன்ற - மந்திர முதல் கலையீறாகிய அத்துவாக்களைக் கடந்த, நெறி அருளும் - வீட்டு நெறியை வெளிப்படுத்தியருளும், பேரறிவான் வாராத பின் - பேரறிவினராகிய சிவபெருமானே குருமூர்த்தங் கொண்டு வாராவிட்டால், ஆரறிவார் - (அவ்வீட்டு நெறியை) அறிய வல்லவர் யார்? (ஒருவருமிலர்.)

[எல்லாம் அகன்ற நெறி - எல்லா அத்துவாக்களையும் கடந்த வீட்டு நெறி - அத்துவா - வழி]

முப்பத்தாறு தத்துவங்களையும் அவை சார்ந்த மற்றைய அத்துவாக்களையுங் கடந்தே முத்தியடைய வேண்டுமாதலால், அவைகளைக் கடந்த ஒருவரே ஆன்மாவையுங் கடக்கச் செய்வாரன்றி அவைகளுக்குட்பட்டவர்கள் செய்யமாட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துவாக்களுக் குட்பட்டவர்களாகிய தெய்வங்களையும் மனிதர்களையும் முத்தியடைய வேண்டி வழிபடுகிறவர்கள், உபநிடத வாக்கின்படி, குருடனைக்கொண்டு வழிகாட்டுவிக்கும் குருடனுக்குச் சமமாவர். "காண்பவன் சிவனேயானால் அவனடிக்கன்பு செய்கை மாண்பறம், அரன்றன் பாதம் மறந்துசெயறங்களெல்லாம் வீண் செயல்; இறைவன் சொன்ன விதியறம்; விருப்பொன் றில்லான் பூண்டனன் வேண்டல் செய்யும் பூசனை புரிந்து கொள்ளே" என்னுஞ் சிவஞானசித்தித் திருவிருத்தத்திற் கூறியதுங் காண்க. (9)

## இதுவுமது

ஞான மிவனொழிய நண்ணியிடும் நற்கலனல்
பானு வொழியப் படின்.

[பானு ஒழிய நற்கல் அனல் படின், இவன் ஒழிய ஞானம் நண்ணியிடும்.]

ப—ரை: பானு ஒழிய - சூரிய ஒளி இல்லாமல், நற்கல் அனல் படின் - சூரியகாந்தக் கல்லில் அக்கினி தோன்றுமாயின், இவன் ஒழிய - அருட்குருவின்றி, ஞானம் நண்ணியிடும் - (ஆன்மாவில்) ஞானந் தோன்றும். [சூரியனொளி இல்லாமல் சூரிய காந்தக் கல்லில் அக்கினி தோன்றுதென்பது எப்படிப் பிரசித்தமான உண்மையாகுமோ, அப்படியே குரு இல்லாமல் ஆன்மாவில் தத்துவ ஞானம் தோன்றுதென்பதும் மறுக்க முடியாத உண்மையாம் என்றபடி].

[பானு - சூரியன். (இங்கு ஆகுபெயர்.)
இவன் என்னும் சுட்டு குருவைக் குறித்தது.]

சூரிய கிரணம் பட்டே சூரியகாந்தக் கல்லில் அக்கினியுண்டாவதுபோல, குருவருள் பெற்றே சிஷ்யனில் ஞானமுண்டாகும்; சூரியகாந்தக்கல்லைச் சூரிய ஒளிக்கு நேரே பிடிக்கும்போது, அந்தக் கல்லானது பரந்து வருங் கிரணங்களை ஓரிடத்துச் சேர்த்து அக்கினியை உண்டாக்கும். அப்போது இலகுவாக நெருப்புப் பிடிக்கக்கூடியனவாய் அக்கல்லைச் சார்ந்து நிற்கும் பஞ்சு முதலிய பொருள்களில் நெருப்புப் பற்றும், அதைக் கொண்டு தீ மூட்டும் வழக்கமுண்டு.

அருக்கனொளி இல்லையாயின் சூரியகாந்தக் கல்லில் அக்கினி தோன்றாது. அதுபோலச் சிவபெருமானது திருவருள் வடிவாகிய குரு இல்லையாயின் ஆன்மாவில் ஞானந் தோன்றாதென்பது கருத்து. சூரியன் சிவத்துக்கும், சூரியனது ஒளி குருவடிவாய் வருந் திருவருளுக்கும், சூரியகாந்தக் கல் பக்குவமுள்ள ஆன்மாவுக்கும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கினி ஞானத்துக்கும், உவமையாயின. பானு - சூரியன்; அதன் கிரணத்துக்கு ஆகு பெயர். ஒழிய - இல்லாமல், இவனொழிய - இக்குரு இல்லாமலே, படின் - உண்டாகுமானால், படுதல் - உண்டாதல். இச்செய்யுள் 'பொய்த் தற்குறிப்பணி' அமைந்தது. அஃதாவது ஒருபொருளைப் பொய்யாக்குதற்கு மற்றொரு பொய்ப் பொருளைக் கற்பித்தலாம். (10(

## ஆறும் அதிகாரம் -- அறியுநெறி

### அருளுருவாகிய குருவினிடம் உண்மைப் பொருளை உணரும் முறைமை.

### இருவினையொப்பும் சத்திநிபாதமும்

**நீடு மிருவினைகள் நேராக நேராதல்**
**கூடுமிறை சத்தி கொளல்.**

[ நீடும் இருவினைகள் நேர் ஆதல் நேராக, இறைசத்தி கொளல் கூடும். ]

ப—ரை: நீடும் இருவினைகள் - வளர்ந்து வருவனவாகிய வினைகள் இரண்டும், நேர் ஆதல் - (விலக்கப்படவேண்டிய முறையால்) ஒத்ததன்மைய என்ற எண்ணம் [நேர் - நிகர்], நேர் ஆக - (ஆன்மாவுக்கு) உண்டாக [நேர்பட], இறை சத்தி கொளல் கூடும் - சிவபெருமானுடைய திருவருட் சத்தி பதியும்.

நல்வினையும், தீவினையைப் போலவே, கர்மமெனப்படும் மலமாதலால், விடப்படவேண்டியதேயாம். ०இருவினையையும் விடவேண்டும் என்ற புத்தி அவனுக்கு உண்டாகும்போது சிவசத்தி அவனிற் பதியும். அப்போது அவன் ஞானத்தை இச்சிக்க, ஞானசாரியர் தோன்றித் திரிபதார்த்தங்களின் உண்மையை விளக்குவர். அவ்வுண்மைகள் இவ் வதிகாரத்திற் கூறப்படுகின்றன. இவைகளை

---

०லௌகிகர்களுக்கு, ஓட்டினும்பார்க்கப் பொன்மிக விலையுயர்ந்ததாயிருப்பதுபோல, தீவினையிலும் நல்வினை மேலாகத் தோன்றும். ஆயினும், சந்நியாசிக்குப் பொன்னும் ஓடும் ஒரே தன்மையவாய்த் தோன்றுவதுபோல, நல்வினையும் தீவினையும் ஒரே தன்மையவாய்த் தோன்றும். லௌகிகர்கள் பொன்னை ஓட்டிலும் மேலாக மதிப்பது போல. நல்வினையைத் தீவினையிலும் மேலாக மதித்து நல்வினையைச் செய்வதே கடனாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசித் தறிதலால் நாமும் ஞானிகளாவோமோ என்றால், நாம் அவைகளை நேரே உணரமாட்டோம். நேரே உணர்வோமாயின் அவ்வுண்மைகளை அநுசரித்துப் பொய்யாகிய உலக வாழ்வை விடுத்து மெய்யாகிய திருவடியையே பொருளாக் கொள்வோம். அப்படி நாம் கொள்ளாது உலக விஷயங்களில் அமிழ்ந்தி நிற்ற லால், நாம் இந்தச் சத்தியங்களை நேரே உணரவில்லை யென்பது இனிது விளங்கும்.

## இருவினை யொப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம்

ஆணவத்தின் முனைப்பினால் ஆன்மாக்கள் தீவினைகளைச் செய் கின்றன; அத்தீவினைகளை நீக்குதற்காகச் சிவபெருமான் ஆன்மாக் களுக்குத் துன்பத்தை ஊட்டுகின்றார். அத் துன்பம் அனுபவிக்கப் படும்போது ஆதிசத்தியின் பிரேரகத்தினால் வித்தையென்னுந் தத்துவமானது ஆன்மாவில் இயற்கையறிவு ஒருவாறு விளங்கத் துணைசெய்யும். அப்போது ஆன்மாவுக்குத் தீவினையில் வெறுப்பும் பசுநல்வினையில் விருப்பும் உண்டாக, அது பசுநல்வினையையுஞ் செய்யும். அது தீவினையின் பயனாகிய துன்பத்தையும், நல்வினையின் பயனாகிய இன்பத்தையும் அனுபவிக்க, நல்வினையிற் பன்மடங்கு பற்றுண்டாகி, நல்வினையை அதிகமாகச் செய்து அதன் பயனாகிய இன்பத்தைக் காலத்துக்குக்காலம் ஊட்டப்பெற்று அனுபவித்துவரும். இதனாலே ஆன்மஞானம் மேலும் அதிகமாய் விளங்கக் கடவுளே மெய்ப்பொருளென்ற அறிவும், அவருக்குத் தொண்டு செய்தலிலே பேராசையும் உண்டாகின்றன. அப்போது ஆன்மா தன்னையேனும் பிறவுயிர்களையேனும் பொருளாகக் கொள்ளாது. அவற்றைக் குறித்துச் செய்துவந்த பசுநல்வினையையும்° கைவிடுகின்றது. இந்த நிலை பசுவினையொப்பு எனப்படும். இப் பசுவினையொப்பு ஆன்மாவின் இன்ப துன்ப நுகர்ச்சியால் அதன் ஆணவவலி குறைய உண்டாகும் நிலை.

---

°ஆன்மா பசுநல்வினையைக் கைவிட்டாலும் பிறவுயிர்களுக்கு இதஞ்செய்தலைக் கைவிடாது; அதைச் சிவவினையாகக் கருதிச் செய்யும்; சிவபிரான் உயிர்கள் யாவற்றிலும் எல்லையில்லாத இரக்கமுடையவராதலால், அவற்றிற்குச் சேவைசெய்தல் சிவ சேவையின் இன்றியமையாத அங்கமாகின்றது; பிறவுயிர்களுக்குச் சேவைசெய்தல் இருநிலைகளிலும் உள்ளதாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணவம் வலிகெடுதல் மலபரிபாகம் எனப்படும்: இருள் குறையக் குறைய ஒளி ஏறி ஏறி வருவதுபோல, மலம் வலிகெடச் சிவசத்தி ஆன்மாவிற் பதிந்து சிவத்தோடு சேர்த்தற்காக அதைச் செலுத்துகின்றது. இவ்வாறு சிவசத்தி ஆன்மாவிற் பதிதல் சத்தி நிபாதம்° எனப்படும். பசுவினை யொப்பில் வருஞ் சத்திநிபாதம் மந்ததரம்× எனப்படும். ஒருவனுக்கு சத்திநிபாதத்தின் பின் குரு சமயதீக்ஷை செய்து சரியாமார்க்கத்தில் அவனை விடுவர்.

அவன் அந்தச் சரியாமார்க்கத்தில், மந்ததர சத்திநிபாதத்தி லுள்ள பலவகைச் சத்திநிபாதங்களுக்கு மேற்ப, சரியையிற் சரியை, சரியையிற் கிரியை முதலிய மார்க்கங்களை அநுசரிப்பன். அந்த மார்க்கங்களிற் செய்யும் சிவபுண்ணியத்தினுலே மலமானது முன் னையிலும் அதிகம் பரிபாகப்பட, ஆன்மா விசேட தீக்ஷை பெற்றுக் கிரியாமார்க்கத்தை அநுட்டிக்கும். அந்தச் சிவபுண்ணியத்தால் மலம் மிகவும் பரிபாகப்பட ஆன்மா யோக மார்க்கத்தை அடையும். யோக மார்க்கம் முடிய, மலம் நன்ருக வலிகெட்டுச் சிவவினை யொப்பு உண்டாகும்; அப்போது குரு தரிசனமாகி ஆன்மாவுக்கு நிர்வாண தீக்ஷை செய்து ஞானபாதத்திற் சேர்ப்பர். ஆன்மா ஞானமார்க்கத்தின் அதியுன்னத நிலையைச் சேர்ந்து மலம் நீங்கப் பெற்றுச் சிவசாயுச்சியத்தைப் பெறும்.

[சிவ சாயுச்சியம் - சிவத்தோடு இரண்டறக் கலத்தல்.]

மலபரிபாகமுஞ் சத்திநிபாதமும் ஒரேகாலத்தில் உண்டாவன. சத்திநிபாதம் பலவகைப்படுதல் போலவே அதனோடு நிகழும் மல பரிபாகமும் பலவகையாம். இவையிரண்டும் மூவகை ஆன்மா வுக்கும் உள்ளன. விஞ்ஞானகலர்க்குக் கர்மம் இல்லையாதலால் அவர்களுக்கு இருவினையொப்பில்லை. (1)

## ஆறு பொருள்கள் அநாதி

ஏக னநேக னிருள்கரும மாயையிரண்
டாகவிவை யாறுதி யில்.

ப—ரை: ஏகன் - ஒருவராகிய கடவுளும், அநேகன் - அள வில்லாதனவாகிய ஆன்மாக்களும், இருள் - ஆணவமலமும், கருமம் - கர்மமலமும், மாயை இரண்டு - சுத்தம் அசுத்தமென்னும் இருவகை மாயைகளுமாகிய, ஆக இவை ஆறு ஆதி இல் - இந்த ஆறு பொருள்களும் அநாதியான பொருள்கள்.

---

° பாதம்—விழுதல், படிதல்; நிபாதம்—நன்ருகப் படிதல், அடைதல்.
× மந்ததரம்—மிகவும் மந்தம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[கர்மம், கருமம், கன்மம், வினை என்பன ஒரு பொருட்சொற்கள். ஆதி இல் - ஆதியில்லாதன. அந் + ஆதி = அநாதி = தொடக்கம் இல்லாதது.] (2)

## ஆறு பொருள்களுக்கு முள்ள தொடர்பு

**செய்வானுஞ் செய்வினையுஞ் சேர்பயனும் சேர்ப்பவனும்**
**உய்வா னுளனென் றுணர்.**

ப—ரை: செய்வானும் - கருமங்களைச் செய்யும் புருடனும், செய்வினையும் - செய்யப்படும் நல்வினை தீவினைகளும், சேர்பயனும் - அவற்றின் பயனாகிய இன்ப துன்பங்களும், சேர்ப்பவனும் - அவற்றை அனுபவிக்கப்பண்ணுங் கடவுளுடைய திருவருளும் ஆகிய இந்த நான்கையும், உய்வான் உளன் என்று உணர் - (தன்னை) ஈடேற்றுதற்காகப் பொருந்துபவன் ஆன்மா என்று அறிவாயாக.

[உய்வான்—உய்தற்காக. (வினையெச்சம்) புருடன்—புருடதத்துவம், 29-ஆம் பக்க விளக்கம் பார்க்கவும்]

இந்நான்கு பொருள்களும் ஆன்மாவை மலத்தினின்றும் நீக்கி அதை ஈடேற்றுவன என்பது கருத்து.

வினை என்றதனாற் கர்மமும், பயனென்றதனால் தனு கரண புவன போகங்களுக்கு முதற்காரணமாகிய மாயையும், உய்வான் என்றதனால் உய்யாமல் தடுக்கும் ஆணவமும், சேர்ப்பவன் என்றதனாற் கடவுளும், உளன் என்றதனால் ஆன்மாவும் கருதப்பட்டன. ஆன்மாவுக்கும் மற்றைய பொருள்களுக்குமுள்ள சம்பந்தத்தைச் சிஷ்யன் அறியும்போது, துன்பத்தை விளைப்பதாகிய ஆணவத்தினின்றும் விடுதலையடைய விரும்பிக் கடவுளையே பற்றுவானுதலால் அவற்றின் தொடர்பு அவனுக்கு விளக்கப்பட்டது. (3)

## கடவுள் ஆன்மாவுக்கு உயிராய் நிற்றல்

**ஊனுயிரால் வாழு மொருமைத்தே யூனொடுயிர்**
**தானுணர்வோ டொன்றுந் தரம்.**

[ஊனோடு உயிர் தான் உணர்வோடு ஒன்றும் தரம், ஊன் உயிரால் வாழும் ஒருமைத்து]

ப—ரை: ஊனொடு உயிர் - உடம்போடு சேர்ந்த ஆன்மா, உணர்வோடு ஒன்றும் தரம் - ஞானத்தோடு கூடி ஒன்றுபட்டு நிற்குந் தன்மை, ஊன் உயிரால் வாழும் ஒருமைத்து - உடம்பானது உயிரோடு கூடி வாழும் ஒற்றுமையைப் போல்வது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[ஊன்—ஊனுலாகிய உடல். உணர்வு—ஞானம்; உயிரால்—உயிரோடு]

உயிரில்லையாயின் உடம்பு இயங்கமாட்டாது கிடப்பதுபோலக் கடவுள் இல்லையாயின் ஆன்மா ஒன்றுஞ் செய்யமாட்டாது; உடம்போடு ஆன்மா வேறற நிற்பதுபோல ஆன்மாவோடு கடவுள் வேறற நிற்பர். (4)

## கடவுள் உயிர்க்குயிராய் நின்று நடத்தும் முறைமை

**தன்னிறமும் பன்னிறமுந் தானுங்கற் றன்மைதரும்
பொன்னிறம்போன் மன்னிறமிப் பூ.**

ப—ரை: பல் நிறமும் - (பளிங்கோடு சேர்ந்த பொருள்களின்) பலவகையான நிறங்களையும், கல் தானும் தன்மை - பளிங்கினுடைய இயல்பான நிறத்தையும், தன்னிறமும் - தன்னுடைய பிரகாசத்தையும், தரும் - தருவதாகிய, பொன்னிறம் போல் - பொலிவாகிய சூரியகிரணம்போல, மன் நிறம் - (மலங்களை முதிர்விக்கும் திரோதானசத்தியின் பிரகாசத்தையும் மலங்கள் நீங்கியபின்பு ஆன்மாவை விளக்குஞ் சிற்சத்திப் பிரகாசத்தையுந் தந்து இவற்றுக்கப்பால் தன்னுடைய பிரகாசத்தோடு நிற்பதுமான) கடவுளுடைய திருவருளாகிய சோதியை உடையது. இப் பூ - இந்தப் பூமியானது.

தன்னிறமென்பது சூரியப் பிரகாசம். பளிங்கானது சூரியனுடைய கிரணம் படுதலால், தன்னோடு சேர்ந்த பொருள்களின் நிறத்தைக் காட்டுவதுபோல, ஆன்மாவானது திரோதான சத்தி பதிதலினால் தன்னோடுள்ள மலங்களின் தன்மையைக் காட்டும். பளிங்கு பொருள்களின் சார்பு நீங்கியபின் தானாய்ச் சூரியப் பிரகாசத்தோடு தோன்றுவதுபோல ஆன்மாவானது மலங்களி னீங்கிய பின் சிற்சத்திப் பிரகாசம் பெற்று நிற்கும். சூரியகிரணம் பளிங்கையும் அதைச் சார்ந்த பொருள்களையும் விளக்குவதோடு அவற்றிற்கு வெளியேயும் விளங்குவதுபோலச் சிவப் பிரகாசமானது ஆன்மாவையும் அதைச் சார்ந்தவைகளையும் விளக்குவதோடு அவற்றைக் கடந்தும் பிரகாசிக்கும்.

கடவுள் ஆன்மாவைப் பந்த நிலையிலும் முத்தி நிலையிலும் இரட்சித்து அதையுங்கடந்து நிற்பரென்பது கருத்து. (5)

## மெய்ப்பொருளைக் காண்பதற்கு ஞானம் வேண்டும்

**கண்டொல்லை காணுநெறி கண்ணுயிர் நாப்பணொளி
யுண்டில்லை யல்லா தொளி.**

[கண், உயிர் நாப்பண் உண்டு; கண்டு ஒல்லைகாணும் நெறி; ஒளி (உயிர் நாப்பண் உண்டு) அல்லாது இல்லை.]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ப—ரை: கண் உயிர் நாப்பண் உண்டு - (ஒளியையுடைய) கண்ணனது (பொருளுக்கும்) ஆன்மாவுக்கும் *நடுவே உள்ளது (அது) கண்டு - (ஒரு பொருளை) உற்றுப் பார்த்து, ஒல்லைகாணும் நெறி - அதை விரைவில் உணருதற்கு வழியாகின்றது; (அதுபோல), ஒளி உயிர் நாப்பண் உண்டு - ஞான ஒளியானது உயிருக்கும் (மெய்ப் பொருளுக்கும்) நடுவில் உள்ளது; (அது), கண்டு - மெய்ப்பொருளைக்கண்டு, ஒல்லை காணும் நெறி - அதை விரைவில் உணருதற்கு வழியாம்; ஒளி அல்லாது இல்லை - திருவருளாகிய ஞான ஒளி இல்லையாயின் மெய்ப்பொருளைக் காணுதலில்லையாம்.

[நாப்பண்—நடு. ஒல்லை—விரைவு. ஒளி—ஞான ஒளி.]

உலகப் பொருள்களைக் காணுதற்குப் புறக்கண் இன்றியமையாததுபோல, மெய்ப் பொருளைக் காணுதற்குத் திருவருளாகிய கண் இன்றியமையாதது;

நாம் ஒரு விஷயத்தை அவதானிக்கும்போது பிற பொருளைக் கண் காணவும் நாம் உணராமலிருக்கின்றோம். ஆதலாற் பொருள்களைக் கண்டு உணருதற்குக் காட்சியோடு அவதானம் வேண்டும். இவ்வுண்மையை வற்புறுத்தற்கு (உற்றுப் பார்த்து என்னும் பொருள்பட) ''கண்டு'' என்றார். (6)

## ஆன்மா தன்செயலைச் சிவன் செயலாகக் கருதவேண்டும்

**புன்செயலி னோடும் புலன்செயல்போ னின்செயலை**
**மன்செயல தாக மதி.**

ப—ரை: புன்செயலின் ஓடும் புலன் செயல்போல் - இழிவான செய்கைகளிலே செல்லும் இந்திரியங்களின் செய்கைகளை உன்னுடைய செய்கைகளாக நீ கருதியதுபோல, நின் செயலை - உன்னுடைய செயலை, மன் செயல் ஆக மதி - கடவுளுடைய கிரியாசத்தியின் வழியே நடப்பதாக எண்ணிக்கொள்.

முன்னே நீ இந்திரியங்களை ஏவ, அவை தொழில்களைச் செய்தன. அத்தொழில்களுக்கு நீ காரணனுயிருந்தமையால் அவற்றை உன்னுடைய செயல்களாக மதித்தாய். இப்போது சிவசத்தி உன்னை ஏவ, நீ தொழில்களைச் செய்கின்றுயாதலால், உன்னுடைய செயலைச் சிவசத்தியின் செயலாகக் கருது.

* நடுவே உள்ளது - காணப்படு பொருட்கும் காணும் ஆன்மாவுக்கும் இடை நின்று உதவி செய்யுங் கருவியாய் உள்ளது என்றபடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மா ஒரு செயலைத் தன் செயலாக நினைத்துச் செய்தால் அதிலே அகந்தை மமதை நிகழ்வதால், அது ஆகாமிய கர்மமாகும்; சிவன் செயலாக நினைத்தால் ஆணவ சம்பந்தமில்லாமையால் அது ஆகாமிய கர்மமாகாது. ''அரன் பணியில் நின்றிடவும் அகலுங் குற்றம்'' என்றருளினர் அருணந்தி தேவர். ''செயல்'' என்பது பகுதிப் பொருள் விகுதிபெற்றுச் ''செயலது என நின்றது.

(7)

## ஞானத்தைக் காணும் முறைமை

**ஓராதே யொன்றையுமுற் றுன்னுதே நீமுந்திப்**
**பாராதே பார்த்ததனைப் பார்.**

ப—ரை: ஒன்றையும் ஓராதே - ஞானம் எப்படியிருக்கும் எவ்வாறு வரும் என்று நீ ஆராயாதே. உற்று உன்னுதே - (உலகப் பொருள்களைக் குறித்து நினைப்பது போல) அதைப் பற்றிச் சற்றேனும் நினையாதே, நீ முந்திப் பாராதே - அது வருமுன் நீ அதைத் தெளிந்துகொள்ள முயற்சி செய்யாதே, பார்த்ததனைப் பார் - ஞானமானது உனக்குத் தோன்றும் அப்போது அதைக் காண்பாயாக. (பார்த்த + அதனை = தரிசனப்பட்ட அதனை.)

[ஓர்தல் - ஆராய்தல். உன்னுதல்—நினைத்தல்.]

ஒரு பொருளை அறியுங்கால் அதை ஆராய்தல் யோசித்தல் தெளிதல் என மூன்று படிகள் உளவாதலால் ''ஓராதே உன்னுதே பாராதே'' என்றார்.

உள்ளத்தினால் ஞானம் காணப்படாதாதலின், அதை அறிதற்கு உள்ளத்தினால் முயற்சி செய்தல் வீண். உள்ளம் அசையாதிருந்தால் ஞானம் வரும்; ஆதலின் ''ஒன்றுஞ் செய்யாதே'' என்றார், ஞானத்தைக் காண்பது ஞான சத்தியினாலாதலால் ''பார்த்ததனைப் பார்'' என்று கூறினர்,

நீ தியான நிலையில் மனத்தை உள் முகமாக்கி ஒரு வழிப் படுத்தி ஒரு பற்றுமின்றி இருப்பாயாயின், திருவருள் தானாகவே உன்னைப் பற்றும் என்பது கருத்து.

## ஞானத்தை அணையும் முறைமை

**களியே மிகுபுல னாக்கருதி ஞான**
**வொளியே யொளியா வொளி**

ப—ரை: களியே மிகு புலன் ஆ [க] கருதி - (ஞானத்தைப் பெற்றபின் உண்டாகும்) பேரானந்தத்தையே நீ நுகரும் பொருளாகக்கொண்டு, ஞான ஒளியே - ஞானமாகிய பிரகாசத்தையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளி ஆ[க] - அறி கருவியாகக் கொண்டு, ஒளி - (அந்த இன்பத்துள் மூழ்கி உலக விடயங்கள் உன்னைப் பற்றுதபடி) ஒளித்து நிற்பாயாக.

ஞானம் வந்தபின்பு ஆன்மாவுக்கு முயற்சி அந்த ஞானத்தால் வரும் பெருமகிழ்ச்சியை அனுபவித்தலேயாம்; அதன்பின் உலக விஷயங்களிலே கருத்துப் போகுமோ என்றல், தண்ணீருள் மறைந்து நிற்பவனுக்கு வெளியிலுள்ள பொருள்கள் தோன்றுமை போல, ஞானத்துள் முழுகி நிற்பவனுக்கு அவை தோன்றுவாம்; அவற்றல் இவன் கவரப்படவும் மாட்டான். (9)

## பிறபொருளைக் கருதாமல் ஞானவசமாய் நிற்றல்

கண்டபடி யேகண்டு காணுமை காணுமை
கொண்டபடி யேகொண் டிரு.

ப—ரை: கண்டபடியே கண்டு - ஞானம் உனக்கு எப்படி வெளிப்பட்டதோ அப்படியே நீ அதைக் கண்டு, காணுமை காணுமை - அறியாமை (= உலக விடயக் கருத்து) வந்து தோன்றுத படிக்கு, கொண்டபடியே கொண் டிரு - அது உன்னை ஏற்றபடியே அதன்வயப்பட்டு இருப்பாயாக.

இந் நான்கு திருக்குறளும் ஆசிரியர் மாணுக்கனை நோக்கிக் கூறியன. காணுமை இரண்டனுள் முன்னது எதிர்மறைந் தொழிற் பெயர்; பின்னது எதிர்மறை வினையெச்சம். (10)

## ஏழாம் அதிகாரம் - உயிர் விளக்கம்

**அஃதாவது அறியுநெறியிற் கூறியபடிநின்று ஆன்மா ஆணவ மலம் நீங்கப்பெற்றுத் தன்செயலின்றித் திருவருள் வசப்படுதல். இது ஆன்மசுத்தி யெனவும் படும்.**

### அருளை அடைதற்கு ஏது

தூநிழலார் தற்காருஞ் சொல்லார் தொகுமிதுபோற்
றுனதுவாய் நிற்குந் தரம்.

ப—ரை: தூ நிழல் ஆர்தற்கு - (வெயிலில் வருந்தினவன்) குளிர்ந்த நிழலைச் சேர்தற்கு, ஆரும் சொல்லார் - அங்கே போ என்று ஒருவருஞ் சொல்லவேண்டுவதில்லை (அவன் தானே விரைவாக ஓடிச் சேருவான்), தொகும் இதுபோல் (ஆகும்) - பொருந்திய இந்த முறைமை போலும், தான் அதுவாய் நிற்குந் தரம் - மலங்களின் துன்பங்களால் வருந்தினேன் அருளைக் கண்டவுடனே தான் அந்த அருளோடு சேர்ந்து நிற்குந் தன்மை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெயிலால் வருந்தினேன் நிழலைக் காணும்போது தானாக அந் நிழலை மிகுந்த ஆசையோடு அடைவதுபோல, மலங்களின் துன்பங் களால் வருந்தினேன் பேரின்பத்தைத் தருவதாகிய திருவடிகளைக் காணும்போது தானாகவே பெருமகிழ்ச்சியோடு அதைச் சேருவான் என்பது கருத்து. (1)

## ஆன்மா அருளை அறியுங் காலம்

**தித்திக்கும் பாருனுங் கைக்குந் திருந்திடுநாப்**
**பித்தத்தின் முன்றவிர்ந்த பின்.**

[தித்திக்கும் பால்தானும் கைக்கும்; பித்தத்தின் தான் தவிர்ந்த பின் நா திருந்திடும்.]

ப—ரை: தித்திக்கும் பால்தானும் கைக்கும் - (பித்த நோயு டையாரது நாவுக்கு) மதுரமான பாலும் கசப்பாயிருக்கும், பித் தத்தின் தவிர்ந்தபின் - பித்த நோயினின்றும் நீங்கியபின், நா - நாவானது, திருந்திடும் - முன் கைத்த பால் தித்திக்கத்தக்கதாகத் திருந்திவிடும்.

அதுபோல, ஆணவமாகிய நோயுள்ள காலத்தில் கசப்பாகத் தோன்றிய திரோதானசத்தி, ஆணவம் நீங்கியபின்பு ஆன்மாவுக்கு இனிய பேரருளாகத் தோன்றும். திரோதானசத்தியானது ஆணவ நோயைத் தீர்த்தற்காக ஆன்மாவுக்குப் பிறப்பிறப்பு முதலிய துன்பங்களைக் கொடுத்து அனுபவிக்கச் செய்தது. இச் செய்கை ஆன்மாவுக்கு நன்மையைக் கொடுத்ததாயினும் அதற்குக் கசப் பாகவே தோன்றியது. இச் செய்கையால் அதற்கு மலம் தீர்ந்த பின்பு அது சத்தியின் செயலை இனியதாகக் காண்பதுமன்றிச் சத்தியையுங் காண்கின்றது. நாவானது வியாதியில்லாத இயல்பான நிலையிலே பாலின் இரசத்தை உள்ளபடி அறிவதுபோல, ஆன்மா வானது ஆணவமில்லாத இயல்பான நிலையிற் சிவசத்தியை அறியும். நா ஆன்மாவுக்கும், பால் சத்திக்கும், பித்தநோய் மலத்துக்கும் உவமையாயின. (2)

## ஆன்மா அருளைத் தானாகக் காணமாட்டாது.

**காண்பா ரொளியிருளிற் காட்டிடவுந் தான்கண்ட**
**வீண்பாவ மெந்நாள் விழும்.**

[ஒளி இருளில் காட்டிடவும், காண்பான் தான் கண்ட வீண் பாவம் எந் நாள் விழும்.]

ப—ரை: ஒளி - ஒளிவடிவாகிய ஞானமானது. இருளிற் காட் டிடவும் - ஆணவமாகிய இருளில் ஆன்மா கிடந்து மயங்கும்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னைக் காட்டிடவும், காண்பான் - அதைக் காணும் ஆன்மா, தான் கண்ட வீண் பாவம் - தன் முயற்சியால் அதைக் கண்டதாக நினைப்பதால் வீணாக வரும் பாவமானது. எந்நாள் விழும் - எப்போது நீங்கும்.

வீண் பாவமாவது பிற பொருள்களுங் காரணமாகாமல் ஆணவ முனைப்பினால் மாத்திரஞ் செய்யப்படும் பாவம். இது மிகக் கொடியது. மற்றைய பாவங்கள் பிற பொருள்களுங் காரணமாக உண்டாவன. ஒரு பொருளைக் காணும் போது அதில் ஆசையுண்டாகுமாயின், அந்த ஆசைக்கு அந்தப் பொருளும் ஒரு காரணம். அந்தப் பொரு ளில்லையாயின் அந்த ஆசை உண்டாகாது. கோபம் முதலிய பாவங்களும் இதுபோல்வன. இவை வீண் பாவத்தைப்போற் கொடியவை அல்ல. திருவருளை மதியாமை முதலிய வீண் பாவங்கள் ஆணவம் மிகவும் முனைப்பதால் உண்டாவன. ஒருவன் திருவருளை மதியாமல் தன்னுடைய வல்லமையால் அதைக் கண்டதாக நினைப்பது வீண் பாவம். (3)

## திருவருள் ஆணவத்தை ஒத்திருக்கும் வகை

**ஒளியு மிருளு மொருமைத்துப் பன்மை**
**தெளிவு தெளியார் செயல்.**

ப—ரை: ஒளியும் இருளும் ஒருமைத்து - திருவருளும் ஆணவமும் தன்வகைப் பொருளைக் காட்டி ஒழிந்ததை மறைக்குந் தன்மையில் ஒத்திருக்கின்றன, பன்மை - அவற்றிற்குள்ள பேதம் யாதெனில், தெளிவு - அருளானது தன்னை அடைந்தோர்க்கு உண்மைப் பொருளைக் காட்டுவதும், தெளியார் செயல் - ஆணவமானது அது நீங்காதார்க்குப் பொய்யாகிய பொருள்களைக் காட்டுதலுமாம்.

[பன்மை - வேறுபாடு]

அருளானது சிவத்தைக் காட்டி உலகத்தை மறைக்கும். ஆணவமானது உலகத்தைக் காட்டிச் சிவத்தை மறைக்கும். (4)

## திருவருளையடைந்தோர்க்குக் கடவுள் வெளிப்படுதல் எளிது.

**கிடைக்கத் தருமோநற் கேண்மையார்க் கல்லால்**
**எடுத்துச் சுமப்பானை இன்று.**

[நல் கேண்மையார்க்கு அல்லால், எடுத்துச் சுமப்பானை இன்று கிடைக்கத்தகுமோ?]

ப—ரை: நல் கேண்மையார்க்கு அல்லால் - அன்பு நிறைந்த சுற்றத்தவரை உடையவருக் கல்லாமல், எடுத்துச் சுமப்பானை - அவருடைய சுமை எல்லாவற்றையும் எடுத்துச் சுமப்பவன் ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வனே, இன்று கிடைக்கத் தகுமோ - இப்போது பெற்றுக் கொள்ளுதல் கூடுமோ, கூடாது; (அதுபோல) பேரன்பால் திருவருளைச் சார்ந்தவருக்கு அவருடைய வினைகளையும் வினைப்பயன்களையும் சுமப்பவராகிய கடவுள் எளிதிற் றோன்றுவர்.

[கேண்மை—சுற்றம். கேண்மையார்க்கு—சுற்றமுடையவர்க்கு]

திருவருள் தோன்றும்போது நாம் அதன் வசப்பட்டு நின்றால், கடவுள் வெளிப்படுவர்; வினைகளைத் தாமே தாங்குவர் என்பது கருத்து.

திருவருளைச் சாராதாருடைய வினையையும் பயனையும் கடவுள் சுமக்கமாட்டார். ஒருவன் வறியவனாயிருக்கும்போது அவனுடைய நல்ல சுற்றத்தவர் அவனுக்குள்ள கடன்களைக் கொடுத்து அவனைத் தாங்கிவருவதுண்டு; இப்படியே நல்ல சுற்றத்தவர் அவனுடைய சுமையைப் பலவகையாகச் சுமக்கின்றனர். அதுபோலக் கடவுள் தம்மைச் சார்ந்த மெய்யடியாருடைய ஆகாமிய வினையையும் பிராரத்தத்தின் பயனாகிய இன்ப துன்பங்களையும் தாமே சுமக்கின்றார். தாமே சுமத்தலாவது அவர்களிலே சாராமற் றடுத்தல் "சிவனுமிவன் செய்தி யெல்லாம் என் செய்தி யென்றும், செய்ததெனக் கிவனுககுச் செய்ததென்றும்" என அருணந்தி தேவர் திருவாய் மலர்ந்தருளினர்; ஞானவான் தன்னைக் கடவுளிடங் கொடுத்தலினால், அவன் செயலில்லாதவனாக, அவனுடைய செயலெல்லாம், சிவன் செயலாகின்றன; ஆதலால் வாசனாமலமாகிய பழைய பழக்கத்தினால், தீவினையென்று சொல்லப்படும் வினைகளை அவன் செய்தானாயினும், அந்த வினைகள் அவனைச் சாரமாட்டா. கண்ணப்பநாயனார் திருக்காளத்தியிலே சிவவசமாய் நின்று நைவேத்தியத்துக்காக உயிர்களைக் கொன்றார். "இந்தக் கொலைத் தொழில் வாசனா மலத்தினாலே அவருடைய கருத்தின்றிக் காயத்தினாற் செய்யப்பட்டது. *அந்தக்

* நோயினால் அறிவிழந்தவர் பழைய பழக்கத்தின்படி பலவகையாகப் பேசிப் பல தொழில்களையுஞ் செய்வர். இவை காயத்தின் செயல்களன்றி, அவருடைய செயலன்று. கண்ணப்பநாயனார் மிருகங்களைக்கொன்றதும் இச்செயல்களையொக்கும். அவர் சுவாமிக்கு இறைச்சியைப் படைத்தமையால், சிலர் தாமும் கடவுளுக்கு இறைச்சியைப் படைக்கலாம் என்று பிதற்றுவர். கண்ணப்பநாயனார் இறைச்சியைப் படைத்ததுமன்றித் தமது வாயிற் கொண்டுபோன நீரால் அபிஷேகமுஞ் செய்தனர். செருப்புக் காலைச் சிவலிங்கத்தில் வைத்தார். இவர்களும் வாயிற்கொண்டுபோன நீரால் அபிஷேகஞ் செய்து, திருமேனியிற் செருப்புக்காலை வைக்காததேனோ? இந்த மூன்று செயல்களும் மெய்ஞ்ஞானிகளல்லார் செய்யின் மகாபாதங்களாய் முடியும். ஆதலாற்றான் கண்ணப்பநாயனார் அவற்றைச் செய்தபொழுது அவை பாதகமாகாமற் சிவபுண்ணியமாயின என்று எடுத்துப் பாராட்டப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கர்மம் அவரிலே சாராமற் கடவுள் அதைத் தடுத்தார். அவர் அவ்வளவுநாளும் ஊண் உறக்கமும், தம்மைப்பற்றிய சிந்தனையுஞ் சற்றேனுமில்லாம லிருந்ததே அவர் சிவவசப்பட்டிருந்தா ரென்பதற்குச் சாட்சி.

சிறுத்தொண்ட நாயனார் சிவனடியாராகத் தோன்றி வந்தவருடைய கட்டளையைச் சிவபெருமானுடைய கட்டளையாகப் பாவித்துச் சிவவசமாய் நின்று தம்முடைய குழந்தையைக் கொன்றார். ஆதலால் அந்தவினை அவரைச் சாரவில்லை. தம்முடைய உயிரினும் இனியதாகிய குழந்தையைக் கொன்றபோது அவர் சற்றேனுந் துக்கப்படாமல் மகிழ்ச்சியோடிருந்தது சிறுத்தொண்டநாயனார் சிவவசமாய் நின்றார் என்பதற்குச் சாட்சியாகும்.

திருநாவுக்கரசு நாயனார் நீற்றறையில் இடப்பட்டபோது நீற்றினால் வருந் துன்பம் அவரைச் சாராமற் சிவபெருமான் தடுத்தார். அவர் கைலாசத்துக்குப் போனபோது அவருடைய கால் கை தேய்ந்து சரீரம் கல்லினாற் கிழிக்கப்பட்டதனால் உண்டான துன்பம் அவரைச் சாராமற் கடவுள் தடுத்தார். இவ்வாறு ஞானவான்களின் வினைகளும் வினைப்பயன்களும் அவர்களைச் சாராமற் கடவுள் தடுக்கின்றார். (5

## திருவருளைச் சாராதார் கடவுளை அடையார்

**வஞ்ச முடனொருவன் வைத்த நிதிகவரத்**
**துஞ்சினனோ போயினனோ சொல்.**

ப—ரை: ஒருவன் வைத்த நிதி - ஒருவன் வைத்த பொருளை, வஞ்சமுடன் கவர - வேறொருவன் களவாக எடுத்துக் கொண்டுபோக, துஞ்சினனோ போயினனோ - (அந்தப் பொருளை யுடையவன்) உறங்கினனோ அல்லது அவ்விடம்விட்டு நீங்கினனோ, சொல் - சொல்லுவாயாக.

---

''பொருட்பற்றிச் செய்கின்ற பூசனைகள் போல்விளங்கச்
செருப்புற்ற சீரடி வாய்க்கலசம் ஊன்அமுதம்
விருப்புற்று வேடனார் சேடறிய மெய்குளிர்ந்தங்
கருட்பெற்று நின்றவா தோணோக்கம் ஆடாமோ''

(திருவாசகம்)

மெய்ஞ்ஞானிகள் ''பாதகத்தைச் செய்திடினும் பணியாக்கி விடுமே'' என்பதற்குக் கண்ணப்பநாயனார் செயல்கள் இலக்கியமாய் நின்றன. மெய்ஞ்ஞானிகளல்லாதார் அச்செயல்களைச் செய்யின் அவை பெரும் பாதகமாய் முடியுமென்பது திண்ணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளையுடையவன் விழித்துக் கொண்டு பொருளோடிருப் பானாகில் அதைத் திருட ஒருவராலும் இயலாது. அதுபோல, பேரின்பத்தை யுடையதாகிய திருவருளின் வழியாலன்றி வேறு வழியாக அதைப் பெற்றுக்கொள்ளலாகாதென்பது கருத்து. நிதி பேரின்பத்துக்கும், நிதியை யுடையோன் திருவருளுக்கும், வஞ்ச முடன் கவருவோன் திருவருளைச் சாராமற் பேரின்பத்தைப் பெற முயற்சி செய்வோனுக்கும் உவமை.○ (6)

## அருள் ஆன்மாவை வசப்படுத்தல்

தனக்குநிழ லின்று வொளிகவருந் தம்பம்
எனக்கவர நில்லா திருள்.

ப—ரை: தனக்கு நிழல் இன்று[க] - (சூரியன் உச்சியில் நிற்கும் போது) தன்னுடைய நிறந் தோன்றப் பெறாமல், ஒளி கவரும் தம்பம் என - கிரணத்தாற் கவர்ந்து கொள்ளப்படும் படிகத் தூண் போல, கவர - (ஆன்மா தன்னறிவு தோன்றப் பெறாமல் திருவரு ளாற்) கவர்ந்து கொள்ளப்படுமாயின், இருள் நில்லாது - அந் நிலையிலே மலம் நில்லாமற் போகும்.

இருளிலே படிகத்தூண் இருளாகி யிருப்பதுபோல, ஆணவத் தோடுள்ள நிலையில் ஆன்மா ஆணவமயமாக நிற்கின்றது. சூரியன் உதயமாகப் படிகத்தூண் இருள் நீங்கித் தன்னிறங்காட்டி நிற்பது போல, மலபரிபாகமானபோது ஆன்மா தன்னறிவோடு நிற்கும். சூரியன் ஏறிவரத் தூணைச் சூரியவொளி அதிகமாகப் பற்றுவது போல, ஆன்மாவிலே திருவருள் பதியப்பதிய ஆன்மாவைச் சிவ போதம் பற்றும். சூரியன் உச்சியில் வரும்போது தூணின் ஒளி சூரியப் பிரகாசத்தில் மறைய அது முழுவதும் சூரியகிரண மயமாக நிற்பதுபோல, சிவபோதம் ஆன்மாவை முற்றுகக் கவர்ந்து தன் னுள்ளே அடக்கும்போது ஆன்மா சிவமயமாகின்றது. (7)

---

○இனி, நிதியை வினைக்கும், நிதியையுடையோனை மெய்ஞ் ஞானிக்கும், கவருவோனைக் கடவுளுக்கும் உவமையாக்கி, மெய்ஞ் ஞானிகள் வினை செய்யும்போது அவர்கள் அதிலே பற்றில்லாதவ ராதலால், அவ்வினையாகிய நிதியை வைத்துக்கொண்டு துஞ்சுபவர் போல அல்லது அதைவிட்டுப் போயினவர்போல இருத்தலின், அதைக் கடவுள் கவர்ந்துகொள்வர் என்று பொருள்பண்ணி, மெய்ஞ் ஞானிகளை வினையடையாமைக்குக் காரணம் அவர்களுக்கு அதிற் பற்றில்லாமை என்று விளக்கியவாறுமாகக் கொள்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருளை முன்னிட்டு அதற்குப் பின்னே ஆன்மா நிற்றல் வேண்டும்

**உற்கைதரும் பொற்கை யுடையவர்போ லுண்மைப்பின்**
**நிற்க அருளார் நிலை**

ப—ரை: உற்கைதரும் பொற்கை உடையவர் போல் - தழற் கொள்ளியை [= சூளை]ப் பிடித்திருக்கும் அழகிய கையையுடையவர் (தாம் வேண்டிய பொருளைக் காணும்போது அக்கொள்ளியை முன்னிட்டுத் தாம் பின்னே நிற்பது) போல, உண்மைப்பின் நிற்க - (ஒருவர் சிவத்தைக் காணவேண்டின்) அருளைத் தமக்கு முன்னாக்கித் தாம் அதன்பின்னே நிற்பாராக. அருள் ஆர் நிலை - அருளோடு பொருந்தி நிற்கும் நிலை இதுவே.

ஒரு பொருளைப் பார்க்கிறவன் விளக்கைத் தனக்குப் பின்னே பிடிப்பானாயின், அவன் அந்த விளக்கொளியை மறைத்து, பொருளிருக்கு மிடத்தை நிழற்படுத்துவதனால் அந்தப் பொருளைக் காணான்; ஆதலால் விளக்கினால் அவனுக்குப் பயனுமில்லை. தனக்கு முனனே விளக்கைப் பிடிப்பானாயின் அந்த ஒளியைக் கொண்டு பொருளைக் காண்பான். அதுபோல அருளைப் பின்னாக்கித் தன்னறிவாற் காணவிரும்புவோன் சிவத்தைக் காணமாட்டான். அருள் அவனுக்குப் பயன்படுவதில்லை. அருளை முன்னாக்கினால் (தன்னறிவால் முயலுதலை அறவே விட்டு அருளின் துணையை வேண்டி நின்றால்) அவனுடைய அறிவு அருட்பிரகாசத்திற்கலக்கச் சிவத்தைக் காண்பான். (8)

## அருளுக்கு முன்னே நிற்கும்போது சிவத்தைக் காணாமைக்கு ஏது

**ஐம்புலனாற் றாங்கண் டகன்றா லதுவொழிய**
**ஐம்புலனார் தாமா ரதற்கு.**

ப—ரை: (சிவம்), ஐம்புலனால் - மெய் வாய் கண் மூக்குச் செவிகளால், தாம் கண்டகன்றால் - தாம் கண்ட பொருள்களுக்கு அப்பாற்பட்ட பொருளாயின், அது ஒழிய - அருளாலேயன்றி, அதற்கு - பேரின்பமாகிய சிவத்தை யறிதற்கு, ஐம்புலன் ஆர் தாம் ஆர் - ஐம்பொறிகளுக்கேனும் தமக்கேனும் தகுதியில்லை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கண்ட + அகன்றால்' எனப் பிரிக்க. கண்ட - அஃறிணைப் பன்மை வினையா லணையும் பெயர்; ஈற்று அகரம் தொகுத்தல் விகாரமாயிற்று.

ஐம்பொறிகளின் காட்சிக்கு மேற்பட்டதை அவை காண மாட்டா. மனத்துக்கு அதீதமானதை மனம் அறியமாட்டாது. சிவமானது பொறிகளையும் மனத்தையும் கடந்ததாதலால் அதை ஆன்மா இவற்றால் அறிதல் முடியாதென்பது கருத்து. இதை

நானார் என்னுள்ளமார் ஞானங்களார் என்னையாரறிவார்
வானோர் பிரானென்னை யாண்டிலனேல் மதிமயங்கி
ஊனா ருடைதலையி லுண்பலிதே ரம்பலவன்
தேனார் கமலமே சென்றூதாய் கோத்தும்பீ

என்னும் திருவாசகத்தாலு முணர்க. (9)

## இதுவுமது

தாமே தருமவரைத் தம்வலியி னாற்கருதல்
ஆமே யிவனா ரதற்கு.

[தாமே தரும் அவரை தம் வலியினால் கருதல் ஆமே? அதற்கு இவன் ஆர் ?]

ப—ரை: தாமே தரும் அவரை - ஒரு பொருளை ஒருவர்க்குத் தாமே விரும்பித் தருபவரை (மதியாது), தம்வலியினாற் கருதல் ஆமே - தம் சாமர்த்தியத்தினால் அவரிடம் அதைப் பெற்றதாக நினைத்தல் நீதியாகுமா? ஆகாது; (அதுபோல, திருவருளானது தானாக விரும்பி ஆன்மாவுக்குப் பேரின்பத்தைக் கொடுக்க, ஆன்மா தன்னுடைய ஆற்றலால் அதைப் பெற்றதென்று நினைத்தலாகாது); இவன் அதற்கு ஆர் - (திருவருளாலன்றி) அப் பேரின்பத்தைப் பெறத்தக்க தகுதி ஆன்மாவுக்குச் சிறிதுமில்லையே.

ஒரு சிறுபொருளைத் தரும்படி நாம் ஒருவரைக் கேட்க, அவர் கைம்மாறு கருதாமல் அதைத் தருவாராயின் நாம் அவருக்கு நன்றி பாராட்டுகிறோம். அப்படியாகவும், மனவாக்குக்களுக் கெட்டாத பெரும்பொருளாகிய சிவானந்தத்தைத் சிவபெருமான் (நாம் கேளாமல்) தாமாகவே கைம்மாறின்றித் தரும்போது எங்களிலிருக்க வேண்டிய நன்றியறிவுக்கு எல்லையுண்டா? நன்றியறிவு சிறிதுமில்லாமல், அவர் தாமே தருபவர் என்பதை மதியாமல், நமது வல்லமையினால் நாமே பெறுவோமென்று நினைப்பது பெருந்துரோகம். திருவருள் தானாகச் சிவத்தைத் தரும் என்பதை, ''தான் வந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாயேனைத் தாய்போற் றலையளித்திட்டு'' ''தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும் வான்வார் கழல்'' என்னும் திருவாசகப் பாக்களிலும், சிவம் தன்னைக் கொடுத்தபோது மாணிக்கவாசக சுவாமிகள் தம்மை அடிமையாகக் கொடுத்து ஆனந்த பரவசப்பட்டதை,

''தந்தது உன் றன்னைக் கொண்டதென் றன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்
அந்த மொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாது நீ பெற்றதொன் றென்பால்
சிந்தையே கோயில் கொண்டஎம் பெருமான்
திருப்பெருந் துறையுறை சிவனே
எந்தையே ஈசா உடலிடங் கொண்டாய்
யானிதற் கிலனோர் கைம் மாறே'' (10)

என்பதிலும் காண்க.

## எட்டாம் அதிகாரம் - இன்புறுநிலை

### ஆன்மசுத்தி யடைந்த பின்பு பேரானந்தத்தை அடையும் வழி

### பேரின்பத்தைப் பெறுவோரும் பெறாதோரும்

**இன்புறுவார் துன்பா ரிருளி னெழுஞ்சுடரின்**
**பின்புகுவார் முன்புகுவார் பின்.**

[இருளின் எழும் சுடரின் பின் புகுவார் இன்பார்; முன் புகுவார் பின் துன்பார்.]

ப—ரை: இருளின் எழும் - ஆணவத்தை நீக்குதற்காக மேலாக விளங்குகின்ற, சுடரின் பின் புகுவார் - ஞானத்தை முன்னிட்டுத் தாம் பின்னே செல்பவர், இன்புறுவார் - பேரின்பத்தை அடைவார், முன் புகுவார் பின் துன்பார் - தாம் முன்னாக (வும் அவ்வருள் பின்னாகவுஞ்) செல்பவர் (அதனால்) பின் துன்பத்தை அடைவார்.

[இச்செய்யுள் நிரனிறைப் பொருள்கோள் அமைந்தது]

அகந்தை மமதைக்குக் காரணமாகிய ஆணவம் நீங்கப்பெற்று ஆன்மசுத்தி யடைந்தவர் தம்மை மறந்து திருவருளை மாத்திரம் நினைத்துப் பேரானந்தத்தை அடைவார். ''என்னை மறந்திருந்தேன் இறந்தேவிட்டது இவ்வுடம்பே'' என்றருளினர் அருணகிரி நாதர். (1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்பத்துக்குச் சிவானுபவம் வேண்டும்

**இருவர் மடந்தையருக் கென்பய னின்புண்டாம்**
**ஒருவ னொருத்தி யுறின்.**

*[இருவர் மடந்தையருக்கு என் பயன்? ஒருத்தி ஒருவன் உறின் இன்பு உண்டாம்.]*

ப—ரை: இருவர் மடந்தையருக்கு என் பயன் - ஆளப் படும் இயல்புடையவளான ஒரு பெண் வேறொரு பெண்ணால் இரட்சிக்கப்படமாட்டாள், (அதுபோல, ஆளப்படுவதாகிய ஆன்மா சிவத்தால் ஆளப்படுவதாகிய அருளோடு சேர்வதனாற் பேரின்பமாகிய பயனை அடையமாட்டாது); ஒருத்தி ஒருவன் உறின் இன்பு உண்டாம் - பெண்ணானவள் ஆளுந்தன்மையை யுடைய ஆடவனை அடைந்தால் அவனால் (இரட்சிக்கப்படுதலாகிய) இன்பத்தை அடைவாள், (அதுபோல், ஆன்மா அருளைக் கொண்டு சிவமாகிய தன்னுடைய தலைவனைச் சேர்ந்தே பேரின்பத்தை அடையும்).

ஆன்மா மலங்களினின்று நீங்கிச் சுத்தியடைந்த வெறு நிலையே பேரின்பமென்று அறியாதார் கூறுவர். திரோதான சத்தியானது ஆன்மாக்களை மலத்தினின்றும் நீக்கி அருட்சத்தியாகி, அவற்றைச் சிவத்தோடு சேர்த்தபின்பே அவை இன்பத்தை அடைவன. மலம் நீங்குவதும் சிவத்தை யடைவதும் வேறென்பதை, ''சித்தமல மறுவித்துச் சிவமாக்கி யெனையாண்ட'' என்னுந் திருவாசகத்திலுங் காண்க. ஒருபொருளைத் தேடுபவன் அந்தப் பொருளைக் காட்டுதற்கு வேண்டிய விளக்குக் கிடைத்தமாத்திரத்திற் பெரு மகிழ்ச்சி யடையான். ஒரு தேசத்தை யடையவேண்டித் தோணியிற் செல்பவன் தோணியி லிருக்கும்போதே இன்புறமாட்டான். பொருளைத் தேடினவன் பொருளைப் பெற்றபின்பும் தேசத்தை யடைய விரும்பினவன் அதை யடைந்தபின்பும் மகிழ்வதுபோல, ஆன்மா திருவருளைச் சார்ந்த அளவிற் பேரானந்தத்தைப் பெறாது சிவத்தை அடைந்தபின்பே அதனைப்பெறும். (2)

## அத்துவிதக் கலப்பால் பேரின்பத்தைப் பெறுவது ஆன்மாவே; சிவம் பெறுவதில்லை.

**இன்பதனை யெய்துவார்க் கீயு மவர்க்குருவம்**
**இன்பதன மாதலிறு லில்**

ப—ரை: எய்துவார்க்கு இன்பதனை ஈயும் - (சிவபெருமான் தம்மை) அடையும் ஆன்மாக்களுக்குப் பேரின்பத்தைக் கொடுத்

தருளுவர், அவர்க்கு உருவம் இன்ப கனம் - அவருடைய திருமேனி நிறைந்த ஆனந்தமாம், ஆதலினுல் இல் - ஆதலினுல் (அத்துவிதமான ஆன்மாவினுல் அவர் ஆனந்தத்தைப் பெறுவது) இல்லை.

கனம் என்னுஞ் சொல்லுக்கு நிறைவு அல்லது மிகுதி என்பது பொருள். இன்பகனம் - கனமாகிய இன்பம்; இது பின்மொழி நிலையலாகிய பண்புத்தொகை; "மதிநுட்பம் நூலோடுடையார்க்கு" என்புழி போலக் கொள்க.

துன்பத்தை அனுபவித்தவரே இன்பத்தை அறியவும் அனுபவிக்கவும் தக்கவர். சிவபெருமான் துன்டத்தை யனுபவியாதவ ராதலாலும், ஒருவகை யனுபவமும் வேண்டாத பரிபூரணராதலாலும், அவரே இன்பவடிவின ராதலாலும் அவர் இன்பத்தைப் பெறுபவரல்லர். அவர் இன்பவடி வுடையாரென்பதை "ஈறிலாப் பதங்கள் யாவையுங் கடந்த இன்பமே" என்னுந் திருவாசகத்திலுங் காண்க. முற்செய்யுளில், "ஒருவ னொருத்தி யுறின் இன்புண்டாம்" என்று உவமை கூறியவாற்ருல் அவ்விருவருமே ஒருவரால் மற்றவர் இன்ப மெய்தல் போல, ஆன்மாவினுற் சிவமும் இன்பமுறுத லுண்டோ? என்ற ஐய வினுவிற்கு விடையாக அங்ஙனம் எய்தல் இல்லை என்ருர் இச் செய்யுளால். அதாவது அவருக்கு உருவம் குறைவற்ற இன்பமயம். ஆதலினுல் அவர் தம்மைச்சேர்ந்த ஆன்மாக்களுக்கு அதனை ஈயத்தக்காரே யன்றி, அவர் ஆன்மாவினுல் இன்பம் பெறத் தக்க தேவையில்லை என்று விளக்கினுர் என்றறிக. (3)

## முத்திநிலை அத்துவிதம் என்பது

°தாடலைபோற் கூடியவை தானிகழா வேற்றின்பக்
கூடலை நீ யேகமெனக் கொள்.

ப—ரை தாடலைபோல் - தாள் தலை என்னும் இரண்டு சொற்களும் தாடலை என்னும் ஒரு சொல்லானது போல, கூடியவை - சிவமும் ஆன்மாவுஞ் சேருவன; வேறு நிகழா - பிரிக்கப்படாத, இன்பக்கூடலை - பேரின்பமாகிய அந்தக் கலப்பை, ஏகமென நீ கொள் - அத்துவிதமென நீ அறிந்துகொள்.

---

° இச்செய்யுளுக்கு, திருவருட்பயனுக்குப் பழையவுரையாகிய சிந்தனை யுரையைத் தழுவிப் பின்வருமாறு கொள்ளும்பொருள் இலகுவானதாகும்:- (மறுபுக்க அடிக்குறிப்புப் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாடலை யென்னுஞ் சொல், தாள் தலை என்னும் இரண்டு சொற்கள் சேர்ந்து நிற்றலால், ஒருமொழியன்று. தாள் தலை எனப் பிரிவின்றி, ஒருசொற் றன்மையாய் நிற்றலால், அது இரு மொழியுமன்று. அதுபோல ஆன்மா சிவத்தோடு கலந்து நிற்கும் போது ஆன்மாவுஞ் சிவமும் ஒருபொரு ளல்லாமலும் இருபொரு ளல்லாமலும் அத்துவிதம் எனப்படும். ०அத்துவிதமாவது: இரண்டு பொருள்கள் வேறறக் கலந்து ஒருபொருள் போல நிற்றல். ஒரு பொருள்போல நிற்றல் என்பதைக் காட்டுதற்கு ஏகம் என்னுது "ஏகம் என" என்றார். தாடலை யென்னுஞ் சொற்றொடர் தாள் தலை என்று பிரிக்கப்படக்கூடியது; அதைப்போலாகாமல் முத்திநிலை யிற் சிவமும் ஆன்மாவும், பிரிக்கப்படாதனவாம் என்பதைக் காட்டுதற்கு "தான் நிகழாவேற்றின்பக் கூடல்" என்றார். சாயுச்சியத் திலும் சிவம் ஆண்டானும் ஆன்மா அடிமையு மாதலாலும், சிவத்தி னுடைய பேரின்பமாகிய தாளை ஆன்மாவாகிய தலை சேருதலினு லும் வேறு சொற்களின் புணர்ச்சியை எடாமல் தாள் தலை என் னுஞ் சொற்களின் புணர்ச்சியை உவமானமாக எடுத்தார். அப்பர் சுவாமிகளும், "தருவாயெனக்குன் றிருவடிக் கீழோர் தலை மறைவே" என்றதில், தாளிலே தலை சேருவது முத்தியின்பமென்று பாடியருளினார். (4)

---

தாடலைபோல் - தாள் தலை என்று இருவேறாய் ஒலித்து நின்ற மொழிகள் புணர்ச்சிபெற்ற காலையில் தாடலை என ஒன்றுபட்டொ லித்துப் பிளவு படாது ஒரு சொன்னீர்மையாய் நின்றமைபோல, அவை - சிவமும் ஆன்மாவும், கூடி - பேதமுறத் தோன்றாதபடி ஒன்றுபடச் சேர்ந்ததனால் (=வேறறக் கலந்ததன்மையால்). வேற் றின்பக்கூடலை - (மற்றைய உலக இன்பத்திலும் வேறாகிய பேரின்ப அனுபவம் மாத்திரம் நிகழத்தக்க அந்தக்கலப்பை (= சிவமும் ஆன் மாவுமாகிய இரண்டன் கலப்பை), நீ ஏகம் என கொள் - நீ அத்து விதம் என்று கொள்."

கூடி காரணப் பொருட்டாய வினையெச்சம்; செயவெனெச்சத் திரிபு. நிகழா: நிகழாத என்னும்பெயரெச்சம் ஈறுகெட்டு நின்றது.

० அத்வைதம் என்ற வடசொல் அத்துவிதம் எனத் திரிந்தது. த்வைதம்=இருவேறாக உள்ள பொருளின் தன்மை; அ - அல் லாதது என்னும் பொருளில் வந்த வடமொழி இடைச்சொல்லின் திரிபு; அதற்குரிய இன்மை, பிறிது, எதிர்மறை என்னும் முப்பொ ருள்களுள் ஈண்டுப் பிறிது என்றபொருளினது; அநச்சுவம், அப் பிராமணன் என்புழிப்போலக் கொள்க. அநச்சுவம்:- அசுவமல் லாதது - குதிரையல்லாதது- கோவேறுகழுதை; அப்பிராமணன்:- பிராமணன் அல்லாதவன் - க்ஷத்திரிய வைசிய வருணங்களுள் ஒரு வருணத்தவன்; (இவை, முறையே உருவத்தால் குதிரையைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முத்திநிலையை அத்துவிதம் என்றதற்குக் காரணம்

ஒன்றுலு மொன்று திரண்டாலு மோசையெழா(து)
என்றுலொன் றன்றிரண்டும் இல்.

[ஒன்றுலும் ஒன்றுது; இரண்டாலும் ஓசை எழாது என்றுல், ஒன்று அன்று, இரண்டும் இல்.]

ப—ரை: ஒன்றுலும் ஒன்றுது - கடவுளும் ஆன்மாவும் ஒரே பொருளாயின் அவை கூடவேண்டுவதில்லை; இரண்டாலும் ஓசை எழாது என்றுல் - அவை வேருக நிற்பின் பேரின்ப முண்டாகாது ஆதலால், ஒன்று அன்று இரண்டும் இல் - அவை ஒரு பொருளுமல்ல இரு பொருளுமல்ல.

இத்திருக்குறள் முத்திநிலையை ஒருவாறு விளக்குகின்றது: ஒரு சாரார் ஆன்மாவுங் கடவுளும் ஒன்றென்பர். கடவுளுக்குரிய அநாதிபோதம், ०சர்வகர்த்திருத்வம் முதலிய குணங்கள் ஆன்மாவுக் கில்லாமையால் ஆன்மா கடவுளன்று. ஆன்மாவுங் கடவுளும்

---

போன்றதாய் ஆனுல் அதனின் வேருனது, உபவீத தாரணத்தால் பிராமணனைப் போலத்தோன்றுந் தன்மையனுய் ஆனுல் அவனல்லாதவன் என்னும் பொருளை யுணர்த்தின) இவைபோலச் சிவமும் சீவனும் இருவேறு பொருளாயினும் முத்திக்கலப்பில் சீவன், மலமும் ஆன்மபோதமுங்கெட்டுச் சிவபோதம் மேலிட்டு உப்பொடு கூடிய நீரேபோலச் சிவமயமாய் ஒன்றுபட்டு விளங்குமாதலின் சிவமும் சீவனும் இருவேருகத் தோன்றுத தன்மையால் இரண்டுமல்லவாய், மற்று அவை ஒரு பொருளாய் விடுமோ எனில், அந்த நிலையில் சிவம் ஆண்டானும் சீவன் அடிமையுமாய்ச் சிவத்துள் சீவன் அடங்கிப் பேரின்பம் அனுபவித்தலின் பொருட்டன்மையால் ஒரு பொருளுமல்லவாய், அவ்விரண்டும் பிரிவறக்கலந்த அக்கலப்புநிலை இரண்டென்றும் ஒன்றென்றும் கூறுவதற்கு ஏலாமையால் அத்வைதம் எனப்பட்டது. ஆகவே, அத்வைதம் என்பது: சிவமும் சீவனும் பொருட்டன்மையால் இரண்டாகியும், சீவன் சிவமயமான தன்மையால் இரண்டல்லாதநிலை (இரண்டுபடாதொன்றுனநிலை) என்னும் பொருளை உணர்த்தும். ''அ அந் ந நி கு வி வருமொழிப்பொருளை, இன்மை பிறிது மறையினுளொன்ருக்கும்'' என்ற இலக்கணக்கொத்துச் சூத்திரத்தாலும் அதனுரையாலும் 'அ' என்பது பிறிது (=அல்லாதது, அன்மை) என்றபொருளைத் தருமாற்றை அறிக.

०சர்வகர்த்திருத்வம் - எல்லாவற்றிற்குங் கர்த்தாவாய் நிற்றல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றேயாயின் அவை கூடவேண்டுவதில்லை. வேறொருசாரார் ஆன்மாவுங் கடவுளும் வெவ்வேறாய் நிற்குமென்பர். ஆன்மா வேறாக நிற்பதாயின் அதற்கு நானென்ற புத்தியுண்டாகும். நானென்ற புத்தி ஆணவத்தா லுண்டாவது. ஆதலால் அந்த நிலையில் ஆன்மாவில் ஆணவம் உண்டென்று முடிகிறது. ஆணவமுள்ளபோது பேரின்ப முண்டாகமாட்டாது. ஆகவே ஆணவமுள்ள நிலை முத்தியன்று. ஆதலால் முத்தியின்பத்தில் ஆன்மாவுங் கடவுளும் வெவ்வேறாய் நிற்பதில்லை. ஆகவே, முத்திநிலையிற் கடவுளும் ஆன்மாவும் ஒன்றென்பதும் இரண்டென்பதும் பிழையான கொள்கைகளாம். இவை வேறற நிற்றலே உண்மை. எப்படியெனில், ஆன்மாவானது கடவுளுக்குரிய குணங்களைப் பெற்று அவ்வளவில் மாத்திரம் சிவமாகின்றது. தான்வேறு சிவம் வேறாகக் கருதுவதில்லை. தான் என்பது அற்றுச் சிவத்தையே கருதி அடிமையாய் நிற்கும். கண்ணொளி அருக்கவொளியிற் கலக்கும்போது அது அருக்க வொளியாகின்றது. ஆயினும் அது பொருள்வகையால் வேறு. அதுபோல ஆன்மா சிவத்தோடு கூடிப் பேரின்பத்தை அனுபவிக்கும்போது அது தன்மயங் கெட்டுச் சிவமயமாகி வேறல்லதாயும், பொருள் வகையால் வேறாயும் அடிமையாய் நிற்கும். °பெத்தநிலையிலும் ஆன்மா கடவுளிற் கலந்து நிற்பினும் அது ஆணவத்தோடு அத்துவிதமாகி அதன் வசப்பட்டு அதுவாய் நிற்றலால், கடவுளின் கலப்பால் வரும் பயனாகிய அத்துவித முத்தி யின்பத்தை அது அனுபவிப்பதில்லை; இதுவே பெத்தக் கலப்புக்கும் முத்திக் கலப்புக்கும் உள்ள வேறுபாடு; எதுபோலென்னில், படலம் பொருந்தி ஒளி மழுங்கிய கண்ணிலும், படலம் நீங்கி ஒளி விளங்கிய கண்ணிலும் ஒரே தன்மையாகச் சூரியப்பிரகாசம் நின்றாலும், அந்தச் சூரியப் பிரகாசம் ஒளி மழுங்கிய கண்ணுக்கு இருட்டாயும் ஒளி விளங்கிய கண்ணுக்கு உள்ளபடியுந் தோன்றும். சூரியன் கடவுளுக்கும், கண் ஆன்மாவுக்கும், படலம் மலத்துக்கும் ஒப்பு. ''என்றாலு மோரிரண்டு மில்'' எனவும் பாடம். (5)

## இனிப் பிறவி யெடாதார் வகை

**உற்றாரும் பெற்றாரு மோவா துரையொழியப்**
**பற்றாரு மற்றார் பவம்**

ப—ரை; உற்றாரும்- பரமுத்தியை யடைந்தோரும், பெற்றாரும்- அப்பரமுத்தியைப் பெறுதற்குக் காரணமாகிய சமாதியை

---

° பெத்தநிலை- மலத்தோடு சேர்ந்தநிலை; 'பத்த' என்னும் வடசொல் 'பெத்த' எனத் திரிந்தது, மும்மலத்தினாற் பந்திக்கப் பட்ட என்பது பொருள்; பந்தித்தல்-பிணித்தல், கட்டுதல்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமயாசாரங்களும், அவைநீங்கும் முறைமையும்

ஒண்பொருட்க ணுற்றுர்க் குறுபயனே யல்லாது
கண்படுப்போர் கைப்பொருள்போற் காண்.

ப—ரை: ஒண் பொருட்கண் உற்றுர்க்கு - மெய்ப்பொருளாகிய ஞானத்தை அடைந்தவர்களுக்கு, உறுபயனே - (அவர்கள் அநுட் டித்துவரும் சரியை கிரியை யோகங்களால் உண்டாகும் பயன்) பேரின்பமேயாம்; அல்லாது - அன்றியும், கண்படுப்போர் கைப் பொருள்போற் காண் - உறங்குபவரது கையிலிருக்கும் பொருள் தானே நழுவுவதுபோல, அந்தச் சமயாசாரங்கள் தாமாகவே அவர் களினின்று நழுவுவதுமுண்டு.

சமாதி நிலையைப் பயிலலுற்றுருக்கு ஏனைச் சரியை கிரியை யோகங்களாகிய கர்மானுட்டானங்கள் உளவாதலும், சமாதி நிலையில் முதிர்ச்சியுற்றோருக்கு அவை தாமாக நழுவுதலும் உண்டு என்றறிக. ''உற்றுரும் பெற்றுரும்'' என்ற செய்யுளில் ''உரை யொழியப்பற்றுரும் பவம் அற்றுர்'' என்றது பற்றி. ஞானிகளி டத்தே சரியை கிரியை யோகங்களாகிய கர்மாநுட்டானம் நிகழ் தலுண்டாயின், அவை ஏதுவாகப் பிறவியுண்டாகாதோ என்ற வினுவுக்கு விடையாக ''ஒண்பொருட்கண் உற்றுர்க்கு (அவருடைய கர்மானுட்டானங்களுக்குப் பயன்) உறுபயனே'' என்றுர். அஃதா வது ஞானிகள் அவற்றைத் தற்போதமாகிய பற்று இல்லாமற் செய்வார்களாதலின், அவற்றுற் பிறவியுண்டாகாமல் அபரமுத்தி யும் பரமுத்தியுமே படிமுறையாக அவற்றுக்குப் பயனும் என்பது இதன் கருத்து. உறுபயன் - சிறந்த பயன்; அறம் பொருள் இன் பம் வீடென்ற புருடார்த்தம் நான்கனுள், வீடாகிய முத்தியின்பமே சிறந்த பயன் (பேறு) ஆதலின், அது 'உறு பயன்' எனப்பட்டது, 'உற்ற நண்பன்' என்புழிப்போல, 'உறு' என்ற உரிச்சொல் 'சிறந்த' என்னும் பொருட்டாயது.

உறங்குபவன் தன் கைப்பொருளைப் புத்திபூர்வமாக விடாதது போல, சமயாசாரங்களை ஞானிகள் வேண்டாமென்று சிந்தித்து விடமாட்டார்கள். சிலர் தாம் ஞானிகளென்றுந் தமக்குச் சமயா சாரங்கள் தேவையில்லையென்றுஞ் சொல்கிருர்கள். இவர்கள் ஞானி களல்லர். ஆணவ முனைப்பினுல் இவ்வாறு கூறுபவராதலால் இவர் கள் சரியை கிரியை யோகங்களையும் அனுட்டித்தற்குத் தகுதியில் லாத பிரவிர்த்தி மார்க்கத்தாரென அறிக. உறங்குபவனது கைக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளிலுள்ள பொருள் சிலகாலம் விழாமலிருப்பது போல, ஞானிகள் முன் அனுட்டித்த சமயாசாரங்கள் நழுவப் பெறுமல் அவற்றை அநுட்டிப்பதுமுண்டு. உறங்குபவனது கைப்பொருள் பற்றின்றி இருப்பதுபோல, இவர்களது அநுட்டானம் பற்றின்றிச் செய்யப் படும். (8)

## முத்தியின்பம் இப்படிப்பட்டதென்று சொல்லத்தக்கதன்று

**மூன்றுய தன்மையவர் தம்மின் மிகமுயங்கித்**
**தோன்றுத இன்பமதென் சொல்.**

[அவர் தம்மின் மிக முயங்கி மூன்றுய தன்மை தோன்றுத இன்பம்; அது சொல் என்?]

ப—ரை: அவர் தம்மின் மிக முயங்கி - (முத்தியின்பமானது) சிவமும் ஆன்மாவுஞ் சிறிதும் பிரிவின்றி ஒன்றுய் நிற்குங் கலப்பினுல், மூன்றுய தன்மை - காண்பவன் காட்சிப் பொருள் காட்சி என்னும் மூவகைப்பட்ட தன்மையும்; தோன்றுத இன்பம் - வெவ்வேருகத் தோன்றுத பேரின்பமாம்; அது - அந்த இன்பத்தின் அதிசயத்தை, சொல் என் - சொல்லுவ தெப்படி? (சொல்லுந் தரத்ததன்று என்றபடி.)

சொல் - சொல்லுதல், சொல்லுவது; முதனிலைத் தொழிற் பெயர். ஒருவன் ஒரு பசுவைக் காணும்போது காண்பவன் அவன்; காட்சிப்பொருள் பசு; 'அது பசு' என அறிதல் காட்சி; ஆகவே இம்மூன்று பொருளும் வெவ்வேறு. முத்தி நிலையில் ஆன்மா சிவத்தைக் காணும்போது காண்பவனுகிய ஆன்மாவும் சிவம்; காட்சிப் பொருளுஞ் சிவம்; காட்சியாகிய சிவஞானமுஞ் சிவம்; ஆதலால் அந்த நிலையில் காண்பவன் காட்சி காட்சிப்பொருள் ஆகிய மூன்றும் ஒன்று. ஒன்றுயிருத்தலால் ஆன்மா சிவாநுபவத்தினுல் விகாரமடைவதில்லை. விகாரமுண்டாயின் துன்பமுண்டு; விகாரமில்லாத இன்பமாதலால் முத்தியின்பம் ஒப்பில்லாதது. ஆதலால் அது நம்மாற் சொல்லும் படியானதன்று, இதை ''எனைத் தன்வசத்தே யாக்கும் அறுமுகவா சொல்லொணுதிந்த ஆனந்தமே'' என்பதனுலும் அறிக. காணும் பொருளாகிய ஆன்மா நானென்று வேருகவும், காட்சியாகிய அறிவு வேருகவும் நிற்பின், நானென்னும் அகந்தையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது என்னும் மமதையுங் கூடியே நிற்கும்; இவ்விரு தன்மைகளும் மலத்தினாலுண்டாவன; ஆதலால் காண்பவன் காட்சி காட்சிப்பொருளாகிய மூன்று தன்மையும் வேறாக நிற்கும்நிலை பரமுத்தியன்று.

இம்மூன்று பொருள்களும் முறையே ஞாதுரு, ஞானம், ஞேயம் எனவுஞ் சொல்லப்படும். (9)

## சீவன்முத்திநிலை பேரன்பினால் அடையத்தக்கது

**இன்பி லினிதென்ற லின்புண்டே லின்றுண்டாம்**
**அன்பு நிலையே யது.**

ப—ரை: இன்பில் இனிதென்றல் :- எல்லா இன்பங்களிலும் இனிதென்று சொல்லப்படுவதாகிய முத்தியின்பமானது, இன்பு உண்டேல் - ஒருவர்க்குப் பேரன்பு உளதாயின், இன்று உண்டாம் - இப்பொழுதே பெறப்படும்; அது அன்புநிலையே- அது அன்பையே தனக்கு நிலையாக உடையதாதலால்.

சிவபெருமானுடைய திருவடிகளில் ஒருவற்குப் பேரன்புளதாயின்; அவன் யானெனதென்னுஞ் செருக்கு நீங்கி ஆணவம் நீங்கப் பெறுவன். சிவபெருமானுடைய திருவருளாலன்றி ஒன்றையுஞ் செய்யானாதலால் ஆகாமியகன்மம் அவனையடையாது; அவன் தன் சரீரத்திலும் உலகத்திலும் பற்றின்றி நிற்றலால் பிராரத்தமும் மாயாமலமும் அவனை நேரே தாக்கமாட்டா. சரீரம் நீங்கப் பிராரத்தமும் மாயாமலமும் நீங்கும், ஆதலால் சிவபிரானது திருவடியிற் பேரன்புடையோர் மும்மலங்களினின்றும் நீங்கி முத்தியின்பத்தைப் பெறுவர். இக்கருத்தை "உள்ளமுருகில் உடனாவர்"* "அன்பும் சிவமுமிரண்டென்ப ரறிவிலார் அன்பே சிவமாவதாரு மறிகிலார், அன்பே சிவமாவ தாருமறிந்தபின் அன்பே சிவமாயமர்ந்திருந்தாரே"o என்னுந் திருவாக்கானு மறிக "இன்பில் இனிது" என்பது உலகவின்பங்களை யெல்லாந் துன்பமெத்த தோற்றுவிக்கும் இன்பம்.× (10)

---

*திருவுந்தியார் 7 oதிருமந்திரம் - அன்புடைமை

×பழைய வுரையாகிய சிந்தனையுரையைத் தழுவி இச்செயுளின் பாடமும் பொருளும் கொள்ளுதல் செவ்விதாகும். அவை பின் வருமாறு:-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒன்பதாம் அதிகாரம் - ஐந்தெழுத்தருணிலை

அஃதாவது ஐந்தெழுத்தாகிய திருவருளின் இயல்பு. சமாதி கூடினோரது ○ வாசனாமலத் தாக்கத்தைத் திருவைந்தெழுத்துத் தீர்த்தலினால் இன்புறுநிலையின் பின் இது விளக்கப்படுகிறது.

### வேதாகமங்களிலுள்ள உண்மைகள் ஐந்தெழுத்தி லடங்கியன

அருணூலு மாரணமு மல்லாது மைந்தின்
பொருணூல் தெரியப் புகும்.

---

இன்பி லினிதேன்ற லின்றுண்டே லின்றுண்டாம்
அன்பு நிலையே யது.

முத்தியின்பத்தை இம்மையிலே அறியலாமோ என்று வினவிய சீடனைக்குறித்துக் கூறியது இச்செய்யுள்.

கொண்டுகூட்டு (அந்வயம்):- இன்பில் இனிது ஏன்றல் இன்று உண்டேல் அன்புநிலை ஏய்; அது இன்று உண்டாம்.

ப—ரை: இன்பில் இனிது ஏன்றல் - சிறந்த இன்பமாகிய முத்தியின்பத்தைப் பெறவேண்டுமென்ற மிகு வேட்கையானது, இன்று உண்டேல் - இப் பிறவியில் உனக்கு உண்டாகுமேயானால், அன்புநிலை ஏய் - (சிவபெருமானிடத்தே) அன்புசெய்தொழுகுஞ் சமாதி நிலையைப் பொருந்துவாயாக, (பொருந்தவே) அது இன்று உண்டாம் - அந்த முத்தியின்பம் இப்பிறவியிற்றானே உண்டாகும்.

ஏன்றல் - பொருந்தல். பெறுதல்: அது ஈண்டு, பெறுதற்கு ஏதுவாகிய பேரவாவினை இலக்கணையால் உணர்த்திற்று. இன்றுண்டாம் என்புழி 'இன்றே' என்னுந் தேற்றேகாரம் செய்யுள் விகாரத்தால் தொக்கது. அது வருவித்துரைக்கப்பட்டது. ஒருவன் இம்மையிற்றானே முத்தியின்பத்தை அனுபவிக்கும் நிலை சீவன்முத்தி நிலை எனப்படும். அதனைப் பெறுவதற்குப் பேரவா வேண்டும் என்பதும், யான் எனது என்னும் பற்றுக்களாகிய எல்லாப் பொருட் பற்றையும் அறவே விடுத்து. சிவபெருமானிடத்தே பேரன்புபூண்டு யோகஞான வொழுக்க நெறியில் நிலைத்து நிற்றலால் அஃது உண்டாகும் என்பதும் இதனால் கூறப்பட்டன. மாணிக்கவாசக சுவாமிகள், பட்டினத்தடிகள் போன்றார் இந்த நிலைக்கு உதாரண புருடர் ஆவர்.

---

○ பெருங்காயம் முற்றாக எடுக்கப்பட்ட பின்பும் அது இருந்த பாத்திரத்தில் அதன் வாசனை இருத்தல் போல, ஆணவத்தின் ஏவுதலால் வினைகளைச் செய்த கரணங்கள், ஆணவம் வலிநீங்கிய பின் சிறிது காலத்துக்கு அந்த வினைகளைத் தாமாகவே செய்யத் தக்கன. இந்தஇயல்பு வாசனாமல மெனப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ப—ரை: அருள் நூலும் ஆரணமும் அல்லாதும் - சைவாக மங்களும் வேதங்களும் உபாகமம் முதலிய மற்றைய ஞானநூல் களும், ஐந்தின்பொருள் நூல் - ஐந்தெழுத்தின் பொருளை உணர்த் தும் நூல்களாம், தெரியப்புகும் - இவ்வைந்தெழுத்தை ஆராயின் அவை அதில் அடங்குதல் புலப்படும்.

இக்கருத்தை, "வேத நான்கினும் மெய்ப்பொருளாவது நாதன் நாமம் நமச்சிவாயவே" என்பதிலும் "அஞ்செழுத்தே ஆகம மும் அண்ணல் அருமறையும்" என்பதிலுங் காண்க.

ஓங்காரமும் சிவமூல மந்திரமும் ஐந்தெழுத்தெனப்படும். இவற்றுள் ஓங்காரத்தில் ஐந்தெழுத்தும் ஒரெழுத்தாயமைந்திருத் தலால் அது சூக்கும பஞ்சாட்சரமெனப்படும். பஞ்சாட்சரம் = பஞ்ச + அட்சரம் = ஐந்தெழுத்து. அட்சரம் என்பதன் சொற் பொருள்: விகாரப்படாமல் அழிவின்றி நிற்பது. [அ+க்ஷரம்.]

ஆகமம் என்னுஞ் சொல்லில் ஆ என்பது பாசம் எனவும், க என்பது பசு எனவும், ம என்பது பதி எனவும் பொருள்படுதலால், ஆகமம் என்பதற்குப் பதி பசு பாச லட்சணங்களை உணர்த்தும் நூல் என்பது கருத்து; அன்றியும் ஆ என்பது சிவஞானமும், க என்பது மோட்சமும், ம என்பது மலநாசமும் ஆதலால், ஆன்மாக்களுக்கு மலத்தை அழித்துச் சிவஞானத்தை உதிப்பித்து மோட்சத்தைக் கொடுப்பதென்றும் பொருளுண்டு. ஆகமங்கள் காமிகம் முதல் வாதுளமீறாகிய இருபத்தெட்டுமாம். வேதம்: (இம்மை மறுமை வீடுகளின் இயல்புகளை) அறிதற்குக் கருவி என்னும் பொருளை யுடையது. இது இருக்கு, யசுர், சாமம், அதர்வம் என நான்காம். ஆகமம் சைவர்களுக்கே உரியதாதலாற் சிறப்பு நூலெனப்படும். வேதத்தின் மெய்ப்பொருளை உணராத புறச்சமயங்களுட் சில வேதத்தைத் தமக்குப் பிரமாணமாகக் கூறுவதனாலும், அதிலே லௌகிக ஞானம் அடங்கியிருத்தலாலும் அது பொது நூலெனப் படும். வேதமும் ஆகமமும் கடவுள் அருளிய நூல்களாதலால் அவை ஆன்மா ஈடேறும் நெறியைப் போதிப்பதில் ஒத்த கருத்துடையன. ஆதலால் வேதத்தின் மெய்ப்பொருளை ஆகமத்தினது துணைகொண் டறிதல் இலகுவாகும். "ஆகமமாகிநின் றண்ணிப்பான் றாள் வாழ்க" என்று திருவாதவூரடிகள் பாடியருளினர்.

உபாகமம் ஆகமத்தின் வழிநூல். பிராமணமும் உபநிடதமும் வேதத்தின் வழிநூல்கள். புராணம் அடியார்கள் சரிதத்தையும் கடவுளின் திருவருட் சிறப்பையும் அறிவிற் குறைந்தோரும் விளங் கத்தக்க பான்மையாகச் சொல்வது. இவை சமயசாத்திரத்தின் வேறானவை. இவற்றில் உள்ள கொள்கைகள் வேதாகமங்களுக்கு மாறாயின் விலக்கப்படவேண்டும்; ஸ்மிருதி வேதத்துக்கு மாறாயின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதப் பொருளே மெய். புராணம் ஸ்மிருதிக்கு மாறுயின் ஸ்மிருதிப் பொருளே மெய்'' என வியாசபகவானும், ''புராணம் வேதங்களால் வாதிக்கப்படும்'' என மோகசூத்திரமுங் கூறுவதைக் காண்க. (வாதிக்கப்படும் = மறுத்துத் தள்ளப்படுதற்கு உரியதாகும்.)

## வேத சிவாகமங்கள்

**வேதமும் சிவாகமமும் சிவபெருமானுலே அருளப்பட்டமையால், அவை சைவசமயத்தின் பிரமாண நூல்களாம். வேதம் சிவாகமமாகிய இருவகை நூல்களையும் பிரமாண நூல்களாகக் கொள்ளாதவர் சைவசமயத்தவரல்லர்.**

இவை சிவபெருமானுல் அருளப்பட்டவை யென்பதற்குச் சிவஞானிகளாகிய மெய்யடியாருடைய திருவாக்குக்கள் சான்றுபகருகின்றன. ''வேதமொ டாகமம் மெய்யாம் இறைவனூல்'' என்று திருமூலநாயனுரும், ''வேதநூல் சைவநூல் என்றிரண்டே நூல்கள் ........ ஆதியமலன் தருநூல் இரண்டும்'' என்று அருணந்திசிவமும், ''மிக்கவேத மெய்ந்நூல்கள் சொன்னவனே'' என்றும், ''மன்னு மாமலை மகேந்திரமதனிற், சொன்ன ஆகமம் தோற்றுவித்தருளியும்'' என்று மாணிக்கவாசக சுவாமிகளும் பாடியருளினுர்கள்.

இவற்றுள் சிவாகமங்கள் சைவசமயத்தின் பாதங்களாகிய சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கையும் விளக்குவன. நாம் நாள்தோறும் செய்யும் வழிபாடு முதலாயினவும்; கோயில்களிலே நடைபெறும் பிரதிட்டை, பூசை, திருவிழா முதலாயினவும்; அபரக் கிரியைகளும் ஆகமங்களையே ஆதாரமாகக் கொள்ளுவன. இவற்றுட் பிரதிட்டையாவது கல்லினுலேனும் உலோகங்களினுலேனும் முறைப்படி செய்யப்பட்ட உருவங்களிலே கடவுளை எழுந்தருளச்செய்து, அவற்றுக்குத் தெய்வத்தன்மையை ஆக்கும் கிரியையாம். ஆகவே ஆலய வழிபாட்டுக்கு இன்றியமையாதது ஆகமமாம். அபரக்கிரியைகளாவன, ஒருவன் இறந்தபின்பு அவனுக்குச் செய்யப்படும் அந்தியேட்டி முதலாயின. ஞானதீட்சை செய்யும் சிவஞானிகள் ஆகமங்களின் ஞானகாண்டத்தைத் தம் சீடர்களுக்கு உபதேசிப்பார்கள். இப்படியே பரஞ்சோதி முனிவர் மெய்கண்டதேவருக்கு ஞானஉபதேசஞ் செய்தார்; மெய்கண்டதேவர் தமக்கு உபதேசித்தருளிய சிவஞான போதப் பொருளைத் தமிழிலே பாடியருளினுர். குருந்தமர நீழலிலிருந்த பரமாசாரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணிக்கவாசகப் பெருமானுக்கு ஞானோபதேசம் செய்தருளினூர். சிவாகமப்பிரதிகள் எப்போதாயினும், கிடையாமற் போனாலும் காலத்துக்குக்காலம் தோன்றும் சிவஞானிகளால் அவை புதுப்பிக் கப்பட்டு இவ்வுலகத்திலே என்றும் நிலவும். அவற்றின் ஏனைய பகுதி களுட் பெரும்பாலானவை பத்ததிகளிலுள்ளவை; ஆகமங்கள் காமிகம் முதல் வாதுளம் ஈறாக இருபத்தெட்டுமாம்.

*[ஆகமப் பிரமாணங்களுக்கமையக் கிரியைகளைச் செய்யும் முறைகளை வசன ரூபத்தில் விளக்கிக் கூறும் வழிகாட்டி நூல்களே பத்ததிகள் எனப்படும். இவை அகோரசிவாசாரியர் முதலிய முன் னோரால் எழுதப்பட்டவை.]*

வேதங்கள் கடவுளை வழிபடும் முறைகளையும், தோத்திரங்க ளையும், ஞானத்தையுங் கூறுவன: சிவாக்கினியிலே கடவுளை வழி படும் முறைமை வேதங்களிலே அதிகமாகக் கூறப்படுவது. சாதா ரணமான நெருப்பிலே சிவபெருமானெழுந்தருளும் கிரியை செய் யப்பட்டால், அது சிவாக்கினியாகும். சிவாகமங்களிலே சதாசிவர் என்றும், நடேசர் என்றும், தக்ஷிணாமூர்த்தி யென்றும், தியாக ராசர் என்றும் பல பெயர்களாலே சிவபெருமான் வழிபடப்படு வதுபோல, வேதங்களிலே இந்திரன், மித்திரன், வருணன், அக்நி முதலிய பல பெயர்களாலே சிவபெருமான் வழிபடப்படுகின் றனர். இவ்வுண்மையை வேதங்களுள் ஒன்றாகிய இருக்கு வேதத் திலே (I, 124-64) ''இந்திரன், மித்திரன், வருணன், அக்நி, திவ்யன், சுபர்ணன், கருத்மான் முதலாகிய பல பெயர்களால் அறிவாளிகள் கடவுளைச் சொல்லுகிறார்கள். ஆயினும், கடவுள் ஒருவரே''× எனவரும் மந்திரத்தால் அறிக. கடவுளுடைய இந்தப் பெயர்கள் பிற்காலத்தில் ஆன்மாக்களாகிய சிறு தெய்வங்களுக்கு இடப்பட்டன. (இக்காலத்தில் மனிதர்களாகிய எங்களுக்குச் சிவ பெருமானுடைய பெயர்கள் இடப்படுதல் போல), இதை உண ராதார் வேதங்கள் சிறுதெய்வங்களை வழிபடுவன என்று மயங்கு வர்.

---

×இதே பொருளைப் பின்வரும் அருட்பாக்களிலும் காணலாம்:-

''ஞாயிறாய் நமனுமாகி வருணனாய்ச் சோமனாகித்
தீயறா நிருதி வாயுத் திப்பிய சாந்தனாகிப்
பேயறாக் காட்டி லாடும் பிஞ்ஞகன்'' —அப்பர்

''சுருதி வானவனும்; திருநெடுமாலாம்;
சுந்தர விசும்பின் இந்திரனும்
பருதி வானவனும்: படர்சடை முக்கண்
பகவனும்: அகவுயிர்க்கமுதாம்''
—திருவிசைப்பா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி, வேதங்களுக்கு உரைகள் செய்தவர்கள் பல்வேறு சமயத்தவர்கள், இவர்கள் தங்கள் தங்கள் சமயத்துக்குப் பொருந்தத் தக்கனவாக உரைகளைச் செய்தமையால் இவ்வுரைகளிலே பெரும் பிழைகள் மலிந்தன. உயிர்க் கொலையைப் பற்றிப் பேசாத இடங்களிலே உயிர்க்கொலை விதிக்கப்பட்டதாக இவர்கள் உரைசெய்தார்கள். இவ்வுரைகளைக் கண்டு வேதங்களிலே கொலை விதிக்கப்பட்டுள்ளதென்று அநேகர் மயங்குகின்றனர். கொலையையும் புலாலுண்ணலையும் வேதங்கள் விலக்குகின்றன. உதாரணமாக:

''மாமிசத்தை விலக்கி மற்றைய பதார்த்தங்களைச் சுத்திசெய்து சமைத்து உண்பவர்களுக்கு நல்ல சித்திகள் உண்டாகும்'' (I. 162-12) ''உயிர்களொன்றையுங் கொல்லாத இல்வாழ்வானுக்கு மேம்பாட்டைக் கொடு'' (VII. 1-1) என்று இருக்கு வேதமும், ''கடவுளே, எல்லாப் பிராணிகளிலும் நான் அன்பாய் இருக்கவும். அவை என்னில் அன்பாய் இருக்கவும் அருள் செய்க'' (XXXIV. 18) என்று யசுர்வேதமுங் கூறுகின்றன.

வேதத்திலே, கொலை யாகங்கள் விதிக்கப்பட்டனவாகக் கூறும் பிழையான உரைகளைச் சரியானவையெனக் கொண்டவர்கள் யாக பத்ததியை (சிரௌத சூத்திரம்) இயற்றியபோது அவற்றிலே கொலைகளை விதித்தனர். இதனாலே பிற்காலத்திலே கொலை யாகங்கள் செய்யப்பட்டு வந்தன. எமது கோயில்களிலே செய்யப்படும் யாகங்கள் யாவும் கொலைசேராத யாகங்களேயாம். இவற்றிலே நெற்பொரி நெய் முதலியவைகளே நிவேதிக்கப்படுகின்றன.

வேதங்கள் இருக்கு, யசுர், சாமம், அதர்வம் ஆகிய நான்குமாம். இருக்கு வேதத்தை மாணிக்கவாசகப் பெருமான் திருப்பள்ளி யெழுச்சியிலே, ''இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்'' என்றும், மெய்கண்டதேவர் சிவஞான போதத்திலே இரண்டாம் சூத்திரப்பகுதியிலே ''இக்கிரமத்தென்னும் இருக்கு'' என்றும் குறிப்பிட்டருளினர்.

சாமவேதத்தையும் பின்வருமாறு எடுத்தாண்டிருக்கின்றார்கள்:

''தயங்கு சாமவேதமோர் கீதமோதி அத்தசமுகன் பரவும்'

—சம்பந்தர்

''சாகை யாயிர முடையார் சாமமும் ஓதுவதுடையார்'' -சம்பந்தர்

''சாந்தோக சாமமோதும் வாயானைப்'' —அப்பர்.

சம்ஸ்கிருதமானது சைவசமயம் வழங்கும் நாடாகிய பரத கண்டம் முழுவதுக்கும் சாஸ்திர பாஷையாய்ப் பொதுமொழியாயதால், வேதசிவாகமங்கள் சம்ஸ்கிருதத்திலுள்ளனவாயின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரணவத்துள் அடங்கும் பொருள்கள்

இறைசத்தி பாச மெழின்மாயை யாவி
உறநிற்கு மோங்காரத் துள்.

ப—ரை: இறை - சிவமும், சத்தி - திருவருளும், பாசம் - மலமும், எழில் மாயை - (ஆன்மாவின் சிற்சத்தியை இறுதியிற் பூரணமாக விளக்கும்) சிறப்பினையுடைய திரோதானசத்தியும், ஆவி- ஆன்மாவும், ஓங்காரத்துள் உற நிற்கும் - பிரணவத்தினுள்ளே பொருந்தி நிற்கும்.०

மலம் பரிபாகப்படும்போது திரோதான சத்தியானது ஆதி சத்தி என்னும் பெயரோடு ஆன்மாவிற் பதிந்து, அதைச் சிவ பெருமானுடைய திருவடிக்குச் செலுத்தி முற்றுணர்வைக் கொடுக்கும். அது மாயாமலம்போலச் சிற்றறிவைக் கொடாமையால், ''எழில் மாயை'' எனப்பட்டது. ''எழிலார் திரோதம்'' என்றார் பிறரும். (2)

## ஐந்தெழுத்துள் அடங்கும் பொருள்கள்

ஊன நடன மொருபா லொருபாலாம்
ஞானநடந் தானடுவே நாடு.

[ஊன நடனம் ஒருபால். ஞானநடம் ஒருபால் ஆம்; தான் நடுவே, நாடு.]

ப—ரை: ஊன நடனம் ஒருபால் - பிறப்பினை விளைக்கும் திரோதானமும் மலமும் ஒருபக்கத்திலுள்ளன, ஞான நடம் ஒருபால் ஆம் - மோட்சத்தை யுதவும் சிவமும் சத்தியும் ஒருபக்கத்தி லுள்ளன, தான் நடுவே - ஆன்மாவாகிய தான் நடுவிலுள்ளது, நாடு - (இவை ஐந்தெழுத்திலிருப்பதைக்) காண்பாயாக.

சிகாராதி பஞ்சாட்சரத்தில் முதலெழுத்து சிவத்தையும், இரண்டாமெழுத்து அருட்சத்தியையும், மூன்றுமெழுத்து ஆன்மாவையும், நான்கா மெழுத்து திரோதான சத்தியையும், ஐந்தாமெழுத்து மலத்தையுங் குறிக்கின்றன. இதை, ''ஈசன் அருள் ஆவி எழிலார் திரோதம் மலம், ஆசில் எழுத்தஞ்சின் அடைவாம்'' என்னும் உண்மைவிளக்கச் செய்யுளானுமறிக.

---

० ஓங்காரத்தில் நாதம் சிவமும், விந்து சத்தியும், மகரம் மலமும், உகரம் திரோதான சத்தியும், அகரம் ஆன்மாவும் என்று சில அறிவாளிகள் சொல்லுகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரோதானசத்தி மலத்தைத் தொழிற்படுத்தி அதைப் பரி பாகப்படுத்தும்வரையும் ஆன்மா ஊனநடனஞ் செய்கின்றது. அருட் சத்தியானது ஆன்மாவைச் சிவத்தோடு சேர்க்கும்போது ஆன்மா ஞானநடனஞ் செய்கின்றது.

○முத்தர்கள் ஐந்தெழுத்தாற் கடவுளை வழிபடும் முறைமை பின்வருமாறு:- இருதயமாகிய தாமரைப் பூவுக்கு, ஆன்மா தத்து வம் இருபத்துநாலும் நாளமாகவும், வித்தியாதத்துங்களும் சுத்த வித்தையும் எட்டு இதழாகவும், ஈசுரமும் சாதாக்கியமும் கேசர வடிவாகவும், சத்திதத்துவம் பொகுட்டாகவும், நாதத்துவம் அப்பொகுட்டிற் காணப்படும் வித்துக்களாகவும் அமைந்திருக்கும். அந்த இருதயமாகிய தாமரைப்பூவிற் சிவசத்தி வீற்றிருக்கும். சத்தியிற் சிவம் நிற்கும். முத்தர்கள் இந்தச் சிவத்தினுடைய திரு மேனியை ஐந்தெழுத்தாகத் தியானித்துக் கொல்லாமை, ஐம் பொறியடக்கல், பொறுமை, இரக்கம், அறிவு, மெய், தவம், அன்பு என்னும் அட்டபுட்பங் கொண்டு அஞ்செழுத்தாற் பூசை செய்வர். (3)

---

○பெத்தநிலையி லுள்ளோர் பஞ்சாட்சர செபஞ் செய்யும்போது ஒவ்வோர் எழுத்தின் பொருளையு முணர்ந்து ஊனநடனத்துக்குக் காரணமாகிய மலத்தினால் உண்டாவன யாவுந் துன்பங்களென்ப தையும், சிவத்தால் உண்டாவன யாவும் நிலையான இன்பங்க ளென் பதையு மறிந்து, அகந்தை மமதைகளையும் உலக இன்பங்களையும் மலமென அருவருத்துத் தள்ளிக் கொடிய விஷப்பாம்பென அவை களால் விலகி, ஞான நடனஞ் செய்விக்குஞ் சிவத்தை அமிர்தமென நினைத்து அதில் ஆசைப்பட்டு, ஆணவத்தின் விஷத்தைத் தீர்க்கும் மருந்தென அதை விரைவிற் பெறுதற்கு மனத்தாற் பற்றிக்கொண்டு செபஞ்செய்தல் தக்கதாம். இந்தப் பயிற்சியினாலும், மந்திரத்தில் அமைந்த திருவருளாலும், இப்படிச் செபம் பண்ணுவோன் தன் முயற்சிகளைச் செய்யும்போதும், பிறவுயிர்களோடு சம்பந்தப்படும் போதும் மலச் சேட்டைகள் தொடங்குமாயின், அவற்றை மல மென்றும், விஷமென்றும் அருவருத்து விலக்கி அவற்றுக்கு இடங் கொடாமல் தர்மவழியில் நிற்பான். பஞ்சாட்சரத்தைச் சிரத்தை யோடு விதிப்படி செபிக்கிறவனுக்குத் தீய எண்ணங்கள் உண்டாகு மானால், பஞ்சாட்சரத்தின் நினைவு உடனே உண்டாகும். அந்த நினைவு அத் தீய எண்ணத்தை ஓட்டிவிடும். "கொல்வாரேனும் குணம்பல நன்மைகள், இல்லாரேனும் இயம்புவராயிடின், எல்லாத் தீங்கையும் நீங்குவரென்பரால், நல்லார் நாமம் நமச்சிவாயவே" என்று சம்பந்தசுவாமிகள் திருவாய்மலர்ந்தருளினர்.

தீய எண்ணங்கள் வந்து நிலைத்து முளைக்குமுன்னமே பஞ்சாட் சரத்தினால் அவைகளை ஒதுக்குதல்கூடும். அவை முளைத்த பின்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆன்மாவின் பெத்தநிலையும் முத்திநிலையும் ஐந்தெழுத்தி லடங்குதல்

**விரியமந மேவியவ்வை மீளவிடா சித்தம்**
**பெரியவினை தீரப் பெறும்.**

[ந மேவி ம விரிய ய வ்வை மீளவிடா; தம் பெரிய வினை தீர, சி பெறும்.]

ப—ரை; ந மேவி ம விரிய - திரோதான சத்தி மலத்தைச் சார மலம் முயற்சிசெய்ய, ய வ்வை மீளவிடா - ஆன்மாவை (அவை பிறவிகளில்) அழுத்தும், [இது பெத்தநிலை] தம் பெரிய வினை தீர - (ஆன்மாக்கள்) தம்முடைய பெரிய பிணிகளாகிய மலங்கள் தீர, சி பெறும் - (திருவருட் சத்தியின் முயற்சியால்) சிவத்தை யடையும், [இது முத்திநிலை]

மலங்கள் நீங்க, அவற்றைப் பாகப்படுத்திநின்ற திரோதான சத்தி நீங்கும், சிவசத்திகளெல்லாம் ஒன்றேயாதலால், திரோதானசத்தி நீங்குதலாவது: சத்தி திரோதானத்தைச் செய்யாது விடுதல். ம ல மு ந் திரோதானசத்தியும் நீங்கவே ஊன நடனம் நின்றுபோம். அப்போது ஆன்மா சத்தியோடுஞ் சிவத்தோடுந் நிற்கும். ஆதலால் ஐந்தெழுத்து மூன்றெழுத்தாகச் சுருங்கும். (4)

## நகாராதிபஞ்சாட்சரம் உபாயமார்க்கர்க் குரியது

**மாலார் திரோத மலமுதலா மாறுமோ**
**மேலாசு மீளா விடின்.**

ப...ரை: மாலார் திரோதம் மலம் முதலா - பிறவிப் பிணியிலே விடுவனவாகிய திரோதானத்தையும் மலத்தையும் முதலாக வைத்து ஐந்தெழுத்தை ஓதினால், மாறுமோ - மலம் நீங்குமோ, நீங்காது; மேல் - மேலான பொருளாகிய சிவம், ஆசு மீளா விடின் - ஊன நடனத்தைச் செய்விப்பவைகளின் இடத்தை எடுத்துக் கொண்டு அவைகளைக் கீழாக்காவிட்டால்.

---

அவற்றை ஓட்டுதல் சிலபோது பிரயாசமாயிருக்கும்; இப்படியே பஞ்சாட்சர செபமானது ஆணவத்தின் வலியைக் கெடுத்து ஆன்மாவைக் கடவுளோடு சேர்த்தற்கு முக்கிய சாதனமாம். ஆணவமாகிய கொடிய கடலில் ஆன்மாக்கள் ஆழாமல் அவற்றைக் கரையேற்றத்தக்க தோணி பஞ்சாட்சரமென்பதை, ''அஞ்செழுத்தின் புணை பிடித்துக் கிடக்கின்றேனை முனைவனே முதலந்த மில்லா மல்லற் கரைகாட்டி யாட்கொண்டாய் மூர்க்கனேற்கே'' என்பதனு லறிக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக இன்பங்களிற் பற்றறாத உபாயமார்க்கர்க்கு அவற்றில் அழுத்துவதாகிய மலத்தை முன்னாகவுடைய பஞ்சாட்சரந் தகுந்தது. சிவத்தை முன்னாக ஓதினால் மாத்திரம் சிவம் மலத்தை ஓட்டி முத்தியைக் கொடுக்கும். *நகாராதி பஞ்சாட்சரத்திலுள்ள நகார மகாரங்களை இறுதியிலே வைக்கச் சிகாராதி பஞ்சாட்சரம் ஆகும். (5)

## நகாராதி பஞ்சாட்சரம்
## மோட்ச ஆசையுடையார் ஓதலாகாது

ஆராதி யாதார மந்தோ வதுமீண்டு
பாராது மேலோதும் பற்று.

[ஆதாரம் ஆராதி; அது மீண்டு பாராது மேல் ஓதும் பற்று அந்தோ!]

ப—ரை: ஆதாரம் ஆராதி - உனக்கு ஆதாரமா யிருக்கின்ற சிவத்தை முன்னாக வைத்து ஐந்தெழுத்தை ஓதி வழிபடு, அது மீண்டு பாராது - (உபாய மார்க்கத்திலே ஓதிய) நகாராதி பஞ்சாட்சரத்தின் இயல்பைத் திரும்ப விசாரியாமல், மேல் ஓதும் பற்று - (உண்மை மார்க்கத்தில் நிற்கும்போதும்) நகார மகாரங்களை முன்னாக வைத்து ஓதுந்தன்மை, அந்தோ - கவலைப்பட வேண்டியதொன்று.

நகாராதி பஞ்சாட்சரம் உபாய மார்க்கத்தாரை உண்மை மார்க்கத்திற் செலுத்துதற்கு ஏதுவாகும்.× உண்மை மார்க்கத்தை யடைந்தோர் தமது மார்க்கம் மாறியதை யுணர்ந்து அதற்குரிய பஞ்சாட்சரத்தை ஆசாரியரிடம் விசாரித்தறிந்து அதையே செபிக்க வேண்டும். அல்லாவிட்டால் குழந்தையாயிருந்தபோது முலைப்பால் குடித்த பிள்ளை வளர்ந்த பின்பு தன்னுடைய சரீரத்திற்கேற்ற சாதம் முதலியவைகளை உண்ணாமல் முலைப்பாலையே பருகுமாயின் அதன் வளர்ச்சி தடைப்படுவது போல, அவர்களுடைய ஞான வளர்ச்சி குறைந்துபோம். (6)

## சிகாராதி பஞ்சாட்சரமே
## மோட்ச ஆசையுடையார்க்குரியது

சிவமுதலே யாமாறு சேருமேற் றீரும்
பவமிதுநீ யோதும் படி.

[சிவ முதலே ஆமாறு சேருமேல் பவம் தீரும்; இது நீ ஓதும் படி.]

---

*இப் பஞ்சாட்சரம் யசுர்வேதத்தின் நடுவில் உள்ளது.

×இக்கருத்தை ''ஓதுவார்தமை நன்னெறிக் குய்ப்பது'' என்னுந் தேவாரத்திலுங் காண்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ப—ரை: சிவ முதலே ஆமாறு சேருமேல் - சிகாரம் வகாரம் என்னுமிரண்டும் முதலிலே வரும்படி உச்சரித்தல் கூடுமாயின், பவம் தீரும் - பிறவிக்குக் காரணமாகிய மலங்கள் நீங்கும்; நீ ஓதும் படி இது - முத்தியை விரும்பிய நீ உச்சரிக்கும் முறைமை இதுவே.

அப்பர் சுவாமிகள் நமச்சிவாயத் திருப்பதிகத்திலே நகாராதி பஞ்சாட்சரத்தைத் துதித்தனராயினும், மாணிக்கவாசக சுவாமிகள் "நமச்சிவாய வாழ்க" என்று திருவாசகத்தைத் தொடங்கினராயினும், அவர்கள் ஓதியது சிகாராதியென்பதை, கருவாய்க் கிடந்துன் கழலே நினையுங் கருத்துடையேன்" என்று தொடங்குந் தேவாரத்திலும், "நானேயோ தவஞ் செய்தேன்" என்று தொடங்குந் திருவாசகத்திலும் அஃது அமைந்திருத்தலாற் காண்க. (7)

## வகாரம் ஆன்மாவைச் சிவமாக்குதல்

வாசி யருளியதை வாழ்விக்கு மற்றதுவே
ஆசி லுருவமுமா மங்கு.

[வா சி அருளி அதை வாழ்விக்கும்; மற்று அதுவே அங்கு ஆசு இல் உருவமும் ஆம்.]

ப—ரை; வா சி யருளி - சத்தியானது சிவத்தைக் காட்டி, அதை - ஆன்மாவை. வாழ்விக்கும் - வீட்டின்பத்தில் இருத்தும்; அதுவே அங்கு ஆசுஇல் உருவமும் ஆம் - அந்தத் திருவருளே ஆன்மாவுக்கு முத்தியிற் குற்றமற்ற மேனியுமாயிருக்கும்.

சிற்சத்தியானது முத்தான்மாவைச் சிவத்தோடு சேர்த்து, அதற்குச் சிவாநந்தத்தைக் கொடுத்து, அறிவாகிய வடிவமாகியும் நிற்குமென்பது கருத்து; மலம் நீங்கியபின் ஆன்மா ஞான நடனத்தில் மாத்திரம் நிற்கும். அந்த நிலையை விளக்கும் பஞ்சாட்சரம் மூன்றெழுத்தாலாயது. 'தத்துவமசி' (நீ அது ஆகிறுய்) என்னும் மகா வாக்கியத்திலுள்ள பொருள் இதில் அடங்கியது. 'தத்' சிகாரத்திலும் 'துவம்' யகாரத்திலும் 'அசி' வகாரத்திலும் அடங்கும். பின்பு ஆன்மா திருவருளி லமிழ்ந்தி மறைகின்றது. (8)

## முத்திநிலையை விளக்கும் ஐந்தெழுத்து

ஆசினவா நாப்ப ணடையா தருளினால்
வாசியிடை நிற்கை வழக்கு;

[ஆசு இல் ந வா நாப்பண் அடையாது, அருளினல் வா சி இடை நிற்கை வழக்கு.]

ப—ரை: ஆசு இல் ந வா நாப்பண் - (முத்திநிலை யடைந்த ஆன்மாவானது)குற்றமற்றதாகிய திரோதானத்துக்குஞ் சிற்சத்திக் கும் நடுவில், அடையாது - (பெத்தான்மாவைப்போல) நில்லாது, அருளினுல் - திருவருளினுல், வா சி இடைநிற்கை வழக்கு -சிற்சத்திக் குஞ் சிவத்துக்கும் இடையில் நிற்பது முறைமையாம்.

சிகாராதி பஞ்சாட்சரத்திலே நகார மகாரம் நீங்க அந்த இடத் தில் வகார சிகாரம் வர, ஆன்மா சத்திக்கும் சிவத்துக்கும் நடுவில் நிற்கும். ''திரோதையும் மலமும் தீர்த்ததனிடத்தில், வரோதயமான வாசியை நிறுவி'' என்றனர் பிறரும். இந்தப் பஞ்சாட்சரத்தில் நகார மகார மில்லாமையால் இது சீவன்முத்தர் ஓதத்தக்கது. ந+வா - நகாரமும் வகாரமும்; ந - திரோதான சத்தி, வா - சிற் சத்தி, வாசி: வா + சி - வகாரமும் சிகாரமும்; வா - சிற்சத்தி, சி - சிவம். இவ்வெழுத்துக்கள் பஞ்சாட்சரத்தி லுள்ளனவாய் அவை குறிக்கும் பொருளை ஈண்டு உணர்த்தின. (9)

## சாதனங்களுக் குயிராயுள்ளது திருவருள்

எல்லா வகையு மியம்பு மிவனகன்று
நில்லா வகையை நினைந்து.

ப—ரை: இவன் அகன்று நில்லா வகையை நினைந்து - ஆன்மா வானது சிவசத்தியினின்றும் ஒரு காலமும் நீங்காமல் அதனோடு கூடுதற்கு ஏதுவாயிருக்குந் தன்மையைக் கருதியே, எல்லா வகையும் இயம்பும் - ஆன்மா முத்தியடைதற்கு உரிய அச்சாதன வழிகள் எல்லாவற்றையும் வேதாகமங்கள் சொல்லும்.

திருவருளே ஆன்மாவுக்கு என்றுந் துணையா யுள்ளமையால் அது தாயாக உபசரிக்கப்பட்டு உமாதேவி எனப்படும். முத்திக் குரிய °சாதனங்க ளெல்லாம் ஆன்மா திருவருள் ஞானத்தை அடைதற்குரிய வழிகளன்றித் தாமே முத்தியைக் கொடுக்க வல்லன வல்ல. ஆற்றங்கரையிலிருந்து விளைநிலத்துக்கு வாய்க்கால் தோண்டி விடுவதால் மாத்திரம் பயிர் உண்டாகாது; ஆற்றின் மடையைத் திறந்து தண்ணீரைப் போக்கவே பயிர் உண்டாகும். அதுபோல

°சைவ சமயத்திலே விதிக்கப்பட்ட முத்திக்குரிய சாதனங்களா வன; திருக்கோயில், திருநீறு, திருவைந்தெழுத்து, சிவனடியார் சரித்திரங்கள், சிவனடியார் சங்கம், திருவருட்பாக்கள், நீதி நூல் கள், ஞான நூல்கள் முதலியவைகளும், சரியையிற் சரியையாதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதாகமங்களிலே விதிக்கப்பட்ட வழிகளாலே திருவருளைப் பெற்றால் மாத்திரம் முத்தி கைகூடும். திருவருளாகிய ஆற்றின் மடையைத் திறப்பன சிரத்தையும் அன்புமாம்; சிரத்தையு மன்பு மின்றிச் சமயாநுட்டானங்களைச் செய்பவர் பேரருளைப் பெறமாட்டார். ஆதலால் அவை முத்தி பெறுதற்கு இன்றியமையாத துணைகளாம். ×சீவன்முத்தருக்கு வேண்டிய ஆலய வழிபாடும் அடியார் வழிபாடும் ''எல்லா வகையும்'' என்றதில் அடங்கும்.

---

முப்பத்திரண்டு பாதங்களுமாம். புறச்சமயங்கள் பலவற்றில், இந்தச் சாதனங்கள் கோடியில் ஒரு பங்கு தானு மில்லையாகவும் அவையும் ஆன்மாவை ஈடேற்றத்தக்க வெவ்வேறு வழிகளென்று சொல்லுவது எத்துணைப் பேதைமை. புறச்சமயங்களை அநுசரித்தல் தீமையென்பதை விளக்க, ''பரசமயங்கட் செல்லாம் பாக்கியம் பண்ணுதே'' என்று அருணந்திசிவாசாரியார் கூறியருளினர்.

''கிரியை என மருவுமவை யாவும் ஞானங் கிடைத்தற்கு நிமித்தம் எனக் கிளக்கும்'' (சிவப்பிரகாசம்) என்றதும், ''ஞாலத்தால் வீடென்று நான்மறைகள் புராணம் நலல ஆகமங்கள் சொல்ல'' (சித்தியார் - சுபக்கம்) என்றதுங் காண்க.

×சிலர் பஞ்சாட்சர செபத்தினுலும், ஆலய வழிபாட்டினுலும், விரதாநுட்டானங்களாலும் தாமொரு பயனு மடையவில்லை என்று சொல்லுகின்றுர்கள். இவர்கள் இவைகளைச் செய்தபோது சிரத்தை இல்லாமையே இவ்வாறு சொல்லுதற்குக் காரணம். இயல்பிலே சிரத்தையுள்ளவர்கள் இவைகளின் பயனை விரைவிற் பெறுவர். மற்றையோர் இவற்றின் கருத்தையும் நோக்கத்தையு முள்ளபடி அறிவதனுற் பயன் அடைவர். சிலர் சிரத்தையுள்ளோராயினும் தம்மாலியன்ற அளவுக்கு மேற்படச் செய்வதனுல் அலுத்து இவைகளை வெறுத்துப் பாவிகளாதலுமுண்டு. நெடுநேரமாக மனத்தை ஒருவழிப்படுத்தமாட்டாதவர் பஞ்சாட்சர செபத்தை மட்டாகச் செய்யவேண்டும். பசியை அதிகந் தாங்கமாட்டாதவர்கள் நெடும் பசி விதிக்கப்பட்ட விரதங்களை அநுட்டிக்கத் தொடங்கி, பொழுது போகாதாமே என்று வருந்துவதும் விரதகாலஞ் சமீபிக்கும்போது அதற்கு அஞ்சுவதுமுண்டு. இது சுமக்கமாட்டாத பாரத்தைச் சுமப்பதால் வரும் பொல்லாங்கு. ஆதலால் இயல்பிலே சிரத்தையில்லாதோர் சமயாநுட்டானங்களின் இரகசியங்களை யறிந்து சிரத்தையுறல் வேண்டும். எவர்களும் மிகுந்த பிரியத்தோடு செய்து முடிக்கத்தக்க அளவு செப தியான விரதாநுட்டானங்களைச் செய்ய வேண்டும். அவ்வளவு மாத்திரஞ் செய்வாராயின் சிரத்தையும் அன்பும் வளர்தலால் அவர்கள் திருவருளைப் பெற்று நற்கதியடைவார்கள். வெயிலில் அலைந்தவன் நிழலைச் சேரும்போது எவ்வளவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீவன் முத்தர்கள் வாசனுமலத்தினால் மனந் தாக்கப்படாமைக் காகப் பஞ்சாட்சர செபஞ் செய்வதுபோல, இந்திரியங்கள் தாக் கப்படாம லிருப்பதற்காக மெய்யடியாரையுந் திருக் கோயிலையுஞ் சிவமென வழிபடுவர். இதை "செம் மலர் நோன்றாள் சேர லொட்டா, அம்மலங் கழீஇ யன்பரொடு மரீஇ, மாலறநேய மலிந்தவர் வேடமும், ஆலயந்தானு மரனெனத் தொழுமே" என்பதிலும், "நள்ளேன் நினதடியாரொ டல்லால் நரகம் புகி னும்" என்பதிலும், "மேவினோம் அவனடியா ரடியாரோடு, மேன் மேலும் குடைந்தாடி யாடுவோமே" என்பதிலுங் காண்க. சிவலிங்கம் முதலிய திருமேனிகளிற் சரியாவான்களுக்குச் சிவபெரு மான் மறைந்து நின்று அருள் செய்வர். மந்திர நியாசத்தால் வழிபடுங் கிரியாவான்களுக்கும் மந்திரங்களால் வழிபடும் யோகிக ளுக்கும் அவ்வம் மந்திரங்களால் அவரவர் விரும்பிய வடிவாய்த் திருமேனிகளில் அவ்வப்போது தோன்றி நின்று அருள் செய்வர், அன்பு மாத்திரையாய் வழிபடும் ஞானிகளுக்கு அவ்வன்பே தானாய் அத் திருமேனிகளில் எப்போதும் வெளிப்பட்டு நின்று அருள் செய் வர். முத்தர்கள் வாசனுமலத்தின் தாக்கத்தை நீக்குதற்கு அடி யார்களையும் ஆலயங்களையும் வழிபடுவாராயின், நாங்கள் முழு வலியோடு நிற்கும் மலங்களின் ஓயாத வினையினின்றும் விலகிக் கொள்ள அடியார்களையும் சிவாலயத்தையும் எவ்வளவு அதிகமாக நாடி வழிபடல் வேண்டும். (10)

## பத்தாம் அதிகாரம் — அணைந்தோர் தன்மை

### அணைந்தோராவார் சீவன்முத்தர்

### சீவன்முத்தர் நிலை

**ஓங்குணர்வி னுள்ளடங்கி யுள்ளத்து ளின்பொடுங்கத்**
**தூங்குவர்மற் றேதுண்டு சொல்.**

ப—ரை: ஓங்கு உணர்வினுள் அடங்கி - (சீவன்முத்தர்) நிறைந்த ஞானத்துள்ளே அடங்கி, உள்ளத்துள் இன்பு ஒடுங்க - தம்மறிவினுள்ளே பேரின்பம் நிறைதலால், தூங்குவர் - ஆனந்த நித்திரை செய்வர், மற்று ஏது உண்டு சொல் - அவருக்கு வேறு என்ன காரியம் உண்டு? சொல்வாயாக; (ஒன்றுமில்லை என்றபடி)

---

ஆசையோடு போகின்றனோ, அவ்வளவு ஆசையோடு உலகமுயற் சிகளை விட்டுச் செபந் தியானம் முதலிய சமயாநுட்டானங்களைச் செய்ய வேண்டும். உலக விஷயங்களாகிய ஊன நடனத்திலே இவ் வளவு நேரமும் அலைந்த தமக்குக் கடவுளை வழிபட்டு ஆன்மாவை ஈடேற்றுதற்கு நேரங் கிடைத்துவிட்டதே என்ற சந்தோஷத்தோடு அம் முயற்சிகளைத் தொடங்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்திரை என்றது தொழிலேனும் வேறு வகையான சலனங்களேனும் இல்லாதிருத்தல். முத்தர்கள் ஆனந்தம் நிறைந்து ஞானத்துள் அமிழ்ந்தி யிருப்பரென்பது கருத்து. இந்த நிலை ஒன்பதாம் அதிகாரத்தில் எட்டாம் ஒன்பதாந் திருக்குறள்களில் ஐந்தெழுத்தால் விளக்கப்பட்டது. (1)

## இவர் பதியைப்போல் ஐந்தொழிலேனும் பசுக்களைப்போல் வினைகளேனுஞ் செய்யார்

ஐந்தொழிலுங் காரணர்க ளாந்தொழிலும் போகநுகர்
வெந்தொழிலு மேவார் மிக.

ப—ரை: ஐந்தொழிலும் - சிவத்தினுற் செய்யப்படும் ஐந்தொழில்களையேனும், காரணர்களாந் தொழிலும் - திருவருளாற் பிரேரிக்கப்பட்டு நடைபெறுந் தனித்தொழில்களையேனும், போகநுகர் வெந்தொழிலும் - மாயாபோகத்தை அனுபவிக்கும் வெய்ய வினைகளையேனும், மிக மேவார் - சிறிதும் பொருந்தார்.

முத்தர் சிவத்தோடு கலந்து பரமானந்தத்தை யனுபவிப்பாரேயன்றி ஒருதொழிலுஞ் செய்பவரல்ல ரென்பது கருத்து. சிவம் சந்நிதி மாத்திரத்திற் பஞ்சகிருத்தியத்தைச் செய்யும் முத்தர்கள் சிவமாக்கப்பட்டவராயினும் பஞ்சகிருத்தியஞ் செய்பவரல்லர். சந்நிதிமாத்திரத்தாற் செய்யாராயினும், சத்தியின் பிரேரகத்தால் °நவபேதங்கள் செய்வதுபோலப் பஞ்சகிருத்தியங்களுள் ஒன்றுயினும் செய்யாரோ என்று வினவில், அவர் அதுவுஞ் செய்யார். போகங்களுக்குக் காரணமாய்ப் பற்றேடு செய்யப்படும் வினைகளையும் அவர் செய்யார். பதிக்குரிய தொழிலேனும் பசுக்களுக்குரிய தொழிலேனும் அவருக்கில்லை. "உம்பர்பிரான் உற்பத்தியாதிகளுக்குரியன் உயிர் தானுஞ் சிவானுபவ மொன்றினுக்கு முரித்தே" என்றுர் பிறரும். அவருக்கு அருட்செயல்கள் மாத்திரம் உண்டு. இதை ஏழாம் பத்தாந் திருக்குறளிற் காண்க. (2)

## முத்தர் எங்குஞ் சிவத்தையே காண்பவர்

எல்லா மறியு மறிவுறினு மீங்கிவரொன்
றல்லா தறியா ரற.

[ஈங்கு இவர் ஒன்று அல்லாது அறியார்]

ப—ரை: எல்லாம் அறியும் அறிவு உறினும் - எல்லாவற்றையும் அறியும் ஞானத்திற் கலந்து நிற்பினும், ஈங்கு - இவ்விடத்து

°நவபேதங்கள்: சிவம், சத்தி, நாதம், விந்து, சதாசிவம், மகேசுவரன், உருத்திரன், விஷ்ணு, பிரமன் என்பன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் - சீவன்முத்தர், ஒன்று அல்லாது - சிவமொன்றையே யன்றி மற்றொன்றையும், அற அறியார் - சிறிதுங் காணார்.

விடயங்களை அவதானித்தற்கு அவற்றிற் பற்றிருத்தல் வேண்டும். முத்தருக்கு ஒரு விடயத்திலும் பற்றில்லாமையால், அவர் ஒன்றையும் அவதானியார். ஆதலால் அவர் சிவமல்லாத பொருளைக் காணார். இவ்வுண்மை நான்காம் ஆறுந் திருக்குறளில் விளக்கப்பட்டுள்ளது. இக்கருத்தை "திருஞானமிவை யெல்லாங் கடந்த சிவஞானமாதலாற் சீவன்முத்தர் சிவமே கண்டிருப்பர்" என்பதிலுங் காண்க.

[விடயம் = விஷயம் = பொறிகளுக்குப் புலப்படும் மாயைப் பொருள்கள்] (3)

## அவர் விடயங்களைக் காணாமைக்குக் காரணம்

**புலனடக்கித் தம்முதற்கட் புக்குறுவர் போதார்**
**தலநடக்கு மாமை தக.**

ப—ரை: தலம் நடக்கும் ஆமை தக - தன்வழிச் செல்லும் ஆமை (யானது ஆரவாரமுள்ள இடத்தில் தன்னுடைய ஐந்துறுப்புக்களையும் உள்ளுக்கு இழுத்து அசைவில்லாமற் கிடப்பது) போல, புலன் அடக்கி - (முத்தர் தமது பொறிகளையும் மனத்தையும்) விடயங்களிற் செல்லாமல் உள்முகமாகும்படி அடக்கி, தம் முதற்கட் புக்குறுவர் - தமது முதலாகிய சிவத்திலே புகுந்து பொருந்தி நிற்பர், போதார் - (வெளியே விடயங்களிற் பொறிகளைப்) போக விடார்.

பொறிகளாவன ஞானேந்திரியங்கள். அவற்றால் அறியப்படும் பொருள் புலனெனவும், விடயமெனவும்படும். புலனடக்குதலாவது பொறிகளின் வழியாக விடயங்களை அறியாதிருத்தல். பிறவிக் குருடன் கைகாலினால் ஆராய்ந்து காட்சி விடயங்களை மயக்கமாய் அறிவதுபோல, ஆணவச் சார்புள்ள மனிதர் ஐம்பொறிகளினாற் பொருள்களை மயங்கி அறிவர். குருடு நீங்குமாயின் அவன் கைகளால் ஆராய்ந்தறியாமல் கண்ணிற் கண்டு விடயங்களைத் தடுமாற்றமின்றி அறிவான். அதுபோல மலம் நீங்கிய சீவன்முத்தர் மயக்கவறிவைத்தரும் பொறிகளால் விடயங்களை அறியாமல், ஞானக்கண்ணினால் மெய்ப்பொருளைக் காண்பார். ஆதலால் அவர் பொறிகளையும் மனத்தையும் அடக்குவர். ஆரவாரம் நீங்கியபின் உறுப்புக்களை நீட்டும் ஆமைபோலாது, அவர்கள் பொறிகளை என்றும் அடக்கியே நிற்பர் என்பதைக் காட்ட, "போதார்" என்றார். போதார்: புகுதார் (புகுதவிடார்) என்பதன் மரூஉ. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவர் சர்வ வியாபகர்

அவனையகன் றெங்கின்றே மாங்கவனு மெங்கும்
இவனையொழிந் துண்டாத லில்

[அவனை அகன்று எங்கு இன்றும்; ஆங்கு அவன் ஆம் இவனை ஒழிந்து எங்கும் உண்டாதல் இல்.]

ப—ரை: அவனை அகன்று- சிவத்தை நீங்கி, எங்கு இன்றும் எவ்வுலகமுமில்லை, ஆங்கு அதுபோல, அவனும் இவனை ஒழிந்து- சிவமாதலை யடைந்த முத்தனை நீங்கி, எங்கும் உண்டாதல் இல்-எவ்விடமும் உளதாய் நிற்றல் இல்லை.

ஆன்மாவின் வியாபகத்தைத் தடுத்த ஆணவம் நீங்கினமையாலும் முத்தான்மா சிவமானவையாலும் எங்கும் நிறையும் நிலையை அடைகின்றது.

[எங்கு இன்றும் என்பதில் முற்றும்மை விரிக்க.] (5)

## அவருக்கு விருப்பு வெறுப்பு இல்லை

உள்ளும் புறம்பு மொருதன்மைக் காட்சியருக்(கு)
எள்ளுந் திறமேது மில்

ப—ரை: உள்ளும் புறம்பும் ஒரு தன்மைக்காட்சியருக்கு - உள்ளும் வெளியும் ஒரு தன்மைத்தாய்க்காணும் ஞானத்தை அடைந்த சிவன்முத்தருக்கு, எள்ளும் திறம் ஏதும் இல்-ஒன்றையும் இகழுந் தன்மையில்லை.

இகழ்தல் இல்லையெனவே புகழ்தல் இல்லையென்பதும் பெறப்படும். உள் என்பது உண்மையான தன்மை. புறம்பு என்பது விடயங்களாகத் தோன்றுந்தன்மை. எமக்கு விடயங்கள் தோன்றுமன்றி மெய்ப்பொருளாகிய சத்துத் தோன்றாது. விடயங்கள் தோன்றுதலினால் நண்பர் உபசாரம், சுவையுள்ள போசனம் முதலிய சிலவற்றில் விருப்பும், பகைவர் அவமதிப்பு,× சுவையற்ற போசனம் முதலிய சிலவற்றில் வெறுப்பும் உண்டாகின்றன. முத்தர்களுக்கு

---

×புத்தகமென்று சொல்லி மறைத்து வைத்திருந்த சத்தியால் அதி சூரன் மெய்ப்பொருளுநாயனாரைக் கீறியபின்பும் அவர் அவனை வெறுக்காது அவனில் அன்பு பாராட்டியது, அவர் அவனுடைய தீய செயலை நோக்காது அவனிலுள்ள மெய்ப்பொருளாகிய சிவத்தைக் கண்டமையாலென அறிக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாயைப்பொருள் தோன்ருமல் ○சேதனுசேதனப் பிரபஞ்சத்தில் ''அகரவுயிர்போ லறிவாகி யெங்கும்'' நிறைந்திருக்கும் மெய்ப் பொருளாகிய சிவமே தோன்றுதலால், அவருக்கு விருப்பு வெறுப் பேனும் இகழ்தல் புகழ்தலேனும் இல்லை.

மலம் நீங்காத எமக்குப் பொருள்கள் தோன்றுந் தன்மையும் அவற்றின் உண்மையான தன்மையும் வேறு. முத்தருக்குத் தோன் றுவது உண்மையே ஆதலால் ''உள்ளும் புறமு மொருதன்மைக் காட்சியருக்கு என்ருர். (6)

## அவரது வினையின் பயன் சிவாநந்தம்

உறுந்தொழிற்குத் தக்க பயனுலகந் தத்தம்
வறுந்தொழிற்கு வாய்மை பயன்.

ப—ரை: உறுந் தொழிற்குத் தக்க பயன் -யான் எனது என்னுஞ் செருக்கோடு செய்யப்பட்ட வினைக்குத் தகுந்த பலன், உலகம் -உலக வாழ்க்கைகளாம். தத்தம் வறுந்தொழிற்கு பயன்- அந்தச் செருக்கு நீங்கிய தொழிலுக்குரிய பலன், வாய்மை-மெய்ப் பொருளாகிய முத்தியின்பம்.

உலகம் என்றது பூலோகம், தேவலோகம், சிவலோகம் முத லிய யாவும். சிவன் மூத்தர்கள் அகந்தை மமதையின்றிச் சிவன் செயலாக யாவற்றையுஞ் செய்வாராதவால், அவர்கள் எது செய் தாலும் ஆகாமியமாகாது. ஆதலால் அதன்பயனுக வரத்தக்க உலக வாழ்க்கைகளுமில்லை. அவர்களுடைய செய்கைக ளெல்லா வற்றுக்குஞ் சிவானந்தமே பலன்.

வறுந் தொழில் - பற்றின்றிச் செய்யப்படுந் தொழில், உறுந் தொழில் - (யான் எனது என்ற பற்றுப்) பொருந்துஞ் செயல். (7)

## அவருக்குக் கன்மந் தீரும் முறைமை

ஏன்ற வினையுடலோ டேகுமிடை யேறும்வினை
தோன்றி லருளே சுடும்.

ப—ரை: ஏன்றவினை - பிராரத்தமானது; உடலோடு ஏகும் - தேகம் நீங்கும்போது நீங்கும், [இவ்வுடலால் நுகரப்பட்டுத் தொலை யும் என்றபடி], இடையேறும் வினை தோன்றில் - முத்திக்கும் (ஆணவமல நீக்கத்துக்கும்) தேகத்தின் முடிவுக்கு மிடையில் வினை செய்யப்படின், அருளே சுடும் - அவ்வினையைத் திருவருளே நீக்கும்.

முத்தர் செய்யுந் தொழில்கள் அருட்செயலன்றி அவர் செய லல்ல. ஆதலால் அவற்றின் பயன் அவரைச் சாராது. ஆகவே ஆகாமிய கன்மம் உண்டாகாது நீங்கும் என்றவாறும். சஞ்சிதம் முன் னமே தீட்சையிற் போக்கப்பட்டதாதலால் இங்கே பேசப்பட்டிலது.

---

○சேதனம் = அறிவுள்ள பொருள், அசேதனம் = அறிவில்லாத பொருள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீவன்முத்தர் நிலை பரமுத்தி

மும்மை தரும்வினைகண் மூளாவா மூதறிவார்க்(கு)
அம்மையு மிம்மையே யாம்.

ப—ரை: மும்மை தரும் வினைகள் மூளாவாம் - இம்மை மறுமை அம்மை என்னும் மூவகைப் பயனையுந்தரும் வினைகளொன்றும் அவரைத் தாக்கமாட்டா, மூதறிவார்க்கு - (ஆதலால் ஆணவ மலம் நீங்கிப்) பேரறிவைப் பெற்ற முத்தருக்கு, அம்மையும் இம்மையே ஆம் - பரமுத்தியும் சரீரம் இருக்கையிலே யுண்டாம்.

இம்மை - இப்பிறப்பு, மறுமை - மறுபிறப்பு, அம்மை - மேலுலக மடைதல். முத்தருக்கு அம்மை பரமுத்தி.

''மும்மைதரும் வினைகள் மூளாவாம்'' என்றதனால், இம்மையில் அவ் வினையை யனுபவித்தற்கு வந்த சரீரம் முதலிய மாயா காரியங்களாலும் அவர் தாக்கப்படமாட்டார் என்பது பெறப்படும். ஆகவே ஆணவ பந்தம் முற்றாக நீங்கிய முத்தர் கர்மம் மாயைகளாலும் தாக்கப்படாம லிருத்தலால் அவருடைய நிலை பரமுத்தியாம். (9)

## அவர் பெத்தான்மாக்களில் அருளுடையவர்

கள்ளத் தலைவர் துயர்கருதித் தங்கருணை
வெள்ளத் தலைவர் மிக.

ப—ரை: கள்ளத் தலைவர் துயர் கருதி - ஆணவத்தால் வரும் பொய்யறிவு நிறைந்த பெத்தான்மாக்கள்படுந் துன்பத்தை எண்ணி, தம் கருணை வெள்ளத்து - (சீவன்முத்தர்) தம்மிடத்திலுள்ள இரக்கமாகிய கடலில், மிக அலைவர் - மிகவும் அலைதலைச் செய்வர்,

அலைதலாவது - இரங்கி அருள் செய்தல்.

சிவம் உயிர்களில் இரங்குவதுபோல இவர்களும் இரங்குவரென்பது கருத்து. சிவபெருமான் முத்தரை அதிட்டித்து நின்று பக்குவான்மாக்களுக்கு ஞான மார்க்கத்தைக் காட்டுவர்; வேதாகமங்களும் மெய்ஞ்ஞானமுஞ் சைவ சமயமும் விளங்குதற்கும், ஏனைய ஞான நூல்களும் திருவருட் பாக்களுந் தோன்றுதற்கும் இவர்கள் காரணமாயுள்ளவர்கள். ஆன்மாக்களின் ஈடேற்றத்துக்கு இவர்கள் இன்றியமையாதவர்கள். சீவன் முத்தர்கள் திருவடி வாழ்க. (10)

உமாபதி சிவாசாரியர் திருவடி வாழ்க.

மெய்கண்ட தேவர் திருவடி வாழ்க,

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமுறைப் பாடல்கள்

திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிச்செய்த

## திருநீற்றுப் பதிகம்

### பதிக வரலாறு

பாண்டி நாட்டில் சமண சமயம் பரந்திருந்த நாளில், பாண்டியன் மாதேவியும் சைவ சமயத்தைக் கடைப்பிடித்தொழுகி வந்தவருமான மங்கையர்க்கரசியார், திருஞானசம்பந்தப் பெருமானை மதுரைக்கு எழுந்தருளுமாறு தூதரை அனுப்பி வேண்ட, அவர் அவ்வேண்டுகோளுக்கிசைந்து மதுரைக்கு எழுந்தருளி ஒரு மடத்தில் சிவனடியாரோடு தங்கியிருந்தபோது, சமணர்கள் அம் மடத்திற்குத் தீவைத்தனர். அதையறிந்த திருஞானசம்பந்தப் பெருமான், சமணர் செய்த தீச்செயலுக்கு மன்னனே காரணனுயிருந்தமையால் அத்தீ அவனைச் சார்வதாக என்று பணித்தார். பாண்டியனை வெப்புநோய் பீடித்து மிக வருத்தியது. மங்கையர்க்கரசியார் பொருட்டாக ஞானசம்பந்தப் பெருமான் மன்னனது நோயைத் தீர்க்கத் திருவுளங் கொண்டார். சமணரும் அந்நோயைத் தீர்க்க முற்பட்டனர். அப்போது அரசன், தன் நோயைத் தீர்ப்பவரின் சமயமே மெய்ச்சமயமெனக் கூறி, இரு சாராரையும் தன் நோயைத் தீர்க்குமாறு வேண்டினன். பிள்ளையார் மன்னனது உடலின் வலப்பக்க நோயையும், சமணர்கள் உடலின் இடப்பக்க நோயையும் தீர்ப்பதாகத் தீர்மானித்தனர். பிள்ளையார் இத் திருநீற்றுப் பதிகத்தை ஓதி, பாண்டியனது உடலின் வலப்பக்கத்தில் நீறு சாத்தினர். உடனே நோய் நீங்கியது. அவ்வேளையில் சமணர் தீர்க்க முயன்ற இடப்பக்கத்தில் நோய் மேலும் அதிகரித்தது. பின்னர் மன்னன் சைவமே மெய்ச்சமயமெனத் தெளிந்து, பிள்ளையாரையே தனது இடப்புறத்து நோயையும் நீக்குமாறு வேண்ட, அவரது அருளால் நோய் முற்றும் நீங்கியது.

திருச்சிற்றம்பலம்

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தில் உள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவாலவாயான் திருநீறே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள்: மந்திரமாயிருப்பதும் திருநீறே; தேவர்கள் தம்மீது அணியப் பெற்றிருப்பதும் திருநீறே; அழகு ஆவதும் திருநீறே; (வேதத்தினுல்) தோத்திரம் செய்யப்படுவதும் திருநீறே; (பிறவிப் பிணி தீர்த்தற்கு) உபாயமாயிருப்பதும் திருநீறே; சமயங்கள் தோறும் உள்ளதும் திருநீறே; சிவந்த பவளம் போன்றதிருவாயினையுடைய உமாதேவியாரைப் பாகத்திலே கொண்டு திருவாலவாயின்கண் எழுந்தருளிய இறைவனதுதிருநீறே இத்தகைய சிறப்புக்களையுடையதாம்.

நீறு - நீற்றப்பெறுவது. சுந்தரம் - அழகு. திருநீறு தான் அழகியதாயிருப்பதோடு தன்னையணிபவர்க்கும் அழகைத் தருகிறது. பஸ்ம ஜாபாலம் முதலிய உபநிடதங்களினுல் போற்றப்படுதலின் துதிக்கப்படுவது என்ருர். நோய் தீர்த்தற்குரியனவாகிய மந்திரம், தந்திரம், மருந்து என்னும் மூவகைச் சாதனமாயும் திருநீறு விளங்குகின்றது அவற்றுள் மந்திரத்தையும் தந்திரத்தையும் இங்கு கூறி மேல் ஒன்பதாம் பாட்டில் ''ஏல உடம்பிடர் தீர்க்கும்'' என மருந்தைக் கூறுகின்ருர். மந்திரம் என்னும் சொல் (மந்+த்ரம்) நினைப்பவனைக் காப்பது என்று பொருள் கொள்ளப்படுதலையும், திருநீற்றுக்குள்ள பல பெயர்களில் இரட்சை (ரக்ஷா) என்பதற்குக் காப்பாற்றுவது என்பதே பொருளாதலையும் ஒப்பிட்டுத் திருநீற்றை மந்திரம் என்று கூறியதிலுள்ள பொருத்தத்தை அறிக. ஆலவாய் - மதுரை. (1)

வேதத்தில் உள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு உண்மையில் உள்ளது நீறு
சீதப் புனல்வயல் சூழ்ந்த திருவாலவாயான் திருநீறே.

பொருள்: திருநீறு வேதத்தில் பேசப் பெற்றுள்ளது; கொடிய துன்பங்களைத் தீர்க்கவல்லது; ஞானத்தைத் தரவல்லது; இழிந்த குணங்களைப் போக்குவது; படித்தறியத் தக்கது; உண்மை நூல்களில் எடுத்துக் கூறப்பட்டுள்ளது; குளிர்ந்த நீர் நிறைந்த வயல்களாற் சூழப்பட்ட திருவாலவாயில் எழுந்தருளியிருக்கும் பெருமானது திருநீறு இத்தகையது.

வெந்துயர் - கொடிய பிறவித் துன்பம். உடல்நோயைத் தீர்க்கவல்லதென்பது கூறும்மேலே அமையும். போதம் - ஞானம்; சிவஞானம் புன்மை - சிறுமை; உடலையும் உயிரையும் பற்றிய இழிந்த பண்புகள். (2)

முத்தி தருவது நீறு முனிவர் அணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ வினியது நீறு
சித்தி தருவது நீறு திருவாலவாயான் திருநீறே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள்: திருவாலவாயான் திருநீறு மோட்சமென்னும் வீடு பேற்றைத் தர வல்லது; முனிவர்களால் அணியப்படுவது; உண்மைப் பொருளாயுள்ளது; பெரியோர்களாற் புகழப்படுவது; இறைவன் மீது பத்திகொள்ளச் செய்வது; துதிப்பதற்கு இனிமையானது; இட்டசித்திகளைத் தர வல்லதுமாகும்.

முத்தி - முக்தி - மோக்ஷம் - வீடு. பத்தி - பக்தி; இறைவனிடங் கொள்ளும் பேரன்பு. பரவல் - துதித்தல் - புகழ்தல். சித்தி - காரியங் கை கூடுதல். (3)

காண இனியது நீறு கவினைத் தருவது நீறு
பேணி அணிபவர்க் கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மாணந் தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணந் தருவது நீறு திருவாலவாயான் திருநீறே.

பொருள்: திருவாலவாயான் திருநீறு காட்சிக்கு இனியது; அழகினைத் தருவது; தன்னை விரும்பி யணிபவர்களுக் கெல்லாம் பெருமையைக் கொடுப்பது; மாட்சிமைப்பட்ட குணங்களை நீங்காமற் பிணிப்பது; நல்ல புத்தியைத் தருவது; மேலுலக இன்பத்தைத் தர வல்லதுமாகும்.

கவின் - அழகு. மாணம் - மாட்சிமை; மதி - அறிவு. போதம் என முன்னர் சிவஞானம் குறிப்பிடப்பட்டமையின் இங்கு மதியெனப்பட்டது லௌகிக ஞானமாகும். சேணம் - மேலுலகம். (4)

பூச இனியது நீறு புண்ணியமாவது நீறு
பேச இனியது நீறு பெருந்தவத் தோர்களுக் கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தம தாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருவாலவாயான் திருநீறே.

பொருள்: திருவாலவாயான் திருநீறு உடலிற் பூச இனிதாயிருப்பது; புண்ணிய வடிவினை யுடையது; பாராட்டிப் பேசுதற்கு இனியது: பெரிய தவத்தினை யுடையார்க்கு அவர்களுடைய பற்றுக்களை அழித் தொழிப்பது; எல்லாவற்றிற்கும் முடிவாயிருப்பது; எல்லா உலகத்தவராலும் புகழப்படுவதுமாகும்.

இல்லறத்தார்க்குப் புண்ணியம் முதலிய இம்மையின்பங்களைத் தருவதோடு துறவறத்தார்க்கும் பற்றுக்களை யறுத்துப் பேரின்பம் பெறச் சாதகமாதலின் பெருந் தவத்தோர்களுக்கெல்லாம் ஆசை கெடுப்பது நீறு என்றார். (5)

அருத்த மதாவது நீறு அவலம் அறுப்பது நீறு
வருத்தந் தணிப்பது நீறு வானம் அளிப்பது நீறு
பொருத்த மதாவது நீறு புண்ணியர் பூசும்வெண் ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த திருவாலவாயான் திருநீறே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள்: திருவாலவாயான் திருநீறு (வாழ்வுக்கு வேண்டிய) பொருளாயுள்ளது; துன்பத்தைத் தொலைப்பது, வருத்தத்தினைக் குறைப்பது; சுவர்க்க வாழ்வைத் தருவது; பொருத்தமுடையதாயிருப்பது; புண்ணியவான்களாற் பூசிக்கொள்ளப்படுவது; செல்வந் தங்கிய மாளிகைகள் சூழ்ந்த திருவாலவாயில் எழுந்தருளியிருக்கும் சிவபிரானது திருநீறு இத்தகைப் பெருமை வாய்ந்ததாகும்.

அருத்தம் - அர்த்தம் - செல்வம். தர்ம அர்த்த காம மோட்சம் என்னும் உறுதிப் பொருள் நான்கினுள் ஒன்று. புண்ணியம் - சிவபுண்ணியம். (6)

எயிலது அட்டது நீறு இருமைக்கும் உள்ளது நீறு
பயிலப் படுவது நீறு பாக்கிய மாவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு சுத்தம தாவது நீறு
அயிலைப் பொலிதரு சூலத் தாலவாயான் திருநீறே.

பொருள்: கூர்மையோடு பொலிந்து விளங்குகின்ற சூலப் படையையுடைய ஆலவாயானது திருநீறுனது, முப்புரங்களையும் நீறுக்கியது; இருமைப் பேற்றுக்குந் துணையாயுள்ளது; (பத்தர்களினுல்) அணிந்து பழகப்படுவது; பல்வகைச் செல்வமாயிருப்பது; தூக்கத்தைத் தடுப்பது; பரிசுத்தமாயிருப்பது.

அயில் - கூர்மை. எயில் - மதில் - மதிலை அங்கமாயுள்ள கோட்டை. இங்கு திரிபுரங்களாகிய கோட்டைகளைக் குறித்தது. இருமை - இம்மை மறுமையின்பப்பேறு. பாக்கியம் - செல்வம். (7)

இராவணன் மேலது நீறு எண்ணத் தகுவது நீறு
பராவண மாவது நீறு பாவம் அறுப்பது நீறு
தராவண மாவது நீறு தத்துவ மாவது நீறு
அராவணங் குந்திரு மேனி ஆலவாயான் திருநீறே.

பொருள்: பாம்புகள் அணிந்து விளங்கும் திருமேனியினையுடைய ஆலவாய்ப் பெருமானது திருநீறுனது, இராவணனது உடம்பிற் பூசப்பட்டிருப்பது; உயர்தது என மதிக்கப்படுவது; பராசத்தியின் வண்ணமாயிருப்பது; அணிவாரது பாவத்தை அழிப்பது; பூமிதேவியின் வண்ணமாயுள்ளது; தத்துவரூபமாயிருப்பது.

இராவணன் சிறந்த சிவபக்தனுதலின் அவனது விபூதிப் பூச்சு விதந்தோதப்பட்டது. பரா-பரை -பராசக்தி. தரா-தரை-பூமி. (8)

மாலொ டயனறி யாத வண்ணமு முள்ளது நீறு
மேலுறை தேவர்கள் தங்கள் மெய்யது வெண்பொடி நீறு
ஏலவு டம்பிடர் தீர்க்கும் இன்பந் தருவது நீறு
ஆலம துண்ட மிடற்றெம் ஆலவாயான் திருநீறே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள்: ஆலகாலவிடத்தை உட்கொண்ட மிடற்றினையுடைய ஆலவாயானது திருநீறானது, திருமாலும் பிரமதேவனும் அறிந்துகொள்ள முடியாத தன்மையுள்ளது; மேலுலகத்தில் உறைகின்ற தேவர்களது உடலிலுள்ளது. முற்பட்டு உடலில் வருகின்ற துன்பங்களைத் தீர்த்து இன்பத்தைத் தருவது.

ஆலம் - ஹாலம் - விஷம். ஆலகாலம் எனவும்படும்; ஆலம் அது உண்ட மிடறு - நீலகண்டம். (9)

குண்டிகைக் கையர்க ளோடு சாக்கியர் கூட்டமுங் கூடக்
கண்டிகைப் பிப்பது நீறு கருத வினியது நீறு
எண்டிசைப் பட்ட பொருளார் ஏத்தும் தகையது நீறு
அண்டத் தவர்பணிந் தேத்தும் ஆலவாயான் திருநீறே.

பொருள்: தேவர்களாற் பணிந்து துதிக்கப்படும் ஆலவாயான் திருநீறு, நீர்ப்பாத்திரத்தைத் தாங்கிய கையினையுடைய சமணர்களோடு பௌத்தர்களின் கூட்டமும் ஒருசேரக் கண்திகைத்து மயங்கச் செய்வது; நினைக்க இனியதாயிருப்பது; எட்டுத் திசைகளிலும் நிலைத்த காவற்றலைமையுள்ளவர்களால் துதிக்கப்படுந் தகுதியுடையது.

குண்டிகை -நீர்ப்பாத்திரம். கையர் - கையுடையவர். கையர் என்பது கீழோர் என்னும் பொருளுமுடையதாதலின் இத்தொடர்க்கு நீர்ப்பாத்திரம் வைத்திருக்கும் இழிந்தோர் எனப் பொருள்கொள்ளலும் பொருந்தும். தாம் பருகுதற்கும் பிறரது நோய் நீக்குதற்குமாக நீர்க்கரகத்தை எப்போதும் வைத்திருத்தல் சமணரியல்பு.

எண் திசைப்பட்ட பொருளார் - இந்திரன் முதலிய திசைகாவலர் எண்மர். (10)

ஆற்றல் அடல் விடை ஏறும் ஆலவா யான்திரு நீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம் பந்தன்
தேற்றித் தென்ன னுடல் உற்ற தீப்பிணி யாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே.

திருச்சிற்றம்பலம்

பொருள்: வலிமையும் வெற்றியுமுடைய இடபத்தைச் செலுத்துபவரான திருவாலவாய்ப் பெருமானது திருநீற்றின் பெருமையைப் போற்றி, சீகாழியில் விளங்கும் பூதேவனாகிய ஞானசம் பந்தன் என்னும் யான், பாண்டியனுடைய உடலில் உற்ற கொடிய சுரநோய் முதலியன தீருமாறு (அந்த நீற்றின் பெருமையைத்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளியச் செய்து கூறிய பாடல்கள் பத்தினையும் ஓதவல்லவர்கள் நல்லவர்கள் ஆவார்கள்.

அடல் - வெற்றி, விடை - இடபம், புகலி சீகாழிக்குரிய பெயர்களுள் ஒன்று. ஆன்மாக்களுக்குப் புகலிடமாயுள்ளது என்பது பொருள்; பூ - பூமி, சுரன் - தேவன், பூசுரன் - பூதேவன் - அந்தணன். தென்னன் - தென்னுடாகிய பாண்டிநாட்டினரசன். தீப்பிணியாயின என்ற பன்மையினுல் சுரநோயும் மலநோயும் கொள்ளப்படும்.

பதிகம் பத்துப் பாடல்கொண்டது. பதினேராவது பாடலாகிய இது, இப்பதிகமோதுவதால் வரும் பயன் கூறுவதால் 'பலசுருதி' என்றும், இறுதிப் பாடலாயிருப்பதால் 'திருக்கடைக்காப்பு' என்றும் பெயர் பெறும். (11)

திருநீற்றுத் திருப்பதிகம் இரண்டாந் திருமுறையில் அடங்கியது.
இதற்குரிய பண் காந்தாரம்

திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிச் செய்த

## திருக்கோணமலைப் பதிகம்

திருச்சிற்றம்பலம்

நிரைகழல் அரவம் சிலம்பொலி யலம்பும்
நிமலர்நீ றணிதிரு மேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்தும் காரகிற் பிளவும்
அளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகடல் ஓதம் நித்திலம் கொழிக்கும்
கோணமா மலையமர்ந் தாரே.

அரும்பத விளக்கம்: நிரைத்தல் - வரிசையாகக் கட்டுதல். அரவம் - ஒலி. அலம்புதல் - ஒலித்தல். நிமலர் - நிர்மலர் - மலமற்றவர். வரை - மலை. விடை - எருது. சந்து - சந்தனம். கனமணி - பெரிய இரத்தினக் கற்கள். வரன்றி - வாரியள்ளி. குரைத்தல் - ஒலித்தல். ஓதம் - திரை. நித்திலம் - முத்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள்: கால்களிற் கட்டிய வீரக் கழலின் ஒலியும் சிலம் பின் ஒலியும் கலந்து ஆரவாரிக்கப்பெற்ற நிர்மலரும், நீறணிந்த தமது திருமேனியிலே மலையரசன் மகளாகிய பார்வதி ஒரு பாகத் திற் கலந்திருக்கும் திருவுருவத்தையுடையவரும், தமது கொடியில் அழகிய இடபத்தையுடையவருமாகிய சிவபிரான், கடற்கரையில் சந்தனக் கட்டைகளையும், அகிற் கட்டைகளையும் அளவற்ற இரத்தி னங்களையும் கடலலைகள் வாரியொதுக்கும் இடமாகிய திருக்கோண மலையிலே எழுந்தருளியிருக்கின்றார்.

இத்திருப்பதிகத்தில் இறைவன் அர்த்த நாரீசுவரராகப் போற் றப்படுகின்றார். ஒரு திருமேனியிலே இடப்பாதி பார்வதியும், வலப் பாதி பரமேசுவரருமாகக் கலந்திருக்குந் திருவுருவமே அர்த்த நாரீ சுவர வடிவமாகும். (அர்த்தம் - பாதி, நாரி - பெண்) இத்திருப் பாடலில் கழலணிந்த இறைவன் திருவடியும் சிலம்பணிந்த இறைவியின் திருவடியும் இணைத்துத் தியானிக்கப்படுகின்றன. (1)

கடிதென வந்த கரிதனை உரித்து
அவ்வுரி மேனிமேற் போர்ப்பர்
பிடியன நடையாள் பெய்வளை மடந்தை
பிறைநுதல் அவளொடும் உடனாய்க்
கொடிதெனக் கதறுங் குரைகடல் சூழ்ந்து
கொள்ளமும் நித்திலம் சுமந்து
குடிதனை நெருக்கிப் பெருக்கமாய்த் தோன்றும்
கோணமா மலையமர்ந் தாரே.

அரும்பத விளக்கம்: கரி - யானை, கரத்தை (கையை) உடைய மிருகமாதலின் இப்பெயர் பெற்றது. அத்தி (ஹஸ்தி) என்னும் பெயரும் இப்பொருளுடையதே. உரி - தோல், பிடி - பெண் யானை. நுதல் - நெற்றி. நுதலவள் - நெற்றியினையுடையவள், கொள்ளம் - சேறு; பெய்வளை - பெய்த வளை - அணிந்த வளையல்.

பொருள்: (தம்மைக் கொல்ல) விரைந்து வந்த யானையைக் கொன்று அதன் தோலையுரித்துத் தம் உடலிற் போர்த்துக்கொண்ட பெருமான், பிடி நடையும் பெய்வளையும் பிறைநுதலுமுடைய அம்மையுடன் இணைந்தவராய், பேரொலியோடு சேற்றையும் முத் தையும் சுமந்துவந்து குடிமக்களை நெருங்கியிருக்கச் செய்வதும் அவர் களுக்குச் செல்வந் தருவதுமான கடலினாற் சூழப்பட்ட திருக்கோண மலையிலே வீற்றிருக்கின்றார்.

நிரீசுரவாதிகளான தாருகாவன முனிவர் தமது வேள்விக்கு இடையூறு செய்த சிவபிரானை அழிப்பதற்கென்று தமது மந்திர சக்தியால் வேள்வித் தீயினின்றும் தோற்றுவித்தனுப்பிய யானையை யும் புலியையும் சிவபிரான் கொன்று உரித்து அத்தோல்களை வெற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றிச் சின்னமாயும், பாம்புகளை ஆபரணமாயுமணிந்தாரென்னும் புராணச் செய்தி இங்கு அறியத்தக்கது. பிடி அன்ன நடையாள் என்பதற்குப் பிடி நடையையும் அன்ன நடையையும் போன்ற நடையினையுடையாள் எனக் கொள்ளலும் பொருந்தும். (2)

பனித்திளந் திங்கள் பைந்தலை நாகம்
படர்சடை முடியிடை வைத்தார்
கனித்திளந் துவர்வாய்க் காரிகை பாகம்
ஆகமுன் கலந்தவர் மதின்மேல்
தனித்தபேர் உருவ விழித்தழல் நாகம்
தாங்கிய மேருவெஞ் சிலையாக்
குனித்ததோர் வில்லார் குரைகடல் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே.

அரும்பத விளக்கம்: பனித்த - குளிர்ந்த. பயந்த எனலுமாம், துவர் வாய் - பவளம் போன்ற வாய். காரிகை - பெண். விழித்தழல் நாகம் - தழல் விழி நாகம் - தீ போன்ற கண்களையுடைய ஆதி சேடன் என்னும் பாம்பு. சிலை - வில்லு. குனித்தல் - வளைத்தல். பனித்த இளந்திங்கள் என்பது பனித்திளந்திங்கள் என்றும், கனிந்த இளந் துவர்வாய் என்பது கனித்திளந்துவர்வாய் என்றும் விகாரப் பட்டன.

பொருள்: குளிர்ந்த பிறைச் சந்திரனையும் பசுந்தலை நாகத்தினையும் தமது சடாமுடியில் சூட்டியவரும், கனிந்த பவளம் போன்ற வாயினையுடைய உமை தம் இடப்பாகத்திற் கலந்திருக்கப் பெற்றவரும், முப்புரங்கள் மீது (அம்பெய்வதற்காக) ஆதிசேடனை நாணாகத் தாங்கிய மேருமலையை வில்லாக வளைத்த வில்லாளியுமான சிவபிரான் கடல்சூழ்ந்த திருக்கோணமலையில் வீற்றிருக்கின்ரூர்.

பறக்குங் கோட்டைகளில் இருந்துகொண்டு உலகத்தவரைத் துன்புறுத்திய அசுரர் மூவரை அழிப்பதற்காக மேருமலையை வில்லாக வளைத்து ஆதிசேடனை நாணாகப்பூட்டி மகாவிஷ்ணுவை அம்பாகக் கொண்டு புறப்பட்ட சிவபிரான், விஷ்ணுவைக் கர்வபங்கம் செய்ய எண்ணி அம்பை உபயோகியாமல் தமது அட்டகாசச் சிரிப்பினுலே மூன்றசுரர்களையும் முப்புரங்களோடும் எரித்தழித்த வரலாறு இங்கு குறிப்பிடப்பட்டது. தக்கனுடைய இருபத்தேழு புதல்விகளையும் மணம்புரிந்த சந்திரன் அவர்களைப் பாரபட்சமாக நடத்த அதனுல் சினங்கொண்ட தக்கன் சந்திரனுடைய கலைகள் நாள் தோறும் தேய்ந்து அழியுமாறு சாபமிடவே அச்சங் கொண்ட சந்திரன் சிவபிரானைச் சரணடைந்து அவரால் தமது சடாமுடியிற் சூடிக் காப்பாற்றப்பட்ட புராணச் செய்தி முதலடியுட் சுட்டப்பட்டது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழித்திளங் கங்கை சடையிடை வைத்துப்
பாங்குடை மதனனைப் பொடியா
விழித்தவன் தேவி வேண்டமுன் கொடுத்த
விமலனுர் கமலமார் பாதர்
தெழித்துமுன் அரற்றுஞ் செழுங்கடற் றரளம்
செம்பொனும் இப்பியுஞ் சுமந்து
கொழித்துவன் திரைகள் கரையிடைச் சேர்க்கும்
கோணமா மலையமர்ந் தாரே.

அரும்பத விளக்கம்: மதனன் -மன்மதன், பொடியா விழித்து - சாம்பலாகுமாறு விழித்துப் பார்த்து, அவன் தேவி வேண்ட - அந்த மன்மதனுடைய தேவியான இரதி பிரார்த்திக்க, விழித்தவன் என்பதை விழித்து + அவன் எனப் பிரித்துப் பொருள் கொள்க. பாதம் உடையவர் பாதர். கமலம் ஆர் பாதர் - தாமரை மலர் போலும் திருவடிகளையுடையவர். தரளம் - முத்து, இப்பி - சிப்பி தரளமும் என உம்மை விரிக்க.

பொருள்: இளங் கங்கையை இகழ்ந்து தமது சடையில் அடக்கியும் அழகிய மன்மதனைப் பொடியாகும் வண்ணம் விழித்து அழித்துப் பின்பு அவன் மனைவி, வேண்டிக் கேட்க மீண்டும் அவனை எழுப்பிக் கொடுத்தும் அருள் புரிந்த தூயவரான சிவபெருமான், கடலின் முத்தையும் செம்பொன்னையும் சிப்பியையும் திரைகள் சுமந்து வந்து கரையிலே ஒதுக்குகின்ற கோணமாமலையில் அமர்ந்திருக்கின்றார்.

கபிலமுனிவரின் சாபத்தால் பாதாளத்தில் சாம்பராய்க் கிடக்கும் தன் முன்னேரான சகர புத்திரர் மேற்கதி பெறுதற்காக பகீரதன் என்னும் அரசன் வான்நதியைப் பூமியில் இறங்கச் செய்த போது, கங்கையின் கொடிய வேகத்தினுல் பூமி அழியாதிருத்தற்காக சிவபிரான், பேருருவுடைய கங்கையைச் சிறிதாக்கித் தமது சடையில் அடக்கியருளினுர் என்ற புராணச் செய்தியும், மௌன சமாதியிலிருந்த சிவபிரான் மீது மலரம்பு தொடுத்த மன்மதனை அவர் தமது நெற்றி விழியின் நெருப்பினுல் எரித்தழித்துப் பின்பு எழுப்பிக் கொடுத்தாரென்ற அருட்சரிதையும் இத்திருப் பாடலின் முன்னடிகளில் சுட்டப்படுகின்றன. (4)

தாயினும் நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
மாண்பினர் காண்பலர் வேடர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோயிலும் பிணியுந் தொழிலர்பால் நீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலுஞ் சுனையுங் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே.

அரும்பத விளக்கம்: பல வேடர் - பல்வேறு வகைப்பட்ட அருட் கோலங்களையுடையவர். தொழிலர்பால் - தொண்டர்களிடம். ஞாலம் - உலகம், பூமி. நோயிலும் என்பதிலுள்ள இல் என்பதை வேற்றுமையுருபாகக் கொள்ளாது சாரியையாகக் கொள்க. நோயும் பிணியும் - மன நோயும் உடல் நோயும். சுனை - ஊற்று நீர்.

பொருள்: தாயினும் சிறந்த அன்புள்ள தலைவரென்று எண்ணித் தம்முடைய திருவடிகளைத் துதித்துப்பாடுகின்ற அடியவர்களின் வாக்கிலும் மனத்திலும் கலந்து நின்று அவர்களை விட்டகலாத மாண்புடையவரும், பலவாறு காணப்படும் திருவருட் கோலங்களையுடையவரும், தொண்டர்களிடமுள்ள நோய் பிணிகளை நீக்கியருளுபவரும், நுண்ணிய வேதாகமாதி சாத்திரங்களை அருளிச் செய்தவருமான சிவபிரான் இந் நிலவுகில் திருக்கோயிலும் தீர்த்தச் சுனையும் கடலினுற் சூழப்பட்ட திருக்கோணமலையில் அமர்ந்திருக்கின்றார். (5)

பரிந்துநன் மனத்தால் வழிபடு மாணி
தன்னுயிர் மேல்வருங் கூற்றைத்
திரிந்திடா வண்ணம் உதைத்தவர்க் கருளும்
செம்மையார் நம்மையா ளுடையார்
விரிந்துயர் மௌவல் மாதவி புன்னை
வேங்கைவண் செருந்திசண் பகத்தின்
குருந்தொடு முல்லை கொடிவிடும் பொழில்சூழ்
கோணமா மலையமர்ந் தாரே.

அரும்பத விளக்கம்: பரிந்து - அன்பு கொண்டு, மாணி - பிரமசாரி. கூற்று - யமன். உதைத்து + அவற்கு + அருளும். அவற்கு- அந்த யமனுக்கு. மௌவல் - மல்லிகை. மாதவி - மாதவிக் கொடி. (குருக்கத்தி) புன்னை வேங்கை செருந்தி சண்பகம் என்பன பூமரங்கள். குருந்து-பத்திர மெடுக்கப் பயன்படும் ஒருமரம். பொழில் - சோலை.

பொருள்: பக்தியினால் மனமொடுங்கிப் பூசை செய்துகொண்டிருந்த பிரமசாரியான மார்க்கண்டேயரது உயிர் மீது (பாசம் வீசிக் கவர) வந்த யமனை உதைத்து (அத் தண்டனை வாயிலாக) அவனுக்கு அருள்புரிந்த சிறப்புடையவரும், நம்மை ஆட்கொண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டருளியவருமான சிவபிரான், மல்லிகை முதலிய கொடிகளும் மரங்களும் படர்ந்து வளரும் சோலை சூழ்ந்த திருக்கோணமலையில் அமர்ந்திருக்கின்றார்.

அன்போடு சிவபூசை செய்த அடியவனுக்கு அருளியது மாத்திரமன்றி அதற்கு இடையூறு செய்தவனுக்கும் தன்டனை மூலம் அருள்புரிந்த இறைவனுடைய பெருங்கருணை 'உதைத்து அவற்கு அருளும் செம்மை' என்று போற்றப்படுகின்றது. திருமாலும் நான்முகனும் தேடிக் காணாத திருவடியைத் தரிசிக்கவும் தீண்டவும் பெற்றது யமனுடைய புண்ணியப் பேறாகும் (6)

[ஏழாவது பாட்டு மறைந்துவிட்டது.]

எடுத்தவன் தருக்கை இழிந்தவர் விரலால்
ஏத்திட ஆத்தமாம் பேறு
தொடுத்தவர் செல்வம் தோன்றிய பிறப்பும்
இறப்பறி யாதவர் வேள்வி
தடுத்தவர் வனப்பால் வைத்ததோர் கருணை
தன்னருட் பெருமையும் வாழ்வும்
கொடுத்தவர் விரும்பும் பெரும்புக ழாளர்
கோணமா மலையமர்ந் தாரே.

அரும்பத விளக்கம்: எடுத்தவன் - தூக்கியவன். கயிலைமலையைத் தூக்கிய இராவணன். தருக்கு - கர்வம். இழித்தல் - தாழ்த்துதல், அடக்குதல். ஏத்துதல் - துதித்தல், புகழ்ந்து பாடுதல். ஆத்தம் - ஆப்தம் - விரும்பப்பட்டது. விரலால் இழித்தவர் எனவும், பேறு செல்வம் தொடுத்தவர் எனவும், வனப்பால் தடுத்தவர் எனவும் கூட்டுக.

பொருள்: தாம் வீற்றிருந்த கயிலைமலையைப் பெயர்த்தெடுக்க முனைந்த இராவணனது கர்வத்தைத் தமது காற் பெருவிரால் நெரித்து அடக்கியவரும், அவ்விராவணன் துதித்தபோது அவனுக்கு விருப்பமான பேறுகளையும் பெருஞ்செல்வத்தையும் கொடுத்தவரும், பிறப்பு இறப்பு அறியப்படாதவரும், (தக்கன் முறைகேடாகச் செய்த) யாகத்தை அழகுறத் தடுத்தவரும், அவன்மீது கொண்ட கருணையினால் அவனுக்குத் தமதுபேரருளையும் நல்வாழ்வையும் கொடுத்தருளியவரும், யாவரும் விரும்பும் பெரும்புகழுடையவருமான சிவபிரான் திருக்கோணமலையில் அமர்ந்திருக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திக்கு விசயம்செய்துவந்த இராவணன் தன்வழியைத் தடுத்து நின்ற கயிலைமலையை மதியாது பெயர்த்தெடுக்க முற்பட்டபோது மலைச் சிகரத்தில் வீற்றிருந்த சிவபிரான் தமது காற் பெருவிரலைச் சற்றே அழுத்தி இராவணனை அவனது அகங்காரத்தோடு சேர்த்து நெரிக்க அதனால் நல்லறிவு பெற்ற இராவணன் இறைவனைத் தன் இசைத் திறமையால் மகிழ்வித்து வரம்பெற்றுச் சென்றான். தக்கன் சிவபிரானை மதியாது முறைமாறி வேள்வி செய்தபோது சிவபிரான் வீரபத்திரரை அனுப்ப அவர் தக்கனது தலையை வெட்டி வேள்வித் தீயிலிட்டுத் தண்டித்தார். பின்பு சிவபெருமான் அவனுக்கிரங்கி வேள்விச்சாலையில் வெட்டுண்டு கிடந்த ஆட்டுத் தலையை அவனுடலிற் பொருத்தி உயிர்ப்பித்து வாழ்வளித்தார். பரம்பொருளை மதியாது தருக்கிய இராவணனும் தக்கனும் தண்டனையின் பின்பு இறைவனின் கருணைக்குப் பாத்திரராயினர். மதனனைப் பொடித்த வரலாற்றிலும் இக்கருணையே போற்றப்பட்டது. ஆகவே இத் தொடர்பில் மேற்பாடலில் 'உதைத்து அவற்கு அருளும் செம்மையார்' என்னுந் தொடரில் 'அவன்' எனச் சுட்டப்பட்டவன் யமனே என்பது தெளிவாகிறது. (8)

அருவரா தொருகை வெண்டலை யேந்தி
யகந்தோறும் பலியுடன் புக்க
பெருவரா யுறையும் நீர்மையர் சீர்மைப்
பெருங்கடல் வண்ணனும் பிரமன்
இருவரும் அறியா வண்ணம்ஒள் எரியாய்
உயர்ந்தவர் பெயர்ந்தநன் மாற்கும்
குருவராய் நின்றார் குரைகழல் வணங்கக்
கோணமா மலையமர்ந் தாரே.

அரும்பத விளக்கம்: வெண்டலை - வெண்மையான மண்டையோடு. அகம் - வீடு. பலி - பிச்சையாகப் பெறும் உணவு. புக்க - புகுந்த. பெருவர் - பெருமையுடையவர். நீர்மை - தன்மை - இயல்பு. சீர்மை - சிறப்பு. வண்ணம் - வர்ணம் - நிறம். கடல் வண்ணன் - நீலமேனியனான திருமால். ஒள் எரி - ஒளிமிக்க நெருப்பு. மாற்கு - மாலுக்கு - திருமாலுக்கு. குருவர் - குரு - ஆசாரியர். மாற்குங் குருவராய் நின்றவர் - உபமந்நியு முனிவர். திருமால் இவரிடம் தீட்சை பெற்றுச் சிவபூசை செய்தார்.

பொருள்: அருவருப்படையாமல் ஒரு கையில் வெண்மையான மண்டையோட்டை (பிட்சாபாத்திரமாகத்) தாங்கிக் கொண்டு, வீடு தோறும் பிச்சையுணவுடன் புகுந்து, பெருமையுடையவராய்த் தங்கிய இயல்பினையுடையவரும், திருமாலும் பிரமனும் அடிமுடி காணமுடியா வண்ணம் தீப்பிழம்பாய் உயர்ந்து நின்றவருமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபிரான், திருமாலுக்கும் குருவாய் நின்றவரான உபமன்னியு முனிவர் தம் திருவடியை வணங்கக் கோணமாமலை அமர்ந்திருக் கின்றார்.

அசுத்தமுடையதும் அமலங்கப் பொருளுமான மண்டையோட்டில் உணவேற்பதையிட்டுச் சிறிதும் அருவருப்படைந்திலரென்றது இறைவனது விருப்புவெறுப்பற்ற தன்மையை வியந்தவாறும், தாருகாவனத்து முனிவர்களுக்கு உண்மையுணர்த்துதற்காகச் சிவ பெருமான், திருமாலை மோகினி வடிவில் முனிவரின் வேள்விச் சாலைக்கு அனுப்பியும், தாம் அழகிய இளம் பிச்சாண்டியாக முனி பத்தினிமார் முன்சென்றும் அவர்களின் மனத்தில் சலனத்தை ஏற்படுத்தித் தவ வலிமையை இழக்கச் செய்து நல்வழிப்படுத்தினார். இவ்வாறே பரம்பொருள் ஒன்று உண்டென்பதை மறந்து தாமே பிரம்மம் என மயங்கிப் போராடிய பிரம விட்டுணுக்களுக்கு நடுவில் தீப்பிழம்பாய்த் தோன்றி அடிமுடி தேடுவித்து உண்மை யுணர்த்தி அவர்களை உய்வித்தார். உலகத்தவர்க்கு வழிகாட்ட வேண்டிய மேலோர், தாமே மயங்கித் தவறு செய்யின் சாமானியரும் அவரைப் பின்பற்றிக் கெட்டழிவராகையால் அவ்வாறு நிகழாது தடுத்தற்காக இறைவன் இத் திருவிளையாடல்களை நிகழ்த்தியருளினார். (9)

நின்றுணுஞ் சமணும் இருந்துணும் தேரும்
நெறியலா தனபுறங் கூற
வென்றுநஞ் சுண்ணும் பரிசினர் ஒருபால்
மெல்லிய லொடுமுட னாகித்
துன்றுமொண் பௌவம் மவ்வலுஞ் சூழ்ந்து
தாழ்ந்துறு துறைபல மோதிக்
குன்றுமொண் கானல் வாசம்வந் துலவும்
கோணமா மலையமர்ந் தாரே.

அரும்பத விளக்கம்: சமண் - சமணர் - தேர் - தேரர் - புத்த சமயத்தவரில் ஓர் உட்பிரிவினர். (புத்த பிக்குகளின் பெயரின் பின்னுள்ள 'தேரோ' என்பது இப்பெயரின் விகாரமே.) பரிசினர் - தன்மையுடையவர். மெல்லியல் - மெல்லியல்புடைய உமாதேவி. பௌவம் - கடல். மௌவல் - மல்லிகை. ஒண் கானல் - உயர்ந்த கடற் கரைச் சோலை. ஒண் கானலும் என உம்மை விரிக்க.

பொருள்: நின்று கொண்டே உணவுண்பவர்களாகிய சமணரும், (அவ் ்ாறின்றி) இருந்துண்பவர்களாகிய புத்தமதத்தினரும் அநீதியான பேச்சுக்களைப் புறத்தே நின்று கூற அவர்களை வெற்றி கொண்டவரும். ஆலகாலவிடத்தை உட்கொண்டவருமான சிவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமான், தம் இடப்பாகத்தில் உமையம்மையைச் சேர்த்துக் கொண்டவராய், கடலினாலும் மல்லிகையினாலும் சூழப்பட்டதும், பெரிய பல திரைகளால் மோதப் பெறுவதும் கடற்கரைச் சோலையின் நறுமணம் மலைமீதும் வீசப்பெறுவதுமான திருக்கோணமலையில் அமர்ந்திருக்கின்றார். (10)

குற்றமில் லாதார் குரைகடல் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரைக்
கற்றுணர் கேள்விக் காழியர் பெருமான்
கருத்துடை ஞானசம் பந்தன்
உற்றசெந் தமிழார் மாலையீ ரைந்தும்
உரைப்பவர் கேட்பவர் உயர்ந்தோர்
சுற்றமு மாகித் தொல்வினை யடையார்
தோன்றுவர் வானிடைப் பொலிந்தே.

அரும்பத விளக்கம்: கேள்வி - கேள்வியறிவு. காழியர் பெருமான் - சீகாழிப் பதியிலுள்ளவரின் தலைவன். தொல்வினை - பழவினைப்பயன்.

பொருள்: கற்றுணர்ந்தவர்களும் கேள்விஞானமுள்ளவர்களுமான சீகாழிப்பதியிலுள்ளார்க்குத் தலைவனும் தெய்வீகக் கருத்துடையவனுமாகிய ஞானசம்பந்தன் என்னும் யான், குற்றமற்றவராகிய கோணேசப் பெருமானைக் குறித்துப் பாடிய செந்தமிழ்ப் பாமாலையிலுள்ள பத்துப் பாடல்களையும் ஓதுவோரும் கேட்போரும் மேலோரைச் சுற்றமாகக் கொண்டிருப்பர். பழவினைப் பயனையடையமாட்டார்கள். வானுலகிற் சிறந்து விளங்குவார்கள். (11)

இத்திருப்பதிகம் மூன்றாந் திருமுறையில் அடங்கியது.

இதற்குரிய பண் புறநீர்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிச்செய்த

# நமச்சிவாயத் திருப்பதிகம்

## பதிக வரலாறு

திருநாவுக்கரசு நாயனார் தாம் சார்ந்திருந்த சமணத்தை விட்டுச் சைவ சமயத்திற் சேர்ந்துவிட்டாரென்பதை அறிந்த சமணர்கள் அவரையழைத்துத் தண்டிக்குமாறு பல்லவ மன்னனை வேண்டினர். மன்னன் அனுப்பிய ஏவலாளர் வந்து அழைத்தபோது அவர், 'நாமார்க்கும் குடியல்லோம்' என்று பதிகம்பாடி மறுத்துரைத்ததோடு பின்பு மன்னனால் விதிக்கப்பட்ட பல தண்டனைகளினாலும் துன்பமடையாது தப்பினார். சுண்ணாம்பறையில் அடைத்து வைக்கப்பட்ட சமயத்திலும், நஞ்சு கலந்த பாற்சோற்றை உண்பித்த வேளையிலும், மதயானையை ஏவிவிட்டபோதிலும் நாயனார் ஐந்தெழுத்தோதிப் பதிகங்கள் பாடினமையால் திருவருளால் காப்பாற்றப்பட்டார். இறுதியிற் சினங்கொண்ட மன்னவன் நாயனாரைக் கல்லோடு சேர்த்துக் கட்டிக் கடலில் போடுமாறு கட்டளையிட்டான். அவ்வாறு செய்யப்பட்டபோது நாயனார் ஐந்தெழுத்தோதி நமச்சிவாயத் திருப்பதிகத்தைப் பாடிக் கல்லே தெப்பமாகக் கரையேறினார். தம்மைச் சமணர்கள் கல்லிற் கட்டிக் கடலிற் பாய்ச்சியதையும், திருவைந்தெழுத்து ஓதித் தாம் கரையேறி உய்ந்ததையும் அவரே,

'கல்லி னோடெனைப் பூட்டி அமண் கையர்
எல்லை நீர்புக நூக்க என் வாக்கினால்
நெல்லு நீள்வயல் நீலக் குடியரன்
நல்ல நாமம் நவிற்றி உய்ந்தே னன்றே''

என்று வேறு தேவாரத்தில் தெளிவாகவும், இப் பதிகத்தில் 'கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்' என்று குறிப்பாகவும் கூறியிருக்கின்றார்.

திருச்சிற்றம்பலம்

**சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே.**

அரும்பத விளக்கம்: வேதியன் - வேதங்களால் அறியப்படுபவன்; துணை அடி - இணை அடி - இரண்டு திருவடிகள். கல்துணை -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லோடு: கல்துணை என்பதே குறுகியது எனக் கொள்வது முண்டு: (சொல் + துணை, பொன் + துணை, கல் + துணை, நல் + துணை.) துணைசொல் எனக் கூட்டுக. சிலர் 'கடலில்' என்னும் சொல்லை 'கடலினுள்' என மாற்றுவது தவறாகும்.

பொருள்: ஆன்மாக்களுக்கு உற்ற துணையென்று சொல்லப் படுகின்ற வேதியனும் ஒளிப் பிழம்பாய் நின்ற தேவனுமான இறை வனது பொன்மயமான இரண்டு சிறந்த திருவடிகளையும் கைதொழு தலால், கல்லோடு சேர்த்துக் கட்டிக் கடலிற் போக்கினாலும் (அமிழ்ந்துபோக விடாமல்) உறுதியான துணை ஆவது நமச்சிவாய என்னும் திருவைந்தெழுத்துமே. (1)

பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக் கருங்கலம் அரனஞ் சாடுதல்
கோவினுக் கருங்கலங் கோட்ட மில்லது
நாவினுக் கருங்கலம் நமச்சி வாயவே.

அரும்பத விளக்கம்: அருங்கலம் - அரிய ஆபரணம் (பூஷணம்) ஆ - பசு. அரன் - சிவபெருமான். அஞ்சு ஆடுதல் (ஆவினுடைய) ஐந்து பொருள்களில் நீராடுதல்; ஆவின் ஐந்து பொருள்கள்: பால், தயிர், நெய், கோசலம், கோமயம். இவை பஞ்ச கவ்வி யம் எனப் பெயர் பெறும். கோ - பசு. கோவினுடையது கவ்வி யம். வடசொல்லாகிய கோ, பசு என்னும் பொருளையும், தமிழ்ச் சொல்லாகிய கோ (கோன்) அரசன் என்னும் பொருளையும் தரும்.

பொருள்: பூக்களுக்கு அருங்கலமாவது பொலிவுற்ற தாமரை மலரே. பசுக்களுக்கு அருங்கலமாவது சிவபிரான் பஞ்ச கவ்வியத்தினால் அபிடேகம் செய்யப்படுதலே. அரசனுக்கு அருங் கலமாவது கோணுதலில்லாமையே. நாவுக்கு அருங்கலமாவது நமச்சிவாய என்னும் மந்திரமேயாம்.

ஓர் அரும்பொருளை வலியுறுத்திக் கூற விரும்பும் அறநூலார் அதற்கு இணையான வேறு பொருள்களையும் முதலிற் கூறி, அவற் றினால் தம் பொருளை அழகுறச் சாதித்தல் வடநூல் மரபு. திரி கடுகம் நான்மணிக்கடிகை முதலிய நீதி நூல்களும் இம்மரபு வழி வந்தவையாகும். வடமொழியிலும் தமிழிலும் சமணத் துறவிகளே அதிகமான அறநூல்களை இயற்றினர். சமண சமயத்தில் நெடுங் காலம் வாழ்ந்து இருமொழியிலுமுள்ள அறநூல்களை நன்கு பயின்றி ருந்தவரான திருநாவுக்கரசு நாயனார், அறநூன் மரபில் திருவைந் தெழுத்தின் பெருமையை எடுத்துக்காட்டுவதை இத்திருப்பாடலி லும் மேல் வரும் ஐந்தாம் எட்டாந் திருப்பாடல்களிலும் காண லாம். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணுற வடுக்கிய விறகின் வெவ்வழல்
உண்ணிய புகிலவை யொன்று மில்லையாம்
பண்ணிய வுலகினிற் பயின்ற பாவத்தை
நண்ணிநின் றறுப்பது நமச்சி வாயவே.

அரும்பத விளக்கம்: அழல்-நெருப்பு. வெம்மை + அழல் = வெவ்வழல். உண்ணிய - உண்ண. (எதிர்கால வினையெச்சம்) பண்ணிய -படைக்கப்பட்ட. பயின்ற பாவம் - மீட்டும் மீட்டும் பல பிறவிகளிற் செய்து சேர்த்த பாவம். நண்ணி - அணுகி; சேர்ந்து.

பொருள்: வானளாவ அடுக்கப்பட்ட விறகினுள் அதை எரித்து உண்ணுதற்குக் கொடுநெருப்புப் புகுமானால் அவ் விறகினுள் ஒன்று மில்லாது அழிந்துபோம். அதுபோலவே, இறைவன் படைத்த இவ்வுலகில் பலமுறையும் செய்து சேர்த்த பாவத்தைச் சேர்ந்து நின்று அழிக்க வல்லது நமச்சிவாய என்னும் ஐந்தெழுத்துமே.

பெரிய விறகுக் குவியலைச் சிறிய தீப்பொறி அழித்து விடுதல் போலப் பல பிறவிகளிலும் ஈட்டிய பெரும் பாவத்தையும் ஐந்தெழுத்து மந்திரம் அழித்தொழித்து விடுமென்றும், நெருப்பு அழுக்கையெரித்துத் தூய்மை செய்வதுபோன்று இம் மந்திரமும் தன்னை ஓதுவாரது பாவத்தைப் போக்கி அவர்களைத் தூயோராக்கு மென்றும் ஒப்புமையை உய்த்துணரலாம். (3)

இடுக்கண்பட் டிருக்கினு மிரந்தி யாரையும்
விடுக்கிற்பி ராரென்று வினவுவோ மல்லோம்
அடுக்கற்கீழ்க் கிடக்கினு மருளி னாமுற்ற
நடுக்கத்தைக் கெடுப்பது நமச்சி வாயவே.

அரும்பத விளக்கம்: நாம் உற்ற நடுக்கத்தை அருளின் கெடுப்பது எனக்கூட்டுக. இடுக்கண் - துன்பம். அடுக்கல் - மலை (இரந்து + யாரையும் = இரந்தியாரையும். விடுக்கிற்பிர் + ஆர் + என்று)

பொருள்: துன்பமடைந்திருந்தாலும், (எம்மை இவ்விடுக்கணி லிருந்து விடுவிக்க வல்லவர் யார் இருக்கின்றீர்கள்?" என்று (பிற தெய்வங்களுள்) எவரையும் இரந்து கேட்கமாட்டோம். மலையின் கீழ் அகப்பட்டிருந்தாலும் (அதனால் நமக்கு வரும்) நடுக்கத்தினைக் கருணையினால் அழித்துவிடுவது நமச்சிவாய என்னும் மூலமந்திரமே யாம்.

'விடுக்கிற் பிரானென்று'...... என்னும் பாடபேதத்துக்கு "எம்மை இத்துன்பத்தினின்றும் விடுவித்தீராயின் அப்போது நீரே எமக்குப் பிரானுவீர்" என்று சொல்லி யாரையும் வினவுவோமல் லோம் எனப் பொருள் கொள்க. (4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெந்தநீ றருங்கலம் விரதி கட்கெலாம்
அந்தணர்க் கருங்கல மருமறை யாறங்கந்
திங்களுக் கருங்கலந் திகழு நீண்முடி
நங்களுக் கருங்கலம் நமச்சி வாயவே.

அரும்பத விளக்கம்: விரதிகள் - விரதமுடையோர், பாசுபதம் முதலிய உயர்ந்த விரதங்களை அநுட்டிக்கும் தவத்தோர். ஆறு அங்கம் - சிட்சை, வியாகரணம், சந்தசு, நிருத்தம், சோதிடம், கற்பம் என்னும் ஆறு சாத்திரங்கள். வேதங்களின் உட்பொருளை யுணர்ந்து கொள்ளவும் அவை கூறும் கருமங்களை முறைப்படி செய்யவும் இச் சாத்திரங்களின் அறிவு இன்றியமையாதிருத்தலின் இவை வேதாங்கங்கள் என்று பெயர் பெற்றன. பெரும்பான்மையான கிரியைககள் கற்பம் (கல்ப சூத்திரம்) என்னும் சாத்திர விதிப்படி நிகழ்தலின், ஆறு சாத்திரத் தொடர்பான கிரியைகள் என்னும் பொருளில் இவற்றுக்குச் சடங்கு என்னும் பெயர்வழக்கு ஏற்பட்டது. (ஷட் + அங்கம் = ஷடங்கம்; சடங்கு) நங்களுக்கு - எங்களுக்கு.

பொருள்: விரதமநுட்டிப்போருக்கெல்லாம் அரிய அணிகலமாவது தீயின்கண் நீற்றப்பட்ட திருநீறேயாகும். பிராமணர்களுக்கு அணிகலமாவது அரிய வேதங்களும் அவற்றின் அங்கங்களுமேயாகும். எங்களுக்கு அரிய அணிகலமாவது நமச்சிவாய என்னும் திருவைந்தெழுத்தாகும். (5)

சலமிலன் சங்கரன் சார்ந்த வர்க்கலால்
நலமில னொடொறு நல்கு வானலன்
குலமில ராகினுங் குலத்துக் கேற்பதோர்
நலமிகக் கொடுப்பது நமச்சி வாயவே.

அரும்பத விளக்கம்; சலம் - மாற்றம்; வெறுப்பாகிய மனமாற்றம். சங்கரன் (சம் + கரன்) சுகத்தைச் செய்பவன். நலன் - நன்மை. குலம் - உயர்குலத்திற்குரிய சிறப்பு.

'சங்கரன் சார்ந்தவர்க்கு அல்லால் நலம் இலன்; நாடொறும் நலம் நல்குவான்; சலம் இலன்' என முன்னடிகளைக் கொண்டு கூட்டுக.

பொருள்: சங்கரனுகிய சிவபிரான் தன்னைச் சார்ந்தவர்களுக்கன்றி (சாராதவராகிய பிறர்க்கு) நன்மை செய்யாதவர். (சார்ந்தவர்க்கு) நம்மை செய்பவர். (ஆயினும், எவரிடமும்) வெறுப்பற்றவர்: குலச்சிறப்பில்லாதவருக்கும் நற்குலத்தார்க்குரிய நற்பண்புகளைக் கொடுப்பது நமச்சிவாய என்னும் திருமந்திரமே;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நலம் இலன் நண்ணார்க்கு; நண்ணினர்க்கு நல்லன்; சலம் இலன்; பேர் சங்கரன்" என்னும் திருவருட்பயனை ஒப்புநோக்குக. (6)

வீடினா ருலகினில் விழுமிய தொண்டர்கள்
கூடினா ரந்நெறி கூடச் சென்றலும்
ஓடினே னோடிச்சென் றுருவங் காண்டலும்
நாடினே னாடிற்று நமச்சி வாயவே.

அரும்பத விளக்கம்: வீடினார் - அழிந்தார்கள். வீடுதல் - விழுதல், அழிதல். விழுமிய - சிறந்த. காண்டலும் - கண்டவுடன். நாடினேன் - தேடினேன், ஆராய்ந்தேன். நாடிற்று - நாடிய பொருள் (வினையாலணையும் பெயர்)

பொருள்: (தொண்டரல்லாதவர்) இந்த உலகத்தில் அழிந்தார்கள். சிறந்த தொண்டர்கள் (இறைவனைச்) சேர்ந்தார்கள். (நானும்) அந்த வீட்டுநெறியைச் சேருமாறு செல்லுதலும் ஓடினேன். விரைந்து சென்று அத்திருவத்தைக் கண்டபோது (அதன் உண்மையை) ஆராய்ந்தேன். நான் நாடிய பொருள் நமச்சிவாய என்னும் ஐந்தெழுத்து மந்திரமேயாம். (7)

இல்லக விளக்கது இருள் கெடுப்பது
சொல்லக விளக்கது சோதி யுள்ளது
பல்லக விளக்கது பலருங் காண்பது
நல்லக விளக்கது நமச்சி வாயவே.

அரும்பத விளக்கம்: இல்லகம் - வீட்டினுள்ளிடம். அகவிளக்கு - உள்விளக்கு. மனவிளக்கு. சோதி - சிவஞான ஒளி. பல்லக விளக்கு - பல இடத்துமுள்ள விளக்கு. சூரியன், சந்திரன், அக்கினி என்னும் முச்சுடர்கள்.

பொருள்: வீட்டினுள்ளே விளக்கு எனப்படுவது புற இருளைப் போக்குவது. சொல்லப்பட்ட உள்ளத்து விளக்காவது சிவஞானப் பிரகாசத்தையுடையது. பல இடத்திலும் விளக்காவது பலருங் காணும் முச்சுடர் விளக்குகளாம். (இவற்றுள்) நல்ல மன விளக்காயுள்ளது நமச்சிவாய என்னும் திருமந்திரமாகும். (8)

முன்னெறி யாகிய முதல்வன் முக்கணன்
தன்னெறி யேசர ணாதல் திண்ணமே
யந்நெறி யேசென்றங் கடைந்த வர்க்கெலாம்
நன்னெறி யாவது நமச்சி வாயவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரும்பத விளக்கம்: முன்னெறி - எல்லா நெறிக்கும் முற்பட்ட தான சன்மார்க்கம். சரண் ஆதல் - சரணடைதல், புகலடைதல். அடைந்தவர் - சிவத்துவப் பேறு பெற்றவர்.

பொருள்: எல்லா நெறிகளுக்கும் முற்பட்டதும் முக்கண் முதல்வனது நெறியுமாகிய சன்மார்க்கத்தையே நாம் புகலடைதல் நிச்சயமாகும். அம் முன்னறியைச் சென்று சேர்ந்து சிவத்துவப் பேறு பெற்ற முத்தருக்கெல்லாம் (அம் முன்னெறியைச் சேர்தற்கு) நல்ல வழியாயிருந்தது நமச்சிவாய என்னுந் திருமந்திரமேயாம். (9)

மாப்பிணை தழுவிய மாதொர் பாகத்தன்
பூப்பிணை திருந்தடி பொருந்தக் கைதொழ
நாப்பிணை தழுவிய நமச்சி வாயப்பத்
தேத்தவல் லார்தமக் கிடுக்க ணில்லையே.

திருச்சிற்றம்பலம்

அரும்பத விளக்கம்: பிணை - பெண்மான். தழுவிய - போன்ற. மாது - உமையம்மை. பூப் பிணை - பூமாலை, பிணைக்கப்பட்டது பிணை. (முதனிலைத் தொழிற் பெயர்) ஏத்த வல்லார் - துதிக்க வல்லவர்கள்.

பொருள்: பெருமை வாய்ந்த பெண்மான் போன்ற உமையம்மையை இடப்பாகத்திலுள்ள இறைவனது பூமாலை பொருந்திய திருவடியைப் பொருத்தமாகக் கை கூப்பித் தொழுதற்கு சொற்களால் பிணைக்கப்பட்ட நமச்சிவாயப் பத்து என்னும் இத்திருப்பதிகத்தை ஓதித் துதிக்க வல்லவர்களுக்குத் துன்பம் இல்லையாம். (10)

இத் திருப்பதிகம் நாலாந் திருமுறையில்
அடங்கியது.

இதற்குரிய பண் காந்தார பஞ்சமம்.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச்செய்த

# திருக்கேதீச்சரப் பதிகம்

திருச்சிற்றம்பலம்

நத்தார்படை ஞானன்பசு வேறிந்நனை கவிழ்வாய்
மத்தம்மத யானையுரி போர்த்தமண வாளன்
பத்தாகிய தொண்டர்தொழு பாலாவியின் கரைமேல்
செத்தாரெலும் பணிவான்றிருக் கேதீச்சரத் தானே.

அரும்பத விளக்கம்: நத்து-நந்து-சங்கு. ஞானன்-ஞானமுடையவன், ஞானி. பசு - இடபம். பசுவேறி - இடபத்தில் ஏறியவர், இடபாரூடர். நனை கவிழ் வாய் - நனைந்த கவிழ்ந்த வாய். மத்தம் - களிப்பு. உரி-தோல். பத்து (பற்று) - அன்பு. செத்தார் எலும்பு அணிவான் - (ஊழி முடிவில்) இறந்த பிரம விட்டுணுக்களின் எலும்புகளை அணிபவன். நத்தார் படை ஞானன் என்னுந் தொடர் பலவாறு பொருள் கொள்ளப்படுகிறது:

(1) நத்து ஆர் படை ஞானன் - சங்காகிய படையை ஏந்திய ஞானியாகிய திருமால்.

(2) நத்து ஆர்பு அடை ஞானன் - (தொண்டர்கள்) அன்பு நிறைந்து அதனால் அடையப்பெறும் ஞானவடிவினனாகிய சிவபிரான். (நத்து - அன்பு.)

(3) நத்து ஆர் படை ஞானன் - அன்பு பொருந்திய பூதப் படையை உடைய ஞானரூபியான சிவபிரான்.

பொருள்: சங்காகிய படையைத் தாங்கிய ஞானியாகிய திருமால் என்னும் இடபத்தில் ஏறியவரும், மதநீரால் நனைந்ததும் கவிழ்ந்திருப்பதுமாகிய வாயினையும் களிப்பினையுமுடைய மதயானையினது தோலைப் போர்த்த நித்திய கல்யாணரும், இறந்த பிரம விட்டுணுக்களின் எலும்புகளை அணிந்தவருமாகிய சிவபெருமான், அன்பு மிக்க தொண்டர்கள் தொழும் பாலாவியாற்றங்கரையிலுள்ள திருக்கேதீச்சரத்தில் எழுந்தருளியிருக்கின்றான்.

மழுவாளன் எனவும் பாடபேதமுண்டு. (மழு - மழுவாயுதம்) செத்தாரெலும் பணிவான் என்றதனால் பிரம விட்டுணுக்களின் நிலையாமையும் சிவபிரானது முழுமுதற்றன்மையும் உணர்த்தப்பட்டன. (1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடுவார்பொடி நீறுந்நல துண்டப்பிறை கீளுங்
கடமார்களி யானையுரி யணிந்தகறைக் கண்டன்
படவேரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேல்
திடமாவுறை கின்றான்றிருக் கேதீச்சரத் தானே.

அரும்பத விளக்கம்: சுடு ஆர் பொடி - சுடுதலைப் பொருந்திய பொடி. துண்டப் பிறை - துண்டுபட்ட சந்திரப் பிறை. கீழ் - கச்சை. கடம் - மதம். கண்டம் - தொண்டை. கறைக் கண்டன் - நீல கண்டன். மடவாள் - பெண். படம் ஏர் இடை மடவாள் - பாம்பின் படம் போலும் அழகிய இடையினையுடைய உமையம்மை.

பொருள்: சுடப்பட்ட பொடியாகிய திருநீற்றையும், அழகிய பிறைத் துண்டையும் கச்சையாடையையும் மதங் கொண்ட களி யானையின் தோலையும் அணிந்தவரும், நஞ்சுண்ட கண்டத்தவரு மான சிவபிரான், பாம்பின் படம்போன்ற அழகிய இடையுடைய உமையம்மையோடு பாலாவியாற்றின் கரைமேலுள்ள திருக்கேதீச் சரத்தில் நிலையாக எழுந்தருளியிருக்கின்றார்.

பிறைக் கீளும் என்னும் பாடத்துக்குப் பிறையின் கூறு எனப் பொருள் கொள்க. (2)

அங்கம்மொழி யன்னாரவ ரமரர்தொழு தேத்த
வங்கம்மலி கின்றகடல் மாதோட்டநன் நகரில்
பங்கஞ்செய்த பிறைசூடினன் பாலாவியின் கரைமேல்
செங்கண்ணர வசைத்தான்திருக் கேதீச்சரத் தானே.

அரும்பத விளக்கம்: வங்கம் - மரக்கலம். செங்கண் அரவு அசைத்தான் - சிவந்த கண்களையுடைய பாம்பினை (அரைக்கச்சாகக்) கட்டியவன். பங்கம் செய்த பிறை - குறைபட்டதாகிய இளம்பிறை. இப்பாடலின் முதலடிக்குப் பலவாறு பொருள் கூறப்படுகிறது:

(1) அங்கம் மொழி அன்னாரவர் அமரர் தொழுது ஏத்த - வேத வேதாங்களை ஓதுகின்ற அந்தணர்களும் தேவர்களும் வணங்கித் துதிக்க.

(2) அங்கம் ஒழி அன்னாரவர் அமரர் - (சிவபிரானது நெற்றிக் கண் நெருப்பினால்) சரீரத்தை இழந்தவனாகிய அந்த மன்மதனும் அவர்போன்ற வேறு தேவர்களும்;

(3) 'அங்கம் ஒழி அந் நாள் அரவமரர் தொழுதேத்த' எனப் பாடங் கொண்டு, (திருமாலினால் வெட்டுண்டு உடல் இரு கூறாகிய அந்த நாளில் (அமிர்த முண்டமையால் இறவாமல்) பாம்புடலும் தேவ உடலும் இணைந்து பெற்றுக் கொண்டவர்களான இராகு கேதுக்கள் வணங்கித் துதிக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று பொருள் கூறி, கேது வழிபட்ட காரணத்தால் கேதீச்சரம் எனப் பெயர்பெற்றதென்று கூறு ந் தலவரலாற்றுக்கு இதனைச் சான்றாகக் காட்டுவர்.

பொருள்: (தக்கன் சாபத்தால்) பங்கப்பட்ட பிறைச் சந்திரனைச் சூடியவரும், பாம்புக் கச்சையணிந்தவருமான சிவபிரான் வேத வேதாங்கங்களை ஓதும் அந்தணரும் தேவரும் வணங்கித் துதிக்கத் தோணிகள் நிறைந்து நிற்கும் கடல்சூழ்ந்த மாதோட்டமென்னும் நகரிலுள்ள திருக்கேதீச்சரத் தலத்தில் எழுந்தருளியிருக்கின்றார். (3)

கரியகறைக் கண்டன்நல்ல கண்மேலொரு கண்ணான்
வரியசிறை வண்டியாழ்செயு மாதோட்டநன் னகருள்
பரியதிரை யெறியாவரு பாலாவியின் கரைமேல்
தெரியும்மறை வல்லான்றிருக் கேதீச்சரத் தானே.

அரும்பத விளக்கம்: நல்ல கண்மேல் ஒரு கண்ணான் - அழகிய கண்களின் மேல் (நெற்றியில்) ஒரு கண்ணையுடையவன். வரிய சிறை வண்டு - வரிகளோடு கூடிய சிறகினையுடைய வண்டுகள். (வண்டு + யாழ் செயும் = வண்டியாழ் செயும்) எறியா வரும் - எறிந்து வருகின்ற.

பொருள்: (நஞ்சுண்டதால்) கரியதாய் மறுப்பட்ட கழுத்தினையுடையவரும், அழகிய கண்களின்மேல் நெற்றிக் கண் ஒன்றுயுடையவரும், ஆராயப்படுகின்ற வேதங்களில் வல்லவருமான சிவபெருமான், சிறையாரும் வரிவண்டு யாழோசைபோல் ஒலிக்கும் மாதோட்ட நகரில், பெரிய திரைகளை எறிந்துவரும் பாலாவியாற்றங் கரையிலுள்ள திருக்கேதீச்சரத் தலத்தில் எழுந்தருளியிருக்கின்றார். (4)

அங்கத்துறு நோய்களடி யார்மேலொழித் தருளி
வங்கம்மலி கின்றகடல் மாதோட்டநன் னகரில்
பங்கம்செய்த மடவாளொடு பாலாவியின் கரைமேல்
தெங்கம்பொழில் சூழ்ந்ததிருக் கேதீச்சரத் தானே.

அரும்பத விளக்கம்: அங்கத்து உறு நோய்கள் - உடலில் வரும் நோய்கள். அடியார் மேல் அங்கத்துறு நோய்கள் ஒழித்தருளி எனக் கூட்டுக. பங்கம் செய்த மடவாள் - தமது உடலிற் பங்கு கொண்ட உமாதேவி. தெங்கம் பொழில் - தென்னஞ் சோலை.

பொருள்: தம் அடியார்களது உடலில் வரும் நோய்களை நீக்கியருள்பவரான சிவபிரான், தம்முடலிற் பங்குகொண்டிருக்கும் உமையம்மையுடனே, தோணிகள் நிறைந்துள்ள கடல் சூழ்ந்த மாதோட்ட நகரில், பாலாவியாற்றங் கரையிலுள்ள தென்னஞ் சோலை சூழ்ந்த திருக்கேதீச்சரத் தலத்தில் எழுந்தருளியிருக்கின்றார்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெய்யவினை யாயவடி யார்மேலொழித் தருளி
வையம்மலி இன்றகடல் மாதோட்டநன் னகரில்
பையேரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேல்
செய்யசடை முடியான்றிருக் கேதீச்சரத் தானே.

அரும்பத விளக்கம்; வெய்ய வினையாய - கொடிய தீவினைகள் வையம் மலிகின்ற - உலகத்தைச்செழிப்படையச் செய்கின்ற. செய்ய சடை முடியான் - சிவந்த சடையை முடியாகவுடையவர். பை ஏர் இடை - பாம்பின் படம்போன்ற இடை.

பொருள்; அடியார் மீதுள்ள கொடிய வினைகளை ஒழித்தருளுப வரும், சிவந்த சடாமுடியை உடையவருமான சிவபிரான், பூமியை வளம்படுத்துகின்ற கடல்சூழ்ந்த மாதோட்ட நகரில் பாலாவியின் கரையிலுள்ள திருக்கேதீச்சரத் தலத்தில் அழகிய இடையினை யுடைய உமையம்மையோடு எழுந்தருளியிருக்கின்ருர். (6)

ஊனத்துறு நோய்களடி யார்மேலொழித் தருளி
வானத்துறு மலியுங் கடல் மாதோட்டநன் னகரில்
பானத்துறு மொழியாளொடு பாலாவியின் கரைமேல்
ஏனத்தெயி றணிந்தான்றிருக் கேதிச்சரத் தானே.

அரும்பத விளக்கம்: ஊன் - ஊனுலாகிய உடல். (அத்து சாரியை) வால் நத்து உறு மலியும் - வெண்மையான சங்குகள் மிக வும் அதிகரித்துள்ள. நத்து - நந்து - சங்கு. பால் நத்துறும் மொழியாள் - பாலும் (தனது சுவையை) விரும்புதற்குக் காரண மான இனிய மொழியினையுடையவளான அம்மை, ஏனம் - பன்றி. எயிறு - பல். (பன்றிக் கொம்பு எனப்படுவது.)

பொருள்; தம் அடியவர்களது உடலில் வரும் நோய்களை நீக்கி யருளுபவரும், திருமாலாகிய பன்றியின் எயிற்றினை அணிந்தவரு மாகிய சிவபிரான், பாலும் இனிமையை விரும்புதற்குக் காரண மான இனியமொழிபேசும் உமையுடனே, வெண் சங்குகள் மிக மலிந்த கடல்சூழ்ந்த மாதோட்ட நகரில் பாலாவியாற்றின் கரை யிலுள்ள திருக்கேதீச்சரத் தலத்தில் எழுந்தருளியிருக்கின்ருர்.

வராக அவதாரம் செய்த திருமால் செருக்குற்று மயங்கிய போது சிவபிரான் அப்பன்றியின் கொம்பை முறித்து அடக்கித் தமது ஆற்றலைப் புலப்படுத்தினுர். திருக்கேதீச்சரத்து இறைவன் தம்மடியவரின் உடல் நோய்களையும், உயிர் நோய்களையும் நீக்கி யருளும் வைத்தியநாதனுய் விளங்குமுண்மை இம்மூன்று திருப் பாடல்களிலும் உணர்த்தப்பட்டுள்ளது. (7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டன்னழ காகவரை தன்மேலர வார்த்து
மட்டுண்டுவண் டாலும்பொழின் மாதோட்டநன் னகரில்
பட்டவரி நுதலாளொடு பாலாவியின் கரைமேல்
சிட்டன்நமை யாள்வான்றிருக் கேதீச்சரத் தானே.

அரும்பத விளக்கம்: அட்டன் - எட்டுப் பொருள்களின் வடிவ மானவன். [அட்ட (அஷ்ட) - எட்டு] எட்டு வடிவங்கள்: நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், ஆன்மா. இதனுல் இறை வன் அஷ்டமூர்த்தி என்னும் பெயர் பெறுவர். மட்டு - தேன். ஆலும் - ஒலிக்கும். பட்டவரி நுதலாள் - பட்டமென்னும் ஆபரண மணிந்த வரி பொருந்திய நெற்றியினையுடையாள். சிட்டன் (சிஷ்டன்) - மேலோன்; சிறந்தவன்.

பொருள்: அட்டமூர்த்தியாயுள்ளவரும், சிறந்தவரும், நம்மை ஆள்பவருமாகிய சிவபெருமான், வண்டுகள் தேனை யுட்கொண்டு ஒலிக்கின்ற சோலை சூழ்ந்த மாதோட்ட நன்னகரில் பாலாவியின் கரையிலுள்ள திருக் கேதீச்சரத்தில், அரையில் பாம்பை நாணுகக் கட்டிக்கொண்டு, நெற்றிப் பட்டமணிந்த உமையம்மையுடன் எழுந்தருளி யிருக்கின்றூர், (8)

மூவரென விருவரென முக்கண்ணுடை மூர்த்தி
மாவின்கனி தூங்கும்பொழின் மாதோட்டநன் னகரில்
பாவம்வினை யறுப்பார்பயில் பாலாவியின் கரைமேல்
தேவனெனை யாள்வான்றிருக் கேதீச்சரத் தானே.

அரும்பத விளக்கம்: மூவர் - பிரமா விட்டுணு உருத்திரன் என்னும் மும்மூர்த்திகள். இருவர் - சத்தி சிவம் என்னும் இருவர். முக்கண் - சந்திரன் சூரியன் அக்கினியாகிய மூன்று கண்கள்.

பொருள்: பிரமா விட்டுணு உருத்திரன் என்னும் மும்மூர்த்திகளுக்குக் காரணர் என்றும் சத்தி சிவம் என்னும் இருவடிவுடையவர் என்றும் அறியப்படுபவரும், முக்கண்ணுடைய மூர்த்தியும், என்னை யாளுந் தேவனுமான சிவபெருமான், மாங்கனி தூங்கும் சோலை சூழ்ந்த மாதோட்ட நகரில் பாலாவியின் கரையிலுள்ள திருக்கேதீச்சரத் தலத்தில் எழுந்தருளியிருக்கின்றூர், (9)

கறையார்கடல் சூழ்ந்தகழி மாதோட்டநன் னகருள்
சிறையார்பொழில் வண்டியாழ்செயுங் கேதீச்சரத்தானை
மறையார்புக ழூரன்னடித் தொண்டனுரை செய்த
குறையாத்தமிழ் பத்துஞ்சொலக் கூடாகொடு வினையே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரும்பத விளக்கம்: கழி - உப்பங்கழிகள்; ஊரன் - ஆரூரன். அடித் தொண்டன் - அடிமைத் தொண்டன். திருவடித் தொண்டன் எனினுமாம். உரை செய்த - உரைத்த - பாடிய. தமிழ் பத்து - தமிழ்ப் பாடல்கள் பத்து. (பதிகம்)

பொருள்; கரிய கடல் சூழ்ந்ததும் உப்பங்கழிகளுள்ளதுமான மாதோட்டமென்னும் நன்னகரில் சிறகுடைய வண்டுகள் யாழ் போல் ஒலிக்கும் சோலை சூழ்ந்த திருக்கேதீச்சரத்தில் எழுந்தருளியிருக்கும் பெருமானை வேதமோதும் புகழுடைய ஆரூரனென்னும் அடித் தொண்டனுகிய யான் பாடிய குறைவற்ற பத்துத் தமிழ்ப் பாட்டையும் ஒருவர் ஓதினுல் அவரைக் கொடிய வினைகள் சேர மாட்டா.

[இப்பதிகத்திலுள்ள மூன்றும், ஐந்தாம் பாடல்களில் ஒரே விதமான எதுகையிருப்பதாலும் இரு பாடல்களிலும் இரண்டாம் அடியும் மூன்றும் அடியின் முதற்சீரும் ஒரே மாதிரியாய் இருப்பதாலும் இப்பதிகத்தை மனனம்செய்யும் மாணவர் தடுமாறுவதுண்டு. முந்திய பாடல் ''அங்கம் மொழி'' என்று தொடங்கி, பங்கஞ்செய்த பிறையும் செங்கண்ணரவுமாகிய ஆபணரங்களைக் குறிக்கின்றது என்றும், 'அங்கத்துறு' என்னும் பிந்திய பாடல் பங்கஞ்செய்த மடவாள் தெங்கம் பொழில் சூழ்ந்த என்னுந் தொடர்களையுடையன என்றும் அவதானித்து மனனஞ் செய்தல் தடுமாருதிருக்க வழியாகும்.]

இத்திருப்பதிகம் ஏழாந் திருமுறையில் அடங்கியது;

இதற்குரிய பண் நட்டராகம்.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச் செய்த

# திருவாசகம்

திருவண்ணாமலையில் பாடியருளிய

## திருவெம்பாவை

### பதிக வரலாறு

மாணிக்கவாசக சுவாமிகள் திருவண்ணாமலைக்குச் சென்று சிவ பிரானை வணங்கிக் கொண்டு அத் திருப்பதியில் தங்கியிருந்தார். அப்போது மார்சழி மாதம் வருதலும் திருவாதிரைக்கு முந்திய பத்து நாட்களிலும் பெண்பிள்ளைகள் அதிகாலையில் விழித்தெழுந்து பாடிக் கொண்டே வீதிதோறும் சென்று ஏனைய மக்ளிரையும் துயிலு ணர்த்திக் கூட்டமாய்ச் சென்று தடாகத்தில் பாடிப்பாடி நீராடு தலையும், பின்பு அவர்கள் பாவை நோன்பு என்னும் சக்தி வழி பாடு செய்தலையும் கண்டார். அவர்களுடைய நகைச்சுவை நிறைந்த உரையாடல்களையும், பக்திப் பாடல்களையும் கேட்டார். அவர்களு டைய உரையாடலாயும் துதிப்பாடலாயும் அமையுமாறு இறைவன் பெருமையைப் புலப்படுத்தும் இத் திருவெம்பாவையைப் பாடி யருளினார். இவ்வரலாற்றைத் திருவாதவூரடிகள் புராணம்:-

மாதர்கொண் மாதரெல்லாம் மார்கழித் திங்கடன்னில்
ஆதிரை முன்னீரைந்தே யாகிய தினங்களெல்லாம்
மேதரு மனைகடோறும் மழைத்திருள் விடிவதான
போதிவர் தம்மிற்கூடிப் புனற்றட மாடல்செய்வார்.

அன்னவ ரியல்பு கண்டார் ஆங்கவர் புகன்றதாக
மன்னிய திருவெம்பாவை வாசகம் பேசிப் பின்னர்க்
கன்னியர் பாடியாடுங் கவின்கொளம் மனைகண்டன்னார்
பன்னிய பாடலாக அம்மனை பாடல் செய்தார்.

என்று தெளிவாகக் கூறுகின்றது. மகளிர் விளையாட்டுக்களும் வேலைகளுமாகிய அம்மனையாடல், ஊசலாடல், உந்தியாடல், தெள்ளேணங்கொட்டல், பூக்கொய்தல், சுண்ணமிடித்தல் என்பன நிகழும்போது அவர்கள் பாடும் பாடல்களாகப் பல பதிகங்களைப் மணிவாசகப்பெருமான் பாடியருளினார். இத் திருவெம்பாவையும் அவ்வகையில் அமைந்ததாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்பாவாய் என்னுந் தொடரினை இறுதியிலுடைய இருபது பாடல்களைக் கொண்ட இப்பகுதி திருவெம்பாவை எனக் காரணப் பெயர் பெற்றது. திருவாசகத்தின் ஒவ்வொரு பகுதிக்கும் அதன் உட்பொருளையுணர்த்தும் தலைப்புக்களைக் கொடுத்த முன்னோர், இப்பகுதிக்கு ''சத்தியை வியந்தது'' என்று உட்பொருள் குறித்திருத்தலால் இது பாவை நோன்போடு தொடர்புடையதென்பது தெளிவாகிறது. பாவை நோன்பியற்றுங் கன்னியர் ஒரு பாவையைப் பார்வதியாகப் பாவனைசெய்து வழிபடுவாராகையால், அதனையே எம்பாவாய் (எமது பாவையே) என முன்னிலைப்படுத்திப் பாடியது இப்பாடற் பகுதியெனக் காரணங்காட்டுவர் அறிஞர் சிலர். இவ்வாறன்றித் துயிலுணர்த்துங் கன்னியர் தம்முள்ளே ஒருவரையொருவர் எம்பாவாய் என விளித்தனர் எனக்கொண்டு பாவை போன்றவளே என்று பொருள் கூறுவர் பலர்.

திருவெம்பாவைக் காலம் எட்டாந் திருமுறையாகிய திருவாசகத்துக்குத் தனிச் சிறப்புத்தருங் காலமாகும். இக்காலத்தில் வேறு திருமுறைப்பாடல்கள் பாடப்படுவதில்லை. ''மார்கழித் திருவாதிரைக்கு முன்னுள்ள ஒன்பது தினங்களிலும் ஆன்மார்த்தம் பரார்த்தம் இரண்டிலும் திருவெம்பாவையே ஓதுதல் வேண்டும். திருவாதிரையன்று திருவெம்பாவை ஓதிய பின், வழக்கம்போலத் தேவாரம் முதலிய திருமுறைகளை ஓதுதல் வேண்டும்'' என்று நாவலர் பெருமான் அறிவுறுத்தியிருக்கின்றார்.

இருபது பாடல்களில் ஒவ்வொன்றிலுமுள்ள எட்டு அடிகளிலும் தனித் தனி ஒரே எதுகையிருப்பதும் பல பாடல்கள் பெண்களின் உரையாடலாய் அமைந்திருப்பதும் ஒரு புதுமையாகும்.

சோழ மன்னரது ஆட்சிக் காலத்தில் தூர கிழக்கு நாடுகளிலும் திருவெம்பாவையின் புகழ் பரவியது. சயாம் தேயத்தில் இக்காலத்திலும் மன்னரின் முடிசூட்டு விழாவின்போது ஓதப்படும் மந்திரங்களுள் திருவெம்பாவைப் பாடல்களும் அடங்கியிருக்கின்றன என்று அங்குச் சென்றோர் வியந்து கூறுகின்றனர்.

திருச்சிற்றம்பலம்

ஆதியு மந்தமு மில்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்டடங்கண்
மாதே வளருதியோ? வன்செவியோ நின்செவிதான்?
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதா ரமளியின்மே னின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனு மாகாள் கிடந்தாளென் னேயென்னே!
ஈதே யெந்தோழி பரிசேலோ ரெம்பாவாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள்: ஒளி பொருந்திய நீண்ட கண்களையுடைய பெண்ணே! முதலும் முடிவும் இல்லாத, அரிய பெரிய ஒளிப்பிழம்பாகிய சிவ பெருமானை நாங்கள் பாடுதலைக் கேட்டும் துயில்கின்றனையோ? (அல்லது) உன் காதுகள் (சொல்லுவதைக் கேளாத) வலிய காது களோ? மகாதேவனுடைய நெடிய கழலணிந்த திருவடிகளை நாங் கள்வாழ்த்திய வாழ்த்தின் ஓசையானது தெருவின்கண் கேட்ட அள விலேயே, ஒருத்தி பொருமியழுது, உடம்பு மறந்து, மலர்மிகுந்த படுக்கைமேலிருந்து புரண்டு விழுந்து, இவ்விதம் யாதொன்றும் செய்ய இயலாதவளாய்க் கிடக்கலாயினள் (அவள் நிலை அங்ஙன மாக) எங்கள் தோழியாகிய உன் தன்மை (விழித்தெழாதிருக்கும்) இத்தன்மையோ? இது என்ன வியப்பு? எம்முடைய பாவை போன்றவளே! சொல்வதைக் கேள்; ஆராய்வாயாக.

குறிப்பு: வாள் தடம் கண்மாதே என்பதை முதலிற்கொள்க. ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் சோதி என்பது அருணுசலம் என்றும் அருணகிரி என்றும் வழங்குந் திருவண்ணுமலையைக் குறிப் பால் உணர்த்தியது. கேட்டேயும் - கேட்டும். வளருதியோ - கண் உறங்குகின்ருயோ? நின்செவி வன்செவியோ என மாற்றுக. தான் - அசை. வார்கழல்கள் - நெடிய கழலணிந்த திருவடிகள். அமளி - படுக்கை. இங்ஙன் - இவ்வாறு. ஏதேனும் ஆகாள் கிடந் தாள் - யாதொன்றும் செய்ய இயலாதவளாய்க் கிடந்தாள். ஏலோ ரெம்பாவாய் - என்பதை ஏல் + ஓர் + எம் பாவாய் எனப் பிரித்துப் பொருள் கூறப்பட்டது. ஏல் - யாம் சொல்வதை ஏற்றுக் கொள்வாயாக; ஓர் - ஆராய்வாயாக; எம்பாவாய் - எம்முடைய பாவை போல்வாளே இவ்வாறன்றி ஏல் ஓர் என்பன அசைச் சொற்கள் என்பர் சிலர்.

கருத்துரை: பெண்ணே! வரும் வழியில் இறைவன் புகழை யாம் பாடிக்கொண்டு வந்ததைக் கேட்ட ஒரு பெண், அன்பு மிகுதியால், மெய்ம்மறந்து படுக்கையிலிருந்து கீழே விழுந்து வச மிழந்து கிடந்தாள். அங்ஙனமாக, யாம் வந்து உன்னை எழுப்ப வும், நீ எழுந்திராமல் கிடத்தல் என்ன ஆச்சரியம்! உன் காது செவிடோ? எங்கள் தோழியான உன் அன்பின் தன்மை இதுதானே?

பாசம் பரஞ்சோதிக் கென்பா யிராப்பகல் நாம்
பேசும்போ தெப்போதிப் போதா ரமளிக்கே
நேசமும் வைத்தனையோ? நேரிழையாய்! நேரிழையீர்!
சீசி யிவையுஞ் சிலவோ? விளையாடி
ஏசுமிட மீதோ? விண்ணோர்க ளேத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளுந்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனுர்க் கன்பார்?யா மாரேலோ ரெம்பாவாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள்: செவ்விய அணிகலன்களை அணிந்தவளே! மேலான ஒளி உருவினனாகிய சிவபெருமானிடம் இரவும் பகலும் அன்புடையேன் என்று கூறுவாய். நாங்கள் உன்னுடன் பேசும் இந்தக் காலம் ஏந்தக் காலம்? (என்று ஒரு பெண் வினவ, வேறொருபெண் பரஞ்சோதி மேல் வைத்த) நேசத்தை இந்த மலர் நிறைந்த படுக்கைமேல் நீ வைத்தனை போலும்! (என்று பரிகாசம் செய்ய, துயில் நீங்கி எழுந்தவள் கோபமாக) ''நேரிழையீர்; சீ சீ! (நீங்கள் பேசும் சொற்களுள்) இத்தகைய சொற்களும் சில உளவோ? நீங்கள் விளையாட்டாக ஒருவரையொருவர் இகழ்ந்து பேசுவதற்கு இதுவோ சமயம்?'' (என்று கடிந்துரைக்கின்றாள். அதுகேட்ட எல்லாப் பெண்களும் கேலிப் பேச்சை விட்டுவிட்டுக் கூறுவார்கள்:) தோழி! விண்ணோர்கள் வழிபடவும் கூசுகின்ற திருவடிகளைத் தாயாக நமக்குத் தந்தருள வந்தருளும் ஒளியுருவனும், சிவ புரத்தை யுடையவனும், தில்லைச்சிற்றம்பலத்துக்கு இறைவனுமாகிய சிவபெருமானிடத்து நீ கொண்ட அன்பு எத்தன்மையது! நாம் எத் தன்மையோம்! சொல்வதைக் கேள். சிந்திப்பாயாக.

குறிப்பு: இப் பாட்டு முதல் ஏழு பாட்டுக்கள் பெண்களின் உரையாடலாக இயற்றப்பட்டவை. அன்பு ஆர் யாம் ஆர் எனப் பிரிக்க. 'இராப் பகல் பாசம் பரம்சோதிக்கு என்பாய்' என்று மாற்றுக. பாசம் - அன்பு. போது - பொழுது - காலம்; போது ஆர்அமளி - மலர் நிறைந்த படுக்கை. திருவடியின் அருமை பெருமைகளைக் 'கூசு மலர்ப் பாதம்' என்பதும், அடியார்க்கு எளியனாகும் இயல்பைத் 'தந்தருள வந்தருளும்' என்பதும் விளக்குகின்றன. சோதிக்கு அமளிக்கு, ஈசனார்க்கு என்பவற்றில் நான்காம் வேற்றுமை ஏழாம் வேற்றுமைப் பொருளில் வந்தது.

கருத்துரை: ஒரு பெண் இன்னொருத்தியைத் துயிலெழுப்புபவள் ''பெண்ணே, இரவும் பகலும் உன் பாசமெல்லாம் பரஞ்சோதிக்குத் தான் என்று நீசொல்லிக் கொண்டிருந்தாயே. நாம் பேசும் இந்த நேரம் இரவு பகலல்லாத ஒருநேரமா?'' என்று வினவினாள். உடனே வேறொருத்தி'' இப்போது அந்தப் பாசத்தை இந்த மலர்ப் படுக்கைக்கு ஆக்கிவிட்டாயா? என்றாள் துயில் நீங்கிய பெண் ''நேரிழையீர், இப்படியும் நீங்கள் பேசலாமா? ஏசி விளையாட இதுவா சமயம்?'' என்று சினந்து கேட்டாள். உடனே மற்றவர்கள் ''அடாடா! தேவர்க்குங் கிட்டாத திருவடியைத் தந்தருளும் சிவபிரானிடத்து அன்பு கொண்ட நீ எங்கே! விளையாட்டுத் தன்மையுள்ள நாங்களெங்கே!'' என்று சொல்லிச் சமாதானம் செய்கின்றார்கள். (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தன்ன வெண்ணகையாய்! முன்வந் தெதிரெழுந்தென்
அத்தனா னந்த னமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீ ரீசன் பழவடியீர்! பாங்குடையீர்!
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ?
எத்தோநின் னன்புடைமை யெல்லோ மறியோமோ?
சித்த மழகியார் பாடாரோ நஞ்சிவனை?
இத்தனையும் வேண்டு மெமக்கேலோ ரெம்பாவாய்.

பொ—ள்: முத்துப் போன்ற வெண் பற்களை உடையவளே! இதற்கு முன் எல்லாம், எங்களுக்கு எதிராக எழுந்து வந்து, எனது தந்தை, இன்பவடிவினன், அமுதம் போன்றவன் என்று இறைவனை வாழ்த்தி வாயூறி இனிக்கப் பேசுவாய், இன்று எழுந்துவந்து உன் வாயிற்கதவைத் திறவா திருக்கின்றாய் (என்று வந்த பெண்கள் கேட்டதும், எழுந்தவள் பணிவாக) நீங்கள் இறைவன்பால் மிகுந்த பற்றுள்ளவர்கள், இறைவனது பழைய தொண்டர்கள், மிகுந்த உரிமை உடையவர்கள், புதியராய்வந்த அடியேங்களது சிறுமையை ஒழித்து, எங்களை ஆட்கொண்டால் அது கெடுதியாமோ? (என்று எதிர்வினா எழுப்பினாள். உடனே வெளியில் நிற்பவரில் சிலர் சில வினாக்களை வினாவினர்:) நீ அன்புடையாய் என்பது ஏமாற்றோ! உன் அன்புடைமையை நாங்கள் தெரியாதவர்களோ? மனந் தூயதாகப் பெற்றவர் நமது பெருமானைப் பாடமாட்டார்களா? (இறுதியாய் ஒருத்தி சமாதானம் கூறிமுடிக்கிறாள்.) எங்களுக்கு வேண்டியது (நீ பாடவேண்டும் என்னும்) இவ்வளவு தானே! (ஏல், ஓர், எம்பாவாய்,)

குறிப்பு: 'முன், எதிர் எழுந்து வந்து' எனவும் 'நின் அன்புடைமை எத்தோ?' எனவும் மாற்றுக. பத்து - பற்று; பாங்கு - உரிமை, எத்து - ஏமாற்று. அழகியார் - தூயவர்; இத்தனை - இவ்வளவு; பொல்லாதோ - பொல்லாததோ.

க—ரை:- துயில் எழுப்ப வந்தவர்கள் துயிலுகின்ற ஒருத்தியை நோக்கி ''பெண்ணே! முன்பெல்லாம் நீயாம் வருமுன்னமே எழுந்திருந்திருந்து சிவபெருமானை இனிமையுண்டாகத் துதித்து நிற்பாய், இன்று எழுந்துவந்து கதவைத் திறவா திருக்கின்றாயே'' என்றுகூறினார்கள். விழித்தெழுந்தவள், ''நீங்கள் இறைவன்பால் பத்தியுடையவர்கள், பழைய தொண்டர்கள், புதியவராய எமது இச் சிறுமையை நீக்கி ஆட்கொண்டால் உமக்குத் தீமையாகுமோ'' என்றாள். வந்தவர்கள் அவளை நோக்கி, ''எங்களை ஏமாற்றுகின்றனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோ? உன் அன்புடைமையை நாங்கள் அறியோமோ? நாங்கள் விரும்புவது இறைவன் புகழைப் பாடுவதன்றி வேறொன்றும் அன்று'' என்று கூறினர்கள். (3)

ஒண்ணித் திலநகையாய்! இன்னம் புலர்ந்தின்றோ?
வண்ணக் கிளிமொழியா ரெல்லாரும் வந்தாரோ?
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோ மவ்வளவுங்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே!
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாமாட்டோம் நீயேவந்
தெண்ணிக் குறையிற் றுயிலேலோ ரெம்பாவாய்.

பொருள்:-

துயிலுணர்த்தும் ஒரு பெண்:- ''முத்துப் போன்ற பல்லினை உடையாய், உனக்கு இன்னும் விடியவில்லையா?

துயில் நீத்தும் படுக்கையை விட்டு எழும்பாத பெண்:- ''அழகிய கிளிமொழி மாதர் எல்லாரும் வந்துவிட்டார்களா? ''

வந்தவர்களுள் ஒருத்தி:- ''வந்தவர்களைக் கணக்கிட்டுகொண்டு உள்ளபடி சொல்லுகிறோம். அதுவரையும் கண்ணுறங்கிக் காலத்தை வீணே கழிக்காதே.''

வேறொருத்தி:- ''விண்ணுலகத்தார்க்கு ஒப்பற்ற அருமருந்தை வேதங்களால் சொல்லப்படுகின்ற மேலான பொருளை, கண்ணுக்கு இனியவரை நாம் பாடி, மனம் நெகிழ்ந்து உருகவேண்டும். ஆகையால் நாங்கள் வந்திருப்பவர்களை எண்ணமாட்டோம், நீயே எழுந்து வந்து அவர்களை எண்ணிப்பார், குறையுமானல் மீண்டும் போய் உறங்குவாயாக''. (ஏல் ஓர் எம்பாவாய்)

குறிப்பு:- நித்திலம் - முத்து. வண்ணம் - அழகு. எண்ணிக்கொடு - எண்ணிக்கொண்டு. சொல்லுகோம் - சொல்லுவோம். உள் நெக்கு - மனங் கனிந்து, உருக - உருவேண்டும்.

க—ரை: துயிலெழுப்பவந்த பெண்களுள் ஒருத்தி, வீட்டினுள் துயின்று கொண்டிருந்த ஒருத்தியை விளித்து ''உனக்கு இன்னமும் விடிந்திலதோ?'' என்று வினவ, அவள் படுக்கையில் கிடந்தவாறே,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''வரவேண்டியவர்கள் எல்லோரும் வந்துவிட்டார்களா?'' என்று திருப்பி வினவினள். அப்போது ஒரு பெண் ''எல்லாரும் வந்தார்களா என்று எண்ணிப்பார்த்துச் சொல்லுவோம். அதற்கிடையே நீ கண்ணுறங்கிக் காலத்தை வீணே கழியாதே'' என்றாள். இன்னொருத்தி நாம் இறைவனைப் பாடி உருகவேண்டும். ஆகையால் வந்தவர்கள் தொகையை எண்ணிச் சொல்ல எம்மால் முடியாது; நீயே வந்து எண்ணிக்கொள். குறைந்தால் நீ மீண்டும் போய் உறங்கலாம்'' என்று பரிகசிக்கிறாள். (4)

மாலறியா நான்முகனுங் காணா மலையினைநாம்
போலறிவோ மென்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ! கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே யறிவரியான்
கோலமும் நம்மையாட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்
றோல மிடினு முணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய்.

பொருள்:- மயிர்ச் சாந்தணிந்த கூந்தலுடையாய்! திருமாலும் அறியாத, பிரமனும் காணாத அக்கினிமலையாய் நின்ற பெருமானை, நாமா அறிய வல்லோம்! என்று (பணிவுடையன போன்றுள்ள) பொய்மொழிகளைப் பேசுகின்ற, பாலும் தேனும்போலும் இனிய சொற்கள் ஊறுகின்ற வாயையுடைய வஞ்சகீ! வெளிவாயிற் கதவைத் திறவாதிருக்கிறாய்! மண்ணுலகும் விண்ணுலகும் பிறவுலகும் அறிதற்கரியவரது திருக்கோலத்தையும் நம்மை அடிமைகொண்டருளிச் சீராட்டுகின்ற சீலத்தையும் பாடி, சிவனே சிவனே என்று நாம் ஓலம் இட்டாலும் அதைக் கேட்டுணராமலும் துயில் நீங்காமலும் இருக்கின்றாயே! இதுவோ உன்தன்மை?

குறிப்பு: உன்ன - நினைக்க. படிறு- கபடம், வஞ்சகம். கோதாட்டுதல் - சீராட்டுதல். கோது - குற்றம், அதனைப் பாராட்டாமை. உணராய் உணராய் - என்பதில் முன்னையது அறியாய் என்னும் பொருட்டு; பின்னையது துயிலுணராய் என்னும் பொருட்டு. ஞாலமே விண்ணே பிறவே என்பதில் 'ஏ' எண்ணிடைச் சொல். போல் - அசை. (ஒப்பில் போலி)

க—ரை: திருமாலும் பிரமனும் காணாத மலையுருவான இறைவனை நாமா அறிவோமென்று பணிவோடு இனிக்கப் பேசுகின்ற வஞ்சகியே, இறைவனது திருக்கோலத்தையும் எம்மை அடிமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டருளிய பெருங்குணத்தையும் புகழ்ந்து பாடி, சிவனே என்று நாம் ஓலமிடவும் கேட்டுத் துயிலெழாதிருக்கின்றாய். கதவையும் திறவாதிருக்கின்றாய். இதுவோ உன் இயல்பு? (5)

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே யெழுப்புவ னென்றலு நாணமே
போன திசைபகரா யின்னம் புலர்ந்தின்றோ?
வானே நிலனே பிறவே யறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே யுருகா யுனக்கே யுறுமெமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோ ரெம்பாவாய்.

பொ—ள்: பெண்ணே! நீ நேற்று "உங்களை நாளைக் காலையில் நானே வந்து துயில் எழுப்புவேன்" என்று சொன்ன சொல்லானது நாணமல்போன திக்கைச் சொல்வாயாக. இன்னமும் விடிந்திலதோ? விண்ணுலகும் மண்ணுலகும் பிறவும் அறிதற்கருமையானவன் தானாகவே வலியவந்து, எம்மைக் காத்து, அடிமைகொண்டருளுகின்ற பெருமைமிக்க திருவடிகளைப் பாடிவந்தவர்களாகிய எங்களுக்கு நீ உன் வாய் திறந்து ஒன்றும் பேசாது தூங்குகிறாய் உடலும் உருகப்பெறாய். உனக்கு இது பொருந்துமா? நமக்கும் பிறர்க்கும் தலைவனாகிய பெருமானை (எம்முடன் சேர்ந்து) பாடுவாயாக.

குறிப்பு: மானே - மானின் பார்வை போலும் மருண்ட பார்வையுடைய பெண்ணே. நென்னல் - நேற்று. நென்னலையென ஐகாரச் சாரியை பெற்றது. தலையளித்து - காத்து. வான் - மேலாகிய. உறும் - பொருந்தும். தங்கோன் (ஒரு சொல்) - தலைவன்.

க—ரை: மாதே! நீ நேற்று எங்களிடத்தில் "நாளை நானே வந்து உங்களை எழுப்புவேன்" என்று கூறிய சொல் எத்திசையில் போய் ஒழித்தது? இன்னம் உனக்கு விடிந்திலதோ? இறைவனைப் பாடிக்கொண்டு வந்த எங்களுக்கு ஒருசொல்லும் சொல்லாதிருக்கிறாய். உடம்புருகாதிருக்கிறாய். உனக்கே இது தகுமா? எம்மொடு கூடி இறைவனைப் பாட வருவாயாக." (6)

அன்னே யிவையுஞ் சிலவோ பலவமரர்
உன்னற் கரியா னொருவ னிருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாவென் னாமுன்னந் தீசேர் மெழுகொப்பாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னானை யென்னரைய னின்னமுதென் றெல்லோமுஞ்
சொன்னோங்கேள் வெவ்வேறா யின்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய்.

*பொருள்:-* அம்மா! (உன்னிடம் நல்லியல்புகளன்றித் தீய இயல் புகளும் சில உள்ளனவோ? தேவர்களால் நினைத்தற்கும் அரியவர், ஒப்பற்றவர், பெருஞ் சிறப்புடையவர், அத்தகையவரின் திருச் சின்னங்களின் ஒலிகள் கேட்டதும் நீ "சிவசிவ" என்று வாயைத் திறப்பாய், தென்னவனே என்று சொல்லுமுன்னம் தழலிடைப் பட்ட மெழுகுபோல் உருகுவாய். (ஆனால் இப்பொழுது) எனது உயிர்த் தலைவர், எனது வேந்தர், இன்னமுதானவர் என்று நாங்கள் எல்லோரும் தனித்தனியே சொல்லினோம். இன்னமும் தூங்குகின் றாயோ? அன்பில்லாத மனத்தையுடைய அறிவிலிகள்போலச் சும்மா கிடக்கின்றாயே. உன் நித்திரையின் தன்மை இருந்தவாறு என்னே!

*குறிப்பு:-* வெவ்வேறாய்ச் சொன்னோம் எனமாற்றுக. உன்ன ற்கு - நினைத்தற்கு. தென்னன் - தென்னவன், தென்னாடுடைய சிவன். ஆனை - ஆன்+ஐ = உயிர்த்தலைவன், பிராணநாயகன், பசுபதி. அரையன் - அரசன். கிடத்தி - கிடக்கின்றாய். ஆல் அசை. சின்னம்- நாகசின்னம் காளம் முதலிய துளைக்கருவிகள்

*க—ரை:* அம்மா, இறைவனை நினைவூட்டும் ஒலிகளைக் கேட்ட அளவில் சிவ சிவ என்று கூறி மனம் உருகும் நீ, இப்போது நாங் கள் எல்லாரும் வந்து நின்று தனித்தனியே துதி செய்யவும், வன் நெஞ்சப் பேதையர்போல் கிடந்து உறங்குகின்றனையே. உனது துயி லின் தன்மை இத்தகையதா? (7)

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழி லியம்ப இயம்பும்வெண் சங்கெங்குங்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோங் கேட்டிலையோ?
வாழியீ தென்ன வுறக்கமோ? வாய்திறவாய்
ஆழியா னன்புடைமை யாமாறு மிவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற வொருவனை
ஏழைபங் காளனையே பாடேலோ ரெம்பாவாய்.

*பொ—ள்:* கோழிகள் கூவுகின்றன. மற்றும் பறவைகள் எவ் விடத்தும் ஒலிக்கின்றன. இசைக்கருவிகள் ஒலிக்கின்றன. வெண் சங்குகள் எவ்விடத்தும் முழங்குகின்றன. ஒப்பற்ற மேலான ஒளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுருவானவனும், ஒப்பற்ற மேலான அருளுடையவனுமாகிய சிவ பெருமானது நிகரில்லாத உயர்ந்த புகழ்களை நாங்கள் பாடினேம். அவற்றை நீ கேட்கவில்லையா? வாழ்வுடையாளே, இது என்ன உறக் கமோ? வாயைத்திறந்து பேசாதிருக்கிறாயே! பாற்கடலில் துயில்ப வரான திருமால் சிவபிரானிடத்து அன்புடையவர் என்பதும் இவ் வாறு (உன்னைப்போல்) அவரும் பள்ளிகொள்வதனால்தானோ? ஊழித் தலைவனாய் நின்ற ஒருவனை உமைபாகனைப் பாடுவாயாக.

குறிப்பு: சிலம்புதல்—ஒலித்தல், குருகு—பறவைக்குப் பொதுப் பெயர், "குருகு எங்கும் சிலம்பும்" என மாற்றுக. ஏழில்-ஏழிசைக் கும் இடமாயுள்ள நாகசின்னம் முதலிய முகவாத்தியங்கள், கேழ்-உவமை, கேழில் - (கேழ்+இல்) ஒப்பற்ற. வாழி அண்மை விளி. ஆழியான்-திருமால், பாற்கடலிற் பள்ளிகொள்பவர். (ஆழி-கடல்) சக்கரப்படையுடையவர். ஆழி-சக்கரம்)

க—ரை: "விடியற்காலத்தை உணர்த்தும் பல்வேறு ஒலிகள் எவ் விடத்தும் கேட்கின்றன. அன்றியும் இறைவனை நாம் புகழ்ந்து பாடு கிறோம். இவற்றுள் எதுவும் உனக்குக் கேட்கவில்லையா? இப்படியும் ஓர் அதிசயமான உறக்கமோ? திருமால் சிவனிடம் அன்புடைய வர் என்பதன் பொருள் உன் உறக்கத்தைப் பார்த்த பின்பு தான் விளங்கியது. விரைந்தெழுந்து இறைவனைப் பாடுவாயாக".

"உன் பாசமெல்லாம் பரஞ்சோதிக்கே என்றாய், இப்போது இந் தப் பேராரவாரத்துக்கும் கண்விழியாதிருக்கிறாயே. நித்திரைதான் பத்திக்கு அடையாளமோ? ஓகோ! திருமால் சிறந்த சிவபத்தர் என்ப தன் பொருள் இப்போதுதானே விளங்குகிறது" என்னும் நயமான நகைச்சுவை "ஆழியான் அன்புடைமை யாமாறும் இவ்வாறோ" என்ற கூற்றினுள் பொதிந்திருக்கிறது. (8)

முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடி யார் தாள்பணிவோ மாங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே யெங்கணவ ராவா ரவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே யெமக்கெங்கோ னல்குதியேல்
என்ன குறையு மிலோமேலோ ரெம்பாவாய்.

பொ—ள்; பழைய பொருள்களுக்கெல்லாம் பழமையான பொருளே! பின்னைய புதிய பொருள்களுக்கெல்லாம் புதிய பொரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளாயிருப்பவனே! இத்தன்மையையுடைய உன்னைத் தலைவனாகப் பெற்ற சிறந்த தொண்டர்கள் நாங்கள். உன்னுடைய அடியாரது சிறந்த பாதங்களையே வணங்குவோம். அவ்வாறே அவர்களுக்கு உரியவராவோம். அவர்களே எங்களுக்குத் தலைவராவார். அவர்கள் மகிழ்ந்து இட்ட கட்டளைப்படியே தொண்டராய் பணிசெய்வோம். இவ்வண்ணம் எங்கள் இறைவனே, எங்களுக்கு அருள் புரிகுவையாயின் எவ்வகையான குறைபாடும் இல்லாதவர்களாயிருப்போம்.

குறிப்பு: பேர்த்தும்-மீட்டும். அப்பெற்றி-அத்தன்மை. பழமையா யிருந்தது போலவே புதுமையாயும் இருப்பன் என்பது கருத்து. பாங்கு-உறவு, உரிமை, தொழும்பாய்-தொண்டராய்.

க—ரை: இறைவன் மிகப்பழையவனும் மிகப்புதியவனும் ஆவன். அவனுடைய அடியவருடைய திருவடிகளைப் பணிதலும், அவர்களை ஆசரித்தலும், அவர்களையே கணவராகப் பெற்றுக் கொள்ளுதலும், அவர்கள் ஏவற்பணிகள் செய்வதுமே எங்கள் வேணவா. இவற்றை அருளில் எங்களுக்கு ஒரு குறைபாடும் இல்லை என்பது நீராடிமுடித்த கன்னியரின் கூட்டுப் பிரார்த்தனையாகும். அவர்கள் செய்து கொள்ளும் சங்கற்பமாகவும் இது அமைகிறது.(9)

பாதாள மேழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியு மெல்லாப் பொருண்முடிவே
பேதை யொருபாற் றிருமேனி யொன்றல்லன்
வேதமுதல் விண்ணோரு மண்ணுந் துதித்தாலும்
ஓத வுலவா வொருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற் பிணாப்பிள்ளைகாள்!
ஏதவனூ ரேதவன்பே ராருற்றா ராரயலார்?
ஏதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய்.

பொ—ள்:- இறைவனுடைய திருவடிமலர்கள் கீழுலகம் ஏழி னும் கீழ்ச்சென்று (இவ்வளவின என்று சொல்லும்) சொல்லையும் கடந்துள்ளன. மலர் சூடிய திருமுடியும் (மேலுலகம் ஏழுக்கும் மேற் சென்று) எல்லாப் பொருள்களுக்கும் முடிவிலுள்ளது. அவர் உமையவ ஒருபாற் கொண்ட திருவுருவுடையவராயினும் இத்திருமேனி ஒன்று தான் உடையவரல்லர். வேதமுதல்வராயுள்ளவர். விண்ணவரும் மண்ணவரும் போற்றிப் புகழ்ந்தாலும் போற்றக் குறைபாப் புக ழுடைய ஒரு தோழனைத் தொண்டரின் உள்ளத்துள்ளார். சிவ பிரானது திருக்கோயிலில் (தொண்டு புரியும்) குற்றமற்ற குலத்துப் பெண் பிள்ளைகளே, அப்பெருமானுடைய ஊர் யாது? பேர் யாது? உறவினர் யார்? அயலவர் யார்? அவரைப் புகழ்ந்துபாடும் தன் மைதான் யாது? (எமக்குக் கூறுவீராக.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பு:- பாதாளம் - கீழுலகம். கீழுலகம் ஏழு: அதலம், விதலம், சுதலம். தலாதலம், மகாதலம், பாதாளம், திருவடி கீழுலகமேழினுங் கீழ்ச்சென்றது என்றதனுல் திருமுடி மேலுலக மேழினும் மேற்சென்றது என்னும் பொருள் வருவித்துரைக்கப்படும் மேலுலகு ஏழு: பூலோகம், புவலோகம், சுவலோகம், மக லோகம், சனலோகம், தவலோகம். சத்தியலோகம். உலவா (த-) குறையாத. ஒரு தோழம் தொண்டருளன் எனப் பாடங்கொண்டு, தோழம் என்னும் எண்ணிக்கையுடைய தொண்டர்களுள்ளவன் என்றும் பொருள் கொள்வர். (இலட்சம் கோடி என்பன போன்று பேரளவினைக் குறிப்பது தோழம் என்னும் சொல்.) பிணு - பெண். கோயிற் பிணுப் பிள்ளைகள் என்றது திருக்கோவிலிற் பணிபுரியும் உருத்திர கணிகையரைக் குறிக்குமென்றும், சாமானிய மகளிரை விட இவர்கள் இறைவனியல்புகளை நன்கறியும் வாய்ப்புடையரா கையினுல், இவர்களை வழியிற்கண்ட மற்றைப் பெண்கள் தம் ஐயந்தீர்க்க இவர்களை வினுவினரென்றும் அறிஞர் கூறுவர். உய ரிய தத்துவக் கருத்தமைந்த பாடல் இது.

க—ரை:- துயிலுணர்ந்தெழுந்தவர்கள் ஒருங்குகூடி நீராடச் செல்கின்றுர்கள். பொய்கைக் கரையிலே கோயிற்பிணுப்பிள்ளைக ளைக் கண்டதும் இறைவனைப் பற்றி ஒரு விடுகவி (நொடி) கூறி அதை விடுவிக்குமாறு விணுவுகிறுர்கள். அவர்கள் விடையளித்த தாக இப்பாட்டுக்களில் குறிப்பு ஏதும் இல்லை. ஆயினும், நாமாந் தரிதை (பெயர்மறைப்புடையது) என்னும் பிரகேளிகைப் பாக்கள் போல இப் பாட்டினுள்ளேயே விணுக்களுக்குரிய விடைகளையும் சமற்காரமாக மணிவாசகப் பெருமான் அமைத்து வைத்திருக்கின் றுரென்பர் அறிஞர் சிலர். விணுவும் விடைகளும் பின்வருமாறு:

''ஏது அவன் ஊர்?',

''பாதாளம்...........பொருள் முடிவே''

(அவனுடைய அடியும் முடியும் கீழுலகும் மேலுலகும் ஊடு விச் செல்லும்போது, பூவுலகில் ஒருரை மாத்திரம் அவனூர் என்று எப்படிச் சொல்ல முடியும்? ஆகையால் யாதும் அவன் ஊரே. அவன் 'ஓரூரனல்லன்.')

''ஏது அவன் பேர்?''

''பேதை ஒருபால், திருமேனி ஒன்றல்லன்''

(அம்மையப்பன், உமாபதி என்று அவனுக்குப் பெயர்கூற லாமாயினும் அதற்குக் காரணமான இத்திருமேனி ஒன்றைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் அவன் உரியனல்லன். அவர் 'காண் பல வேடர்'. அதனுல் ஒரு நாமமில்லாத அவனுக்கு ஆயிரந் திருநாமமும் சொல்வர். 'கேட்பான் புகில் அளவில்லை, கிளக்க வேண்டா'.)

''ஆர் உற்ருர்? ஆர் அயலார்?''

''வேதமுதல், விண்ணேரும் மண்ணும்......... ஒரு தொண்டருளன்''

(வேதங்களென்ற குடும்பத்துக்கு அவன் முதல்வன். உயிர்களுக்கெல்லாம் ஒப்பற்ற தோழன். தன் தொண்டர் நடுவுள் (-உள்ளத்துள்) இருப்பவன். தான் இருப்பதோடு தன் அடியவர்க்கும் அவர் விரும்பியவாறு 'அடியார் நடுவுள் இருக்கும் அருளைப் புரிபவன்.)

''ஏது அவனைப் பாடும் பரிசு?''

''பாதாளம்......... எல்லாப் பொருள் முடிவே''

(அவன் புகழும் அடிமுடிபோலவே மண்ணையும் விண்ணையும் கடந்தது. சொல்லில் அடங்காதது. (சொற்கழிவே.) ஆயினும் வேதோப நிடதம் முதலியன கூறுகின்ற எல்லாப் பொருளுக்கும் அவனே முடிவு. அந்த மரபில்வந்த ஆன்ருேர் பாடியவாறு பாடுதலே - வேதப்பொருள் பாடி, அப்பொருள் ஆமா பாடி, சூழ் கொன்றைத்தார் பாடி, ஆதி திறம் பாடி, அந்தம் ஆமா பாடி, பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளை தன் - திருவருட்சத்தியின் - பாதத் திறம் பாடுதலே அவனைப் பாடும் பரிசாகும்.) (10)

மொய்யார் தடப்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா! வழியடியோம் வாழ்ந்தோங்கா ணாரழல்போற்
செய்யா! வெண் ணீருடி! செல்வா சிறுமருங்குன்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா!
ஐயா' நீ யாட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்க ளுய்யும் வகையெல்லா முய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பா யெமையேலோ ரெம்பாவாய்.

பொ—ள்: என் ஐயனே! உமக்குப் பரம்பரைத் தொண்டராகிய நாம் வண்டு மொய்க்கும் அகன்ற பொய்கையிற் புகுந்து 'முகேர்' என்று ஒலி எழுமாறு கைகளால் நீரைக் குடைந்து முழுகியும் உமது திருவடிகளைப் புகழ்ந்து பாடியும் நல்வாழ்வு பெற்ருேம்; தீப்பிழம்பு போலச் செந்நிற முடையவரே, வெண்ணீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றணிந்தவரே, அருட்செல்வரே, சிற்றிடையும் மைதீட்டிய தடங் கண்ணுமுடைய உமையம்மைக்கு நாயகரே, எம் தலைவரே, நீர் உம் அடியாரை ஆட்கொண்டருளும் திருவிளையாட்டினால், உய்யவேண்டிய மற்ற அடியவர்கள் உய்வடையும் வகைகளிலெல்லாம் உய்தி பெற்றுவிட, நாமமட்டும் தப்பியிருக்கின்றோம். இதனால் நாம் வருந்தாவண்ணம் எம்மைக் காத்தருள்வீராக.

குறிப்பு:- பொய்கை - மனிதரால் தோண்டப்படாது இயற்கையாய் அமைந்த நீர் நிலை. முகேர் என்பது ஒலிக்குறிப்புச் சொல். செய்யன் - செம்மையன். வெண்ணீருடி என்பதனைப் பிறைசூடி என்பதுபோன்று பெயராகக் கொள்க. மருங்குல் - இடை. ஐயன் - தலைவன், தந்தை. எய்த்தல் - இளைத்தல், வருந்துதல். உய்த்தல் - மேற்கதி பெறுதல். உய்ந்து என்னும் செய்தென் எச்சத்தைச் செயவென் எச்சமாக மாற்றிப் பொருள் கொள்க. உய்ந்தொழிந்தோம் என்பதற்கு உய்ந்துவிட்டோம் என்று பொருள் கொண்டால் அது பின்னே 'எம்மை எய்யாமற்காப்பாய்' என்பதனோடு பொருந்தாமை காண்க. மணிவாசகப் பெருமான் மற்றையடியவர்கள் மேற்கதி பெற்றுய்ந்துவிடத் தாம்மட்டும் தவிர்ந்திருப்பதாகத் திருவாசகத்துள் வேறிடங்களிற் கூறுவதையும் காண்க.

க—ரை:- முந்திய பாட்டில் கோயிற் பணிப் பெண்களிடம் இறைவனியல்புகளை வினவிய கன்னியர், பின்பு பொய்கையில் இறங்கி நீராடிக்கொண்டே இறைவனைப் பிரார்த்திப்பதாக இப் பாட்டு அமைந்திருக்கின்றது ''எம்பெருமானே, உமது வழியடியாரான நாம் இந்தப் பொய்கை நீரிற் குடைந்தாடி உமது புகழ் பாடினோம். இதனால் நாம் நல்வாழ்வு பெற்றோம். செந்தழல் மேனியில் வெண்ணீறணிந்த எந்தையே, மையார் தடங்கண் உமை மடந்தைக்கு வாழ்வளித்த மணவாளரே, அடியவரை ஆட்கொள்ளும் உமது திருவிளையாட்டினால் அவர்கள் உய்வடைந்துவிட, நாம் மாத்திரம் தவிர்ந்துள்ளோமே! எம்மை வருந்தவிடாது காத்தருள்வீராக'' - என்பது அவர்கள் வேண்டுகோள். (11)

ஆர்த்த பிறவித் துயர்கெடநா மார்த்தாடுந்
  தீர்த்தனற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடுங்
கூத்தனிவ் வானுங் குவலயமு மெல்லோமுங்
  காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
  ஆர்ப்பரவஞ் செய்ய வணிகுழன்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
  ஏத்தி யிருஞ்சுனைநீ ராடேலோ ரெம்பாவாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள்;- நம்மைப் பிணித்துள்ள பிறவித் துன்பங்கள் கெட்டொழியுமாறு நாம் ஆரவாரித்து ஆடுகின்ற இந்தத் தீர்த்தமாயுள்ளவர், தில்லைச் சிற்றம்பலத்திலே தீயேந்தியாடும் கூத்தப் பிரான் விண்ணுலகையும் மண்ணுலகையும் எம்மெல்லோரையும் படைத்துக் காத்தழிக்கும் திருவிளையாட்டுடையவர். அவரது திருவார்த்தையான ஐந்தெழுத்து மந்திரத்தை யோதி, கைவளையல்கள் ஒலிக்கவும், மேகலைகள் பேரொலி செய்யவும், கூந்தலிலுள்ள வண்டுகள் எழுந்து ஆர்ப்பரிக்கவும், மலர்விளங்கும் பொய்கையைக் கைகளாற் குடைந்து, எம்மையுடைய இறைவனது பொன்னடிகளைப் புகழ்ந்து பாடிக்கொண்டே சுனைநீரில் முழுகுவோம்.

குறிப்பு:- ஆர்த்த - கட்டிய. தீர்த்தன் - தீர்த்த நீராயுள்ளவன். (இறைவனுடைய எட்டுவடிவங்களுள் நீரும் ஒன்று) தீயாடும் - அங்கையினில் அனலேந்தியாடுகின்ற. குவலயம்-பூமி. கரந்து-மறைத்து இங்கே அழித்து என்னும் பொருளில் வந்தது. விளையாடி என்பதை முன்னே நீருடி என்பதைப்போன்று பெயராகக் கொள்க. விளையாடியினது வார்த்தை என ஆறனுருபு விரிக்க. வார்த்தை - மந்திரம். ஆடுக என்பது ஆடு எனக் கடை குறைந்து வந்தது. (12)

பைங்குவளைக் கார்மலராற் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தாற் பின்னு மரவத்தால்
தங்கண் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநஞ்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.

பொருள்: பசிய குவளையின் கரிய மலர்களையுடைமையாலும், செந்தாமரையின் அழகிய மலர்களையுடைமையாலும், அழகிய நீரிலே பறவையினத்தை யுடைமையாலும், பின்னிப் பிணைந்திருக்கின்ற நீர்ப்பாம்பினையுடைமையாலும், தங்கள்புறஅழுக்கை நீராடிச் சுத்தமாக்குபவர்கள் வந்து சேர்தலினாலும் இறைவியையும் இறைவனையும் போன்றிருக்கின்ற பொலிவான மடுவின் நீரில் எமது உடல் புகுமாறு பாய்ந்து குதித்து அதனால் நமது கைவளையல் ஒலிக்கவும், காற்சிலம்புகள் கலந்து ஆரவாரிக்கவும், மார்பகம் பூரிக்கவும், குடைந்தாடும் பொய்கைநீர் மேலே பொங்கியெழவும், தாமரை மலர்ந்து பொலிவு பெற்ற நீரிலே பாய்ந்தாடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பு:- குவளை - கருங்குவளை. (நீலோற்பலம்.) கார்மலர் - கரிய மலர். அம் கம் குருகு இனத்தால் - அழகிய நீரில் பறவைக் கூட்டத்தினால். இத் தொடரை இறைவிக்குப் பொருந்துமாறு, அங்கம் - கைகளில், குருகு இனத்தால் - வளையற் கூட்டத்தால் எனவும், இறைவனுக்குப் பொருந்துமாறு, அங்கம் - திருமேனியில், குருகு இனத்தால் - குருக்கத்தி மாலையால் எனவும் பொருள் கொள்ளுக. பின்னும் அரவம் - ஒன்றோடொன்று பின்னிய பாம்பு. தடாகத்துக்கு ஏற்பக் கூறும்போது (நீர்ப்பாம்பு என்னும் பொருளுக்குப் பதிலாக) கலந்த பல ஒலிகளையுடைமையால் (அரவம் - ஒலி) எனப் பொருள் கூறலும் பொருந்தும். தங்கள் மலம் கழுவுவார் - தங்கள் உடலழுக்கைப்போக்க நீராடும் மனிதரும், தமது உயிரழுக்கான மும்மலத்தைப் போக்க வருகின்ற ஆன்மாக்களும். சங்கம் - சங்கு வளையல்.

க—ரை: பொய்கையில் நீராடுங் கன்னியர் அவ்விடத்து இயற்கையழகைக் கண்டு இன்புறுகின்றார்கள். அங்குள்ள ஒவ்வொரு பொருளும் அம்மையப்பரை அவர்க்கு நினைவூட்டுகின்றன. குவளை மலர்கள் உமையம்மையின் திருக்கண்களையும் திருமேனி நிறத்தையும் நினைவூட்டுகின்றன. செந்தாமரை மலர்கள் சிவபிரானுடைய திருமுகத்தையும் திருமேனி நிறத்தையும் நினைவூட்டுகின்றன. நீரிலிருக்கும் நாரை கொக்கு முதலிய வெண்குருகளைக் கண்டதும் அம்மையப்பர் அணிந்திருக்கும் வெண்வளையலும் வெண்ணிறக் குருக்கத்திமாலையும் நினைவில் வருகின்றன. நீர்ப் பாம்புகள் அம்மை தலையிலணிந்திருக்கும் நாக படத்தையும் அப்பர் தலையிலும் மார்பிலும் கையிலும் அணிந்துள்ள பாம்புகளையும் நினைவூட்டுகின்றன. நீர் நிலைக்குவந்து நீராடி உடல் மாசுபோக்கும் மனிதர்களைப் பார்த்து ''இவ்வாறு தானே எங்கள் பிராட்டியையும் எங் கோனையும் சென்றடையும் ஆன்மாக்கள் தங்கள் மலமாசு போக்குகின்றன!'' என்று எண்ணிக் கொள்ளுகின்றார்கள். இவ்வாறு இறைவியையும் இறைவனையும் ஒத்திருக்கும் இம் பூம்புனற் பொய்கையில் பாய்ந்தாடுவோம் என்று பாடுகிறார்கள். (13)

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி யாடேலோ ரெம்பாவாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொ—ள்: காதுகளில் அணிந்த தோடுகள் ஆடவும், மற்றைய அங்கங்களில் அணிந்த பொன்னுபரணங்கள் ஆடவும், மலர்மாலையும் மாலைசூடிய கூந்தலும் ஆடவும், மாலையில் அமர்ந்திருந்த வண்டுக் கூட்டம் எழுந்தாடவும், குளிர்ந்த நீரிலே நாம் முழுகி, தில்லைச் சிற்றம்பலத்தைப் பாடியும், வேதங்களின் மெய்ப்பொருளைப் பாடியும், அந்த மெய்ப்பொருளின் உண்மைத் தன்மையைப் பாடியும், சோதிப் பிழம்பின் அடிமுடியற்ற இயல்பைப் பாடியும், இறைவன் சடாமுடியிற் சுற்றியுள்ள கொன்றை மாலையைப் பாடியும் அவர் உலகுக்கு ஆதியும் அந்தமும் ஆகுந் தன்மையைப் பாடியும் ஆன்மாக்களாகிய எம்மை எமது வினைக்கேற்றவாறு வேறு படுத்திப் பாதுகாத்து உய்வித்த உமையம்மையின் திருவடியியல்பைப் பாடியும் நீரோடுவோமாக

குறிப்பு: குழை - தோடு. கலன் - அணிகலன், ஆபரணம், கோதை - மலர்மாலை. குழாம் - கூட்டம். பேதித்து - வேறுபடுத்தி. பெய்வளை - பெய்த வளையலினையுடையவள், வளையலணிந்தவள் இது இங்கு இறைவியைக் கருதியது. அப்பொருளாமாபாடி என்றும் அந்தமாமா பாடி என்றும் வந்தவற்றை அப்பொருள் ஆமா பாடி, அந்தம் ஆமா பாடி எனப் பிரிக்க. ஆமா - ஆமாறு - ஆகுந் தன்மை. (14)

ஓரொருகா லெம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகா லோவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவ ராமாறும்
ஆரொருவ ரிவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர்! வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்!

பொ—ள்; கச்சணிந்த தனங்களை புடையவர்களே! (எம்முள் ஒரு பெண்) முன்பெல்லாம் இடையிடையே 'எம்பெருமான், எம்பெருமான்' என்று சொல்லிக் கொண்டிருந்தவள், இப்போது, எம்பெருமானுடைய புகழை ஒருபோதும் வாய் ஓயாதவளாய்ப் பேசிக் கொண்டிருக்கிறாள். மேலும், மனங் களிப்புமிகக் கண்ணீர் ஒழியாத நெடுந்தாரையாகக் கண்ணிலிருந்து பெருக்கெடுக்கப் பூமியில் விழுந்து வணங்குகின்றாள். (ஆனால் சிவபிரானையன்றி) வேறு தேவர்களை வணங்கமாட்டாள். அரசர்க்கரசராகிய சிவபிரான் மீது ஒருவர் பித்துக்கொள்வது இப்படித்தான் போலும். இவ்வாறு எவர் இவளை ஆட்கொண்டவித்தகரோ அவருடைய திருவடிகளை நாம் வாயாரப் பாடி அழகிய நீரில் பாய்ந்தாடுவோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பு: ஓவாள் பணியாள் என்னும் பயனிலைகளுக்கு ஒருத்தி என்பது தோன்றா எழுவாய். சீர் - சிறப்பு - புகழ். ஓவாள் - ஒழியாள், ஓயாள். (பகுதி ஓ. ''ஓவாது உரையொழியப் பற்றுர்''—திருவருட்பயன்) பார் ஒருகால் வந்தனையாள் என்பதற்குப் பூமியில் ஓரேயொருமுறை வந்து பிறந்திருக்கின்ற அத்தகையவள் (வந்த அனையாள்) எனவும் பொருள் கொள்வர். வித்தகம் - சதுரப்பாடு, சாமர்த்தியம். அதனையுடையவர் வித்தகர். தாள் - திருவடி.

பத்திப் பித்தேறிய ஒருத்தியின் நிலைமையையும் பித்தேற்றிய இறைவன் பெருமையையும் நீராடும் பெண்கள் தம்முள் வியந்து பேசிக்கொள்வதை இப்பாட்டு விவரிக்கிறது. இப்பெண் பெற்ற பேறு எமக்கும் கிட்டாதா என்று ஏனையோர் கொண்ட ஆவல் பாட்டில் தொனிக்கிறது. (15)

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையா ளிட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை யாளு டையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமா னன்பர்க்கும்
முன்னியவ ணமக்கு முன்சுரக்கு மின்னருளே
என்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய்.

பொ—ள்: மேகமே! நீ கடலைச் சேர்ந்து அதன் நீர் குறையுமாறு முகந்துகொண்டு மேலெழுந்து, எம்மையுடையவளான அம்மையின் திருவுருவம் போன்று கருநிறத்துடன் விளங்கி, எம்மை ஆளாகக் கொண்டவளான அத்தேவியின் சிறிய இடைபோல மின்னி எம் பிராட்டியின் திருவடியில் அணிந்துள்ள பொற்சிலம்பு ஒலித்தல் போல் முழங்கி, அவ்விறைவியின் திருப்புருவங்கள் போல வானவில்லைப் பொருந்தி, எம்மை ஆளாகவுடைய இறைவி தம்மை விட்டுப் பிரியாத எம் இறைவருடைய பேரன்பர்களுக்கும் அவ்விறைவி (தம்முடைய தொண்டராகிய) எமக்கும் முற்பட்டுவந்து சொரிகின்ற இனிய அருளைப்போன்று, நீ நீரைப் பொழிவாயாக.

குறிப்பு: முன்னி - சார்ந்து. உடையாள் - இறைவி. ஆள் உடையாள் - அடிமையாக உடையவள். இறைவனையும் இறைவியையும் உடையான் என்றும் உடையாள் என்றுங் கூறுவது மணிவாசகப் பெருமானது இயல்பு. என்ன - என்று சொல்லுமாறு - என்று தோன்றுமாறு என்னும் பொருளில் வந்த உவம உருபு. இடையின் என்றும் சிலம்பில் என்றும் இன் இல் உருபுகள் ஒப்புப் பொருளில் வந்தன. சிலம்புதல் ஒலித்தல். சிலை - வில். குலவி - பொருந்தி. அன்பர்க்கும் நமக்கும் என உம்மைகள் விரிக்க, மழை - மேகமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவை நோன்பின் இருபெரும் நோக்கங்களில் முதலாவதாகிய நல்ல கணவரைத் தருமாறு பிரார்த்தித்தல் முன்னே ஒன்பதாம் பாட்டில் குறிப்பிடப்பட்டது. மழை பொழிந்து நாடு செழிக்க வேண்டுமென்னும் இரண்டாவது நோக்கம் இப் பாட்டில் வெளி யிடப்படுகிறது.

காதல் மிக்க கதாபாத்திரங்கள் இயற்கைப் பொருட்களைக் காணும்போது அவற்றின் ஒப்புமை காரணமாகத் தம் காதலரின் அவயவங்களை நினைப்பதாக வருணிப்பது இலக்கிய மரபு. இப் பாட்டில் மழை பொழிய வேண்டுமென மேகத்தைக் கேட்க விரும்பிய கன்னியர், மேகமானது வெறும் மழை பெய்வதோடு அமைந்து விடாமல், கடல்நீரை மொண்டு கருமைபெறவேண்டு மென்றும், மின்னி முழங்கவேண்டுமென்றும், உலகத்தவர்க்கு நன்மையளிக்கத்தக்க அளவில் மழை பொழிய வேண்டுமென்றும் தங்கள் பெருவிருப்பத்தை வெளியிடுகின்றனர். மழைக்காட்சி அவர்களின் கண்முன்னே யன்றிக் கருத்தில் உதித்த அளவிலேயே ஒப்புமை காரணமாக இறைவியின் திருவுருவக்காட்சியை நினைவூட்டி விடுகிறது. நீருண்ட மேகத்தின் நீலநிறத்தில் இறைவியின் மேனிய ழகையும், மின்னலில் இடையழகையும், முழக்கத்தில் பாதச் சிலம் பொலியையும் வான வில்லின் வளைவில் அம்மையின் திருப்புருவ முரிப்பையும், மழை வீழ்ச்சியில் அருட்பொழிவையும் கண்டும் கேட்டும் இன்புறவிரும்புகிறார்கள்.

இவ்வுயரிய மழைப்பாட்டு, மார்கழி மங்கையரின் பத்திக் காத லோடு மணிவாசகப் பெருமானின் திருவுள்ளத்தையும் புலப்படுத்து கிறது. (16)

**செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்**
**எங்கு மிலாததோர் இன்பநம் பாலதாக்**
**கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி**
**இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்**
**செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை**
**அங்க ணரசை அடியோங்கட் காரமுதை**
**நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்**
**பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.**

பொ—ள்; செங்கண்ணனாகிய திருமாலிடமும் நான்முகனாகிய பிரமதேவரிடமும் இந்திரன் முதலிய ஏனைத் தேவர்களிடமும் வேறு எவரிடமும் இல்லாத ஒப்பற்ற இன்பம் எம்மிடத்து உள்ளதாகு மாறு, நறுமணம் பொருந்திய கருங்கூந்தலையுடைய இறைவி எங் கள் குறைகளை நீக்கி அருள் செய்தலும், இங்கே எம் (உள்ளமாகிய) இல்லங்கள்தோறும் எழுந்தருளிவந்து தமது செந்தாமரை மலர் போன்ற அழகிய திருவடிகளைத் தந்து அருள் புரிகின்ற வீரராகவும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருட்கண்ணுடைய அரசராகவும், அடியோமுக்குக் கிடைத்த அரிய அமுதமாகவும் எங்கள் தலைவராகவுமுள்ள சிவபிரானைப் பாடிக் கொண்டே நன்மை விளங்குமாறு பூம்புனலிற் பாய்ந்தாடுவோமாக.

குறிப்பு: செங்கண் அவன் - சிவந்த கண்களையுடைய திருமால். திசைமுகன் - பிரமன். நம்பாலதா - நம் பாலது ஆக - நம்மிடம் உளதாகுமாறு. கொங்கு - வாசனை. சேவகன் - வீரன். கோதாட்டல் - குற்றம் நீக்குதல். கோதாட்டி என்பதைக் கோதாட்ட என மாற்றிப் பொருள் கொள்ளுக. (17)

அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போற்
கண்ணா ரிரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணா ரொளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி யாணா யலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.

பொருள்: திருவண்ணாமலைப் பெருமானது திருவடித் தாமரையைச் சென்று வணங்குகின்ற தேவர்களுடைய முடிகளிலுள்ள இரத்தினத்தொகுதி (திருவடியின் ஒளிமுன்) ஒளி மழுங்கினாற் போல, உலகத்தின் கண்ணாகப் பொருந்திய சூரியனது கிரணங்கள் வந்ததனால் இருள் மறையவும், நட்சத்திரங்கள் தமது குளிர்ந்த ஒளி மழுங்கி மறைந்துவிடவும், பெண்ணாகியும், ஆணாகியும், அலியாகியும், ஒளிவிளங்கும் வானமாகியும் பூமியாகியும், இவற்றினின்றும் வேறாகியும் கண் நிறைந்த அமுதமாயும் நிலைத்திருக்கும் இறைவனுடைய திருவடியைப் பாடிக்கொண்டு, பெண்ணே! இப்பூம்புனலில் பாய்ந்தாடுவோமாக.

குறிப்பு:- இறைஞ்சும் - வணங்கும். இரவி - சூரியன். கண் ஆர் இரவி என்பதற்கு இறைவனுக்குக் கண்ணாயமைந்த சூரியன் எனவும் பொருள் கொள்ளலாம். கார் கரப்ப - இருள் மறைய. தாரகை - நட்சத்திரம். பிறங்கு ஒளி சேர் விண் - விளங்குகின்ற சூரியன் முதலிய ஒளியுடைய பொருள்கள் சேர்ந்த வான மண்டலம். இத்தனையும் வேறாகி - (இத்தனை பொருளாகியும் இவற்றின் இயல்பு தம்மைச் சாராமல் தாம்) இவற்றின் வேறாகியும்.

க—ரை:- பெண்ணே! அண்ணாமலைப் பெருமானுடைய திருவடி மலர்களை வணங்குகின்ற தேவர்களுடைய கிரீடங்களிலுள்ள பிரகாசமான இரத்தினங்கள் பெருமானுடைய திருவடிகளின் ஒளி முன்னே தம்மொளி மழுங்கிப் போவதுபோல, இதோ தோன்றும் சூரிய கிரணங்களின் முன் நட்சத்திரங்கள் ஒளியிழந்து மறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றன. இவ்வேளையில் இறைவன் திருவடிப் புகழைப்பாடி நீராடுவோமாக. அவ்விறைவன் பெண்ணும் ஆணும் அலியும் ஆனவர்: விண்ணும் மண்ணும் ஆகி இவற்றின் வேருகியும் இருப்பவர். கண்ணுக்கு விருந்தாகும் அமுதமாய் இருப்பவர். (18)

உங்கையிற் பிள்ளை உனக்கே யடைக்கலமென்
றங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்பர் அல்லார்தோள் சேரற்க
எங்கை யுனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்ருென்றுங் காணற்க
இங்கிப் பரிசே யெமக்கெங்கோ னல்குதியேல்
எங்கெழி லென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய்.

பொருள்:- எங்கள் பெருமானே! 'உன் கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம்' என்றுகூறும் அந்த முதுமொழியை உம்மிடம் புதுப்பித்துக் கூறுவதனுல் உண்டான அச்சத்தோடு உம்மிடம் ஒரு வேண்டுகோள் செய்கின்ருேம். அதைக் கேட்டருள்வீராக: எங்களுடைய தனங்கள் உமது அன்பரல்லாதவர்களின் தோள்களைச் சேராதொழிக. எங்கள் கைகள் உமக்கல்லாது வேறு எவருக்கும் தொண்டு செய்யாதொழிக. எங்கள் கண்கள் இரவும் பகலும் உமது திருக்கோலக் காட்சியையன்றி வேருென்றையும் காணுதொழிக. இங்கு இத்தன்மையான வரத்தை எமக்குத் தந்தருளுவீராயின், எம் இறைவரே! சூரியன் எங்கே உதித்தாலும் எமக்கு ஆவதென்ன?

குறிப்பு:- உன் கையில் என்பது எதுகை காரணமாக உங் கையில் என மாறியது. கங்குல் பகல் - இரவும் பகலும். நல்குதியேல் - தருவாயாயின். 'எங்கு எழில் என் ஞாயிறு எமக்கு' என்னும் வினவுக்குக் கிழக்கிலுதிக்கும் சூரியன் திசைமாறி எங்கு உதித்தாலும் எமக்குக் கவலையில்லை என்பது தாற்பரியமாகக் கொள்க.

க—ரை:- 'நாம் உமது கையிற் பிள்ளைகள். உமக்கு அடைக்கலமானவர்கள்: ஆகையால் எம்மை ஆளாகவுடைய உமக்கு உமது கடமையை அறிவுறுத்துவது தவருகும். எமது ஆசை அந்த முதுமொழியை உமக்கு நினைவூட்டுமாறு தூண்டுகிறது, அவ்வாறு செய்தல் தவறென்று அதைவிடுத்து ஒரு விண்ணப்பம் செய்கின்ருேம் கேட்டருள்க' என்ற அவையடக்கத்தோடு தமது வேண்டுகோளைத் தெரிவிக்கின்ருர்கள் மார்கழி நீராடிய மங்கையர். சிவபக்தரல்லாதவர் தமக்குக் கணவராய் விடக்கூடாதே என்ற கவலையோடு வேண்டுதல் செய்யும் இப்பெண்கள் தம் எண்ணம் நிறைவேற இறைவன் அருள் புரிந்துவிட்டால் பின்பு 'வானந்துளங்கிலென்! மண் கம்பமாகிலென்!'' என்ற மனப்பாங்கில் ஞானவைராக்கியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூணுகிறார்கள். முன்பு 'உன் அடியார் தாள் பணிவோம்........ அன்னவரே எம்கணவராவார்........ இன்னவகையே எமக்கு எங் கோன் நல்குதியேல் என்ன குறையும் இலோம்' என்று ஒன்பதாம் பாட்டில் செய்த பிரார்த்தனையைத் தான் இங்கு எதிர்மறை வாய் பாட்டில் மீண்டும் வெளியிடுகின்றார்கள். (19)

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றீ யருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கும் ஈறு மிணையடிகள்
போற்றிமா லான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியா முய்யவாட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியா மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய்.

திருச்சிற்றம்பலம்

பொருள்: பெருமானே! உலகத்திற்கு ஆதியாகவுள்ள உமது திருவடி மலர்கள் எம்மைப் பாதுகாத்தருளுக. உலகத்திற்கு முடி வாகவுள்ள உமது செந்தளிர் அனைய திருவடிகள் எம்மைப் பாது காத்தருளுக. எல்லா உயிர்களுக்குந் தநு கரண புவன போகங்க ளைத் தோற்றுவிக்கின்ற பொன்னடிகள் எம்மைக் காத்தருளுக. எல்லாவுயிர்களையும் உரியகாலம் வரை போகங்களை ஊட்டிக் காக் கின்ற மலரடிகள் எம்மைக் காத்தருளுக. எல்லாவுயிர்களுக்கும் இறுதி செய்கின்ற இணையடிகள் எம்மைக் காத்தருளுக. திருமா லும் நான்முகனும் கண்டறிய முடியாத தாமரை மலரனைய திரு வடிகள் எம்மைக் காத்தருளுக. நாம் உய்யுமாறு எம்மையாட் கொண்டருளுகின்ற பொன்மலரனைய திருவடிகள் எம்மைக் காத் தருளுக. நாம் ஆடுகின்ற இந்த மார்கழி நீர் எம்மைத் தூய்மைப் படுத்திக் காத்தருளுக. எம்பாவாய்.

குறிப்பு:- ஆதி ஆம், அந்தம் ஆம், தோற்றம் ஆம், போகம் ஆம், ஈறு ஆம் எனப் பிரித்துப் பொருள் கொள்ளுக. ஈறு - அந்தம், முடிவு. புண்டரிகம் - தாமரை. தாமரை மலரனைய திருவடிகள். யாம் ஆடு மார்கழி நீர் போற்றி எனக் கூட்டுக.

முதற் பாட்டில் இறைவனுக்கு ஆதியும் அந்தமும் இல்லை என்று கூறியவர்கள், இந்த இறுதிப் பாட்டில் இறைவன் உலகுக்கு ஆதியாயும் அந்தமாயும் இருக்கின்றார் என்று தெளிவுபடுத்துகிறார் கள். மேலும், உயிர்களுக்காக இறைவன் நிகழ்த்தும் பஞ்சகிருத் தியங்களும் மூன்றும் அடியிலிருந்து முறையே எடுத்தாளப்படுகின் றன. தோற்றம் ஆம் (படைத்தல்), போகம் ஆம் (காத்தல்), ஈறு ஆம் (அழித்தல்), மாலும் நான்முகனும் காணா (மறைத்தல்), ஆட்கொண்டு அருளும் (அருளல்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருவூர்த்தேவர் பாடியருளிய

## திருவிசைப்பா

சிவபிரானது புகழைப் பாடிய பாட்டுநூல் என்பது இப் பெயர்க்குப் பொருளாகும். இசை - புகழ். திருமாளிகைத் தேவர் முதலிய ஒன்பது மெய்யடியார் பாடிய அருட்பாக்கள் திருவிசைப்பா என்னும் பெயரில் ஒன்பதாந் திருமுறையிற் சேர்க்கப்பட்டுள்ளன. அற்புதத் தெய்வம் எனத் தொடங்கும் இப் பாடல் கங்கைகொண்ட சோழேச்சரம் என்னுந் தலத்திற் கோயில் கொண்டெழுந்தருளி யிருக்கும் சிவபிரான் மீது பாடப்பட்டதாகும்.

கருவூர்த் தேவர் முதலாம் இராஜராஜ சோழனால் நன்குமதிக் கப்பட்டவரென்றும் ஆகையால் இவர்காலம் பத்தாம் நூற்றண்டு என்றும் வரலாற்றுசிரியர் கூறுவர்.

திருச்சிற்றம்பலம்.

அற்புதத் தெய்வம் இதனின் மற்றுண்டே?
அன்பொடு தன்னையஞ் செழுத்தின்
சொற்பதத் துள்வைத் துள்ள மள்ளூறுந்
தொண்டருக் கெண்டிசைக் கனகம்
பற்பதக் குவையும் பைம்பொன்மா ளிகையும்
பவளவா யவர்பணை முலையும்
கற்பகப் பொழிலும் முழுதுமாங் கங்கை
கொண்டசோ ழேச்சரத் தானே.

பொருள்:- அற்புதமான தெய்வம் இத் தெய்வத்தைவிட வேறும் உண்டோ? கங்கைகொண்ட சோழேச்சரம் என்னுந் தலத்தில் எழுந்தருளியிருக்கும் இவ்விறைவனது அருளினல், ஐந்தெழுத்து மந்திரத்தினுள் தன்னை வைத்துத் தியானித்து உளம் மகிழும் தொண்டர்களுக்கு எட்டுத் திக்கிலிருந்தும் வந்த பொன்னினது பதமான பல குவியல்களும், பசும் பொன்னால் அமைக்கப்பட்ட மாளிகைகளும், பவளவாய் மாதரின் பணைத்த தனங்களைப் பொருந்தும் பேறும், கற்பகமென்னுந் தேவதருக்களையுடைய பூங் காவுமாகிய இப்பேறுகள் முழுவதும் உண்டாகும். (இத்தகைய அற்புதத்தை நிகழ்த்தும் தெய்வம் வேறில்லை என்றவாறு.)

குறிப்பு:- இதனின் - இதனினும் பார்க்க. மற்று - பிறிது, வேறு. உண்டே - உண்டோ. ஏகாரம் வினாப்பொருளில் வந்தது. அள்ளூறுதல் - இனித்தல், இன்புறுதல். கனகம் - பொன். சொல் பதத்து - சொல்லினிடத்து. குவை - குவியல். பணைத்தல் - பருத் தல். ஆம் - ஆகும்.

19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேந்தனர் பாடியருளிய

## திருப்பல்லாண்டு

பல்லாண்டுகாலம் நீடுவாழ்வீராக என்று சிவபிரானை வாழ்த்திப் பாடும் பாடலே திருப்பல்லாண்டாகும். நாடாளும் மன்னனுக்கு நாட்டுமக்கள் செய்யும் இராஜோபசாரங்களை ஒப்ப, உலகநாயகனாகிய இறைவனுக்கு அவனுடைய அடியவர்கள், துயிலுணர்த்தல் (திருப்பள்ளி யெழுச்சி,) ஊசலாட்டுதல் (திருப்பொன்னூசல்), வாழ்த்திப்பாடுதல் (திருப்பல்லாண்டு) ஆகிய பலவகை உபசாரங்களைச் செய்து இன்புறுவர். "வானோர்கள் வாழ்த்துவதும் தாம் வாழ்வான்" என்னும் அருள் வாக்குப் பல்லாண்டு பாடுதலின் நோக்கத்தையும் பயனையும் தெளிவாக்குகிறது. திருவிசைப்பாப் பாடியவர்களுள் ஒருவரான சேந்தனரே இத் திருப்பல்லாண்டுப் பதிகத்தையும் பாடியருளினர். சிதம்பரத்தில் பாடப்பட்ட இப்பதிகம் ஒன்பதாந் திருமுறையில் அடங்கும்.

திருச்சிற்றம்பலம்

ஆரார் வந்தா ரமரர் குழாத்தில்
அணியுடை யாதிரைநாள்
நாரா யணனொடு நான்முக னங்கி
இரவியு மிந்திரனுந்
தேரார் வீதியிற் றேவர் குழாங்கள்
திசையனைத் துநிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியு மாடியும்
பல்லாண்டு கூறுதுமே.

பொருள்: அழகுடைய திருவாதிரை நாளில் தேவர் கூட்டத்தில் எவ்வெவர் வந்தார்கள்? திருமாலுடன் பிரமனும் அக்கினி தேவனும் சூரியனும் இந்திரனும் முதலிய தேவர் கூட்டங்கள் தேர்கள் செல்லுந் தெருவிலே, திசையெல்லாம் நிறைந்து நிற்க. பூமியிற் பரவிய பழமையான புகழினைப் பாடியும் ஆனந்தக் கூத்தாடியும் பல்லாண்டு கூறுவோம்.

குறிப்பு: குழாம் - கூட்டம். ஆதிரை - திருவாதிரை, சிவபெருமானுக்கு உவப்பான நட்சத்திரம். அங்கி - அக்நி என்னும் வடசொற்றிரிபு. நிறைந்து - நிறைந்துநிற்க. கூறுதும் - கூறுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேக்கிழார் பாடியருளிய

## திருப்புராணம்

திருமுறை வகுப்பில் பன்னிரண்டாந் திருமுறையாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது சேக்கிழார் பாடிய பெரியபுராணம் என வழங்கும் திருத்தொண்டர் புராணம். இந்நூல் சுந்தரமூர்த்தி நாயனார் பாடியருளிய திருத்தொண்டத் தொகையை அடிப்படையாகக் கொண்டு நாயன்மார் வரலாற்றை விரித்துரைப்பது.

சிவனடியே எனத்தொடங்கும் பின்வரும் பாடல், திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் வரலாற்றில் உமையம்மை யூட்டிய ஞானப் பாலை உட்கொண்டபோது சம்பந்தப் பெருமான் உணர்ந்து கொண்ட ஞானத்தை அற்புதமாக வகைபபடுத்திக் காட்டுகிறது.

திருச்சிற்றம்பலம்

சிவனடியே சிந்திக்குந் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை யறமாற்றும் பாங்கினிலோங் கியஞானம்
உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தார் அந்நிலையில்.

பொருள்: (தவங்களை நிலைக்கச் செய்தமையால்) தவங்களுக்கு முதல்வராய் விளங்கும் ஞானசம்பந்தப் பெருமான், சிவபிரானுடைய திருவடியை மாத்திரமே உணர்ந்து சிந்திக்கும் செல்வமிக்க சிவஞானமாகிய பரஞானத்தையும், பிறப்பை முற்றாக நீக்கிவிடும் இயல்பு மிக்க அபர ஞானத்தையும், ஒப்பில்லாத அறுபத்து நான்காகிய கலைஞானத்தையும், உணர்தற்கு அரியனவாகிய வியாகரணம் முதலிய கருவி நூல்களின் ஞானத்தையும் திருமுலைப் பாலுட்கொண்ட அப்பொழுதே உணர்ந்து கொண்டார் (ஓதாதே உணர்ந்துகொண்டார். என்றவாறு.)

குறிப்பு:- பவம் - பிறப்பு. பாங்கு - இயல்பு, தன்மை. மெய்ஞ் ஞானம் - மெய்ஞ்ஞான நூல்களான வேதாகமங்களை உணர்தற்குக் கருவி நூல்களாயுள்ள வியாகரணம் (- இலக்கணம்) முதலியவற்றின் ஞானம்.

---

அருணகிரிநாதர் பாடியருளிய

## திருப்புகழ்

முருகப்பெருமானது பெருமைகளைப் போற்றிப் புகழ்ந்து பாடிய நூல் திருப்புகழ். தேவாரப்பாக்கள் போலவே இத் திருப்புகழ்ப் பாடல்களும் பல வேறு தலங்கள்மீது பாடப்பட்டவை; தென்னிலங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கயிலுள்ள கதிர்காமத் தலத்தில் எழுந்தருளியிருக்கும் முருகப் பிரான்மீது அருணகிரிநாதர் பாடிய சில திருப்புகழ்ப் பாடல்களுள் பின்வரும் பாடலும் ஒன்று. திருப்புகழ் திருமுறை வகுக்கப்பட்ட காலத்திற்குப் பிந்தியதாதலின் திருமுறையில் இடம்பெறவில்லை. எனினும் திருமுறைகளை ஓதும்போது புராணத்தின் பின் இறுதியாகத் திருப்புகழ்ப் பாடலை ஓதுதல் மரபாயிருக்கிறது.

திருச்சிற்றம்பலம்

எதிரி லாத பத்தி தனைமேவி
இனிய தாணி னைப்பை யிருபோதும்
இதய வாரி திக்கு ளுறவாகி
எனது ளேசி றக்க அருள்வாயே
கதிர காம வெற்பி லுறைவோனே
கனக மேரு வொத்த புயவீரா
மதுர வாணி யுற்ற கழலோனே
வழுதி கூனி மிர்த்த பெருமானே.

பொருள்:- கதிர்காமம் என்னும் மலைத் தலத்தில் உறைந்திருப்பவரே, பொன்மலையாகிய மேருவினை ஒத்த புயங்களையுடைய வீரரே, இனிய ஒலிபொருந்திய வீரக் கழலணிந்தவரே, கூன் பாண்டியனுடைய கூனலை நிமிர்த்தியருளிய பெருமானே, என் மனமாகிய கடலினுள் தேவரீர் கலந்துறவாகி என்னுள்ளம் சிறப் படையுமாறு நிகரில்லாத பத்தியைப் பொருந்தி அல்லும் பகலுமாகிய இருவேளையிலும் தேவரீருடைய திருவடிகளை நினைத்தலாகிய பேற்றை அடியேனுக்குத் தந்தருள்வீராக.

குறிப்பு:- எதிர் இலாத - ஒப்பில்லாத - நிகரற்ற. வாரிதி - கடல். இதயவாரிதி - உள்ளக் கடல். (உருவகம்) வெற்பு - மலை. கதிரகாமம் என அகரச் சாரியை பெற்றது. சிங்கள மக்கள் வழங்கும் 'கதரகம' என்னும் பெயரை ஒப்பு நோக்குக. காம, கம என்பன கிராம என்னும் வடசொற்றிரிபு. கனகம் - பொன். வாணி - ஓசை. வழுதி - பாண்டியன். தாள் + நினைப்பை எனவும் எனது + உள்ளே எனவும் கூன் + நிமிர்த்த எனவும் சந்தி பிரிக்க.

திருஞானசம்பந்தப் பெருமானிடம் முருகப்பிரானது தெய்வாம்சம் பொருந்தியிருந்தமையால் சம்பந்தப் பிள்ளையார் செய்த அற்புதங்கள் முருகப்பெருமான் செய்தனவாகப் பாடப் பட்டன.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிற்சேர்க்கை

# தோத்திரப் பகுதி
# திருமந்திரம்

திருக்கைலையில் நந்தியெம்பெருமானின் மாணுக்கருள் ஒருவராய் இருந்த சிவயோகியார், தமிழ் முனிவராம் அகத்தியர் பெருமானைக் காணவேண்டி ஆகாய வழியாகத் தென் பொதிகை நோக்கி வந்த காலத்தில், திருவாவடுதுறையில் மூலன் என்னும் இடையன் இறந்து கிடப்பதையும், இவனுல் அன்போடு வளர்க்கப்பட்ட பசுக்கூட்டம் மூலன் பிரிவு தாங்காமல் கதறி நிற்பதையும் கண்டு இரங்கிப் பசுக்கள் துயர்தீர்க்க நினைந்து, யோகம் வல்ல சிவயோகியார் தம் கூடு விட்டு மூலன் உடல் புகுந்து பசுக்களை மேய்த்து வீடு சேர்த்தார். பின் தன் உடலைத் தேடிக் காணுமையால் மூலன் உடலிலேயே தங்கித் திருவாவடுதுறையில் 3000 ஆண்டுகள் யோகிருந்து ஆண்டுக்கு ஒரு பாட்டாக 3000 பாடல்களைப் பாடினுர் திருமூலர் என்பர். *

எக்காலத்தும் உண்மையாகிய பொருளை விளக்கி நிற்பவையே மந்திரம். மக்கள் வாழ்வின் இம்மை மறுமை நலங்களுக்கு உரிய மறைபொருள் நுட்பங்களை தெளிவிப்பதில் திருமந்திரத்துக்கு நிகர் திருமந்திரமே. திருமுறைகளில் 10 ஆம் திருமுறையாகப் போற்றப் பட்டாலும் தேவார முதலிகட்கு முற்பட்டவர் திருமூலர். திருமந்திரத்தின் செல்வாக்கு பிந்திய சமய நூல்களில் எல்லாம் பரவியிருப்பதைக் காண முடிகிறது.

இறைவனை உணர்ந்து இன்பம் நுகர்வதற்கு வழிகள் பல கூறப் பட்டுள்ளன எனினும் அன்பு வழியைப் போல் இனிப்பது வேறில்லை. அன்பு செய்வதில் சிவனைக் கண்டு துய்த்தல் தொன்மைத் தமிழ் வழியாகும். இந்த அன்பு வழிக்கு—பக்தி மார்க்கத்துக்கு அத்திவார

---

* இப் பாடல்களின் தொகுப்பே திருமந்திரம். இதனை திருமூலரே "மூலன் உரை செய்த மூவாயிரந்தமிழ்" என்கிறுர்.

இவருடைய காலம் திருஞானசம்பந்தருக்கு முற்பட்டது. அதாவது கி. பி. 300 க்கும் கி. பி. 700 க்கும் இடைப்பட்டதாகும் என்பது மறைமலை அடிகள், கா. சு. பிள்ளை, இரமண சாத்திரிகள் கருத்தாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிட்டவர் திருமூலர் எனலாம். இவர் இட்ட அத்திவாரத்திலேயே பல்லவர் காலப் பக்தி இயக்கம் கட்டப்பட்டது என அறிஞர் கருதுகின்றனர். "அன்புள் உருகி அரற்றுவன்........" என்று தொடங்கும் பாடல் திருமூலரின் அன்பின் பெருக்கைக் காட்டப் போதுமானது. இந்த வகையிலே அன்பு மொழியாகிய தமிழ் மொழிக்கு அரியதொரு சாத்திர தோத்திர நூலைத் தந்தவர் திருமூலர். அன்புடைமை என்னும் அதிகாரத்தில் மேல்வரும் பாடல் அன்பின் அதி உயர்ந்த நிலையை எடுத்துக்காட்டுகிறது.

அன்புஞ் சிவமு மிரண்டென்ப ரறிவிலார்
அன்பே சிவமாவ தாரு மறிகிலார்
அன்பே சிவமாவ தாரு மறிந்தபின்
அன்பே சிவமா யமர்ந்திருப் பாரே.

மெய்யறிவு இல்லாதவர்கள் அன்பு சிவம் ஆகிய இரண்டும் வெவ்வேறு பொருட்கள் என்று கருதுவர். இவர்கள் அன்புதான் சிவம் என்பதையும் அறியார். அருளாளர் வாக்குகளாலும், செயலாலும்; அன்பே சிவமாகித் தம்மை ஆட்கொள்வதை அறிந்தபின், தம் அன்புக்கும் சிவத்துக்கும் வேறுபாடின்மையை உணர்ந்து சிவமயமாய், அன்பு மயமாய் ஆனந்தத்தழுந்தி இன்பமாய் இருப்பர்.

பிறிதோர் பாடலில் திருமூலர் சிவபிரான் வீற்றிருக்கும் இடத்தைக் குறிக்கும் போது "அமரர்கள் நாதன் இடம் உடையார் நெஞ்சத்து இல்லிருந்தானே" என்கிறார். அன்பினில் விளைந்த ஆரமுதாகிய இறைவன், அன்பிலார் நெஞ்சத்து இல்லிருத்தல் கூடாததாலின் அன்புடையார் நெஞ்சமே அவன் திருக்கோயில். அன்புடையார் நெஞ்சமெல்லாம் அருளாளனும் சிவம் நடமாடும் அம்பலமாகும். எனவே அன்பு செய்க என்பது திருமூலர் காட்டும் திருநெறியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# சமய குரவர் சரிதம்

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்.

சோழநாட்டிலே சீகாழி என்பது ஓர் பழம்பதியாகும். அதற்குப் *பன்னிரு திருப்பெயர்கள் உண்டு. இங்கு ஒரு சிவஸ்தலம் இருக்கின்றது. அத்திருப்பதியில் சிவபாதவிருதயர் என்னும் பிராமணர் ஒருவர் இருந்தார். அவர் சிவபத்தியும் சைவ ஒழுக்கமும் உடையவர். அவர் மனைவியார் பெயர் பகவதியார். அக்காலத்தில் தமிழ் நாட்டில் சமணம், பௌத்தம் முதலிய புறச்சமயங்கள் மிகுதியாகப் பரவியிருந்தன. அதனால் சைவசமய ஒழுக்கம் குன்றிவரக் கண்ட சிவபாதவிருதயர் பெருங்கவலை கொண்டார். தமது குலதெய்வமாகிய சீகாழிப் பதியிலுள்ள தோணியப்பரிடம் சைவ சமயத்தை வளர்க்க ஒரு சற்புத்திரரைத் தந்தருள வேண்டுமென வழிபாடு செய்துவந்தார்.

இறைவன் திருவருளால் பகவதியார் திருவாதிரை நட்சத்திரத்தில் ஓர் உத்தம புத்திரரைப் பெற்றார். அப்பிள்ளைக்கு மூன்றும் வயதிலே ஒருநாள் தந்தையார் திருக்கோயிற் குளத்துக்கு, குளிக்கப் புறப்பட்டார். குழந்தை தன்னையும் கூட்டிச்செல்லுமாறு அழுதது. தந்தையார் தடுத்துப் பார்த்தார். குழந்தை உடன்படாது அழுதமையால் தம்முடன் அழைத்துச் சென்றார். கோயில் திருக்குளத்தில் நீராடும் போது குழந்தையைக் குளத்தின் படியில் இருத்திவிட்டு தாம் நீரில் இறங்கி மூழ்கினார். தந்தையாரைக் காணாமையால் பிள்ளை கோயிற் கோபுரத்தைப் பார்த்தவண்ணம் அம்மே! அப்பா! என்று அழுதது. குழந்தையின் அழுகைக் குரலைச் செவியுற்ற தோணியப்பர் உமாதேவியாரோடு இடபாரூடராய் எழுந்தருளி, அக்குழந்தைக்கு அருள் செய்யும் பொருட்டு 'இக்குழந்தைக்கு ஞானப்பால் ஊட்டுதி' என்று பெரிய

---

* பிரமபுரம், வேணுபுரம், புகலி, வெங்குரு, தோணிபுரம், பூந்தராய், சிரபுரம், புறவம், சண்பை, காழி, கொச்சைவயம், கழுமலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாயகியம்மையாராகிய உமையம்மைக்குப் பணித்தார். அம்மையார் குழந்தையின் கண்ணீர் துடைத்து ஞானப்பாலை ஊட்டியருளினார். குழந்தையின் அழுகையும் தணிந்தது.

தந்தையாராகிய சிவபாதவிருதயர் தம் நியமங்களை முடித்துக் கொண்டு கரையேறி குழந்தையிடம் வந்தார். பிள்ளைக்குப் பாலூட்டப்பட்டிருப்பதைக் கண்ட சிவபாதவிருதயர் ''யாரிடத்து பாலுண்டாய்'' என்று கோபத்துடன் கேட்டார். பிள்ளையார் கண்களினின்றும் நீர் சொரிய ஆகாயத்தைச் சுட்டிக்காட்டி, ''தோடுடைய செவியன்'' என்னும் தேவாரத்தைப் பாடியருளினார். குழந்தைக்குப் பால் ஊட்டியவர்கள் இறைவனும் தேவியுமே என்பதை உணர்ந்து, குழந்தையுடன் திருக்கோயிலுக்குச் சென்று வணங்கினார்.

சிறுவயதிலேயே சிவன் சத்தி இருவராலும் ஆளப்பட்டமையால் ஆளுடையபிள்ளையார் எனவும், சிவஞானத்தோடு சம்பந்தப்பட்டதால் ஞானசம்பந்தப் பிள்ளையார் என்னும் பெயரையும் பெற்றார்.

திருஞானசம்பந்தப் பிள்ளையார் அடுத்தநாள் அதிகாலையில் ஆலயஞ் சென்று வணங்கிக் கொண்டு, திருக்கோலக்கா என்னும் திருப்பதியை அடைந்து திருப்பதிகம் பாடத் தொடங்கினார். இறைவன் அருளால் ஸ்ரீ பஞ்சாட்சரம் பொறிக்கப்பெற்ற பொற்றாளம் கிடைக்கப்பெற்றார். வேதசிவாகமங்கள் தழைக்கும்படி திருவவதாரம் செய்தருளிய பிள்ளையாரை மீண்டும் சீகாழிக்குத் தந்தையார் தோளின்மேல் தூக்கிச் சென்றார்.

பகவதியார் பிறந்த ஊராகிய திருநனிப்பள்ளிக்குச் சென்று இறைவனை வணங்கித் திருப்பதிகம் பாடிச் சிலகாலம் அங்கு தங்கியும் இருந்தார். பின்னர் வரும் மார்க்கத்தில் தலைச்சங்காடு திருவலம்புரம், பல்லவனீச்சரம், திருச்சாய்க்காடு, திருவெண்காடு, திருமுல்லைவாயில் என்னும் தலங்களையடைந்து சுவாமி தரிசனஞ்செய்து திருப்பதிகம் பாடி மீண்டும் சீகாழிப்பதியையடைந்து தோணியப்பரை வணங்கித் துதித்துத் தம் மாளிகையில் இருந்தார். இங்கிருக்கும் நாளில் திருமயேந்திரப்பள்ளி, திருக்குருகாவூர் முதலிய இடங்களுக்கும் சென்று வணங்கித் திருப்பதிகம் பாடியருளினார்.

சிதம்பரத்திற்கு அண்மையிலுள்ள திருஎருக்கத்தம்புலியூரிலுள்ள திருநீலகண்டப் பெரும்பாணர் ஞானசம்பந்தரின் பெருமைகளைக் கேள்வியுற்று, அவருடன் கேண்மைபூண்டு அவர் செல்லும் தலங்கள் தோறும் தாமும் சென்று, அவர் பாடியருளும் தேவாரப் பதிகங்களை யாழில் ஏற்றி வாசித்து வருவாராயினர். சிதம்பரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலிய தலங்களுக்குச் சென்று பின் திருநெல்வாயிலரத்துறை என்னும் திருப்பதியைத் தரிசிக்க விரும்பி, தந்தையார் தோளினின்றும் இறங்கி நடந்து செல்வாராயினர். நடந்து சென்று களைப்படைந்தமையால் வழியில் மாறன்பாடி என்னும் இடத்தில் அயர்ச்சியுற்று ஐந்தெழுத்தோதிக் கொண்டு அங்கிருந்தார். பரமேசுவரன் அருளால் முத்துச் சிவிகை, முத்துக்குடை, முத்துச்சின்னங்கள் பிள்ளையாருக்குக் கிடைக்கப் பெற்றன. அவற்றை ஏற்றுக் கொண்டதும் "எந்தையீசனெம் பெருமான்" என்னும் பதிகம் பாடியருளியபின் சீகாழியை அடைந்தார்.

பின்னர் உபநயனம் என்னும் பூணூர்ச்சடங்கின் போது அங்கே வந்த அந்தணர்க்கெல்லாம் ஐந்தெழுத்தின் பெருமையை உபதேசித்து "துஞ்சலும் துஞ்சலிலாத போழ்தினும்" என்னும் பஞ்சாட்சரப் பதிகத்தைப் பாடியருளினர். இவர் பெருமையை அறிந்த திருநாவுக்கரசு நாயனர் அவரை நேரில் தரிசிக்கும் பொருட்டுச் சீகாழிக்கு வந்தார். இவர் வருகையை அறிந்த ஆளுடைய பிள்ளையார் எதிர் கொண்டழைத்து வந்து உபசரணை செய்தார். சிலநாள் தங்கிய பின் விடைபெற்று மீண்டார். அதன்பின் ஞானசம்பந்தர் பல தலங்களையும் தரிசித்துப் பதிகம் பாடியருளியபின் திருப்பாச்சிலாச்சிரமம் என்னும் பதியை அடைந்து வணங்கினர். அங்கே கொல்லிமழவன் என்னும் அரசன் மகள் முயலகன் என்னும் நோயால் வருந்துவதைக்கண்டு "துணிவளர் திங்கள்" என்னும் திருப்பதிகம் பாடி அந்நோயைத் தீர்த்தருளினர். பின் செங்குன்றூர் என்னும் திருப்பதியை அடைந்த வேளையில் பிள்ளையாருடன் சென்ற அடியார்களுக்கு பனியால் விஷசுரநோய் பீடித்தபோது "அவ்வினைக்கிவ்வினை" என்னும் திருநீலகண்டப் பதிகம் பாடி அந்நோயை நீக்கியருளினர். அதன்பின் திருப்பட்டீச்சுரம் என்னும் தலத்தில் வெய்யில் அதிகமானதால் இறைவனருளால் முத்துப்பந்தர் கிடைக்கப் பெற்றார். இவ்விடத்தில் "பாடன் மறைசூடன்" என்னும் திருப்பதிகம் பாடியருளிய பின்னர், திருவாவடுதுறையென்னும் பதியையடைந்து சிலநாள் தங்கியிருந்தார். அங்கிருக்கும் நாளில் சிவபாதவிருதயர் வேள்வி செய்வதற்குத் தமக்குப் பொருள்தருமாறு கேட்டார். அவ்வேளையில் பிள்ளையார் "இடரினும் தளரினும்" என்ற திருப்பதிகம் பாடியருளினர். இறைவனருளால் ஆயிரம் பொன் கொண்ட ஒரு பொன் முடிப்புக் கிடைக்கப்பெற்றது. அதனைத் தந்தையார் பெற்று தமது ஊருக்குச் சென்றார்.

திருவாவடுதுறையை விட்டகன்று திருநீலகண்டப் பெரும்பாணர் தாயார் பிறந்த இடமாகிய தருமபுரத்தை அடைந்தார். அங்கே "மாதர் மடப்பிடி" என்னும் திருப்பதிகத்தைப் பாடியருளினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருட்பதிகத்தினுலவ்வை பூமியிலுள்ள மக்களின் கண்டத்திலும் யாழ் முதலிய இசைநாற் கருவிகளிலும் அடங்காமையைக் காட்டியருளி ஞர். பின்னர் தருமபுரத்தைவிட்டு நீங்கி திருநள்ளாற்றை அடைந்து அங்குள்ள சுவாமியை வணங்கி "போகமார்த்த பூண்முலையாள்" என் னும் திருப்பதிகத்தைப் பாடியருளினுர். பின்னர் திருச்சாத்த மங்கை என்னும் தலத்தில் திருநீலநக்கநாயனுரோடு சேர்ந்து, அயவந்தி என்னும் தலத்தில் சுவாமி தரிசனம் செய்து, திருநீலநக்கநாயனுரைச் சிறப்பித்துப் பதிகம் பாடியருளினுர்.

அதன்பின்னர் திருநாகைக்காரோணம், கீழ்வேளுர் முத லிய தலங்களை வணங்கும் பொருட்டுச் சென்றுர். அங்ஙனமாக திருச் செங்காட்டங் குடியில் வாழும் சிறுத்தொண்ட நாயனுர் பிள்ளையா ரின் மகத்துவத்தைக் கேள்வியுற்று, எதிர்கொண்டழைத்துச் சென் ருர். இருவருமாக அங்குள்ள கணபதீச்சரம் என்னும் ஆலயம் சென்று வணங்கி சிறுத்தொண்டர் திருத்தொண்டினைப் பாராட்டிப் பதிகம் பாடியருளினுர். பின்னர் திருமருகல் என்னும் தலத்துக்குச் சென்று சுவாமி தரிசனம் செய்து அங்குள்ள மடத்தில் இருந்தார். வேருேர் மடத்தில் படுத்துறங்கிய ஒரு வணிகனும் அவன் மணஞ்செய்யவிருந்த கன்னியும் படுத்துறங்கிய வேளையில் வணிகன் நாகந்தீண்டி இறந் தான். கன்னி கதறினுள். பிள்ளையார் சென்றுஅவள் வரலாற்றை அறிந்து இரக்கங்கொண்டு "சடையா யெனுமால்" என்னும் திருப்பதி கம் பாடி விஷத்தை நீக்கி அவனை எழுப்பிக் கொடுத்தருளினுர். பின் னர் திருப்புகலூரில் முருகநாயனுருடைய மடத்திற் சிலநாள் தங்கி யிருந்து வர்த்தமானீச்சரத்தை வணங்கி முருகநாயனுருடைய சிறப் புக்களைத் தேவாரத்தில் பாடியருளினுர்.

திருஞானசம்பந்தப் பிள்ளையார் அங்கே எழுந்தருளியிருக்குங் காலத்தில் திருநாவுக்கரசுநாயனுர் திருவாரூரை வணங்கிக் கொண்டு திருப்புகலூரை வணங்குதற்கு அடியார்களோடும் எழுந்தருளும் செய்தி கேட்டு, பேராசையுடன் அவரை எதிர்கொள்ளும் பொருட்டு திருப்புகலூரின் எல்லையைக்கடந்து சென்றுர். திருநாவுக்கரசு நாய னுரும் பிள்ளையாருக்கு எதிரே வந்தார். இருவரும் ஒருவரை ஒருவர் வணங்கி, நல்வரவு வினவி மகிழ்ந்தார்கள். அப்போது பிள்ளையார் அப்பமூர்த்தியை நோக்கி "அப்பரே, திருவாரூரில் நிகழ்ந்த சிறப் பைச் சொல்லும்" என்று கேட்க, அப்பமூர்த்தி திருவாதிரைச் சிறப் பைத் திருப்பதிகத்திலே சொல்லியருளினுர். பிள்ளையார் அதுகேட்டு, "நான் திருவாரூருக்குச் சென்று வணங்கி மீண்டு வருவேன்" என்று கூறினுர். அப்பமூர்த்தி திருப்புகலூருக்குப் போக, திருஞான சம்பந்த மூர்த்தி நாயனுர் திருவாரூரை அடைந்து வன்மீக நாதரை வணங் கித் திருப்பதிகம் பாடியருளியபின் அங்கே தங்கியிருந்தார். அங்ஙனம் இருக்கும் நாளில் திருவலிவலம், திருக்கோளிலி முதலிய பதிகளுக் குச் சென்று சுவாமி தரிசனம் செய்து திருவாரூரில் இருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் திருநாவுக்கரசு நாயனாரைக் காண்பதற்கு திருப்புகலூருக்குச் சென்றார். பிள்ளையாரை அப்பமூர்த்தியும் முருகநாயனாரும் எதிர் கொண்டழைத்து சுவாமி தரிசனஞ் செய்தனர். பின்பு முருக நாயனார் திருமடத்தில் இருந்தருளினார். இருக்கு நாளில் திருநீலநக்க நாயனாரும் சிறுத்தொண்ட நாயனாரும் அவ்விடத்திற்கு வந்து அவரோடு இருந்தார்கள்.

சிலநாட் சென்றபின் ஞானசம்பந்தரும் நாவுக்கரசரும் ஏனைய சிவஸ்தலங்களைத் தரிசிக்க விரும்பிப் புறப்பட்டு முருகநாயனாரை அங்கே இருக்கவும், திருநீலநக்கரையும், சிறுத்தொண்டரையும் தத்தம் ஊருக்குச் செல்லவும் அனுமதி செய்து செல்வராயினர். பிள்ளையார் அப்பமூர்த்தியை விட்டுப் பிரியாமல் இருவருமாகப் பலதலங்களையும் தரிசித்துக் கொண்டு திருவம்பரை அடைந்து, மாகாளத்தில் இருக்கின்ற சுவாமியை வணங்கித் திருப்பதிகம்பாடி அப்பமூர்த்தியோடும் அந்தப்பதியில் தங்கி இருந்தனர். அங்கே கோச்செங்கட் சோழநாயனார் செய்த பெருந்திருக்கோயிலையடைந்து சுவாமி தரிசனஞ்செய்து, அந்நாயனாரைச் சிறப்பித்துத் திருப்பதிகம் பாடினார். சிலநாட் சென்றபின் திருக்கடவூர் செல்லையில் எதிர்கொண்டு வணங்கிய குங்கிலியக்கலய நாயனார் முதலாகிய அடியார்களோடு திருவீரட்டானத்திற் சென்று சுவாமி தரிசனஞ் செய்து, திருப்பதிகம் பாடி, திருக்கடவூர் மயானத்தையும் வணங்கிக் கொண்டிருந்தார்.

சில நாளாகியபின் திருக்கடவூரை நீங்கி திருவாக்கூர், திருமீயச்சூர், திருப்பாப்புரம் என்னும் தலங்களை வணங்கிகொண்டு திருவீழிமிழலையை அடைந்து பதிகம் பாடியருளினார். அப்பமூர்த்தியும் அவ்விடம் வந்து சேர்ந்தார்.

ஆளுடைய பிள்ளையாரும் ஆளுடை அரசரும் திருவீழிமிழலையிற் பெருமானை வணங்கித் துதித்துக் கொண்டு, அங்குள்ள மடங்களிலிருக்கும் போது, சிலகாலம் மழையில்லாதொழிய பஞ்சம் உண்டானது. அதனாற் சிவனடியார்களும் அங்கு வசிக்கும் மக்களும் பசியால் வருந்தினார்கள். அவ்வேளையில் திருவீழிமிழலைப் பெருமான் தந்திருக்கோயிலில் உள்ள இருபீடங்களிலே, இருநாயன்மார் பொருட்டும் நாள்தோறும் ஒவ்வொரு பொற்காசு வைத்தாள நாயன்மாரிருவரும் அப் பொற்காசையெடுத்துச் சிவனடியார்களுக்கும் அங்குள்ள ஏனைய மக்களுக்கும் அன்னதானஞ் செய்து வந்தார்கள். இறைவனருளால் சிலகாலஞ் செல்லப் பஞ்சம் ஒழிந்தது. நாயன்மாரிருவரும் அத்தலத்தை விட்டகன்று ஏனைய தலங்களையும் தரிசித்துக் கொண்டு வேதாரணியம் (திருமறைக்காடு) வந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்தனர். அங்குள்ள திருக்கோயிலின் கதவு முற்காலத்தில் வேதங்களாற் பூசித்து அடைக்கப்பட்டிருந்தமையால் அதன்பின் அடியார்கள் எல்லோரும் வேறொரு திருவாசலையிட்டு அதன் வாயிலாக வேதாரணியேசுவரரை வணங்கி வந்தனர்.

அந்நிலைகண்ட நாயன்மாரிருவரும் வேதாரணியேசுவரரை நேராகத் தரிசிக்க விரும்பினார்கள். அப்பர் சுவாமிகள் "பண்ணினேர் மொழியாளுமை பங்கரோ" என்னும் தேவாரத் திருப்பதிகத்தைப் பாட, திருக்கதவுகள் தாமே திறந்தன. நாயன்மார் இருவரும் நேர் வாயிலாகத் தரிசனம் செய்தனர்.

பின்னர் சம்பந்த சுவாமிகள் "சதுரம் மறைதான்" என்னும் பதிகத்தைப்பாடி திருக்கதவுகள் மூடச்செய்தார். அந்நாள் தொடக்கம் அத்திருக்கதவுகள் மற்றைக் கதவுகளைப் போலத் திறத்தலும் மூடுதலும் அமைந்திருந்தன. சமயகுரவரிருவரும் சில நாள் அங்கே தங்கியிருந்தனர்.

அந்நாளில் பாண்டி நாட்டிலே சைவசமயம் குன்ற சமண சமயம் பரவத் தொடங்கியது. அந்நாட்டையாளும் கூன்பாண்டியனென்னும் அரசனும் சமண குருமார் போதனையில் அகப்பட்டுச் சமணனானான். அதனைக்கண்ட பாண்டிமாதேவியாகிய மங்கையர்க்கரசியாரும் முதன் மந்திரியாராகிய குலச்சிறையாரும் பெரிதுங் கவலை கொண்டனர். பிள்ளையார் செய்யும் அற்புதங்களைக் கேள்வியுற்ற அந்த இருவரும், பிள்ளையார் அப்பொழுது திருமறைக் காட்டில் எழுந்தருளியிருக்கின்றார் என்பதையறிந்து, அப்பிள்ளையாரைத் தங்கள் நாட்டிற்கு அழைத்துச் சமண சமயத்தை யொழித்துப் பிள்ளையார் மூலம் சைவசமயத்தைத் தாபிக்க நோக்கங் கொண்டு, மதுரையிலிருந்து சிலஅன்பர்களை வேதாரணியத்தில் எழுந்தருளியிருக்கும் ஞானசம்பந்தரிடம் விடுத்தார்கள்.

அங்ஙனம் சென்ற அன்பர்கள் வேதாரணியத்தையடைந்து திருஞானசம்பந்தப்பிள்ளையாரைத் தரிசித்து வணங்கி, தாங்கள் அங்கே வந்த நோக்கத்தை விண்ணப்பஞ் செய்தனர். அதனைக்கேட்ட ஆளுடையபிள்ளையார் திருவுளஞ் சம்மதித்து, பாண்டி நாட்டிற்குப் புறப்படுதலும், அதனையுணர்ந்த அப்பர் சுவாமிகள் "பிள்ளையாரே! நீரோ சிறுபாலரானீர்; அங்குள்ள சமணர்களோ கொடியவர்கள்; வயசேறிய எனக்கு அச்சமணர்கள் அன்று விளைத்த துன்பங்களை நான் அநுபவவாயிலாக அறிந்துள்ளேன்; ஆதலால் பாண்டிநாட்டிற்குப் புறப்படுதல் புத்தியன்று" என அருள் மீதூரக் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனைக் கேட்ட பிள்ளையார் "வேயுறு தோளி பங்கன்" என்னும் கோளறு திருப்பதிகத்தைப் பாடி அப்பரிடம் அநுமதி பெற்று வேதவனநாதரை வணங்கி விடைகொண்டு செல்வாரா யினர். செல்லும் மார்க்கத்தில் தலங்கள் தோறும் சென்று சென்று ஆங்காங்குள்ள பெருமானை வணங்கித் திருப்பதிகம் பாடிக்கொண்டு ஆளுடைய பிள்ளையார், தம்பரிசனரும் அடியார்களும் தம்மைச்சூழ்ந்து செல்ல பாண்டிநாட்டைச் சமீபித்தார்.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் பாண்டிநாட்டின் தலைநக ராகிய மதுராபுரியின் எல்லையை அடைந்தனர் என்பதையறிந்த மங்கையர்க்கரசியார் மனத்திலடங்கா மகிழ்ச்சியடைந்து, தங்கள் முதன் மந்திரியாராகிய குலச்சிறையாருக்குத் தெரிவிக்க மந்திரியா ரும் சுவாமிகளை எதிர்கொண்டழைக்கும் வண்ணம் சென்று வணங் கினார். பிள்ளையார் குலச்சிறையாரை அருளுடன் நோக்கி இன் மொழி கூறித் திருவாலவாய்த் திருக்கோயில் எத்திசையில் இருக்கின்றதென வினவ, உன்னத சோலைகள் கோபுரங்களோடு புலப்படுந் திசையைச் சுட்டிக்காட்டி "அத்திசையிற் காணப்படு வதே ஆலவாய் அமலன் திருக்கோயில் சுவாமி" எனக்கூறி வணங்கு தலும், பிள்ளையார் "மங்கையர்க்கரசி" என்று தொடங்கும் திருப் பதிகத்தைப் பாடிக்கொண்டு கைகளுந் தலைமேலேறக் கும்பிட்டபடி நடந்து திருக்கோயிலையடைந்தனர்

ஆலவாய்த் திருக்கோவிலிலுள்ள தூலலிங்கமாகிய திருக்கோ புரத்தை வணங்கிக் கொண்டு கோவிலினுள்ளே சென்று மும்முறை வலம் வந்து சந்நிதியையடைந்து அன்பு பெருக என்பு உருக, உள் ளங் குளிரச் சொக்கலிங்கப் பெருமானாரை, அடியற்ற மரம்போல வீழ்ந்து வணங்கி, எழுந்து நின்று துதித்தார். திருக்கோயிலில் மங்கையர்க்கரசியாரையும் கண்டு மகிழ்ந்து, கோயிலின் புறத்தே வந்து ஒரு திருமடத்திலே சிவனடியாரோடும் பரிசனரோடும் எழுந்தருளியிருந்தார். அங்ஙனமாக பொழுதுபட்டது.

இராக் காலமாதலாலும் திருமடத்திலேயுள்ள அடியார்களும் பரிசனரும் தமிழ்மறையாகிய தேவாரப் பதிகங்களை ஓத, அதனால் எழுந்த ஒலி சமணகுருமார் காதிற்பட்டது அவர்கள் மனம் பொறு ராய்த் தங்கள் அரசனாகிய கூன்பாண்டியனிடம் சென்று, சோழ நாட்டிலிருந்து வந்த சைவச்சிறுவர் ஒருவர் மதுரைக் கோவிலுக் கணித்தாயுள்ள திருமடத்திலே பல்லாயிரக்கணக்கான பரிசனரோடு இருப்பதையும், அவர்கள் சிவனுக்குரிய பாடல்களைப் பாடுவதையும் அந்தச் சைவச்சிறுவர் சமணமதத்தைக் கெடுத்துச் சைவசமயத்தை நிலைநாட்டிச் செல்ல நோக்கங் கொண்டுள்ளாரென்பதையும் அரச

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளிடம் முறையிட்டு வருந்தினார்கள். "அதற்கு நான் செய்ய வேண்டுவது என்ன?" என்று அரசன் சமணகுருமாரைக் கேட்க, அவர்கள் "மகாராசாவே, நீர் ஒன்றுஞ் செய்ய வேண்டாம்; அச்சைவர்கள் வந்திருக்கும் திருமடத்திற்கு எங்கள் மந்திரவலியால் நெருப்புப் பற்றவைத்து அச்சைவரை எரித்துச் சாம்பராக்க அநுமதி தந்தால் அமையும்" என்றார்கள். அரசன் அதற்குச் சம்மதித்தான்.

சமணர்கள் நள்ளிரவிற் கரந்து திருமடத்தைச் சமீபித்து மந்திரவலியால் தீமூட்டித் திருமடத்திற் பற்றவைக்க முயன்றார்கள். நெருப்புப் பற்றவில்லை. அதனைக் கண்ட சமணர்கள் நெருப்புத்தழலை அதிகமாக அள்ளி திருமடத்தின் கூரையுள் ஒருபக்கத்திற் செருக, அத்தீ மூண்டு எரிய, அதனையுணர்ந்த அங்குள்ள அடியார்கள் உடனே திருஞான சம்பந்த மூர்த்தியிடம் முறையிட, பிள்ளையார் உண்மையையுணர்ந்து "குடிகள் செய்யும் தீமை அரசனைச் சேரும்; அன்றியும் இந்த அரசன் அவர்கள் செய்யுந் தீமைக்கு உடன்பாடாயினன். ஆனதால் இந்நெருப்பு இம்மடத்தை விட்டகன்று "பையவே சென்று பாண்டியனைச் சுடுவதாக" என்று திருவுளத்தில் கொண்டு "செய்யனே திருவாலவாய்" என்னும் தேவாரத்தைப் பாடத்தொடங்கி "பையவே சென்று பாண்டியற்காகவே" என முடித்தருளினார். திருமடத்திலிட்ட தீ உடனே அம்மடத்தை விட்டகன்று, பாண்டியனையடைந்து வெப்புநோயாகி அவனுக்கு வேதனையுறுத்தத் தலைப்பட்டது.

அந்த வெப்புநோயைச் சகிக்கலாற்றாத பாண்டியன் வைத்தியர் பலரையும், சமண குருமார்களையும் வருவித்தான். வந்தவர்கள் "மணி, மந்திர, ஔஷதம்" என்னும் மூவகையான சிகிச்சையைச் செய்தும் அந்நோயை மாற்ற முடியவில்லை. நோய் அதிகரித்தலையுணர்ந்த பாண்டியன் மிகவருந்திச் சமணர்களைச் சினந்து "நீவிர் எல்லீரும் இவ்விடம் விட்டுப்போய்விடுங்கள்" என்று சொல்லி அறிவு சோர்ந்தான். அரசன் வெப்புநோயால் வருந்துவதைக் கண்ட பாண்டிமாதேவியாரும் குலச்சிறையாருங் கலக்கமடைந்து அரசனை வணங்கி "திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாருக்குச் சமணர்கள் செய்த தீங்கினாலேயே உம்மை இந்த வெப்பு நோய் அடுத்தது; ஆதலால், இந்தப்பாதகர்கள் செய்யும் மருந்து இந்நோயை வளர்க்குமேயன்றித் தீர்க்கமாட்டாது; ஞானசம்பந்தர் திருவுள மிரங்கித் திருவருள் நோக்கஞ் செய்வராயின், இந்த வெப்பு நோய் மாத்திரமா? எவர்களாலும் நீக்குதற்கரிய பிறவி நோயும் நீங்கிவிடும்; இது சத்தியம்" என்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனைக் கேட்ட அரசன் "என்னைப் பிடித்து வருத்தும் நோயை
நீக்கி வெல்பவர் பக்கம் நான் சார்வேன்" என்று கூறினன். உடனே
குலச்சிறையார் பிள்ளையார் இருக்கும் திருமடத்திற்குச் சென்று
விடயத்தை விண்ணப்பஞ்செய்ய, பிள்ளையார் அதற்கிசைந்து திருவால
வாய்த் திருக்கோயிலுக்குச் சென்று சுவாமி தரிசனஞ்செய்து "காட்டு
மாவதுரித்து" "வேத வேள்வியை நிந்தனை" என்ற திருவாக்குக்
கொண்ட திருப்பதிகங்களைப் பாடிக் கொண்டு அரசனுடைய மாளி
கைக்கு எழுந்தருளுதலும், மங்கையர்க்கரசியார் குலச்சிறையாரோடு
பிள்ளையாரை வரவேற்றுப் பணிந்து, அரசன் கிடக்கும் இடத்திற்கு
அழைத்துச் சென்றனர். அரசன் படுக்கையிற் கிடந்தபடி பிள்ளை
யாரைக் கைகூப்பி வணங்கித் தன் தலைமாட்டில் ஒரு பொற் பலகை
இடுவித்து அவரை அதன்கண் இருக்கச்செய்தான். பிள்ளையார் சைவத்
திருவேடப் பொலிவைக் கண்ட மாத்திரத்தே அவனைப் பிடித்த நோய்
குறையத் தொடங்கியது. கும்பிட்ட அரசன் பிள்ளையாரை நோக்கி,
"சுவாமியுடைய ஊர் எது" என்று பணிவுடன் வினவ, பிள்ளையார்
"பிரமனூர் வேணுபுரம்" என்றற் றொடக்கத் தேவாரத்திருப்பதிகத்
தைப் பாடியருளி, தாம் திருவவதாரஞ் செய்த ஊர் சீகாழி என்பதை
யும, அத் திருப்பதிக்குரிய பல நாமங்களையும், அதன் தொன்மையை
யும, அங்குக் கோயில் கொண்டருளிய பெருமானுடைய மகத்துவத்
தையும் எடுத்து விளக்கியருளினர். சமணர்கள் பெருங்கலக்க
மடைந்து பிள்ளையாரைச் சமயவாதில் வெல்லலாமென நினைத்
தார்கள்.

அங்ஙனம் நினைத்துத் துள்ளியெழுந்து சமணர்கள் சூழ, அதனைக்
கண்ட மங்கையர்க்கரசியார், "எங்கள் பிள்ளையாருக்குச் சமணர்கள்
யாதும் இடையூறு செய்வரோ" என் றெண்ணிச் சஞ்சலமுற்ற தேவியார்
துன்பத்தை நீக்கியருள பிள்ளையார், "மானினேர் விழி மாதராய்"
என்னும் தேவாரத் திருப்பதிகத்தைப் பாடி மங்கையர்க்கரசியாரைத்
தேற்றியருளினர். அப்பொழுது பாண்டியன் சமணர்களைப்
பார்த்து "சமயவாதம் வேண்டாம், நீங்கள் கொண்ட தெய்வத்தின்
அருளால், இப்பொழுது என்னைப் பிடித்து வருத்தும் நோயை மாற்று
வீர்" என்றான். சமணர்கள் அதற்குடன்பட்டு, அரசனுடைய இடப்
பக்கத்திலுள்ள வெப்புநோயை மந்திரம் சொல்லி, நீர் தெளித்து
மயிற்பீலிகொண்டு தடவுதலும் அவ்விடப் பாகத்தேயுள்ளநோய் குறை
தலின்றி அதிகரித்தது. உடனே அரசன் பிள்ளையாரை அழைக்க, பிள்ளை
யார் ஆலவாய்ப் பெருமானைச் சிந்தித்துக் கொண்டு "மந்திரமாவது
நீறு" என்னும் திருப்பதிகத்தைப் பாடியவண்ணம் தமது அருமைத்
திருக்கரத்தில் விபூதிகொண்டு அரசனுடைய வலப்பாகத்தே தடவு
தலும், அப்பாகத்திலுள்ள வெப்புநோய் அறவே நீங்கி இடப்பாகத்திற்

சென்றுசேர, அரசன் அதனாற் பெரிதும் வருந்தியவனாய்ச் சமணர் களைச் சினந்து நோக்கி ''நீவிர் தோற்றீர்; ஆதலால் இவ்விடம் விட்டு அகலுமின்'' எனக் கூறி, இடப்பாகத்திலுள்ள நோயையும் அறவே மாற்றியருளும் வண்ணம் பிள்ளையாரை வேண்டினான். சுவாமிகள் தம் திருக்கரத்தால் இடப்பாகத்தே விபூதி தடவி அரசனைப் பிடித்து வருத்தும் நோயை அறவே நீக்கியருளினார்; உடனே அரசன் படுக்கை விட்டெழுந்து பிள்ளையாரை வணங்க, அவரும் அவனுக்கு அருள் புரிந்தார்.

தோல்வியுற்ற சமணர்கள் எவ்வகையிலேனும் பிள்ளையாரைத் தாங்கள் வெல்லவேண்டுமென்ற எண்ணங்கொண்டு பகைத்தார்கள். அதனை யுணர்ந்த பிள்ளையார் ''உங்கள் சமயக் கொள்கையை எடுத்து எம்முன் பேசுங்கள்'' என்று வாதுக்கழைக்க, சமணர்கள், அதற்குடன் படாமல் ''கண்ணுக்குப் புலனாகும் அற்புதங்களைச் செய்து உம்மை வெல்லுவோம்'' என்று கூறி தம் சமய உண்மையை ஏட்டிலெழுதி, ''எங்கள் ஏடு நெருப்பிலிடும்போது வேவதன்றிப் பச்சென்றிருந்தால் வெற்றி எங்கள் பக்கமாகும்'' என்று கூறினார்கள். உடனே ஞான சம்பந்தர் தாம் பாடியருளிய தேவாரப் பதிகங்களைக் கொண்ட திரு வேட்டிலே கயிறு சார்த்தி ''போகமார்த்த பூண்முலையாள்'' என்னும் திரு நள்ளாற்றுப் பதிகங்கிடைக்க, அதனைக் கையில் எடுத்துக்கொண்டு நள்ளாற்றுப் பெருமானைச் சிந்தித்து வணங்கி'' தளிர் இளவள ரொளி...நள்ளாறர் நாமமே, மிளிர் இளவளர் எரியிடி லிவை பழுதிலை மெய்ம்மையே'' என்ற பதிகத்தைப் பாடி அனைவருங் காணத் தீயிலிட் டனர். அவ்வேடு வெந்து எரியாது பச்சையாய் விளங்கிற்று.

சமணர்கள் தங்கள் ஏட்டைச் சந்தேகத்தோடு தீயிலிட்டனர். இட்டமாத்திரத்தே அது வெந்து சாம்பராயிற்று. அதனைக்கண்டு கலக்கங்கொண்ட சமணர்கள் தத்தம் சமய உண்மைகள் எழுதப்பட்ட ஏடுகளை, வேகமாகப் பாயும் ஆற்றிலிட்டால், எவரிட்ட ஏடு ஆற்றில் அள்ளுண்டு செல்லாமல் எதிரேறிச் செல்லுமோ, அந்த ஏட்டுக்குரிய வரே வெற்றி பெற்றவராவர் என்றார்கள். இதனைக் கேட்ட குலச்சிறை நாயனார் ''இம்முறையும் தோல்வியடைபவருக்கு என்ன தண்டனை'' என்றுகேட்க, அவர்கள் பெருங்கோபம் மூளப் பெற்றவர்களாய் ''இந்த வாதத்தில் இழந்தோமாகில், இவ்வேந்தனே எங்களைக் கழுவி லேற்றுக'' என்றார்கள். கேட்ட அரசன் ''நேர்வதை யறியாது சீற்றத் தாற் சபதமிடுகின்றீர்கள்; விரும்பிய வண்ணம் செய்யுங்கள்'' என, சமணர்கள் ''அத்தி நாத்தி'' என்று ஏட்டி லெழுதி அதனை வைகை யாற்றிலிட, ஆற்று நீரோடு அள்ளுண்டு அந்த ஓலை கடலையடைந்தது. அது கண்ட சமணர்கள் சிந்தை கலங்கித் திருஞானசம்பந்தப் பிள்ளை யாரைநோக்கி ''உம்முடைய ஏட்டையும் இவ்வாற்றில் இட்டால் தானே உண்மை வெளிப்படும்'' என்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடனே, பிள்ளையார் ''வாழ்க அந்தணர்'' என்னும் திருப்பதிகத்தை ஒரு ஏட்டில் வரைந்து ஆலவாய்ப் பெருமானைத் தியானித்த வண்ணம் ஆற்றிலிடுதலும் அவ்வேடு நீரைக் கிழித்துக்கொண்டு எதிரேறிச்செல்ல அதுகண்ட குலச்சிறையார் அதன் செலவை நோக்கியபடி ஒரு குதிரைமீது ஏறிக்கொண்டு விரைந்து சென்றார். ஏடு எதிரேறிச் செல்வதைக் கண்ட ஆளுடைய பிள்ளையார் அதன் செலவைத் தடுக்க நினைந்து ''வன்னியு மத்தமும்'' என்றற் றொடக்கத் தேவாரத் திருப்பதிகத்தைப் பாடியருள, ஏடு அப்பாற் செல்லாது நட்டாற்றிலே தங்கியது. அதுகண்ட குலச்சிறையார் குதிரை விட்டிறங்கி, ஆற்றிடைச் சென்று அத்திருவேட்டினை இருகரங்களாலும் எடுத்துக்கொண்டு மீண்டும் குதிரையிலேறிவந்து, எல்லாருங் காண, அரசனுக்குக் காட்டினார். அரசன் அற்புதமடைந்து குலச்சிறையாரை நோக்கிச் ''சமணர்கள் முன்பு தாமே ஒப்புக்கொண்டபடி அவர்களைக் கழுவிலேற்றுக'' எனக் கட்டளையிட்டான். இதனைக் கேட்ட ஆளுடைய பிள்ளையாரும் ''இகலில ரெனினும் சைவரிருந்து வாழ் மடத்திற் றீங்கு, தகவிலாச் சமணர் செய்த தன்மையாற் சாலுமென்றே, மிகையிலா வேந்தன் செய்கை விலக்கிடாதிருந்தார்.''

பிள்ளையாரிருந்த திருமடத்திற்குத் தீமூட்டிய எண்ணாயிரம் சமண குருமாரும் அபிமானத்தோடு கூடியவர்களாய்த் தாமே கழுவேறி மாண்டார்கள். பாண்டியராசன் அற்புதமும் அச்சமும் அடைந்தவனாய் பிள்ளையாரை மீளவும் வணங்கி, அவரருளிய விபூதியை ஏற்று ''சிவ சிவ'' என்று தன் நெற்றியிலும் பூசவேண்டிய ஏனைய அங்கங்களிலும் பூசினான். பிள்ளையார் தாம் பாடியருளிய ''வாழ்கஅந்தணர்'' என்னும் திருப்பதிகத்தில்'' வேந்தனு மோங்குக'' என்று பாடிய திருவாக்கின் விசேடத்தினால், பாண்டியன் தன்னுடம்பிலுள்ள கூன் நீங்கப் பெற்று நிமிர்ந்து ''நின்ற சீர் நெடுமாறன்'' என்னும் நாமத்தோடு விளங்கினான். பாண்டிநாட்டின் கண்ணே பழையபடி சைவசமயம் பரவச் சமணமதம் ஒழிந்தது.

அதன்பின்னர் ஆளுடைய பிள்ளையார் அந்நாட்டின் கண்ணேயுள்ள தலங்களையெல்லாம் தரிசித்துத் தேவாரப் பதிகங்கள் பாடி, பின் அந்நாட்டை விட்டகன்று சோழநாட்டிற்குச் சென்று காவிரிநதி தீரத்திலுள்ள தலங்களைத் தரிசித்துத் திருப்பதிகம் பாடி, அந்நதியின் அக்கரையிலுள்ளதாகிய திருக்கொள்ளம் புத்தூர் என்னுந் தலத்துக்குச்செல்லவிரும்பியபோது, நதி பெருக்கெடுத்து ஓடியதால் அங்குள்ள வள்ளக்காரர் மறுத்தனர். ஓர் வள்ளத்தைத் தாமே அவிழ்ப்பித்து அதன்கண் சிவனடியாரோடும் பரிசனரோடும் ஏறிக்கொண்டு ''கொட்டமே கமழும்'' என்பது முதலாக வுடைய தேவாரப் பதிகத்தைப் பாட, ஓடம் தானாகவே அவர்களை அக்கரையிற் சேர்த்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையார் கொள்ளம் புத்தூர்ப் பெருமானையும், வேறுபல தலங்களையும் வணங்கித் தேவாரப் பதிகங்கள் பாடியருளினார்.

பின்னர், அப்பர் சுவாமிகள், திருப்பூந்துருத்தி யென்னுந் தலத்திலே சுவாமிதரிசனஞ் செய்து கொண்டிருக்கிறாரென்பதைக் கேள்வியுற்றுப் பிள்ளையார் அத்தலத்துக்குச் சென்றார். பிள்ளையார் வருகின்றார் என்பதை யறிந்த அப்பர் சுவாமிகள் உடனே புறப்பட்டு எதிர்கொள்ளச் சென்று, ஆளுடைய பிள்ளையார் எழுந்தருளிவரும் சிவிகையைத் தாமும் பரிக்கவேண்டுமென்ற ஆவல் கொண்டவராய், எவரும் அறியாவண்ணம் அடியார் பரிசனர் கூட்டத்துட் கலந்து ஆனந்தமாகப் பிள்ளையார் எழுந்தருளிவரும் சிவிகையைத் தாங்குதலும், அப்பொழுது, ஆளுடைய பிள்ளையாரின் திருவுளமானது காரணமறியாது சஞ்சலமுற "எங்கள் அப்பர் எங்குற்றார்" என்று வினவினார்; "தங்கள் சிவிகையைத் தாங்கும் பேறு பெற்றேனாய் இங்குற்றேன்" என்றார் அப்பர். கேட்ட மாத்திரத்தே பிள்ளையார் சிவிகையினின்றுங் குதித்து "அப்பரே, இப்படிச் செய்தல் ஞாயமோ" என்று பரிவுடன் சொல்லி அவரை வணங்க, அவரும் இவரை வணங்கினார். அவர்கள் பத்தித்திறனைக்கண்ட அடியவர்கள் எல்லோரும் அற்புதமடைந்து அச்சமபகுரவர் இருவரையும் வணங்கினர்.

பின்னர் இருவரும் திருப்பூந்துருத்திப் பெருமானாரை வணங்கித் தேவாரம்பாடி, அத்தலத்தின் அயலிலுள்ளதாகிய திருமடத்தில் எழுந்தருளி யிருக்குங்கால், ஆளுடைய பிள்ளையார் தாம் பாண்டிநாட்டிற்குச் சென்றபோது, அந்நாட்டில் இறைவன் திருவருளால் நடந்த வைபவங்களை அப்பர்சுவாமிகளுக்குச் சொல்ல, கேட்ட அப்பர்சுவாமி இறைவன் திருவருளின் பெருமையையும், திருஞானசம்பந்தப் பிள்ளையாரின் பத்தித்திறத்தையும் பாராட்டி மகிழ்ந்தனர். அப்பர் சுவாமிகள் தாம் தொண்டைநாட்டிலுள்ள தலங்களைத் தரிசித்த வரலாற்றைப் பிள்ளையாருக்குச் சொல்ல, அவர் பின்னரும் சிலதலங்களைத் தரிசித்துக்கொண்டு தொண்டை மண்டலத்துக்குச் செல்வாராயினார்.

திருவோத்தூர் என்னும் தலத்திற் சிவனடியார் ஒருவருக்குரிய பனைகளெல்லாம் ஆண்பனைகளாய் வளர்ந்து பயன்தராது நிற்பதைக் கண்ட சமணர்கள், அந்த அடியாரகளைப் பரிகசித்தனர். அவ்வடியவர் ஆளுடைய பிள்ளையார் வரவையறிந்து அவரிடஞ் சென்று வணங்கி, சமணர்கள் தம்மை அவமதித்ததையும், அதற்காகிய காரணத்தையும் விண்ணப்பஞ்செய்ய, பிள்ளையார் "பூத்தேர்ந்தாயன" என்று தொடங்கும் தேவாரப்பதிகத்தைப் பாடி ஆண்பனைகளெல்லாவற்றையும் பெண்பனைகளாக்கிப் பயன் உதவச் செய்தார். அது கண்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமணர் தாம் முன்னர் செய்து. கொண்ட சபதத்தின்படி அவ்வூரை விட்டகன்றனர். பின்னர் ஞானசம்பந்தர் பல தலங்களையும் தரிசித்துத் தேவாரப்பதிகங்கள் பாடித் திருக்காளத்தியை யடைந்து, காளத்தியப்பரையும் அக்காளத்தியப்பருக்குத் தம்கண்ணை யிடந்து அப்பிய கண்ணப்பநாயனாரையும் தரிசித்துத் தேவாரத் திருப்பதிகத்தைப் பாடி அத்தலத்திற்றானே இருந்து கொண்டு திருக்கயிலை, திருக்கேதாரம், திருக்கோகர்ணம், இந்திரநீல பருப்பதம், ஸ்ரீசைலம் முதலிய வடநாட்டிலுள்ள தலங்களுள் எழுந்தருளிய பெருமானாரைச் சிந்தித்துத் தேவாரத் திருப்பதிகத்தைப் பாடியருளினார் அதன்பின்பு திருவேற்காடு, திருவலிதாயம் என்னுந் தலங்கட்குச் சென்று சுவாமி தரிசனஞ் செய்து தேவாரப் பதிகங்கள் பாடித் திருவொற்றியூரையடைந்து ஒற்றியூர்ப் பெருமானாரை வணங்கித் திருப்பதிகம் பாடிச் சிலநாள் அத்தலத்தில் எழுந்தருளியிருந்தார்.

இங்ஙனமாக, திருமயிலாப்பூரிலே வைசியர் குலத்திலே சிவநேசர் என்னும் பெயரையுடைய அன்பரொருவர் இருந்தார். அவருடைய அழகிற் சிறந்த ஏக புத்திரியின் பெயர் பூம்பாவை. சிவநேசச் செட்டியார், மதுரையிலே திருஞான சம்பந்தப்பிள்ளையார் சமணரைச் சமயவாதிலே வென்றமையையும், அவர் செய்துள்ள அற்புதங்களையும் கேள்வியுற்று கல்வி, அறிவு, ஒழுக்கம் என்னும் இவற்றோடு கூடிய தனது ஒரேயொரு மகளையும், தமக்குரிய பொருளையும் ஆளுடைய பிள்ளையாருக்கே அளிப்பதெனத் நிச்சயித்திருந்தார். உத்தம கன்னிகையான பூம்பாவை ஒருநாள் பூக்கொய்யும்போது நாகந்தீண்டி யிறந்தாள். தீராக் கவலையடைந்த தந்தையார் தம் மகளின் ஈமக்கடன்களை முடித்து, என்பையும் சாம்பரையும் மாத்திரம் ஒரு புதிய குடத்திலிட்டுக் கன்னிமாடத்தில் வைத்து, அக் குடத்திற்கு இரத்தினாபரணங்களும் பூமாலைகளும் சாத்தி நாள்தோறும் பூசித்து திருஞான சம்பந்தப்பிள்ளையாருடைய வரவை எதிர்பார்த்தவண்ண மிருந்தார்.

பிள்ளையார் திருவொற்றியூர்த் தலத்தை யடைந்தாரென்பதைக் கேள்வியுற்ற மாத்திரத்தே மகிழ்ச்சியடைந்த சிவநேசர் திருவொற்றியூர் தொடக்கம் திருமயிலாப்பூர் வரையும் நடைப்பந்தர் இடுவித்து, திருமயிலாப்பூரில் விசேடமான அலங்காரங்களை யெல்லாஞ் செய்து, திருவொற்றியூருக்குச் சென்று வணங்கி, பிள்ளையாரைச் சிவனடியாரோடும் பரிசனரோடும் திருமயிலாப்பூருக்கு அழைத்து வந்தார். பிள்ளையார் அங்குள்ள காபாலீச்சுரரை வணங்கித்துதித்து திருக்கோயிலின் புறத்தே வரும் போது, அங்கே பூம்பாவையின் என்பும் சாம்பரும் இட்ட குடம் வைத்திருப்பதைக் கண்டு காபாலீசுவரர் சந்நிதியில் நின்று, ''மட்டிட்ட புன்னை'' என்பது முதலாகவுள்ள தேவாரத் திருப்பதிகத்தைப் பாடத்தொடங்கித் திருக்கடைக் காப்பைப் பாடியருள பூம்பாவையும் தன் அங்கங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாம் முறையே அமைய அழகிய உருப்பெற்று, குடமுடைய, எழுந்து வந்து தனது தந்தையாரையும் பிள்ளையாரையும் பஞ்சாங்கமாக வீழ்ந்து வணங்கினுள். அக்கன்னிகை சிவபெருமானையும், தனக்கு உயிரளித்த திருஞானசம்பந்தப் பிள்ளையாரையும் பூசித்துச் சிலகாலஞ் செல்லச் சிவபதமடைந்தாள்.

திருஞானசம்பந்தர் திருமயிலாப்பூர் பெருமான்மீது தேவாரப்பதிகம் பாடி அப்பெருமானிடம் அருள்பெற்றுக்கொண்டு திருவான்மியூர் ஆகிய பல தலங்களையும் வணங்கியபின் சீகாழிப் பதியையடைந்தார். அப்போது சிவபாதவிருதயரும் அவர் சுற்றத்தினரும் ஆளுடைய பிள்ளையாருக்குத் திருக்கல்யாணஞ் செய்துவைக்கும் பொருட்டு பிள்ளையாருக்குத் தெரிவிக்க அதற்குடன்படாது பிள்ளையார் மறுக்க, தந்தையாரும் சுற்றத்தவரும் 'நீர் பூமியின் கண்ணே வேத நெறியைத்தாபிக்கப்புகுந்தீர்; ஆதலால் அவ்வேத விதிப்படி திருமணஞ் செய்தற்குத் திருவுளஞ் செய்தல் வேண்டும்'' என்றார்கள். பிள்ளையாரும் இசைந்தருளினா. திருநல்லூர்ப்பெருமணத்தில் வாழ்ந்த நம்பாண்டார் நம்பி என்னும் பிராமணரைத்தமருடைய புதல்வியை மணம்பேசி திருமணத்திற்கான ஆயத்தங்களும் செய்யப்பெற்றன. சுபதினத்தில் திருநீலநக்க நாயனரே ஆசாரியராக இருந்து மணவினைகளைச் செய்வாராயினர். வேதவொலிமுழங்க, மங்கல வாத்தியங்கள் ஒலிப்ப ஞானசம்பந்தர் தம் காதலியின் கையைப் பற்றியவண்ணம் அக்கினியை வலம் வரும்போது அக்கினியாயுள்ளவரும் சிவபெருமானே எனத் திருவுளத்திற் கொண்டு ''இந்த இல்லொழுக்கம் வந்து சூழ்ந்ததே. இவள் தன்னொடும் அந்தமில் சிவன்றாள் சேர்வேன்'' என்னும் ஆதரம் பொங்க, சுற்றத்தாரும் சிவனடியாரும் புடைசூழ பெருமானுர் சந்நிதியையடைந்து ''எம் பெருமானே தேவரீருடைய திருவடிகளை அடையும் பயன் இதுவே'' என்று இரந்து ''கல்லூர்ப் பெருமணம்'' என்னுந் திருப்பதிகத்தைப் பாடியருளினுர்.

அப்பொழுது கருணைநிதியாகிய சிவபெருமான் ''நீயும் உன் மனைவியும் உன்னுடைய விவாகத்தைக் காணவந்த எல்லோரும் சோதியிற் கலந்து நம்மையடையுங்கள்'' என அருளிச்செய்தார். சோதிவடிவாய் நின்ற கடவுளை வணங்கித் துதித்து, உலகம் உய்யும் பொருட்டு அதனை அடையும் நெறியை அருளிச்செய்யத் திருவுளங் கொண்டு, யாவருக்கும் ஞான மெய்ந்நெறி நமச்சிவாய என்னும் மந்திரம் என்னுங் கருத்துடைய ''காதலாகிக் கசிந்து'' என்னும் நமச்சிவாயத் திருப்பதிகத்தை எல்லோருங் கேட்க அருளிச்செய்து 'இக் கலியாணங் காணவந்த எல்லீரும் உங்கள் சநநநோய் தீரும் பொருட்டு, இந்தச் சோதியினுள்ளே பிரவேசியுங்கள்' என்று திருவாய் மலர்ந்தருளினுர். திருநீலநக்க நாயனுர், முருகநாயனுர், சிவபாத விருதயர், நம்பாண்டார்நம்பி, திருநீலகண்டப் பெரும்பாணர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலிய திருத்தொண்டர்கள் தங்கள் மனைவியாரோடும், சுற்றத்தாரோடும் சிவசோதியை அடைந்தார்கள்.

சர்வ ஆன்மாக்களையும் உய்விக்கும் பொருட்டு திருவவதாரஞ் செய்தருளிய சைவ சித்தாந்த சமயாசாரியராகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனர் மனைவியாருடன் சிவசோதியிற் புகுந்து சிவசாயுச்சியம் அடைந்தனர்.

## திருநாவுக்கரசு நாயனர்

இடையருப் பேரன்பு மழைவாரு
மிணைவிழியும் உழவாரத்தின்
படையருத் திருக்கரமுஞ் சிவபெருமான்
திருவடிக்கே பதித்த நெஞ்சும்
நடையருப் பெருந்துறவும் வாகீசப்
பெருந் தகைதன் ஞானப் பாடற்
ருெடையருச் செவ்வாயுஞ் சிவவேடப்
பொலிவழகுந் நுதித்து வாழ்வாம்.

திருமுனைப்பாடி நாட்டிலேயுள்ள திருவாமூரிலே வேளாளர் மரபிலே புகழனர் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் மனைவியார் பெயர் மாதினியார். அம்மாதினியாரிடத்தே திலகவதியார் என்ற புத்திரியார் பிறந்தார். அவர் பிறந்து சில வருஷஞ் சென்றபின், சைவசமயம் அபிவிருத்தியாகும்படி மருணீக்கியார் என்கின்ற புத்திரர் அவதாரஞ்செய்தார். அவருக்குத் தந்தையார் உரிய பருவத்தில் வித்தியாரம்பம் செய்வித்தார். மருணீக்கியார் தந்தைக்குப் பெருமகிழ்ச்சியுண்டாகும்படி பலகலைகளையும் கிரமமாகக் கற்று வல்லவரானர்.

திலகவதியாருக்குப் பன்னிரண்டு வயசானதும் சேனுதிபதியாயிய வரும் சிவபத்திமானுமாகிய கலிப்பகையாருக்குத் திருமணம் நிச்சயார்த்தம் செய்துவைத்தனர். விவாகம் நிறைவேறுவதற்கிடையில் சேனைத்தலைவராய்ச் சென்று போரில் மாண்டு வீரசுவர்க்கம் அடைந்தார். சிலகாலம் செல்ல புகழனரும் சிவபதமடைந்தார். மனைவியாராகிய மாதினியாரும் உடன் மாண்டார். இலகவதியாரும் மருணீக்கியாரும் அலைகடலுள் மூழ்கியவராய் தாய் தந்தையாருக்குச் செய்ய வேண்டிய அந்தியக்கருமங்களைச் செய்து நிறைவேற்றினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலிப்பகையார் யுத்தகளத்திலே தம்முடைய பூதவுடம்பை விட்டுப் புகழுடம்பைப் பற்றுக் கொண்டதாகிய செய்தியைத் திலக வதியார் அறிந்து "என்னுடைய பிதாமாதாக்கள் என்னை அவருக்கு மணஞ்செய்ய உடன்பட்டிருந்தமையால், இவ்வுயிர் அவருக்கேயுரி யது; இவ்வுயிரை அவ்வுயிரோடு இசைவிப்பேன்" என்று சாவத் துணிந்தார். அதுகண்ட மருணீக்கியார் வந்து, அத் திலகவதி யாருடைய பாதங்களில் விழுந்து அழுது "அடியேன் நம்முடைய பிதா மாதாக்கள் இறந்தபின்னும் உம்மையே அவர்களாகப் பாவித்துப் பூசிக்கலாம் என்றன்றோ உயிர் வைத்துக் கொண்டிருக்கின்றேன்; அடியேனைத் தனியே கைவிட்டு இறப்பீராயின், அடியேன் உமக்கு முன்னமே இறந்துவிடுவேன்" என்றார். திலகவதியார் அதைக் கேட்டு, தம்பியார் உயிரோடு இருக்கவேண்டும் என்னும் ஆசையால் தமது கருத்தை விடுத்து உயிர்தாங்கி, வேறொருவரையும் விவாகம் செய்யாமல் தவக்கோலத்துடன் வீட்டிலேயிருந்தார்.

மருணீக்கியார் தாம் கற்ற நூல்கள் வாயிலாக உலகம் நிலை யாமையை உணர்ந்து துறவுபூணக் கருத்துக் கொண்டார். அக்கா லத்தில் பரவியிருந்த சமணசமய உண்மையை அறியக்கருதி பாடலி புரத்திற் சென்று சிலகாலம் சமணநூல்களைப் படித்து, அதன் பய னாக சைவசமயத்தை விட்டு சமணமதத்திற் சேர்ந்தார். சமணர்கள் அவரின் கல்வித்திறனைப் பாராட்டி அவருக்குத் தருமசேனர் என நாமஞ் சூட்டினர்.

தம்பியார் சைவசமயத்தை விட்டுச் சமணமதத்திற் சேர்ந் தார் என்பதைக் கேள்வியுற்ற திலகவதியார் மனம் வருந்தி, திரு வதிகை விரட்டானேசுவரர் கோயிலில் பணிசெய்து வரலானார். பணிசெய்து வரும் போதெல்லாம், தம்பியாராகிய மருணீக்கியாரை சைவ சமயத்தில் மீண்டும் சேர்த்தருள அருள்செய்ய வேண்டிக் கொண்டார். பெருமான் ஒருநாள் சொப்பனத்திலே தோன்றி, மருணீக்கியைச் சூலைநோயால் வருத்தி ஆட்கொள்வோம் எனக் கூறியருளினார்.

இறைவனருளின்படி தருமசேனரைக் கொடிய சூலை நோய் தொடர்ந்து வருத்தியது. அந்நோயை நீக்குவதற்குச் சமணர்கள் செய்த முயற்சிகள் எல்லாம் பயன்படவில்லை. நோயின் கொடுமையை ஆற்றமுயன்ற மருணீக்கியார் தம் அரிய தமக்கையாரை அழைத்து வருமாறு தம் சுயம்பாகிகளை இரகசியமாக அனுப்பினர். திலகவதி யார் அவ்விடஞ் செல்ல மறுத்து தாமிருக்கும் இடத்திற்கு விரும் பினால் வரலாம் என்று கூறியனுப்பினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருமசேனர் சமணர் அறியாதபடி இராக்காலத்தில் சுயம்பாகிகள் தாங்கிவர மெல்ல மெல்ல நடந்து திருவதிகை வீரட்டானத்தை யடைந்தார். தமக்கையாரைக் கண்ட உடனே அவர் பாதங்களிலே வீழ்ந்து வணங்கி, அடியேன் கொடிய சூலை நோயைச் சகிக்கலாற்றாமையால்; உம்மையேகதியென்று அடைந்தேன்; இனித் தமியேன் உய்ந்து கரையேறும் வழியை அருளிச் செய்யும்'' என்று விண்ணப்பஞ் செய்து, அவர் பாதங்களில் வீழ்ந்தபடி அயர்ந்தார்.

திலகவதியார் பரமசிவன் தமக்குச் சொப்பனத்தில் காட்டியபடி முடித்ததை நினைந்து, மனங்கசிந்துருகிக் கடவுளை அஞ்சலிசெய்து கொண்டு தம்பியாரை நோக்கி அறியாமையினாலே பரசமயத்தில் வீழ்ந்து கொடுந்துன்பங்களை அநுபவிக்கின்ற தம்பியே எழுந்திரும்''. என்றார். தம்பியார் சூலைநோயுடனே நடுக்கமுற்று எழுந்து அஞ்சலி செய்தார். திலகவதியார் ''இது பரமசிவனுடைய திருவருளே, தம்முடைய திருவடிகளையடைந்த மெய்யன்பர்களுக்கு இன்னருள் புரியும் அக்கடவுளை வணங்கி அவருக்கே தொண்டு செய்யும்'' என உபதேசித்தார். உடனே மருணீக்கியார் அதனை ஏற்று வணங்கி நின்றார். திலகவதியார் திருவருளை நினைந்து, அவருக்கு ஸ்ரீபஞ்சாட்சரத்தை ஓதி விபூதியைக் கொடுத்தார். மிக்க ஆவலோடு விபூதியைப் பெற்று சரீரம் முழுதும் அணிந்து கொண்டார்.

பின்னர் திலகவதியார் தம்பியாரை உடனழைத்துக் கொண்டு போய் வீரட்டானேசுவரர் சந்நிதியில் விடுதலும் அவர் அப்பெருமானை வணங்கி நின்றார். பெருமான் திருவருளால் மருணீக்கியாரிடத்து மெய்ஞ்ஞானம் உதிக்க ''கூற்றாயினவாறு விலக்ககலீர்,, என்னும் தேவாரப் பதிகத்தைப் பாடுவராயினர். உடனே சூலை நோயும் நீங்கியது ''செந்தமிழின் சொல்வளப்பம் மிக்க பதிகம் பாடினமையால்; நாவுக்கரசு என்னும் நற்பெயர் நினக்கு எங்கும் வழங்குவதாக'' என்றொரு அசரீரி வாக்கு எழுந்தது. அன்று தொடக்கம் திருநாவுக்கரசரென்னும் திருநாமம் இந்நாயனாருக்கு வழங்குவதாயிற்று. மனம் வாக்குக் காயமென்னும் திரிகரணங்களாலும் தாம்சிவபிரானுக்குத் திருத்தொண்டு புரிதல் வேண்டுமென நியதி கொண்ட திருநாவுக்கரசர் விபூதி உருத்திராக்கம் முதலிய சிவ சின்னங்களைப் பூண்டு சிவவேடப் பொலிவுடன் உழவாரப் படையுந் தாங்கித் தொண்டு புரிவாராயினர். தம்பியாருடைய நிலைமையைக் கண்டு திலகவதியார் வீரட்டானேசுவரப் பெருமானுடைய திருவருட்டிறத்தைப் போற்றினார். திருக்கோயிலும் திருவீதிகளிலுமுள்ள புல் செடி முதலியவற்றை அகற்றுவதற்காகவே திருநாவுக்கரசு சுவாமிகள் தம்முடைய திருக்கரத்தில் உழவாரப் படையைத் தாங்கி வருவாராயினர்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநாவுக்கரசர் சமணத்தைவிட்டு சைவத்திற் சேர்ந்து ஒழுகு கின்ருரென்பதைக் கேள்வியுற்ற சமணர்கள் கொதிப்படைந்து தங்கள் அரசனுகிய மகேந்திரப் பல்லவனிடஞ் சென்று முறையிட்டனர். சைவசமயத்திற் சேர்வதற்காகத் தமக்குச் சூலைநோய் என்று பொய் சொல்லித் தமக்கையாரிடஞ் சென்ருர் எனக் கோள்மூட்டினர். அரசன் அதனைநம்பி நாயனுரிடத்து வெறுப்புக் கொண்டு தண்டிக்க எண்ணி அவரை அழைத்து வருமாறு மந்திரிமாரை அனுப்பினன். மந்திரிமார் தம்மரசன் கட்டளையை திருநாவுக்கரசருக்குத் தெரிவித் தனர்.

அதுகேட்ட நாயனுர் ''நாமார்க்கும் குடியல்லோம்'' என் னும் மறுமாற்றத் திருத்தாண்டகத்தைப் பாடி ''நீங்கள் அழைத்தபடி நாம் வரக் கடவேமல்லேம்'' என்ருர் மந்திரிமார் நாயனுரை இரந்து கேட்க, அவர் ''அடியேனுக்கு வரும் ஆபத்து நீக்கச் சிவபெருமான் இருக்கின்ருர் தாமே'' என்றுகூறி போதற்கு இசைந்தார். அவரை அம்மந்திரிகள் அழைத்துக் கொண்டுபோய்ப் பாடலிபுரத்திலுள்ள பல்லவராசன் சபையில் விடுதலும், அவன் நாயனுரைக் கண்டதும் கோபங் கொண்டாஞய் ''இச்சமயத் துரோ கிக்குச் செய்யவேண்டிய தண்டனை யாது?'' எனமந்திரிமாரை வினவ அவர்கள் இவரை நீற்றறையுள் விடல் வேண்டுமென்ருர்கள். அரசன் அப்படிச் செய்யக் கட்டளையிட்டான், அக்கொடியவர்கள் நாயனுரைப் பற்றிச்சென்று வெவ்விய நீற்றறையுட் புகுத்திக் கதவைப் பூட்டி விட்டனர்.

நாயனுர் அதனுள்ளிருந்து சிவபிரானை நினைந்து ''மாசில் வீணையும் மாலைமதியமும்'' என்னும் தேவாரத் திருப்பதிகத்தைப் பாடி யருளுவாராயினர். அந்நாயனுர் சிவபெருமானுடைய திருவடி நீழலாகப் பாவித்த அந்நீற்றறை வீணைகானமும் சந்திரனும் தென்றலும் இளவேனிலும் பொய்கையும் போலக் குளிர்ந்தது.

ஏழுநாட்சென்றபின் சமணஅரசன் நீற்றறையின் கதவைத் திறந்து பார்த்தான். எவ்வகையான ஊறுபாடுமில்லாமல் அவர்மேனி அழகுடன் திகழ்வதைக்கண்டு எல்லோரும் அற்புதம் அடைந்தனர். ஆனுல் பின்னரும் சமணகுருமார் துர்ப்புத்தி கேட்டு நாயனுருக்கு நஞ்சூட்டும்படி கட்டளையிட்டான். ஏவலாளர்கள் நஞ்சூட்டியபாற் சோற்றை நாயனுரிடங் கொடுக்க, அவர் அவ்வஞ்சனையை உணர்ந்தும் நஞ்சுண்ட பரம சிவனுக்கு அர்ப்பணஞ்செய்து அதனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உட்கொண்டார். அந்நஞ்சும் அமிர்தம்போல எவ்வகை இடையூற்றை யும் விளைவிக்காதொழிய, அது கண்ட சமணகுருமார் யானையை ஏவி நாயனாரைக் கொல்லுவிக்க வேண்டுமென்று அரசனுக்குக் கூற, மதி கெட்ட அரசனும் அப்படியே செய்யுங்கள் எனத் தண்டலாளருக்குப் பணித்தான். தண்டலாளரும் யானைப்பாகரும் மதங்கொண்ட யானை யொன்றை அவிழ்த்துக் கொண்டுவந்து நாயனாருக் கெதிரே விட்டு அவரைக் கொல்லும்படி தூண்டினர். நாயனார் தம்முன்னிலையில் வந்த யானையை நோக்கி, "சுண்ண வெண் சந்தனச் சாந்தும்" என்னும் திருப்பதிக மெடுத்து, திருப்பாட்டு இறுதிதோறும், "கெடிலப்புன லு முடையா ரொருவர் தமர்நா—மஞ்சுவதி யாதொன்றுமில்லை யஞ்ச வருவது மில்லை" என்று பாடியருளினார். யானையானது அந்நாயனாரை வலஞ்செய்து எதிராக நிலத்திலே தாழ்ந்து இறைஞ்சி எழுந்து அப்புறம் போக, அதன் மேலிருந்த பாகர்கள் அதனை அங்குசத்தினாலே குத்தித் திருப்பி அவரைக் கொல்ல வேண்டுமென்கின்ற குறிப்பைக் காட்டினார் கள். அது அப்படிச் செய்யாமல், துதிக்கையினால் அவர்களை எடுத்து வீசிக்கொன்றுவிட்டு, வெவ்வேறிடங்களிலுள்ள சமணர்களைத் தேடித் தேடி ஓடி, அவர்களைத் தள்ளி மிதித்துக் கிழித்தெறிந்து கொன்று, அந்நகரத்திலுள்ளவர்களெல்லோரும் கலங்கும்படி அரசனுக்கு ஆகுலத்தை விளைவித்தது.

அந்த யானைக்குத் தப்பியோடிய சமணர்கள் தங்கள் அரசனிடம் புகுந்து "இத்தருமசேனர் எங்கள் சமயநூலிற் கற்ற மந்திரத்தின் வலியினாலேயே நாங்கள் அவரைக் கொல்லும்படி விட்ட யானையை அவர் எங்களைக் கொல்லத் தூண்டிவிட்டார். இனி ஒரு கணப் பொழு தேனும் இத் தருமசேனரை உயிரோடு இருக்கவிடின் எங்கள் மார்க்கத் திற்கும் எங்களுக்கும் அழிவுவந்துநேரும்; ஆனதால் இவரைக் காவலோடு கொண்டுபோய் ஒரு பெரிய கல்லுடன் கட்டித் தோணிமே லேற்றி நடுக்கடலில் இடுதல் வேண்டும்" என்றனர். அரசனும் அதற்கு உடன்பட, தண்டலாளர் அப்படியே செய்தனர். நடுக்கடலில் விட்ட பின்னர் "இனி இவர் ஒருபோதும் மீளப்போவதில்லை" என்று சொல்லி மீண்டு போயினர்.

சமுத்திரத்திலே தள்ளிவிடப்பட்ட நாயனார் "அடியேனுக்கு யாது நிகழினும் நிகழுக, அடியேன் எம் பெருமானைத் தோத்திரம் பண்ணுவேன்" என்று நினைந்து, "சொற்றுணை வேதியன்" என்னும் நமச்சிவாயத் திருப்பதிகத்தைப் பாட, கல்லானது தெப்பமாக மாறி மிதந்தது. கட்டிய கயிறோ அறுந்து போயிற்று; வருணபகவான் கல்லே சிவிகையாக அந்நாயனாரைத் தாங்கிக் கொண்டு திருப்பாதிரிப்புலியூர் என்னும் சிவஸ்தலத்தின் பக்கத்திலே சேர்த்தான். நாயனார் அந்தத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பதியினின்றும் ''அரகர'' என்னும் ஓசையுடன் தம்மை எதிர்கொண்ட சிவனடியார்களோடு ஆலயத்திற் சென்று சுவாமியை வணங்கி ''ஈன்றுளுமாய்'' என்னும் திருப்பதிகம் பாடிக்கொண்டு, அங்கே சிலநாள் தங்கியிருந்தார்.

கரையேறிவந்த நாயனர் தமக்குத் தோன்றுத் துணையாய் நின்றருளும் பரமசிவனைத் திருப்பாதிரிப்புலியூர்த் திருக்கோயிலில் தரிசித்து மீண்டும் திருவதிகை அடைந்து உழவாரத் திருத்தொண்டாற்றிவந்தார். அந்நாளில் சமணர்களுடைய துர்ப்போதனையால் தீங்குசெய்து கொண்டிருந்த பல்லவராசன் திருவதிகை வந்து, நாயனரை வணங்கி சைவசமயத்திலே சேர்ந்தான். சமணத்தின் பொய்ம்மையை அறிந்த காடவன் என்பவன் சைவசமயத்தில் சேர்ந்து திருவதிகையிலே குணதரவீச்சரம் என்னுங் கோயிலைக் கட்டினன்.

பின்னர் அப்பர் சுவாமிகள் திருவெண்ணெய் நல்லூர் முதலிய சிவஸ்தலங்களைத் தரிசித்து, பெண்ணைகடத்தையடைந்து ஆங்குள்ள தூங்கானை மாடம் என்னும் திருக்கோயிலிற் சென்று ''பொன்னுர் திருவடிக் கொன்றுண்டு விண்ணப்பம்'' என்று ஈசுவரனை வேண்டினர். இறைவனருளால் அப்பர் சுவாமிகளுடைய தோளிலே இடபக்குறியும் சூலக்குறியும் பொறிக்கப்பட்டது. அதன்பின் நாயனர் சிதம்பரத்தையடைந்து சபாநாயகரையும் சிவகாமியம்மையாரையும் பாடி அத்தலத்தில் சிலநாள் தங்கியிருந்தார்.

அவ்வாறிருக்கும் நாளில் சீகாழியில் அவதாரஞ் செய்தருளிய திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர் மூன்றும் வயசிலே ஞானப்பாலையுண்டு அற்புதமான தேவாரப் பதிகங்களைப் பாடியருளுகின்றுர் என்ற செய்தியை அறிந்து அவரைத் தரிசிக்க சீகாழிக்குச் சென்றுர். அவர் வரவை அறிந்த திருஞானசம்பந்தர் எதிர்கொண்டார். அப்பர் சம்பந்தர் திருவடிகளில் வீழ்ந்து வணங்க அவர் தம்முடைய திருக்கரங்களினுல் அப்பர்சுவாமிகளது திருக்கரங்களைப்பற்றி எழச்செய்து, தாமும் வணங்கி ''அப்பரே'' என்றுர்; அதற்கு திருநாவுக்கரசர் ''அடியேன்'' என்றுர். அவ்விருவரும் ஒருவரை ஒருவர் காணப்பெற்றதினுல் மிகமகிழ்ந்து, ஆலயத்திற்குச் சென்று வலங்கொண்டு நமஸ்கரித்து எழுந்தார்கள். சம்பந்தமூர்த்தி ''அப்பரே உம்முடைய சுவாமியைப் பாடும்'' என்று சொல்ல அப்பர் திருப்பதிகம்பாடி திருஞானசம்பந்தருடைய திருமடத்தில் சிலகாலம் தங்கியிருந்தார்.

ஒருநாள் திருநாவுக்கரசு நாயனர் சோழநாட்டிலுள்ள சிவஸ்தலங்களையெல்லாம் வணங்க விரும்பி தமது எண்ணத்தை ஞான

சம்பந்தரிடம் தெரிவித்தார். இருவருமாக திருக்கோலக்காவிற்குச் சென்று சுவாமிதரிசனஞ் செய்தனர். ஞானசம்பந்தப் பெருமான் அவ்விடத்தினின்றும் மீண்டுசென்றார். அப்பமூர்த்தி திருக்கருப் பறியலூர், சிருப்புன்கூர், திருநீடூர், குறுக்கை, நின்றியூர், நனிபள்ளி முதலிய ஸ்தலங்களை வணங்கிக்கொண்டு காவிரியாற்றின் இருகரை வழியாகவுஞ் சென்று செம்பொன்பள்ளி, மயிலாடுதுறை, திருத்துருத்தி, வேள்விக்குடி, எதிர்கொள்பாடி, கோடிகா, திருவாவடுதுறை, திருவிடைமருதூர், நாகேச்சரம், பழையாறை என்கின்ற தலங்களைப் பணிந்து பாடி திருச்சத்தி முற்றத்தை யடைந்தார்.

அவ்விடத்தில் சுவாமி தரிசனஞ் செய்து "கோவாய் முடுகியடு திறற் கூற்றங் குமைப்பதன்முன்—பூவாரடிச்சுவ டென்மேற் பொறித்துவை" என்னும் பதிகம்பாடுதலும். பரமசிவன் 'நல்லூருக்கு வா' என்றருளிச்செய்தார். அப்பமூர்த்தி அங்கு சென்று சுவாமியை வணங்கி எழும்பொழுது, சுவாமி "உன்னுடைய நினைப்பை முடிக்கின்றோம்" என்று சொல்லித் தம்முடைய திருவடிகளை அவர் சிரசின்மேலே வைத்தருளினார். அப்பமூர்த்தி "நினைந்துருகு மடியாரை" என்று திருத்தாண்டக மெடுத்து, திருப்பாட்டிறுதி தோறும் "திருவடி யென் றலைமேல் வைத்தார் நல்லூரெம் பெருமானார் நல்லவாறே" என்று பாடியருளினார். பின்னும் தேவாரப் பதிகங்கள் பாடிக்கொண்டு சிலநாள் அங்கு தங்கியிருந்தார். அங்கிருக்கும் நாட்களிலே கருகாவூர், திருவாவூர், பாலைத்துறை முதலிய தலங்களுக்குச் சென்று சுவாமி தரிசனஞ் செய்துகொண்டு நல்லூருக்குத் திரும்பிவருவார்.

பின்னர் வைகையாற்றிற்கு அணித்தாகவுள்ள திங்களூர் என்னும் தலத்தையடைந்தார். அவ்வூரில் அப்பூதியடிகள் என்னும் சிவபத்தியிற் சிறந்த பிராமணர் ஒருவர் அப்பர்சுவாமிகளின் திருத்தொண்டின் மகிமையைக் கேள்வியுற்று அவரைத் தம்முடைய குருவாகப் பாவித்துத் தமது பிள்ளைகள் முதலானோர்க்கும் தாம் செய்துவரும் தண்ணீர்ப்பந்தல் முதலிய தரும ஸ்தாபனங்கட்கும் திருநாவுக்கரசர் என்று பெயரிட்டு வருவாராயினர். திருநாவுக்கரசு சுவாமிகள் அவ்வூரில் செல்லும்போது, தம்முடைய நாமம் எழுதப்பட்டிருத்தலைக் கண்டு அப்பூதியடிகளுடைய இல்லத்திற்கு எழுந்தருளினர். அப்பூதிநாயனர் அப்பர்மூர்த்தியை, மனைவியார் புத்திரர் முதலாயினரோடும் வணங்கி அங்கே திருவமுதுசெய்யுமாறு பிரார்த்திக்க, அதற்கு அந்நாயனர் உடன்பட்டமை கண்டு, அமுது சமைப்பித்து. தமது மூத்த புத்திரராகிய திருநாவுக்கரசை நோக்கி, "தோட்டத்தில் வாழைக் குருத்து அரிந்துவா", என்று சொல்லியனுப்பினர் அவர் விரைந்து வாழைக்குருத்து அரியப் புகுந்தபொழுது, ஒரு பாம்பு அவரைத் தீண்டியது. அதை அவர் பொருட்

படுத்தாமல், அப்பர்மூர்த்தி திருவமுது செய்யும்படி குருத்தை அரிந்து கொண்டு விரைவிலே திரும்பி வந்து, விஷம் தலைக்கொள்ள மயக்க மடைந்து வாழைக்குருத்தைத் தம்முடைய தாயார்கையிலே கொடுத்து விட்டுக் கீழே விழுந்து இறந்தார்.

அது கண்டு அப்பூதி நாயனாரும், அவர் மனைவியாரும் ''ஐயோ இனி நாயனார் திருவமுது செய்யாரே'' என்று துக்கித்து, சவத்தை மறைத்து வைத்து, சிறிதும் தடுமாற்றமின்றி அப்பமூர்த்தியிடத்திற் சென்று, ''சுவாமி, எழுந்து வந்து திருவமுது செய்தருளல் வேண்டும்'' என வேண்டிக்கொண்டனர். அப்பமூர்த்தி அங்கு நிகழ்ந்த உண்மையைத் திருவருளினால் அறிந்து கொண்டு, அவர்களுடைய அன்பை நினைந்து திருவருள் சுரந்து, சவத்தைச் சிவாலயத்தின் முன்னர் கொணர்வித்து '' ஒன்று கொலா மவர் சிந்தை'' என்னுந் திருப்பதிகம் பாடியருளினார். உடனே அப்புத்திரர் உணர்வு பெற்று எழுந்தார். அப்பூதியடிகள் தமது புத்திரர் பிழைத்ததைக் கண்டு, அதைக் குறித்துச் சந்தோஷப்படாமல், அப்பமூர்த்தி திருவமுது செய்யாதிருந்தமையைக் குறித்துத் துக்கித்து வருந்தினார். அவ் வருத்தத்தை நீக்கும் பொருட்டு அவருடைய வீட்டிற் திருவமுது செய்து அங்கே எழுந்தருளியிருந்தார்.

சில நாட்கள் சென்றபின் திங்களூரிலிருந்து நீங்கித் திருப்பழனத் திற்குப்போய் சுவாமி தரிசனம் செய்து '' சொன்மாலை பயில்கின்ற'' என்னும் திருப்பதிகம் பாடினார் அத்திருப்பதியிலே அப்பூதி நாயனாரை '' அழலோம்பு மப்பூதி குஞ்சிப் பூவாய்நின்ற சேவடியாய்'' எனச் சிறப்பித்தருளினார்.

பின்னர் அப்பர் காவிரிக்கரையிலுள்ள சிவதலங்களைத் தரிசித்துக் கொண்டு திருவாரூரை யடைந்து அங்கு பலநாட்கள் தங்கி அருகிலுள்ள பல தலங்களுக்குஞ் சென்று வணங்கி வந்தார். பின்பு திருப்புகலூரில் முருகநாயனார் திருமடத்தில் தங்கியிருந்தபோது ஆளுடையபிள்ளையார் இவரைத் தேடிவந்தார். அவர் திருவாரூர்த் திருவாதிரை விழாவின் சிறப்பை அப்பர் வாக்காலுணர்ந்து, உடனே ஆரூருக்குச் சென்றருள• அப்பர் சுவாமிகள் திருப்புகலூரை யடைந்து சுவாமி தரிசனம் செய்து கொண்டிருந்தார். ஆளுடைய பிள்ளையாரும் மீண்டும் அத்தலத்தை யடைந்தார். சிறுத்தொண்டர், திருநீலநக்கர் முதலிய அடியார்களும் அங்கே வந்துசேர, அன்பர் திருக்கூட்டம் பேரின்பத்தில் மூழ்கியிருந்தது. பின்னர் பிள்ளையாரும் அப்பரும் சிவனடியார் பலரும் சூழ பல தலங் கட்குஞ் சென்று திருப்பதிகங்களைப்பாடி திருவீழிமிழலையை வந்தடைந் தனர்.

நாயன்மாரிருவரும் திருவீழிமிழலை யீசுவரரை வணங்கித் தேவாரப் பதிகங்கள் பாடி அத் தலத்தின் கண்ணேயுள்ள திருமடத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கியிருந்தனர். அந்நாட்டில் பஞ்சம் வந்த அவ்வேளையில் இறைவனருளால் இருவரும் பொற்காசு பெற்றுச் சிவனடியார்களை உபசரித்தனர். ஆளுடைய பிள்ளையார் பெற்றுவந்த பொற்காசு வாசி (வட்டம்) இன்றிச் செல்லாததாக, அப்பர் சுவாமிகளுக்கு வைக்கப்பட்ட காசு வாசியின்றிச் செல்வதாக, அதனைக்கண்ட பிள்ளையார் பெருமானுர் மீது "வாசிதீரவே காசு நல்குவீர்" என்னும் தேவாரப் பதிகம் பாடி, தமக்குரிய படிக்காசும் வாசியின்றிச் செல்லச் செய்தார்.

இரு நாயன்மார்களும் திருவீழிமிழலையினின்றும் நீங்கி, திருவாஞ்சியம் முதலிய பதிகளைத் தரிசித்துக் கொண்டு வேதாரணியம் வந்து ஆலயத்திலே பிரவேசித்து வலஞ்செய்து, வேதங்கள் அருச்சித்துத் திருக்காப்புச் செய்த அந்நாண்முதல் இந்நாள் வரையும் அபிமுகத் திருவாயில் அடைக்கப்பட்டுக் கிடந்தமை கண்டு அக்கதவு திறக்கவும் மூடவும் பாடியருளினுர்.

வேதவனப் பெருமான் அப்பர் சுவாமிகளைத் திருவாய்மூருக்கு வரும்படி கனவிற் கட்டளையிட்டுத் தாம் சற்றுத் தூரத்தில் முன் செல்ல, அப்பரும் பின்தொடர்ந்து சென்று அவ்வூரை யடைதலும், முன்னே சென்ற மறைக்காட்டிறைவர் மறைந்தருளினுர். அப்பர் திருவாய்மூருக்குச் செல்கின்ருரென்பதை யறிந்து, பிள்ளையாரும் அங்குச்சென்ருர். அப்பொழுது சிவபிரான் இருவருக்கும் காட்சிகொடுத்தருளினுர். இருவரும் திருவாய்மூர்ப் பெருமானுரை வணங்கிக் கொண்டு வேதாரணியத்துக்கு மீண்டும் வந்து சில நாள் தங்கியிருந்தனர். அங்ஙனம் இருக்கு நாளில், பாண்டிநாட்டிலே பரந்துள்ள சமண சமயத்தைக் கெடுத்துச் சைவசமயத்தை நாட்டுதற்கு வருகை தரவேண்டுமென பாண்டிமாதேவியாரும் குலச்சிறையாரும் சம்பந்த சுவாமிகளுக்கு விண்ணப்ப மனுப்ப, சுவாமிகள் நாவுக்கரசரிடம் விடை பெற்றுக் கொண்டு பாண்டி நாட்டிற்குப் புறப்பட்டுச் செல்ல, அப்பர் சோழ நாட்டிலேயே சிலநாள் தங்கியிருந்தார்.

பின்னர் அப்பர் சுவாமிகள் திருநாகைக்காரோணம் முதலிய தலங்களை வணங்கிக் கொண்டு பழையாறை வடதளி என்னுந் தலத்தை யடைந்தார்; அங்குள்ள சமணர்கள் அச்சிவாலயத்திலுள்ள சிவலிங்கப் பெருமானை அடியார்கள் காணுவண்ணம் மறைத்து, அத்தலத்தைத் தம் பள்ளியாக்கிக் கொண்டனர். சிவலிங்கப் பெருமானைத் தரிசித்தல்லாமல் தாம் அந்த இடத்தை விட்டுப் போவதில்லையென்று அப்பர் சுவாமிகள் உண்ணு விரதம் பூண்டு கிடப்ப, வடதளிப் பெருமான் சோழராசனுக்கு அந் நிலைமையைச் சொப்பனுவத்தையிலே தெரிவிக்க, சோழராசன் அச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமணர்களைக் கடிந்து, அப்பர்சுவாமியைச் சிவலிங்க தரிசனஞ் செய்யும் வண்ணஞ் செய்தான். சிவலிங்கப் பெருமானைத் தரிசித்தவுடனே அப்பர் சுவாமிகள் ''தலையெலாம் பறிக்குஞ்சமண்கையர்'' என்று தொடங்கும் தேவாரப் பதிகத்தைப் பாடி வணங்கி மகிழ்ந்து, அத்தலத்தை விட்டகன்று பின்னர் பல தலங்களையும் வணங்கித் துதித்துத் திருப் பைஞ்ஞீலி என்னுந் தலத்தை நோக்கிச் செல்வாராயினர்.

அத்தலத்தை நோக்கி அதிகதூரம் நடந்து சென்றதால் அதிக பசியும், களைப்பும் உண்டாக, அவற்றால் அவர் வருந்துவதைத் திருவுள்ளத்திற் கொண்டு, பைஞ்ஞீலிப் பெருமானார் ஆதிசைவ வேதியர் போல் எழுந்தருளித் தம் திருக்கரத்திற் பொதிசோறு பரித்த வராய் அப்பர் சுவாமிகள் வரும் மார்க்கத்திலுள்ள சோலையில் நின்றார்; பசி, தாகம், இளைப்பு என்னுமிவற்றால் வருந்தி வழிநடந்து வரும் அப்பர் சுவாமிகளை மறையவர் வேடங் கொண்ட பெருமானார் உபசரித்து அவருக்கு உண்ண அன்னமிட்டு, குடிக்கத் தண்ணீரும் வார்த்தார். சிவபிரான் தம் மெய்யடியாரிடத்து வைத்த கருணையிருந்தபடி யென்னே!

அப்பர் சுவாமிகள் சிலநாள் திருப்பைஞ்ஞீலியில் எழுந்தருளிய அப்பெருமானரை வணங்கித் திருப்பதிகம் பாடி, உழவாரத் தொண்டுஞ் செய்து, பின் திருவண்ணாமலையை யடைந்து, உண்ணாமுலை யம்மையாரோடு எழுந்தருளிய அண்ணாமலையாரை வணங்கித் தேவாரப் பதிகம் பாடி, தியானிக்க முத்திதரும் திருவண்ணாமலையை விட்டகன்று, தொண்டைநாட்டிற்குச் சென்று அங்குள்ள திருவேகம்பம், திருக்கச்சி மயானம், திருமேற்றளி, திருமாற்பேறு என்னுந் தலங்களை வணங்கிக்கொண்டு, தென் கைலாசமாகிய காளத்தி மலையை யடைந்தார். அங்கே பொன் முகலியாற்றிலே ஸ்நானஞ் செய்து, மலையின் மேலேறிச் சுவாமியை வணங்கித் தேவாரப் பதிகம் பாடி, அவருடைய வலப்பக்கத்திலே நிற்கின்ற கண்ணப்ப நாயனா ருடைய திருவடிகளை வணங்கி, சில நாள் அந்தத் தலத்திலே வாழ்ந்தார்.

திருக்காளத்தியில் இருக்கும்போதே வடகயிலைக்குச் செல்ல வேண்டுமென்னும் விருப்பம் உண்டாக திருக்காளத்தியை விட்டகன்று வட திசையை நோக்கிச் சென்று பருப்பதத்தையடைந்து இறைவனை வணங்கிப் பதிகம் பாடித் துதித்துக் கொண்டு காசியை யடைந்து விசாலாட்சி சமேத விசுவநாதப் பெருமானை வணங்கிக் கொண்டு, அதற்கப்பாலுள்ளதாகிய கற்சுரத்திலே சாகமூலபலங்கள் புசித்தலையும் ஒழித்து, திருக்கைலாச தரிசனஞ் செய்ய வேண்டுமென்னும் பேரார்வங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டவராய், அல்லும் பகலும் நடந்தார். அதனல் அவருடைய பாதங்கள் பரடுவரைக்குந் தேய்ந்தன; தேய்ந்தும் ஆசை மேலிட்டினல் தம்முடைய இரண்டு கைகளையும் ஆதரவாகக் கொண்டு தாவிச் சென்முர். அந்தக் கைகளும் மணிக்கட்டு அசைந்து சிதைந்தன. பின்னும் ஆசை சிறிதுங் குன்றுதலின்றி மேலிடுதலால், கொடிய நெருப்பை யொத்த வெவ்விய பருக்கைக் கற்கள் பொருந்திய மார்க்கத்தில் மார்பினல் நகர்ந்து போயினர். மார்பும் தசை நைந்து சிந்த, எலும்புகளும் முறியலுற்றன; பின் புரண்டு புரண்டு போயினர். அதனலே தேகமுழுதும் அரைய, நாயனர் திருக்கைலாசகிரியிடத்தே பதிந்த அன்பின் உறுதியினல், மெல்ல நகருதற்கு முயன்றும் கூடாமையால் வழியிலே கிடந்தார்.

அப்பொழுது பரமசிவன் மீளவும் தமிழ் நாட்டிற் செலுத்தி அந்நாட்டிலுள்ளோர் உய்யும்பொருட்டுத் தமிழ் வேதமாகிய தேவாரம் பாடுவித்தற்கும், அவ்வப்ப மூர்த்தியுடைய கருத்தை மாறின்றி முடித்தற்குத் திருவுளங்கொண்டு, அவ்விடத்தில் ஒரு தடாகத்தை யுண்டாக்கி, ஒரு முனிவர் வடிவங்கொண்டு அந் நாயனருக்கு முன் வந்து நின்று, ''நீர் அங்கங்களெல்லாஞ் சிதைந்து போக வருத்தந்தோடும் இந்தக் கொடிய காட்டில் எதன் பொருட்டு வந்தீர்'' என்று கேட்டார்; அப்பமூர்த்தி மரவுரியாடையையும் பூணூலையும் சடைமுடியையும் விபூதிப் பூச்சையுமுடைய அந்த முனிவரைக் கண்டபொழுதே பேசுதற்கு அற்ப சக்தியுண்டாக, அவரை நோக்கி, ''முனிவரே, நமது கடவுளாகிய பரமசிவன் உத்தர கைலாசத்திலே உமாதேவி சமேதராய் வீற்றிருக்கின்ற திருக்கோலத்தைத் தரிசித்து வணங்கும் பொருட்டு விரும்பி வந்தேன்'' என்முர். அதற்கு முனிவர், ''தேவர்களாலும் அடைதற்கு அரியதாகிய கைலாசகிரி, மனிதர்களால் அடையப்படுதற்கு எளிதா? நீர் இந்தக் கொடுஞ்சுரத்திலே வந்து என் செய்தீர்! இனித் திரும்பி விடுதலே உத்தமம்'' என்முர்.

உடனே அப்ப மூர்த்தி ''அக் கைலாசகிரியிலிருக்கின்ற சிவபெருமானுடைய திருக்கோலத்தைத் தரிசித்தன்றி அநித்தியமாகிய இந்தத் தேகத்தைக் கொண்டு மீளேன்'' என்று மறுத்தார். சுவாமி அவருடைய துணிவைக் கண்டு மறைந்தருளி ஆகாயத்தில் அசரீரியாகி ''நாவுக்கரசனே, எழுந்திரு'' என்முர். உடனே அப்பமூர்த்தி அழிந்த உறுப்புக்களெல்லாம் முன்போல நிரம்பப்பெற்றுச் சிறந்த திருமேனியோடும் எழுந்து, ''சுவாமி, தேவரீர் அக்கைலாசகிரியில் எழுந்தருளியிருக்கும் திருக்கோலத்தை அடியேன் தரிசித்து வணங்கும்பொருட்டு அருள் செய்யும்'' என்று பிரார்த்தித்தார். அப்பொழுது பரமசிவன் ''நீ இந்தத் தடாகத்திலே முழுகித் திருவையாற்றையடைந்து;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்மைக் கைலாசகிரியில் வீற்றிருந்தபடி அந்தத் தலத்திலே தரிசித்து வணங்கு'' என்று பணித்தருளினார்.

அப்பமூர்த்தி அப்பணியைச் சிரமேற்கொண்டு ஸ்ரீ பஞ்சாட்சரத்தை ஓதித் தடாகத்திலே மூழ்கி, திருவையாற்றிலிருக்கின்ற ஓர் வாவியின் மேலே தோன்றிக் கரையிலேறி, வழியிலே அந்தப் பதியிலுள்ள சராசரங்கள் தங்கள் தங்கள் துணையோடும் பொலிதலைக் கண்டு, அவைகளைச் சிவமும் சத்தியுமாகப் பார்த்து வணங்கிக்கொண்டு, ஆலயத்திற்கு முன்னே சென்றார். அவ்வாலயம் கைலாசகிரியாக, அதனிடத்தே வேதங்களும் சிவாகமங்களும் இரு பக்கத்திலும் வாழ்த்தவும், தும்புரு நாரதரென்னும் இருவர் யாழ் வாசிக்கவும், பிரம விஷ்ணுக்களிருவரும் வஸ்திரத்தை ஒதுக்கி வாயைக் கையினாலே பொத்திக்கொண்டு ஒதுங்கி நின்று தங் குறைகளை முறையிடவும், பூதகணங்கள் கடைதோறுங் காக்கவும், தேவர் சித்தர் அசுரர் சாரணர் காந்தருவர் கின்னரர் இயக்கர் விஞ்சையர் முதலாகிய கணத்தவர்கள் துதிக்கவும், நந்திதேவர் கையிலே பிரம்பைப் பரித்துக்கொண்டு பணி செய்யவும், காருண்ணிய சுவரூபியாகிய சிவபெருமான் ஒரு திவ்விய ஆசனத்தின் மேலே அநந்தகோடி சூரியப் பிரகாசத்தோடும் பார்வதி சமேதராய் வீற்றிருந்தருளினர். அப்படி யிருத்தலை அப்பமூர்த்தி கண்ட மாத்திரத்திலே விழுந்து வணங்கி, உரை தடுமாற, உரோமஞ் சிலிர்ப்ப, ஆநந்த அருவி சொரிய, கரையிறந்த அருட்பெருங் கடலிலே அன்புநதி ஈர்த்துச் செல்ல, மிதந்து போய்த் தெவிட்டுதலில்லாத அளவிறந்த சிவானந்தாமிர்தத்தைப் பருகி, சந்நிதானத்திலே ஆநந்தக்கூத்தாடித் திருத்தாண்டகங்கள் பாடினார். கைலாசபதியாகிய கடவுள் தம்முடைய திருக்கோலத்தை இப்படி அப்ப மூர்த்திக்குத் தரிசிப்பித்து, பின் மறைந்தருள, அவ்வப்பமூர்த்தி மனம் வருந்தி, பின் ஒருவாறு தெளிந்து, தேவாரப் பதிகங்கள் பாடிக்கொண்டு அந்தப் பதியில் இருந்தார்.

சிலநாட் சென்றபின் ஐயாற்றினின்று நீங்கி நெய்த்தானம், மழபாடி முதலிய தலங்களை வணங்கிக்கொண்டு, திருப்பூந்துருத்தியை யடைந்து, சுவாமி தரிசனஞ் செய்து தேவாரப் பதிகங்கள் பாடி, அங்கே ஒரு திருமடங் கட்டுவித்து, பல்வகைத் தாண்டவம், தனித் தாண்டகம், அடைவு திருத்தாண்டகம், திருவங்கமாலை முதலிய தேவாரப் பதிகங்களைப் பாடிக்கொண்டிருந்தார். அதன் பின்னர் ஞானசம்பந்தப் பெருமான் அந்நாட்டினின்றும் நீங்கி சோழ மண்டலத்தையடைந்தார். பின்னர் அப்ப மூர்த்தியிருந்தருளிய திருப்பூந்துருத்திக்கு எழுந்தருளினார். உடனே அப்பர் எதிர் சென்று அடியார் கூட்டத்துள் புக்கு பிள்ளையார் ஏறிவரும் முத்துச் சிவிகையைத் தாங்கி வந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர் பூந்துருத்திக்கு வந்தவுடன் ''அப்பர் எங்குற்ருர்'' என வினவ, அதனைச் செவிமடுத்த அப்பமூர்த்தி, ''அடியேன் தேவரீரைத் தாங்கிவரும் பெருவாழ்வுற்று இங்குற்றேன்'' என்ருர்; அதனையறிந்த பிள்ளையார் உடனே சிவிகையினின்றும் இறங்கி, மனப்பதைப்போடு அப்பமூர்த்தியை வணங்க இருவரும் தம்மை அவர் வணங்குவதற்கு முன் தாம் அவரை வணங்க, அதுகண்ட அடியவர்களெல்லோரும் வணங்கி ஆனந்த கோஷஞ் செய்தார்கள். ஞானசம்பந்தர் வாகீசரோடும் திருப்பூந்துருத்தியிற் சென்று சுவாமி தரிசனஞ் செய்துகொண்டிருந்தார். பிள்ளையார் பாண்டிநாட்டிற்குச் சென்று சமணர்களை வாதில் வென்ற வரலாற்றைக் கூற, வாகீசர் தாம் தொண்டை நாட்டிற்குச் சென்று ஆங்குள்ள சிவஸ்தலங்களை வணங்கிய வரலாற்றையும் சொல்லியருளினுர்.

பின்பு பிள்ளையார் தொண்டை நாட்டிற்கு யாத்திரை செய்யப் புறப்பட்டார். வாகீசர் பாண்டிநாட்டையடைந்து, திருப்புத்தூரை வணங்கிக்கொண்டு, மதுரையிற் சென்று சுவாமி தரிசனஞ் செய்து திருப்பதிகம் பாடி, பாண்டிமாதேவியாரும், கூன் நிமிர்ந்த பாண்டியரும் குலச்சிறை நாயனரும் வந்து வணங்கித் துதிக்க சிலநாள் அங்கிருந்தார். பின் மதுரையினின்று நீங்கி, திருப்பூவணம், இராமேஸ்வரம், திருநெல்வேலி, கானப்பேரூர் முதலாகிய தலங்களை வணங்கிச் சோழமண்டலத்துக்குத் திரும்பி வந்து திருப்புகலூரரையடைந்தார்.

திருப்புகலூரிலே தினந்தோறும் சுவாமி தரிசனம் பண்ணி, திருமுன்றலிலே கைத்தொண்டு செய்து கொண்டிருந்தார். இருக்கு நாட்களிலே நின்றதிருத்தாண்டகம், தனித் திருத்தாண்டகம், க்ஷேத்திரக்கோவை, குறைந்த நேரிசை, தனித்திரு நேரிசை, நினைந்த திருநேரிசை, ஆருயிர்த் திருவிருத்தம், தசபுராணத் தடைவு, பாவநாசப் பதிகம், சரக்கறைத் திருவிருத்தம் முதலிய திருப்பதிகங்களைப் பாடியருளினுர். பரமசிவன் நாயனருடைய பக்தி வைராக்கியத்தை எவருக்குங் காட்டுவதற்குத் திருவுளங்கொண்டு, அவர் திருமுன்றிலிலே கைத்தொண்டு செய்யும் பொழுது உழவாரம் நுழைந்தவிடங்களெங்கும் பொன்னும் நவரத்தினங்களும் பிரகாசித்துக் கிடக்கும்படி அருள் செய்தார். நாயனர் அவைகளைக் கண்டு, அவைகளை அங்கே நின்ற பருக்கைக் கற்களோடு சமமாக எண்ணி உழவாரத்தில் ஏந்தி குளத்திலே விழ எறிந்து விட்டார்.

பின்பு இறைவனருளால் அரம்பையர்கள் சுவர்க்கத்தினின்றும் இறங்கி வந்து, நாயனர் முன் நின்று இசை பாடியும், கூத்தாடியும், அவர்மேற் பூக்களைப் பொழிந்தும், அவரை அணைப்பவர் போலச் சமீபித்தும், அளகம் அவிழ இடை நுடங்க ஓடியும், மீண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வஸ்திரம் நெகிழ நின்றும், இப்படி அவரை மோகிப்பதற்கு எத்தனைஞ் செய்தார்கள். செய்தும், சிவபிரானுடைய திருவருளையே முன்னிட்டு ஒழுகுகின்ற வாகீசர், தம்முடைய சித்தநிலை சிறிதும் வேறுபடாதபடி, தாஞ்செய்யும் திருப்பணியிலே உறுதிகொண்டு, இருவினை முதலிய வைகளை முன்னிலைப்படுத்தி "நான் திருவாரூரிலே வீற்றிருக்கின்ற சுவாமிக்கு ஆளானேன்; உங்களாலே ஆட்டுண்ணேன்; நீங்கள் என்னை அலையன்மின்" என்னும் கருத்தால் "பொய்ம்மாயப் பெருங்கடலில்" என்னும் திருத்தாண்டகத்தைப் பாடியருளினர். அரம்பையர்கள் தங்கருத்து முற்றுமையால், அவரை வணங்கிவிட்டுப் போனார்கள். இந்த நிலைமையைச் சகல லோகத்தார்களும் அறிந்து துதிக்க லுற்றார்கள்.

வாகீசர் "புகலூரர் என்னை இனிச் சேவடிக் கீழிருத்திடும்" என்று எழுகின்ற ஞானத்தினால், திருவிருத்தங்கள் பலவற்றைப் பாடி சித்திரை மாசத்திலே சதய நட்சத்திரத்திலே 'எண்ணுகேனென் சொல்லி யெண்ணுகேனே" என்று திருத்தாண்டகமெடுத்து, இறுதி தோறும் "உன்னடிக்கே போதுகின்றேன் பூம்புகலூர் மேவிய புண்ணியனே" எனப் பாடிச் சிவபெருமானுடைய திருவடியையடைந்தார்.

---

## சுந்தரமூர்த்தி நாயனார்

ஒருமணத்தைச் சிதைவுசெய்து வல்வழக்கிட்டு
ஆட்கொண்ட வுவனைக் கொண்டே
இருமணத்தைக் கொண்டருளிப் பணிகொண்ட
வல்லாள னெல்லா முய்யப்
பெருமணச்சீர்த் திருத்தொண்டத் தொகைவிரித்த
பேரருளின் பெருமா னென்றுந்
திருமணக்கோ லப்பெருமான் மறைப்பெருமான்
எமதுகுல தெய்வ மாமால்.

தமிழகத்தேயுள்ள திருமுனைப்பாடி நாட்டிலே திருநாவலூரிலே ஆதிசைவப் பிராமண குலத்தில், சடையனார் மனைவியாகிய இசை ஞானியாரிடத்தில் ஓர் அருந்தவப் புதல்வன் அவதரித்தார். அக் குழந்தைக்கு நம்பியாரூரர் எனப் பெயரிட்டனர். அக் குழந்தை வீதியில் சிறு தேருருட்டி விளையாடும்போது, அவ்வூர் அரசராகிய நரசிங்கமுனையர் அக் குழந்தையைக் கண்டு ஆசை கொண்டு சடையனாரிடம் கேட்டுப் பெற்று தமது மாளிகையில் அபிமான புத்திரராய் வளர்த்து வந்தார். பிராமண வருணத்துக்குரிய ஒழுக்கநெறியின்படி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூணூல் தரித்து, வேதங்களை ஓதிச் சகலகலைகளையும் சந்தேக விபரீத
மறச் கற்று வந்தார்.

நம்பியாரூரர் மணஞ் செய்வதற்குரிய பருவத்தையடைந்ததும்,
சடையனார் தம் மரபிற்கேற்றதாய் புத்தூரில் வாழ்கின்ற சடங்கவி
சிவாசாரியாருடைய புதல்வியைத் திருமணம் பேசுவித்து நிச்சயித்
தார். திருமணத்திற்காகிய சுபவேளையில் மணக்கோலத்துடன் புறப்
பட்டு கல்யாணப் பந்தரையடைந்தார்.

அப்பொழுது பரமசிவன் தமது அன்பராகிய சுந்தரரை ஆட்
கொண்டருளத் திருவுளங்கொண்டு, ஒரு வயோதிபப் பிராமண
வேடந் தாங்கி, அப் பந்தரின் கண்ணே வந்தருளி நின்று, "எனக்கும்
நம்பியாரூரர்க்கும் ஒரு வழக்குண்டு அதை முடித்துக்கொண்டே உம்
முடைய விவாகத்தை நடத்தவேண்டும்" என்றார். நம்பியாரூரர்
"உமக்கும் எனக்கும் வழக்கு உளதாயின் அதனை முடித்தே விவாகஞ்
செய்வேன், அவ்வழக்கைச் சொல்லும்" என்று கேட்க, அந்தப்
பிராமணர் சபையோரைப் பார்த்து "இந்தத் திருநாவலூரனாகிய
நம்பியாரூரர் எனக்கு அடியவன்" என்று கூறி "பாட்டனார் எழுதித்
தந்த மூலவோலை இதோ இருக்கிறது" என்று காட்டியருளினார்.

உடனே நம்பியாரூரர் ஐயரைப் பார்த்து, "பிராமணருக்குப்
பிராமணர் அடிமையாதலை இன்றைக்கு நீர் சொல்லக் கேட்டோம்;
நீர் பித்தனோ" என்று சொல்ல, ஐயர் "நான் பித்தனானாலும் ஆகுக;
நீ என்னைச் சிறிதும் அறிந்திலை. இப்படி நின்று விளையாட்டு மொழிகள்
பேசவேண்டாம். அடிமைத் தொழில் செய்ய வா" என்றார். இதனைக்
கேட்டு ஆத்திரங்கொண்ட நம்பியாரூரர் பிராமணர் கையிலிருந்த
ஓலையைப் பறித்துக் கிழிக்க, ஐயர் சுந்தரமூர்த்தியைப் பிடித்துக்
கொண்டு "இது முறையோ" என்று சத்தமிட்டார். சபையிலிருந்
தோர் இருவரையும் விலக்கி, "ஐயரே நீர் எந்த ஊரில் இருப்பவர்"
எனக் கேட்டனர். "நான் இருக்கும் இடம் திருவெண்ணெய் நல்லூர்"
என்றார். 'இருவர் வழக்கையும் அங்கேயே பேசித் தீர்த்துக்கொள்
வோம்' என்று சுந்தரர் சொன்னார். ஐயர் அதைக் கேட்டு "அங்கி
ருக்கின்ற பிராமணர்களுக்கு முன்னே ஆதியில் எழுதப்பட்ட மூல
வோலையைக் காட்டி, நீ எனக்கு அடிமை என்பதைச் சாதிப்பேன்"
என்று கூறிக்கொண்டு தண்டை ஊன்றிக்கொண்டு முந்தி நடந்தார்;
சுந்தரமூர்த்தியும் மற்றைப் பிராமணர்களும் பின்னே சென்றனர்.

அங்குள்ள பிராமணர் சபையிலே தனது வழக்கைக் கூறியதுடன்
பாட்டனார் எழுதிக் கொடுத்த மூலவோலையையுங் காட்டி வாதிட்டு
சுந்தரர் தமக்கு அடிமை என்பதை திருபித்தார். அப்பொழுது சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோர் அந்த ஐயரைப் பார்த்து நீர் இருக்கும் இடத்தைக் காட்டும் என்று கேட்க, ''வாருங்கள் காட்டுகிறேன்'' என்று கூறி, சுந்தர மூர்த்தியும் மற்றைப் பிராமணர்களும் பின்னே வர, தாம் அவ்வூரி லிருக்கின்ற திருவருட்டுறை என்னுஞ் சிவாலயத்தினுள்ளே போனார். அவரைக் காணாது சபையோர் திகைத்து நின்றார்கள்.

இவ்வற்புதச் செயலைக் கண்ணுற்ற சுந்தரமூர்த்தி நாயனார் ஆல யத்தினுள்ளே சென்று இறைவனை அழைத்திட, சிவபிரான் இடபா ரூடராய் வெளிப்பட்டு ''அன்பனே! நீ முன்னே நமக்குத் தொண்ட னாயிருந்தாய். நீ பெண்கள் மீது இச்சை வைத்ததினால் நம்முடைய ஆஞ்ஞையினாலே பூமியிலே பிறந்தாய். இப்பொழுது துன்பத்தைத் தருகின்ற சமுசார பந்தமானது உன்னைத் தொடராதபடி, நாமே வந்து உம்மைத் தடுத்தாட்கொண்டோம்'' என்று திருவாய் மலர்ந் தருளினார். அதைக் கேட்ட மாத்திரத்தே அடியற்ற மரம் போல் வீழ்ந்து வணங்கி எழுந்து நின்று ''அடியேன் செய்த பிழைகளைப் பொறுத்தருளவேண்டும்'' என்று இரந்தார்.

அப்பொழுது பெருமான் நாயனாரை நோக்கி, ''அன்பனே நமக்கு அன்பினோடு செய்யத்தக்கது பாட்டேயாகும். ஆதலால் எம்மீது தமிழ்ப் பாடல்களைப் பாடுவாயாக'' என்று அருளிச்செய்ய நாயனார் கைகூப்பி வணங்கி 'என்ன சொல்லிப் பாடுவேன்' என்று கேட்க ''முன்னே பித்தனென்று சொன்னாய் ஆதலால் பித்தனென்றே பாடு'' என்று பெருமானார் அருளிச் செய்தார். நாயனார் ''பித்தா பிறைசூடி'' என்னுஞ் சொற்றொடரை முதலாகக் கொண்டு திருப் பதிகம் பாடியருளினார். அதன்பின் சிவபிரான் நாயனாரை நோக்கி, 'தொண்டனே நீ இன்னும் நம்முடைய புகழைக் குறித்துப் பல வகையாகப் பாடு' என்று அருளிச் செய்து மறைந்தருளினார்.

அது நிற்க புத்தூர் சடங்கவி சிவாசாரியார் புத்திரி கல்யாணந் தவிர்ந்ததினால் சுந்தரமூர்த்தி நாயனாரையே தியானஞ் செய்து சில காலத்தின் பின் சிவபதமெய்தினார்.

அதன்பின்னர் சுந்தரர் திருவருட்டுறை, திருநாவலூர், திருத் துறையூர் முதலிய திருப்பதிகட்குச் சென்று தேவாரப் பதிகங்கள் பாடியருளினார். பின்னர் சிதம்பர தரிசனஞ் செய்ய விரும்பி சுந்தர மூர்த்தி நாயனார் பெண்ணைநதியைக் கடந்து, திருவதிகை வீரட்டா னேசுவரத்தில் அப்பர் சுவாமிகள் திருத்தொண்டு செய்த தலமாதலின் அத்தலத்தில் அடி வைத்து நடக்க அஞ்சி அதன் அயலிலுள்ள சித்த வட மடத்திற் சென்றிருந்தார். அம் மடத்தில் இரவு படுத்துறங்கிய போது சிவபெருமான் நாயனாருக்குத் திருவடி தீட்சை செய்தருளி னார். பெருமானார் தீட்சை செய்தருளிய பெருமையை நினைந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தம்மானை யறியாத சாதியாருளரோ" என்னுந் திருப்பதிகம் பாடியருளினார். பின்பு திருமாணிக்குழி, திருத்தினை நகர் முதலாம் தலங்களையடைந்து தேவாரத் திருப்பதிகங்கள் பாடி, தில்லையின் எல்லையையடைந்து, தூல லிங்கமாகிய திருக்கோபுரத்தை வணங்கி, ஆலயத்தினுட் சென்று சபாநாயகரைத் தரிசித்துத் திருப்பதிகம் பாடி வணங்கினார். அங்கே நடராஜ மூர்த்தி திருவருளால் "நீ திருவாரூருக்கு வா" என்னும் அசரீரி வாக்கு எழுந்தது. மீண்டும் நடராஜப் பெருமானை வணங்கிக்கொண்டு சீகாழிப்பதியை நோக்கிச் சென்றார். அப்பதி திருஞானசம்பந்தர் அவதரித்த தலமாதலின் அத் தலத்தின் எல்லையுட் பிரவேசிக்க உள்ளங் கூசியவராய், எல்லைப் புறத்தே நின்று பரமசிவனை வணங்குதலும், பெருமான் காட்சி கொடுத்தருள, நாயனார் ஆனந்தமடைந்து "சாதலும் பிறத்தலும் தவிர்த்து" என்னுந் திருப்பதிகம் பாடியருளினார்.

பின்னர், சுந்தரமூர்த்தி நாயனார் திருக்கோலக்கா, திருப்புன்கூர், மாயூரம், அம்பர், மாகாளம், திருப்புகலூர் முதலாந் தலங்களிற் சென்று வணங்கித் திருப்பதிகம் பாடித் திருவாரூரைச் சமீபித்தார். சிவபிரான் ஆஞ்ஞைப்படி அன்பர்கள் எதிர்சென்று அழைத்து வர, திருவீதியில் வரும்போது "கரையுங் கடலும்" என்னும் பதிகத்தைப் பாடிக்கொண்டு, திருக்கோயிலையடைந்து தேவாசிரய மண்டபத்தைக் கண்டு, பின்னர்ப் புற்றிடங்கொண்ட பெருமானை வணங்கித் திருப்பதிகம் பாடினார். அப்போது பெருமானார் "ஆரூரனே! நாம் உனக்குத் தோழரானோம்; நீ முன்னர்க்கொண்ட மணக்கோலத்துடன் எப்பொழுதும் வாழ்வாயாக" என்று கூறியருளினார். அன்று முதலாக உலகிலுள்ள அன்பர்கள் அனைவரும் நம்பியாரூரரைத் "தம்பிரான் தோழர்" என்று பாராட்டுவாராயினர். சுந்தரர் அத் திருமணக் கோலத்தைப் புனைந்தவராய், வன்மீக நாதரைத் தினந்தோறும் வணங்கி வருவராயினர்.

திருக்கைலாசகிரியில் இருக்கும் பார்வதி தேவியாருடைய சேடியர்கள் இருவருள் ஒருவராகிய கமலினி என்பவர் அந்தத் திருவாரூரில் பரவையார் என்னும் நாமத்தோடு அவதரித்திருந்தார். மங்கைப் பருவம் அடைந்திருந்த அவரும் பாங்கிமாரோடு அத்திருக் கோவிலுக்குச் சென்று சுவாமி தரிசனஞ் செய்து வருவார்.

அந்தப் பரவையார் ஒருநாள் சுவாமி தரிசனம் பண்ணும்போது, அங்கே பரிசனரோடும் வந்த சுந்தரமூர்த்தி நாயனார் அவரைக் கண்டு ஆசை கொண்டு நின்றார். பரவையாரும் சுந்தரரைக் கண்டு ஆசை கொண்டு பின் சுவாமி தரிசனம் செய்யவேண்டுமென்னும் விருப்பால் தம்மை அவ்வாசையினின்றும் விடுவித்துக்கொண்டு ஆலயத்தினுள்ளே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றார். ''என் மனதைக் கவர்ந்த இப் பெண் யார்'' என சுந்தரர் அங்குள்ளோரிடம் வினவ, அங்கு நின்றவர்கள் இவர் உருத்திர கணிகையரில் ஒருவர் என்றனர். சுந்தரர் இறைவனை வணங்கிக்கொண்டு புறப்பட்டு, தேவாசிரயன் என்னும் ஆயிரங்கால் மண்டபத்தை யடைந்து ''வன்மீகநாதர் பரவையாரை எனக்குத் தந்தருளுவார்'' என்று நினைத்துக்கொண்டு, அங்கு இருக்க, பொழுதுபட்டது.

முன்னே சுவாமி தரிசனஞ் செய்துகொண்டு புறப்பட்ட பரவையார் சுந்தரமூர்த்தியிடத்திற் சென்று தம்வயப்படுத்தித் தமது மாளிகையையடைந்தார். சுந்தரர் 'இறைவனுக்குரிய அடியவர்' என்பதைப் பாங்கியர் மூலம் அறிந்து அவரைச் சேரவேண்டுமென்னும் பேராவல் கொண்டிருந்தார். இருவர் உள்ளங்களையும் அறிந்து கொண்டவராகிய பெருமானார் இருவருக்கும் விவாகஞ் செய்து வைக்குமாறு அடியார்களுக்குச் சொல்லியருளினார். இருவருக்கும் விதிப்படி விவாகஞ் செய்து வைத்தனர்.

சுந்தரமூர்த்தி நாயனார் இங்ஙனம் பரவையாரோடு வாழும் நாளில் ஒருநாள் திருக்கோயிலிற் சென்று தேவாசிரய மண்டபத்திலே சிவனடியார் கூடியிருப்பதைக் கண்டு அவர்கள் மீது பக்தி மேலிட்டு இவ்வடியார் பேறு பெறும் பொருட்டு இறைவனை வேண்டினார். இறைவன் அடியார் பெருமைகளையும் திருத்தொண்டுகளையும் சுந்தரருக்கு அறிவுறுத்தி, உலகத்தார் உய்யும் வண்ணம் வேதாகமங்களை யருளிச்செய்த தமது திருவாக்கினாலே ''தில்லைவாழந்தணர்தம் அடியார்க்குமடியேன்' என்று அடியெடுத்துக் கொடுத்தார். சுந்தரமூர்த்தி நாயனார் திருத்தொண்டத் தொகையென்னும் பதிகத்தைப் பாடியருளினார்.

நம்பியாரூரர் திருவாரூரில் இருக்குங் காலத்தில் குண்டையூர்க் கிழார் என்னும் அன்பரொருவர் அரிசி, நெல், பருப்பு முதலிய பொருள்களைக் கொடுத்துதவி வந்தார். சிலகாலம் மழையில்லாமையால் வளம் சுருங்கியமையால் குண்டையூர்க்கிழார் சுந்தரருக்குச் செய்துவந்த தொண்டு முட்டுப்படுமே எனக் கவலை கொண்டு இறைவனைப் பிரார்த்தித்தார். சிவபிரான் அருளால் நெற்குவையையுதவியருளினார். அந்நெற்குவை மனிதரால் எடுக்க முடியாத அளவிற்குப் பெருகியிருந்தது. இதனைக் குண்டையூரார் சுந்தரருக்கு அறிவித்தார். நெற்குவையை வீடு சேர்க்க அருள் புரியுமாறு சுந்தரர் இறைவன் சந்நிதியையடைந்து, ''நீளநினைந் தடியேன்'' என்னுந் திருப்பதிகத்தைப் பாடியருளினார். சிவாஞ்ஞைப்படி குண்டையூரிலிருந்த நெற்குவையைப் பூதகணங்கள் சுந்தரர் வீடு சேர்த்தனர். அவ்வூர்ச் சனங்களுக்கும் நெற்குவைகளைக் கொடுத்துதவினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்ஙனம் சிலநாட் சென்றபின், திருநாட்டியத்தான் குடியில் வாழும் கோட்புலி நாயனார் சுந்தரமூர்த்தி நாயனாரை வணங்கித் தமது ஊருக்கு வந்தருளுமாறு வேண்டிக்கொள்ள நாயனாரும் அதற்கு உடன்பாடு தெரிவித்தார். சுந்தரர் அங்கெழுந்தருளியபோது கோட்புலி நாயனார் எதிர்கொண்டழைத்து உபசரித்து, திருவமுது செய்வித்தபின் சிங்கடியார், வனப்பகையார் என்னும் இரு புதல்வியரையும் கொண்டுவந்து நாயனார் முன்னிலையில் விடுத்து, இவர்களை அடிமையாகக் கொண்டருள வேண்டிக்கொண்டார். அவர்கள் இருவரையும் தமது அபிமான புத்திரிகளாகக் கொண்டார். நாயனார் அங்குள்ள கோயிலுக்குச் சென்று பரமசிவனை வணங்கி, ''பூணாணை தோராவம்'' என்னும் திருப்பதிகத்தில் கோட்புலி நாயனாரைச் சிறப்பித்தருளினார்.

பின்னர் நாயனார் திருவலிவலம் சென்று பெருமானை வணங்கி, ''வலிவலந் தன்னில்வந்து கண்டேனே'' என்னும் பதிகம் பாடி மீண்டும் திருவாரூரையடைந்து இறைவனை வணங்கியபின் பரவையார் மனையில் இருக்கும்போது பங்குனி உத்தரத் திருநாள் சமீபித்தலும் பரவையார் திருவிழாச் செலவிற்குப் பணம் கொடுப்பதற்குப் பொன் கொண்டுவரும் பொருட்டு, திருப்புகலூரையடைந்து சந்நிதானத்தில் திருப்பதிகம் பாடி சமீபத்தில் இருக்கின்ற திருமடத்திற்குச் செல்லுமுன் கோயில் முன்றிலில் அடியார்களோடும் வீற்றிருந்தார். அவ்வேளையில் நித்திரை வந்தது. செங்கற்கள் சிலவற்றை வருவித்து உயரம்பண்ணி, அதனையே தலையணையாகக்கொண்டு, உத்தரீயத்தை விரித்து நித்திரை செய்தார். பின் விழித்தெழுந்தபோது, செங்கற்கள் எல்லாம் பொற்கல்லாய் இருக்கக்கண்டு, திருவருளைத் துதித்து, திருக்கோயிலினுள்ளே சென்று ''தம்மையேபுகழ்ந் திச்சைபேசினும்'' என்னுந் திருப்பதிகம் பாடிப் பொற்குவையையுங் கொண்டு, அவ்விடத்தினின்றும் நீங்கி, திருப்பனையூருக்குப் புறத்தே போனார். அப்பொழுது சிவபிரான் காட்சி கொடுத்தருள, சுந்தரமூர்த்தி நாயனார் எதிர்சென்று வணங்கி, ''மாடமாளிகை'' என்னும் பதிகம் எடுத்து ''அரங்கிலாட வல்லாரவரே அழகியரே'' என்று பாடி, திருவாரூரையடைந்து, பரவையார் வீட்டில் எழுந்தருளியிருந்தார்.

பின்னர் அவ்விடத்தை விட்டகன்று, திருநன்னிலம், திருவீழிமிழலை, திருவாஞ்சியம், திருநறையூர், அரிசிற்கரைப்புத்தூர், திருவாவடுதுறை, திருவிடைமருதூர், நாகேச்சுரம், சிவபுரம், கலயநல்லூர், கும்பகோணம், திருவலஞ்சுழி, திருநல்லூர், திருச்சோற்றுத்துறை, கண்டியூர், ஐயாறு, பூந்துருத்தி என்னுந் தலங்களுக்கு யாத்திரை செய்து, திருவாலம் பொழிலையடைந்து சுவாமி தரிசனஞ் செய்து அன்றிரவு அங்கே நித்திரை செய்தார். சுவாமி அவருக்குச் சொப்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னத்திலே தோன்றி, ''மழபாடிக்கு வருதற்கு மறந்தாயோ'' என்று சொல்லியருளினுர். சுந்தரமூர்த்தி நாயனுர் விழித்தெழுந்து, காவிரி நதியைக் கடந்து, அதன் வடபாத்திற் சேர்ந்து, திருமழபாடிக்குப் போய் இறைவனை வணங்கி ''பொன்னுர் மேனியனே'' என்னுந் திருப்பதிகம் பாடியருளினுர். சிலநாள் அங்கிருந்து காவிரி நதியின் இருபக்கத்திலுமுள்ள தலங்களை வணங்கி, மேற்குத்திக்குக்கு யாத்திரை செய்ய விரும்பி, திருவானைக்காவுக்குப் போய், சிவபெருமானை வணங்கி ''மறைகளாயின நான்கும்'' என்னுந் திருப்பதிகம் பாடியருளினுர். உறையூர்ச் சோழ மகாராஜா பதக்கஞ் சாத்திக்கொண்டு காவிரியிலே ஸ்நானஞ் செய்தலும், அது வழுவிப்போக அவர் ''சிவபெருமானே கொண்டருளும்'' என்று பிரார்த்திக்க, அது திருமஞ்சனக் குடத்துக்குள்ளே புக, அபிடேகஞ் செய்யும் பொழுது, அதனைச் சிவபெருமான் அணிந்து அவருக்கு அருள்புரிந்த தன்மையைச் சுந்தரமூர்த்தி நாயனுர் அத் திருப்பதிகத்திலே சிறப்பித்தருளினுர்.

பின்னர் திருப்பாச்சிலாச்சிரமத்தை யடைந்து, ''வைத்தனன் றனக்கே தலையுமெ னுவும்'' என்னுந் திருப்பதிகத்தைப் பாடி, பொற்குவை பெற்றுச் சிலநாள் அத்தலத்திலே தங்கியிருந்து திருப்பைஞ்ஞீலி, திருவீங்கோய்மலை என்னுந் தலங்களை வணங்கிக்கொண்டு சுந்தரமூர்த்தி நாயனுர் கொங்கநாட்டை அடைந்தார். அங்கே காவிரிக்குத் தென்கரையிலிருக்கும் திருப்பாண்டிக் கொடுமுடி என்னுந் தலத்திற்குச் சென்று, ''மற்றுப்பற் றெனக்கின்றி'' என்னும் நமச்சிவாயப் பதிகத்தைப் பாடித் திருப்பேரூரையடைந்து, அங்கெழுந்தருளிய பெருமான் பொன்னம்பலத்தில் தாம் நடனஞ் செய்யும் திருக்கோலத்தைக் காட்ட, அற்புதத்தோடு வணங்கிக்கொண்டு சிதம்பரத்திற்கு மீண்டு செல்லச் சித்தங்கொண்டார். செல்லும் மார்க்கத்தில் திருவெஞ்சமாக்கூடல், திருக்கற்குடிமலை, திருவாறைமேற்றளி, இன்னம்பர், புறம்பயம் என்னுந் தலங்களைத் தரிசித்துக்கொண்டு திருக்கூடலையாற்றூரைச் சமீபித்தும், அதற்குச் செல்லாமல் திருமுதுகுன்றை நோக்கிச் சென்றுர்.

செல்லும் வழியிலே, பரமசிவன் ஒரு பிராமணராகி, சுந்தரருக்கு முன் நின்றுர். நின்ற அந்தப் பிராமணரைச் சுந்தரமூர்த்தி நாயனுர் பார்த்து ''ஐயரே, திருமுதுகுன்றுக்குப் போகும் வழி எது? சொல்லும்'' என்று கேட்க, ஐயர் ''இது கூடலையாற்றுக்குப் போகும் வழி'' என்று சொல்லி வழிகாட்டிக்கொண்டு முன்னே சென்றுர். ஆலாலர் அவரைத் தொடர்ந்து சென்று, பின் அவரைக் காணுதவராய், ''வடிவுடை மழுவேந்தி'' என்றெடுத்து ''அடிகளிவ் வழிபோந்த அதிசய மறியேனே'' என்னுந் திருப்பதிகத்தைப் பாடிக் கூடலையாற்றூரையடைந்து, சுவாமி தரிசனஞ் செய்துகொண்டு திருமுதுகுன்றுக்குப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போனர். அத்திருமுதுகுன்ற நாதர் பன்னீராயிரம் பொன் கொடுத்தருள, அவர் அதை மணிமுத்தா நதியிலிட்டுத் திருவாரூர்க் குளத்தில் எடுத்துப் பரவையார்க்குக் கொடுத்தனர்.

பின்னர் நள்ளாறு முதலிய தலங்களையெல்லாம் தரிசித்துத் திருக்குருகா வூருக்குச் செல்லுங்காலத்து, மகாதேவன் கொடுத்த பொதிசோற்றையுண்டு "இத்தனை யாமாற்ற மறிந்திலேன்" என்னுந் திருப்பதிகம் பாடி, நடுவிலுள்ள பல தலங்களைத் தரிசித்துத் திருநாவலூரையடைந்து சிலநாள் அங்கிருந்தனர். பின் தொண்டை நாட்டிலுள்ள தலங்களைத் தரிசிக்க விரும்பித் திருக்கழுக்குன்றத்தைத் தரிசித்துத் திருக்கச்சூருக்குச் சென்று அங்கு இறைவன் பிச்சையெடுத்துக் கொடுத்த அன்னத்தையுண்டு, "முதுவாயோரி கதற" என்னுந் திருப்பதிகத்தைப் பாடிக்கொண்டு, காஞ்சீபுரம், திருவோணகாந்தன்தளி, திருக்காளத்தி முதலாகிய தலங்களைத் தரிசித்து ஒற்றியூர் வந்து சேர்ந்தார்.

அக்காலத்து அநிந்திதையார் என்பவர் ஞாயிறு என்னும் ஊரிலிருக்கும் ஞாயிறுகிழார் என்பவர் புதல்வியாகப் பிறந்துள்ள சங்கிலியார் என்னும் பெயர் பெற்று, மணப் பருவத்தையடைந்து ஒருவரையும் மணக்க எண்ணாது, தந்தையார் உத்தரவினைப் பெற்றுத் திருவொற்றியூரையடைந்து கன்னிமாடத்து இருந்து, இறைவன் திருவருளை முன்னிட்டுப் பூமாலை முதலியவைகளை இறைவனுக்குத் தொடுத்துக் கொடுத்து விரதங் காத்திருந்தார். அங்குச் சென்ற நம்பியாரூரர் திருக்கோயிலுட் புகுந்தபோது, சங்கிலியாரைக் கண்டு ஆசை கொண்டு அவரைத் தமக்கு மனைவியாக்கும்படி பெருமானை வேண்டலும், இறைவரும் சங்கிலியாருக்குத் தெரிவித்து அவரைப் பிரியாதிருக்கும் வண்ணம் மகிழடியின் கீழ்ச் சத்தியம் பண்ணிக் கொடுக்கும்படி செய்து, அடியவர்களால் திருமணத்தை நிறைவேறச் செய்தனர்.

இவ்விதம் சிலகாலம் சங்கிலியாரும் நம்பியாரூரரும் வாழ்ந்து வருங்காலத்தில், திருவாரூர் வசந்த உற்சவத்தை எண்ணி "பத்திமையும் அடிமையையும் கைவிடுவான் பாவியேன்" என்னும் பதிகத்தைப் பாடி ஒற்றியூரை விட்டு நீங்கி, சத்தியம் தவறியமையாற் கண்ணிழந்து, திருமுல்லை வாயிலை வணங்கித் திருவெண்பாக்கத்தையடைந்து "திருக்கோயிலுள்ளீரே" என்று பாடுதலும் "உளோம் போகீர்" என்றருளி இறையவர் அவருக்கு ஊன்றுகோல் கொடுத்தனர். பின்னர்ப் பல தலங்களையும் தரிசித்துக்கொண்டு காஞ்சீபுரத்துக்குச் சென்று கடவுளை வணங்கி இடக்கண் பெற்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னரும் பல தலங்களை வணங்கித் திருவாரூரிற் பெருமானைப் பாடுங்காலத்து வலக்கண்ணையும் பெற்றனர். இவர் சங்கிலியாரை மணந்ததைக் கேள்வியுற்ற பரவையார் இவரோடிருக்க மறுத்தலும், இறையவரே தூதுசென்று இருவருக்கும் உற்ற ஊடலைத் தவிர்த்தனர். பின்னர் இருவரும் வாழ்ந்திருந்த காலத்து ஏயர்கோன் கலிக்காம நாயனார் என்பவர் "நம்பியாரூரர் இறைவனைத் தூது அனுப்பியது தகுதியற்றது" என்று கோபங்கொண்டிருத்தலை அறிந்து, இறைவன் அவ்விருவரையும் ஒற்றுமைப்படுத்தத் திருவுளங்கொண்டு அக்கலிக்காம நாயனாருக்குச் சூலைநோய் உண்டாகச் செய்து, அதை நம்பியாரூரரால் தீர்க்க எண்ணி, நம்பியாரூரரை அங்கே போம்படி ஏவுதலும், அது கேட்ட கலிக்காம நாயனார் உடைவாளால் தம் வயிற்றைக் கிழித்துக் கொண்டு இறந்தனர். அதுகண்ட நம்பியாரூரரும் "நானும் உயிர் துறப்பேன்" என்று உடைவாளை எடுத்தனர். பின்னர் இறைவனுடைய திருவருளாற் கலிக்காமநாயனார் விழித்து எழுந்தவர் போல் உடனே எழுந்து நம்பியாரூரர் கையைப் பிடித்துக்கொண்டனர். அதனால் அவ்விருவரும் அப்போது நட்பினராயினர்.

பின்னர், சேரமண்டலத்திலுள்ள சேரமான் பெருமாள் நாயனார் நம்பியாரூரருக்கு நட்பினரானதால், சேரமான் தோழர் என்று நம்பியாரூரருக்குப் பெயர் ஆயிற்று. இவ்வாறு பல தலங்களை நம்பியாரூரரும் சேரமான் பெருமானாயனாரும் தரிசித்த பிறகு, நம்பியாரூரர் சேரநாட்டிற்குச் சென்று அங்குச் சிலகாலம் வசித்துப் பின்னர் ஆரூரரை நினைந்து அவ்வூரை வந்தடைந்தனர். சிலநாட் சென்ற பிறகு, கொங்கு நாட்டை அடைந்து திருப்புக்கொளியூர்ச் சென்று, அங்கே ஒரு வீதியில் இரண்டு வீடுகளில் ஒன்றில் மங்கல ஒலியும் மற்றதில் அழுகை ஒலியுங் கேட்டு, அழுகை ஒலிக்குக் காரணமாகிய முதலை விழுங்கிய பிள்ளையை வரவழைத்துக் கொடுத்தும், பின்னர்ச் சேரமானிடத்துச் சென்று, அச் சேரமான் பெருமாள் நாயனார் வணங்கி உபசரிக்க, அம்மலைநாட்டிலுள்ள சிவஸ்தலங்கள் பலவற்றுக்கும் போய்ச் சுவாமி தரிசனஞ் செய்துகொண்டு மகோதை நகரத்தை யடைந்தார்.

இப்படிப் பலநாட் சென்றபின் ஒருநாள் சேரமான் பெருமாள் நாயனார் ஸ்நானம் பண்ணும் பொழுது, சுந்தரமூர்த்தி நாயனார் திருவஞ்சைக்களத்துக்கு எழுந்தருளி உள்ளே புகுந்து, சந்நிதானத்திலே விழுந்து நமஸ்கரித்து எழுந்து நின்று, அக்கினியிற் பட்ட மெழுகு போல மனங்கசிந்துருக, இரண்டு கண்களினின்றும் ஆநந்த வருவி சொரிய உரோமஞ் சிலிர்ப்ப இரண்டு கைகளும் சிரசின்மேல் ஏறிக்குவிய 'அடியேனை இப் பிரபஞ்ச வாழ்க்கையினின்றும் நீக்கித் தேவரீருடைய திருவடியிலே சேர்த்தருளல் வேண்டும்" என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்போடு ''தலைக்குத் தலைமாலை'' என்னுந் திருப்பதிகம் பாடியருளினார். அப்பொழுது கைலாசகிரியிலே சிவபெருமான், விஷ்ணு, பிரமன் முதலிய தேவர்களை நோக்கி, ''நீங்கள் போய் நம்முடைய தோழனாகிய சுந்தரனை வெள்ளை யானையின் மேலேற்றிக்கொண்டு வாருங்கள்'' என்று சொல்லியருளினார்.

அதைக்கேட்ட தேவர்கள் சுவாமியை வணங்கி, அனுமதி பெற்று, வெள்ளையானையையுங் கொண்டு, திருவஞ்சைக் களத்தையடைந்து, திருக்கோயிலை வலஞ்செய்து, திருவாயிலிலே போய், உள்ளே நின்று எழுந்தருளிவந்த சுந்தரரை எதிர்கொண்டு, சிவபிரானுடைய ஆணையைத் தெரிவித்தனர். அப்பொழுது சுந்தரமூர்த்தி நாயனார் இறைவனை நினைந்து வணங்கி, எழுந்து, தேவர்களுக்கு முன்னே போனார். தேவர்கள் அவரை வலம்வந்து வெள்ளையானையின் மேல் ஏற்ற, அவர் பஞ்சவாத்தியங்கள் ஒலிக்கவும், தேவர்கள் தோத்திரஞ்செய்து பூமாரி பொழியவும், தம்முடைய தோழராகிய சேரமானாரை திருவுள்ளத்திலே நினைத்துக்கொண்டு சென்றார்.

சேரமான் பெருமான் நாயனார் சுந்தரமூர்த்தி நாயனாருடைய செயலையறிந்து, அப்பொழுதே அருகில் நின்ற ஓர் குதிரையின் மேல் ஏறிக்கொண்டு, திருவஞ்சைக் களத்துக்குப் போய், வெள்ளையானையின் மேலேறி ஆகாயத்திற் செல்லும் சுந்தரமூர்த்தி நாயனாரைக் கண்டு, தாம் ஏறிய குதிரையின் செவியிலே ஸ்ரீ பஞ்சாட்சரத்தை ஓதியருளினார். உடனே அந்தக் குதிரையானது ஆகாயத்திலே பாய்ந்து, சுந்தரமூர்த்தி நாயனாருடைய வெள்ளையானையை யடைந்து, அதனை வலஞ்செய்து, அதற்கு முன்னாகச் சென்றது. சேரமானுடைய படைவீரர்கள் குதிரையிற் செல்லும் அந்நாயனாரைத் தங்கள் கண்ணுக்குப் புறப்படுமெல்லை வரையும் ஆகாயத்திலே கண்டு, பின் காணாமையால் மிகுந்த திடபத்தியினாலே உருவிய உடைவாட்களினால் தங்கள் தங்கள் தேகத்தைச் சேதித்து வீரயாக்கையைப்பெற்றுப்போய், சேரமான்பெருமான் நாயனாருக்கு முற்பட்டு அவரைச் சேவித்துக்கொண்டு சென்றார்கள். பின்னே சென்ற சுந்தரமூர்த்தி நாயனார் ''தானெனை முன் படைத்தான்'' என்னுந் திருப்பதிகத்தைப் பாடிக்கொண்டு திருக்கைலாசமலையின் தெற்கு வாயிலுக்கு முன் போனார்.

போனவுடனே இருவரும் திருவணுக்கன் திருவாயிலை அடைந்தார்கள். அங்கே சேரமான் தடைப்பட்டு நிற்க, சுந்தரர் உள்ளே போய், சுவாமி சந்நிதானத்திலே விழுந்து வணங்கி எழுந்து நின்றார். இறைவன் அவரை நோக்கி, ''சுந்தரா வந்தாயோ'' என்று கேட்டருளினார். அதைக்கேட்ட ஆலாலசுந்தரர் ''சுவாமி அடியேன் செய்த பிழையைப் பொறுத்து, பந்தத்தினின்றும் நீக்கி, அடியேனுக்குத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவடி தந்தருளிய பெருங்கருணை அடியேன் தரத்ததோ'' என்று சொல்லிப் பலமுறை வணங்கி, சிவானந்த வெள்ளத்தில் அமிழ்ந்தி நின்றார்.

பின்னர் ''சுவாமீ தேவரீருடைய திருவடிகளை அடையும் பொருட்டு சேரமான் பெருமாள் திருவணுக்கன்றிருவாயிலின் புறத்தே வந்து நிற்கின்றார்'' என்று சுந்தரர் விண்ணப்பஞ் செய்ய, சிவபிரான் அவரை உள்ளே அழைப்பித்து, ''நீயும் ஆலாலசுந்தரனும் நமது கணங்க ளெல்லாவற்றுக்குந் தலைவராயிருங்கள்'' என்று அருளிச் செய்தார். இருவருந் திருக்கைலாசபதியை வணங்கி அவர் திருந்தொண்டுகளைச் செய்து வருவாராயினர்.

முன்னே பூமியில் அவதரித்த பரவையாரும் சங்கிலியாரும் முறையே கமலினியாரும், அநிந்திதையாருமாகிப் பார்வதி தேவியா ருக்கு முன் செய்து வந்த பணியைச் செய்து வந்தனர்.

---

## மாணிக்கவாசக சுவாமிகள்

### மந்திரியானமை

செந்தமிழ் நாடாகிய பாண்டி நாட்டிலே வைகையாற்றங்கரையி லுள்ள மதுரை மா நகருக்கண்மையில் திருவாதவூர் என்னும் திருப் பதியிலே ஆமாத்தியப் பிராமண குலத்தில் மணிவாசகர் தோற்றினார். இவரது இயற்பெயர் திருவாதவூரர். தந்தையார் பெயர் சம்புபாதா சிரையர். தாயாரின் பெயர் சிவஞானவதி. இவர் பதினாறு ஆண்டு களுக்குள்ளே வேதசிவாகமங்களையும் பல கலைகளையுங் கற்றுப் புலமை எய்தினார்.

மணிவாசகர் குணாதிசயங்களைக் கேள்வியுற்ற அரிமர்த்தன பாண்டியன் இவரைத் தனது முதன் மந்திரியாக நியமித்தான். 'தென்னவன் பிரமராயன்' என்னும் பட்டப் பெயரையுஞ் சூட்டினான். இப் பெயருடன் மந்திரிப் பதவியை ஏற்று நீதி தவறாது பரிபாலனஞ் செய்து வந்தார். திருவாதவூரர் மனதிலே உலகப் பற்றுக் குறைந்து சிவபக்தி மேலிட்டது. பதி, பசு, பாசம் என்ற விசாரம் உண்டானது. பரமசிவனைப் பக்தியோடு வழிபட்டுவந்தார். உண்மை ஞானத்தைத் தருவதாகிய நான்காஞ் சத்திநிபாதமென்னும் அதிதீவிர பக்குவ நிலையடைந்தார்.

இச்சமயத்தில் அரசன் இவரை அழைத்து, சோழநாட்டிற்குச் சென்று சிறந்த குதிரைகள் வாங்கி வருமாறு பெரும் பொருள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்து அனுப்பினன். பாண்டியன் கொடுத்த 49 கோடி பொன்னை யும் பெற்றுக்கொண்டு, நால்வகைச் சேனைகளுஞ் சூழப் புறப்பட்டு, ஆலவாயின் கண்ணேயுள்ள சோமசுந்தரக் கடவுளை வணங்கி விடை பெற்றுச் சென்ருர்.

### உபதேசம் பெற்றமை

மதுரையை விட்டு நீங்கி சோழநாட்டைச் சமீபித்தார். வழியிலே திருப்பெருந்துறையில் தங்கினர். அங்கே ஒரு ஞானசாரியர் குருந்த மரத்தின் கீழ், பல மாணவர்கள் புடைசூழ வீற்றிருப்பக் கண்டார். வேதசிவாகமங்களின் ஒலியைக் கேட்டு பரவசமானர். தம்மை ஆட் கொண்டருளுமாறு பரமாசாரியாரை வேண்டிக்கொண்டார். இவரு டைய பரிபக்குவ நிலையைக் கண்ட ஞானசாரியாராகிய கடவுளும் ஞானேபதேசத்துடன் திருவடி தீட்சையும் செய்தருளினர்.

ஞானேபதேசம் பெற்றபின்பு, சிவானந்த மேலீட்டினலே அதி மதுரமான பாடல்களைப் பாடுவாராயினர். அப்பாமாலைகள் மாணிக்க மெனத் திகழ்ந்தனவாகையால் குருநாதர் இவருக்கு ''மாணிக்க வாசகர்'' என்னும் திருநாமத்தைச் சூட்டினர். குதிரை வாங்கக் கொண்டுவந்த பொருள் முழுவதையும் ''திருக்கோயில் கட்டும் பணியில் செலவிடுக'' என்றும் 'இங்கே நீ செய்யவேண்டிய கருமங்கள் உண்டு; ஆதலால் சிலகாலம் இங்கிருப்பாயாக'' எனக் கட்டளையிட்டும் ஞானு சாரியார் மறைந்தருளினர். கொண்டுவந்த பொருளை சிவாலயத் திருப்பணியிற் செலவிட்டார். தாம் வந்த காரியத்தையும் மறந்து பித்துப்பிடித்தவர் போல் இருந்தார். தம்முடன் வந்த பரிவாரங்கள் என்ன சொல்லியும் இவர் காதில் விழவில்லை. தூதுவர் பாண்டியனிடம் போய் முறையிட்டனர். இவரது நிலையைக் கேள்வியுற்ற பாண்டியன் சுவாமிகளை உடனே மதுரைக்குத் திரும்புமாறு கடிந்தெழுதிய ஓலையை அனுப்பினன். அவ்வோலையை ஆசாரிய மூர்த்தியாக எழுந்தருளி யிருக்கும் இறைவனுக்குக் காட்டினர். இறைவன் ''நாம் அடுத்து வரும் ஆவணி மூலத்தில் குதிரைகளைக் கொண்டு வருவோம்; நீர் முன்னதாகவே மதுரைக்குச் சென்று பாண்டியனுக்கு அறிவிக்கலா மென்றுங் கூறியருளினர். ஒரு மாணிக்கக் கல்லையும் அரசனிடம் கொடுக்கும்படி அளித்தார்.

### குதிரையிட்டமை

சுவாமிகள் உடனே மதுரைக்கு மீண்டு அரசனிடம் இறைவனுல் அளிக்கப்பெற்ற மாணிக்கக்கல்லையும் கொடுத்து, குதிரைகள் ஆவணி மூலத்தில் வரும் செய்தியையும் கூறினர். அத்தின முதல்நாள் வரை குதிரைகள் வராமை கண்டு அரசன் கோபங்கொண்டு நாயனரைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறையிலிட்டு அவர் கொண்டுபோன பொருளையெல்லாம் வாங்கும்படி கட்டளையிட்டான். ஏவலாளர்கள் சுவாமியை வருத்தினார்கள். அவர் சிறிதும் மனங் கலங்காது சிவபிரானைத் துதித்தவண்ண மிருந்தார்.

ஆவணி மூலநாளில் பரமசிவன் குதிரைச் சேவகர் வேடம்பூண்டு குதிரைகளுடன் மதுரைக்கு எழுந்தருளினார்கள். குதிரைப் பந்திகளின் வரவைக் கண்ட அரசன் மனமகிழ்ச்சியடைந்து மாணிக்கவாசகரைச் சிறையிலிருந்து விடுவித்து அங்கு வந்த குதிரைகளை தானும் அவரு மாகப் பரீட்சை செய்தனர். குதிரைகள் சிறிதும் இலக்கணப் பிழை யில்லாமையைக் கண்டு பாண்டியன் மகிழ்ந்தான். குதிரை வீரராக வந்த சிவபிரானிடம் அவற்றைக் கயிறு மாற்றி வாங்கிக்கொண்டு, குதிரை வணிகராக வந்த தலைவருக்கு பாண்டியன் பட்டாடை ஒன்றைப் பரிசாக அளித்தான். சோமசுந்தரக் கடவுள் அதனைச் சென்னியில் ஏற்றுக்கொண்டார். இதனால் அரசனுக்குக் கோபம் உண்டானது. இச்செயல் அவர்களின் தேசவழமை என மாணிக்க வாசகர் ஆறுதல் கூறினார். குதிரைகள் பந்தியில் கட்டப்பெற்றன.

அன்றிரவு நடுச்சாமத்தில் பரமசிவனது அருளினால் அந்தக் குதிரைகள் எல்லாம் நரிகளாகி, மதுரையிலுள்ளவர்களின் நித்திரை யைக் குழப்பி ஒன்றோடொன்று சண்டையிட்டு, அந்தப் பந்தியில் நின்ற குதிரைகளைக் கடித்துக் கொன்று, ஊளையிடத் தொடங்கின. அதைக்கண்ட பரியாளர்கள் அரசனிடம் முறையிட்டார்கள். அதனைக் கேட்ட பாண்டியன் அதிகங் கோபங்கொண்டான். உடனே பெருமான் நரிகளை மாயமாய்ப் போகும்படி செய்தார். கோபமடைந்த அரசன் இது மாணிக்கவாசகரின் சூழ்ச்சியென்று கருதி, சுடுமணலில் நிறுத்து வித்தான். அரசன் செய்வித்த துன்பமொன்றும் அவரைத் தாக்க வில்லை.

**மண் சுமந்தமை**

அடியார்க்கு எளியராகிய சிவபெருமான் மணிவாசகருக்கு, நேர்ந்த துன்பத்தை நீக்கவும், செம்மனச்செல்வி என்னும் மூதாட்டி யின் சிவபக்தியை உலகுக்கு எடுத்துக்காட்டவுந் திருவுளங்கொண் டார். கங்கா நதியை பெருக்கெடுக்கச் செய்தார். அந்நதி வைகை நதியோடு கலந்து பெருகி மதுரை நகரின்மீது பரவியது. மேலும் மேலும் நீர் பெருகியது. நகரையே அழிப்பது போல ஓடிற்று. இதனை அறிந்த பாண்டியன், சொக்கலிங்க மூர்த்தியைப் பலவாறு வணங்கினன். வெள்ளம் சிறிதும் குறையவில்லை. பெருக்கிற்குக் காரணம் தான் மாணிக்கவாசகருக்குத் துன்பஞ் செய்தமையே என்று உணர்ந்தான். சிறையிலிருந்தும் அவரை விடுவித்து, தான் செய்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிழையைப் பொறுத்தருளும்படி வேண்டிக்கொண்டான். வைகைக் கரையை அடைப்பித்தற்கும் அவரது துணையை நாடினான். வேண்டுதல் வேண்டாமை இல்லாத நாயனார் சிவபிரானிடம் பதிந்த உள்ளத்தின ராய் நகரிலுள்ளார் அனைவருக்கும் வைகைக் கரையை அடைக்கும் பொருட்டுப் பங்கிட்டு சிறிது சிறிது பாகமாக ஒவ்வொருவருக்கும் அளவிட்டார். அவர் ஏவியபடியே நகரத்தார் தத்தம் பாகக் கரையை அடைத்தனர்.

அவ்வேளையில் பரமசிவன்மீது மிகவும் அன்புள்ளவளும், பிட்டு விற்றுச் சீவனஞ் செய்பவளும், நரை மூதாட்டியுமான செம்மனச் செல்வி என்பவள், தனக்கு விடப்பட்ட பங்கை அடைக்க வகையறி யாது நிற்க, அரசனுடைய ஏவலாளர்கள் அம்மையாரை வற்புறுத் தினர். இதனால் வருந்திய செல்வியார் சோமசுந்தரக் கடவுளின் திருக்கோயிலை அடைந்து முறையிட்டார். சிவபிரானே கூலியாளராக வேடந்தாங்கி எழுந்தருளி வந்து, அவர் கொடுத்த பிட்டையும் முற்கூலியாகப் பெற்று உண்டு, வைகைக் கரையை அடைப்பவர் போல் நடித்தார். அம்மையாருடைய பங்கு சிறிது அடைக்கப்பட்ட தாயினும் மற்றவர்களுடைய உயரத்தளவு வராமையை ஏவலாளர்கள் அரசனுக்கு அறிவித்தனர். அரசன் கூலியாளராக வந்த கடவுளைப் பிரம்பினால் அடித்தான். அப் பிரம்படி யானது உலகத்திலுள்ள ஜீவ ராசிகள் எல்லோர் மீதும் பட்டதுடன் பாண்டியன் மீதும் பட்டது.

இவையெல்லாம் தம்மடியவராகிய மணிவாசகர் பொருட்டு சிவபிரான் செய்த திருவிளையாடல்களே யென்பதைப் பாண்டியன் அறிந்தான். பின்பு, அவரிடஞ் சென்று தான் அறியாமையாற் செய்த பிழைகளைப் பொறுத்தருளுமாறு வேண்டி, தன் அரசாட்சியை ஏற்றுக் கொள்ளுமாறும் இரந்து வேண்டினான். அவர் அதனை மறுத்து, சிவ வேடந் தாங்கி திருப்பெருந்துறை சென்று வதிவாராயினார். சிலகாலம் அங்கே தங்கியிருந்தார்.

### திருவம்பல தரிசனம்

அப்படியிருக்கின்ற நாளிலே, கடவுளானவர் அன்பில்லாதவர் தம்மைப் பாடினாலும் இரங்கி அருள் செய்வாரென்று தெளிந்து "நமச்சிவாய வாழ்க" என்று தொடங்கி இறைவனைப் பற்றிய ஞான வாசகமாகிய திருவாசகத்தைப் பாடத் தொடங்கி, அற்புதப்பத்து, அதிசயப்பத்து, குழைத்த பத்து, சென்னிப்பத்து, ஆசைப்பத்து, வாழாப்பத்து, அடைக்கலப்பத்து, செத்திலாப்பத்து, புணர்ச்சிப் பத்து, அருட்பத்து என்னுமிவைகளை அருளிச்செய்த பின்பு திரு வார்த்தை, எண்ணப்பதிகம், திருப்பள்ளியெழுச்சி, திருவேசறவு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிருணிப்பத்து, பிரார்த்தனைப் பத்து, திருப்பாண்டிப் பதிகம் என்பவற்றையும் அருளிச் செய்தார்கள்.

பின்னர் திருவாதவூரர் குருந்தமர நிழலிலே சிவயோகஞ் செய்தார். அக்காலத்தில் தாம் கனகசபையிற் போய்ச் சேரும் விதத்தை சிவயோகத்தால் அறிந்துகொண்டு ''மெய்தானரும்பி'' யென்றெடுத்துத் திருச்சதகம் பாடிவிட்டு, திருவுத்தரகோச மங்கை என்னும் தலத்துக்குச் சென்று 'நீத்தல் விண்ணப்பம்' என்னும் பாடலைப் பாடி இறைவன் திருவுருவை நேரிற் கண்டார். பின் பல தலங்களையும் வணங்கிக்கொண்டு சோழநாட்டிற்குச் சென்று திருவிடைமருதூரை யடைந்து வணங்கிக்கொண்டு, திருவாரூருக்குப் போய் தியாகராசப் பெருமானை வணங்கி திருப்புலம்பல் என்னும் பாடலைப் பாடியபின் சீகாழியையடைந்து பிடித்தபத்து என்னும் பாடலை அருளிச் செய்த பின் திருவருட்டுறை என்று அழைக்கப்படும் திருவெண்ணெய் நல்லூரையடைந்து வணங்கிக்கொண்டு திருவண்ணாமலையை அடைந்து, திருவெம்பாவை முதலிய திருவாசகங்களைப் பாடியபின் காஞ்சிமா நகரையடைந்தார். பின்னர் திருக்கழுக்குன்றம் சென்று திருக்கழுக்குன்றப் பதிகம் பாடியபின் சிதம்பரம் சென்று நடராசமூர்த்தியை வணங்கிப்பாடி அங்கே தங்கியிருந்தார்.

புத்தரை வாதில் வென்றமை

சுவாமிகள் சிதம்பரத்தில் எழுந்தருளியிருந்த நாளிலே, சோழ தேசத்துச் சிவபக்தர் ஒருவர் தல யாத்திரையாக இலங்கைக்குப் போனார். அவர் அடிக்கடி 'பொன்னம்பலம் வாழ்க' என்று சொல்லுவது வழக்கமாயிருந்தது. அவர் அப்படிச் சொல்லுவதைக் கேள்வியுற்ற அந்நாட்டுப் புத்த அரசன் அவரை வரவழைத்தான். அவர் மூலமாக சிதம்பரத்தின் சிறப்பை அறிந்தான். சிதம்பரத்திலுள்ள சிவாலயத்தை இடித்தழித்து அந்த இடத்தில் பௌத்தாலயம் கட்ட வேண்டுமென்னும் எண்ணம் அவனுக்கு உண்டாயிற்று. ஆகவே அவன் பௌத்த குருவோடும் தன் ஊமை மகளோடும் சிதம்பரத்துக்குப் போனான். போனதும் தில்லைவாழந்தணர்களை வாதத்திற்கு அழைத்தான். பௌத்த குருவோடு வாதஞ்செய்யத்தக்க ஆற்றலுள்ளவர்களை தில்லையிலுள்ளார் தேடுவாராயினர். அப்போது நடராஜப் பெருமான் அவர்களுக்கு மாணிக்கவாசகரைக் குறிப்பிட, உடனே அவரை வரவழைத்தனர். சுவாமிகள் புத்தனுடன் வாதஞ்செய்து அவனை வென்றதுமன்றி, அவன் கேட்ட வினாக்களுக்குப் பிறவி தொட்டு ஊமையாயிருந்த பௌத்த அரசனது மகளைக் கொண்டு விடை சொல்லுவித்தார். வினாவும் விடையும் சுவாமிகள் பாடியருளிய திருச்சாழலிற் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாசகர் தில்லையில் வசித்துவரும் நாளிலே அவருடைய திருவாசகத்தை உலகெங்கும் பரவச்செய்யவேண்டுமென்னும் பெருங் கருணையினாலே சிவபிரான் பிராமண வேடங்கொண்டு அவரிடம் எழுந்தருளினார். அவர் சொற்படி திருவாசகம் முழுவதையும் எழுதிக் கொண்டு திருச்சிற்றம்பலமுடையார்மீது ஒரு திருக்கோவைப் பிரபந் தமும் பாடுவித்தார். அக்கோவையையும் எழுதித் தமது திருக் கைச்சாத்திட்டருளிச் சிதம்பர சிற்சபை வாயிலிலுள்ள பஞ்சாக்கரப் படியிலே சுவடிகளை வைத்தருளினார்.

அவ்விரு நூல்களையும் அர்ச்சகர் கண்டு பேராச்சரியமுற்று அடியாரெல்லாருக்குஞ் சொல்ல, அவர்கள் அந்நூல்களின் பொருளை அறிய விரும்பியவர்களாய்ப் பெருமானிடம் சென்றார்கள். அவர் எல் லோரையும் பொன்னம்பலத்திற்கு அழைத்து வந்து தம் நூல்களுக்குப் பொருள் இவரே என்று சபாநாதமூர்த்தியைச் சுட்டிக்காட்டி எல் லாருங் காணக் கனகசபையுட் புகுந்து அப்பெருமானோடு அத்துவித மானார். அவர் இவ்வாறு முத்தியடைந்த தினம் ஆனி மகம்; வயசு 32.

மாணிக்கவாசக சுவாமிகளின் மறுநாமங்களாவன திருவாதவூரடி கள், மணிவாசகர், கோவை வேந்தர், ஆளுடைய அடிகள் என்பன வாகும்.

சுவாமிகளை நந்தியந்தேவர் அவதாரமென்போர் குடமுழ நந்திசனை வாசகனைக் கொண்டார் என்னும் அப்பர் தேவார அடிகளினும் காட்டுவர்.

நாயனார் அறுபத்துமூன்று நாயன்மார் வரிசையிற் சேராது தனி யடியவர். இவர் சிவகரணமுற்று அறிவாற் சிவனேயாய் விளங்கியவர். இவர் உபதேசம் பெற்ற திருப்பெருந்துறையில் இவருக்கே எல்லா உற்சவாதிகளும் இப்போதும் நடைபெறுகின்றன. மார்கழித் திருவா திரைக்கு முன்னே எல்லாச் சைவாலயங்களிலும் திருவெம்பாவைப் பூசை நடத்தப்படுவதும் சுவாமிகளின் தனிச் சிறப்பை எடுத்துக் காட்டும்.

தமிழ் வேதமாகிய திருவாசகமும் திருக்கோவையாரும் பன்னிரு திருமுறையில் எட்டாவது திருமுறையாகும். 1056 திருப்பாடல்களை அடக்கியது. திருவாசகம் கல்நெஞ்சையும் உருகச் செய்யக்கூடியது. இதற்கொப்பான நூல் உலகில் வேறு இல்லை. திருக்கோவையார் பேரின்பமாகிய ஞானத்தைப் புகட்டுவதாகும்.

மாணிக்கர் திருப்பாடல்களில் பாராட்டப்பெற்ற அடியார்கள்:- சண்டேசுரர், கண்ணப்பர், முதலியோர். மேலும் பல பழமொழிகளும் எடுத்தாளப்பட்டுள்ளன.

சுவாமிகள் சரித்திரம் பற்றிக் கூறும் நூல்களாவன:- திருவிளை யாடற் புராணம், திருவாதவூரடிகள் புராணம், திருப்பெருந்துறைப் புராணம், திருவுத்தரகோச மங்கைப் புராணம் ஆகியன. திருக் கோவையாருண்மை என்னும் நூல் கோவையாரின் பெருமையைக் கூறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தானகுரவர் சரித்திரம்

சைவ சந்தான குரவராவார் சைவசமயத்தின் வழியைக் குரு சீட கிரமமாக விளக்கிக் காட்டுபவர் சந்தானம் என்பதற்குத் தொடர்ச்சியென்பது பொருள். இச் சந்தானத்திற்கு முதல்வர் திரு நந்தி தேவராவர். சைவசமய குரவர்களைப் போலவே, சந்தான குர வரும் நால்வராவர்; சந்தான குரவர் சமயகுரவர் காலத்திற்குப் பிற் பட்டவர்கள். சமயகுரவர் செய்தருளிய தேவார திருவாசகங்களாகிய சிவானுபூதித் திருமுறைகளுக்கு இச் சந்தானகுரவர்கள் கண்ட சித் தாந்த சாஸ்திரங்கள் இலக்கணம் போன்றவையெனலாம் சந்தான குரவர்கள் நால்வராவார்: மெய்கண்டதேவர், அருணந்தி சிவாசாரி யர், மறைஞானசம்பந்த சிவாசாரியர், உமாபதி சிவாசாரியர் என்னு மிவர்களேயாவர். இந் நால்வரும் சிவாகமக் கருத்துக்களைத் தமிழில் திருவருளின் துணை கொண்டு தருக்க முறைக்கியைய இயற்றிய பெரி யார்களாவர். இவர்கள் செய்த சித்தாந்த சாத்திரங்களாவன:- (1) திருவுந்தியார், (2) திருக்களிற்றுப்படியார், (3) சிவஞானபோதம், (4) சிவஞான சித்தியார், (5) இருபா இருபஃது, (6) உண்மை விளக் கம், (7) சிவப்பிரகாசம், (8) திருவருட்பயன், (9) வினாவெண்பா, (10) போற்றிப் பஃறொடை, (11) கொடிக்கவி, (12) நெஞ்சுவிடுதூது, (13) உண்மைநெறி விளக்கம், (14) சங்கற்ப நிராகரணம் என்பன வாம்.

## மெய்கண்ட தேவர் வரலாறு

விருத்தாசலமெனவும் திருமுதுகுன்றமெனவும் வழங்கப்படும் சிறந்த சிவ தலத்திற்குச் சமீபத்தில் திருப்பெண்ணாகடம் என்னும் சிவத்தலம் ஒன்றுண்டு: அத்தலம் திருத்தூங்கானை மாடம் என்றுஞ் சொல்லப்படும். அத்திருப்பதியிலே சைவ வேளாளர் மரபிலே அச்சுத களப்பாளர் என்னும் ஒருவர் இருந்தார். அவர் தமக்குப் பன்னாளா சப் பிள்ளைப்பேறில்லாமையாற் கவலை கொண்டு, தமது குலகுருவாகிய திருத்துறையூர் அருணந்தி சிவாசாரியரை அடைந்து, தம் குறையை முறையிட்டு அக்குறையை எவ்வாறு நீக்கலாமெனத் தம் குருவைப் பணிவுடன் கேட்டார். அப்போது அருணந்தி சிவாசாரியர் தேவாரத் திருமுறையைப் பத்தியோடு அர்ச்சித்து அதன்கண் கயிறுசாத்திப் பார்த்தலும்,

திருச்சிற்றம்பலம்

''பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோ டுள்ளநினை
வாயினவே வரம்பெறுவ ரையுறவேண் டாவொன்றும்
வேயனதோள் உமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையா ரவர்தம்மைத் தோயாவாந் தீவினையே'',

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் சம்பந்தசுவாமிகள் பாடியருளிய தேவாரமே புலப்பட்டது; அத் திருப்பாட்டில் திருவெண்காட்டிலுள்ள முக்குள நீரில் மூழ்குவோர்க்கு, பிள்ளைப்பேறும் அவர்கள் விரும்பும் ஏனைய செல்வங்களும் கைகூடுமென்ற கருத்தமைந்திருத்தலின், அருணந்தி சிவாசாரியர், தமது சீடராகிய அச்சுதகளப்பாளரைத் திருவெண்காட்டிற்குச் சென்று முக்குள நீரில் முழுகி அத்தலத்திற் கோயில்கொண்டருளிய பெருமானையும் பிராட்டியையும் வழிபடும்வண்ணம் கட்டளையிட்டார்; குருவினுடைய கட்டளையைச் சிரமேற்கொண்டு அச்சுதகளப்பாளர் தமது மனைவியாரோடு திருவெண்காட்டை யடைந்து முக்குளநீரென்னுந் தீர்த்தத்தில் மூழ்கித் திருவெண்காட்டுப் பெருமானையும் விதிப்படி வழிபட்டு, தம்மாலியன்ற தருமங்களையும் செய்துவரலாயினர். அங்ஙனம் ஓராண்டு அச்சுதகளப்பாளர் அத்தலத்தில் வசிக்குங்காலத்து, திருவெண்காட்டீசுவரர் ஒருநாள் அவருக்குச் சொப்பனத்திற் றோன்றி, ''அன்பனே, இப்பிறப்பில் உனக்கு மகப்பேறில்லையே'' எனத் திருவாய் மலர்ந்தருள, கேட்ட அச்சுதகளப்பாளர் மனம் வருந்தி, ''சுவாமீ! திருஞானசம்பந்தப் பிள்ளையாருடைய திருப்பாட்டை நம்பி இத்தலத்தில் வந்து தவங்கிடக்கின்றேன். அத் திருப்பாட்டில் பொய்யாகாமைப்பொருட்டு இப்பிறப்பிற்றானே அடியேனுக்கோர் நற்புதல்வனைத் தந்தருளல்வேண்டும்'' என்று மீண்டும் இரந்தார். பெருமான் அந்த அன்பருடைய விண்ணப்பத்திற்குத் திருவுளமிரங்கி, ''ஞானசம்பந்தன் போன்ற ஓர் பிள்ளையை நீ பெறுவாயாக'' என்று கூறியருளினர். அத்திருவாக்கைக் கேட்ட அச்சுதகளப்பாளர் எல்லையில்லா உவகையெய்திக் கண்விழித்தனர்; பெருமான் தம்மீது வைத்த கருணையை நினைந்து நினைந்து உள்ளமுருகிப் பின்னரும் அத்தலத்திற்றானேயிருந்து இறைவனை வழிபட்டு வருவாராயினர்.

பின்னர் அச்சுதகளப்பாளர் தமது மனைவியார் கருப்பவதியானதை யுணர்ந்து பத்து மாசங்களிலும் செய்யவேண்டிய சடங்குகளை விதிப்படி செய்துவந்தார். பத்தாம்மாசம் மெய்கண்டதேவராகிய அக்குழந்தையார் சுபவேளையிலே உதித்தருளினர். அக்குழந்தைக்கு, திருவெண்காட்டுப் பெருமானுடைய திருவருளினாற் பிறந்தமையினாலே சுவேதவனப்பெருமாள் என்னும் பெயரைப் பெரியோர்கள் இட்டார்கள். அச்சுதகளப்பாளர் திருவெண்காட்டுப் பெருமானிடத்தில் விடைபெற்றுக்கொண்டு தமது மனைவியாரோடும் குழந்தையோடும் திருப்பெண்ணாகடத்திற்கு மீண்டு வந்து தம்மில்லத்திலிருந்து வாழ்வாராயினர். சுவேதவனப்பெருமாள் முற்பிறப்பில் ஈட்டி வைத்திருந்த சிவஞான முதிர்ச்சியினாற் போலும், தமது இரண்டாம் வயதளவிலே பரிபக்குவ நிலையை யடைந்தார். அவர் திருவெண்ணெய் நல்லூரிலிருந்த காலத்து, சநற்குமாரமுனிவரது ஞானப்புதல்வராகிய சத்தியஞான தரிசினிகளிடம் உபதேசம் பெற்ற பரஞ்சோதிமுனிவ ரென்பவர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகத்திய முனிவருடைய வாசஸ்தானமாகிய பொதியமலையை நோக்கிச் செல்லும் மார்க்கத்தில், திருவெண்ணெய்நல்லூரை யடைந்தார். இறைவனுடைய திருவுள்ளக்குறிப்பை யுணர்ந்த பரஞ்சோதியார், அத் திருவெண்ணெய்நல்லூரிலிருக்கும் சுவேதவனப்பெருமானைக் கண்டு அவருக்கு ஞானோபதேசஞ்செய்து மெய்கண்டார் என்னும் பெயரையும் இட்டார்.

மெய்கண்டார் திருவெண்ணெய்நல்லூரில் எழுந்தருளிய பொல்லாப்பிள்ளையாரிடஞ் சென்று வணங்கித் துதித்து, அப் பிள்ளையாருடைய திருவருளினாலே சகல கலைகளையு முணர்ந்து சிந்தித்துத் தெளிவாராயினர்; அவற்றின் பயனாகவே சிவஞானபோதம் எனப்படுஞ் சிறந்த சைவசித்தாந்த சாஸ்திரத்தை இயற்றியருளினர். அச்சிவஞான போதத்தின் நுண்பொருளைப் பக்குவம் வாய்ந்த நாற்பத்தொன்பது மாணவர்களுக்கு மெய்கண்டதேவர் போதித்தருளினர்.

அந்த நாற்பத்தொன்பதின்மரது பரம்பரை மூலமாகவே தமிழ் நாடெங்கும் சைவசித்தாந்த உண்மைகள் பரவுதலாயின. தமிழ்நாட்டிலே ஆதீனங்கள் எனப்படும் திருமடங்கள் தோன்றி நிலைபெறுதற்குக் காரணர்களாகவுள்ளவர்களும் மேலே சொல்லப்பட்ட மாணவர் பரம்பரையினரேயாவர். முதன் மாணவர் பரம்பரையிலே தோன்றி விளங்கிய நமச்சிவாய தேசிகர் நிலை நாட்டிய திருமடம் திருவாவடுதுறை ஆதீனமாகும்; அந்தப் பரம்பரையிலே தோன்றிய ஞானசம்பந்த தேசிகர் ஸ்தாபித்த திருமடம் தருமபுர ஆதீனமாகும். மெய்கண்டதேவருடைய மாணவருள் தலையாக விளங்கியவர், அத்தேவருடைய தந்தையார்க்குக் குலகுருவாயுள்ள அருணந்திசிவாசாரியராவர். அந்த வரலாற்றை அருணந்திசிவாசாரியர் வரலாற்றில் காண்க. பதினன்கு சித்தாந்தசாத்திரங்களுள் ஒன்றாயுள்ள உண்மை விளக்கத்தைச் செய்தருளிய மனவாசகங் கடந்தவரும், சிற்றம்பலநாடிகள் என்னும் பெரியாரும் மெய்கண்டதேவரைத் தம் குருவாகக் கொண்டவர்கள். மெய்கண்டதேவர் இங்ஙனம் தமது மாணாக்கர் பலருக்குச் சைவசித்தாந்த உண்மைகளைப் போதித்தபின்னர், சமாதிநிலையுற்று ஐப்பசி மாதத்துச் சோதிநட்சத்திர தினத்திற் சிவபெருமானுடைய திருவடிகளை அடைந்தனர்.

## அருணந்திசிவாசாரியர் வரலாறு

அருணந்திசிவாசாரியர் மெய்கண்டதேவருடைய முதன் மாணாக்கராவர். இப்பெரியார் நடுநாட்டிலேயுள்ள திருத்துறையூரிலே வாழ்ந்தவர். ஆதிசைவப் பிராமணகுலத்தினர். வேதசிவாகமங்களை ஐயந்திரிபறக் கற்றுணர்ந்தவர். இதனாற் சகலாகம பண்டிதரென்னும் காரணப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயரையும் பூண்டவராவார்; தமிழ் வேதமாகிய தேவார திருவாசகங்களைப் பத்தியோடு பயின்றவர். இச்சிவாசாரியர் தம்மை வந்தடைந்த பக்குவம் வாய்ந்த பல மாணவர்களுக்கு ஞானநூல்களைப் போதித்துச் சைவநெறியை நிலைநாட்டினாரெனச் சொல்லப்பட்டிருக்கின்றது.

அருணந்திசிவாசாரியர் சரியை கிரியை யோகங்களிலே சிறந்தவராய் விளங்கியகாலத்து தமது மாணுக்கராகிய அச்சுதகளப்பாளரின் தவப்புதல்வராகிய மெய்கண்டார் தமது சிறுபிராயத்திற்றானே மாணவர் பலருக்கு ஞானநூல்களைக் கற்பிக்கின்றாரென்பதைக் கேள்வியுற்று வியப்படைந்தார். அவ்வாறு வியப்படைந்த அவர் முந்தியே சில மாணவரைத் திருவெண்ணெய்நல்லூருக்குச் செல்லவிடுத்துப் பின்னர்த் தாம் தமது விருதுகளோடும் பரிவாரங்களோடும் ஆங்குப் புறப்பட்டுச் சென்றார். அருணந்திசிவாசாரியர் வரவைக் கண்டு, திருவெண்ணெய்நல்லூருக்குச் செல்லவிடுத்துப் பின்னர்த் தாம் தமது விருதுகளோடும் பரிவாரங்களோடும் ஆங்குப் புறப்பட்டுச் சென்றார். அருணந்திசிவாசாரியர் வரவைக் கண்டு, திருவெண்ணெய்நல்லூரில் வாழும் சைவ வேளாளரனைவரும் பலவாறு அவரை உபசரித்தனர். ஆனால் மெய்கண்டதேவர் மாத்திரம் அருணந்தியார் வரவைக் கண்டும் அவரை எதிர்கொண்டு உபசரித்தலின்றி வாளாவிருந்தனர். அதையுணர்ந்த சிவாசாரியர் மெய்கண்டார் முன்னிலையிற் சென்று அவர் தம்முடைய மாணவர்க்கு ஆணவமலத்தினியல்பை எடுத்து விளக்குவதைக் கேட்டு அகந்தையும் சினமுங் கொண்டாராய் மெய்கண்டாரை நோக்கி "ஆணவமலமாவது என்ன?" என்று அதட்டிக் கேட்க, மெய்கண்டதேவர் புன்னகை தோன்ற அருணந்தியாரைப் பார்த்துத் தம் விரலால் அவரைச் சுட்டிக்காட்டி, "நீர் நிற்கின்ற உந்த நிலைதான் ஆணவத்தின் நிலை" என்று கூறியருளினார். மெய்கண்டார் கூறிய அந்த வாக்கே அருணந்திசிவசாரியாருக்கு மந்திர உபதேசமாக, அவர் தம்மை அதுகாறும் பந்தித்திருந்த மலவிருள் அகலப்பெற்றவராய் உண்மையையுணர்ந்து மெய்கண்டாருடைய பாதங்களில் வீழ்ந்து வணங்கித் தம்மைச் சீடனாக ஏற்று ஞானோபதேசஞ் செய்யவேண்டுமென்று இரந்து நின்றார். மெய்கண்டதேவரும் அவருடைய பரிபக்குவநிலையை யுணர்ந்து, அவருக்குச் சிவஞானபோதப் பொருளையுபதேசித்துத் தம்முடைய நாற்பத்தொன்பது மாணவருள் தலையாய மாணவராயிருக்கும் வண்ணஞ் செய்தருளினார்.

அருணந்திசிவாசாரியர் செய்த நூல்கள்: சிவஞானசித்தியார், இருபாவிருபஃது என்னுமிரண்டுமாம். சிவஞானசித்தியார் சித்தாந்த சாஸ்திரம் பதினான்கினுள்ளும் விரிவுடையதாய் புறச்சமயத்தை மறுக்கும் பரபக்கமும், அகச்சமயத்தை விளக்கும் சுபக்கமுமுடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாகும். இவர் தமது ஞானாசாரியராகிய மெய்கண்டதேவரைத் தாம் இயற்றிய சிவஞானசித்தியாரிற் பின்வருமாறு வாழ்த்தியுள்ளார்:—

"என்னையிப் பவத்திற் சேரா வகையெடுத் தென்சித்தத்தே, தன்னை வைத் தருளினாலே தாளிணை தலைமேற் சூட்டும், மின்னமர் பொழில்சூழ் வெண்ணெய் மேவிவாழ் மெய்கண்டானூல், சென்னியிற் கொண்டு சைவத் திறத்தினைத் தெரிக்கலுற்றாம்".

அருணந்திசிவாசாரியர் சிலகாலஞ் செல்லத் தமது மாணாக்கருள் உத்தமராகிய மறைஞானசம்பந்தசிவாசாரியருக்கு ஞானோபதேசஞ் செய்து நிட்டைகூடி இறைவனடி சேர்ந்தார். அருணந்திசிவாசாரியர் குருபூசைத்தினம் புரட்டாதி மாசம் பூரநாளாகும்.

## மறைஞானசம்பந்த சிவாசாரியார் வரலாறு

மறைஞானசம்பந்தர் திருப்பெண்ணாகடமென்னுந் தலத்திலே பிராமண குலத்திற் றோன்றியவர். பராசர முனிவர் கோத்திரத்திற் பிறந்தவராகிய இவர் இளமைப் பருவத்திலேயே வேதசிவாகமங் களைச் சந்தேக விபரீதமறக் கற்றுணர்ந்தார். இவர் அருணந்திசிவா சாரியரிடம் ஞானோபதேசம் பெற்று, பின்னர் சிதம்பரத்தைச் சார்ந்த திருக்களாஞ்சேரியை அடைந்து அங்கே சிலகாலம் மௌனவிரதம் பூண்டிருந்தார். உமாபதிசிவாசாரியருக்கு ஞானோபதேசஞ் செய்த குருமூர்த்திகளும் இப்பெரியாராவர். பின்னரும் சிலகாலம் அத்திருக் களாஞ்சேரியென்னும் தலத்திலேயே இருந்து சிவத்தியானஞ் செய்து நடராசப்பெருமானுடைய திருவடிகளை அடைந்தார். இவர் மாணாக்கர் பலர்க்கு ஞானநூல்களைப் போதித்தனரெனினும், தாமாகச் சைவ சித்தாந்த நூலெதனையும் செய்ததாகப் புலப்படவில்லை; இவர் முத்தி யடைந்த தினம் ஆவணி உத்தரமாகும்.

## உமாபதி சிவாசாரியர் வரலாறு

சந்தானாசாரியார் நால்வருள் ஒருவராகிய உமாபதிசிவம், தில்லை வாழந்தணர் மரபைச் சேர்ந்தவர்; இவர் சிதம்பரத்தைச் சார்ந்த கொற்றவன் குடியில் வசித்தமையால் கொற்றங்குடி முதலியார் எனப் பட்டார். இப் பெரியார் வேதசிவாகமங்களை ஐயந்திரிபறக் கற்றுத் தெளிந்தவர்; தமிழிற் புலமை வாய்ந்தவர்; சிவபத்தியிலும் அடியார் பத்தியிலுஞ் சிறந்தவர்.

ஒருநாள் இவர் நடராஜப் பெருமானைப் பூசித்துத் திரும்பும் போது இவருக்கு அக்காலத்தில் ஏற்பட்ட சிவிகை தீவர்த்தி முதலான விருதுகளோடு வீதிவழியே சென்றனர். இவரது ஆடம்பரத்தைக் கண்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பெண்ணாகடம் மறைஞானசம்பந்த சுவாமிகள் "பட்டை கட்டை யிற் பகற்குருடன் போகின்றான் பாருங்கள்" என்று குறிப்பாகக் கூறினர். இதனைக் கேட்ட நாயனார் உடனே சிவிகையை விட்டிறங்கி, மறைஞானசம்பந்தரை வணங்கி, அவர்வழி ஒழுகுவாராயினர். மறைஞானசம்பந்தர், நாயனாரது அதிதீவிர பக்குவத்தை உலகினர்க்கு வெளிப்படுத்துவான் கருதி, ஒருநாள் புடைவை நெய்பவர் வீதியை யடைந்து, அவர்களில் ஒருவரிடம் கூழ் வாங்கி உண்டார். அவர் உண்ணுங்கால் அவரது முழங்கைவழியே ஒழுகிய சேடத்தை அருகே இருந்த உமாபதியார் ஏற்றுப் பேரானந்தத்துடன் பருகினார். இச் செயற்கருஞ் செய்கையை அறிந்த மற்றைத் தில்லைவாழந்தணர்கள், சுவாமிகளது நிலையை நன்குணராது அவரைப் பழித்தனரென்றும், சுவாமிகள் நடேசப்பெருமானைப் பூசிக்கவொட்டாது தடுத்தனரென்றுஞ் சொல்வர். சுவாமிகளிடம் திருவருள் விளங்கியதென்பதற்குச் சான்று பகர்வன:—

(1) பெற்றான்சாம்பான் என்னும் சிவபத்த சிரோமணிக்குச் சபாநாயகரது "அடியார்க் கெளியன் சிற்றம்பலவன் கொற்றங் குடியார்க் கெழுதிய கைச்சீட்டுப்— படியின்மிசைப், பெற்றான் சாம்பானுக்குப் பேதமறத் திக்கைசெய்து, முத்தி கொடுக்க முறை" என்னும் திருமுகப்படி முத்தி கொடுத்தருளினமையும், பின்பு அப் பெற்றான்சாம்பானுடைய மனைவியும் அரசன் முதலாயினோருங் காணப் பரிபக்குவமடைந்திருந்த ஒரு முள்ளிச் செடிக்கு முத்தி கொடுத்தருளினமையுமென்க.

(2) சிதம்பர தலத்தில் மார்கழி மாதத் திருவிழா ஒன்றிலே ஏறாது நின்ற கொடியைக் கொடிக்கவி என்னும் பிரபந்தம் பாடி ஏறச் செய்தமையுமாம்.

(3) இவர் இயற்றியருளிய சிதம்பரமான்மியத்துள் ஒன்றாகிய கோயிற்புராணம் அரங்கேற்றமுறாது பேடகத்துள் இருந்தபொழுது, சாய் உமாபதியார் பேடகத்துள் இருப்பதாகச் சபாநாயகர் தில்லைவாழந்தணர்களுக்கு அறிவித்தமையும், அவர்கள் சுவாமிகளிடம் வந்து புராணத்தை அரங்கேற்றச் செய்தமையுமாம்.

இயற்றிய நூல்கள்:— மெய்கண்ட சாத்திரம் பதினான்கனுட் சுவாமிகளால் இயற்றப்பட்டன எட்டு நூல்கள். அவை சித்தாந்த அட்டகமென்று வழங்கப்படுகின்றன. அவற்றுட் சிவப்பிரகாசம் விரிந்தது;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவருட்பயன் மிகச் சுருங்கியது; சங்கற்பநிராகரணம் பெயருக்கேற்ப மற்றைய மதங்களின் கொள்கைகளை நியாய வாயிலாகக் கண்டித்துச் சைவசித்தாந்தத்தின் ஏற்றத்தை நிலவச்செய்வது; உண்மைநெறி விளக்கம் தசகாரியத்தைப் போதிப்பது, ஏனைய ஆங்காங்கே சித்தாந்தக் கருத்துக்களை விளக்குவன. இவர் இயற்றியருளிய பிற நூல்கள்: கோயிற்புராணம், திருத்தொண்டர் புராண சாரம், சேக்கிழார் புராணம், திருமுறைகண்ட புராணம், திருப்பதிகக்கோவை, பௌட்கராகம் வடமொழி வியாக்கியானம் முதலியன.

காலம் முதலியன:— சுவாமிகள் இற்றைக்கு 600 வருடங்களுக்கு முன் விளங்கியவர் என்பது அவர்களது சங்கற்ப நிராகரணத்தால் அறியக்கிடக்கின்றது.

மாணுக்கர் நமச்சிவாய தேசிகர் முதலியோர்; இவரே திருவாவடுதுறை ஆதீனத்தைத் தாபித்தவரென்ப.

சுவாமிகளது திருக்கோயில் கொற்றவன்குடியில் அமைக்கப் பெற்றுள்ளது.

---

# நால்வர் செய்த அற்புதங்கள்

## சம்பந்தர்

புனலில் ஏடெதிர் செல்லெனச் செல்லுமே
புத்த னூர்தலை தத்தெனத் தத்துமே
கனலில் ஏடிடப் பச்சென் றிருக்குமே
கதவு மாமறைக் காட்டி லடைக்குமே
பனையில் ஆண்பனை பெண்பனை யாகுமே
பழைய என்புபொற் பாவைய தாகுமே
சினஅரா விடந் தீரெனத் தீருமே
சிறந்த சம்பந்தர் செந்தமிழ்ப் பாடலே;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அப்பர்

தலைகொள் நஞ்சமு தாக விளையுமே
தழலில் நீறு தடாகம தாகுமே
கொலைசெய் ஆனை குனிந்து பணியுமே
கூர்அரா விடந் தீரெனத் தீருமே
கலைகொள் வேத வனப்பதி தன்னுள்ளே
கதவு மீண்டு கடுகத் திறக்குமே
அலைகொள் வாரியிற் கல்லு மிதக்குமே
அப்பர் போற்றும் அருந்தமிழ்ப் பாடலே.

## சுந்தரர்

வெங்கரா வுண்ட பிள்ளையை நல்குமே
வெள்ளை வாரண மீதில் இருத்துமே
மங்கை பாகரைத் தூது நடத்துமே
மருவி யாறு வழிவிட்டு நிற்குமே
செங்கல் லானது தங்கம தாகுமே
திகழு மாற்றிட்ட செம்பொன் னளிக்குமே
துங்க வாம்பரி சேரற்கு நல்குமே
துலங்கும் நாவலூர்ச் சுந்தரர் பாடலே.

## வாதவூரர்

பெருகும் வைகை தனைஅழைப் பிக்குமே
பிரம்ப டிக்குப் பிரான்மேனி கன்றுமே
நரியெ லாம்பரி யாக நடத்துமே
நாடி மூகை தனைப்பேசு விக்குமே
பரிவிற் பிட்டுக்கு மண்சுமப் பிக்குமே
பரமன் ஏடெழு தக்கோவை பாடுமே
வருகும் புத்தரை வாதினில் வெல்லுமே
வாத வூரர் வழங்கிய பாடலே.

## நால்வர் வயசு

அப்பருக்கெண் பத்தொன் றருள்வாத வூரருக்குச்
செப்பியநா லெட்டினிற் றெய்விகம்—இப்புவியிற்
சுந்தரர்க்கு மூவாறு தொன்ஞான சம்பந்தர்க்
கந்தம் பதினா றறி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நால்வர், சேக்கிழார் குருபூசை நாட்கள்

பாடிய சம்பந்தர் வைகாசிமூலம் பயிலுமப்பர்
நீடியசித் திரைமாதச் சதயம்நிறை வன்றொண்டர்
ஆடியிற் சோதிதிரு வாதவூரர் நல்லானிமகம்
தேடிய சேக்கிழார் வைகாசிப்பூசஞ் சிறந்தனரே;

## சந்தாநாசாரியர் குருபூசை நாட்கள்

சித்திரை யத்த முமாபதி ஆவணித் திங்கடனில்
உத்திரஞ் சீர்கொண் மறைஞான சம்பந்தர் ஓதுகன்னிச்
சுத்த மெய்ப்பூரம் அருணந்தி ஐப்பசிச் சோதிதனில்
வித்தக மெய்கண்ட தேவர் சிவகதி மேவினரே;

## சமயகுரவர் பெருமை

சொற்கோவும் தோணிபுரத் தோன்றலுமெஞ் சுந்தரனும்
சிற்கோல வாதவூர்த் தேசிகனும்—முற்கோலி
வந்திலரேல் நீறெங்கே மாமறை நூல் தானெங்கே
எந்தைபிரான் ஐந்தெழுத்தெங் கே.

திருச்சிற்றம்பலம்

❋❋❋

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org